# உன்மத்தம்... உன் மேலாகிறேன்...!!!

அம்முயோகா

# அத்தியாயம் 1

அதிகாலை வேளை சூரியன் எழுவதற்கு முன்னரே அவர் பெயர் கொண்ட ஆதித்யன் ட்ராக் சூட்டும், நைக் ஷூவுமாக ஜாகிங் கிளம்ப தயாரானான்.

ஆறடி உயரம், உடற்பயிற்சி செய்து உரமேறிய தேகம், சிவந்த நிறம், எத்தனை முறை படிய வாரினாலும் அடுத்த நிமிடமே அடங்காமல் அலை அலையாய் விரவி கண்ணை மறைக்கும் கேசம், முகத்தில் நிரந்தரமாய் வீற்றிருக்கும் மந்தகாசப் புன்னகை, குறும்பு மின்னும் கண்கள், அரும்பு மீசை... பார்ப்பவரை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் வசீகரத் தோற்றம் கொண்டவன் தான் ஆதித்யன்.

இவன் பள்ளி மாணவன் என சத்தியம் செய்தாலும் நம்பமுடியாது ஆனால் அது தான் உண்மை. படிப்பிலும், விளையாட்டிலும், நுனி நாக்கு ஆங்கிலத்திலும் அவனை அடித்துக் கொள்ள ஆளே கிடையாது.

பள்ளி மாணாக்கர் தலைவன். ஒவ்வொரு நாளும் இவனது "ஸ்கூல் ஸல்யூட்" என்னும் கம்பீர ஆணைக்காக பள்ளியே ஆவலாய் காத்து நிற்கும். சின்ன பிள்ளைகள் முதல் அவனது

வயதொத்தவர்கள், ஏன் ஆசிரியர்கள் கூட அவனிடம் பேச ஆசைப்படுவார்கள்.

அதிகம் பேசாது, கண்ணசைவில் கன்னியரை கட்டிப் போடும் கலை கைவரப் பெற்றிருந்தாலும் இன்று வரை பரிட்சித்து பார்த்ததில்லை. அதனாலேயே அவன் கடைக்கண் பார்வைக்கு ஏங்கி நிற்கும் பெண்கள் அதிகம்.

யாருடனும் அவ்வளவு எளிதில் பழகிவிடாத இந்த ஆதித்யனே பள்ளியின் நாயகன். எப்படிப் பட்ட சூழ்நிலையையும் சமாளிக்க, வாழ்க்கையை அதன் போக்கிலேயே எதிர்க்கொள்ள வேண்டும் என்னும் சிந்தனையுடைய யதார்த்தவாதி.

இதோ மெது ஓட்டத்தை துவங்க வெளியே வந்தவன் தன் வீட்டிற்கு நேர் எதிரிலிருக்கும் வீட்டில் பார்வையை பதித்தான். வாசலில் நீர் தெளித்து கோலமிடப்பட்டிருந்தது. வாசல் கதவு திறந்திருக்க ஹாலில் LED விளக்கு ஒளியை கொட்டிக் கொண்டிருந்தது.

"நந்து... எழுந்துக்க... மணியாச்சு! " என்னும் குரல் கீதமாய் ஒலிக்க, சிறு சிரிப்புடன் தன் ஓட்டத்தை தொடர்ந்துவிட்டான். அவன் தன் உடற்பயிற்சியை முடித்துவிட்டு வருவதற்குள் நாம் சற்று விரிவான அறிமுகத்தை பார்த்துவிடுவோம்.

கந்தவேலன் காலனி திருப்பத்தூரின் மையப் பகுதியில் ஒன்று போல் அமைந்திருக்கும் தனி வீடுகளின் தொகுதி. அதன் உரிமையாளர் கந்தவேலன். கிட்டத்தட்ட முப்பது வீடுகள் இருந்தன. எதிரும் புதிருமாய் ஐந்து ஐந்து வீடுகள் மூன்று தொகுதிகளாய் அமைந்திருந்தன.

ஓர் அறை வீடு, இரு அறை, மூவறை எனப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் மூவறை எனப்படும் 'ஏ' பிளாக்கில் தான் ஆதித்யனும், நந்தினியும் இருந்தனர்.

நந்தினி வகுப்பின் முதல் மாணவி. படிப்பில் என்று தவறாக அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது. உயரத்தில்...! வாயை இருக மூடி... பூட்டி... சாவியை தூக்கி எறி! என்று தமிழாசிரியை காண்டகும் அளவிற்கு வாய் ரொம்பவே அதிகம். அதற்கு இணையாக அவள் கண்களும் ஆயிரம் கதை பேசும்.

வேடிக்கைத் தனங்களை ஒட்டுமொத்த குத்தகைக்கு எடுத்திருக்கும் குழந்தை மனம் கொண்ட குமரி. பனிரெண்டாவது படித்தாலும் பத்தாம் வகுப்பு என பார்த்தவுடன் சொல்லிவிடலாம். அப்படி ஒரு பால் மணம் மாறாத முகம். எப்போதும் கெத்தாக இருப்பது போல் பில்டப்க் கொடுக்கும் பயந்தாங்கோலி.

இருவரது வீடுகளும் எதிரும் புதிருமாய் இருந்தாலும் சிறு வயதிலிருந்தே ஆதியும், நந்துவும் நெருங்கிய நண்பர்கள். ஒரே

பள்ளி, ஒரே வகுப்பு. இவர்களுடைய இன்னொரு நெருங்கிய நண்பன் ஓர் அறை வீடான 'சி' பிளாக்கில் வசிக்கும் பிரபாகரன்.

பிரபாகரனைப் பார்த்ததுமே 'நல்லவன்டா நீ!' என்று சொல்லிவிடலாம். அழுந்த வாரிய கேசம், சிவப்பும் இல்லா... கருப்பும் இல்லா புது நிறம், இதழோரம் தவழும் மென் முறுவல், தீட்சண்யமான பார்வை. கண்ணியம் காட்டும் கண்கள், அமைதியான பேச்சு, பணிவு, ஒழுக்கம் என அணைத்து நற்பண்புகளும் நீக்கமற நிறைந்தவன்.

"விட்டுக் கொடுப்போர் கெட்டுப் போவதில்லை" என்பதை வாழ்வின் அடிநாதமாக கொண்டு வாழ்கைப் பயணத்தை கையில் எடுத்திருப்பவன்.

மூவரும் ஒன்றுக்குக்கொன்று பொருந்தாத குணாதிசயங்களை கொண்டவர்கள். இருந்தும் இன்றுவரை இவர்களது நட்பு உறுதியுடன் இருக்க இரண்டு காரணங்கள் தான். விட்டுக்கொடுத்தலும்... புரிந்துணர்வும் தான் அவை.

ஒத்த எண்ணங்கள் உடையவர்கள் மட்டுமே நல்ல நண்பர்களாக இருக்கும் முடியும் என்பதற்கு விதி விளக்கு நம் கதையின் நாயகியும், நாயகர்களும்.

மூவரும் அருகிலிருக்கும் ஷைனிங் ஸ்டார்ஸ் மெட்ரிக் பள்ளியில் பனிரெண்டாவது அறிவியல் பிரிவு மாணவர்கள்.

ஷைனிங் ஸ்டார்ஸ்... வெளிநாடு வாழ் இந்தியர்கள் நால்வரால் நடத்தப்படும் தனியார் பள்ளி.

இங்கு கல்வியாய் கூட்டலும், கழித்தலும், மனப்பாடமும், கற்றுத் தரப்படடுவதில்லை. மாறாக வாழ்வின் ருசி அறிந்து வாழும் சூட்சமம் தான் கற்றுத் தரப்படுகிறது.

வாழ்க்கை என்பது மதிப்பெண்ணை நோக்கி ஓடும் விளையாட்டு மைதானம் அல்ல. அது வனாந்திரம். இங்கு சிங்கமும் இருக்கும்! சிறு முயலும் இருக்கும்.... குள்ளநரிக் கூட்டமும் இருக்கும்... வல்லூறும் வட்டமிடும்... சிட்டுக்குருவியும் சிங்காரமாய் சிரிக்கும், இதில் எதற்க்காக ஓடுவாய்? எதை நோக்கி ஓடுவாய்? ஓடுவது வாழ்வல்ல... "எதிர்த்து நில்! துணிந்து செல்" என்பது தான் பாலபாடமாக கற்றுத் தரப்படுகிறது.

இது மருத்துவர்களையும், பொறியாளர்களையும், விஞ்ஞானிகளையும் உருவாக்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு பனிரெண்டாம் வகுப்பு பாடத்தை பதினொன்றாம் வகுப்பிலேயே புகுத்தி மாணவர்களுக்கு மனச்சிதைவை உண்டாக்கும் மூடர் கூடமல்ல.

இங்கு பிள்ளைகள் பொதி சுமக்கும் கழுதைகள் அல்ல. வீட்டுப்பாடம் கூட ஒருநாளைக்கு ஒன்று என்றே கொடுக்கப் படும். படிக்கும் பிள்ளைகளுக்கு தான் இங்கு இடம் படிக்காத

பிள்ளையை கூட்டிப் போங்கள் என்னும் சிறுபிள்ளை விளையாட்டு இங்கு கிடையாது.

படிப்பு வரவில்லையா? பரவாயில்லை வேறு தனித் திறமை என்ன? அதை கற்றுக் கொடுப்போம். இங்கு படிக்கும் ஒவ்வொரு பிள்ளையும் நிச்சயம் வாழ்வில் ஜொலிக்கும் நட்சத்திரமாக இருக்கும்... இருக்க வேண்டும்! என்பது தான் இப்பள்ளியின் தாரக மந்திரம்.

பிள்ளைகள் பிள்ளைகளாகவே வளர்க்கப்பட்டு மனிதநேயம் மிக்க மனிதர்களாக வெளியே வரவேண்டும் என்பது தான் இதன் லட்சியம்.

பள்ளியின் முன்னோடி தலைமுறை மாணவர்கள் வெறும் ஐம்பது பேர் தான். அதில் இந்த மூவரும் அடக்கம். பள்ளி ஆரம்பித்ததும் ஒன்றாம் வகுப்பிள் தொடங்கிய உறவு இந்த பனிரெண்டு வருடங்களில் நன்கு கெட்டிப்பட்டு இறுகி இருக்கிறது.

ஐந்து வயது சிறுவன் கீழே விழுந்துவிட்டால் எழுந்து அமர்ந்து அழாமல் தன் காயத்திற்கு தானே முதலுதவி செய்துகொள்வதும், எட்டுவயது சிறுமி கவனமாக தன் வீட்டு மின் இணைப்பில் போன ஃபியூஸை சரியாகப் போடுவதும், பத்துவயது பையன் விறகு அடுப்பு மூட்டி... சோறும், குழம்பும், பொன் முறுவலாய் தோசையும் செய்வதும்,

பனிரெண்டு வயதுப் பெண் மாரடைப்பால் பாதிக்கப் பட்டவருக்கு துல்லியமாய் முதலுதவி செய்வதும், பதினைந்து வயதுப் பையன் சண்டை நடக்கும் இடத்தில் சமாதானத்திற்கு தோள் கொடுப்பதும் தான் இந்த பள்ளிக்கான விளம்பரங்கள்.

இதை அடிப்படையாகக் கொண்டே அவர்களது பள்ளியும் கம்பீரமாய் இன்று 1500 மாணவர்களுடன் தன் சேவையை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

மக்கள் இங்கு தன் பிள்ளைகளை சேர்க்க இதுபோக சில முக்கிய காரணங்களும் இருந்தன. முதலாவதாக குறைந்த கட்டணத்தில் சிறந்த கல்வி. அதோடு மட்டுமல்லாம் தோட்டக்கலை பாடமாகவே கற்றுத்தரப்பட்டது.

அங்கு மாணவர்களால் பயிரிடப்படும் காய்கறிகள் அவர்களுக்கே சிறப்பு விலையில் விற்கப்படும். இவை வியாபார உத்திகளையும் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தன. இவற்றை கவனிப்பதற்கு மாணவர்கள் சிலர் தேர்ந்துடுக்கப்படுவர் அவர்கள் பசுமை தலைவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

"மனம் திறந்தால் மார்க்கமுண்டு" என்னும் அரிய திட்டம் அங்கிருந்தது. அதன் படி பள்ளியின் மையப் பகுதியில் கண்ணாடி பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருக்கும் அதில் மாணவர்கள் தங்கள் குறைகள், மன வருத்தங்கள், தேவைகள் அனைத்தையும் பகிர்ந்து கொள்ளலாம்.

பெயர், வகுப்பு எதுவும் குறிப்பிட வேண்டியதில்லை. அவற்றிற்கு தீர்வு காண்பதற்கு இரண்டு மாணவர்களை ஆசிரியர்கள் சேர்ந்து நியமித்திருப்பர். அந்த மாணவர்கள் யாரென்பது வேறு யாருக்கும் தெரிவிக்கப்படாது. அவர்கள் கடைசி வரை தங்கள் முகம் காட்ட மாட்டார்கள்.

இவர்களுக்கு "உறங்கும் நட்சத்திரங்கள்" என்று பெயர். இதனால் நமக்கு தெரிந்தவராக இருப்பாரோ? தவறாக நினைப்பாரோ? என்ற எந்த பயமும் இல்லாமல் தங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளலாம் என்பது தான் சிறப்பு.

அந்த உறங்கும் நட்சத்திரங்கள் கடிதங்களை படித்து, ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து அதற்கான தீர்வை முடிவு செய்ய, ஒவ்வொரு வாரமும் திங்கள் காலை அசம்பிளியில் தலைமையாசிரியர் அந்த தீர்வுகளை அறிவிப்பார்.

இது அனைத்தையும் விட சிறப்பு... பள்ளி ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்று வரை அந்த பள்ளியில் சேரும் ஒவ்வொருவருக்கும் ஒரு மரக்கன்று கொடுக்கப்படும். அப்பள்ளியை தேர்வு செய்ததற்கான பரிசு அது.

அதை பள்ளயில் வைத்தும் வளர்க்கலாம், வீட்டிற்கும் எடுத்து செல்லலாம். அவ்வளவு பெருமைகளை உடைய பள்ளியில் தான் இந்த மூவரும் படிக்கின்றனர் என்பதில் அவர்களுக்கு கூடுதல் பெருமை தான்.

இந்த பள்ளியின் கல்வி முறை இவர்களை வாழ்வில் ஜொலிக்க வைக்குமா? பொறுத்திருந்து பாருங்கள்... அதற்காகவே பள்ளியைப் பற்றி இவ்வளவு விரிவான அறிமுகம்.

ஆதி எப்பொழுதும் படிப்பில் சுட்டி. நந்தினி பெற்றோருக்காக படிப்பவள். பிரபா உயரிய வேலைக்காகப் படிப்பவன். நண்பர்கள் மூவரும் எப்போதும் ஒன்றாகவே தான் இருப்பார்கள். மூவருமே வீட்டிற்கு ஒற்றைப் பிள்ளைகள்.

மூவரின் பெற்றோருமே வேலைக்குச் செல்பவர்கள் ஆதலால் எப்பொழுதும் ஆதியின் அறையில் தான் நண்பர்கள் மாநாடு நடக்கும். வீட்டுப்பாடம் பண்ணுவது, படிப்பது, நைட் ஸ்டடி எல்லாமே ஆதியின் வீட்டில் தான்.

அவன் தந்தை மனோகரன் வங்கியில் மேலாளராகவும், தாய் மங்களம் காசாளராகவும் வேலை பார்க்கின்றனர். சற்று மேல்தட்டு வர்க்கம். மகனுக்காக செலவு செய்யத் தயங்காதவர்கள். இந்த வீட்டை சொந்தமாக வாங்கியவர்கள்.

நந்தினியின் பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள், அம்மையாரோ அறிவுக் கொழுந்து. பிரபாவே அங்கு வசதி குறைவானவன். அவனது பெற்றோர் காரோட்டியாகவும், சத்துணவு கூடத்தில் சமையல்காரம்மாவாகவும் இருக்கின்றனர். நண்பர்களிடம் எந்த பேதமும் கிடையாது. எப்பொழுதும் கூத்தும், கும்மாளமும் நிறைந்திருக்கும்.

ஆதியே படிப்பில் இருவரையும் தன்னைப் போல் முதல் மாணவனாக ஆக்க முடியாவிட்டாலும் ஓரளவிற்கு தன்னோடு கட்டி இழுத்து சென்றுவிடுவான். அதனாலேயே மற்ற இருவரும் அவனோடு படிக்க விரும்புவர்.

இதோ, ஆதியும் தன் ஓட்டத்தை முடித்துக் கொண்டு வந்துவிட்டான். இப்பொழுது சூரியனும் வந்துவிட்டார். இன்னும் நந்தினி எழவில்லை என்பதை அவளது அன்னையின் தேய்ந்த ரெக்காடாய் ஒலித்த

" மணியாச்சு எழுந்துக்கோ".... வில் இருந்து கண்டுகொண்டவன், செல்ல கோபத்துடன் "சரியான சோம்பேறி!" என முணுமுணுத்தபடி வீட்டிற்குள் நுழைந்துவிட்டான்.

இதற்குமேல் பொறுக்க முடியாதென காண்டாகிப் போன நந்துவின் அன்னை,

"நந்தினி!" என்று அதட்டல் போட.. பதறி எழுந்தவள்,

"ஏம்மா இப்படி கத்துற? தூங்கவிடமாட்டியா? சும்மா நை நைன்னு..." பதின்ம வயதுக்கேயுரிய சிறப்பு குணம் தலைதூக்க அன்னையிடம் பதிலுக்கு கத்திக் கொண்டிருந்தாள்.

"இப்படியே தூங்கிட்டு இருந்தா ஸ்கூல் கேட் மூடிடுவாங்க... சீக்கிரம் கிளம்புற வழியைப் பார்."

"ஐ ஜாலி! அப்போ ஸ்கூலுக்கு போக வேண்டாம்!" சிறு குழந்தை போல் கை தட்டி ஆர்ப்பரிக்க,

"ரெண்டு மாச லீவில் இருந்துட்டு இப்போதான் அடுத்த வகுப்புக்கு புதுசா அடியெடுத்து வைக்கப் போற அதுவும் பனிரெண்டாவது... அட்சானியமா பேசாமல் கிளம்பு நந்து. பிரபாவும் ஆதியும் வந்துடப் போறாங்க..."

"வரட்டும், வரட்டும்... சீக்கிரமா வந்தா ஸ்கூல் பேக்கை பிரிப்பர் பண்ண சொல்லலாம்! "

"நீ அடங்கவேமாட்டியா? இத்தனை நாள் லீவில் எடுத்து வைக்காமல் என்ன தான் பண்ணின? "

"எனக்காக இத கூடவா செய்யாது என் செல்லாக்குட்டி? நீ கத்தாமல் கிளம்பு. உனக்கும் தான் நேரமாகுது. " அன்னைக்குத் திருப்பினாள்.

"நல்லா சிக்கியிருக்கானுங்க நண்பர்கள்ங்கிற பேரில் உனக்கு ரெண்டு அடிமைகள்... என்னவோ பண்ணு. " அவளோடு மல்லுக்கு நிற்க முடியாமல் தன் வேலையை பார்க்கப் போய்விட்டார்.

"உனக்கேன் பொறாமை? சாயங்காலம் வந்ததும் எங்களுக்கு சுத்தி போடு! சொல்லிட்டேன்." மிரட்டலுடன் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள் நந்தினி.

முதல் நாள் பள்ளிக்கு இதோ மூவரும் பரபரப்பாக கிளம்பிவிட்டனர். பிரபாவும், ஆதியும் சைக்கிளில் காலூன்றி நிற்க,

"ஹாய் செல்லாக்குட்டி! ஹை தடியா!" நண்பர்களை புன்னகையுடன் எதிர்கொண்டவள், ஆதியின் சைக்கிளில் பின்னால் அமர்ந்துவிட்டாள். ஒன்பதாவது வரை மூவரும் நடந்து தான் பள்ளிக்கு சென்றனர். அதன் பிறகு தான் இந்த சைக்கிள் பிரயாணம்.

அம்மையாருக்கு சைக்கிள் ஓட்ட தெரியாது என்பதால் ஆதியின் சைக்கிளில் தொத்திக் கொள்வாள். முதல் நாள் குதூகலம் நந்தினிக்கு வந்து ஒட்டிக் கொண்டது.

"அப்பா இந்த வருஷத்தோட ஸ்கூல் முடிஞ்சுடும்..." இந்த வாழ்க்கைக்காக தான் அதிகம் ஏங்கப் போகிறோம் என்பது புரியாமல் மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

பள்ளியை அடைந்ததும் ஆதி நிறுத்துவதற்குள்ளாகவே சைக்கிளில் இருந்து குதித்து இறங்கினாள்.

"ஏய் குரங்கே! நிறுத்துறதுக்குள்ள என்ன அவசரம்?" அவனுக்கு பதில் சொல்லவெல்லாம் அவள் அங்கு நிற்கவில்லை.

"விடு மச்சான்... ரெண்டு மாசமா அவளோட ஸ்வீட்டியை பார்க்கலைல்ல அதான் இந்த ஓட்டம்."

ஸ்வீட்டி வேறு யாருமில்லை அவளுடைய தூங்குமூஞ்சி மரம். நண்பர்கள் மூவரும் விளையாட்டு மைதானத்தில் தங்களது மரக்கன்றை நட்டு வளர்த்தது இன்று பெரிய மரமாகி நிற்கிறது.

நந்துவுக்கு இயற்கையின் மீது எப்போதுமே பெரிய ஈர்ப்பு உண்டு. அதனால் அந்த மரத்திடமும் ஒட்டுதல் அதிகம்.

அது தான் இவளது செல்ல நாய் குட்டி. அவள் அப்படி தான் சொல்வாள். நந்தினிக்கு பிடித்த விலக்கு நாய். ஆனால் அதற்கு பயமும் அதிகம் என்பதால் மரம் நாயாகிப் போனது. ஸ்வீட்டியை நெருங்கி தன் இரு கைகளையும் விரித்து அணைத்துப் பிடிக்க போராடியபடி,

"ஐ லவ் யூ ஸ்வீட்டி!" என முத்தம் வைத்தவள், ஸ்வீட்டி... நீ பாட்டுக்கு பெருசாய்க்கிட்டே போற.. என்னால உன்னை முழுசா கட்டிப் பிடிக்க கூட முடியல..." என வாய்விட்டு புலம்பினாலும் சட்டென சுதாரித்துக் கொண்டவளாய்,

"ச்ச... நான் ஒரு லூசு நீ ரொம்ப பெருசா வளர்ந்துட்டன்னு சந்தோசப்படாம... கட்டிப்பிடிக்க முடியலன்னு குறைபடறேனே... சாரி! நீ இன்னும் பெருசா வளர்ந்து நிறைய கிளைகள் பரப்பி, உன் நிழலால் இங்க வரவங்களை அணைச்சுக்கோ... உன் பூக்களால் உன் சிரிப்பை எல்லோரும் பாக்கட்டும்...

ஆஹா இந்த வாசனை எல்லோருக்கும் அமைதியை கொடுக்கணும். எங்க நட்பையும், சந்தோஸத்தையும் உன் இருப்பின் மூலமா எல்லோரும் உணரணும்." என உணர்ச்சி மேலிட கண்கள் மின்ன பேசியவளை ரசிக்க தான் செய்தனர் நண்பர்கள் இருவரும்.

நந்தினியின் இந்த குழந்தை தனமான விளையாட்டுக்களை நண்பர்களுடன் சேர்ந்து இன்னுமொரு ஜோடி கண்கள் ஆர்வமாக மட்டுமல்ல ஒருவித கிறக்கத்துடனும் ரசித்துக் கொண்டிருந்தன.

இதயத்தை தொலைத்த இடம் தெரிந்தாலும் அதை மீட்க முனையாமல் அவளுள் விரும்பியே தொலைந்து போனான் அந்த கண்களின் சொந்தக்காரன். (மரத்தின் மீது இவ்வளவு ஒட்டுதலா? அப்போ மனுசங்ககிட்ட எவ்வளவு நேசத்தோடு நடந்துக்குவா? தேவதை! என் குட்டி தேவதை...)

வகுப்பிற்குள் வந்ததும் வராததுமாக பேப்பரும் கையுமாக அமர்ந்திருக்கும் தோழியை கண்டவர்கள்,

"என்ன நந்து ஆர்வக் கோளாறில் பாடம் நடத்துவதற்கு முன்பே பரீட்சை எழுத ஆரம்பித்துவிட்டாயா?" கேலியாய் கேட்ட ஆதிக்கு,

"அதெல்லாம் உங்களைப் போல படிப்பாளிங்க பண்ணறது. நான் அந்த தூங்கு மூஞ்சிகளுக்கு லெட்டர் எழுதறேன்!"

"தூங்குமூஞ்சியா... அது யாரு நந்து?" இந்த கேள்வியை கேட்ட பரிதாபத்திற்குறிய நண்பன் பிரபாவே தான்.

"அதான்... உறங்கும் நட்சத்திரங்கள்." மீண்டும் தன் கடிதத்தை தொடர, தங்கள் தோழிக்கு அப்படி என்ன பிரச்சனை என பதறியவர்களாய்,

"நந்து உனக்கென்னடா பிரச்சனை?" அக்கறையாக வினவ,

"நோ நோ... இதில் உங்களால் எந்த உதவியும் செய்ய முடியாது அந்த தூங்கு மூஞ்சிகளுக்கும் வேலை வேண்டாமா?" கண் சிமிட்டி சிரித்தவள் கடிதத்தைப் போட சென்றுவிட்டாள். அந்த தூங்கு மூஞ்சிகள் ஆதியும், பிரபாவும் தான் என தெரியாமல்.

இடைவேளையின் போது அதை எடுத்து வந்து பிரித்து படித்தவனுக்கு சிரிப்புத்தான் வந்தது. பிரபாவிடம் கொடுக்க,

" வணக்கம் தூங்குமூஞ்சிஸ்...

நான் நந்து. இந்த வருஷத்தோட ஸ்கூலுக்கு கும்பிடு போடுவதில் சந்தோசம் தான் என்றாலும் என் ஸ்வீட்டியை விட்டுப் பிரிவது பெரும் கவலையா இருக்கு. எனக்கப்புறம் அதை யார் பார்த்துக்குவா? ப்ளீஸ் ஏதாவது செய்யுங்க..." படித்தவனுக்கு சிரிப்பதா வருந்துவதா என சந்தேகம் தோன்றினாலும்,

"சிரிக்காத ஆதி! நிச்சயமா எதாவது செய்தே ஆகணும் அந்த மரத்தோட அவளுக்கு இருக்க இமோஷனல் பாண்டிங் தான் இந்த கவலைக்கு காரணம். இது ஒன்னும் தப்பில்லை... என்ன செய்யலாம்னு யோசிக்கலாம்"

அடுத்த இரண்டு நாட்களில் ஐந்து கடிதங்கள் வந்துவிட்டன. அவற்றில் இரண்டு ஆறாம் வகுப்பு மாணவர்களிடம் இருந்தும்

மற்றவை முறையே எட்டாம் மற்றும் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களிடம் இருந்து வந்தது.

அனைத்தின் சாரமும் படிப்பில் உதவி தேவை என்பது தான். இரண்டு நாட்கள் முடியும் முன்னரே உறங்கும் நட்சத்திரங்களை திட்டி தீர்த்துவிட்டாள் நந்தினி.

"சரியான சோம்பேறிகள்... ஒரேயடியா தூங்கிடுச்சுங்க... யாருன்னு தெரியல... ஆள் மட்டும் தெரிஞ்சுது இன்னேரம் மண்டையில் நங்கு நங்குன்னு கொட்டி உறங்கும் நட்சத்திரங்கள்ங்கிற பட்டத்தை பறிச்சிருப்பேன்." இவளது அட்டகாசம் தாங்க முடியாமல்,

"நாளை தானே மூன்றாவது நாள் நிச்சயம் உன் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும் பாரேன்!" என அசடு வழிந்தனர் நண்பர்கள்.

மறுநாள் காலை தலைமையாசிரியர் தன் உரையில்,

"வணக்கம் நட்சத்திரங்களே என ஆரம்பித்து, நமது பள்ளி இவ்வளவு குளுமையாக இருக்க காரணம் இங்கிருக்கும் மரங்கள் தான். இதை உருவாக்கிய பெருமை நம் முன்னோடி தலைமுறை மாணவர்களையே சேரும்.

இனியும் தொடர்ந்து பேணப் படவேண்டியவை என்பதால் அவர்களுக்கு பின் நீங்கள் அவற்றை தத்தெடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு மரத்தை எத்தனை மாணவர்கள்

வேண்டுமானாலும் தத்தெடுத்துக் கொள்ளலாம். அதன் பின் அவர்களே அதை கவனித்துக் கொள்ள வேண்டும்.

அதற்கு முன் முன்னோடி தலைமுறை மாணவர்கள் தாங்கள் வளர்த்த மரத்தின் தாவரவியல் பெயர், அதன் வகை, நீங்கள் அதற்கிட்டுருக்கும் செல்லப் பெயர், மற்றும் உங்கள் பெயரையும் பசுமை தலைவர்களிடம் இருக்கும் பெயர்ப் பலகையில் குறிப்பிட்டு உங்கள் மரத்தின் அருகில் வைக்க வேண்டும்.

தத்தெடுக்க விரும்புபவர்கள் மரத்தின் பெயரையும், உங்கள் பெயரையும் பசுமை தலைவர்களிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, படிப்பில் பின்தங்கிய மற்றும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்காக ஒரு புதிய திட்டம் கொண்டுவந்துள்ளோம். அதன்படி வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறும் இனி பள்ளி திறந்திருக்கும் காலை ஒன்பது முதல் மாலை நான்கு வரை நீங்கள் வரலாம்.

உள்ளே வரும் பொழுதும், வெளியே செல்லும் பொழுதும் நம் கண்காணிப்பாளரிடம் இருக்கும் கையேட்டில் உங்கள் பெயரையும் வகுப்பையும் குறிப்பிட்டு கையெழுத்துப் போட வேண்டும்.

இங்கு உங்களுக்கு உதவி செய்வதற்காக நம் பள்ளியின் உயர்நிலை மாணவர்கள் காத்திருப்பார்கள். அவர்களிடம் நீங்கள் தனி தனியாக உங்கள் சந்தேகங்களுக்கு உதவி பெறலாம்.

இவை அனைத்தும் உங்கள் நன்மைக்காக தான்... பயன்படுத்திக் கொள்ளுங்கள்."

தன் உரையை முடித்துக் கொண்டதும் மாணவர்கள் கரகோஷம் எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை தெரியப்படுத்தினர்.

நந்தினிக்கு தன் பிரச்சனை நிவர்த்தி செய்யப்பட்டத்தில் கொண்டாட்டம். இன்று அந்த தூங்குமூஞ்சிகளை புகழ்ந்து தள்ளினாள்.

அதிகமான மாணவர்கள் தேர்ந்தெடுத்த மரம் என்னும் பெருமை சுவீட்டிக்கே கிடைத்தது. மரத்திற்கு பெயர் வைத்திருந்த ஒரே ஆள் நந்தினி தான். அதுவே அனைவரையும் ஈர்க்க காரணமாகிப் போனது.

இப்பொழுது ஆதியை போல் நந்தினியும் பள்ளிக்கே தெரியும் ஃபிகராகியிருந்தாள். சின்ன வாண்டுகளெல்லாம் நந்தினியை பார்க்கும் போது ஏய்! 'ஸ்வீட்டியோட அக்கா...' என அழைக்க தொடங்கி ஸ்வீட்டி அக்காவாகிப் போனாள். இதை நண்பர்களிடம் பெருமையும் சந்தோஷமுமாய் பகிர்ந்துகொள்ள,

"வாவ்! நந்து ஸ்வீட்டிங்கிற பெயர் கூட உனக்கு நல்லா தான் இருக்கு..." என பாராட்டுப் போல் நண்பர்கள் கலாய்க்க...

அதையும் ரசித்துச் சிரிக்க அந்த கண்கள் நந்தினியை மீண்டும் விழுங்கின. (இவ சிரிக்கும் போது அவளோட கண்ணும் சிரிக்குதே எப்படி? இவ சந்தோசம் எல்லோரையும் தொத்திக்கும்... அப்பா! தேவதை...)

இந்த தேவதை... குட்டி தேவதையாகவே இருக்குமா? இல்லை மை லிட்டில் ஃபேரியாக மாறிப் போகுமா?

# அத்தியாயம் 2

ஆண்களும் பெண்களும் தனித் தனி வரிசையில் தான் அமர வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லாவிட்டால் நந்தினி நண்பர்களுடன் தான் அமர்ந்திருப்பாள். அதற்கு வழியில்லாமல் போக முதல் பெஞ்சில் அவளும் கடைசிப் பெஞ்சில் ஆதியும், பிரபாவும் அமரும்படி ஆகிப் போனது.

ஆதியின் தோழி என்பதாலேயே இவளுக்கு வேறு தோழிகள் கிடையாது. இவளருகில் இருக்கும் மஞ்சு கூட இவளோடு பேசமாட்டாள். ஹாட் ஃபிகரான ஆதி இவளை தாங்குவதும் அவனோடு இவள் எந்நேரமும் சுற்றுவதும் தான் காரணம்.

எல்லாம் பொறாமையும், காண்டும் தான் வேறென்ன? அதனாலேயே நந்தினிக்கு சட்டென ஏதேனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என தோன்றினாலும் நண்பர்களிடம் தான் ஓட வேண்டியிருந்தது. அன்று தமிழ் ஆசிரியை வருவதை கவனிக்காமல் கதை அளந்து கொண்டிருக்க, வசமாக மாட்டினாள்.

"நந்தினி உனக்கு எத்தனை முறை தான் சொல்வது? கடைசி பெஞ்சிற்கே அதுவும்... ஆண்கள் வரிசைக்கே ஓடுறியே ஏன்?" அவரது கோபத்தை அலட்சியம் செய்தபடி,

"அவங்க என் பிரண்ட்ஸ் ஆசிரியை." (நானும் தான் எத்தனை முறை சொல்வது?) என்னும் சிறுபிள்ளைத் தனமான உதடு பிதுக்கள் அவளிடம்.

"அதுக்காக எந்நேரமும் கதையளப்பியா?"

"இல்ல ஆசிரியை நீங்க வரதுக்கு முன்னாடி தான் பேசினேன்..."

"புத்திசாலித்தனமா பேசுறதா நினைப்பா? கடைசி பெஞ்சுக்கு போக… ஒன்னு வளர்ந்திருக்கணும், இல்ல நல்லா படிக்கணும்! ஆளும் வளரலை அறிவும் வளரலை பின்ன எதுக்கு அங்கயே போய் நிக்கிற?"

"அந்த வளர்ந்த மனுஷனுங்க கிட்ட இருந்து கடன் வாங்கிக்கலாம்னு தான் ஆசிரியை." சீரியசான முக பாவனையுடன் சொல்ல காண்டாகிப் போனவர்,

"வெளிய போ!" முறைப்பாய்ச் சொல்ல… ஆதி சத்தமின்றி சிரிக்க, பிரபா பரிதாபமாக பார்க்க… நந்து குட்டி கொண்டாட்டமாக வெளியே ஓடிவிட்டது. (மதிய உணவு முடிந்து முதல் வகுப்பு தமிழ். அதுவும் இன்று செய்யுள் நம்மால் முடியாதுப்பா...)

நந்தினியின் மிக பெரிய பொழுதுபோக்கு வேடிக்கை பார்ப்பது. எவ்வளவு மோசமான சூழ்நிலையாக இருந்தாலும் வேடிக்கையிலும், கற்பனை கனவிலும் தன்னை இயல்புக்கு

கொண்டு வந்துவிடும் கலையை தன் வசமாக்கி வைத்திருந்தவள் வெளியே நின்றும் பாடத்தை கவனிக்காமல் அங்கிருக்கும் காக்கைகளை எண்ணிக் கொண்டிருந்தாள்.

அவை பறப்பதையும், ஓடுவதையும் ஒன்றை ஒன்று துரத்துவதையும் வேடிக்கை பார்த்தவளுக்கு தானும் காக்கையாக பிறந்திருக்கலாம் என தோன்றியது. எல்லாம் இந்த படிப்பிலும், பள்ளிக்கு வருவதிலும் இருந்து தப்பிக்கலாம் என்னும் ஆசை தான்.

ஜன்னல் வழியாக நண்பர்களை பார்க்க ஆதியோ அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் என்பது போல் விழி எடுக்காமல் செய்யுள் நடத்தும் ஆசிரியயை பார்த்துக் கொண்டிருக்க பிரபாவோ இவள் பக்கம் திரும்பாமல் அமர்ந்திருந்தான்.

எங்கே அவள் செய்யும் குரங்கு சேட்டைகளை பார்த்து சிரித்து வைத்துவிடுவோமோ என்னும் பயம் தான். அதன் பிறகு அவளோடு சேர்ந்து அவனும் அல்லவே வெளியே போய் நிற்கவேண்டும்.

(எருமைகளா வெளிய வாங்கடா உங்களை கவனிச்சுக்கிறேன்) கருவிக் கொண்டு நின்றவளுக்கு தன் சீருடையில் பார்வை திரும்பியது. (முதல்ல ஐயன் கடைக்காரனை மாத்தனும் சரியாவே பண்ணலை.) உதட்டு

சுழிப்புடன் சீருடையை நீவிவிட்டாள். மீண்டும் காக்கைகளை பார்த்தாள்.

பிரபாவை பார்க்க அவனோ சட்டென முகம் திருப்பிக் கொண்டான். (டேய் எருமை... ஆதி தடிமாடே...) கிசு கிசுப்பாக அழைக்க வாயை இறுக மூடிக் கொண்டான் பிரபா. கால் மாற்றி நின்றாள். மணி பார்த்தாள்... வேகமா ஓடு என கை கடிகாரத்திற்கு ஒரு அடியைப் போட்டாள். இப்பொழுது வேடிக்கை பார்ப்பது கூட அலுப்புத் தட்டிவிட்டது.

சட்டென நந்தினிக்கு நேற்று பார்த்த MGR படம் நியாபகம் வந்துவிட்டது. அவரை போல் தலையை சுழட்டி ஆசிரியயைப் பார்த்து ஒரு காதல் பார்வையை வீச அவ்வளவு நேரமும் அவளது சேட்டைகளை ரசித்துப் பாத்துக் கொண்டிருந்த பிரவீன் அடக்கமாட்டாமல் வாய் விட்டு சிரித்துவிட்டான்.

ஒரு முறைப்புடன் ஆசிரியை பிரவீனைப் பார்க்க அவனும் வெளியே வரும் படியாகிவிட்டது. பிரவீன் தன் வகுப்பில் படிப்பவன் என்பதுவரை தான் நந்தினிக்கு தெரியும்.

அவனோடு பேசியதோ... ஏன்? சிரித்தது கூட கிடையாது. மென் முறுவலுடன் வெளியே வந்தவன்,

'ஹாய் ஸ்வீட்டி!' என புருவம் தூக்க,

"ஏய் என்னை அப்படிக் கூப்பிடாத... நான் நந்தினி! ஸ்வீட்டி என் பெட்!"

"சோ வாட்? நந்தினியை விட ஸ்வீட்டி தான் உனக்கு பொருத்தமா இருக்கு." புருவம் சுருக்கிப் பார்த்தாலும், ஸ்வீட்டி என்னும் அழைப்பை இயல்பாகவே எடுத்துக் கொண்டாள். இப்போது எல்லோருமே அப்படிதான் அழைக்கிறார்கள் என்பதால் அது பெரிய குற்றமாக தெரியவில்லை. பேச்சு துணைக்கு ஆள் வந்த சந்தோஷத்தில்,

‘‘ஏன்டா அப்படி சிரிச்ச?"

"உன்னை பார்த்து தான் சிரிச்சேன். ஆசிரியயைப் பார்த்து எப்படி உன்னால அப்படி ஒரு ரொமான்டிக் லுக் விட முடிஞ்சுது?" சிறு சிரிப்போடு வினவ,

"பாத்துட்டியா?" (ஐயோ! அசிங்கமா போச்சே!)

"ம்... காக்கைகளை எண்ணினது, யூனிபார்மை கையாலையே ஐயன் பண்ணினது, உன் நண்பர்களை தடிமாடு... எருமை என திட்டியது... எல்லாத்தையும் பார்த்துட்டேன்.’’

"நான் மெதுவா தானே கூப்பிட்டேன்..."

"இல்ல இன்னும் கொஞ்சம் சத்தத்தை குறைச்சுக்கலாம்...

"எல்லாம் இந்த தடியணுக்களால தான் ஒட்டகம் மாதிரி வளர்ந்து வச்சு கடைசி பெஞ்சுக்கு போய்ட்டானுக இவனுகள திரும்பி திரும்பி பார்த்தே நான் மாட்டிக்கிறேன் தெரியுமா?"

"நீ ஏன் திரும்பி பார்க்கிற ஸ்வீட்டி?"

"அவங்க தான் என் பிரண்ட்ஸ் சட்டுன்னு ஏதாவது சொல்லணும்னு தோணும் இதோ இந்த மஞ்சு மாதா முகத்தை திருப்பிக்கும்.... அதான்."

"பேசாமல் என்னை உன் பிரண்டா ஏத்துக்கோயேன்... நானும் பஸ்ட் பெஞ் தான். நம் இருவருக்கும் இடையில் சின்னதா ஒரு நடை பாதை தான் என்ன பேசணும்னலும் உடனே பேசலாம்...' ஆர்வமாக அவள் விழி பார்க்க,

"வேண்டாம் எனக்கு ஆதியும், பிரபாவும் போதும்." சிறுபிள்ளையாய் முகம் திருப்பிக் கொண்டாள்.

பள்ளி வாழ்க்கை எவ்வளவு கொண்டாட்டமும், குதூகலமும் நிறைந்ததோ அதே அளவிற்கு, மனச்சோர்வும், கவலையும் நிறைந்த ஒன்று என்பதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். இதோ பள்ளி ஆரம்பித்து ஒரு மாதமாகிவிட்டது.

மற்ற பள்ளிகளைப் போல் இங்கு பதினொன்றாவது பாதியிலோ இல்லை விடுமுறையின் போதோ சிறப்பு வகுப்புகள் மூலம் பாடங்கள் நடத்தப்படுவதில்லை என்பதால் பனிரெண்டாம் வகுப்பு பிள்ளைகளுக்கு இப்போது பாடங்கள் கொஞ்சம் வேகமாக தான் நடத்தப்பட்டன.

காலை எட்டரை மணிக்கெல்லாம் நண்பர்கள் மூவரும் பள்ளிக்கு கிளம்பிவிடுவது வழக்கம். ஆதியும் பிரபாவும் வாசலில் காத்துக் கொண்டிருக்க, அம்மையார் வந்த பாடாய்

இல்லை எனவும் ஆதி தான் மணியாகிவிட்டதாக வெளியில் இருந்த படியே கத்தினான்.

"எல்லாம் உன்னால் தான் இங்கு வந்து தொலை!' பதிலுக்கு கத்தினாள்.

"இம்சை நான் என்ன பண்னேன்?" என்ற படியே உள்ளே சென்றவனை தொடர்ந்து பிரபாவும் போக...

ஹால் முழுவதும் ஆங்காங்கே பேப்பர் உருண்டைகள் பல்லைக்காட்ட, மேசையின் மீது வட்ட தட்டு அதில் இரண்டு இட்லியும் கொஞ்சம் தக்காளி சட்னியும் கண் சிமிட்ட, சயின்ஸ் புத்தகமும் ரெக்காட் நோட்டும் பரிதாபமாய் பார்க்க, திரு திருத்துக் கொண்டிருந்தாள் நந்தினி.

"இன்னும் சாப்பிடாலயா நந்து? சீக்கிரம் சாப்பிடு! இதென்ன லவ் லெட்டர் எழுதின மாதிரி வீடெல்லாம் பேப்பர்?" ஆதியின் அக்கறையானா கேள்விக்கு,

"லவ் லெட்டர் கூட சுலபமா எழுதிவிடலாம் போல இந்த இதயம் வரைவது இருக்கே... ரொம்ப கஷ்டம் டா... எல்லாம் உன்னால் தான். நேத்தே பிரபா அழகா வரைஞ்சு கொடுத்துருப்பான். நீ தான் எல்லாத்தையும் கெடுத்துட்ட." கோப முறைப்பு வேறு.

"இப்போ அவன் வரைஞ்சு கொடுத்துடுவான் பரிட்சையில் என்ன செய்வாய்?"

"நீ டாக்டராகணும்னு படிக்கிறவன், பிரபா இன்ஜினியர் ஆகணும்னு படிக்கிறான்... நான் எப்படியாவது பாஸ் பண்ணா போதும்னு தான் படிக்கிறேன். எனக்கு இதுவே கஷ்டம் தெரியுமா?" (அடிப்பாவி)

"நீ எப்போ டிவி பார்ப்பதையும், ட்ரீம் பண்றதையும் நிறுத்திறுயோ அப்போ தான் உருப்படியா படிக்க முடியும்." நல்ல நண்பனாய் அறிவுறுத்த

"போதும் ஆதி! என் அம்மா மாதிரி நீயும் ஆரம்பிக்காத... அடிக்கடி இதையே கேட்டு கேட்டு போரிங்கா இருக்கு."

"எத்தனை முறை கேட்டாலும் திருந்த மாட்டேங்கிறியே..." தோழியை திட்டியபடியே இரண்டு இட்லிகளையும் அவளுக்கு ஊட்டி முடித்திருந்தான். அதற்குள் பிரபா படத்தை வரைந்து நோட்டை புத்தகப் பையில் வைத்தும் விட்டான்.

"பிரபா இட்ஸ் டூ பேட். நீ அவளுக்கு ரொம்ப செல்லம் கொடுக்கிற... இப்படி பண்ணினா எப்படி பரிட்சையில் பாஸ் பண்ணுவா?"

"கவலையே படாத மச்சான், ஸ்ரீ ராமா ஜெயம் எழுதியாவது நம்ம நந்து பாஸ் பண்ணிடுவா..." நண்பனை வாரினான் பிரபா.

"இவளே மேதாவி நீ அதிமேதாவியாக்கு..."

"போதும் மச்சான்... நீ முதல்ல ஊட்டுவதை நிறுத்து. அதையாவது அவ உருப்படியா செய்யட்டும்..." என நண்பர்கள் இருவரும் செல்லமாக முட்டிக் கொள்ள,

"இப்படி இரு நண்பர்கள் கிடைத்தது என் பூர்வ ஜென்ம புண்ணியம்." தன் நெஞ்சில் கரங்கள் இரண்டையும் வைத்து மந்தகாசப் புன்னகையுடன் சொல்ல

"குட்டி குரங்கே! நாங்க செஞ்ச பாவம் தான் உன் உருவத்தில் பலி தீர்க்குது." என செல்லமாக தலையில் கொட்டினான் ஆதி.

"நான் பாவமாடா? செல்லாக்குட்டி... நீ சொல்லுடி?" என பிரபாவிடம் பஞ்சாயத்தைக் கூட்டினாள் நந்தினி.

"நாங்க தான் பாவம் நந்து. ப்ளீஸ்... சீக்கிரம் கிளம்பு..." கெஞ்சத் தொடங்கிவிட்டான் பிரபா. இப்படி நாளொரு கூத்தும்... பல்புமாக அவர்கள் பொழுதும் கடந்தது.

பள்ளி முடிந்து வந்ததும் நந்துவுக்கு டிவி பார்த்தபடியே ஏதேனும் கொறிக்க வேண்டும். ஆதிக்கோ குட்டி தூக்கம் போட வேண்டும். இவர்கள் பள்ளி முடிந்து வீட்டிற்கு வரும் போது பிரபாவின் அன்னையைத் தவிர வேறு யாரும் வீட்டில் இருக்கமாட்டர்கள் என்பதால்,

பிரபா மட்டுமே கை கால் கழுவி, உடைமாற்றி, வசதி குறைவு என்ற போதும் தினமும் அன்னை செய்து தரும் புட்டு,

உப்பு கொழுக்கட்டை இப்படி ஒன்றை உண்டுவிட்டது அவர் மடி சாய்ந்து அன்றய கதைகளையும், கூத்துக்களையும் சொல்லி சிறுபிள்ளையாய் கொஞ்சிக் கொண்டிருப்பான்.

ஆறு மணிக்கு ஆதியின் வீட்டுக்கு வந்து படிக்கத் தொடங்கினால் ஒன்பது மணிவரை அவர்களது படிப்பு தொடரும் இடையில் ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை பத்து நிமிடங்கள் கதை பேசுவது, வெளியில் சென்று வேடிக்கை பார்ப்பது என சில சின்ன சின்ன சோர்வை நீக்கும் உத்திகளை ஆதி கட்டாயமாக்கியிருந்தான்.

இதோ முதல் டேர்ம் டெஸ்டும் வந்துவிட்டது. நந்துவை படிக்க வைப்பதுதான் ஆதிக்கு சவாலான விஷயம் அவள் அந்த பத்து நிமிட இடைவேலைக்காகவே காத்திருப்பவள் போல்,

"ஸ்டாப் ஸ்டாப் ஆதி. இது ரெஸ்ட் டைம்...' என படிக்கவிடாமல் தடுத்ததோடல்லாமல் ஒரு கடித்தை வேறு அவனிடம் கொடுத்து,

"ஆதி நம்ம மஞ்சு மாதா உனக்கு கொடுத்தா...' என நீட்டவும்,

"கோபியர் கொஞ்சும் ரமணன் நம்ம பிரபா தானே? நல்லா யோசித்துச் சொல்லு அவனுக்கு கொடுக்கச் சொல்லியிருக்கப் போறா..."

"அடப்பாவி! அந்த கோபியரெல்லாம் சுத்த காரணமே நீ தான்டா. உன்னை எப்படி கரெக்ட் பண்ணனும்னு தான் கேட்கலை. அதை தவிர உன்னை பத்தின அத்தனை விஷயமும் கேட்டு என் உயிரை எடுக்கறாளுக தெரியுமா? தயவு செஞ்சு சீக்கிரமா யாரையாவது கரெக்ட் பண்ணு. இல்ல... என்னை டைவர்ஸ் பண்ணு..." காண்டாகிப் போனவனாய் பிரபா கதற... கைகொட்டி சிரித்தவள்,

"பிரித்து படி ஆதி! என்ன தான் எழுதியிருக்கான்னு பார்ப்போம்.' என தூண்ட,

"நீயே படி நந்து..."

"ஆதி! இதெல்லாம் பெர்சனல்... என்னை பிரிக்க கூடாதுன்னு சொல்லி தான் கொடுத்தா நீயே படி.' முறைப்புடன் அவன் கையில் திணிக்க,

"இந்த கண்றாவிக்கு பேர் லவ் லெட்டரா? இதுல பெர்ஸனலாம் இந்தம்மா வேறு..." கேலி சிரிப்பு அவனிடம் (அப்படி என்னத்தை எழுதியிருக்கா?) ஆர்வம் தாங்காமல் அவனிடம் இருந்து வாங்கிப் படிக்க,

"ச்சை இதுக்கு தான் இந்த பில்டப்பா? ஆதி! ஸ்கூலோட ஹாட் ஃபிகர் நீ! உனக்கு போய் இப்படி ஒரு லெட்டரா?" அவளும் சிரிக்க,

"கொடு நந்து நானும் படிக்கிறேன்..." பிரபா பரிதாபமாய் கேட்க,

"வேணாம் பிரபா நீயெல்லாம் லவ்வை அப்படியே பீல் பண்ணனும்னு சொல்றவன் இதை பார்த்தால் மிரண்டுருவாய். படிப்பதற்கெல்லாம் ஒன்னும் இல்ல. நானே சொல்றேன் கேளு. ஸ்ரீ ராமா ஜெயம் போல ஐ லவ் யூ... ஐ லவ் யூன்னு பக்கம் முழுக்க எழுதி கீழே ஒரு இதயம் அதில் ஒரு அம்புக்குறி அதற்கு மேல் ஆதித்தியன்."

"அப்புறம்?"

"டேய்... உன் ஆர்வத்துக்கு ஒரு அளவே இல்லையா? லெட்டர் முடிஞ்சு போச்சு செல்லாக்குட்டி." நண்பனின் தோள்தட்டி சிரித்தவள்,

"பாரேன் பிரபா... அவ பேரையே போடல எவ்வளவு சேஃபா இருக்கா?" பேந்த விழித்துக் கொண்டிருந்த பிரபா,

"இப்ப இருக்க பொண்ணுங்களெல்லாம் ரொம்ப தெளிவு.' என பாராட்டு பத்திரம் வாசிக்க.

"பதில் லெட்டர் கொடு ஆதி. வாங்கிட்டு வரச் சொல்லியிருக்கா..."

"ஏய் மெசஞ்சர் மாமி... இது ஒரு லெட்டர் இதுக்கு பதில் வேறயா? முதல்ல ஒழுங்கா லெட்டர் எழுத கத்துக்கச் சொல்லு

அப்புறம் பார்க்கலாம். போதும் வாங்க படிக்கலாம்." பத்து நிமிட கணக்கில் அவளுக்கு மேல் இருந்தான் ஆதி.

மறுநாள் வகுப்பில் நுழைந்ததும் நந்துவின் கரம் பற்றி,

"நந்து உன்னை தான் எதிர்பார்த்துக்கிட்டு இருந்தேன். ஆதிகிட்ட கொடுத்துட்டியா என்ன சொன்னான்?" எனக் குழைந்த மஞ்சுவை எற இறங்க பார்த்தாள் நந்து. (அழகான ரிச் ஃபிகர் தான் இந்த மஞ்சு மாதா! ஆனா ஆதிக்கு பிடிக்கல...)

"முதல்ல உன்னை ஒழுங்கா லெட்டர் எழுத கத்துக்கச் சொன்னான்..."

"ஏய் நிஜமாவே ஆதி சொன்னானா? இல்ல நீயா அடிச்சுவிடறியா?" மஞ்சுவுக்கு கோபம் வந்துவிட்டது. இவளை தனியா சமாளிக்க முடியாது என பயந்தது போனவள்,

"ஆதி இங்கு வாயேன்..." என்று நண்பனை துணைக்கு அழைக்க,

அவளருகே வந்தவனிடம்,

"பார் ஆதி... நீ சொன்னதை சொன்னால் நம்பமாட்டேன்கிறா..." நந்து குறைபாடா,

"என் நந்து குட்டியையே சந்தேகப்படுவியா? நீ நல்லா லெட்டர் எழுதினாலும் உன்னை கன்சிடர் பண்ணமாட்டேன் இப்பவே ரிஜெக்டட் போ" அவளது கடிதத்தை அவளிடமே

கொடுக்க கோபமாக வாங்கியவள் அதை கிழித்து அவன் முகத்திலேயே எறிந்தாள்.

"ஐயோ ஆதி! மஞ்சு மனசை இப்படி பஞ்சு பஞ்சா ஆக்கிட்டியே..." நந்து கலாய்க்க,

"ஆதி, நந்து.. ரெண்டு பேரும் பேசாமல் இருங்க. லவ் ஃபீல் புரியலன்னா விட்டுடுங்க இப்படி கேலி பண்ணுவது தப்பு!" என புத்தி சொன்னாள் பிரபா.

"வாடா கோகுல கண்ணா... வர வர உன் இம்சைக்கு அளவே இல்லாம போச்சு. அது என்ன டா லவ் ஃபீல்? எனக்கு ஒண்ணுமே புரியமாட்டேங்குது."

"அதெல்லாம் மனுஷங்களுக்கு தான் புரியும் நந்து. நீ குட்டி குரங்கு! அதான் புரியல..." ஆதி சேம் சைட் கோல் போட,

"நீ தான் குரங்கு. கொரிலா... சிம்பன்ஸி... போடா. நீ சொல்லுடி செல்லாக்குட்டி... நான் குரங்கா?" கன்னம் குழிய சிரித்தபடி பிரபாவைப் பார்க்க, "அவன் கிடக்கிறான் லூசு. நீ மேதாவிடா!" என கண் சிமிட்டினாள்.

"அது! கேட்டுக்க ஆதி" என சட்டையின் கலரை தூக்கிவிட்ட நந்துவை பார்த்து வெடி சிரிப்பு சிரித்தவன்,

"ஐயோ நந்து நீ இவ்வளவு மக்கா இருக்க வேண்டாம்... மேதாவின்னாலும் குரங்குன்னு தான் அர்த்தம் மேல தாவுறது..." என விளக்கம் வைக்க, காண்டாகிப் போனவள் நண்பர்களின்

மீது கணித புத்தகத்தை தூக்கி ஏறிய, அது சரியாக குறி தவறி பாடம் எடுக்க வந்த கணித ஆசிரியரின் காலடியில் விழுந்தது.

வகுப்பே நிசப்தமாய் அதனதன் இடத்தில் இருந்தன நம் நந்துவைத் தவிர, அவளது செல்ல எருமைகள் கூட தங்கள் இடத்துக்கு சென்றுவிட்டிருந்தன. கோப முறைப்புடன் புத்தகத்தை கையில் எடுத்த ஆசிரியர் வாயை கூட திறக்காமல் வெளியே போ என்பது போல் ஜாடை காட்ட, பவ்வியமாக பம்மிய படி வெளியே போய்விட்டது நந்தக்குட்டி.

இப்போது பிரவீன் அவளை பரிதாபமாக பார்க்க,

"திரும்புடா நான் என்ன டிஸ்பிலே பீசா? கண்ணை நோண்டிருவேன்.' இவளது தொணதொணப்பு ஆசிரியரை தொந்தரவு பண்ண சாக்பீஸை ஒடித்து தூக்கி எரிய... அது குறி தவறாமல் நச்சென அவள் தலையை பதம் பார்த்தது.

முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு வழக்கம் போல் வேடிக்கை பார்க்கத் தொடங்கிவிட்டாள். மனம் லேசாகி கோபம் காணாமல் போய்விட்டது. இது தெரியாமல் பயங்கர கோபத்தில் இருக்கப் போகிறாள், இன்று தொலைந்தோம் என நாள் பூராவும் பம்மியே இருந்த போதும், மதிய சாப்பாடு இடைவேளையின் போது ஒருவித பயத்துடனேயே தோழியுடன் உணவருந்த வர, அவளோ அனைத்தையும் மறந்து இயல்புக்கு திரும்பியவளாய்,

"ஆதி ல்வனா என்னடா?" அதைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் கண்களில் மின்ன கேட்க.

"அப்பாடா!" நண்பர்கள் இருவருக்கும் மனதில் பயம் போய் இதம் பரவத் தொடங்கியது.

"அது ஒரு ஃபீல் நந்து. நம்ம மனசுக்கு நெருக்கமானவக்களோட துக்கம், சந்தோஷம் எல்லாம் நம்மையும் பாதிக்கும். அவங்களோட பார்வையும், தொடுகையும் ரொம்ப தொந்தரவு பண்ணும். அதை அப்படியே புடிச்சுகிட்டு அவங்க நமக்கு செட்டாவாங்களா? நம்ம குடும்பத்துக்கு செட்டாவாங்களான்னு பார்த்து அலசி ஆராய்ஞ்சு ஒகேன்னா கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தான்,"

"போடா நல்லாவே இல்ல." ஒரேயடியாய் மறுத்தவள்,

"நீ சொல்லு பிரபா..." எனத் தாவ...

காதல்....

மனம் நனைக்கும் மழைச் சாரல்...

மார்கழி மாதத்துப் பனித் தூறல்...

முகம் பார்க்க... மூச்சு முட்டும்!

அகம் பார்க்க... ஆளாய் பறக்கும்!

அருகே இருந்தால்... அவஸ்தை!

பிரிந்து போனால்... பித்து!

விரும்பி ஏற்கும் வேதனை...

வாழவும் விடாத... சாகவும் விடாத...

வன்கொடுமை காதல்!

உருகி கவிதை சொன்ன நண்பனின் தோள் தட்டியவள்,

"பிரபா... செம டா! ஏய் பக்கி! எங்களுக்கு தெரியாம யாரையாவது லவ் பண்றியா?"

"ச்சே... உங்களுக்கு தெரியாமலா...? ஆனால் லவ் பண்ணிதான் கல்யாணம் பண்ணனும். இப்போ இல்ல... இன்ஜினியரிங் முடிச்சுட்டு நல்ல வேளையில் செட்டிலானதுக்கப்புறம் இப்படி உருகி உருகி லவ் பண்ணித் தான் கல்யாணம் பண்ணனும்." கண்கள் மின்னக் கூறினான் பிரபா.

"டேய் மச்சான்! உனக்குள்ள இப்படியொரு ரெமோ இருப்பது தெரியாம போச்சே மனசுக்கு பிடிச்ச மாதிரி பொண்ணு கிடைக்க வாழ்த்துக்கள்." ஆதி தோள் தட்ட... மெல்லிய புன்னகையுடன் தலைகுனிந்து கொண்டான்.

"இதெல்லாம் நமக்கு செட்டாகாதுப்பா. வீட்டில் பார்க்கும் பையனை நல்ல பிள்ளையா கட்டிக்க வேண்டியது தான். நமக்கு சேஃப்டி தான் முக்கியம். அப்போ தான் அவன் மிரட்டினா அப்பா அம்மாகிட்ட கம்ப்ளென்ட் பண்ணலாம்."

"அடக்கடவுளே! அப்பவும் வளரவே மாட்டியா நந்து? சின்ன பசங்க மாதிரி கம்ப்ளைண்ட் பண்ணுவேன்னு சொல்ற...?"

"எனக்கு சண்டை போடுறதெல்லாம் வராது அதட்டி பேசினாலே பயம். நமக்கெதுக்கு அந்த வம்பு அவங்ககிட்ட விட்டுட்டா நாலு தட்டு தட்டி ஒழுங்கா இருக்கணும்னு சொல்வாங்கள்ல..."

காதலை பற்றி உருகி உருகி விளக்கம் வைத்தவன் அதை உணரப் போவதேயில்லை.

காதல் என்றால் என்னவென்றே தெரியாது என சொன்னவள் அதில் இருந்து மீள முடியாமல் தவிக்கப் போகிறாள்.

அலசி ஆராஞ்சு கல்யாணம் பண்னனும்னு சொன்னவன் பார்த்ததுமே தலை குப்புற விழப் போகிறான்... விதி வலியது இந்த நண்பர்களின் விஷயத்தில்.

இந்த மூவரில் யார் முதலில் தங்கள் இணையை சந்திப்பார்கள்?

# அத்தியாயம் 3

எப்பொழுதும் மாலை ஏழுமணிக்கு வீட்டிற்கு வரும் பெற்றோர், அன்று ஐந்து மணிக்கே வந்து தூங்கிக் கொண்டிருக்கும் ஆதியை எழுப்பியது அதிசயமென்றால் அதைவிட அதிசயம்... அவனது தந்தை மனோகரனின் சோகமும், படபடப்பும். அன்னை அதற்கு மேல்! பதட்டம்... பதட்டம்... பதட்டம்... தான்.

"ஆதி ரெண்டு மூணு நாளைக்கு லீவ் எழுதிக் கொடுத்துவிடு... பிரபா அப்பா முருகனிடம் யாராவது டிரைவர் கிடைப்பாங்களான்னு கேளு... சென்னைக்குப் போகணும். சீக்கிரம் ஓடு... ஓடு..." அவ்வளவு அவசரம் அவரிடம்.

இவ்வளவு பறப்பவர்கள் ஏன் போகிறோம் என்பதை இதுவரை சொல்லவேயில்லயே என்ற எரிச்சல் மூண்டாலும் பதின்ம வயதுக்கே உரிய முறுக்கையும் விட்டேற்றியான குணத்தையும் ஒதுக்கி துரிதமாக செயல்பட்டான்.

ஆறு மணிக்கெல்லாம் தங்களது காரில்... டிரைவர் ஓட்ட அவர் அருகில் மனோகரன் அமர்ந்திருக்க, ஆதியும், மங்களமும் பின் இருக்கையில் அமர்ந்திருந்தனர். புரியாமல் கையசைத்த நந்துவுக்கும், பிரபாவுக்கும் தானும் ஒன்றும் புரியாமலேயே

கையசைத்தபடி விடைபெற்றான். சென்னையை நோக்கி பயணப்பட்டனர் ஆதியின் குடும்பத்தினர்.

"ஏதேனும் பிரச்சனையா அம்மா? இவ்வளவு அவசரமா ஏன்...? எங்க போறோம்?" மெல்ல தாயிடம் கிசுகிசுத்தான்.

"ம்... பிரச்சனை தான் ஆதி. இத்தனை நாளா இறுகியிருந்த உன் அப்பா இளகிட்டாறேன்னு சந்தோஷப்படுறதா? இல்ல அங்கிருப்பவர்களுக்கு ஏதும் ஆகிடக் கூடாதேன்னு வருந்துவதா? ஒன்னும் புரியல..."

(தலையும் புரியல வாலும் புரியல இதுக்கு நீங்க சொல்லாமலேயே இருந்திருக்கலாம்) லேசாக கடுப்பாகிய போதும் அதை மறைத்து,

"யாருக்கும்மா பிரச்சனை?"

"உன் அத்தைக்கு விபத்தாம்... கவலைக்கிடமாக இருப்பதாக செய்தி. பாவம் உன் அப்பா... தன்னை விட்டு பிரிந்து சென்றாலும் எங்கோ தங்கை நல்லா இருந்தா சரின்னு நினைச்சார்... இப்படி ஆகிப் போச்சே..."

"எனக்கு அத்தை இருக்காங்களா?! பாட்டி, அப்பா ஒத்தபுள்ளைன்னு சொன்னாங்க..." ஆதிக்கு ஆச்சரியமும், அதிர்ச்சியும் ஒருங்கே தோன்றின. (பதினேழு வருடமாக தனக்கு ஒரு சொந்தம் இருப்பது தெரியாமலேயே இருந்திருக்கிறது.

அப்படி என்ன தான் நடந்திருக்கும்?) மீண்டும் அன்னை முகம் பார்க்க,

"உன் அத்தை குடும்பத்தை எதிர்த்து காதல் திருமணம் செஞ்சுக்கிட்டா. அவ காதலிச்சது உன் அப்பாவோட நண்பர் தயாளனை.'' மனைவி மகனுக்கு விளக்கம் வைக்க, மனோகரன் தன் கடந்த கால நினைவுகளில் பின்னோக்கி சென்று கொண்டிருந்தார்.

மனோகரனும், தயாவும் நெருங்கிய நண்பர்கள். அடிக்கடி வீட்டிற்கு வரும் தயாளனை மனோவின் பெற்றோர் தங்களது இன்னொரு மகனாகவே பார்த்தனர். ஆனால் அவரது தங்கை ஆர்த்தியும் தயாளனும் ஒருவரை ஒருவர் உளமார விரும்பினர்.

ஆர்த்தி கல்லூரியில் அடியெடுத்து வைத்ததும் தயா அவளிடம் தன் மனம் திறந்திருக்கிறார். அண்ணனின் நண்பர், நன்றாக படித்திருக்கிறார், வேலையோடு சேர்த்து தமிழகத்தின் கால்பந்தாட்ட அணியிலும் சேர முயன்று கொண்டிருக்கிறார். நல்லவர், பண்பாளர், குடும்பத்திற்கு நன்கு அறிமுகமானவரும் கூட... மறுப்பதற்கு காரணங்கள் இல்லாததால் ஏற்றுக் கொண்டாள்.

ரயில்வேயில் வேலை கிடைத்துவிட்டாலும் மாநில கால்பந்தாட்ட அணியில் சேர்வது அவ்வளவு சுலபமாக இல்லை. இருவரும் திட்டமிட்டு காத்திருந்தனர். ஆர்த்தி கல்லூரி

படிப்பையும் முடித்து அடுத்த ஒருவருடமும் அண்ணன் கொண்டுவந்த மாப்பிள்ளைகளை அது நொட்டை, இது நொள்ளை எனத் தட்டிக்கழித்துக் கொண்டிருக்க... ஒரு வழியாக தயாளனின் கனவும் நிறைவேறவே வீட்டிற்கு பெண் கேட்டு வந்தார்.

அனைவருக்கும் அதிர்ச்சி. மனோவின் தந்தை ஜாதியை காரணம் காட்டி மறுக்க, நான்கு வருடக் காதலை விடமுடியாது என்றனர். இதுவரை அண்ணனுக்கும், தங்கைக்கும் எந்த ஒளிவு மறைவும் இருந்ததில்லை. இந்த காதல் விஷயத்தை தவிர.... (தன்னிடமாவது சொல்லியிருக்கலாமே... திட்டமிட்டு எல்லோரையும் ஏமாற்றிவிட்டார்களே..). அன்றளவிற்கு இல்லாவிட்டாலும் இன்றும் அந்த வலியை உணரத்தான் செய்தார் மனோகரன்.

யார் எதிர்த்தாலும் அண்ணன் உடனிருந்து திருமணத்தை நடத்தி வைப்பார் என்று நம்பினாள் ஆர்த்தி. நடத்தி தான் வைத்திருப்பார் இவரிடம் முன்னமே சொல்லியிருந்தால். மனோகரனை பொறுத்தவரை காதல் கொலை குற்றமில்லை.

ஆனால் இங்கு ஏமாற்று வேலையாகவும், நம்பிக்கை துரோகமாகவும் தான் தெரிந்தது. அதனால் மனம் ஒப்பாமல் அமைதி காத்தார்.

எப்படி இருவராலும் என்னிடமே நாடகம் ஆட முடிந்தது? நீங்கள் காதலர்களாகவே வளம் வந்திருந்தால் கூட இத்தனை வேதனை இருக்காது. எப்படி ஏமாந்தேன்? இருவரையும் முழுவதுமாக நம்பியதாலா?

உணர்ச்சிகளை தங்கள் பிடிக்குள் வைத்து கட்டுப்பாடோடு நடந்து கொண்டதாலா? ஒருவார்த்தை சொல்லியிருக்கலாமே... உன் தங்கையை விரும்புகிறேன் என்று. இவளாவது சிறு குறிப்பு காட்டியிருக்கலாமே திட்டமிட்டு முதுகில் குத்திவிட்டார்களே... நீ தான் காரணம் என அப்பா என்னையும் அல்லவா வெறுத்து ஒதுக்கிவிட்டார்.

என் தங்கை அப்பாவி...சூது வாது தெரியாது என்றல்லவா நினைத்தேன். அழகாக காய் நகர்த்தி, ச்சே... எவ்வளவு பெரிய துரோகம்? மனோகரனால் மன்னிக்கவே முடியவில்லை. மனோகரனின் தந்தை ஊரில் பெரிய மனிதர், கௌரவமாக வாழ்ந்தவர் இந்த துரோகத்தால் வெளியே தலை கட்ட முடியாமல் அடுத்த ஆறே மாதங்களில் இறந்து போனார்.

தயாளனுக்கும் மனோவுக்கும் பொதுவான நண்பர் ஒருவர் உண்டு. அவர் தான் மாணிக்கம். சென்னையில் மருத்துவராக சேவைசெய்கிறார். தயாளன், ஆர்த்தி திருமணத்தை அவர் தான் நடத்தி வைத்தார். அன்றும், அவர் மூலமே தந்தை இறந்த

செய்தி அறிந்து வந்த ஆர்த்தியை யாரும் தடுக்கவில்லை. தந்தையின் இறுதி சடங்கு வரை இருந்தவள்... போவதற்கு முன்,

"மனோ அண்ணா அம்மா என்னை தலைமுழுகி விட்டார்கள் எனத் தெரியும். அதுகூட என்னை பெரிதாக பாதிக்கவில்லை... நீ என்னை மன்னிக்கவே மாட்டாயா? அழுகையும் கண்ணீருமாய் கையேந்தியவள் சிலையென சமைந்து போன தமயன் மன்னிக்கப் போவதில்லை எனத் தெரிந்ததும் அப்படியே போய்விட்டாள்.

அன்று தான் அவளை கடைசியாக பார்த்தது. ஆனால்...ஆர்த்தியின் வாழ்வில் நிகழும் முக்கிய நிகழ்வுகள் மாணிக்கம் மூலமாக மனோவுக்கு தெரிந்துவிடும். வீடு வாங்கியது, கார் வாங்கியது, திட்டமிட்டு நான்கு வருடங்களுக்கு பிறகு ஒரு மகளை பெற்றெடுத்தது... எல்லாம் தெரிந்து கொண்டார்.

இப்பொழுதும் அப்படித்தான் அவர்களுக்கு நடந்த விபத்தைப் பற்றியும் தெரிந்து கொண்டார். மகளை பள்ளியில் விட்டுவிட்டு கடைத் தொகுதிக்கு செல்லும் பொது வேகமாக வந்த லாரியில் மோதிவிடாமல் வண்டியை ஒடித்து திருப்ப, கார் மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாகவும்... தன் மருத்துவமனையில் தான் வைத்திருப்பதாகவும் மாணிக்கம்

அழைத்துச் சொல்ல... இதோ உடன்பிறப்பல்லவா? ஆருயிர் நண்பனல்லவா கிளம்பிவிட்டார்.

பதினைந்து வருடங்களுக்குப் பிறகு... இன்று தான் தங்கையைக் காண வருகிறார். இப்பொழுது வெறுப்பு, கோபம், ஏமாற்றம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட... மனம் முழுவதும் இருவருக்கும் எதுவும் ஆகிவிடக் கூடாது என்னும் பிரார்த்தனையுடனேயே சென்னையை நோக்கி பயனப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆறுமணி நேரப் பிரயாணம் நான்குவழி சாலையின் உபயத்தால் விரைவிலேயே சென்னையை வந்தடைந்தனர். மாணிக்கம் இவர்களுக்காக மருத்துவமனையின் வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தார். அவரோடு பத்து பன்னிரண்டு வயது மதிக்க தக்க பெண் ஒருத்தி கண்களில் மிரட்சியும், பயமுமாய் பொங்கி வரும் அழுகையை உதடு கடித்து அடக்கி நின்றாள்.

யாரென அறிமுகப்படுத்த அவசியமே இல்லாமல் தங்கையின் வார்ப்பும், நண்பனின் நிறமுமாய் இருந்தவளை சட்டென அடையாளம் கண்டுகொண்டாலும் மனம் முழுவதும் தங்கையே நிறைந்திருந்ததால்,

"என்ன மாணிக்கம்? இப்போ எப்படி இருக்காங்க? ஒன்னும் பிரச்சனையில்லையே?" பரிதவிப்பாய் கேட்டபடி நண்பனுடன் விரைய அவரைப் பின்தொடர்ந்தனர் அனைவரும்.

ஆதியின் கண்கள் மட்டும் அந்தச் சிறுபெண்ணை விட்டு நகர மறுத்தது. ஸ்கர்ட்டும் ஷர்ட்டுமாய் பள்ளிச் சீருடையில், ரெண்டு பக்கமும் போனி டெயில் போட்டிருந்தாலும், தலை கலைந்து முடிகள் காற்றில் பறக்க, பிறைபோலும் நெற்றி... குட்டிப் பொட்டு, நீளமான கண்கள், அதில் இப்பவோ அப்பவோ வெளியில் வர துடிக்கும் விழி நீர் குளமாய்... செதுக்கியது போல் கூறிய மூக்கு, பளபளப்பான கன்னம், அழகிய இதழ்களுக்கு அருகே அதைவிட அழகாய் ஒரு மச்சம். நீண்ட கழுத்து... ஸ்கூல்ல இருந்து நேர வந்திருப்பா போல அவளது கருப்பு நிற ஷூவில் பார்வை படிந்து மீண்டது.

இவள் குழந்தையா? குமரியா? கணிக்க முடியாத போதும், (பாவம் ஏன் இப்படி தவிக்கிறாள்? இவளுக்கு என்ன கஷ்டம்?) எதுவாக இருந்தாலும் அதைத் தகர்த்துவிடும் வேகம் வருவது கண்டு மிரண்டு போனான் ஆதி.

"மாமா இருக்கிறேன் உனக்கு எல்லாம் சரியாகிவிடும்!" எனத் தலை வருடிய மனோகரனுக்கும் கண்களில் நீர் திரண்டுவிட்டது. எல்லாம் நல்லதாக மாறிவிட வேண்டும் என்னும் கவலை அப்பிய முகம் அவளுக்கு மேலும் பீதியை கிளப்பியது.

(ஓ இவள் தான் அத்தையின் மகளா?) அத்தைக்கு தன் வயதொத்த பிள்ளைகள் இருப்பார்கள் என

நினைத்திருந்தவனுக்கு, இந்த குட்டிப் பெண் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டது போல் மனம் குமைந்தது. தன் அன்னையின் ஆதாரவான அணைப்பில் அவள் சற்று தெளிந்திருப்பதாகவே தெரிந்தது ஆதிக்கு.

ICU வில் மரணத்தின் வாயிலில் நிற்கும் தங்கையும் அவள் கணவனையும் கண்டார் மனோகரன். தயாளனுக்கு நினைவு தப்பிவிட்டது. கிட்டத்தட்ட மூளைச் சாவின் வாயிலில் நின்றார். ஆர்த்தியோ அண்ணனை பார்ப்பதற்காகவே உயிரை பிடித்து வைத்திருக்கிறாள் என்று தான் சொல்ல வேண்டும்.

"ம...மனோ... ண்ணா..." திணறலாக தான் வந்தன வார்த்தைகள். இது தான் அவளது அழைப்பு பெற்றோர் மனோ எனஅழைப்பதைப் பார்த்து வளர்ந்ததால் மனோ அண்ணா என்று தான் அழைப்பாள்.

"மன்னிச்சுட்டியா?... எனக்குத் ... தெரியும்..." அந்த மரண வலியிலும் சிறு சிரிப்பு தோன்றி மறைந்தது ஆர்த்தியிடம்.

தன்னருகே அழுகையும், கண்ணீருமாய் அம்மா... அம்மா எனத் தவிக்கும் மகளின் கரம் பற்றி, "நிவி... மாமா இருக்காங்க... அம்மா... எங்கும் போகல... உன்னோட... தான்... " கண்கள் அண்ணனிடம் நிலைத்திருக்க இவ்வளவு நேரம் எம தூதர்களிடம் போராடி நிறுத்தி வைத்திருந்த உயிர் பறவை

பறந்துவிட்டது. எந்த அசைவும் இல்லாமல் இருக்கும் தாயை கண்டதும்,

"அம்மா... அம்மா... என்னைப் பாரும்மா..." என தாயின் உடல் மீது புரண்டு அழ, மனோகரனோ,

"ஆர்த்தி... ஐயோ தப்பு பண்ணிட்டேனே" என முகத்தில் அறைந்து கொண்டு அழ... யாரைப் பார்ப்பது எனத் தெரியாமல் கண்ணீர் கோடாய்... கன்னத்தில் இறங்க... சமைந்து போய் நின்றார் மங்களம்.

"மாணிக்கம் ஏதாவது செய்யேன்? எனக்கு ஆர்த்தி வேணுமே என் தங்கை வேணுமே.. அவள பேசச் சொல்லு மாணிக்கம் என் தங்கையை திருப்பிக் கொடேன்..." என மருத்துவ நண்பனின் சட்டையை பிடித்து உலுக்க, சுதாரித்துக் கொண்ட மங்களம் கணவனை தாங்கிக் கொள்ள,

தேற்றுவாரற்று தாயின் உடல் மீது புரண்டு கதறும் அந்த சிறு பெண்ணின் இழப்பும் அழுகையும் மனதை பிசய... அவளருகே சென்ற ஆதி, அந்த உடலில் இருந்து மெல்ல அவளைப் பிரித்து... தன்னோடு சாய்த்துக் கொண்டு,

"ஏய்... அழாத... இங்க பார்... நான் இருக்கேன்... அழாத" அந்த பதினேழு வயது பையனுக்கு எப்படி சமாதானப்படுத்துவது எனத் தெரியவில்லை.

இது சட்டென சமாதானம் செய்துவிடும் இழப்பா? அதற்காக அவளை அப்படியே விடவும் மனம் இல்லை.

அவன் கையணைப்பில் இருந்தவள் அதை விலக்கிக் கொண்டு ஏதோ தோன்றியவளாய் மாணிக்கத்திடம் ஓடிச் சென்று,

"அப்பா... என் அப்பா எங்க அங்கிள்? அப்பா இருகாங்க தானே... சொல்லுங்க அங்கிள்?" அவராவது இருக்க வேண்டுமே யாரும் இல்லாமல் தான் மட்டும் இருக்க நேரிடுமோ? மீண்டும் அழுகை.

இப்பொழுது மங்களம் அவளை அணைத்துக் கொள்ள, அந்நேரம் ஓடிவந்த நர்ஸ் தயாளனும் இறந்துவிட்டதாக சொல்ல, அந்த சிறுபெண்ணின் கதறல் அவ்விடத்தையே அதிர வைத்தது. மீண்டும் மனோகரனும் தவறு செய்து விட்டதாக அழத் தொடங்கவும்...

மங்களம் அவரிடம் செல்ல, ஆதி அநாதரவாக கதறிக் கொண்டிருப்பவளை தன்னோடு அனைத்துக் கொண்டானே ஒழிய அவளது கதறல் அவனுக்கு பயமேற்படுத்தியது.

இதுவரை இப்படியெல்லாம் யாரும் அழுது அவன் பார்த்ததேயில்லை. நந்துவின் அழுகை பேச்சும், விசும்பாலுமாய் இருக்கும். என்றேனும் அப்பா கோபப்படும் போது அன்னையின் நீர் திரையிடும் விழிகள் அவ்வளவு தான் அவன் பார்த்த அழுகையின் பரிணாமங்கள்.

ஆதி நடுக்கத்துடனேயே தன் வயிற்றில் முகம் புதைத்து அழும் பெண்ணை பார்த்துக் கொண்டிருந்தான்.

"எனக்கு யாருமே இல்லையே... அம்மா..! நீயாவது வந்துடேன்... என் அப்பா வேணும்... ப்ளீஸ் எனக்காக வரச் சொல்லுங்களேன்..." அவனது சட்டையை இறுக பற்றிக் கொண்டு கெஞ்சவும் மிரண்டு போனவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"அப்பா... என் அப்பா... இனி யார் என்னை தங்கம்னு கூப்பிடுவா? நானும் அப்பா அம்மாகிட்ட போறேன்... எப்படி போகணும்? உங்களுக்குத் தெரியுமா? "

அதற்குமேல் அவளது கதறலை தன்னால் தாங்க முடியாது எனத் தோன்றிவிட, தன்னோடு இறுக அணைத்துக் கொண்டவன்,

"இதோ பார்! அழாத... உன் அம்மா அப்பாவை நான் தரேன்... ப்ளீஸ் அழாத... நான் சொல்வதை கேக்கறியா? உன் அப்பா அம்மா நிச்சயமா உனக்கு திரும்ப கிடைப்பாங்க..." அவன் அணைப்பில் இருந்தபடியே முகம் பார்க்க, அந்த நொடி அறையே நிசப்தமாக இருந்தது.

"ஆதி! சின்ன புள்ளைகிட்ட என்ன உளறல் இது?" மனோகரன் மகனை அதட்ட,

"உளறளப்பா! ஒருத்தரா இல்ல பல பேரின் வாழ்வில் இவளோட அப்பா அம்மாவை பார்க்க முடியும்பா... உறுப்பு

தானம் செய்யலாம் பா... அங்கிள் சொல்லுங்க ப்ளீஸ்..." மாணிக்கத்தை பரிதவிப்புடன் பார்க்க அந்த சிறு பெண்ணுக்கு புரிந்தது, இனி தன் பெற்றோர் வரப் போவதில்லை... கதறல் மெல்ல மெல்ல ஓய்ந்து விசும்பலாகியது. இன்னும் அவன் கையணைப்பில் தான் இருந்தாள்.

"என் தங்கையே போய்ட்டா... இனி யார் இருந்தா என்ன... இல்லைன்னா தான் என்ன?" மனோகரனிடமும் அழுகை ஓய்ந்திருந்தது. தன்னுள் புதைந்து விசும்புபவளின் முகம் நிமிர்த்தி,

"இங்க பாரு... நான் என்ன சொல்றேன்னு உனக்கு புரியுதா? உன் அப்பா அம்மாவோட உறுப்புகள் எத்தனையோ பேரை வாழவைக்கும் கண், இதயம் மட்டுமில்ல,கணையம், எலும்பு, குடல், சிறுநீரகம், ஏன் தோல் உள்பட இருவத்தஞ்சு விதமான உறுப்புகளை தானமா கொடுக்கலாம். அப்போ அத்தனை பேரிலும் இன்னும் எவ்வளவோ நாளைக்கு உன் அப்பா அம்மா உயிரோட இருப்பாங்க... சரின்னு சொல்லு..." கண்ணீர் கரை படிந்த கன்னங்களை தன் கைகளில் ஏந்தி கெஞ்சுதலாய் கேட்க,

"என் கூட இருக்கமாட்டாங்கல்ல?" விசும்பலாய் வந்தது வார்த்தை. இதற்கு என்ன பதில் சொல்வான்? பாவம் அவனும் வளர்ந்தும், வளராத பையன் தானே?

"மாமா இருக்கேன், அத்தை … ஆதி இருக்கான் நாங்க எல்லோரும் இருக்கோம். இனி நாங்க தான் உனக்கு எல்லாமாக இருப்போம் அழக் கூடாது." மாமா தலை வருடி ஆறுதல் சொல்ல, அன்னை தன்னை விட்டு எங்கும் போகமாட்டேன் எனச் சொன்னது நியாபகம் வர…

இனி இவர்கள் உருவத்தில் தான் பார்க்க வேண்டும் என அப்போதைக்கு தேற்றிக் கொண்டாளா? இல்லை மாமா சொல்வதற்கு முன்னே… நானிருக்கிறேன் உனக்கு! என ஆதி தாங்கிக் கொண்டானே… அந்த உணர்வு தேற்றியதோ தெரியவில்லை..

ஆதியோ அவளுக்காக தன் தந்தையிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான்.

"அப்பா ப்ளீஸ்ப்பா… சரின்னு சொல்லுங்கப்பா. நான் அவகிட்ட சொல்லிட்டேன்பா. அவ அம்மா அப்பாவை திருப்பி தரேன்னு சொல்லிட்டேன் பா… ப்ளீஸ் பா…" கண்ணீர் பெறுக கெஞ்சிக் கொண்டிருந்தான்.

இதுவரை மகன் அழுது பார்த்ததேயில்லை அந்த பெற்றோர். சிறுவயதில் தவறு செய்து அவரிடம் அடி வாங்கும் போது கூட துளி கண்ணீரோ அழுகையையோ இன்றி விரைத்துக் கொண்டு தான் நிற்பான். அவனே இன்று அழுவது

மனோகரனின் மனதை இளக்கியது. உறுப்பு தானத்திற்கு சம்மதம் சொல்லிவிட்டார்.

எல்லாம் முடிந்து அவர்கள் வீடு வந்து சேர மதியமாகிவிட்டது. அண்டை வீட்டினர் அனைவரும் துக்கம் விசாரிக்க வர... மீண்டும் அந்த கூட்டிப் பெண் வெடித்து அழ, ஆதிக்கு கோபம் வந்தது. (பாவம் அவளே பேசாமல் இருந்தாலும் இவங்க எல்லோரும் அழ வச்சுடறாங்களே...) தன் கையாளாகா கோபத்தை உள்ளடக்கி... அவளை ஊன்றி கவனிக்கத் தொடங்கினான்.

விசும்புவதும், அழுவதுமாய் இருப்பவள்... யாரேனும் உன் தந்தையை போல் இனி யாரால் சீராட்ட முடியும்? நிவி குட்டி, செல்லம், தங்கம்ன்னு இனி யார் உன்னை கொஞ்சுவாங்க? என அவள் பெற்றோரை பற்றி ஏதேனும் சொன்னால் போதும்... கதறல் தான்.

"ஆறுதல் சொல்கிறேன்னு அவளை மேலும் படுத்தாமல் எல்லோரும் போங்களேன் ப்ளீஸ்... " ஊமையாய் அரற்றியது ஆதியின் உள்ளம்.

அவனுக்கு புரியவில்லை அழுவதில் பாதி துக்கம் குறைந்துவிடும் என்பது. நம் முன்னோர்கள் மூடர்கள் இல்லையே இப்படி துக்கம் விசாரிப்பதே இறந்தவர்களின் நினைவில் இருந்து உயிரோடு இருப்பவர்களை தேற்றத் தானே.

இறந்தவர்களைப் பற்றியே பேசி அவரது செயல்களை நினைவு கூர்ந்து இருப்பவர்களை மீட்பது. இது ஒரு மனமாற்று அறுவை சிகிச்சை தான். கொஞ்சம் வலிக்கத் தான் செய்யும். மீட்சிக்கு இது மிகவும் அவசியம்.

ஆதிக்கோ, இது துக்கத்தை சற்று மறந்திருப்பவளைத் தூண்டும் செயலாகத் தான் தோன்றியது. புண்ணில் கோல் கொண்டு குத்துவதாய் தான் தெரிந்தது. எப்போது ஓயும் இந்த வேதனை எனத் தவித்துப் போனான்.

ஒருவழியாக மாலை எல்லாம் ஓய்ந்துவிட்டது. அத்தையின் மடியிலேயே தூங்கிப் போனவளை ஆதி தான் தூக்கி வந்து கட்டிலில்கிடத்தினான். ஏனோ அவளை விட்டு அவனால் நகர முடியவில்லை.

இதமாக தலை வருடி அன்று முழுவதும் அழுது ஓய்ந்திருந்த கண்களில் மென்மையாக முத்தமிட்ட பின்பே விலகி சென்றான். இது என்ன விதமான பந்தம் என அவனுக்கு பிரித்தறியத் தெரியவில்லை. அறியா பருவத்து உணர்வுகள் அவனை குழப்பியடித்தன.

காலையில் எழுந்தவள்... அம்மா அம்மா என பேந்த விழித்துக் கொண்டிருக்க, அங்கு வந்த ஆதி,

"எழுந்துட்டியா...! பிரஸ் பண்ணிட்டு வா... பாலா, காப்பியா? என்ன சாப்பிடுவாய்?" என மென்மையாய் கேட்க

,அவனைப் பார்த்ததும் எல்லாம் நினைவு வர, துக்கம் பீறிட விழிகளில் நீர் திரளவும்... அருகில் வந்தவன்,

"அழக்கூடாது". என அவளது கேசம் ஒதுக்கி கன்னத்தில் வழிந்த நீரை துடைத்து நெற்றியில் முத்தமிட, அழுகை நின்று போனது. தனக்காக இன்னும் மனிதர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள் என்னும் ஆறுதல் அவளை இயல்புக்கு கொண்டு வந்தது.

" உனக்கு என்ன கலக்க சொல்லட்டும்?"

"பூஸ்ட்..." என்றாள் மெல்லிய குரலில். அவனது இதமான பார்வை அவளை மயிலிறகாய் வருடியது.

"உன் பேரென்ன?" சிலர் நிவியென அழைத்தது நியாபகம் இருந்தாலும் கேட்டான்.

"நிவேதா..." (அழகு)

"என் பேர்..." அவன் முடிப்பதற்குள்ளாகவே

"ஆதித்யன்..." அட்சரசுத்தமாய் சொன்னாள். "இவளுக்கு எப்படி என் முழுப் பெயர் தெரியும்" என ஆவல் தலை தூக்க,

"உனக்கெப்படி தெரியும்?"

"அம்மா சொல்லியிருக்காங்க... அவங்க வரும் போது நீங்க ஒரு வயசு பையனாம். உங்களுக்கு இந்த பேரை வச்சதே எங்கம்மா தானாம்." அவ்வளவு தான் மீண்டும் அணை

உடைப்பட்டது. (கேக்காமலேயே இருந்திருக்கலாமோ? நாமே அழவச்சுட்டோமே..) பதறியவனாய்

"அழாத... ஏய்! ப்ளீஸ்... அழாத... சாரி... நிவேதா..." எனத் தன்னோடு அணைத்து... முதுகு வருடி ஆசுவாசப்படுத்தினான்.

நிவேதா சற்று தெளிந்ததும், அவனிடம் இருந்து விலகி சென்றவள், பூஜை அறையில் இருந்து ஒரு டைரியை கொண்டு வந்து அம்மா கொடுக்க சொன்னதாகமாமாவிடம் கொடுக்கவும்,

"அம்மாவா...? ஆர்த்தியா? எப்ப கொடுக்கச் சொன்னா?"

"போன வருஷம் என் பிறந்தநாளின் போது அவங்க கதையை சொன்னாங்க மாமா. உங்களை, அத்தையை, தாத்தா, பாட்டியை அப்புறம் ஆதி அண்ணனை பற்றியெல்லாம் சொன்னாங்க. அப்பாவும், அம்மாவும் எப்போதும் உன்னோடு தான் இருப்போம்... ஒருவேளை எதிர்பாராமல் எதாவது நடந்தா நீ யாருக்கு கூப்பிடுவன்னு கேட்டாங்க...

நான் மாணிக்கம் அங்கிளிடம் சொல்வேன்னு சொன்னேன். வெரி குட்ன்னு கட்டி பிடிச்சுக்கிட்டாங்க." சொல்லும் போதே அழுகை வந்தது அந்த குட்டி பெண்ணிற்கு. அத்தை தன் தோளில் சாய்த்துக் கொள்ள, சமாளித்துக் கொண்டவள்,

"அப்போ தான்... இதை உன் மாமா வந்தா அவங்க கிட்ட கொடுக்கணும். இல்லன்னா மாணிக்கம் அங்கிள் கிட்ட கொடுக்கணும்னு சொன்னாங்க..."

பிரித்துப் பார்த்தவரின் விழிகளிலும் நீர் கோர்த்துக் கொண்டது. அவர்களது வங்கிக் கணக்கு, பாஸ்வேர்ட் உட்பட லாக்கர் பற்றிய விவரங்கள் இன்சூரன்ஸ், வீட்டுப்பத்திரம், பிக்செட் டெபாசிட் அனைத்து விவரங்களும் அதில் இருந்தது.

" இந்த திட்டமிடலையெல்லாம் எங்கிருந்து கற்றுக் கொண்டாய் ஆர்த்தி? நான் இதுவரை இப்படி எதையும் ஆதிக்கு சொல்லியோ எழுதியோ வைக்கவில்லையே... யாருமே உதவிக்கு இல்லாமல் தனியாக எல்லாவற்றையும் சமாளித்ததால் தான் இவ்வளவு திட்டமிட்டு செய்தாயோ..." சோர்ந்து போனவராய் மாணிக்கத்தை தொடர்பு கொள்ள,

இருவருமே சேர்ந்து அடுத்து செய்ய வேண்டியவற்றை திட்டமிட்டனர். அதன் படி முக்கிய சாமான்களையெல்லாம் ஒரு அறையில் வைத்து பூட்டிவிட்டு இந்த வீட்டை வாடகைக்கு விடுவதென்றும் அதன் வாடகையை வங்கியில் நிவியின் பெயரில் போடுவதென்றும், லாக்கரில் நகைகள் முக்கிய பத்திரங்கள் எல்லாம் இருப்பதால்அதை நிவியின் பெயருக்கு மாற்றி மனோகரனை கார்டியனாக போடுவதென்றும், இன்சூரன்ஸ் ஏஜெண்டைப் பிடித்து அந்த பணத்தை பெறுவதற்கான வேலைகள் எல்லாம் செய்வதென்றும் முடிவு செய்தனர்.

இதற்கெல்லாம் கொஞ்ச நாட்கள் ஆகும் என்பதால் ஆதியும் டிரைவரும் இரவு கிளம்பி ஊருக்குப் போவதாக

முடிவானது. ஆர்த்தி, தயாளனின் துணிமணிகளெல்லாம் ஆசிரமத்திற்கு கொடுக்கப் பட்டன.

புதிய சூழல், புதிய உறவு என எல்லாமே புதிதாக ஆரம்பிக்கட்டும். இங்கிருந்து நிவியின் பெற்றோர் சம்பந்தப்பட்ட எதையும் எடுத்து செல்ல வேண்டாம். புகைப்படம் உட்பட... இவையெல்லாம் அவள் மனநிலையை பாதிக்குமென ஒரு மருத்துவராய் சொன்னார் மாணிக்கம்.

இரவு ஊருக்கு கிளம்பிக் கொண்டிருந்தவனின் அறைக்குள் வந்தாள் நிவேதா. அதை கவனிக்காமல், அடங்காமல் சிலும்பிக் கொண்டு நிற்கும் முடியை பணிய வைப்பதிலேயே தன் முழு கவனத்தையும் செலுத்தி மீண்டும் மீண்டும் சீவ...

(அது தான் அடங்கலையே ...விடு...ஸ்ஸப்பா உன்ன நாங்க வேற லெவெல்ல சொல்லிக்கிட்ருக்கோம்...நீ ஹேர் கூட சண்டை போடற...முடியல...)

அது அலை அலையாய் விழுந்து பறந்ததே ஒழிய படியமாட்டேன் என அடம் பிடித்தது. அதை ஒரு வேடிக்கையாக பார்த்துக் கொண்டிருந்தாள் அந்த குட்டிப் பெண்.

"ச்சே.. போ! இதுவே நல்லா தான் இருக்கு" அலுப்புற்றவனாய் திரும்ப, அவனையே பார்த்தபடி நிவி. (ஆதி பபூனா ... பஞ்சு மிட்டாய்க்காரனா...நாங்களே கன்ப்யூஸ்

ஆகிட்டோம்... நிவேதா பார்த்ததுல...) அவளுக்கு முன் சொடக்குப் போட்டு,

"என்ன?" என புருவம் உயர்த்த,

" நீங்க ஊருக்கு போகப் போறிங்களா?" பரிதாபமாய் அவன் முகம் பார்த்தாள். (ஐயோ... இப்படியெல்லாம் பார்க்காத... எனக்கு உன்னை கட்டிக்கனும் போல இருக்கு) தன் எண்ணத்தைக் கண்டு பயந்தவனாய்... வேறு புறம் திரும்பியபடி,

"ம்... அதிக நாள் ஸ்கூலுக்கு லீவ் போட முடியாது... அதான் போறேன்."

"நீங்க ஸ்கூலயா படிக்கிறீங்க?" நம்ப முடியாத ஆச்சரியம் அவளிடம், (பனை மரத்துல பாதி வளந்தா இப்டி தான் குழந்தை புள்ள டவுட் கேக்கும்!!)

"ம்! பனிரெண்டாவது." என்றான் தோள்களைக் குலுக்கி. அவனது ஒவ்வொரு செயலும் அவளுக்கு ஆச்சர்யமாய்... அவளறியாமல் மனதுக்குள் பதிந்தது.

"நான் எட்டாவது." ( இப்படி பேசுனீங்கன்னா நாங்க என்னாவது?)

"ஓ..." மேற்கொண்டு அவளிடம் என்ன பேசுவதென்று அவனுக்குத் தெரியவில்லை.

"சரி. நான் கிளம்பறேன்.... நீ அம்மா அப்பா கூட வா..."

மாமா, அத்தையை விட இவனிடம் கொஞ்சம் நெருக்கம் கூடியிருந்ததாலும்... இத்தனை நாளும் பார்த்துப்பார்த்து கவனித்துக் கொண்டதாலும் அவனது பிரிவு அடுத்த பெரும் துயராய் உருமாற இங்கேயே இருந்துவிடேன் என்பது போல் அவன் கரம் பற்ற, அவனுள் மின்சாரம் பாய்ந்தது. ( ஆதிக்கு பல்பு எரிஞ்சுடுச்சு போலவே...)தன் கையை மெல்ல விலக்கிக் கொண்டவன்,

"இன்னும் ரெண்டுமூணு நாளில் நீயும் அங்கே வந்துடலாம்...பை!" என்றான் தன் உணர்வுகளை மறைத்த சாதாரண குரலில்.அவ்வளவு தான் அவளது கண்களில் கண்ணீர் அணை உடைப்பட்டது. ஆதிக்கு இவளது அழுகை கோபத்தை உண்டு பண்ணியது.

ஏன் இந்தக் கோபம் என்று சற்று யோசித்திருந்தால் அவன் மனம் புரிந்திருக்கும். நேற்று பார்த்த பெண்ணின் துயரத்தை தன்னால் சரி செய்ய முடியவில்லையே என்ற அவனது ஏமாற்றமே கோபமாய் வெளிப்பட்டதோ? இல்லை அவளது அழுகையை மாற்ற தன் கோப முகமூடி உதவக்கூடும் என்று எண்ணினானோ?

"ஏய்! இப்போ எதுக்கு அழற? எனக்கு இப்படி அழறவங்களை பார்க்கவே பிடிக்காது. பேட் கேர்ள்! சும்மா சும்மா அழாத போ..." என்று அவளைக் காய்ந்துவிட்டு அவன்

அந்த இடம் விட்டு நகர்ந்துவிட்டான். (அவளைப் போன்னு சொல்லிட்டு நீ ஏன்டா ஆதி போற... ஹாஹா அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா!!)

அவள் சமைந்து போய் சிலையாய் நின்றுவிட்டாள். ஆர்த்தியும், நிவி அழுதாள் இப்படி தான் திட்டுவாள். அருகே வந்து கெஞ்சும் மகளை விலக்கி நிறுத்திவிட்டு அறைக்குள் சென்று கதைவடைத்துக் கொள்வாள். அதே போல் இவனும் திட்டிவிட்டு விலகி சென்றது இருவரையும் இணை கூட்ட வைத்தது. (ஆகா... ஆகா... ஆகக... ஆகா!)

வேகமாக ஓடிச் சென்று பால்கனியில் நின்று பார்க்க... கீழே டிரைவருடன் நடந்து சென்றவனை இவளது பார்வை ஈட்டியாய் முதுகு துளைத்தது. ஏதோ தோன்ற... ஆதி திரும்பி மேலே பார்க்க... மென்முறுவலுடன் கையாட்டிக் கொண்டிருந்தாள் நிவேதா.

"போடி அழுமூஞ்சி!" என்று வாயசைத்தவன் முகம் திருப்பிக் கொண்டாலும்... மனம் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தது. (லெப்ட்ல கையக் காட்டி, ரைட் இண்டிகேட்டர் போட்டு... நேரா போறது இது தான் போல!)

# அத்தியாயம் 4

ஐந்து நாட்களுக்கு பிறகு அத்தை மாமாவுடன் திருப்பத்தூர் வந்து சேர்ந்தாள் நிவேதா. சென்னையை போல் இங்க பரபரப்பு இல்லை.

புதிய இடம்... புதிய மனிதர்கள்... புதிய சூழல்... அதோடு ஆதியின் புதிய முகம்... எல்லாம் அவளுக்கு கொஞ்சம் மிரட்சியை உண்டாக்கத் தான் செய்தன. சென்னையில் அவளிடம் பேசியது போல் இங்கு அவன் அன்பாய் பேசவோ, நடந்து கொள்ளவோ இல்லை.

பெற்றோர் இல்லாத அந்தப் பெண்ணின் கண்களில் எப்போதும் மருட்சியும், இதோ அதோ என கண்ணீரும் நிறைந்திருக்கும். அதுவே ஆதிக்கு எரிச்சலைக் கிளப்பும். மலங்க மலங்க விழித்துக் கொண்டு அறை வாசலில் நிற்பவளைப் பார்த்து நந்தினி தான் ஆதியிடம் சொன்னாள். அவள் புறம் திரும்பியவன்,

"என்ன ?" என்றான் கோபம் போலும். அதில் மேலும் மிரண்டவள்,

‘‘எனக்கு பேப்பரும், பென்சிலும் தரீங்களா ஆதி அண்ணா ? " எனத் தயங்கித் தயங்கி கேட்கவும்,

"ஆதி... அண்ணனா? நீ என் தங்கையா ? அண்ணன்னு கூப்பிடும் வேலையெல்லாம் வச்சுக்காத... ஆளைப் பார்! போ!" (லூசு லூசு எங்கயாவது மாமா பையனை அண்ணன்னு கூப்பிடுவாங்களா? எனக்குன்னு வந்து வாச்சிருக்கு பாரு...)

ஆதியின் கோபம் கண்டு அவள் கண்களில் இருந்து பெரிய, பெரிய நீர் மணிகள் கன்னத்தில் கோடாய் இறங்கின. பிரபாவிற்கோ அவளைப் பார்க்க பாவமாக இருந்தது.

"ஏய்! எதுக்கு அழுது தொலைக்கிற? உன் போல ஒரு அழுமூஞ்சியை நான் பார்த்ததே இல்லை! என் கண் முன்னால் நிற்காதே... போன்னு சொல்றேனில்ல ...?" ஏற்கனவே அவளது உளறலில் கோபமாக இருந்தவனுக்கு இவளது அழுகை மேலும் எரிச்சலைத் தான் தூண்டியது.

இந்த சிறு பெண்ணின் அழுகை தன்னை மிகவும் பாதிக்கிறது. அது ஏனென்று தான் புரியவில்லை. விடலை பருவமாதலால் அதற்கு மேல் யோசிக்க முடியாமல் அதையும் அவளிடமே காட்டினான் ஆதி.

சட்டென எழுந்த பிரபா, "இதை வச்சுக்கோ" என பேப்பரையும் பென்சிலையும் நீட்ட, அவளோ ஆதியின் முகம் பார்த்தாள். (இப்போ எதுக்கு என்னை பார்க்கிறா?) என்று புரியாத போதும் அவளின் அச்செயல் பிடிக்கத் தான் செய்தது. பெரியமனது பண்ணி தணிந்த குரலில்,

"வாங்கிக்கோ! பேட்... இங்கிருக்கு பாரு வந்து எடுத்துக்கோ..." நிவியோடு சேர்ந்து பிரபாவும், நந்துவும் பட்டிக்காட்டான் மிட்டாய் கடையை பார்ப்பது போல் பார்த்து வைக்க,

"என்ன பார்வை? வாங்க படிக்கலாம். ஏய்! நீ எடுத்துக்கிட்டு கிளம்பு."

'இது என்ன... என் கோபம் எங்கு போனது? இந்த அழுகாச்சி டாமை திறந்தால் தான் கோபம் வருதோ?' (அப்படித் தாண்டா ராசா கொஞ்சம் நல்ல விதமா யோசி.)

அரைக்கால் மிடியும், டாப்புமாக வந்தவள் மெல்ல மெல்ல தன் குட்டி பாதங்களை எடுத்துவைத்து தரையில் அமர்ந்திருந்த மூவரையும் கடந்து அவனது டேபிளில் இருந்த பேடை எடுத்துக் கொண்டு வெளியே சென்றுவிட்டாள்.

மாநிறம் என்றாலும் அவள் காலில் அணிந்திருந்த அந்த மெரூன் நிற கிரிஸ்டல் கொலுசு 'என்னைப் பார்... என்னைப் பார் ' என ஆதியை பாடாய் படுத்தியது. (ரைட்டு... டிம்மி டிப் அடிக்குது கண்ணு!) அவை இரண்டும் கண்ணைவிட்டு மறையும் வரை பார்வையை விலக்க முடியாமல் தவித்தவனை,

“ஆதி! பாவம்டா அந்த பொண்ணு! ஏன்டா இவ்வளவு கோபப்படுற? பாசமா தானே அண்ணன்னு கூப்பிட்டுச்சு! ரொம்ப நோகடிச்சுட்டடா ... எனக்கே கஷ்டமா இருக்கு!" பெற்றோர்

இல்லா நிவியின் மீது பிரபாவிற்கு ஏனென்று தெரியா பாசம் உண்டாக வருந்தினான்.

"இதில் ஒன்னும் தப்பில்லை பிரபா! அவ ஒன்னும் ஆதி கூட பிறந்தவ இல்லை?" நந்தினியின் பேச்சுக்கு ஆமோதிப்பாய் தலையாட்டியபடி ,

"என் அம்மா இவளுக்கு அத்தை! நான் அண்ணனா ? சும்மா அவளுக்கு வக்காலத்து வாங்காத! போதும். இந்த கணக்கைப் போடலாமா?" என பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

ஆதித்யன் படிக்கும் பள்ளியிலேயே நிவேதாவை சேர்த்து அவளுக்கு தேவையானது அனைத்தும் வாங்கி கொடுத்து வீட்டிற்கு அழைத்து வந்தார் அத்தை.

ஆதி பள்ளி முடிந்து வந்ததும் தன் சந்தோஷத்தை அவனிடம் பகிர்ந்து கொள்ள வேண்டுமென நிவிக்குத் தோன்றியதால்,

"ஆதி அண்ணா! நான் உங்க ஸ்கூலிலேயே சேர்ந்துட்டேன் தெரியுமா?" சிறு முறைப்போடு பதில் ஏதும் பேசாமல் சென்றுவிட்டான். 'தத்தி அண்ணனாம் அண்ணன்... மூஞ்சியை பாரு குரங்கு' என்று மனதினுள் அவளை வைதபடி நகர்ந்துவிட்டான்.

"இவனுக்கு பிடிக்கவில்லையோ? ஏன் சரியா பேசல?" என்று நிவி முகம் வாடிப் போக, அவள் மனம் புரிந்தவர் போல்,

"ஆதி சட்டென யாரிடமும் பேசிவிட மாட்டான் நிவி... போகப் போக பழகிடுவான். போ... நீ யூனிபோர்மை போட்டுப்பார். புத்தகமெல்லாம் எடுத்துவை." ஆதரவாக அவள் தலை வருட, கவலை எல்லாம் காணாமல் போனது நிவேதாவிற்கு.

உடைமாற்றிக் கொண்டு வந்தவன்,

‘‘புத்தகத்தை எடுத்து வைத்தால் மட்டும் போதாது. ஒருமுறை எல்லாத்தையும் படித்துப் பார் இல்லையேல் நாளை எல்லாம் புதுசாக இருக்கும்."

'ஹப்பா சிடு சிடுக்காமல் பேசிவிட்டானே?' ஆச்சரியப்படுவது அவள் முறையாகிப் போனது.

ஆதி அருகில் இருக்கும் போது பயமில்லா அமைதி மனதில் பரவினாலும் அவ்வப்போது அவனது கோப முகம் தடுமாறச் செய்தது. அவனுக்குத் தன்னை பிடிக்கவில்லையோ என்னும் சந்தேகம் கூட தோன்றிவிட்டது.

ஆதிக்கோ... இயற்கையாகவே அத்தை மகள் என்னும் உரிமை உணர்வா... மனதிற்கு மிகவும் நெருக்கமான பெண் என்பதா... அவளது பார்வையும், தீண்டலும் தன்னை அதிகம் பாதிப்பதா அன்றி அந்த வயதிற்கே உரிய ஹார்மோன்

கோளாறா? எது தன்னை இவளை நோக்கி ஈர்க்கிறது என்னும் புரியாத தன்மை மனதை நெருடியது.

இது தவறா? இல்லை சரிதானா? தன்னுள்ளேயே குழம்பித் தவித்தவனுக்கு நண்பர்களிடம் இதை பற்றி பேச முடியாமல் ஏதோ ஒன்று தடுத்தது. இது தவறான ஒன்று என்பதால் தான் பகிர்ந்து கொள்ள முடியவில்லை என்ற முடிவுக்கு வந்தவன் அவளை விட்டு மனதை விலக்கி நிறுத்தும் பொருட்டே கோபம் கொள்வது போல் நடித்து தன்னோடு சேர்த்து அவளையும் ஏமாற்றிக் கொண்டிருந்தான்.

பகலெல்லாம் அவ்வளவாகத் தெரியாத பிரிவு... இரவின் தனிமையில் அதிகம் வேதனையுறச் செய்யும். இங்கு அனைவருக்கும் தனி தனி அறை என்பதால் இவள் அழுது கரைவது யாருக்கும் தெரியாது.

"அம்மா... நீங்க சொன்னது போல அத்தை, மாமா, ஆதி அண்ணா எல்லோரும் நல்லவங்க தான். ஆனால் நீங்க இல்லாமல் கஷ்டமாயிருக்கு. என்னையும் கடைக்கு கூட்டி போயிருக்கலாமே அப்போ எனக்கும் அடிபட்டிருக்கும் நானும் உங்களோட வந்திருப்பேனே? தனியா படுக்க பயமாயிருக்கும்மா.

ஒருவாரம் அத்தை என்னோடு படுத்திருந்தாங்களா ஒன்னும் தெரியல. இப்போ அவங்களே நீயே படுத்துக்கொள்வாய் தானே நிவி? என கேட்குறப்ப மறுத்து சொல்ல முடியாம

படுத்துப்பேன்னு சொல்லிட்டேன். எனக்கு தூக்கமே வரமாட்டேங்குது. நீங்க சொன்ன மாதிரி சுலோகமெல்லாம் சொல்லிட்டேன் இன்னும் தூக்கம் வரமாட்டேன்குது பயமா இருக்கு என்ன செய்ய?

இந்த நாலு நாளா தனியா தான் படுக்கிறேன். இப்படி தான் ராத்திரியெல்லாம் விழிச்சுகிட்டு இருப்பேன் அப்புறம் பகலில் நால்லா தூங்கிடுவேன். நாளையிலிருந்து ஸ்கூலுக்கு போகணும்... அங்கு எப்படி தூங்குவது? நான் எவ்வளவு ட்ரை பண்ணாலும் தூக்கம் வரமாட்டேங்குது. உங்களுக்கு துணைக்கு அப்பா இருக்காங்கல்ல... எனக்குத் தான் யாருமே இல்ல."

இல்லாத தாயிடம் புலம்பியபடியே இரவை நெட்டி தள்ளினாலும், காலையில் ஆர்வமாகவே பள்ளிக்கு தயாராகிவிட்டாள் நிவேதா.

"நிவிம்மா! ஸ்கூல்ல இருந்து வந்ததும் ஸ்னாக்ஸ் எடுத்து வச்சு சாப்பிட்டு, ஆதிக்கும் கொடு. இத்தனை நாள் லீவ் போட்டுவிட்டேன் இன்றிலிருந்து அத்தையும் வேலைக்குப் போகணும். சமத்தா ஹோம் ஒர்க்கெல்லாம் பண்ணு.

நான் 7 மணிக்கு வந்துவிடுவேன். சரியா? உனக்கு ஏதும் தெரியலன்னா ஆதிகிட்ட கேட்டுக்க. நாங்க எல்லோரும் இருக்கோம்... கவலை படக் கூடாது சரியா?" கன்னத்தில் வழிந்த

விழி நீர் துடைத்து மருமகளை அணைத்துக் கொண்டார் மங்களம்.

அத்தை சொன்னபடி அனைத்தையும் கேட்டுக் கொண்டவள், அவள் சாப்பாட்டுப் பையோடு சேர்த்து ஆதியுடையதையும் தூக்கிக் கொண்டுவர,

"ஆதி பாப்பாவை நீயே கூட்டிப் போய் பத்திரமாய் கூட்டி வந்து விடு. அவள் ஊருக்குப் புதுசு!"

"இதுக்கு தான் என் ஸ்கூலில் சேர்த்தீங்களா? இவளுக்கெல்லாம் டிரைவர் வேலை பார்க்க முடியாது. எனக்குன்னு ஒரு இமேஜ் இருக்கு. இவளையெல்லாம் கூட்டிட்டுப் போக முடியாது. இவ பாப்பாவா? இது உங்களுக்கே கொஞ்சம் ஓவரா இல்லே? ஸ்கூல் பஸ்ஸில் அனுப்பிவிடுங்க, இல்லை நடந்தே போகட்டும்!"

'அவளே சும்மாயிருந்தாலும் இவங்க அழ வச்சுடறாங்க...' என்று அன்னையின் மீது இருந்த கோபத்தில் அவரை மறுப்பதாக நினைத்து, நிவியையும் வருந்த செய்தான் ஆதி.

"என்ன ஆதி இது? ஏன் இப்படி பேசுற?"

"பரவாயில்லை அத்தை! நான் நடந்தே போயிக்கிறேன். ப்ளீஸ் ஆதி அண்ணா... ஒரே ஒரு தடவை போகும் வழியை மட்டும் காட்டுங்க, அப்புறம் நானே போயிடுவேன்!" எனப் பாவமாக அவன் முகம் பார்க்க,

சற்றும் இளக்கம் இல்லாமல் அவள் தலையில் கொட்டினான். (திரும்ப திரும்ப அண்ணான்னு சொல்லி ஏம்மா அவனை ரணகளப்படுத்துற?)

"போதும் ஆதி! என்ன பழக்கம் இது? பெண் பிள்ளையிடம் கை நீட்டுகிறாய்?" என மங்களம் அவனை அதட்ட,

"பின்ன இவள் பேசுறதுக்கு மடியில தூக்கி வச்சு கொஞ்சனுமா? ஏற்கனவே அண்ணன்னு கூப்பிடக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன். திரும்பத் திரும்ப செய்தால் என்ன அர்த்தம்? இந்த தத்தியை எல்லாம் என்னால் கூட்டிப் போக முடியாது! வேணுமானால் சைக்கிளை மெதுவா ஓட்டுறேன் என் பின்னாடியே வரட்டும்!"

பெரிய மனது பண்ணி இதையாவது செய்யிறானே என சந்தோஷத்தில் சரியென்பதாய் தலையாட்டினாள் நிவி.

"சே! என்ன பையன்டா நீ? நாளையிலிருந்து நான் அப்பாவையே கூட்டிப் போகச் சொல்றேன். இல்லைன்னா நானே அவளை ஆட்டோவில் விட்டுட்டு வேலைக்குப் போறேன்... நீ போ!" வெறுப்பை உமிழ்ந்தார் மங்களம். அதற்குள் நந்தினியும், பிரபாவும் இவன் வீட்டு வாசலுக்கு வந்துவிட்டனர்.

"ரொம்ப பண்ணாதீங்கம்மா! நானே கூட்டிகிட்டுப் போய் தொலைக்கிறேன். ஏய் வா!" என பள்ளிப்பையோடு வெளியே சென்றுவிட்டான்.

"பயப்படாதே நிவி. அவன் சும்மா வெத்து வேட்டு! நீ நடுங்குவதால் தான் உன்னை மிரட்டிப் பார்க்கிறான். இனி ஏதாவது சொன்னால் அத்தையிடம் சொல்லிவிடுவேன்னு மிரட்டு!" என தைரியம் சொல்லி அனுப்பினார் மங்களம். (இன்னொரு முறை சொல்லுங்க...! இது தெரியாம பயபுள்ள பம்முதே!)

"நந்தினி... நீ பிரபா கூட வா. நான் இந்த இம்சையைக் கூட்டி போகணுமாம். எங்க வீட்டு மகாராணியாரின் கட்டளை!" முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. இம்சை என்றதும் முகம் வாடிப் போனது நிவிக்கு. சைக்கிளை எடுத்துவிட்டான் ஆதி.

"டேய்... அந்தப் பொண்ணு இன்னும் ஏறலை!" நந்து பதற,

"நீங்க போங்க, வரேன்!" என அரைவட்டம் அடித்து திருப்பியவன், மீண்டும் அவளிடம் வந்தான்.

"ஏறுவதற்கென்ன?"

"நீங்க நிற்கவில்லையே!"

"ஓட்டும் போது ஏறத் தெரியாதா?" சுள்ளென்ற கேள்வியில் மிரண்டவளாய் மறுப்பாக தலையசைக்க,

"சாப்பிடத் தெரியுமா?" அவளது நீர் திரையிட்ட விழிகளைக் கண்டவன்,

"அழுமூஞ்சி... அழுமூஞ்சி ! ஏறித் தொலை!" என்று காலூன்றி காத்திருந்தான். பிரபாவோ,

"பாவம், நந்தினி அந்த பொண்ணு. ரொம்ப சிடுசிடுக்கிறான்!"

"ஆதிக்கு அவளைப் பிடிக்கலை பிரபா!"

"ம்... இவ்வளவு நாளாய் தனிக்காட்டு ராஜாவாய் இருந்துட்டான். இப்போ அவன் பெற்றோர் இவளைத் தாங்குவது அவனுக்கு பிடிக்கவில்லை. அதான் கோபப்படுகிறான். அந்த பெண்ணோட நிலை பரிதாபமானது. இதனை நாள் அவளும் கூட செல்ல மகளாய் ஒரு இளவரசி போல வாழந்தவள் தான்!" எனப் பெருமூச்சுவிட்டான்.

"நல்ல காலம், மங்களா ஆன்ட்டி அன்பா பார்த்துகிறாங்க. அம்மா இல்லைன்னா கஷ்டம் தான் பிரபா!" என ஆமோதித்தாள் நந்தினி. (ஆதி அருமையா நடிக்கிற. உன் நண்பர்களாலேயே கண்டுபிடிக்க முடியலையே...)

"ஏய்! இங்கபாரு... டெய்லி இப்படி கூட்டி போவேன்னு கனவு காணாத. இன்னும் மூணு நாளைக்கு தான். அப்புறம் நீயா தான் போகணும். ஒழுங்கா வழியை பார்த்து வச்சுக்க... சும்மா அழுது வடிஞ்சுகிட்டு வராம."

அவள் ஆமோதிப்பாய் தலையசைத்தது சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்தவனுக்கு எப்படி தெரியும்?

"ஏய் அழுமூஞ்சி! நான் சொன்னது கேட்டுச்சா இல்லையா? உன்னால் பதில் சொல்ல முடியாதோ?"

"சாரி ஆதி அண்ணா. நான் தலையாட்டினேன்." பிரபாவும், நந்தினியும் முன்னால் போக யாருமில்லாமல் அவனிடம் மாட்டினாள், (திரும்பத் திரும்ப... சொல்லுற நீ!!!)

"லூசு லூசு! தத்தி... இம்சை... குரங்கு... உன்னிடம் எத்தனை தடவ தான் சொல்றது என்னை அண்ணன்னு கூப்பிடாதன்னு. பிசாசே இனி ஒரு தரம் கூப்பிடு... இப்படியே கீழே தள்ளிவிட்டுடறேன்..." கோபத்தில் வேக மூச்சுகளுடன் சொல்ல, அரண்டு போனவளாய்,

"வேறு எப்படி கூப்பிடனும் ஆதி அ....?" நல்ல காலம் அதோடு நிறுத்திக் கொண்டதால் கீழே விழுகாமல் தப்பித்தாள்.

"நீ என்னை கூப்பிடவே வேண்டாம் போ!" சிலுப்பிக் கொண்டான். 'இது கூட தெரியாதா? உன் அம்மா என்ன வளர்த்திருக்காங்க?' இல்லாத அத்தையிடம் கோபம் வந்தது. ஸ்கூல் சைக்கிள் ஸ்டாண்டில் இறக்கிவிட்டவன்,

"சாயங்காலம் இங்கேயே வந்து நில்லு." ஆமோதிப்பாய் தலையாட்டியவளின் கரம் பற்றி,

"பயப்படாத!" மென் குரலில் அவளுக்கு தைரியமூட்டி... இதமாய் உள்ளங்கையை அழுத்திவிட, அதற்கும் தலையாட்டல்

தான் பதிலாய் வந்தது. அதற்குள் நந்துவும் பிரபாவும் இவனருகில் வந்துவிட,

"வாயை திறந்து பதில் சொல்லிப் பழகு. எல்லாத்துக்கும் பூம் பூம் மாடு மாதிரி தலையாட்டாமல்." மீண்டும் அதே கடினம் வந்து ஒட்டிக் கொள்ள, விலகி நடக்கத் தொடங்கிவிட்டான்.

"இவனுக்கு பயப்படாதான்னு சொன்னானா? இல்ல ஸ்கூலை நினச்சு பயப்படாதன்னு சொன்னானா? புரியாமல் விழித்தபடி, பிள்ளைகளிடம் வழி கேட்டு ஒருவழியாக தனது வகுப்புக்குப் போய்ச் சேர்ந்தாள். இது அத்தனையையும் மாடியில்... தனது வகுப்பின் வாசலில் நின்று கவனித்துக் கொண்டிருந்த ஆதிக்கு இதழோரம் சிறு புன்னகை தோன்றச் செய்தது.

மதியம்... ஆதி, நந்தினி. பிரபா மூவரும் தான் சேர்ந்து சாப்பிடுவார்கள். அப்பொழுது,

"நந்து... பயாலஜி ரெக்காட் நோட்டில் படம் வரைஞ்சுட்டியா?"

"ஐயோ என்ன படம்? ஏன் நேத்தே சொல்ல? போடா பிசாசே நான் எதுவும் வரையலையே…’’

"போன வாரமே சொல்லிட்டாங்க நந்து. கவனிக்கலியா? சரி சாப்பிட்டதும் கொடு நான் வரைஞ்சு தரேன்." என்ற பிரபாவிற்கு ஹாய் ஃபை செய்தவள் சந்தோஷமாகவே சாப்பிட்டாள்.

ஏனோ ஆதியின் மனம் நிவியிடம் சென்றுவிட்டது.

"இந்த குட்டிக்குரங்கு சாப்பிட்டுச்சான்னு தெரியலையே?! அதற்குள்ள யாரையாச்சும் ஃபிரண்டு பிடிச்சிருக்குமா? இல்ல... தனியா தான் சாப்பிடுமோ?"

தெரிந்து கொள்ளாமல் இருப்புக் கொள்ளாது தவித்தவன், வேகமாக சாப்பிட்டுவிட்டு,

"அந்த குட்டிப்பிசாசு என்ன பண்ணுதுன்னு பார்த்துட்டுவர்றேன்... செட்டிலாயிடுச்சா இல்ல இங்கயும் அழுது வடியுதான்னு தெரியல..."

"அடப்பாவி! அவகிட்ட எறிஞ்சுவிழறான்...! இப்போ பாரு பிரபா... ஃபிராடு பையன்!" நந்தினியின் கேலி காதில் விழுந்தாலும், விழாதது போலே சென்றுவிட்டான்.

அவளைச் சுற்றி ஒரு கூட்டமே இருந்தது. எல்லா வாண்டுகளும் அவளிடம் விசாரணை போட்டுக் கொண்டிருந்தன. பாதி சாப்பாடு கூட சாப்பிடவில்லை என்பது அவளது டப்பாவை பார்த்ததுமே தெரிந்துவிட்டது.

அவளுக்கு பெற்றோர் இல்லை என்பது தெரிந்து எல்லாம் 'அச்சச்சோ' எனப் பரிதாபப்பட... நிவிக்குட்டி அவன் நினைத்து போல் அழுது கொண்டு தான் இருந்தாள். சட்டென ஆதி வகுப்பிற்குள் வரவும், ஏதோ காணுதற்கரிய பொருள் போல்... எல்லாம் அவனிடம் திரும்பிவிட்டன.

"ஆதி அண்ணா...!" புற்றீசலாய் அவனை சுற்றிக் கொள்ள, சின்ன முறைப்பு அவனிடம். நம் நிவியை பார்த்து தான். "சாப்பிடு" என்பது போல் கண்களை உருட்டி மிரட்ட... வேகமாக சாப்பிடத் தொடங்கிவிட்டாள். எட்டாவது படிக்கும் அரை டிக்கெட்டெல்லாம் சேர்ந்து கொண்டு,

"என்ன விஷயம் அண்ணா? ஏதேனும் உதவி வேணுமா? " அள்ளிவிட,

இது தான் சமயமென அவனும் பிடித்துக் கொண்டான்.

"ஆமா! உங்க கிளாசுக்கு ஒரு பொண்ணு புதுசா வந்திருக்காமே..."

"ம்... இதோ நிவேதா தான்!" எல்லாம் அவள் புறம் கை காட்ட... ஓரளவிற்கு சாப்பிட்டிருந்தாள். மெச்சுதலாய் ஒரு பார்வையை அவளிடம் செலுத்தியவன்,

"அந்த பொண்ணை நல்லா கவனிச்சுக்கணுமாம். நீங்க எல்லோரும் அவளுக்கு குட் ஃபிரண்ட்ஸா இருக்கணுமாம்... ப்ரிண்சிபல் சொல்லச் சொன்னாங்க. அவ அழுதா... உங்களைத் தான் திட்டுவாங்க. பார்த்துக்கோங்க..." தோள்களை குலுக்கிய படி சென்றுவிட்டான்.

"பிரபா... இங்க பாரேன்! யாரோ வரைஞ்சு வச்சிருக்காங்க..." கூவலுடன் நண்பனை நோக்கி ஓட... இதழோர சிரிப்புடன் (ஸ்வீட்டி பேபி முடியலடா...) இந்த முணுமுணுப்புக்கு

சொந்தக்காரனும், படம் வரைந்து வைத்தவனும், அந்தக் கண்களுக்கு சொந்தக்காரன் தான்.

நண்பர்கள் இருவரும் ஒரு நொடி திடுக்கிட்டாலும்,

"இப்போ பிரச்சனை ஓவர். ரொம்ப யோசிக்காத நந்து. சீக்கிரம் அந்த ஆர்ட்டிஸ்டை கண்டுபிடிச்சு இனி எல்லாப்படத்தையும் அவங்ககிட்டயே கொடுத்து வரைய வச்சிடுவோம்." என இதமாக சொல்லி அனுப்பினாலும்,

நண்பர்கள் இருவருக்கும் சிறு நெருடல் தோன்றவே, கவனிக்கணும் பிரபா... யார் அந்த கருப்பு ஆடுன்னு கண்டுபிடிக்கணும் என்றான் ஆதி.

மாலை எந்த பிரச்சனையும் இல்லாமல் அவனுடன் வீடு வந்து சேர்ந்தவள் உடை மாற்றி, கை கால் முகமெல்லாம் கழுவி அத்தை சொன்னது போல தேன்குழலும், அதிரசமும் இருவருக்கும் எடுத்துவைத்துக் கொண்டு வர...

ஆதி உடையைக் கூட மாற்றாமல் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். அவனை எழுப்ப பயந்து வந்தவழியே சென்றுவிட்டாள். அத்தை இருந்தவரை இதெல்லாம் அவரே பார்த்துக் கொண்டதால் பள்ளிவிட்டு வந்ததும் ஒரு குட்டி தூக்கம் போடுவது ஆதியின் வழக்கம் என்பது தெரியவில்லை நிவேதாவுக்கு.

நாலறையிலிருந்து ஐந்தரை வரை தூக்கம் போட்டு எழுந்தவன், முகம் கழுவி வர... ஹாலிலிருந்த குட்டி மேசையில் அவனது ஸ்னாக்ஸை கொண்டுவந்து வைத்தவள், கூடவே தண்ணீரையும் வைக்க, சிறு முறுவலுடன்,

"தேங்க்ஸ் " என்றதும் ஆச்சரியமாய் வண்டு விழிகளை விரிக்க,

"இப்போ எதுக்கு கண்ணை விரிக்கிறா?" உள்ளே ஏதோ இனம் புரியாத படபடப்புடன்,

"ஏய்! என்ன பார்வை? போ படிக்கிற வழியைப் பார்." கோபம் போலும் ஒரு மிரட்டல். அவ்வளவு தான் ஓடியே போய்விட்டாள் நிவி. (இவன் அந்நியனா இல்ல ரெமோவா... நாங்களே குழம்பிட்டோம்!)

வீட்டிற்கு வந்த மங்களம் அசந்து தான் போனார். ஆதி தூங்கிய அந்த நேரத்தில் பாத்திரம் கழுவி, வீட்டைக் கூட்டி, செடிக்கு தண்ணீர் ஊற்றி மங்களத்தின் பாதி வேலையை குறைத்திருந்தாள் நிவேதா. இதற்குத் தான் பெண்பிள்ளை வேண்டும் எனப் புகழ்ந்தார். அவளை புகழ்ந்ததும் ஏனென்று தெரியாமல் ஆதிக்கும் மனம் துள்ளாட்டம் போட,

"சும்மாவே இவளைக் கொண்டாடுவீங்க, இனி சொல்லவா வேண்டும்? அசத்து டீ! உன் காட்டில் மழை தான்!" என்ற மகனைப் புருவம் சுருங்க ஏறிட்டார் அன்னை.

"ஆதி, நிவேதான்னு அழகான பேர் இருக்கும் போது இது என்ன டீ போட்டுப் பேசுற? ஏய் ன்னு கூப்பிடுற... டூ பேட்!"

"எனக்குப் பிடிக்கலை. அதென்ன நீ வேதா நான் சோதா என்பது போல்... அவளே ஒன்னும் சொல்லலை, நீங்க ஏன் அலட்டிக்குறீங்க ராணியாரே?"

"டேய் அரட்டை! அவளைத் தான் மிரட்டி வச்சுருக்கியே! அழகான பேர். பிடிக்கலைன்னா நிவின்னு கூப்பிடு!"

"ஹேய்! நான் உன்னை இப்படி கூப்பிடுவதில் உனக்கு ஏதாவது பிரச்சனையா?" என அவளை நோக்கி கேட்கவும், வேகமாக தலையசைத்து மறுத்தவளை சிரிப்புடன் ஏறிட்டான். (அவள் ஆமாம்னாலும்... இல்லைன்னு தானே சொல்லுவா!)

"அது...! கேட்டுக்கோங்க" என அன்னையை இதமாக அணைத்துக் கொண்டான்.

அவன் சொன்ன மூணு நாளும் முடிந்துவிட்டது. அவள் தனியாக பள்ளி சென்று வர பழக வேண்டும் என நினைத்தவன், பள்ளிக்கு செல்லும் போதே,

"ஓய்! சாயங்காலம் நீயா தான் வரணும். பாதையை ஒழுங்கா பார்த்து வச்சுக்க... " மனதில் பயப்பந்து எழ, வேறு வழியும் இல்லாத காரணத்தால்,

"ம்..." அந்த மெல்லிய பதில் அவன் காதை வந்தடைந்த திருப்தியில் அதற்கு மேல் அவளோடு வம்பு வளர்க்கவில்லை.

மாலை பாதி தூரம் வரை வந்தவளுக்கு அதற்கு மேல் எப்படி வருவதென்று தெரியவில்லை.

"நல்லா பாத்துக்கோன்னு சொன்னானே அவன் சொல்வது போல் நீ சரியான லூசு தான் நிவி. இப்போ எப்படி வீட்டுக்குப் போவது?" அழுகையே வந்துவிட்டது....

நிவி வீடு போய் சேர்வாளா? இவள் கண்ணீர் துடைக்கப் போவது யார்?

# அத்தியாயம் 5

**வீ**ட்டிற்கு செல்லும் வழி புரியாமல் நிவேதா விழித்துக் கொண்டிருக்க, அவளருகே வந்து சைக்கிளை நிறுத்திய பிரபா,

"ஏறிக்கோ... நான் கூட்டிட்டுப் போறேன்!’’ எனவும்,

"தேங்க்ஸ் பிரபா அண்ணா!" என விழிநீரைத் துடைத்தபடி அமர்ந்தவளை, தன் சகோதரியாய் ஏற்றுக்கொண்டான் அவன்.

"இனி... தினமும் என்னோடு வந்துவிடு! "

"வேண்டாம் அண்ணா. ஆதி அண்ணா திட்டுவாங்க! நடந்து தான் போகணும்னு சொல்லியிருக்காங்க" பரிதாபமாக ஒலித்தது அவள் குரல்.

‘‘நான் ஆதிகிட்ட பேசிக்கிறேன், நீ என்னுடன் வா! இன்னொரு விஷயம்... அவனை அண்ணான்னு கூப்பிடாதே! அத்தான்னு கூப்பிடு. அது தான் முறை."

"ஐயோ! திட்டுவாங்க..."

"திட்ட மாட்டான்.’’ உறுதியாய்ச் சொன்னான் ஆதியின் மனதை கணித்தவனாய்.

எப்போதும் தன் அறையில் படுப்பவன் இன்று சோஃபாவிலேயே படுத்திருக்க, பயத்துடனேயே அவனைக் கடக்க முயன்றாள்.

"ஏய் ! நில்லு ."

"போச்சு... இவன் தூங்கலையா?" என பயந்தபடி வாசலைப் பார்க்க, பிரபா உள்ளே வந்தான்.

"நிவேதா... கொஞ்சம் தண்ணீர் கொடேன்!" அவளைக் காப்பாற்ற எண்ணி கேட்டான். நகர முற்பட்டவளை மீண்டும் தடை செய்தது ஆதியின் சொல்.

"நில்லுன்னு சொன்னேன்."

நண்பனிடம் இவ்வளவு ரௌத்திரத்தை எதிர்பார்க்காதவன், என்ன செய்வதென்று புரியாமல் நின்று கொண்டிருக்க,

"உன்னால் நடந்து வர முடியாதா? இவன் என்ன உன்னோட வேலைக்காரனா?" என்று எழுந்து அமர்ந்தான்.

"இல்லை... எனக்கு வழி தெரியலை. அதான் அண்ணா கூட்டிட்டு வந்தாங்க! நாளையிலிருந்து நானே நடந்து போயிடுவேன்!"

"ஆதி, நீ நந்தினியைக் கூட்டி போவது போல் இனி நிவியை நானே கூட்டி போறேன். எனக்கு கஷ்டம் இல்லை."

"ஆஹா! வாடா என் பாசமலரே... அவளை ரொம்பத் தான் தங்குற!"

"என்னோடு பிறந்திருந்தால் தேவதை மாதிரி வச்சுக்குவேன்... உன்னைப் போல சிடுசிடுக்க மாட்டேன்!"

"இப்பவும் ஒன்னும் குறைஞ்சுபோய்டல... உன் வீட்டுக்குக்கே கூட்டி போ! இதுவரை எதுக்காகவும் என்னோடு சண்டை போடாதவனையே எனக்கு எதிரா திருப்பிட்டா... ரொம்ப சந்தோஷம்!" என்றவனின் கண்களில் கோபம் மின்னியது.

நான் சொன்னதை கேட்காமல் அது என்ன அவனோடு வருவது? என்னும் கோபம் தான் ஆதிக்கு.

"சின்ன விஷயத்துக்கு எதுக்கு ஆதி எவ்வளவு கோபப்படுற?" பிரபா இறங்கி வந்தான். ஆதிக்கும் புரிந்தது ஆனாலும் கோபம் மட்டுப்படமாட்டேன் என்றது.

"எது சின்ன விஷயம்? அவளாகவே தனியா ஸ்கூலுக்கு போக வர தெரியணும்ன்னு தான் வரச்சொல்லி இருந்தேன். உன்னை யார் கூட்டி வரச் சொன்னது?"

"நிவிக்கு வரத் தெரியல மச்சான்... பாவம்! பாதை தெரியாம நின்னுக்கிட்டி இருந்துச்சு... அதான் கூட்டி வந்தேன்."

"நான் தான் அவளை நடந்து வர சொல்லியிருக்கேன்னு சொன்னேன்ல. அவ வரலைன்னா நான் போய் பாக்கமாட்டேனா? இவளுக்காக தானே என் தூக்கத்தை கெடுத்துட்டு உட்கார்ந்திருக்கேன். உன்னை யார் போகச் சொன்னது?" (பூனைக்கு குட்டி வெளியே வந்துடுச்சு...! இதுக்கே கண்ணைக் கட்டுதே!)

"சாரி மச்சான்... 10 நிமிஷம் பார்த்தேன். அவ வரல... நீ மறந்துட்டு தூங்கிட்டியோன்னு தான் போனேன்." அவன் சொல்வதும் நியாயமாகவே பட்டதால், அதற்கு மேல் நண்பனிடம் கோபப்பட முடியவில்லை.

"ஏய்! என்ன திருதிருன்னு முழிச்சுகிட்டு நிக்கிற? இனியாவது பாதையை ஒழுங்கா கவனிச்சுக்கோ... என்றாவது பாதி தூரத்தில் இறக்கிவிட்டு வரசொல்லுவேன் நியாபகம் வச்சுக்கோ. பசிக்குது எதாவது சாப்பிட கொண்டுவா பிரபாவுக்கும் சேர்த்து எடுத்துட்டு வா..." அதிகாரம் தூள் பறந்தது.

அத்தை சொல்லி சென்றபடி சில பிஸ்கெட்டுகளும், முறுக்கும், தண்ணீரோடு எடுத்து வந்து அவர்களுக்கு முன் வைத்துவிட்டு, ஏதும் சொல்லாமல் போய்விட்டாள்.

தினமும் விதவிதமாய் ஏதேனும் பலகாரம் செய்து தரும் அம்மாவின் ஞாபகத்தில் அழுகை வந்தது. அழுவதைப் பார்த்தால் திட்டுவானே! என பயந்து, தன் அறைக்குள் புகுந்து கொண்டாள். அவள் சாப்பிடவில்லை என்பதை உணர்ந்தவன், (இந்த ரோஷத்தில் ஒன்னும் குறைச்சலில்லை)

"பிரபா அவளை சாப்பிடச் சொல்லு" என்றான் எங்கோ பார்த்தபடி. உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? என்பது போல் இதழ் விரிக்க,

"என்ன சிரிப்பு? நாங்க சாப்பாடு போடாமல் கொடுமை படுத்துறோம்னு யாரும் சொல்லிடக் கூடாதில்ல!" என்றான் முறைப்பாய்.

"அப்பா... நல்லவனே! முடியலை. நீயாச்சு, உன் அத்தை மகளாச்சு. ஆளை விடுடா சாமி! நான் ஆறு மணிக்கு வரேன். சேர்ந்து ஹோம்ஒர்க் செய்யலாம்." என விடைபெற்றான்.

ஏனோ அவளை விட்டுட்டு சாப்பிட மனம் வராமல் அவள் அறை நோக்கி சென்றவனுக்கு... திறந்திருந்த கதவின் வழியாக தெரிந்தது அவளது சத்தமில்லா அழுகை. மெல்லிய விசும்பலும், முதுகு குலுங்கலும் அப்பட்டமாய் காட்டிக் கொடுத்தன.

(அழும் போது தாங்கினால் ரொம்பவும் அழுவாளே... பாவம்! அவ பெற்றோர் நியாபகம் வந்துடுச்சு போல...) கோப முகமூடியை போட்டுக் கொண்டான் ஆதி.

"ஏய்! எழுந்திரு!" என்ற அதட்டலில் அரண்டு போனவளாய் பதறி எழுந்து, அவன் முகம் பார்க்க,

"வீட்டுக்கு வந்ததும் டிரஸ் மாத்தமாட்டியா? ஏதாவது சாப்பிட்டோம், படிக்க உட்கார்ந்தோம்னு இல்லாம இப்படி உல்லாசமா படுத்திருக்க? போ... சொன்னதைச் செய்."

நீயும் தான் எதுவும் செய்யலை என்பது போல் அவனைப் பார்த்து வைக்க,

"என்ன?" என்றான் மிரட்டலாக...

"ம்ஹூம் ...ஒன்றுமில்லை!" என மறுப்பாக தலையசைத்தவளின் கண்களில் குறும்பு மின்னியது.

"ஏய் என்ன சிரிப்பு?"

"அட்வைஸ் எல்லாம் அடுத்தவங்களுக்குத் தானா ஆதி அ.. அத்தான்?" அவன் கண்களில் சிறு மின்னல் தோன்றியதைக் கண்டு கொண்டாள் அந்த குட்டிப் பெண். அவனோ, அதற்கு பதில் சொல்லாமல்,

"இப்படி சிரிச்சிட்டே இரு! நீ அழுதால் பார்க்க சகிக்கலை!" என்றபடி நகர்ந்துவிட்டான்.

(பார்டா? இவ்வளவு மெதுவாக கூட இவனுக்கு பேசத் தெரியுமா? பிரபா அண்ணன் சொன்ன மாதிரி இவன் கோபப்படவில்லையே ...) என மகிழ்ந்து போனவள், தன் ஆடைகளை மாற்றிக் கொண்டு வந்து, பாத்திரங்களை கழுவவும், அங்கே வந்தவன்,

"இதெல்லாம் அம்மா பார்த்துப்பாங்க, நீ சாப்பிடு..." என்றான்.

அவளோ தயங்கியபடி,

"எனக்குப் பழக்கம் தான். அம்மா சொல்லிக் கொடுத்துருக்காங்க! நான் சிக்ஸ்த் படிக்கும் போதே செய்ய ஆரம்பித்து விட்டேன், வீடு கூட்ட, துணி துவைக்கக் கூடத் தெரியும் ஆதி அத்தான் !" என சிரிக்கவும், தோள்களைக்

குலுக்கியபடி நகர்ந்தவனுக்கு புரிந்தது... அவளது ஆதி அத்தானில் தான் அமைதி அடைகிறோம் என்பது.

அனைவரும் தூங்கிய அமைதியான இரவு. விடிவிளக்கின் ஒளியில் படித்துக் கொண்டிருந்தவனுக்கு அருகில் போர்வையை மேலே போட்டுக் கொண்டு... தலையணையைக் கையில் பிடித்தபடி வந்து நின்றவளைப் பார்த்து திரும்பிய ஆதி ,

"ஹேய் ... குட்டிப் பிசாசே! ஏன் இப்படி வந்து பயப்பட வைக்கிறாய்? " என அதட்டவும் ,

"ஆதி அத்தான் , எனக்குத் தூக்கமே வரமாட்டேங்குது... தனியா படுக்க பயமாயிருக்குது. நான் இங்கே படுத்துக்கட்டுமா?"

"வேலை செய்ய கத்துக்கொடுத்த உன் அம்மா, தனியா படுக்க கத்துக் கொடுக்கலையா?" (அடப்பாவி உன் வயசுக்கு ஏத்த மாதிரி பொண்ணு பெத்துக் கொடுக்கலன்னு இப்படியா இல்லாத அத்தை மேல காண்டாவாய்?)

"இல்லை... நான் தனியா தான் படுப்பேன்... இப்போ தான் பயமா இருக்கு!" அவளது பயம் புரிந்த போதும்,

"போகப் போக சரியாகிடும். போய்த் தூங்கு!" என்றான் இரக்கமில்லாமல்.

"ப்ளீஸ் ஆதி அத்தான் ..."

"என்னிடம் அடி வாங்காமல் போயிடு!" என முறைக்கவும்,

"என் செல்ல அத்தான் தானே... இப்படி தரையிலேயே படுத்துகிறேன்!" என்றபடி அவன் முகம் பார்க்க,

(இதென்னடா இவளோட இம்சை? அம்மாவுக்கு தெரிந்தால் என்னவாகும்? சரியான லூசு... அதைவிட பெரிய பிரச்சனை... எனக்கு இவளிடம் காதல் வந்துடுச்சோன்னு நானே புரியாமல் குழம்பிக்கிட்டு இருக்கேன்! இப்போ போய் படுத்துறாளே...)

"நோ. நீ உன் ரூமிலேயே போய் படு. பயமாயிருந்தா அம்மாவை வரச் சொல்லவா?" எங்கிருந்து தான் அந்த கனிவு வந்ததோ தெரியவில்லை.

"வேண்டாம் அத்தைகிட்ட நானே படுத்துக்குவேன்னு சொல்லிட்டேன். ஆனால் தூக்கமே வரல தெரியுமா? லீவில் இருந்தவரை நைட்டெல்லாம் தூங்காமல் இருந்துட்டு, காலையில் நல்லா தூங்கிடுவேன். இப்போ ஸ்கூலுக்கு போகணும்ல, தூங்கவேயில்லையா...

இன்னைக்கு மதியம் கிளாஸ்ல தூக்கம் தூக்கமா வந்துச்சா... சயின்ஸ் டீச்சர், 'தூங்குமூஞ்சி போய் முகத்தை கழுவிட்டுவான்னு' எல்லோருக்கும் முன்னாடி திட்டிட்டாங்க ஆதி அத்தான்." லேசாக கண்களில் நீர் கோர்க்க நிற்பவளை பார்க்கப் பாவமாக இருந்ததால்,

"நீ உன் ரூமுக்கே போ... நான் வரேன்..." என்றதும் சந்தோசமாக சென்றுவிட்டாள். (அப்பா இதை நினச்சுக்கிட்டே

தூங்கட்டும்.) நிம்மதியாய் மீண்டும் தன் படிப்பை தொடங்கிவிட்டான்.

அடுத்த அரைமணியில் மீண்டும் அவனிடம் வந்தவளை கண்டதும்,

"நீ இன்னும் தூங்கலையா?"

"நீங்க இன்னும் வரலையே?" (கஷ்டம்டா!) சிறு அலுப்பு தோன்றினாலும் அவள் பின்னோடு சென்றுவிட்டான். தயங்கியபடி மெல்ல அவளருகில் படுத்தவன்,

‘‘கண்ணை மூடி தூங்கு!" என அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டான்.

"ஆதி அத்தான்!" என அவன் தோள் தொட,

"ஷ்! இப்போ தூங்கப் போறியா, இல்லை நான் என் ரூமிற்கு போகவா?" என்றான் கோபம் போலும். அவ்வளவு தான், அந்த சிறிய கட்டிலில் அவன் முதுகோடு முதுகு உரச படுத்தவள், சிறிது நேரத்திலேயே உறங்கியும் போனாள்.

சீரான சுவாசத்தின் மூலம் அவள் தூங்குவதை உறுதி செய்து கொண்டவன், மிருதுவான அவள் கன்னத்தில் மென்முத்தத்தை பதித்தான்.

"இம்சை டீ நீ! என் செல்ல இம்சை..." என வெளியேறினான்.

காலையில் எழுந்தவள் அருகில் அவன் இல்லை எனக் கண்டு அவன் அறைக்கு விரைய,

"ஏய் தூங்குமூஞ்சி... படிக்கிற எண்ணம் இல்லையா? போ... பிரஷ் பண்ணிட்டு அம்மாகிட்ட ரெண்டு பேருக்கும் பால் வாங்கிட்டு வா!" என்றான் அதிகாரமாய்.

அவன் சொல்லும் வேலைகள் அனைத்தையும் தட்டாமல் செய்தது அந்த வாண்டு. இன்று இரவும் அவன் தன்னோடு படுக்க வேண்டுமே என்ற பரிதவிப்புடன் அவனையே சுற்றி சுற்றி வந்தாள்.

"ஹேய் இம்சை! ஏன் இப்படி என் பின்னாடியே அலைகிறாய்?" என மிரட்டவும், மருண்டவள் தயங்கித் தயங்கி

"இன்றும் என்னோடு படுப்பீர்களா ஆதி அத்தான்?" என தாய் முகம் பார்க்கும் சேயாய் வினவ, மறுக்க முடியாமல்,

" ம் ! " என்பதோடு நழுவினான்.

அன்றய இரவில் அவளை பற்றி அறியும் ஆவல் எழவே... அவளருகே படுத்தவன்,

"ஏய் இம்சை! சாப்பிடுவதையும், தூங்குவதையும் தவிர உனக்கு என்ன தெரியும் ? சொல்லுடி... உபயோகமா ஏதாவது தெரியுமா? வீட்டு வேலையை கேட்கவில்லை. பாட்டு, டான்ஸ் இப்படி ஏதாவது சிறப்புத் திறமை இருக்கா?"

‘‘பரதநாட்டியத்தில் ரெண்டு தேர்வு நிலை பாஸ் பண்ணிருக்கேன் ஆதி அத்தான். நல்லா படம் வரைவேன்னு அம்மா சொல்வாங்க. பாட்டு கிளாஸ் போயிருக்கேன். கால்பந்தில் ஸ்கூல் டீம்மில் பெஸ்ட் பிளேயர் ஆதி அத்தான்’’ என்று தடுமாற்றத்துடன் கூறி முடித்தவள் அவன் முகம் பார்க்க,

அவனோ விழி விரிய அவளை பார்த்துக் கொண்டிருந்தான். (உனக்குள்ள இவ்ளோ திறமையான்னு மாமா மலைச்சு போய்ட்டாரு!! )

"ஆதி அத்தான்..!" அவன் தோள் பற்றி அசைக்க, இயல்புக்குத் திரும்பியவன்,

"அது என்ன ஆதி அத்தான்னு நீட்டி முழக்குற? அத்தான்னு மட்டும் கூப்பிடு போதும்."

"ம்ஹூம்... எனக்கு உங்க பேர் ரொம்ப பிடிக்கும் ஆதி அத்தான். உங்களுக்கும் என் அம்மாவுக்கும் நிறைய ஒற்றுமை இருக்கு தெரியுமா? நான் சின்னதா இருக்கும் போது ஆர்த்தின்னு சொல்லவராமல் ஆதிம்மான்னு தான் சொல்வேனாம் அம்மா சொல்லியிருக்காங்க... ப்ளீஸ் நான் இப்படியே கூப்பிடறேனே..."

(மீண்டும் அம்மா நியாபகமா? மறக்கமுடியாது தான்... ஆனால் நினைக்கவும் வேண்டியதில்லை. சுகமான நேரங்கள் போல் சோகமான நேரத்திலும் இப்படி நினைப்பது தொடர்ந்தால்

டிப்ரஷன்ல கொண்டு போய் விட்டுடும். முதல்ல இதை மாத்தனும்.)

"கேள்வி கேட்டா சுருக்கமா பதில் சொல்ல மாட்டியா? ஊர்க் கதையே சொல்லனுமா? பேசாம படுத்து தூங்கு" முதுகு காட்டி படுத்துக் கொண்டான்.

"இது ஒன்னும் ஊர் கதையில்ல... என் கதை" என மனதிற்குள் நினைத்தவள் உதடு சுளித்து படுத்துக் கொண்டாள். அதன் பின் ஒவ்வொரு இரவும் அவளோடு தான் படுத்தான். அவள் தூங்கியதும் தன் அறைக்கு வந்து விடுவான்.

அது தெரியாமல் விடிந்ததும் தான் படிப்பதற்காக எழுந்து போகிறான்! நம்மோடு தான் எப்போதும் தூங்குகிறான் என நினைத்துக் கொண்டாள் நிவேதா.

அவளது திறமைகள் தெரிந்ததும், அன்னையிடம் சொல்லி நடனம், பாட்டு அனைத்திலும் சேர்த்துவிடச் சொன்னான். பள்ளியிலும், உடற்பயிற்சி ஆசிரியரிடம் பேசி... பள்ளியின் கால்பந்து அணியில் சேர்த்துவிட்டவன், தான் கால்பந்து விளையாட செல்லும் போது அவளையும் அழைத்துச் சென்றான்.

தினமும் மாலை 7 டு 8 நடன வகுப்பு இருந்தது. பாடுவதில் அதிக ஆர்வம் இல்லாத போதும் ஆதி சொன்னான் என்பதற்காக பாட்டையும் பயின்றாள். படிப்பு, பாட்டு, நடனம், விளையாட்டு, நந்தினியுடன் கதையடிப்பது, ஆதி அத்தானுக்காக

எடுபிடி வேலை பார்ப்பது என எப்போதும் பிசியாக இருந்ததால் தனது சோகத்தில் இருந்து முற்றிலுமாக மீண்டு விட்டாள்.

அவளறியாமலேயே மெல்ல மெல்ல அவளது சோகத்தில் இருந்து முற்றிலுமாக அவளை மீட்டிருந்தான் ஆதி என்று தான் சொல்ல வேண்டும்.

இப்போதைக்கு நிவேதாவுக்கே வருத்தமும் கவலையுமான விஷயம் ஒன்று உண்டென்றால் அது ஆதி அத்தான் அவளை நிவேதா என அழைக்காமல் இம்சை என்றே சொல்கிறான் என்பது தான்.

நிவேதா என்றல்ல தங்கம்... பட்டுக்குட்டி... கருவாச்சி என்றெல்லாம் கொஞ்சுவதில் ஆதிக்கு கொள்ளை பிரியம்... குறைந்தபட்சமாய் நிவி என்றாவது கூப்பிட வேண்டும் என எண்ணிணாலும்... அதை செயல்படுத்தவத்தில் தான் சிக்கல்.

அந்த அளவுக்கு அவள் அவனை பாதித்திருந்தாள். அதனாலேயே அனைத்தையும் விடுத்து இம்சை! தன்னைக் கொல்லாமல் கொல்லும் இம்சை... என்றே அப்படி கூப்பிடுகிறான் என்பது அவளுக்கு புரியவில்லை. (பாப்பா இப்படி கெஞ்சுதே ....ஏம்ப்பா இப்படி மிஞ்சுற!!)

நந்தினிக்கு அன்று கொஞ்சம் மோசமான விடியல் தான். அன்னை வாணியிடம் வசமாக சிக்கிக் கொண்டுவிட்டாள் என்று தான் சொல்ல வேண்டும்.

"நந்தும்மா! நீ ப்ளஸ்டூ முடிக்கும் வரை டிவி கனக்சனை கட் பண்ணப் போறோம் அப்பவாவது ஒழுங்கா படிக்கிறயான்னு பார்ப்போம்..."

"போம்மா எனக்கிருக்க ஒரே ரிலாக்சேஷன் அது தான். அதையும் கட்பன்றேங்கிற இட்ஸ் டூ பேட்..." என இழுக்க,

"ஸ்டேர்ட் ஃபர்ஸ்ட் வாங்கலைன்னாலும் ஸ்கூல் ஃபர்ஸ்ட்டாவது வர வேண்டுமா?"

"ஐயோ வாணி அம்மா... உன் பேராசைக்கு ஒரு அளவே இல்லையா? நந்துவை பத்தி தெரிஞ்சும் இப்படியெல்லாம் யோசிக்கலாமா? நம்ம பொண்ணு சூப்பரா சிரமமேயில்லாம பாஸ் பண்ணிடுவான்னு சந்தோசமா இருக்கணும் சரியா?"

"அடிக் கழுதை..! டீச்சர் பொண்ணு மக்குன்னு புரூவ் பண்ணு."

"பிடிச்சதை பண்ணத்தான் கிக்கு பிடிக்காததைப் பண்ணா மக்கு தான்!"

"இந்த வாய் இல்லன்னா உன்னை நாய் கவ்விக்கிட்டு போயிடும்..."

"நீங்க வேணாப் பாருங்க... இந்த வாய்க்காகவே நிறைய இளவரசர்கள் நீ நான்னு போட்டி போட்டுக்கிட்டு தூக்கிட்டுப் போக கியூவில் நிக்கப் போறாங்க..." அந்த நேரம் தேவதைகள் ததாஸ்து சொல்லிவிட்டன போலும்.

"ஓவர் காண்பிடண்ஸ் உடம்புக்கு ஆகாது நந்து. இந்த காலத்தில் ராஜாக்கள் எங்கிருக்காங்க? அப்படியே இருந்தாலும் கூட அமெரிக்கால பிஸ்னஸ் பண்ணிக்கிட்டு இருப்பாங்க. உன்னை தேடிவந்து சுயம்வரம் பண்ணுவாங்களா? இதுக்குத் தான் கண்ட கண்ட கதை புத்தகத்தையெல்லாம் படிக்காதன்னு சொல்றது. பாரு எப்படி யோசிக்கிறன்னு?"

"அம்மா கனவு காணுங்கன்னு அப்துல்கலாமே சொல்லியிருக்கார். நான் ஒரு ராஜகுமாரன் என்னை கல்யாணம் பண்ணிக்கிற மாதிரி கனவு கண்டால் தப்பா?" புருவம் உயர்த்தி கண்கள் விரித்துக் கேட்க,

"படிக்கிற வயசுல படிப்பை பத்தி கனவு காணாமல் கல்யாணத்தப் பத்தி யோசி. விளங்கின மாதிரித் தான்!"

"வாணிம்மா... நான் என்ன படிச்சாலும்... வேலைக்குப் போனாலும் கடைசியில் கல்யாணத்தை தான் பண்ணிவைக்கப் போறீங்க. அதை நான் முதல்லயே யோசிக்கிறேன் அவ்வளவு தான். நான் லவ்வெல்லாம் பண்ணமாட்டேன். என் ராஜகுமாரன் எனக்காக வந்து உங்கிட்ட பெண்கேட்டு கல்யாணம் பண்ணனும் அதுவரைக்கும்..." இது வெறும் வாய்ப் பேச்சா இல்ல விநயமான்னு புரியலையே... எனக் குழம்பியபடி,

"அதுவரைக்கும்... என்னடி?" என பதறிப்போய் கேட்க,

"ஐயம் வெயிட்டிங்!" என்று விஜய் பாணியில் சொன்னதும் தான் அவளது அன்னைக்கு இயல்பாக மூச்சு விட முடிந்தது.

"இரு... உன் அப்பா வரட்டும் இப்படி பேசுற வாயை தைக்கச் சொல்றேன்."

"கண்ணன் எப்போ டெய்லர் ஆனாரு? அவரால உன் வாயையே தைக்க முடியல நீ போட்ட குட்டி நான்... நோ வே!" தோள்களை குலுக்கினாள் அலட்சியமாய்.

"தாயும் மகளும் பொய்யாய் வம்பளந்து கொண்டிருப்பதை ரசித்தபடியே வந்தார் கண்ணன், நந்தினியின் தந்தை.

"இன்னிக்கு என்ன பஞ்சாயத்து?" என்றவருக்கு தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தபடி,

"நீங்களே சொல்லுங்க..." என ஆரம்பித்து அனைத்தையும் சொல்லிமுடித்தார் வாணி.

"ஏன்டா குட்டி படிக்கிறதுல ஏதாவது கனவு... லட்சியம்..."

"லூசாப்பா நீ..!? உனக்கு பொண்ணா பொறந்துட்டு சைன்டிஸ்டாவா ஆவேன்? பொறுப்பான... அன்பான... பிரியமான..." கன்னம் குழிய சிரிக்க,

"தன் இமேஜை டேமேஜ் செய்தாலும் இத்தனை 'மான' போடுறாளேன்னு ஆர்வமாகப் பார்க்க,

"அம்மா ஆவேன்!" பட்டென சொல்ல, நெஞ்சை பிடித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டார்.

"என்னங்க... என்னங்க... என்ன பண்ணுது?" என பதறிவிட்டார் வாணி.

"ஏண்டி உங்கப்பாவை இப்படி பதறவைக்கிற?"

"ஷ்... சும்மா பதறாத! நான் அம்மான்னு சொன்னதும் உன்னை மாதிரி ஒரு அம்மான்னு நினைச்சிருப்பார்... அதான் என்ன கொடுமை சரவணன் இதுன்னு உட்கார்ந்துட்டார்."

"வாணி இன்னிக்கே டீவியை தூக்கி யாருக்காவது தானமா கொடுத்துருவோம். அவ ரூமை தரவா செக் பண்ணு, எல்லா கதைப் புத்தகத்தையும் தூக்கிப் போட்டு கொளுத்து. தானா கிறுக்கு தெளிஞ்சிடும்." என்றார் சிரிக்காமல்.

"நாட்டாமை! தீர்ப்பை மாத்து!" என நந்தினி அலற...

"எவ அவ...?" என அவள் அம்மா டைமிங் காமெடி பண்ண, இவை அனைத்தையும் வாசலில் நின்று கேட்டுக் கொண்டிருந்த பிரபாவும் ஆதியும் சிரித்தபடியே உள்ளே வந்தனர்.

"அங்கிள்... நீங்க பயப்படாதீங்க நந்துவை நல்ல மார்க் வாங்க வைப்பது எங்கள் பொறுப்பு. வீக்கெண்டில் எங்களோடு ஸ்கூலுக்கு வரட்டும். அவளுக்கு தெரிஞ்சதை அடுத்தவங்களுக்கு சொல்லிக் கொடுக்கட்டும்.

மத்தவங்களுக்கு உதவி தேவைப்படும் நேரத்தில் உதவுவது தான் மிகப்பெரிய சந்தோஷம்னு புரிஞ்சுகிட்டா டிவி பார்த்து

நேரத்தை வீணாக்கமாட்டா. நீங்க பர்மிசன் கொடுத்தா அவளை நாங்க மாத்துறோம்." என்றான் ஆதி.

"அப்பா நோ சொல்லுப்பா.." என்றாள் வெடுக்கென. சற்று யோசித்தவர்,

"சரி. கூட்டிப் போங்க!" என்றார்.

"போப்பா! ஆதி மூனு அம்மாக்கு சமம். சரியான ஸ்ட்ரிக்ட் ஆபிஸர். (இவனை சமாளிக்கிறது கஷ்டம். உங்ககிட்ட ஓபி அடிச்சுடுவேன் இவன்கிட்ட முடியாது.)

நந்தினியின் உதவிப்படலம் கண்ணாம்பூச்சி ஆட்டகாரனுக்கு சாதகமாயிடுமோ...?

# அத்தியாயம் 6

**அ**ந்த வார இறுதியின் காலையில் பிங்க் அண்ட் ஒயிட் சுடிதாரில் புத்தம் புது ரோஜாவாய் பளீரென தயாராகி வந்த நந்தினியைக் கண்ட ஆதி,

"நந்து... நாம படிக்கத் தானே போறோம்? நீ இப்படி வந்தா எல்லோரும் உன்னைத் தான் பார்ப்பாங்க... யாரும் பாடத்தை கவனிக்க மாட்டாங்க. சின்னத் தோடு போதும். ஜிமிக்கியை மாத்து. ஸ்டைலிஷ் வாட்சை மாத்திட்டு ஸ்ட்ராப் வாட்ச் கட்டு. அப்புறம் விரிச்சு விட்டிருக்க முடியை க்ளிப் பண்ணு...."

"ஆரம்பிச்சுட்டான்யா... ஆரம்பிச்சுட்டான்! பிரபா தேவதை மாதிரி இருக்கேன்னு சொன்னான். போடா! நான் இப்படி தான் வருவேன்,"

"அவன் ஒரு லூசு! அப்பா அம்மாவோடு வெளியில் போறப்போ இப்படி டிரஸ் பண்ணு. இப்போ நான் சொன்ன மாதிரி மாத்திக்கிட்டு வா. உனக்கு ஐஞ்சு நிமிஷம் தான் டைம்!" என்றான் கராராய்.

அவளோ அவனை எதிர்க்க முடியாமல் பிரபாவை கண்களால் கெஞ்சினாள்.

"விடு ஆதி! நாம தான் எப்போதுமே அவ கூடவே இருப்போமே... அப்புறம் என்ன? நம்மை மீறி எவனாவது நந்துவை நெருங்க முடியுமா? நீ ஓகே சொன்னா தான் ... நந்து ஹேப்பி... நந்து ஹேப்பின்னா தான் மீ ஹேப்பி! ரொம்ப யோசிக்காத மச்சான்!" என நந்துவை பார்த்துக் கண் சிமிட்டினான்.

"என்னவோ போ!" என்ற அதிருப்தியோடு தான் பள்ளிக்கு அழைத்துச் சென்றான்.

ஆதியும், பிரபாவும் பாடம் கற்பிப்பதிலும், சந்தேகங்களை தெளிவிப்பதிலும் மூழ்கிவிட, நந்தினியோ சிறுவர்களுக்கு கொஞ்ச நேரம் சொல்லிக் கொடுத்துவிட்டு அவர்களுடனேயே கதையளக்கத் தொடங்கிவிட்டாள்.

அவள் பேசும் போது முகமே விகசிப்பதையும், கண்களை விரித்தும் சுருக்கியும் சிரிப்பதையும், உதடு சுழிப்பதையும், தளிர் விரல்கள் காற்றில் கோலமிடுவதையும், தலையசைக்கும் போது கன்னத்தில் உரசும் ஜிமிக்கியின் சில்மிஷத்தையும் அரைமணி நேரத்திற்கு மேலாக அசராமல் பார்த்து அதிசயித்துக் கொண்டிருந்ததோடு அல்லாமல் அந்த நிமிடங்களை தன் பொக்கிஷமாய் மனப் பெட்டகத்துக்குள் பூட்டியும் வைத்துக் கொண்டன அந்த ஜோடி கண்கள்.

ஒரு கட்டத்தில் பேச்சும் போரடிக்கவே தன் ஸ்வீட்டியைப் பார்க்க போய்விட்டாள்.

"ஹாய் ஸ்வீட்டி!" என அதை நெருங்கியவள், அதன் மீது சாய்ந்து தன் கன்னத்தை வைத்தாள்.

"போன முறையைவிட இப்போ ரொம்ப குத்துதே.. வெரிகுட்! நீ நல்லா ஸ்ட்ராங் ஆயிட்டே! ஐ லவ் யூ செல்லம்!" என முத்தம் வைக்க அவள் அறியாமல் பின் தொடர்ந்த அந்த கண்கள் அவளை குறுஞ்சிரிப்போடு விழுங்கிக் கொண்டிருந்தன.

(இன்னும் ஆறு வருஷங்களை கஷ்டப்பட்டு கடத்திட்டா, என் ஸ்வீட்டி நந்தினியின் கையணைப்பில் அவள் சிந்தும் முத்தத்தை என் நெஞ்சில் தேக்கி உன்மத்தம் கொள்ளலாம். ஹும்... அதுவரை பொறு மனமே!)

தலையை உலுக்கி சமன் செய்து கொண்ட அந்த கண்களில் சொந்தக்காரன், அப்பொழுதே தன் காதலை அவளிடம் சொல்ல ஆவல் கொண்டான். ஏனெனில் இப்படி பட்ட சந்தர்பத்திற்காகத் தான் அவன் வெகு நாளாக காத்திருக்கிறான்.

வேகமாக வகுப்பிற்கு சென்றவன் அவளுக்காகவே எப்போதும் கையோடு வைத்திருக்கும் பொருட்களுடன் ஓடிவந்தான். நந்தினி மரத்தில் சாய்ந்த படியே கண்ணயர்ந்து விட்டிருக்க... இவனுக்கு வசதியாகப் போய்விட்டது.

மரத்தின் பின் புறமாய் சிறுத்தையின் லாவகத்துடன் மேலே ஏறியவன்... இதய வடிவில் பர்ப்பிள் நிற பலூன்களை மரத்தை சுற்றி தணிவான கிளைகளில் அங்கங்கே தொங்கவிட்டு இறங்கிச் சென்றுவிட்டான்.

தூங்கி எழுந்தவள், ஸ்வீட்டியிடம் விடைபெற நிமிர... அசந்து போனாள். குட்டிக்குட்டி இதய வடிவ பலூன்கள் ஒவ்வொன்றும் ஓர் ஆங்கில எழுத்தை மட்டும் தாங்கி தொங்கிக் கொண்டிருந்தன. சுற்ற சுற்றி வந்தவள், சற்று நேரத்திலேயே கண்டுபிடித்துவிட்டாள் அந்த பலூன்களின் சங்கதியை... "ஐ லவ் யூ ஸ்வீட்டி!" தான் அது.

"வாவ்! சூப்பர் ஸ்வீட்டி.... உனக்கு இன்னுமொரு லவ்வர் இருக்காங்களா? யாரெனத் தெரிந்து கொள்ளும் ஆவலில் கண்களை சுழலவிட ஒருவரையும் காணவில்லை.

அருகில் இருக்கும் மரத்தில், சற்று மேலே இருந்த மரக்கிளையில் குரும்புக் கண்ணனாய் கைகளை கட்டியபடி சயனித்து... மந்தகாசப் புன்னகையுடன் இவளையே தான் பார்த்து உருகிக் கொண்டிருந்தான் அவன்.

"யாருன்னு என்னால கண்டுபிடிக்க முடியல! பட் என் ஸ்வீட்டிக்கு வேண்டியவங்க... எனக்கும் நெருக்கமானவங்க தான்! சோ... என் செல்லம் இன்னொருத்தருக்கும் செல்லமா? பெருமையா இருக்கு!" என முகம் மலரச் சொன்னவள்,

"கொஞ்சமே கொஞ்சம் பொறாமையாவும் இருக்கு!" என முகம் சுருக்க அந்த அழகில் சொகித்தான் போனான் அவன்.

"என் ஸ்வீட்டி நீ தான் டா!" என மானசீகமாய் அவள் கன்னம் கிள்ளி கொஞ்சியவன் நிதர்சனத்திற்குத் திரும்பும் போது, ஆதியும், பிரபாவும் அவளிடம் பலூன்களை காட்டி எதோ விசாரித்துக் கொண்டிருந்தனர்.

நந்தினியோ பிரபாவிடம்,

"பாரு செல்லாக்குட்டி... என்னை கேலி பண்ணுவீங்க... இங்கே யாரோ ஸ்வீட்டிக்கு லவ் யூ சொல்லியிருக்காங்க!" என்றாள் குழந்தை சிரிப்போடு. பிரபாவின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. ஆதியோ கடுகடுவென இருந்தான்.

"என்னாச்சு ஆதி? ஏன் இப்படி கோபமா இருக்க?"

"ம்... எல்லாம் உன் ஸ்வீட்டியால தான்!"

"ஹா... ஹா... பொறாமை! என் ஸ்வீட்டிக்கு இவ்வளவு கிரேஸ்ன்னு தானே?"

"லூசு! போதும் வா போகலாம்." என்றான் சுற்றும் முற்றும் பார்த்தபடி. பிரபாவும், ஆதியும் அர்த்தம் பொதிந்த பார்வையை பரிமாறிக் கொண்டதை கண்டவள்,

"நீங்க ரெண்டு பேரும் ஏன்டா லவ்வர்ஸ் மாதிரி கண்ணாலயே பேசிக்கிறீங்க? வாயை திறந்து பேசுவதற்கென்ன?"

பக்கத்திற்கு ஒன்றாய் இருவரின் கைகளையும் பிடித்தபடி கேள்வி வேறு.

வேறு விஷயம் பேசி திசை திருப்பி வீட்டிற்கு வந்ததும் அவளை அனுப்பிவிட்டு,

"இது லவ் பிரபோசலா இருக்குமோ?" என்றான் சந்தேகத்துடன் பிரபா.

"எனக்கும் அதே சந்தேகம்தான். இவளுக்கு பிடித்த கலர்... கிளிட்டர் ஸ்பிரே பண்ணின எழுத்துக்கள்... இது திட்டமிட்டு, காத்திருந்து தருணம் பார்த்து செய்யப்பட்டிருக்கும் வேலை.

அப்படின்னா அவன் ரொம்ப நாளா நந்துவை நமக்கும் தெரியாமல் பாலோ பண்ணியிருக்கான். இது நந்துவுக்காக செய்யப்பட்ட பிரபோசல் தான். அவளுக்கு புரியல... நல்லது தான் சீக்கிரம் யாருன்னு கண்டுபிடிக்கணும் பிரபா."

"கண்டிப்பா! அவளை யார் தொந்தரவு செய்தாலும் சும்மா விடக் கூடாது. இது அவளுக்கு தெரிய வேண்டாம். அவ விசனப்பட்டா நாம நண்பர்களா இருக்கிறதுல அர்த்தமேயில்ல." என்றான் ஆழ்ந்த குரலில்.

மறுநாளும் நண்பர்களுடன் மற்றவர்களுக்கு உதவுவதற்காக உற்சாகமாகவே பள்ளிக்கு கிளம்பிவிட்டாள் நந்தினி. தந்தை அசந்து தான் போனார்.

"என்னடா குட்டி ஆதி சொன்ன மாதிரி அடுத்தவங்களுக்கு ஹெல்ப் பண்றது உனக்கு பிடிச்சுப் போச்சோ?"

"நல்லாத்தான் பா இருக்கு! ஸ்கூலுக்கு படிக்க போகாமல், சொல்லிக் கொடுக்க போகும் போது சந்தோஷமா இருக்கு."

"இது எத்தனை நாளைக்கோ?" மகளை நன்கு அறிந்திருந்த வாணியின் வாய் மொழி தான் அது.

"போம்மா! நீ ரொம்ப பேட். பாராட்டவேமாட்ட..." முகம் திருப்பிக் கொண்டவள் தந்தையிடம் மட்டும் சொல்லிக் கொண்டு கிளம்பிவிட்டாள்.

நண்பர்கள் இருவரும் தோழியின் விஷயத்தில் கூடுதல் கவனத்துடன் இருக்க எண்ணியதால், நந்து இங்கிருந்து வெளியே போகும் போது சொல்லிட்டு போ!" என அறிவுறித்தினார்.

அவரவர் பாடம் சொல்லிக் கொடுப்பதில் முனைப்பாய் இருக்க, தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த நந்தினிக்கு தலைக்கேற கண்கள் கலங்க இருமத் தொடங்கிவிட்டாள்.

'என்னம்மா பார்த்துக் குடிக்கக் கூடாதா?' உள்ளம் பதற...கன்னம் தொடும் கண்ணீர் துடைக்க அவளருகே ஓடிவிட எழுந்த மனதை வெகு சிரமப்பட்டு கட்டுக்குள் கொண்டுவந்தான் அந்த கண்களுக்கு சொந்தக்காரன். ஏனெனில் அதற்குள்ளாகவே ஆதி அவளருகே சென்றிருந்தான்.

"என்னாச்சு நந்து?"

"தண்ணி குடிக்கும் போது தலைக்கேறிடுச்சு..."

"இனி கவனமாக இரு! பேசிக்கிட்டே தண்ணி குடிச்சா இப்படித் தான் தலைக்கேறிடும்..." தோழிக்கு அறிவுறுத்தியபடி அவன் நகர்ந்துவிட. இவனோ மீண்டும் ஓர் தனிமையான தருணத்திற்காக காத்திருக்கத் தொடங்கினான்.

வெகு நாட்களுக்குப் பிறகு, " மனம் திறந்தால் மார்க்கமுண்டு " பெட்டியில் ஒரு கடிதம். பிரித்துப் படித்த ஆதியும், பிரபாவும் அதிர்வில் இருந்து மீள, வெகு நேரம் பிடித்தது.

"ஒரு ஆசிரியர் என்னைத் தொடுவது எனக்கு பிடிக்கல. இதை யார் கிட்ட சொல்றதுன்னு தெரியல... அம்மாகிட்ட சொன்னா என்னை திட்டுவாங்களோன்னு பயமாயிருக்கு. நான் என்ன பண்ணனும்?" அவ்வளவு தான் கடிதம் முடிந்துவிட்டது.

வெகு நேரம் யோசித்து... திட்டங்கள் உருவாக்கி, நேரடியாக தலைமை ஆசிரியரிடமே சென்றுவிட்டனர். இங்கு குற்றம் சுமத்தப்படிருப்பது ஆசிரியர் மேல் என்பதால்... மிகவும் கவனமாக கையாளப்பட வேண்டிய விஷயமாக இருந்தது.

உடனடியாக ஆசிரியர்களுக்கான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. என்னென்ன செய்ய வேண்டும் என விரிவாக விவாதிக்கப் பட்டது. மறைமுக மிரட்டலோடு கூட்டம் முடிவுக்கு வந்தது.

அதன்படி, ஒவ்வொரு நாளும் மூன்று நிலைகள் (வகுப்புகள்) அதாவது 1 முதல் 3 வகுப்புவரை, திங்கள் 4 முதல் 6 வரை, செவ்வாய் 7 முதல் 9 வரை, புதன் 10 முதல் 12 வரை ஆகிய கிழமைகளில் தினமும் ஒன்றரை மணி நேரம் வழிகாட்டும் வகுப்பு என்ற ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டது.

பள்ளியின் நேரத்தை பாதிக்காமல், மற்ற வகுப்புகளில் இருந்து பத்து, பத்து நிமிடங்கள் எடுக்கப்பட்டு இந்த வகுப்பு நடத்தப்பட்டது. இந்த வகுப்பில் பாடமாக எதுவும் சொல்லிக் கொடுக்கப்படாது. இதற்கு ஆசிரியர்கள் கிடையாது.

இரண்டு ஆண் மற்றும் பெண் ஆலோசகர்கள் அமர்த்தப்பட்டனர். இவர்களை "தோழன்", "தோழி" என்றே விளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இதில் சரியான தொடுகைகள்... தவறான தீண்டல்கள் மட்டுமல்லாமல் நம்மை நேசிப்பது, சமூகத்தை நேசிப்பது, அடுத்தவரை நேசிப்பது, சுற்றுசூழலை நேசிப்பது வரை அனைத்து விஷயங்களும் குறும்படங்கள் வாயிலாக விளக்கப்பட்டது.

முதல் நாற்பது நிமிடம் படம். அடுத்த நாற்பது நிமிடங்களும் அனைவரும் தங்கள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வது, கலந்தாலோசிப்பது என்றும் கடைசி பத்து நிமிடம் மாணவர்களது புரிதலை அறிந்து கொள்வதற்காக சரி, தவறு என குறிப்பிடும் படி கேள்விகள் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு தலைப்பு எடுத்துக் கொள்ளபட்டது. இவை அனைத்தும் பாடமாக இல்லாமல் படமாகவும், பயிற்சியாகவும் இருந்தது தான் சிறப்பு. இரண்டு மாதங்களில் இந்த ஆலோசகர்களின் மூலமாக குற்றம் செய்த ஆசிரியரை மாணவிகள் வாயிலாகவே அறிந்து பணி நீக்கம் செய்தனர்.

இந்த ஏற்பாட்டிற்கு பின், "மனம் திறந்தால் மார்க்கமுண்டு" பெட்டி காலியாகவே இருந்தது. மாணவிகளுக்கு தற்காப்புக்கலை இலவசமாக கற்றுக் கொடுக்கப்பட்டது.

பகலெல்லாம் நிவேதாவிடம் அடாவடியாய் நடந்து கொள்ளும் ஆதி, இரவில் அமைதியாய் போவான். இதைப் புரிந்து கொண்டவளும், பகலில் பவ்யமாகவும், இரவில் சற்று மனம் திறந்து கலகலப்பாகவும் பேசத் தொடங்கியிருந்தாள்.

"ஏன் ஆதி அத்தான் என்னை நிவேதான்னு கூப்பிட மாட்டேங்குறீங்க?" என்றாள் குறை போலும்.

"குட்டி குரங்கிற்கு பெயர் நிவேதாவா? உனக்கு யார் பெயர் வைத்தது? இம்சை! என்னைத் தூங்க விடு! நீ தூங்கினதும் நான் போய் டெஸ்டுக்குப் படிக்கணும்!" எனப் பேச்சை மாற்றவும்,

"ஐயோ! பாதி ராத்திரியில் போயிடுவீங்களா? என் ரூமிலேயே படிங்களேன்! எனக்கு தனியா படுக்க பயமா இருக்கும்!" என்றாள் பதட்டத்துடன்.

"இன்னும் என்ன டீ பயம்? இங்கு எந்த பேயும் கிடையாது. அப்படியே இருந்தாலும், இப்படி தலையை விரிச்சுப் போட்டு கண்களை உருட்டி முழிக்கிற குட்டி பிசாசை எந்த பேயும் பிடிக்காது!" எனவும்,

"பேயா...? ஆதி அத்தான்!" என அலறிக் கொண்டு அவன் மார்பில் முகம் புதைக்க, டி-ஷர்ட் டையும் தாண்டி உஷ்ண மூச்சு அவனை திணறடித்தது. இளமை பருவத்தில் இருந்தவனுக்கு குழந்தையே ஆனாலும் ஒரு பெண்ணின் அதுவும் மனதுக்கு மிகவும் நெருக்கமான பெண்ணின் ஸ்பரிசம் என்னவோ செய்தது.

தான் காதலை பற்றி சொன்ன அனைத்து விஷயங்களும் இவளோடு பொருந்த, தன் செல்ல இம்சையின் வசம் முற்றிலுமாக தன் மனம் சரணடைந்துவிட்டது என்பது அவனுக்கு புரிந்துவிட்டது.

(இந்தாப்பா ஆதி உனக்காக காதல் பாட்டெல்லாம் எழுத இங்க ஆள் இல்லை... அப்டியே மானே, தேனே, பொன்மானே னு நீயே மைன்ட் வாய்ஸ்ல பாடிக்க... இவனுக்கு காதல்னு கன்பார்ம் பண்றதுக்குள்ள எங்களுக்கு நாக்கு தள்ள வச்சுட்டான் ...)

முதல் முறையாக,

"ஹேய் இம்சை... பயப்படாதே! சும்மா சொன்னேன். நான் இருக்கேன்... தூங்கு!" என பட்டும்படாமலும், தொட்டும்

தொடாமலும் அவளை அணைத்துக் கொண்டான். அவனது அணைப்பில் இருந்து அவள் விலகவில்லை. அவளுக்கும் பிடித்திருக்கிறது என்பது தெரிந்தாலும் சிறு நெருடல் தோன்ற,

"உனக்கு குட் டச்... பேட் டச் தெரியுமா?" தன் கையணைப்பில் இருந்தவளிம் முகம் பார்த்து வினவ,

"தெரியும் ஆதி அத்தான்." பளிச் புன்னகையுடன் சொல்ல, சிறு சிரிப்புடன்,

"தூங்கு" மீண்டும் எப்போதும் போல் அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டான்.

நாட்கள் வாரங்களாகி... மாதங்களாய் விரைய, இப்பொழுதெல்லாம் புட்பால் ப்ராக்டீஸுக்கு ஆதியோடு விளையாடச் செல்வது நிவிக்கு வழக்கமாகிவிட்டது. நன்றாகவும் விளையாடுபவள் என்பதால் ஆதியின் வயதொத்த மற்ற ஆட்டக்காரர்களுக்கும் நிவியை பிடிக்கும்.

அன்று தங்களுக்குள்ளாகவே மேட்ச் வைத்து ஆடத் தொடங்கினர். எதிர் அணி மூன்று கோல் போட்டுவிட்டது. அதற்குக் காரணம், கோல் கீப்பராக இருந்த நிவி தான். முதல் பாதியிலேயே, எல்லோரும் நிவியின் மீது கோபத்தில் இருந்தனர். இடைவேளையின் போது ஆதி ஆரம்பித்துவிட்டான்.

"ஹேய் தத்தி... முட்டாள் நீயெல்லாம் ஏன் விளையாட வருகிறாய்? சாப்பிடப் போ... அதற்கு தான் லாயக்கு! உன்னை

பிளேயர்ன்னு சொல்லிக்காதே! என் மானத்தை வாங்கிட்ட . மூஞ்சியைப் பார்! குரங்கு... குரங்கு! இது தான் கடைசி ! இனி மேல் என்னோடு இங்கு வராதே! " எனத் திட்டி தீர்த்தான்.

எதிரணியில் இருந்த சிவா ஆதியின் வகுப்பு மாணவன் ,

"விடு ஆதி... சின்ன பொண்ணு தானே! அவள் இவ்வளவு தூரம் விளையாடுவதே பெரிது. நாம் என்ன இப்போது கப்பிற்காகவா விளையாடுறோம்? நமக்குள் விளையாடுவது தானே! அடுத்த முறை கவனமாக இரு நிவி!" என்றான் ஆதரவாக.

'இவன் என்ன வக்காலத்து? நிவியாம் நிவி... நானே அவளை அப்படிக் கூப்பிடுவது இல்லை. இந்த தத்தியும் உடனே தலையாட்டுது!' (உனக்கேன்டா இவ்வளவு பொறாமை? நீயும் கூப்பிடு யாரு வேண்டான்னது...)

"நீ என்ன அவளுக்கு சப்போட்டா? இந்த வயதில் விளையாடுவது பெரிய விஷயமா இருந்தால் ஏன் விளையாட வர்றா? ஒரு விஷயத்தில் இறங்கிட்டா நம்மோட முழு திறமையையும் காட்டணும். பெரிய பசங்களோட போட்டி போட முடியாதுன்னு நினைக்கிறவ சேர்ந்திருக்கக் கூடாது!"

(கரெக்ட், கரெக்ட்... நீ மெரட்டு, மெரட்டு!)

"சாரி... ஆதி அத்தான்! நான் அப்படியெல்லாம் நினைக்கலை. என்னால் முடியும்! நான் நல்லா விளையாடுவேன்!

இன்னும் ஒரு சான்ஸ் கொடுங்க... ப்ளீஸ் ஆதி அத்தான்!" என விழி நீரை துடைத்தபடி கேட்பவளைப் பார்க்க சிவாவிற்குத் தான் பாவமாக இருந்தது.

ஆதியோ, "கிழித்தாய்! உன்னை நம்பி மறுபடியும் ஏமாற முடியாது. நீ டிபென்ஸில் இரு! உன் அப்பா பெரிய பிளேயர்ன்னு வெளியில் சொல்லிடாதே!" என்றான் கோபமாக.

"ஆதி அத்தான்! ஒரே ஒரு சான்ஸ் ப்ளீஸ்... ப்ளீஸ்" என அவன் பின்னே ஓடியவளைப் பார்த்து சிவா கோபமாய், (இவள் சரியான லூசு! ஏன் அவனைப் போய் கெஞ்சிட்டு இருக்கா? அவனே திமிர் பிடித்தவன்! இவள் கெஞ்சினால் அவன் மிஞ்சுவான் ) என பிரபாவைத் தேடி போனான்.

இருவரும் ஆதியிடம் பேச வரும் போது, ஆதி நிவியிடம் கேட்டுக் கொண்டிருந்தான்,

"செகண்ட் ஹாஃபில் அவனுங்க ஒரு கோல் போட்டாலும் உன்னை டீமில் இருந்து தூக்கிடுவேன். சம்மதமா?"

"ம்! ஐ வில் டூ மை பெஸ்ட் ஆதி அத்தான்! " என்றாள் மலர்ந்த முகத்துடன். (க க க போ !)

"இங்கிலீஷுல ஒன்னும் குறைச்சல் இல்லை! போ!" என விரட்டினான். (நீ அவளை திட்டுறியா இல்லை டையலாக் வச்ச எங்களை திட்டுறியா?)

சிவா வாயடைத்துப் போனான். இது தான் வழக்கம் என்பது போல் பிரபா சிவாவைப் பார்த்துச் சிரித்தான். அன்று இவர்களது அணி தோல்வியைத் தழுவினாலும், அதற்கு மேல் எதிர் அணி கோலும் போடவில்லை. நிவியின் முயற்சி ஒரு காரணமென்றாலும், சிறந்த ஆட்டக்காரனான சிவாவின் பரிவும் (தியாகமும்) ஒரு காரணம்.

அதன் பிறகு சிவா நிவியிடம் அன்பாகப் பேசத் தொடங்கினான். ஏனோ ஆதிக்கு இது இனம் புரியாத எரிச்சலை உண்டாக்கியது.

"ஹேய்! இம்சை விளையாட வந்தாயா? கதை பேச வந்தாயா? போ! என் துண்டை எடுத்து வா!" சிவா நிவி இருவரும் பேசுவதை தவிர்ப்பதற்காகவே ஓய்வு நேரத்தில் கூட அவளை அமரவிடாமல்,

"தண்ணீர் எடுத்து வா! பிரபாவை கூப்பிடு!" என ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டே இருந்தான். சிவாவிற்கு ஆதியின் மேல் கோபம் வந்தது. விளையாடும் போது விழுந்து, காலில் சிராய்ப்பு ஏற்பட வெளியே வந்து அமர்ந்திருந்தவளிடம் சிவா பேசினான்.

இருவரும் வெகுநேரம் பேசினார்கள். அடிக்கடி கன்னம் குழிய சிரிப்பவளையும், அவளது காயத்திற்கு மருந்து இடுபவனையும் பார்த்து, கோபம் உண்டான போதும்,

விளையாடிக் கொண்டிருந்த ஆதியால் எதுவும் செய்ய முடியவில்லை.

(என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கு? எனக்கிட்ட மட்டும் பயந்த புள்ள மாதிரி திருதிருன்னு முழிக்க வேண்டியது... எப்பவாவது இப்படி சிரிச்சிருக்காளா? எதாவது சொன்னா டாமை திறந்துவிடுவதில் ஒன்னும் குறைவிருக்காது.) ஆதியின் மனம் கனன்று கொண்டிருந்தது.

வீட்டிற்கு வந்து வெகு நேரமாகியும் அவனது மௌனம் அவளுக்கு பயமேற்படுத்த, தானாகவே,

"ஆதி அத்தான்! நான் ஏதாவது தப்பு செய்து விட்டேனா? ஏன் என்னோடு பேச மாட்டேங்குறீங்க?" என்றாள் பரிதாபமாக.

"உன்னோடு பேசத் தான் நிறைய பேர் இருக்காங்களே, நான் பேசினால் என்ன? பேசாவிட்டால் என்ன?" வெடுக்கென வந்தது பதில்.

'ஐயோ ! பயங்கர கோபத்தில் இருக்கிறானே... இப்போ என்ன செய்றது?' என திரு திருத்தவளை முறைத்தவன்,

"ஏன் இங்கேயே நிற்கிறாய்? நான் படிக்கணும். தொந்தரவு பண்ணாமல் வெளியே போ இம்சை " என்றான் கோபம் குறையாமல்.

அவளது காயத்தைக் கண்டு அத்தை பதறிப் போனார். பெண்பிள்ளை இப்படி அடிபட்டுக் கொண்டு வரலாமா? தழும்பு

வந்துவிட்டால் நன்றாக இருக்காது. இனி அந்த தடியன்களோடு நீ விளையாடப் போக வேண்டாம் என இறைந்து கொண்டிருந்தார்.

இது தான் சமயமென்று,

"ஆமாம்! இனி இந்த குரங்கு என்னோடு வர வேண்டாம்! ஸ்கூல் டீமில் விளையாடுவதே போதும். அங்கு வந்து விளையாடவா செய்கிறாள்... சோம்பேறிக் கழுதை போல் இப்படி வேண்டுமென்றே விழுந்து வைத்து வெளியில் அமர்ந்து கொண்டு கண்டவர்களோடு கதை பேசிக் கொண்டிருக்கிறாள்!" என ஆதி சொன்னதும் அரண்டு போனாள் நிவேதா!

அன்னையோ, "என்ன ஆதி இது? பிள்ளையை குரங்கு, கழுதை என்றெல்லாம் சொல்கிறாய்! கொஞ்சமும் சரியில்லை. நான் அப்பாவிடம் சொல்கிறேன்" என கோபப்பட , (இது வேறா?) என உதடு சுளித்து தன் அதிருப்தியை காட்டியவனைக் கண்டவள் ,

"இல்லை அத்தை! தப்பு என் மேல் தான். அதான் ஆதி அத்தான் கோபமா இருக்காங்க! மத்தபடி ஆதி அத்தான் இப்படியெல்லாம் சொல்ல மாட்டாங்க. ஏய் னு தான் கூப்பிடுவாங்க!" என பரிந்து கொண்டு வந்தாள்.

"நிவேதா! நீ ரொம்பவும் தான் அவனுக்கு பயப்படுகிறாய்! ஏன் அவன் சொல்வதற்கெல்லாம் ஆடுகிறாய்? அதனால் தான்

உன்னை மிரட்டுகிறான்!" எனப் பொரிந்துவிட்டார். (நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே!)

அப்படியே சிவாவின் வார்த்தைகள் என நினைத்தவள் , அவனிடம் சொன்னது போலவே,

"இல்ல அத்தை! ஆதி அத்தான் ரொம்ப நல்லவங்க, நீங்க நினைப்பது போல பேட் பாய் இல்லை. ஆதி அத்தான் என்ன செய்தாலும் அது என் நல்லதுக்குத் தான்! அவங்க என் அம்மா போல!" எனவும் தாயும், மகனும் ஸ்தம்பித்துப் போயினர்.

'நான் இவளிடம் அன்பாகக் கூட பேசியதில்லை. தன்னை எவ்வளவு உயர்ந்த இடத்தில வைத்திருக்கிறாள்' என அவன் அதிர,

'இவன் மிரட்டலுக்கு பயந்து இந்தப் பெண் எதையும் செய்யவில்லை, உண்மையாகவே இவனிடம் விரும்பி கட்டுப்பட்டிருக்கிறாள்! இந்த தடியன் என்ன செய்தானென்று தான் புரியவில்லை?' என மங்களம் வியந்து போனார்.

என்னதான் நிவேதா ஆதியை அம்மா போல என்று சொன்னாலும் அவன் கோபம் முற்றிலும் நீங்கவில்லை. சிவாவோடு அப்படி என்ன பேச்சு..? இன்று தனியாவே படு! அது தான் உனக்கான தண்டனை. அப்பொழுது தான் எனக்கு பிடிக்காத எதையும் செய்யமாட்டாய். முடிவெடுத்தவனாய் பகலெல்லாம் முறுக்கிக் கொண்டு திரிந்தான்.

ஆதி மனம் மாறுவானா? நிவி தண்டனையில் இருந்து தப்பிப்பாளா?

# அத்தியாயம் 7

அன்று இரவு கண் விழித்துப் படிக்க திட்டமிட்டிருந்தனர் நண்பர்கள். இதையே காரணமாக்கி நிவியின் அறைக்கு போகாமல் தவிர்த்தான் ஆதி. மணி பதினொன்றை நெருங்கி விட்டது. இவன் எப்பொழுது தான் வருவான் என கிச்சனுக்கும் , ரூமிற்குமாக மருகிக் கொண்டிருந்தாள் நிவேதா. இவளது நடமாட்டத்தை உணர்ந்தவன், அவளது அறைக்கு வந்து,

"இன்னும் தூங்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என அதட்டவும்,

"நீங்க எப்போ வருவீங்க ஆதி அத்தான்?" என குழந்தையாய் அவன் முகம் பார்க்க,

"அடி வாங்கப் போற டீ நீ! எக்ஸாமுக்கு படிக்க வேண்டாமா? உன்னைப் போல சாப்பிட்டு சாப்பிட்டு தூங்க சொல்றியா? பேசாமல் படுத்து தூங்கு! இனி தனியாக படுக்க பழகிக் கொள்!" என சிடுசிடுத்தான்.

"எனக்கு தூக்கம் வராது!" என்றவளின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட,

"அப்போ, இப்படி பேய் மாதிரி உலாத்திக்கிட்டே இரு!" என சென்றுவிட்டான். கொஞ்சமும் இளக்கம் இல்லை அவனிடம்.

நள்ளிரவை நெருங்க, நந்தினி கொஞ்ச நேரம் படுக்கிறேன் என்றாள் .

"ஒகே. முப்பது நிமிஷம் பிரேக் எடுத்துக்கலாம்! மச்சான் பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் தான் இப்போ கடை திறந்திருக்கும். டீ வாங்கிட்டு வா! உனக்கு பிஸ்கட் ஏதாவது வேணுமா நந்து?" என்றான் ஆதி.

"ம்...முறுக்கு!" என மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள்,

"நல்லா நொறுக்கிட்டு தூங்கு!" என சிரித்தான் பிரபா.

"போடா!" என ஆதியின் பெட்டில் சுருண்டு கொண்டாள்.

குறிப்பெடுத்துக் கொண்டிருந்த ஆதிக்கு மனம் முழுவதும் நிவியே நிறைந்திருந்தாள். பாடத்தில் கவனம் சிதற,

"இந்த குட்டிப்பிசாசு என்னை படுத்துகிறதே!" என எரிச்சலுடன் மீண்டும் அவள் அறைக்கு வந்தான். அவன் வருவது தெரிந்தும் முழங்காலில் முகம் புதைத்து கண்களை மூடியிருந்தவள் அசையவேயில்லை.

மெல்ல அவளருகே வந்து, அவளது தோள் தொட்டு,

"ஹேய்... போய் ஒழுங்கா பெட்டில் படு!" எனவும், அப்பொழுதும் அசையாமல் அமர்ந்திருந்தாள்.

"இந்த ரோஷத்தில் ஒன்னும் குறைச்சல் இல்லை! உனக்காகத் தான் வந்திருக்கேன்... இப்போ படுக்கப் போறியா இல்லையா?" என உருமவும்,

"நான் எப்படி போனா உங்களுக்கென்ன? நீங்க போய் படிங்க!"

"இத்துனூண்டு வாண்டு மாதிரி இருந்துட்டு பேச்சைப் பார்! நான் பொறாமைப்படுறேனா கோபப்படுறேனான்னு கூட உனக்கு புரியாது. உன்னை பொறுத்தவரை எல்லாம் ஒன்னு தான். இருந்தும் என்னால் அமைதியா இருக்க முடியல..."

‘‘காலையில் அவனோடு என்னடி பேசினாய்? வாய் காது வரை நீண்டதே... அப்படி என்ன சிரிப்பு? நீ என்ன ஒன்னும் தெரியாத பாப்பாவா? நீயே மருந்து போட்டுக்க மாட்டாயோ?" என்றவனின் கரம் அவளது முகத்தை இறுகப் பற்றியிருந்தது.

அந்த அழுத்தம் அவன் எண்ணியது போல் கோபத்தின் பரிணாமமாகத் தான் தெரிந்தது அவளுக்கு.,

"வலிக்குது ஆதி அத்தான்!" எனது தாடையைப் பற்றியிருந்த விரல்களை விலக்க முயன்று தோற்றாள்.

"சிவா அண்ணா தான் ஹெல்ப் பண்ணினாங்க! நான் கேட்கலை. அவங்க கேட்டதற்குத் தான் பதில் சொன்னேன்." இவள் அவனை அண்ணன் என்றதுமே மனதில் இதம் பரவுவதை உணர முடிந்தது. அவனது பிடியின் இறுக்கம் தளர்வதை அவளாலும் உணர முடிந்தது.

"அவன் என்ன கேட்டான், நீ என்ன சொன்னாய்?" இருந்தும் அதே அதட்டல். தலை சாய்த்து, அவன் கரத்தைத் தன் கரங்களால் பற்றியபடி,

"ஆதி ஏன் இவ்வளவு மோசமாக நடந்து கொள்கிறான்? நீ ஏன் அவன் சொல்வதையெல்லாம் கேட்கிறாய்? அவனுக்கு பயப்படாதே! அவன் உன்னை வேலை செய்யச் சொன்னால் 'முடியாது போடா என சொல்லிடு!' என்றார்கள்."

"என்னது?" என அதிர்ச்சியும், கோபமுமாய் அவள் முகத்திலிருந்து தன் கைகளை எடுத்துக் கொண்டவன்,

"நீ என்னடி சொன்னாய்?" தன்னைப் பற்றி தன்னவள் என்ன நினைக்கிறாள்? என அறிந்து கொள்ளும் படபடப்பு வந்து ஒட்டிக்கொண்டது.

(இவளுக்கு எதாவது புரியமா? என்னை பற்றி ஓரளவுக்காவது கணித்திருப்பாளா? இந்த வாண்டிடம் மாட்டிக் கொண்டேனே... )

"ம்... நீங்க நினைப்பது தவறு சிவா அண்ணா! ஆதி அத்தான் ரொம்ப நல்லவங்க. அவங்களுக்கு என்னை ரொம்ப பிடிக்கும். எனக்காக எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து செய்வாங்க தெரியுமா? ஆதி அத்தான் என்னை மிரட்டலை. அவங்க பேசுவதே அப்படித் தான்! என்று சொன்னேன்" என்றாள் சிரித்தபடி.

(ஒன்றுமே தெரியாத சின்ன பெண் என்று நினைத்தேனே ஆனால் சரியாக கணித்திருக்கிறாள்) என வியந்தவன்,

" நான் என்ன செய்தேன்?" என்றான் இதமாக.

" நீங்க தானே அத்தையிடம் பேசி பாட்டு, டான்ஸ் என எல்லா கிளாஸ்ளையும் சேர்த்துவிட்டிங்க. ஸ்கூல் டீமிலும் சேர்த்துவிட்டீங்.... எனக்கு தெரியாத பாடங்களை எல்லாம் தலையில் கொட்டிக் கொட்டி சொல்லிக் கொடுக்கறீங்க. இப்போது கூட எனக்காக...

என்னை தூங்க வைக்கத் தானே வந்தீங்க? நீங்க என் அம்மா மாதிரி ஆதி அத்தான்!" என அவனை கட்டிக்கொண்டாள்.

(ஆமாடி மறக்க முடியாட்டாலும் நினைக்காமலாவது இருப்பியான்னு பார்க்கறேன்... நீ எங்க ரெண்டு பேரையுமே இணை கூட்டு) என்று செல்லமாய் அலுத்துக்கொண்டான் மனதில்.

ஒவ்வொரு ஆணுக்குள்ளும் அன்னையின் சாயலாய் ஓர் பெண் உண்டு. அந்த பெண் உணர்வு விழித்துக் கொள்ளும் போது காதலும், காமமும் கடந்த அன்பே நிறைந்து இருக்கும். ஆதியும் அதை உணர... தன்னவளை இதமாக அணைத்து நெற்றியில் முத்தமிட்டான்.

"தூங்கு! பிரபா வந்துவிடுவான்." என்றான் சிறு சிரிப்புடன்.

"ஆதி அத்தான் நீங்க சிரிக்கும் போது ரொம்ப அழகா இருக்கீங்க!"

"போதுமே... கொஞ்சம் இளகினா உன் வேலையை ஆரம்பிச்சுடுவியே! பேசாமல் படு." என மீண்டும் கோப முகமூடியைப் போட்டுக் கொண்டான்.

அவளும் எப்பொழுதும் போல் முகம் வாட, அவனுக்கு முதுகு காட்டி படுத்துக்கொண்டாள். அவள் தூங்கியதை உறுதி செய்துகொண்டு வெளியே வந்தவன், அவளுக்காக நண்பர்களிடம் தன் புதிய முடிவை அறிவித்தான்.

இனி பத்து மணி வரை படித்துவிட்டு தூங்கிவிடுவோம், மீண்டும் காலை மூன்று மணிக்கு எழுந்து படிக்கலாம். எனவும்,

"ஆமாம், எனக்கு மிட்னயிட் படிப்பது கஷ்டமாகத் தான் இருக்கு!" என முந்திக் கொண்டாள் நந்தின.

"எல்லா நேரமும் உனக்கு படிப்பென்றால் கஷ்டம் தான்!" என சிரித்தனர் மற்ற இருவரும். அதன்படி ஆதியின் தந்தை மொட்டைமாடியில் சிறிய கீத்துக் கொட்டகை போட்டுக் கொடுத்தார்.

இரவு படித்துவிட்டு, ஆதியும் பிரபாவும் அங்கேயே படுத்துவிட, நந்தினி ஆதியின் அறையில் உறங்கினாள்.

பிரபா உறங்கியதும், வழக்கம் போல கீழே வந்து அந்த குட்டிப் பெண் உறங்கும் வரை அவளோடு இருந்தான் ஆதி.

அதன் பிறகு அவனோடு விளையாட அழைத்துச் செல்ல மறுத்துவிட்டான்.

அவளும் சிவாவோடு பேசமாட்டேன் என்று கூட சொல்லிப் பார்த்தாள். அவன் எதையும் ஏற்பதாக இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும் பெரிய பெண்ணாகி விடும் நிலையில் இருந்ததால், அத்தையும் போக வேண்டாமென்று மறுத்துவிட்டார்.

அந்த வார இறுதியில் பள்ளியில் மற்றவர்களுக்கு படிப்பில் உதவ செல்வதற்காக நந்தினி இளம் பச்சை வண்ண டாப், அடர் பச்சை வண்ண ஃபுள் மிடி. சிறிய பச்சை நிற ரோஜா தோடு, பச்சை நிறக் கண்ணாடி வளையல்கள், பச்சை நிற ஹீல்ஸ் அணிந்து பசுங்கொடி போல் நண்பர்களுடன் கிளம்ப,

"சொல்வதை கேட்கவேமாட்டியா நந்து? உனக்கு வக்காலத்து வாங்க இவன் வேறு வந்துவிடுவான்... " அவன் அவளது ஆடை அலங்காரத்தைத் தான் சொல்கிறான் என தெரிந்த போதும் பிரபாவும், நந்துவும் மூச்சேவிடவில்லை.

பள்ளியில் இவளைப் பார்த்த வாண்டு ஒன்று,

"ஹாய் ஸ்வீட்டி அக்கா! நீங்க க்ரீன் லீடரா? சூப்பரா இருக்கீங்க!" எனவும் நந்தினி ஆதியை பார்த்து புருவம் உயர்த்த,

"இல்ல... அவ வன தேவதை!" என்றான் பிரபா.

"இல்ல இவன் தப்பா சொல்றான்.. இவ எங்க செல்ல... குட்டி..." ஆதி பாராட்டப் போகிறான் எனக் கண்களை விரித்து, காதுகளை தீட்டி முகமெங்கும் புன்னகை விரிய அவனைப் பார்க்க,

"தே... தேவாங்கு!" அட்டகாச சிரிப்புடன் சொன்னவனின் முதுகில் ஒரு அடியை போட்டவள்,

"இவன் வன தேவதைன்னு சொல்றான்... நீ தேவாங்குன்னு சொல்ற... ரெண்டு பேருமே பேட். உங்களுக்கு கண்ணு கோளாறு... போடா உங்க கூட பேசமாட்டேன்..." காலை தாரையில் உதைத்து உதடு சுழிக்க,

"நான் தான் ஆரம்பத்தில் இருந்து சொல்றேனே பிரபாக்கு கண்ணு கோளாறு. அதான் உன்னை தேவதைன்னு சொல்றன்னு நீ தான் கேக்கல... இன்னைக்கு தெரிஞ்சுக்கிட்டியா..." என கலாய்க்க,

"போதும் ஆதி! அவன் போறான் லூசு... நீ கோபப்படாத நந்தும்மா! எல்லாம் பச்சை கலர்ல போட்டிருந்தியா கொஞ்சம் வித்தியாசமா சொல்லலாமேன்னு தான் வன தேவதைன்னு சொன்னேன். இவன் பேச்சை நம்பாத." பட்டென தோழியை சமாதானம் செய்துவிட்டான் பிரபா.

"ஆதி அண்ணா நீங்க ஏன் எங்களுக்கெல்லாம் சொல்லி தரமாட்டேங்கிறிங்க எப்போதும் ஸ்வீட்டி அக்கா தான்

சொல்லித்தராங்க...?" கேள்வி கேட்ட ஆறாம் வகுப்பு வாண்டிடம்,

"சரி, இன்னைக்கு நாங்க ரெண்டு பேருமே உங்களுக்கு சொல்லித் தரோம்." என மரத்தடியிலேயே ஆதியும் பிரபாவும் அமர்ந்துவிட,

"அப்போ நான் கிளாஸ்க்கு போறேன்!" விடைபெற்றவளிடம்,

"வேறு எங்கு போனாலும் சொல்லிட்டு போ நந்து." என்ற ஆதிக்கு பழிப்பு காட்டிவிட்டு மாடியை நோக்கி வர,

இவர்களையே விழியெடுக்காது பார்த்துக் கொண்டிருந்த அந்த கண்களுக்கு சொந்தக்காரன் முதல் மாடியில் இருந்து அவசரமாய் இறங்கி வந்தான். அவளிடம் இன்றே காதலை சொல்லி விடும் வேகம் அவனிடம். ஏனெனில் இதுபோன்ற சந்தர்ப்பம் கிடைப்பது அரிது என்று தெரிந்து வைத்திருந்தான்.

அதே மாடிப்படியில் தான் துள்ளலுடன் ஏறிக் கொண்டிருந்தாள் நந்தினி. மாடிப்படியின் வளைவில் இருவரும் முட்டிக் கொள்ள.... விழ இருந்தவளின் தோள் பற்றி நிறுத்தினான் அவன்.

"சாரிம்மா, நான் எதிர்பார்க்கலை" என்றான் ஆச்சர்யமும் அதிர்ச்சியுமாய். அவன் முகபாவத்தில் என்ன கண்டாளோ... இயல்பாய் அவன் கை பற்றி தன் தோளில் இருந்து இறக்கியவள்,

"இட்ஸ் ஓகே! உன்னால ஐயம் சேஃப்! தேங்க்ஸ்!" நன்றியை குரலில் தேக்கிச் சொன்னவள்,

"நீ என்னை பார்த்து பயந்துட்டியா?" என்றாள் குறும்பாக.

"ஏன் கேட்கிற?"

"உன் முகம் சட்டு சட்டுன்னு மாறுச்சா... அதான்!"

"நீ இங்கு வருவேன்னு எதிர்பார்க்கலை. அதுவும் உன் நண்பர்கள் இல்லாமல்... அதனால் கொஞ்சம் ஆச்சர்யம்... இந்த ட்ரெஸ்ல உன்னைப் பார்த்தால் குட்டி தேவதை வழி மாறி வந்தது போல தோணுச்சு அதான் பயங்கர அதிர்ச்சி!" என்றான் ஆழ்ந்த குரலில்.

ஒருபக்கம் இவன் தன்னை தேவதை என்று சொன்னதில் மகிழ்ச்சி என்றாலும் மறுபுறம் அவளது உள்ளுணர்வு அவனை உற்று கவனிக்க சொன்னது. அவன் கண்களை உற்று நோக்கியவளுக்கு உண்மையை உணர்ந்து சொல்வதாய் தான் தோன்றியது.

தற்காப்புணர்ச்சி தலைதூக்க அவனிடமிருந்த்து விலகி வேகமாய் படியேறினாள். இரண்டு படிகள் தான் கடந்திருப்பாள், அவளது பாவாடையிலேயே காலை வைத்து அது பின்னிவிட கீழே விழப்

போகும் வேளையில் பின்னிருந்து அவளை அரணாய் தாங்கி நின்றான் அவன்.

"ஆர் யூ ஓகே பேபி?" கேட்டவனின் குரலில் அக்கறை மட்டுமே முழுதாய். திரும்பி அவனைப் பார்க்க கூச்சமாய் இருந்தது நந்தினிக்கு.

(ஆதி சொன்னது சரிதான் இந்த ட்ரெஸை இங்கு போட்டிருக்கக் கூடாது. கூடுதல் கவனத்தோடு இருந்திருக்கணும் இப்படி இருமுறை விழப் பார்த்தேனே... இவன் மட்டும் இல்லாவிட்டால் கீழே உருண்டிருப்பேன்...) என நினைத்தவள் உடல் தானாய் சிலிர்க்க, அதை உணர்ந்தவனாய்,

"ரிலாக்ஸ் ஸ்வீட்டி! நான் இருக்கேனே உன் பின்னால்! நீ விருப்பப்பட்டால், உன் வாழ்நாள் முழுவதும் உன்னோடு சேர்ந்து வரவும், உன்னைத் தாங்கவும் தயாரா இருக்கேன்." என்றான் அவள் காதின் ஓரம் தன் காந்தக் குரலில் பிரவீன். (அடிச்சான்யா சிக்ஸர்!)

ஒற்றை ரோஜா இல்லை, கவிதை இல்லை, பரிசு இல்லை... ஏன் டெடிபியர் கூட இல்லை தன்னை மட்டுமே நம்பி அழகாய் காதல் சொன்னான்.

ஒரு நிமிடம் உலகம் உறைந்தது அங்கே... அவன் குரலின் காந்தம் அவளை இழுத்துக் கட்டினாலும், சட்டென மீண்டுவிட்டாள். நிதானமாய் திரும்பி நின்று அவனை மேலிருந்து கீழாய் உற்றுப்பார்த்தாள்...

அவனது கண்கள் கண்ணியதோடு அவள் முகத்தில் மட்டுமே நிலைத்திருந்ததை உணர்ந்தாள். ஒரு கையை பான்ட் பாக்கெட்டில் மறு கையை மாடிப் படியின் கைப்பிடியில் வைத்தபடி நின்றிருந்தான். அப்பொழுதுதான் அவன் தன்னை தொடவேயில்லை. அவன் மீது தான் தான் சாய்ந்திருந்தோம் என்பதை கண்டு கொண்டாள்.

"எனக்கும் குட் டச் பேட் டச் தெரியும் ஸ்வீட்டி!" குறுஞ்சிரிப்புடன் சொன்னான்.

"நீ... நீ... என்னை... லவ்... பண்றியா?" வார்த்தைகள் திணறலாக வந்தாலும் கண்கள் அவன் கண்களிலேயே நிலைத்திருந்தது.

"நான் விளையாட்டுக்கு சொல்றேன்னு நினைக்கிறியா? உன்னை நான் இந்த ஸ்கூலுக்கு வந்ததில் இருந்து கவனிக்கிறேன். அதாவது போன வருசத்தில் இருந்து!

உன் கோபம், சந்தோஷம், குறும்புத்தனம், அசட்டுத்தனம், குழந்தைத்தனம் எல்லாத்தையும் பலமுறை கண்டு ரசிச்சிருக்கேன். உங்க நட்பைக் கண்டு வியந்திருக்கேன். அதில் நானும் இணைய முடியுமான்னு ஏங்கியிருக்கேன். அவர்கள் மீதான உன் அன்பை... உன் மீதான அவர்கள் அக்கறையைப் பார்த்து பிரமிச்சிருக்கேன்.

நீ யோகா கிளாஸ்ல டான்ஸ் ஆடினதையும், பி.டி பீரியட்ல மெடிடேட் பண்றதையும் பார்த்து வியந்திருக்கேன். தமிழம்மாக்கு ரொமான்டிக் லுக் விட்டது, உனக்கு பிடித்த பூக்களை பறிக்கவிட்டதுக்காக வாட்ச்மென் தாத்தாவுக்கு பறக்கும் முத்தம் பரிசளித்தது, ரெக்கார்ட் நோட்டில் பயாலஜி சாரையும், பிசிக்ஸ் சாரையும் லாரல் அண்ட் ஹார்டி போல வரைஞ்சு வச்சிருந்ததையும் பார்த்து ரசிச்சிருக்கேன்.

உனக்கு மழையில் நனைஞ்சுக்கிட்டு குச்சி ஐஸ் சாப்பிட பிடிக்கும், ஐஸ் கிரீம் மேல சூடான குலாப் ஜாமூன் வைத்து சாப்பிட பிடிக்கும், அம்மவோடு செல்ல சண்டை போடப் பிடிக்கும். அப்பாவை நாட்டமையாக்கி கலாய்க்க பிடிக்கும், ஒளிவு மறைவின்றி நண்பர்களிடம் அனைத்தையும் பகிர்ந்து கொள்ளும் உன் வெள்ளை மனம் எனக்கு ரொம்ப பிடிக்கும்.

உன் கடைக்கண் பார்வைக்காக தவமிருந்த என்னை நிமிர்ந்து கூட பார்க்காத உன்னை ரொம்ப ரொம்ப பிடிக்கும். எனக்குத் தெரிந்து உன் நண்பர்களை தவிர, நீ உற்று நோக்கும் முதல் ஆண் நான் தான். அதைக் கூட ஒருசில வினாடிகளுக்கு மேல உன்னால் பார்க்க முடியல... இதுவும் எனக்கு பிடிச்சிருக்கு." அவனை மறுப்பதற்காகவே.,

"இல்ல, நான் நல்லா சைட் அடிப்பேன் தெரியுமா?"

"தெரியுமே... உன் நண்பர்களை சைட் அடிக்கும் பெண்களை நீ சைட் அடிப்பாய் "

"நான் நல்ல மார்க் போடுவேன்!"

"உன்னிடம் வம்பளக்கும் பையனின் முகத்தில் தானே? ஆதியும், பிரபாவும் அடித்து மிரட்டிய பின், அவர்கள் இருபுறமும் அவன் கையைப் பிடித்து முறுக்கியிருக்க... நீ அவன் எதிரில் நின்று பஞ்ச் டையலாக் பேசி உன் மோதிரத்தால் அவன் கன்னத்தில் போட்டியே ஒரு மார்க்... ஐ லைக் இட் ஸ்வீட்டி!"

"ஏய்! நீ என் பின்னால் சுத்துறதைத் தான் வேலையாவே செஞ்சியா? என்னைப் பத்தி எல்லாம் தெரிஞ்சு வச்சிருக்க... இது சரி இல்லையே..."

"ஹா ஹா... ஸ்வீட்டிக்கு கோபமா? இல்ல... வெட்கமா?"

"நான் ஸ்வீட்டி இல்ல... ஹாட்டின்னு உனக்கு காட்டுறேன். ஆதி... பிரபா..." என கத்தியபடியே நகரப் போக... அவள் கரம் பிடித்து தடுத்தவன்,

"நீ நாட்டியும் கூட.... உன் கோபத்தையெல்லாம் என் கிட்ட மட்டும் காட்டு. எதுக்கு ஆதி, பிரபாவையெல்லாம் இழுக்கிற? என்கிட்ட பயமா?"

"ப..பயமா? எ..னக்கா? இல்லையே..." சொல்லும் போதே குரல் வெடவெடத்தது. அவள் பயத்தையும், பதட்டத்தையும் உணந்தவன்... அவள் கரத்தை விட்டுவிட்டான்.

"இட்ஸ் ஓகே பேபி! நீ ரொம்ப தைரியசாலி தான். எங்கே, என் கையை பிடித்து இழுத்துக் கொண்டு போய் இவன் எனக்கு பிரபோஸ் பண்றான்னு உன் நண்பர்களிடம் சொல்லு பார்ப்போம்!" என ஒற்றை புருவத்தை ஏற்றி இறக்கினான் சவாலாய். சில நொடி யோசனைக்குப் பின்,

"நீ தான் என் ரெக்கார்ட் நோட்டில் படம் வரைத்து வைத்தா?"

குறுஞ்சிரிப்புடன் கண்களை மூடி திறந்து ஆமோதித்தான்.

"நீ தான் ஸ்வீட்டி மேல பலூன் காட்டினியா?" அதற்கும் சிரிப்புடனேயே

'ஆம்' என தலையசைக்க,

"நீ ஸ்வீட்டியை தானே லவ் பண்ணற? அப்புறம் ஏன் என்னை லவ் பண்றேன்னு சொல்ற?" அவளது அப்பாவித்தனத்தை ரசித்தவன்,

"என் ஸ்வீட்டி நீ தான். அது உனக்கான ப்ரபோசல் தான். நீ... உன் ஸ்வீட்டிக்குன்னு நினைச்சுட்ட" குறும்பு மின்ன சொன்னான்.

"எனக்கு காதல் பிடிக்காது. அது என்னன்னு கூட தெரியாது."

"காதல்ங்கிறது அன்பு என்கிற உணர்வு தான். அது இந்த வயசில், நிமிஷத்தில், கணத்தில்,உருவத்தில் தான் வரணும்னு எந்த கண்டிஷனும் கிடையாது. அந்த உணர்வை வற்புறுத்தி வரவைக்க முடியாது. அது தானா வரணும். எப்போ வரும்ன்னு கூட தெரியாது. ஆனால் நிச்சயமா என்னைத் தீண்டிய காதல், உன்னையும் ஒரு நாள் தீண்டும். அது என் மேல் தோன்றினால் நான் லக்கி!"

"உன்மேல எனக்கு காதல் வரலைன்னா திட்டுவியா? கோபத்தில் ஏதாவது செய்வியா?" அவளது கண்களில் அச்சத்தை கண்டவன் வருத்தத்துடன்,

"என்னைப் பார்த்து பயப்படாதே பேபி. நான் உனக்கு எந்த நாளும், எந்த நிலையிலும் கெடுதல் செய்ய மாட்டேன். என் காதல் உயிரை விரும்புவதேயன்றி உயிரை எடுப்பதில்லை. நீ என் காதலை மறுத்தால் எனக்கு வலிக்கும். என் உயிர் வரை வலிக்கும். அந்த மறுப்பு ரொம்ப வருத்தத்தை கொடுக்கும்.

நான் அன்பு கொண்ட, ஆசை வைத்த நீ எனக்கு இல்லை என்றால்... அதை தாங்குவது கஷ்டம். ஆனால் நிச்சயம் தாங்குவேன். உனக்காக உயிர் வலி பொறுப்பேன். எனக்குத் தோன்றிய உணர்வு, உனக்கு என் மீது வரலைன்னா அது உன்

தப்பில்லை. என் தப்புமில்லை. இந்த உணர்வை புரிய வைக்க முடியாது. உணரணும்... அதிலும், நீ இன்னும் குழந்தைத்தனம் மாறாத வெகுளி.

உண்மையான நேசம் தண்டிக்காது. பயப்படாதே, நீ மறுத்தாலும் நான் உன்னை வதைக்க மாட்டேன். விரும்ப எனக்கு உரிமை இருப்பது போல மறுக்க உனக்கும் சம உரிமை இருக்கு." என தெளிவாகச் சொன்னான்.

வியாபாரக் குடும்பத்தில் பிறந்து, சிறிய வயதிலிருந்தே மற்றவர்களை ஊன்றிக் கவனிக்க பழக்கிவிட்டதால் தோன்றிய தெளிவா, இல்லை மற்றவரின் சறுக்கலை கண்டு சுதாரிக்கும் அறிவா.... சரியான நேரம் வரும் வரை காத்திருக்கும் பொறுமையா... ஏதோ ஒன்று அல்லது இவை அனைத்தும் நிச்சயம் அவனை மற்றவரிடம் இருந்து தனித்துக் காட்டியது உண்மையே!

"நான் இல்லனு சொல்லிட்டா உனக்கு இன்னொரு பொண்ணு மேல காதல் வருமா?"

"ம்... எனக்கு தெரியல."

என் காதல் அமரக்காதல். அது ஒருமுறை தான் பூக்கும். உன்னை நினைச்சுக்கிட்டே வாழ்த்திடுவேன்னு கதை சொல்லாமல், உண்மையாய், வெகு தெளிவாய் சொன்னான். தன் மனநிலையை பொய் இன்றி ஒத்துக் கொண்டான். இதுவரை

ஆதி தான் விவரமானவன் என எண்ணியிருந்தவளுக்கு, இப்போது பிரவீனும் அவன் இடத்திற்கு போட்டியாளனாய் தோன்றினான்.

"இப்போ நான் என்ன செய்யணும்?"

"இப்போ நீ எதுவும் செய்ய வேண்டாம். இன்னும் மூன்று வருடங்கள் கழித்து நம் கல்லூரி படிப்பு முடிந்ததும் ஓரளவிற்கு முதிர்வு அடைந்திருப்போம்... ஹயர் ஸ்டடிசுக்கு ஸ்டேட்ஸ் போறேன். படிப்பு முடிந்ததும் உன் வீட்டுக்கே வரேன். அப்போ சொல் உன் பதிலை.

ஒருவேளை உனக்கு என்னை பிடித்திருந்தால்... உன் கனவுகளுக்கு உறுதுணையாய் நான் உன்னோடு வருவேன்... என் வாழ்நாள் முழுவதும் உன் கணவனாய். என் கனவையும் லட்சியதையும் அடைய எனக்கு ஆறேழு வருஷங்கள் ஆகும். அதன் பிறகு தான் திருமணம்."

"உன் கனவு தான் என்ன?" ஆச்சரியமாய் விழி விரியக் கேட்டாள்.

"நான் பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்ட் MR. தர்மராஜின் மகன் என்ற நிலை மாறி, என் தந்தை தான் அவர் என்னும் நிலையை அடைய வேண்டும். எங்கள் குடும்பத் தொழிலை வெளிநாடுகளிலும் தொடங்கி, சிறப்புற நடத்த வே ண்டும். எங்களோடு சேர்ந்து ஆயிரம் குடும்பங்கள் இணைந்து உழைத்து

மேன்மை அடையனும். என் வெற்றியை கொண்டாட, என்னை உற்சாகப்படுத்த நீ வேண்டும்!" என்றான் கண்களில் கனவு மின்ன.

"பிரவீன் உன் லட்சியம் வெற்றியடைய வாழ்த்துக்கள்." என அவன் கரம் பற்றிக் குலுக்கியவள், தன் நண்பர்களை நோக்கிச் செல்ல... கன்னம் குழிய சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான் அந்த கண்களுக்கு சொந்தக்காரனான பிரவீன்.

பார்ப்போம்... நந்தினிக்கு காதல் மலருமா? அதுவும் பிரவீன் மீது மலருமா? இவர்கள் இணைவார்களா?

# அத்தியாயம் 8

"ஆதி... பிரபா..." என கூவியபடி ஓடிவரும் தோழியைக் கண்டு மிரண்டு போயினர் இருவரும். நண்பர்கள் இருவரின் கரத்தையும் பிடித்துக் கொண்டவள், மடை திறந்த வெள்ளமாய் பிரவீன் பேசியதையெல்லாம் சொல்லிமுடித்து அவர்கள் முகம் பார்க்க,

"ஆதியின் பார்வை மெச்சுதலையும், பிரபாவின் பார்வை ஆச்சரியத்தையும் காட்டின. நந்துவை தவறான ஒருவன் தொடரவில்லை என்பதிலேயே பெரும் நிம்மதி அடைந்த ஆதி,

"நீ என்ன நினைக்கிறாய் நந்து?" என அவள் விழி பார்க்க,

"ஐ லவ் யூன்னு சொல்லாமல் கூட பிரபோஸ் பண்ண முடியுமான்னு ஆச்சரியமா இருக்கு ஆதி!" என விழி விரிக்க, அவளது சிறுபிள்ளை தனத்தில் வாய் விட்டு சிரித்த இருவரும் அவளை தோளோடு அணைத்துக் கொண்டனர்.

"பிரவீன் சொன்னது போல் இன்னும் மூணு வருசம் சென்ற பிறகு உனக்கு என்ன தோணுதோ அதை சொல். இப்போ இதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு எப்போதும் போல் குட்டி குரங்காய் இரு!" என சிரிக்க,

"போடா! எத்தனை வருஷமானாலும் காதல் கல்யாணமெல்லாம் எனக்கு செட்டாகாது. அவன் வந்தால் பார்க்கலாம்..." என தன் ஸ்வீட்டியை நோக்கி சென்றுவிட்டாள்.

"செம லவ் மச்சான்!" பிரபா அசந்து தான் போனான்.

"இவனால் நந்துவுக்கு எந்த தொந்தரவும் இருக்காது மச்சான் அது போதும் விடு!" என ஆதியும் ஏற்றுக் கொண்டான்.

இதோ பனிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இறுதி தேர்வும் வந்துவிட்டது. சிறப்பாகவே செய்துவிட்டனர் நண்பர்கள் மூவரும்.

ஆதிக்கு பரீட்சை முடிந்ததும் போதும்... முழு நேரமாக நிவேதாவை படிக்க வைப்பதில் தன் கவனத்தை செலுத்தினான். பாவம், நிவேதா தான் அவனிடம் மாட்டிக் கொண்டு விழித்தாள்.

‘‘நாளை கணக்கு பரீட்சையை வைத்துக் கொண்டு கணக்கு போடத்தெரியவில்லை என்கிறாயே நீ எப்படி பாஸ் பண்ணுவாய்?" என தலையில் கொட்ட, நிவியின் கலங்கிய கண்களை கண்ட மங்கா,

"ஆதி பெண் பிள்ளையை அடிக்காதே! அவள் பாசாகவில்லை என்றாலும் பரவாயில்லை! நீ ஒன்றும் அடித்து சொல்லித் தர வேண்டாம்!" எனவும்,

"நான் ஒன்னும் அடிக்கவில்லை அம்மா... கொட்டினேன்! என்னிடம் படிப்பதென்றால் இப்படித் தான் இருக்கும். தத்தி!

ஒன்றுமே தெரியலை, எனக்கென்ன... இப்படியே படித்தால் டீச்சர் பெரிய முட்டையா போட்டுக் கொடுப்பாங்க, அத்தையும் மருமகளுமா சேர்ந்து பொரித்து சாப்பிடுங்கள்!"

"நாங்க என்னவோ பண்றோம். அடிப்பதென்றால் நீ சொல்லித் தர வேண்டியதில்லை!" என்றார் கறாராக.

"போம்மா... போ! உன் அத்தை கணக்கில் புலி! அவர்களிடமே கேட்டுக் கொள்!" என எழுந்துவிட்டான். சட்டென,

"ஆதி அத்தான்!" என அவன் கரங்களைப் பிடித்தவளின் விழிநீர் அந்த குண்டு கன்னங்களில் இறங்கியது.

"ஏய்! இப்போ ஏன் அழுகுற? உன் அத்தை என்னைத் திட்டணுமா? மூஞ்சியைப் பார்... கொஞ்ச நாட்களாக ஓய்ந்திருந்தாய் மறுபடி ஆரம்பித்து விட்டாயா? இம்சை... இம்சை! அழுகையை நிறுத்துடீ! "

"ஆதி... ஸ்டாப் இட் ! உன் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நானும் பார்த்துக்கிட்டே இருக்கேன்... ஏய் என்கிறாய் , டீ என்கிறாய் எத்தனை முறை சொல்வது? அவளை அப்படி அழைக்காதே என்று! அவள் என்ன நம் வீட்டு வேலைக்காரியா? எந்நேரமும் வேலை வாங்குகிறாய்? நம்மை நம்பி இருக்கிறாள் என்பதற்காக இப்படியெல்லாம் நடந்து கொள்ளாதே. இட்ஸ் டூ மச்! தோளுக்கு மேல் வளர்ந்துவிட்டாயே

எனப் பார்க்கிறேன், இல்லை நாலு சாத்து சாத்திவிடுவேன்!" என முறைக்கவும்,

"ஆமா, அவள் என் பர்சனல் வேலைக்காரி தான்!" என முனகினான்.

"என்ன சொன்னாய் ஆதி?" மீண்டும் அதே கோபம் .

"இவ விஷயத்தில் இனி நான் தலையிடல. போதுமா?"

"ஏன்டா இப்படி இருக்கிறாய்? ஒன்று ஓவர் ஆக்ட் பண்ணுவாய்!இல்லை தண்ணீர் தெளித்து விடுவாய்! உன் அப்பா கூட என்னை அப்படி கூப்பிடுவதில்லை. நீ எங்கிருந்து கற்றாய்?"

"சும்மா என்னை வம்பிழுக்காதீங்க அம்மா! இந்த இம்சைக்கு இந்த மரியாதை போதும்! எனக்கு இவளை டீ போட்டு பேசுவது தான் பிடிச்சுருக்கு! அப்படி பேசக் கூடாதென்றால் நான் இவளோடு பேசவே இல்லை! ஆளை விடுங்கள்!" என்றவனிடமும் கோபம் இருந்தது.

"டீன் ஏஜ் பையன் அப்படித் தான் இருப்பான்! விடு மங்கா! அவன் அத்தை மகளைக் கூப்பிடாமல் வேறு யாரை கூப்பிடப் போகிறான்? முறைப் பிள்ளைகளிடம் இதெல்லாம் சகஜம்!" என்று மகனுக்கு சாதகமாய் பேசிய கணவரை முறைத்தவர்,

"சரியான பட்டிக்காட்டான்கள்!" எனத் தோளில் முகவாயை இடித்துக் கொண்டு நகர்ந்துவிட்டார்.

"ஆதி, அம்மாவிடம் குரல் உயர்த்திப் பேசாதே. வாயிலில் வண்டி நிறுத்தும் போதே கேட்கிறது உங்கள் சண்டை! அமைதியாக பேசிப் பழகு!" என்று இதமாகக் கூறிய தந்தையை,

' நீங்கள் நல்லவரா கெட்டவரா? ' என்பது போல் பார்த்து வைத்தான். (தெரியலையே..ப்பா உங்க ரெண்டு போரையும் சமாளிக்கறதுக்குள்ள நான் யார்னு எனக்கே மறந்துடும் போல இருக்கு!)

ஒரு வழியாக தெரியாத கணக்குகளை எல்லாம் அவனிடம் கற்றுக் கொண்டுவிட்டு எழுந்த போது,

"அடுத்த தெரு சுரேகாவிற்கு இன்று மெகந்தி பங்ஷன் இருக்கு. அதையும் கல்யாண மண்டபத்திலேயே செய்வாங்க. நானும், மாமாவும் போகிறோம். நீ படித்து முடித்துவிட்டால் கிளம்பேன்!" என்று வாஞ்சையுடன் மங்கா கூற,

"அம்மா... அவள் இன்னும் படித்து முடிக்கவில்லை. இப்பொழுது தான் தெரியாததை கற்றுக் கொண்டிருக்கிறாள். இனி தான் மற்றதை ரிவைஸ் பண்ணனும். சும்மா.... நீங்க போற இடத்துக்கெல்லாம் இவளையும் கூட்டிப் போகாதீங்க!

நல்ல காலம், நான் பெண் பிள்ளையாகப் பிறக்கவில்லை. அலங்காரம் பண்ணி டிஸ்பிலே பண்ணுவதில் உங்களை அடிச்சுக்கவே முடியாதும்மா!" என சிரிக்கவும், (ஹாஹா... ஒய் பிளட்... சேம் பிளட்!)

"பாருங்கப்பா! இந்த தடியன் இவளை எப்படி கண்ட்ரோல் பண்ணுறான்?" என மீண்டும் ஆரம்பிக்க, இந்த அத்தையும் அத்தானும் எப்பொழுதும் தனக்காக முட்டிக்கொள்கிறார்களே எனது தோன்றவும் ,

"நிஜம் தான் அத்தை! நான் இன்னும் படித்து முடிக்கவில்லை. நீங்கள் போய் வாருங்கள். நான் கல்யாணத்திற்கு உங்களோடு வருகிறேன்!" என்றாள் சமயோசிதமாக. (ஏன்.... நல்லாதானே போயிட்டுருந்தது... ஆதியை திட்டக் கூடிய ஒரே ஆளு அவங்கம்மா... உனக்காகத் தானே பேசுறாங்க...)

"அதைச் சொல்லு! அம்மா ஹாப்பியா?நீ திருந்த மாட்டடீ!" என்றவனிடம் கோபம் காணாமல் போயிருந்தது. சிரித்தபடியே பெற்றோர் வெளியேறிட, அவளுக்கு முன்னாள் ஆதியும் ஒரு புத்தகத்தோடு அமர்ந்துவிட்டான் .

'இவனுக்குத் தான் பரீட்சை முடிந்துவிட்டதே , இன்னும் ஏன் படிக்கிறான்?' எனும் பெரும் சந்தேகம் கிளம்ப,

"ஆதி அத்தான் ..."

"ம்..." என்றவன் புத்தகத்திலிருந்து கண்களை எடுக்கவேயில்லை. இவன் மட்டும் எப்படி தான் படித்துக் கொண்டேயிருக்கிறானோ... போரடிக்காதா? என தன் படிப்பை விடுத்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள், மீண்டும்

"ஆதி அத்தான்!" என அழைக்க,

"என்ன டீ?" அவனது வழக்கமான அதட்டலுடன் கேட்க, அவ்வளவு தான்... பவ்யமாக பம்மியவள்,

"இல்லை... உங்களுக்கு தான் எக்ஸாம் முடிந்துவிட்டதே, பின்னே ஏன் படிக்கிறீங்க?" என்று கேட்டுவிட்டு நாக்கை கடித்துக் கொண்டாள்.

"அது சரி, நீ தான் படிக்கமாட்டாய்! படிக்கிறவனையும் படிக்க விட மாட்டாயா?" என புத்தகத்தில் பென்சிலை வைத்து மூடியவன்,

"ஏய் தத்தி, எனக்கு எண்ட்ரன்ஸ் எக்ஸாம் இருக்கு! அதற்காகத் தான் படிக்கிறேன்." எனவும்,

"எதுக்கு?" என்றாள் மொட்டையாக.

"ம். டாக்டருக்கு படிக்கணும்னா எக்ஸாம் எழுதணும்!" இது கூட தெரியாமல் இருக்கிறாளே என்ற கடுப்புடன் மொழிந்தான்.

"ஓ! ஆதி அத்தான்... அப்போ நீங்க டாக்டராகிடுவீங்களா?" எனக் கண்களை விரித்தாள்.

"ஆமா. உனக்கு உடம்பு சரியில்லை என்றால் காசு வாங்காமல் ஊசி போடுகிறேன், ஓகே வா?" என சிரித்தான்.

"ஐயோ! ஊசியெல்லாம் வேண்டாம். மாத்திரை... அதுவும் வேணாம். இனிக்கிற மாதிரி சிரப் இருந்தாக் கொடுங்க. போதும்! " என அவள் சீரியஸாக சொல்ல, மிகவும் சிரமப்பட்டு சிரிப்பை அடக்கியவன்,

"இந்த குலாபிஜாமுன், ரசகுல்லா இதில் இருக்குமே சிரப்... அது மாதிரி ஓகேயா?" என்றான்.

"ம்.." என தலையாட்டியது அந்த வாண்டு.

"கழுதை... உனக்கென்ன விருந்தா வைக்கிறார்கள்? மருந்து கசக்கத் தான் செய்யும் மண்டு! வேறு வழியே இல்லை. நீ சாப்பிட்டு தான் ஆகணும்!" என்றான் சின்ன சிரிப்புடன்.

"உங்க காலேஜ் எங்கிருக்கு?"

"மதுரை, சென்னை, திருநெல்வேலி... எங்கு கிடைக்கிறதோ அங்கு போக வேண்டியது தான்!" என்றவனின் குரல் உற்சாகம் சுமந்திருந்தது. அவ்வளவு தான், அரண்டு போனவளாய்,

"அப்பொழுது இங்கிருக்கமாட்டானா? இவனில்லாமல் நான் எப்படி? " எனும் பெருங்கவலை மனதில் குடிபுக , வயிற்றில் ஏதோ பிசைவது போல், சட்டென உடல் பலவீனமானது போல் தோன்ற , கண்களை இருட்டிக் கொண்டு வரவும் சுருண்டு படுத்துவிட்டாள். பதறிப் போனான் ஆதி.

"ஏய்... என்னாச்சு? என்னை பார்! நிவேதா... நிவேதா!" என அவள் கன்னம் தட்ட ,

"ஐ ... ஆதி அத்தான் தான் உன்னை நிவேதான்னு கூப்பிடுறாங்க, எஸ் சொல்லு... சொல்லு நிவி!" என மனம் துள்ளாட்டம் போட, அதை செயல்படுத்த முடியாமல் அவளது மூளையும், உடலும் தடை செய்தன.

சில்லென்ற தண்ணீர் முகத்தில் பட, இமைகளை கொட்டி மெல்ல எழுந்து அமர்ந்தாள்.

"என்னாச்சு டீ... பசிக்குதா? ஸ்கூலில் இருந்து வந்த பிறகு எதுவும் சாப்பிடலையா?" என்றவனிடம் இருந்த கனிவு புதிதாகத் தோன்ற ,

"அப்போ பசியில்லை... இப்போ கூட எனக்கு பசியில்லை ஆதி அத்தான்!" என்றவளுக்கு மயங்கியதன் காரணத்தை அவனிடம் சொல்ல பயமாக இருந்தது.

"சரி, கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு. அப்பறம் படிக்கலாம்." என்றான் பெரிய மனதுடன். தன்னறைக்குச் சென்று படுத்தவளை மனதோடு சேர்ந்து உடலும் வருத்த, தனது பிரச்னை புரிந்தது.

ஆலோசனை வகுப்பின் மூலமும் அதைவிட அதிகமாக அத்தையின் வாயிலாகவும் அறிந்திருந்ததால் தான் பெரிய பெண்ணாகிவிட்டோம் என்பதை எளிதில் கண்டுகொள்ள முடிந்தது. இருந்தும் சிறு அதிர்வு வரத்தான் செய்தது.

"ஆதி அத்தான்! இங்க வாங்களேன்..." மென் குரலில் அழைக்க,

(முடியலன்னு படுத்தாளே உடம்புக்கு ஏதாவதோ?) பதட்டத்துடனேயே வந்தவன், மருண்ட பார்வையுடன் கைகளை பிசைந்து கொண்டு நிற்பவளைப் பார்த்து,

"என்னாச்சு நிவேதா?" புரியாமல் வினவ,

"ஆதி அத்தான் வந்து... நான் பெரிய பொண்ணாயிட்டேன்னு நினைக்கிறேன்" குமரியா? குழந்தையா? என பிரித்துப் பார்க்க முடியாமல் தவித்த நிலை மாறியதில் ஆதிக்கு பெரும் மகிழ்வு.

சிறு பெண்ணிடம் அன்பு, பாசம், நேசம் இதெல்லாம் கொள்வதில் தவறில்லை ஆனால் காதல் பெரும் தவறு என்று தான் இத்தனை நாளும் தோன்றியது. இப்பொழுது தன் உணர்வுகள் தவறில்லை என்னும் பெரும் நிம்மதி மனதில் பரவ அவள் முகம் பார்க்க,

இதையும் ஆதி அத்தானிடம் தான் சொல்கிறோம் என்றதாலோ, இந்நேரம் அருகில் பெண் துணை யாருமே இல்லையே என்பதாலோ அன்றி உடல் உபாதைகளோ இரண்டு பெரிய நீர்மணிகள் கன்னத்தில் கோடாய் இறங்க,

"தங்கம்!" என முதல் முறையாக தன்னவளை அணைத்து ஆறுதல் படுத்த கைகளை விரிக்க, அதற்காகவே காத்துக் கொண்டிருந்தவள் போல் அவன் கரங்களுக்குள் புகுந்து கொண்டவளுக்கு அழுகை வந்தது, தன் தந்தையின் நினைவில். அவனை இறுக அணைத்துக் கொண்டு கேவி அழ,

இதமான அணைப்புடன் தலைவருடி,

"அழக் கூடாது தங்கம். இது நல்ல விஷயம்டா... நீ நல்லா ஆரோக்கியமா இருக்க மா! இதுல பயப்பட ஒன்னும் இல்லை!

அழக்கூடாது! இது சந்தோஷப்பட வேண்டிய விஷயம். எல்லா பொண்ணுங்களும் இதை ஒரு நாள் பேஸ் பண்ண தான் வேண்டும். இது பெண்களுக்கு மட்டுமே கடவுள் கொடுத்த கிப்ட்! நான் நந்துவை வரச்சொல்றேன். அவள் உனக்கு ஹெல்ப் பண்ணுவா. அழுகாம இரு . நான் அம்மாவை கூட்டிட்டு வரேன்!" என முதுகு வருடி அவளை ஆசுவாசப்படுத்த,

"தேங்க்ஸ் ஆதி அத்தான். என் அப்பா தான் என்னை தங்கம்னு கூப்பிடுவாங்க. இப்போ நீங்களும் கூப்பிட்டீங்களா... அதான் அழுகை வந்துடுச்சு."

"சரியா போச்சு! இத்தனை நாள் அம்மா மாதிரின்னு சொன்ன இப்போ அப்பவாவும் தெரிகிறேனா? நீ எப்போ தான் என்ன ஆதி அத்தானா பாக்கப்போற?" (செத்தடா ஆதி... உனக்கு ரொம்ப பிடிச்ச அழைப்புக்கு ஆப்பா?) இதழோர சிரிப்புடன்,

"பட்டுக்குட்டி... இந்த அப்பா அம்மாவெல்லாம் வேண்டாம். என்னை ஆதி அத்தானா மட்டும் பாரு, போதும்" மென் முத்தம் ஒன்றை நெற்றியில் பதித்துவிட்டு தோழியை நாடி சென்றான்.

"பார்த்துக்கோ நந்து... அவள் சின்ன பொண்ணு!" எனவும்,

"ஷ்! போடா. நான் பார்த்துக் கொள்கிறேன். இதையே எத்தனை தடவை எத்தனை விதத்தில் சொல்லுவ?’’ எனப் பிடித்து தள்ளாத குறையாய் விரட்டினாள். மெஹந்தி பங்க்ஷனில்

இருந்து பெற்றோரை அழைத்து வருவதற்குள், நந்தினியின் மூலம் நன்றாகவே தெளிந்து விட்டாள் நிவேதா.

அண்டை வீட்டுக்காரர்களுக்கு சொல்லி, அப்போதே தண்ணீர் ஊற்றி, புடவையையும் கட்டி, அவளது அறையிலேயே இருக்கச் செய்தனர். நாளைய பரிட்சைக்கு எப்படி அனுப்புவது என்பது தான் அங்கே பேச்சாக இருந்தது.

பரீட்சைக்கு போக வேண்டாம் என்றும், காரில் கூட்டிப் போய் கூடி வரலாம் என்றும், தனியாக எழுத வைக்கலாம் என்றும், ஆளுக்கொரு யோசனை சொல்ல,

"அம்மா, இவள் எட்டாவது தான்! ப்ரின்ஸியிடம் சொல்லுங்க. நன்றாக படிப்பவள் தான் என்பதால் பரீட்சை எழுதவில்லை என்றால் கூட பாஸ் போட்டு விடுவார்கள்!" என்ற ஆதியின் பேச்சே முடிவாகிப் போகவும், மங்கா காலையில் சென்று தலைமை ஆசிரியரிடம் பேசுவதாக சொன்னார்.

கீர்த்தி மாமி, "ஏண்டீ மங்கா! இவளையே ஆதிக்கு எடுத்துக்குற எண்ணம் இருக்கா? புடவையில் நன்னா லட்சணமா இருக்காடி!" என்றார் பாராட்டு போலும்.

"புதுசா எவளோ ஒருத்தி வருவதற்கு, நாம் வளர்த்த பெண் என்றால் சந்தோசம் தான் மாமி! ஆதி அப்பாவுக்கும் ஒரு எண்ணம் இருக்கு. ஒரே தங்கச்சியோட பெண்ணாச்சே!

பார்ப்போம். இதை முடிவு செய்ய வேண்டியது அவர்கள் இருவரும் தானே மாமி!"

"பகவானோட நோக்கம் அதுதான்னா, அதை யாராலும் மாற்ற முடியாது மங்கா! எல்லாம் நல்லதாவே நடக்கும்!" என விடைபெற்றார்.

அனைவரும் சென்ற பிறகு,

"தனியாக படுத்துக் கொள்வாயா நிவி? இல்லை அத்தை படுக்கட்டுமா?" என்றார் மங்கா.

"நானே படுத்துக் கொள்வேன் அத்தை!" என்றாள் ஆதியை பார்த்தபடி.

அவனோ "பரவாயில்லேயே!" தைரியம் வந்துவிட்டது போலவே என அசந்து போனான்.

"ஏதேனும் வேண்டுமென்றால் அத்தையை கூப்பிடு." என்றபடி சென்றுவிட்டார் மாமா.

தான் எப்போதும் பார்க்கும் பெண் தானென்றாலும், இன்று புடவையில் சற்று வித்தியாசமாகவே இருந்தாள் ஆதிக்கு. விளக்க முடியாத உணர்வுடன் தன்னறையில் படுத்திருந்தவனை,

"ஆதி அத்தான்!" என்ற கிசுகிசுப்பான குரல் சட்டென எழ செய்தது. மெல்ல கதவைத் திறந்தவன், ( இது தான் மெல்லத் திறந்தது கதவா? நல்ல வைக்கிறாங்கய்யா ஒன்னு லைன்)

"என்ன நிவேதா?" எனவும்,

"என் கூட தூங்க வாங்க ஆதி அத்தான்... " என்றாள் சிணுங்கலாய். தன்னறையினுள் அவளை இழுத்து கதவை சாத்தியவன்,

"அம்மாவிடம் தனியாக படுப்பதாக சொன்னாயே, பிறகென்ன?"

"நீங்கள் வருவீர்களே என்று தான் அப்படி சொன்னேன்!"

"பார் நிவேதா... இன்னும் நீ சிறு பெண்ணில்லை. இங்கு நீ பயப்படுமளவிற்கு எதுவுமில்லை. இனி தனியாக படுக்கப் பழகிக் கொள்!"

"ம்ஹூம் , நீங்க வரலைன்னா நான் இங்கேயே படுத்துவிடுவேன்!" என அவனது தலையணையை எடுத்து தரையில் போட,

"கடவுளே! இவள் ஏன் இப்படி படுத்துகிறாள், இவ்வளவு நாள் நான் படுத்தது அம்மாவுக்கு தெரியாது. ஒரு வேளை தெரிந்தாலும், பயப்படுவதால் தூங்கும் வரை இருப்பேன் என்றாலும் கூட தவறாக நினைக்க மாட்டார்கள்.

எப்பொழுதும் இருவரின் அறையும் மூடியே இருக்குமென்பதால் , பாதி ராத்திரியில் எழுந்து வந்திருந்தால் கூட எதுவும் நினைத்திருக்க மாட்டாங்க . ஆனால் இன்று திடீரென இவளது அறைக்கதவை தட்டினால் என்னாவது?" என யோசித்துக் கொண்டிருக்க,

அவளோ சட்டமாக தரையில் அவனது போர்வையை விரித்துக் கொண்டு படுத்தே விட்டாள்.

அவளருகே வந்து அமர்ந்தவன், தலையணையை பிடித்துக் கொண்டிருந்த விரல்களைப் பிரித்து தன் கரத்துக்குள் அடக்கிக் கொண்டான். ஏதோ சொல்லப் போகிறான் எனப் புரிந்து வாகாக அவன் முகம் பார்க்கும் படி திரும்பி படுத்துக் கொண்டாள்,

"பட்டுக்குட்டி..." மென்மையான கொஞ்சல் அழைப்பு,

"ஆதி அத்தானா இப்படி அழைப்பது?" என்று ஆனந்தமாய் அதிர்ந்தவள், வேகமாக எழுந்து அமர்ந்துவிட்டாள். சிறு சிரிப்புடன்,

" என் கண்ணம்மாக்கு ஏன் தனியா படுத்தா தூக்கம் வரமாட்டேங்குது?"

தனியா படுன்னு சொல்லப் போறான் அதுக்காகத் தான் இந்த கொஞ்சல்என அவள் மனம் சுணங்க,

"பயமா இருக்கு ஆதி அத்தான்."

"என்ன பயம்? முன்ன நீங்க சின்ன பொண்ணு... அப்பா, அம்மாவை திடீர்னு பிரிந்தது, இங்கு எல்லாமே புதுசு அப்போ உங்க பயம் நியாயம் தான். இப்போ என்ன பிரச்சனை? அத்தை, மாமா, இந்த ஊர், ஸ்கூல் எல்லாரோடையும் நல்லா பழகியாச்சு. சொல்லப் போனா இப்போ அத்தையோட பெட் நீங்க. இன்னும் என்ன பயம்?"

"தெரியல நீங்க பக்கத்தில இருந்தா... சந்தோஷமா, பாதுகாப்பா, எந்த கவலையும் இல்லாம என் அம்மா அப்பா கூடவே இருக்க மாதிரி இருக்கும்."

"எப்போதும் அத்தான் உங்க கூடவே இருக்க முடியாதுல்ல. எல்லாத்தையும் ஃபேஸ் பண்ண கத்துக்கணும். அடுத்தவங்களை எதிர்பார்த்துக்கிட்டே இருக்கக் கூடாது. நிவேதா ரொம்ப தைரியமான பொண்ணு எவ்வளவு பெரிய பிரச்சனையா இருந்தாலும் சீக்கிரமா வெளிய வந்துடுவாங்க தானே?" அவள் கன்னம் தாங்கி வினவ,

"ம்..." சிறு தலையாட்டலுடன் ஆமோதிக்க

"குட்! ஆதி அத்தான் என்ன சொன்னாலும் அது உங்க நல்லதுக்கு தானே?"

அவளுக்கு தெரிந்து போனது. அங்கே, இங்கே சுத்தி... இவன் எங்கு வருகிறான் என அதனால் அமைதிகாக்க...

"ஆதி அத்தான் சொன்னா கேட்ங்கபீங்க தானே?"

அவன் அதட்டும் போதே எதிர்த்து பேச மாட்டாள்... இப்போது இப்படி உருகிப் பேசினால் மறுக்க முடியாதே என்ன சொன்னாலும் கேட்பாளே ஆனால்...? அவளறியாமல் ஒப்புதலாய் தலை மட்டும் ஆடியது.

"இப்போ சமத்தா போய் உங்க ரூமில் படுபீங்கலாம். சரியா?"

"இப்போ போறேன்! கொஞ்ச நேரம் கழிச்சு நீங்க வந்துடுங்க ஆதி அத்தான்." குழந்தையாய் அவன் கரம் பற்றி ஆணை போலும் சொல்லிவிட்டு சென்றுவிட்டாள்.

(அதுசரி இவ்வளவு நேரம் சமத்தா தலைய தலைய ஆட்டி எல்லாத்தையும் கேட்டுட்டு கடைசியா வான்னு ஆடர் போட்டுட்டு போறா... நான் சொல்றதை எங்கு கேக்குறா எப்போதும் அவ சொல்றதத்தை தான் நான் கேக்குறேன்... ஆதி அத்தான் ஆதி அத்தான்னு சொல்லி ஆப் பண்ணிடறா...) விரிந்த சிரிப்புடன் அவள் பின்னோடு சென்று கட்டிலில் அமர்ந்து விட்டான்.

வழக்கம் போல் அவனுக்கு முதுகு காட்டி படுத்துவிட்டாள். எப்பொழுதும், இவனுமே மறுபுறம் திரும்பி தான் படுப்பான் என்பதாலும் சிறு பெண்ணிற்கு துணை என்பதாலும் எதார்த்தமாகவே இருக்கும்.

இன்று புடவையும், பூவும், நடு முதுகில் அவளுக்கிருந்த அழகான மச்சமும், அவனை ஏதேதோ செய்தன! வெகு நேரமாகியும் அவள் தூங்கவில்லை என தெரிந்ததும்,

" நிவேதா! " என்றான் மென்மையாக, சட்டென அவன்புறம் திரும்பியவள், இந்த நிவேதாவெல்லாம் வேண்டாம்! எனக்கு பிடிக்கவேயில்லை, நீங்க எப்போதும் போல் 'ஏய்!' என்றே கூப்பிடுங்கள் .

நீங்க டாக்டருக்கு படிக்கப் போறேன்னதும் ரொம்ப பயமாயிடுச்சு. உங்களை மாதிரி யார் என்ன பாத்துப்பாங்க? நீங்க இருக்கும் போது எப்போதும் சிரிச்சுகிட்டே இருக்கேன். இப்பல்லாம் நோ அழுகாச்சி தானே ஆதி அத்தான்?

ஏன் தெரியுமா உங்களால தான் என்னோட மட்டுமில்ல... அடுத்தவங்க கிட்ட பேசும் போதும் கூட ரசிச்சு சிரிக்கிற மாதிரி தான் பேசுவீங்க. என்னை நல்லா பாத்துக்குவீங்க. திட்டுறது, கொட்டுறது, முறைக்கிறது இதெல்லாம் உங்கள தவிர யாருமே என்கிட்ட பண்ணமாட்டாங்க. எல்லோரும் என்னை ஐயோ பாவம்னு பாக்கிற மாதிரி இருக்கும். எனக்கு அது பிடிக்கல.

ஆதி அத்தான்... என் கூடவே இருந்துடுங்களேன் ப்ளீஸ்... இதற்கு பயந்து தான் சாயங்காலம் மயங்கிட்டேன் தெரியுமா?

நீங்கள் டாக்டருக்கு படித்துவிட்டு வரும்போது நான் பைத்தியமாகி இருப்பேன், ப்ளீஸ் ஆதி அத்தான்! ஏதாவது செய்யுங்கள்!" என அழத் தொடங்கிவிட்டாள்.

"ஷ்... நிவேதா... அழுகாதே! அம்மா வந்துவிடப் போகிறார்கள்." என அவன் வாய் மூட , அவன் கரங்களை விலக்கி,

"வரட்டும்! நான் ஆதி அத்தான் எங்க இருக்காங்களோ, அங்க தான் இருப்பேன் என சொல்லிடுறேன்!" என்றாள் மூக்கை உறுஞ்சியபடி.

"கிழிந்தது! பரதேவதை... தள்ளி படு!" என அவளருகிலேயே படுத்துவிட்டான். எப்பொழுதும் போல் திரும்பி படுக்காமல், அவன் முதுகை சுரண்டினாள் நிவேதா.

" என்னம்மா?"

" நீங்க ஏன் இப்படி பேசுறீங்க? இது நல்லாவே இல்லை!"

"இப்போ இது தான் உன் பிரச்சனையா?" என அவள்புறம் திரும்பி முறைக்க,

"நீங்க கண்டிப்பா டாக்டராகணுமா ஆதி அத்தான்?" என்றாள் பாவம் போலும்.

"யோசிக்கிறேன்! இப்போ தூங்கு!" எனவும் அவன் தோளை இறுக்கப் பற்றியபடி அவனது முதுகில் முகம் புதைத்து உறங்கிப் போனாள்.

மனித நேயம் மிக்க மனிதனாய் முடிவெடுப்பானா? இல்லை தன்னலம் பேணும் மருத்துவனாய் மாறுவானா?

# அத்தியாயம் 9

மெல்ல அவளிடம் இருந்தும் விலகியவன் நெற்றி வருடி,

"ஐ லவ் யூ தங்கம்!" என கன்னத்தில் இதழ் பதித்து, தன்னறைக்குச் சென்றான்.

நாட்கள் இனிதாகவே நகர்ந்தன. பனிரெண்டாவது ரிசல்ட்டும் வந்தது. ஆதி பள்ளியில் மட்டுமல்ல அந்த மாவட்டத்திலேயே முதல் மதிப்பெண் பெற்றிருந்தான்.

ஆதியின் பெயர், பள்ளியின் பெயர் பலகையில் மதிப்பெண்ணுடன் பொறிக்கப் பட்டது. பிரபாவும் நல்ல மதிப்பெண்களே எடுத்திருந்தான். நந்தினி அவளது திறமைக்கு ஏற்றது போல் வாங்கியிருந்தாள்.

திடீரென ஆதி மெடிக்கல் எண்ட்ரன்ஸ் எக்ஸாம் எழுதவில்லை என்றதும், மங்கா கேள்விக் கணை தொடுக்க ஆரம்பித்துவிட்டார்.

"ஏன் வேண்டாமென்கிறாய்? சின்ன வயதிலிருந்தே நீ சொன்னது தானே?" எனப் பிடித்துக் கொண்டார்.

"சின்ன வயதில் யோசிக்காமல் சொல்லிவிட்டேன். இப்பொழுது டாக்டருக்கு படிப்பதைவிட என்ஜினீயரிங் பெஸ்ட்னு தோணுது!"

"காசைப் பற்றி யோசிக்காதே ஆதி! எங்களால் உன்னை படிக்க வைக்க முடியும்!"

"பிரச்சனை அதில்லம்மா! எனக்கே பெரிதாக விருப்பமில்லை. அவ்வளவு தான்!"

"போடா! நான் எல்லோரிடமும் என் மகன் டாக்டருக்கு படிக்கப் போறான்னு சொல்லிவிட்டேன்!"

"மங்கா... அவன் விரும்பியதை படிக்கவிடு! நீ பெருமையடித்துக் கொள்வதற்காக அவனுக்கு பிடிக்காததை திணிக்காதே!"

"வந்துட்டாருடா, நாட்டாமை! எனக்கென்ன அவரவர் விருப்பம் போல செய்யுங்கள்!" என குறைபட்டுக் கொண்டே கிச்சனில் புகுந்து கொண்டார்.

"அம்மா! அம்மா... " என அழைத்தபடியே வந்தவன்,

"இப்போ ஏன் கோபப்படுறீங்க? உங்களுக்காக யோசித்து தான் இந்த முடிவெடுத்துருக்கேன். டாக்டர்ஸோட பெர்சனல் லைப் சொதப்பல் மா... நாளைக்கு வரும் மருமகள்..." எனவும் அன்னை அவனை முறைக்க,

“ அட, நாளைக்கு இல்லைனாலும் இன்னும் 10 வருஷம் கழித்து எனக்கு கல்யாணம் செய்து வைக்க மாட்டிங்களா? அப்போது அவள்,

என்ன பையன் வளர்த்து வச்சு இருக்கீங்க? கொஞ்சமும் சரியில்லை" என சொல்லக் கூடாதில்ல... உங்களை குறை சொன்ன என்னால் தாங்க முடியாதே! அதான், எல்லோருக்கும் வசதியாக இன்ஜினியராக முடிவு பண்ணினேன்!" என்றான் அப்பாவி போல்.

"போடா நல்லவனே... நீ எனக்காக பார்த்தாய்? நம்பிட்டேன்! ஒழிந்துபோ!" என செல்லமாக முதுகில் ஒன்று வைத்தார்.

"என் செல்ல அம்மா!" எனது தாயை அணைத்து முத்தமிட , இருவரது குலாவலையும் பார்த்து விழித்துக் கொண்டிருந்தாள் நிவேதா.

‘‘வாடா நிவி... எல்லாம் நடிப்பு. ஆஹா... அத்தான் சூப்பர் என நம்பி ஏமாந்து விடாதே!" என சூழலை இதமாக்க, சிரிப்பையே பதிலாகி நகர்ந்துவிட்டான்.

"எனக்காகத் தானே ஆதி அத்தான்?"

"ஆசை தான்... ஆளை பார்! எனக்கே விருப்பமில்லை. அவ்வளவு தான்!" என்றான்.

பிரபா கேட்டதற்கு,

"ஏன் என்ஜினீயர் மாப்பிள்ளைக்கு உன் தங்கையை கட்டிக்க கொடுக்க மாட்டாயா? அவள் ரேஞ்சுக்கு ஆதியே அதிகம் தான்! இதில் டாக்டரா வேற இருக்கணுமா?" என்றான். (பார்டா...!)

"ஆதி! நிஜமாகவா?" என பிரபா மீண்டும் கேட்க,

"ம்... அந்த குட்டி குரங்கையே கட்டிக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்!" என்றான் மலர்ந்த முகத்துடன்.

"அப்படி ஒன்னும் நீ என் தங்கைக்கு வாழ்க்கை கொடுக்க வேண்டாம்!அவள் ரேஞ்சுக்கே மாப்பிள்ளை பார்த்து கட்டி வைக்கிறோம்!" என்றான் பிரபா வேண்டுமென்றே.

"பரவாயில்லை மச்சான்! என்னை போல் மாப்பிள்ளை கிடைப்பது மிகச் சிரமம்! அதனால் எனக்கே கட்டிக் கொடுத்துடு." (மறுபடியும் பார்டா!)

"ஆமாடா, நீ ரொம்ப நல்லவன் தான்! எப்பொழுது பார்த்தாலும் அவளை அதட்டிக்கிட்டே இருக்க, உனக்கே கட்டி வைத்தால் அவ்வளவு தான்! பாவம், நிவேதாவை சம்பளமில்லாத வேலைக்காரி ஆக்கிவிடுவாய்! நீ வேண்டாம் போ!"

"பெரிய மனசு பண்ணு மச்சான்!" என இறங்கி வந்தான் ஆதி.

‘‘அது. அந்த பயம் இருக்கட்டும்! இவ்வளவு காதலை வச்சுக்கிட்டு ஏன் அவளிடம் சிடுசிடுக்கிறாய்? மரியாதையா நடத்த மாட்டேங்கிற?"

"நான் என்ன சொல்ல? இந்த சிடுசிடுப்பு எனக்கு நானே போட்டுக்கொள்ளும் வேலி மச்சான். கல்யாணத்துக்கு பிறகு தான்

கொஞ்சல்ஸ் எல்லாம். நானே மரியாதை கொடுப்போம் என நினைத்தாலும் உன் தங்கைக்குப் பிடிக்கல. அதனால் என் மீது தவறில்லை!" என கண் சிமிட்டினான்.

ஆதிக்கு அன்று தான் கவுன்சிலிங் முடிந்தது. மாவட்டத்தின் முதல் மாணவன் என்பதால் வீட்டிற்கு அருகில் இருக்கும் நற்பெயருடைய பொறியியல் கல்லூரியிலேயே அவன் விரும்பிய படி இடம் கிடைத்தது.

வெளியூரில் இதைவிடவும் சிறப்பான கல்லூரிகளுக்குக் கூட முயன்றிருக்கலாம் தான். அவனது இம்சை அவனில்லாது தவித்து போகுமே... அவளுக்காக டாக்டர் கனவை ஒதுக்கி வைத்துவிட்டு இன்ஜினியரிங்கை தேர்ந்தெடுத்தாகிவிட்டது... இனியும் அவள் விருப்பம் போல் நடந்துகொள்ள வேண்டியது தான் என்னும் முடிவுக்கு வந்தவனாக சந்தோசத்துடனேயே வீடு திரும்பினான்.

மங்களத்திற்கு தான் சென்னை, பெங்களூர் இப்படி எங்காவது படிக்க போயிருக்கலாம் என்னும் ஏக்கம் இளயோடியது. மனோகரனோ படிக்கிற பிள்ளை எங்கிருந்தாலும் படிக்கும் என ஒரே வார்த்தையில் மனைவியை அடக்கினார்.

பிரபா தனது தந்தையின் முதலாளியும்... தனது ஸ்பான்சருமான சிவானந்தன் இல்லத்திற்கு சென்றிருந்தான். பெரிய கேட், அதை கடந்து விஸ்தாரமான லேன்... நீர் ஊற்றும்,

அழகாக பராமரிக்கப்பட்ட செடிகளும் பச்சை வண்ண கார்பெட் போல் புல்வெளியும் அழகாகத் தான் இருந்தன.

பிரம்மாண்டமான பங்களா அதன் வாசலை அடைவதற்கே பத்து படிகளை கடக்க வேண்டும் வீட்டின் ஒவ்வொரு அங்குலத்திலும் பணத்தின் செழுமை தெரிந்தது. மூன்று கார்கள் வரிசையாக நிற்க அங்கேயே முருகனுக்கு ஒரு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. வேலையில்லாத நேரங்களில் ஓய்வு எடுத்துக் கொள்ளும் விதமான அமைப்பு...

சிறுவயது முதலே அவர் தான் இவனை படிக்க வைக்கிறார் என்ற போதும் இப்படி பார்க்க வந்ததில்லை. பத்தாவது ரிசல்ட் வந்ததும் தந்தை முதலாளியை பார்க்க கூட்டி வந்தார். என்ன படிக்க விரும்புகிறாய்? டிவிஷன் ஏதேனும் வேண்டுமா? போன்ற கேள்விகளுடன் அன்றய சந்திப்பு முடிவுக்கு வந்தது.

ஆனால் இப்பொழுது இன்ஜினியரிங்கில் சேர்ந்திருப்பதால் இவன் பெயரில் தனியாக ஒரு வங்கிக் கணக்கு ஆரம்பிக்க சொல்லியிருக்கிறார். பணத்தேவை அதிகம் இருக்கும் என்பதால் கல்லூரி கட்டணம் போக குறிப்பிட்ட தொகையை அந்த கணக்கில் போட்டுவிடுவதாகவும் செலவுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லி அதற்கான ஏற்பாட்டை செய்ய வரச் சொல்லியிருக்கிறார்.

வாசலில் மகனை சந்தித்த முருகன்,

"உனக்கு சொல்ல வேண்டியதில்லை இருந்தாலும் என் கடமை நான் சொல்றேன். மரியாதையாக நடந்துக்க பிரபா. என்ன தேவையோ ஐயாவிடம் மனம் விட்டு கேளு நல்ல மனுஷன் நிச்சயம் செய்வார்."

"நீங்க கூட வரமாட்டீங்களாப்பா?"

"நீ இன்னும் சின்னப்புள்ள இல்ல தம்பி. தனியா போய் பேசி பழகு!" தன் அறை நோக்கி சென்றுவிட்டார்.

தயங்கியபடியே உள்ளே நுழைய அவனுக்காகவே வரவேற்பறையில் காத்துக் கொண்டிருந்தார் சிவானந்தன்.

"வணக்கம் ஐயா!" கைகூப்பி வணங்க.

"நல்லாயிருப்பா. வா வந்து இப்படி உட்கார்." எந்த பேதமுமின்றி தன்னருகே அமர வைத்துக் கொண்டார். எப்பொழுதுமே முதளாளித்துவம் பார்க்காத மனிதர் தான் என்ற போதும் பிரபாவிடம் எதோ ஒன்று அவரை ஈர்த்தது. அவனது பணிவா, மரியாதையா, நிதானமா? கண்டுபிடிக்க முடியவில்லை அவரால்.

படிப்பு, கல்லூரி செலவுகள் என அனைத்து விதமான பேச்சும் முடிந்து குளிர் பானம் பருகிக் கொண்டிருந்தான் பிரபா. வெள்ளை நிற ஸ்போட்ஸ் பனியனும் அதற்கு தோதாக குட்டி ஸ்கர்ட்டும் அணிந்து கூந்தலை மேலே தூக்கி ஒற்றை போனிடெயிலாய் போட்டு கையில் ராக்கெட்டும் காலில்

ஷூவுமாகி மாடிப்படிகளில் குதித்து இறங்கி வந்து கொண்டிருந்தாள் ஒரு நங்கை.

இவன் வயதொத்த அல்லது ஓரிரு மாதங்கள் இவனைவிட சிறு பெண்ணாக தான் இருக்க வேண்டும் என தோன்றியது. சட்டென தலையை குனிந்து கொண்டான் பிரபா.

"பேபிம்மா! இங்க வாடா." தந்தையின் அழைப்பை தட்டாமல் அவரருகே வந்தாலும் போகவேண்டும் என்னும் அவசரம் கால்மாற்றி தவிக்கும் செயலில் தெரிந்தது.

"இந்த பையன் பிரபாகரன். நம்ம முருகனோடு பையன். உன் செட்டு தான் இன்ஜினியரிங் படிக்கிறான்." பெருமையாக சொல்ல மென்முறுவலுடன் அவளை ஏறிட்டவனுக்கு அதிர்ச்சி, அப்படி ஒரு ஏளன பார்வையும் உதட்டு சுழிப்பும் அவளிடம்.

(இவன் என்ன கேப்டன் பிரபாகரனா இல்ல வீரன் வேலு பிரபாகரனா? இவனுக்கெல்லாம் அறிமுகம் ஒரு கேடு அவனவன் என்னை பார்க்க தவமிருக்கான். உனக்கென்ன அவ்வளவு திமிர்? நிமிர்ந்து கூட பார்க்க முடியாதோ? மேதாவிங்கிற கர்வம் போலும்... இரு என்னை மறக்கவே முடியாத அளவிற்கு திருப்பிக் கொடுக்கிறேன்...) காண்டாகியவள்,

“இவன் தானே நம்ம ஸ்பானர்ஷிப்ல படிக்கிறான்?" ஏளனமும் எள்ளலும் வழிந்தது அவள் கண்களிலும் குரலிலும். அலட்சியமும் திமிரும் அப்பட்டமாக தெரிந்தது.

முதல் முறையாக பிரபா குறுகிப் போனான். இதுவரை அடுத்தவர்கள் உதவியில் படிப்பதை கேவலமானதாக அவன் நினைத்ததில்லை. ஆனால் ஒரு நொடியில் இந்த சிறுபெண் அவனை கேவலப்படுத்திவிட்டாள்.

"ஆமாடா. நல்லா படிக்கிற பையன்." தோளை பாராட்டுதலாக தட்டிக் கொடுத்தார் சிவானந்தன். முயன்று வரவழைத்த புன்னகையுடன் அவன் நிற்க.

‘‘இதுக்கு தான் கூப்பிட்டீங்களா அப்பா? இப்போ நான் போகலாமா?" அவர் பதிலுக்கு கூட காத்திராமல் வேகமாக சென்றுவிட்டாள்.

அவன் விடைபெற்று வரும் போது தந்தை அங்கில்லை. அவளை அழைத்துக் கொண்டு எங்கேனும் போயிருப்பார். வீட்டிற்கு வந்த பிறக்கும் அவனால் இயல்பாக இருக்க முடியவில்லை. அந்த பார்வை அவன் இதுவரை சந்தித்திராத ஒன்று. இப்படியெல்லாம் பார்வையாலேயே ஒருவரை அசிங்கப்படுத்த முடியுமா? அவனால் மறக்கவே முடியவில்லை.

பாவம்! அவளை பார்க்கவில்லை என்னும் கோபம் தான் அவளது பார்வைக்கும், வார்த்தைகளுக்கும் காரணம் என்பது புரியாமல் மருகினான்.

நண்பனின் முக வாட்டமும்... அலைப்புறுதலும் ஆதியையும், நந்துவையும் பாதிக்க... அவர்களிடம் வாய் திறந்தான்.

"பிரபா! அந்த பொண்ணு ரொம்பவும் அழகோ?" நந்தினி கண் சிமிட்டி வினவ,

"பார்த்தாயா நந்து... நீயும் என்னை கேலி பண்றியே?" வருத்தம் மேலிட கூறியவனை பார்த்து சிரித்தவள்,

"போடா லூசு! நீ அவளை பார்க்கலை அப்படித் தானே?" (ஒருநொடி பார்தேனே!) அதை தோழியிடம் சொல்லத் தான் முடியவில்லை.

"அந்த அழகியை நீ பார்க்கலைங்கிற கோபம்... உன்னை பார்க்க வைக்கிறேன் பாருங்கிற வீம்பு தான்! இதையெல்லாம் பெருசா எடுத்துகாத செல்லாக்குட்டி!"

"நந்து சொல்றது உண்மை தான் மச்சான்! இதை இப்படியே விடு. தேவையில்லாமல் நீயும் வருந்தி எங்களையும் கஷ்டப்படுத்தாத." என இதமாக அணைத்துக் கொண்டான் ஆதி. நண்பனின் அணைப்பு அவனுள் நம்பிக்கையையும், நிம்மதியையும் கொண்டு வந்தது.

அப்படியும் இருக்குமோ? ஏய் பார்பி டால்! இதுக்கு முன்னமே உன்னை பார்த்து தன்னிலை மறந்து நின்றிருக்கிறேன்

பொம்மை. இதழோர சிரிப்புடன் அன்றய நினைவில் அமிழ்ந்துவிட்டான் பிரபா…

இளமாலை வேலை… திருப்பத்தூரின் மெயின் வீதி போக்குவரத்தால் நிரம்பி வழிந்தது. அந்நேரம், அங்கிருந்த ஐஸ்கிரீம் பார்லரின் முன்னால் ஒரு சாண்ட்ரோ வந்து நின்றது. அதில் இருந்து நான்கு அல்ட்ரா மார்டன் மங்கைகள் இறங்கினர். அதில் ஒருத்தி மட்டும் அங்கிருக்கும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தாள்.

அதற்கு காரணங்கள் பல இருந்தாலும் முக்கிய காரணம் அவளது விழிகள் கட்டடப்பட்டிருந்தது தான். உடைத்து வைத்த கோதுமை நிறம், பிங்க் நிற சாட்டின் துணி கட்டியிருந்ததால் நெற்றி பிறைபோல் கொஞ்சம் தான் தெரிந்தது.

கண்களும் புருவமும் மறைக்கப் பட்டிருக்க, சிறிய மூக்கு, சிவந்த கன்னக்கதுப்புகள், தாடையில் சிறு பள்ளம், வளவளப்பான நீண்ட கைகள், வலது கையின் மேல் தோளுக்கு அடுத்தாற் போல் சிரித்த முகமாய் தலையில் ரீத்துடன் ஒரு பெண்ணின் டாட்டு… அது அவள் முகம் தானோ?

இடைவரை நீண்ட ஒரே சீராக வெட்டப்பட்ட கூந்தல் விரித்து விடப்பட்டிருக்க, கையில்லா வண்ண வண்ண பூக்கள் உடல் முழுவதும் விரவியிருக்கும் தொடை வரையிலான சிறிய ஃபிராக். பளீரென்ற தொடை… நீண்ட பளிங்கு கால்களில்

ஒன்றில் மட்டும் மெல்லிய தங்க கொலுசு, கூரான ஊசி போல் உயர்ந்த குதியுடைய அழகான காலணி.

கடைக்குள் சென்றவர்கள் என்ன கேட்டார்களோ, அவள் என்ன சொன்னாலோ அனைவரும் கையை உயர்த்தி கூவ... சத்தம் கேட்கவில்லை கண்ணாடி தடுப்பு குறுக்கே இருந்ததால். கடைக்கு வெளியில் தான் நின்று கொண்டிருந்தான் பிரபா... அவளுக்கு முன்னால் பல கப்புகளில் ஐஸ்கிரீம் இருந்தது.

ஒரு பெண் ஸ்பூனில் எடுத்து அவளுக்கு ஊட்ட, அதை விழுங்கியவள் நாக்கை தட்டி லேசாக வாய்திறந்து முத்துப்பற்கள் காட்டி ஏதோ சொல்ல மீண்டும் கூச்சல். அவள் மிகச் சரியாய் கணித்து சொல்லியிருக்க கூடும்.

அடுத்தவள் வேறொன்றை ஊட்ட, இந்த முறை நாவை நீட்டி சிவந்த உதடுகளை முழுவதுமாக வருடியவள் ஏதோ சொல்ல மீண்டும் கூச்சல். இது தான் கடைசி என்பது போல் அடுத்த கப்பில் இருந்ததை ஒருத்தி ஊட்ட அதை விழுங்கியதும் கூச்சலோடு எழுந்து தன் கண் கட்டை அவிழ்த்து கையில் பிடித்த படி குதூகலமாய் ஒரு டான்ஸை போட மற்ற பெண்கள் வாயில் விரல் வைத்து விசில் அடிக்க... அவர்களது உற்சாகம் அங்கிருந்த மற்றவர்களையும் தன்னுள் இழுப்பதாய்...

இதுவரை எந்த பெண்ணையும் இப்படியெல்லாம் அணுஅணுவாய் பார்த்து ரசிக்காதவன் இன்று வாய்விட்டே

சொல்லிவிட்டான் "பார்பி!" கண்கள் மலர அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் பால் வாங்க வந்த பிரபா...

ஒரு பெண்ணை இப்படி பார்ப்பது தவறென்று யோசிக்கும் நிலையில் எல்லாம் அவன் இல்லை. அவன் மூளை வேலை நிறுத்தம் செய்து வெகு நேரமாகிவிட்டது.

தன் சிறு வயது கனவு தேவதையான பார்பி பொம்மை உயிரோடு உலா வந்தது போல் தோன்ற விழியெடுக்க முடியாமல் பார்த்தவனால் அந்த இடத்தை விட்டு அசைய முடியவில்லை. பிரபாவுக்கு மூச்சு நின்று போனது. இன்றும் அதே சுகத்தை அனுபவித்தவனாக,

"சேட்டு வீட்டு பெண்ணாகவோ இல்ல வெளிநாடு வாழ் இந்திய பெண்ணாக இருப்பாய் என நினைத்தேன். கடைசியில் ஐயாவின் மகள் தானா நீ? என்னும் மகிழ்வில் அவள் அவமானப் படுத்தியதைக் கூட மறந்து போனான்.

நந்தினி கம்பியூட்டர் சயின்ஸ் இளங்கலை பாடத்தில் சேர்ந்தாள். முதல் முறையாக இவர்களது கூட்டணி லேசாக பிளவுபட்டது போல் ஓர் வருத்தம் நந்தினிக்கு இருக்கத் தான் செய்தது.

அத்தையும், மாமாவும் இன்னும் வந்திருக்கவில்லை. நிவி செடிகளுக்கெல்லாம் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்க ஆதி டிவி சேனலை மாற்றி மாற்றி பார்த்துக் கொண்டிருந்தான்.

எப்படித் தான் இந்த நந்து அலுக்காமல் பார்கிறாளோ? என்ற சந்தேகம் கூட வந்துவிட்டது. இந்த இம்சையோடாவது வம்பிழுக்கலாம் என வாசலுக்கு வந்தவன், அவளது நீரூற்றும் நேர்த்தியை கண்டு அசந்து போனான். இப்படி எதாவது செய்து தான் அம்மாவை கைக்குள் போட்டு வைத்திருக்கிறாள்... சிறு சந்தோசம் தலை தூக்க...

"ஏய் இம்சை!"

"ஏதாவது வேணுமா ஆதி அத்தான்?"

(வேணும் தான் உனக்கு இப்போ வயசு பத்தாதே...) என்று எண்ணியவனாய் மறுப்பாக தலையசைத்தவன்,

"நான் உனக்கு எவ்வளவு செய்றேன்? அத்தான் பஸ்ட் மார்க் வாங்கினதுக்கு நீ ஏதாவது கொடுத்தியாடி? சின்ன கை குலுக்கல், வாழ்த்துக்கள் எதுவும் இல்லை. உனக்கு தேங்க்ஸ் கிவிங்கே தெரியமாட்டேங்குது." உள்ளே போய்விட்டான்.

இவனுக்கு என்ன கொடுப்பது? கைகுலுக்கி கங்கிராட்ஸ்னாவது சொல்லியிருக்கலாம்... சரி விடு நிவி வேறேதாவது யோசி... கோபமோ? முகத்தை தூக்கி வச்சிருக்கான். மீண்டும் டீவியிடம் சரணடைந்திருந்தவனிடம் வந்தவள், சோபாவில் சரிந்து அமர்ந்திருந்தவன் அருகில் வர,

இப்போ எதுக்கு இவ்வளவு பக்கத்தில் வரா எதாவது ரகசியம் சொல்ல போறாளோ? எண்ணியபட,

"என்ன?" மிரட்டலுடன் அவள் முகம் பார்க்க,

தளிர்கரம் கொண்டுஅவன் தாடையை பற்றி மறு புறம் திருப்பி ஈர உதடுகளால் அழுந்த அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். காதலியின் முதல் முத்தம் உடலெங்கும் மின்சாரம் பாய... நரம்பெல்லாம் பின்னிக்கொள்ள... இதயம் எகிறிக் குதிக்க... மூர்ச்சையாகிப் போகும் நிலையை அடைந்து மீண்டான்.

கன்னத்தில் ஈரம் இன்னும் ஒட்டிக் கொண்டிருந்தது. சுகம் அலை அலையாய் பரவுவதை ரசித்தபடி அமர்ந்திருந்தவனை உலுக்கியவள்,

"ஷேவ் பண்ணுங்க ஆதி அத்தான் குத்துது." அவள் இயல்பாக தான் இருந்தாள். இதுவரை அனுபவித்திராத சுகம் அவனை ஏதோ செய்ய சுருட்டிக் கொண்டு படுத்துவிட்டான். அவள் பயந்து போனாள்.

"ஆதி அத்தான் ஏதாவது பண்ணுதா... உடம்புக்கு என்ன?" அவன் முன் மண்டியிட்டு தோள் பற்றி அசைக்க,

"போடி!" ஈன ஸ்வரத்தில் முனகியவன் அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டான். இன்னும் பதின்மவயதில் இருப்பவன்... முதல் முத்தம் பித்து பிடிக்க வைத்தது. தன்னை சமன் செய்துகொள்ளத் தெரியவில்லை. வெகு நேரம் பிடித்தது இயல்புக்கு திரும்ப.

இவளிடம் விலகியே இருக்கனும்... ஒரு மனம் கோஷமிட அப்படி ஒன்னும் அவசியமில்லை நல்லா தான் இருந்துச்சு... இன்னொரு மனம் கொடி பிடித்தது.

நண்பர்கள் மூவரும் அவர்களுடன் ஒட்டுப்புல் போல் நிவியும் கடவுளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கோவிலுக்கு சென்றனர். அன்று, திருக்கல்யாணம் வெகு சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. கூட்டம் அலைமோதியது. அவர்களது சமஸ்தான அரச குடும்பத்தினரின் சிறப்பு வழிபாடாம்.

அரசகுடும்பத்தை சேர்ந்தவர்கள், அவர்களைக் காணவே வந்த பொதுமக்கள் என கோவிலே நிறைந்து வழிந்தது. இதுவரை இப்படி ஒரு கூட்டம் கண்டதில்லை எனும் அளவிற்கு இருந்தது. உள்ளே நுழைவதற்கு கூட முடியாது போல் அப்படி ஒரு நெருக்கடி.

பேசாமல் திரும்பி போய் விடுவோமா? என்று யோசிக்க தொடங்கிவிட்டனர் ஆதியும், நந்துவும். பிரபாவுக்கு தான் சிறு நெருடல். கோவிலுக்கு வந்துவிட்டு சாமியை பார்க்காமல் போகக் கூடாது என உறுதியாக சொல்லிவிட்டான்.

திருக்கல்யாணம் நன்றாகவே முடிந்துவிட்டது. தேவகோட்டை சமஸ்தானத்து சிற்றரசன் ராஜா விஜயேந்திர பூபதிக்காக தான் அங்கு அனைவரும் காத்திருந்தனர். தவிர்க்க முடியாது முக்கியமான வெளிநாட்டு கூட்டாளிகளுடனான

சந்திப்பு இருப்பதால் எப்படியும் கடைசி நேரத்திற்காவது வந்துவிடுகிறேன் என உறுதி அளித்திருந்தான் விஜயேந்திரன்.

அடுத்ததாக, பட்டத்து... அரசனுக்கு பரிவட்டம் கட்டி கோவிலை சுற்றி வரவேண்டும். ராணி சகுந்தலா தேவி கடவுள் விஷயத்தில் கால தாமதம் ஆவதில் எப்போதுமே உடன்பாடில்லாதவர். மகனை கைபேசியில் தொடர்பு கொள்ள,

"இதோ வந்துவிட்டேன் அம்மா... கோவிலுக்குள் தான் நுழைந்து கொண்டிருக்கிறேன். கூட்டம் அதிகமாக இருக்கிறது. இன்னும் ஐந்து நிமிடங்களில் வந்துவிடுவேன்." கைபேசியை அனைத்து வழக்கம் போல் பேண்ட்ஸ் பாக்கெட்டில் வைக்கப் போக அப்போது தான் இடுப்பில் கச்சை கட்டியிருப்பது நினைவு வர தாமதிக்காமல் கூட்டத்தில் நுழைந்து முன்னேறிக் கொண்டிருக்க...

அவனது வலது கை யாரின் பிடியிலேயே சிக்கிக் கொண்டிருக்கிறது என்பது புரிந்தது. ஆனாலும் யாரிடம் என பார்க்க முடியாமல் கூட்டம் அலைமோதியது. கையை தன்புறம் இழுக்க, பிடியின் அழுத்தம் அதிகமாகியது. ஆனால் இழுத்த இழுப்புக்கு வந்தது. அந்தமட்டிலும் நல்லது நம்மையும் பின்னோக்கி இழுக்காமல் உடன் வருகிறதே என முன்னேறினான்.

கூட்டத்தோடு கூட்டமாக கிடைத்த சிறு இடைவெளியிலெல்லாம் நுழைந்து ஒருவழியாக உட்பிரகாரத்துக்கு வந்த நந்தினி,

"ஆதி! பிரபாவும், நிவியும் எங்க?" என்று கேட்டவாறே தான் இறுக பற்றியிருந்த கையின் சொந்தக்காரனை நிமிர்ந்து பார்க்க...

நல்ல உயரமும், அகலமுமாய், முறுக்கு மீசையும், ட்ரிம் செய்யப்பட்ட தாடியுமாய், முக்கால் கைக்கு ஏற்றி விடப்பட்டிருந்த வெள்ளை சட்டை... கையில் காப்பு போலும் ஏதோ ஒன்று.... அட, இது என்ன வேஷ்டியை இப்படி கட்டியிருக்கிறான்... ஐயராக இருப்பானோ? ஆளைப் பார்த்தால் அப்படி இல்லையே... என்ன உயரம்? ஒட்டகச்சிவிங்கி போல் என நந்தினி தன் ஆராய்ச்சியை தொடர...

அவனோ இவளை உறுத்து விழிக்க, சட்டெனெ சுயம் பெற்றவள்,

(ஐயோ! யாரிந்த பீம்பாய்?)

"சாரி. நான் ஆதின்னு நினைச்சேன்." எச்சில் விழுங்க, லூசே! எவன் கையையோ பிடிச்சுக்கிட்டு இவ்வளவு தூரம் வந்ததோடல்லாமல் கேள்வி வேறு? புத்தி கடிந்துகொள்ள,

( தெரியாம தானே பிடிச்சேன்? ஏன் இப்படி முறைக்கிறான்?)

"இப்போதாவது கையை விடலாம் தானே?"

அப்பொழுது தான் இன்னும் பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையே உணர்ந்தவளாய் பட்டென விலக்கிக் கொண்டாள். ரோமங்கள் நிறைந்த நீண்ட கை. அவளை கடந்து முன்னே சென்றுவிட்டது.

ஆதி கைக்கும் அடுத்தவன் கைக்கும் எப்படி வித்தியாசம் தெரியாமல் போனது? நான் எங்கே கையை பார்த்தேன் கூட்டத்தில் மாற்றிப் பிடித்துவிட்டேன். என்ன நினைத்திருப்பான்? மானம் போச்சே... இந்த குரங்குளை காணுமே எங்கு போய் தேடுவேன்? எல்லாம் பிரபா எருமையால் தான் நாளைக்கு வந்து சாமி கும்பிட்டால் ஆகாதாக்கும்? புலம்பத்தான் முடிந்தது.

வந்ததற்கு ஒரு அட்டன்டன்ஸை போடுவோம்... மீண்டும் முண்டியடித்துக் கொண்டு அம்மனை பார்ப்பதற்குள் மூச்சு திணறிப் போனது நந்தினிக்கு. அங்கு வழிபாடு முடிந்து...

ராஜாதி ராஜ... ராஜ மார்த்தாண்ட.... ராஜ கம்பீர... ராஜ குலத்திலக... ராஜா விஜயேந்திர பூபதி பராக்...பராக்... என கட்டியம் கூற,

தலையில் பட்டுத்துணி கொண்டு பரிவட்டம் (தலைப்பாகை) கட்டப்பட்டு, உடைவாள் எடுத்துக் கொடுக்கப் பட... அதை இடையில் சொருகியதும் வீரத்திலகமிட்டு, மாலை

அணிவிக்கப்பட... மெல்ல மக்களை நோக்கித் திரும்பி கையசைத்தார் அரசர்.

கரகோசமும், ஆனந்த கூச்சலும் காதைப்பிளக்க விழிவிரிய வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு அவனை அடையாளம் காண முடியவில்லை. வெள்ளை சட்டையை நீக்கி வெண் பட்டு அங்கவஸ்திரம் போர்த்தியிருந்தான். கூடுதலாக மற்றவையும் இருக்க 'ஆ' என வாய் பிளக்காத குறையாய் ராஜாவை விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி.

(இன்னும் அரசர்கள் இருக்கிறீர்களா? ராஜா செமையா இருக்கார். ராணியை காணுமே...?. நமக்கெதுக்கு இந்த ஆராய்ச்சி? சீக்கிரமாக அந்த பக்கிகளை கண்டுபிடிக்கணும்.)

இன்று எவன் கரம் பிடித்தாலோ ஆயுள் முழுக்க அவன் அடி பற்றியே வாழப் போகிறாள் என்பது தெரியாமல், ராஜா விஜயேந்திரபூபதியின் ராணியார் இந்த நந்தினி தேவியார் தான் என்பது புரியாமல் நகர்ந்துவிட்டாள்.

கோவில் முழுக்க தேடிவிட்டு குளக்கரைக்கு வர, அங்கே தான் இவள் தேடிய குரங்குகள் மூன்றும் அமர்ந்து நெய் சொட்டிக் கொண்டிருக்கும் பொங்கலை விழுங்கிக் கொண்டிருந்ததுகள். கோப முறைப்புடன் வந்தவளுக்கு ஒரு தொன்னை பொங்கலை கொடுத்து குளிரச் செய்தனர் நண்பர்கள்.

எனோ கூட்டத்தில் தான் பற்றிய முரட்டுக் கரத்தைப் பற்றி நண்பர்களிடம் சொல்ல தோன்றவில்லை நந்தினிக்கு.

அந்த கரம் எவ்வளவு நீளம்? நீண்ட விரல்கள் சீராக வெட்டப்பட்ட நகங்கள். இவனும் மெனிக்யூர் ஏதேனும் செய்வானோ? பளிச்சென்ற வேறு இருந்தன.

அந்த ரோமங்கள் கூட அழகு. சிலரின் கை போல் அதிகமான சுருண்ட ரோமங்களுடன் இல்லாமல் பெண்களின் கை போல் மெலிதாகவும் இல்லாமல் பார்ப்பதற்கே அழகாக இருந்தது. கையில் வித்தியாசமாக ஒன்று வளையல் போல் இருந்ததே... ஆண்பிள்ளை வளையல் போடுவதா?

( நந்து சரியில்லை ஒரு கையைப் பற்றி இவ்வளவு யோசிப்பாயா?)

நான் அவன் முகத்தை சரியாக பார்க்கவில்லையே. சரிதான் கைக்கே இந்த கதி முகத்தை பார்த்திருந்தால் சுத்தம். போதும் விடு காலேஜுக்கு போனால் கிறுக்குத்தனங்களும் வந்துவிடுமோ? மானம் கெட்ட தனமாய் அவளது மனம் தான் கேள்வி கேட்டது.

நந்தினி எப்படி ராணியாக முடியும்?

# அத்தியாயம் 10

மனோகரன் மகனுக்கு அவன் விரும்பியது போல் பைக் வாங்கிக் கொடுத்தார். அன்னையோ புதிய மாடல் கைபேசி வாங்கிக் கொடுத்தார். அவனது நல்ல மதிப்பெண்களுக்கான பரிசுகள் தான் அவை.

இதோ அனைவருக்கும் கல்லூரி ஆரம்பித்து ஒரு வாரமாகிவிட்டது. ஆதியும் பிரபாவும் பைக்கில் சென்றுவிட, நந்தினி முதல் முறையாக பேருந்தில் செல்லத் தொடங்கினாள். நந்தினியின் தந்தை ஸ்கூட்டி வாங்கி தருவதாகத் தான் சொன்னார். ஆதியும்,

" நான் ஓட்ட கற்றுக் கொடுக்கிறேன். நீ தனியாக செல்ல வசதியாக இருக்கும் " என எவ்வளவோ சொன்னான். எங்கே, நந்துவின் பயம் தான் ஜெயித்தது. அன்று முதல் வருட மாணவர்களுக்கான பார்ட்டி. இன்னும் நந்துவுக்கு தோழமைகள் கிடைக்கவில்லை.

அவ்வப்போது நாமும் கொஞ்சம் சிரமப்பட்டு நன்றாக படித்திருக்கலாமோ ...நண்பர்களை பிரிய வேண்டியது இருந்திருக்காதே என்ற வருத்தம் வரத்தான் செய்தது. அன்று எந்த சாத்தன் அவள் தலைக்குள் வந்து ஓதியது எனத்

தெரியவில்லை...(தேவதைகளின் ததாஸ்து இப்படியும் பலிக்கலாம் போல...) உலகமகா அதிசயமாக பாவாடை தாவணியில் கல்லூரிக்கு சென்றாள்.

சிலர் பாராட்ட, சிலர் கேலி போலும் பார்க்க, ஒருவழியாக கல்லூரி முடிந்து பேருந்திற்காக அருகிலிருக்கும் நிறுத்தத்தில் காத்திருக்க... நிறைய மாணவர்கள் ஆங்காங்கே நின்று கொண்டு இருந்தனர்.

வரும் பேருந்துகள் அனைத்தும் நிரம்பி வழிந்தன.

பள்ளிப் பிள்ளைகள், வேலை விட்டு வருவோர் என ஏற்கனவே அதிக மக்கள் இருக்க... முடிந்த மாணவர்கள் தொத்திக் கொண்டனர். கூட்டம் குறையட்டுமென ஒதுங்கி நின்றவள் தன் வேடிக்கை பார்க்கும் வேலையை தொடங்கிவிட்டாள்.

சுற்றி நிற்கும் மாணவர்கள் எல்லோரிடமும் சுற்றி, அவளது பார்வை அங்கு இருக்கும் தர்பூசணி வண்டிக்காரனிடம் வந்தது. அங்கு ஒரு அம்மாவும், குட்டிப்பெண்ணும் பழத்தை சாப்பிட்டுக் கொண்டிருக்க... அவரது இடுப்பில் இருந்த மற்றொரு குட்டி வாண்டு இவளை பார்த்து சிரிப்பதும், அம்மாவிடம் மழலையாய் எதோ சொல்வதுமாக இருக்கவே கொஞ்சம், கொஞ்சமாக அதனருகில் சென்றுவிட்டாள்.

இருந்தும் முன் பின் தெரியாதவர்களிடம் எப்படி பேசுவது என தெரியாமல் நிற்க, அவர்களுக்கு சற்று தொலைவில் மெற்சிடிஸ் பென்ஸ் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து கோபமாக இறங்கிய ஒருவன் குட்டி போட்ட பூனையாய் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தான்.

முக்கியமான சந்திப்பிற்கு சென்று கொண்டிருக்க ஏனென்று தெரியாமல் வண்டி நின்றுவிட்டது. காரோட்டி என்னவென்று பார்க்கத் தொடங்கிவிட, எதிர்பாராத இந்த தடங்களால் சினம் தலை தூக்கினாலும் அதை அடக்கி வேறு வழியில்லாமல் சுற்றுப்புறம் பார்க்க, இந்த பாவாடை தாவணி பெண் அவனை ஈர்த்தாள்.

"எங்கேயோ பார்த்திருக்கிறேன். யார் இவள்? இது என்ன உடை?" அரச குடும்பத்தில் பிறந்து, பள்ளிப் படிப்பை ஊட்டி போர்டிங் ஸ்கூலில் முடித்து, பட்டப்படிப்பை வெளிநாட்டில் முடித்துவிட்டு வந்து இதோ தனது தந்தையின் தொழிலை கடந்த ஐந்து வருடங்களாக எடுத்து நடத்துவதோடல்லாமல் அதில் விஸ்வரூப வளர்ச்சியும் பெற்றிருக்கும் ராஜா விஜயேந்திர பூபதிக்கு தான் இந்த சந்தேகம்.

ஏனெனில் அவன் இதுவரை இப்படி ஓர் ஆடையை பார்த்ததேயில்லை என்று தான் சொல்ல வேண்டும் அவனது

சமஸ்தானத்தில் பெண்கள் இப்படி உடை அணிவதில்லை. பார்ட்டிகளில் பெண்கள் போடும் உடைகளெல்லாம் தெரியும்.

மற்றபடி காரில் ஏறி அமர்ந்துவிட்டால் ரோட்டையெல்லாம் பார்ப்பதில்லை அப்பொழுதும் தனது கணினியில் தான் முகத்தை புதைத்திருப்பான் ஒவ்வொரு நொடியையும் காசாக்குபவன் எப்படி வேடிக்கை பார்ப்பான்?

நந்தினி தன்னை மறந்து... சூழல் மறந்து... அந்த குட்டி குழந்தையிடம் தன் வளையல்களை ஆட்டி அதன் கவனத்தை தன் புறம் திருப்பிக் கொண்டிருந்தாள்... இன்னொருவனின் கவனத்தையும் ஈர்க்கிறோம் என்பது தெரியாமல்.

நந்தினி முத்துப் பற்கள் காட்டி சிரிக்க, அந்த வாண்டும் பல்லில்லா தன் வாயை திறந்து சிரித்தது. தன் கரம் நீட்ட அது தாயிடம் இருந்து தாவ எத்தனிக்க, அப்பொழுது தான் அந்த அன்னை இவளை கவனித்தார்.

"பாப்பா பேரென்ன?" அவள் குரல் கேட்காவிட்டாலும் உதட்டசைவிலிருந்து அவனால் கணிக்க முடிந்தது. இருவரும் ஏதோ பேசிக்கொள்ள அந்த வாண்டு இவளிடம் வந்திருந்தது. அதை தூக்கி சுற்றி குலுங்க சிரிக்க வைத்து தானும் சிரித்துக் கொண்டிருந்தாள் நந்தினி.

அவளை பொறுத்தவரை அங்கு அவர்கள் இருவரையும் தவிர யாருமே இல்லை என்னும் நினைப்புதான் போலும். அவள்

சுற்றும் போது குடை ராட்டினமாய் அவளது பாவாடையும் சுற்றியது. தலையசைக்க அந்த குட்டி ஜிமிக்கி ஊஞ்சல் போல் ஆட, கண்ணெடுக்க முடியாமல் தன் கோபம், இயலாமை, காசாக பார்க்கப்படும் நிமிடங்கள் அனைத்தையும் மறந்து ஆனந்தமான சூழலில் அவனும் நின்றான்.

குழந்தையை பார்த்து அவள் உதடு பிதுக்க... அந்த அழகு சிறு சிரிப்பை கூட தோற்றுவித்தது விஜயேந்திரனுக்கு. (ராஜாக்கு நாங்க டெடிகேட் பண்ற பாட்டு....மொத தபா பாத்தேன் உன்னை, பேஜாராகி போய் நின்னேன் ...)

காரோட்டி வண்டி தயாராகிவிட்டதாக சொல்ல, கடிகாரத்தைப் பார்க்க, நீண்ட பத்து நிமிடங்கள் இவளோடு சேர்ந்து தானும் தன்னிலை மறந்து நின்றிருக்கிறோம் எனத் தோன்ற... அவ்வளவு நேரமும் தான் அனுபவித்த சந்தோசத்திற்கு, தன் கவலைகள் மறந்து நின்றதற்கு அவள் தான் காரணம்.

இவளுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் இப்போதைக்கு ஒரு நன்றியாவது சொல்ல வேண்டும் என அருகே வந்தான். அதற்குள் அந்த குழந்தைகளும், தாயும் இவளிடம் விடைபெற்று நடக்க தொடங்கியிருந்தனர்.

நந்தினி அவர்களையே பார்த்துக் கொண்டிருக்க, அந்நேரம் தன் இடையில் ஏதோ ஊறுவது போல் தோன்ற சட்டென பார்க்க

ஒரு கை அங்கிருந்து வேகமாக விலகியது. கோபமும், அவமானமும் போட்டி போட மின்னலென திரும்பிப் பார்க்க மெல்லிய புன்னகையுடன் நின்றவனை பார்த்தவளுக்கு கோபம் வெறியாகிப் போனது.

எவ்வளவு திமிர் தொட்டது மட்டுமல்லாமல் சிரிக்கவும் செய்கிறானே! என்னைப் பார்த்தால் எப்படி தெரிகிறது? வெறி கொண்டவளாய் எம்பி நின்று அவன் கன்னத்தில் அறைய... அதிர்ந்து விழித்தவனை பார்த்து,

"பொறுக்கி நாயே செருப்பு பிஞ்சிரும்!" என பெண் சிங்கமாய் கர்ஜிக்க அருகே கூட்டம் கூடிவிட்டது. (நாங்க பாட்டு போட்டா... நீ சங்கூதுரியே) சட்டென அவளிடமிருந்து விலகி தன் காரில் அமர்ந்தான் விஜய் குருப்ஸ் ஆப் கம்பெனியின் CEO, இன்று நாடளவில்லை என்றாலும் அரசனே...

அவமானத்தில் முகம் சிவக்க, அவளது விரல் தடம் ட்ரிம் பண்ணப்பட்ட தாடியையும் தாண்டி லேசாகத் தெரிய அவளை கதறடிக்கும் வெறியும், வன்மமும் பெறுக, கோபத்தில் விழிகள் சிவக்க தன் சந்திப்பை தவிர்த்துவிட்டு அரண்மனை நோக்கி சென்றான் ராஜா விஜயேந்திர பூபதி. (இது தான் சனியனைத் தூக்கி பனியனில் போடுறதா?)

என்ன ஒரு திமிர்? நன்றி சொல்லப் போனால் அடிப்பாளா? எவனோ ஒருவன் என்னவோ செய்துவிட்டு போக இந்த

சிற்றரசன் அவமானப்பட வேண்டுமா? தீண்டியது யாரென பகுத்தறிய முடியாமல் அப்படி என்ன கோபம்? தவறு செய்யாதவனை தண்டிக்கும் அளவிற்கு... இவளுக்கு பாடம் கற்றுக் கொடுக்கும் வரை என்னால் அமைதியாக மற்றவற்றை பற்றி யோசிக்க முடியாது.

ஒரு சாமானியப் பெண் பலபேர் முன்னிலையில் என் மீது கை வைத்துவிட்டாள். கோபத்தில் எதிரே இருந்த டெம்பெர்ட் கிளாஸ் டேபிள் தூள் தூளானது. கையெங்கும் ரத்தம் வழிய தன்னை சமணப் படுத்திக் கொண்டவன், மருத்துவருக்கு அழைத்து சிகிக்சை பெற்றுக் கொண்டான். அதோடு அவளை தண்டிப்பதற்கான வழியையும் கண்டுபிடித்திருந்தான்.

(விஜய்... நீ எல்லாம் கிளாசை உடைச்சு ரத்தம் வர வைக்கிற... நந்து பேசியே காதுல இருந்து ரத்தம் வர வைப்பா.... மைன்ட் இட் !)

நந்தினியோ, பேருந்தில் போவதால் தானே கண்ட நாயும் கை வைக்குது. அந்த முகரக்கட்டை எவ்வளவு யோசித்தாலும் நியாபகம் வரமாட்டேங்குதே... இவனையெல்லாம் போலீசில் பிடித்துக் கொடுக்க வேண்டும். பொறுக்கி... பொறுக்கி இதுக்காகவே வருவானுக போல... திட்டித் தீர்த்தவள்,

தந்தை வந்ததும் முதல் வேலையாக அன்றே போய் ஸ்கூட்டி வாங்கி வந்ததோடல்லாமல், அடுத்த ஒரு

வாரத்திலேயே நண்பர்களின் உதவியுடன் நன்றாக ஓட்டவும் கற்றுக் கொண்டாள். தேவையென்று வந்துவிட்டால் பயமாவது மண்ணாவது? நண்பர்களிடம் இந்த நிகழ்வை பகிர்ந்து கொள்ளவேயில்லை.

ஒருவேளை சொல்லியிருந்தால் நடக்கவிருக்கும் விபரீதத்தை தடுத்திருக்க முடியுமோ... அப்படியும் சொல்வதற்கில்லை திட்டமிடுவது விஜயேந்திரனாயிற்றே... அவனது திட்டம் என்றுமே தோற்றதில்லை.

நந்தினி யாரோடும் சேர்வதேயில்லை. தானுண்டு தன் படிப்பு உண்டு என கல்லூரிக்கு சென்று வந்து கொண்டிருந்தாள். ஆதிக்கும், பிரபாவுக்கும் படிக்க வேண்டியது நிறைய இருந்தது. இருந்தும் நண்பர்கள் மூவரும் கூட்டு சேர்ந்து கொட்டமடிப்பதில் எந்த குறையும் இருக்கவில்லை. இப்பொழுது அவர்களுக்கு பேசவும் நிறைய விஷயங்கள் இருந்தன.

ஆதியை போல் நிறைய ஹாட் ஃபிகர்கள் இருந்ததால் ஆதிக்கு அதிக தொந்தரவு இல்லை என்னும் நிலை உருவாகியிருந்தது. நந்து முன்னெச்சரிக்கையுடன் அனைவரிடமும் பத்தடி விலகி நின்றே பழகுவதால் அவளுக்கும் அதுபோன்ற தொந்தரவுகள் கிடையாது. பிரபா சொல்லவே வேண்டாம் வேலைக்கு போனால் தான் மற்றதெல்லாம் என்பதில் உறுதியாகவே இருந்தான்.

விஜயேந்திரன் நந்தினிக்கான தண்டனையை முடிவு செய்ததோடு சும்மா இருந்துவிடவில்லை. அவளைப் பற்றிய தகவல்கள் அனைத்தையும் திரட்டினான். பெற்றோர், படிப்பு, நண்பர்கள், பொழுதுபோக்கு, பிடித்தம், பிடித்தமின்மை,ஏன் சொந்தபந்தங்களைக் கூட விட்டுவைக்கவில்லை.

அனைத்து தகவல்களும் கைவரப் பெற்றதும் அன்று கோவிலில் தன் கரம் பற்றியவள் இவள் தான் என்பது தெள்ள தெளிவாக தெரிந்து போனது. அதனால் தான் பார்த்த முகம் போல் தோன்றியிருக்கிறது.

அந்நிய ஆடவனின் கரம் பற்றுகிறாயே என இவள் கொடுத்தது போல் ஒன்று கொடுத்திருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்காது. அவளது முகம் மனதில் பதிந்திருக்கும். அதன் பிறகு இவள் இருக்கும் திசை பக்கம் கூட திரும்பியிருக்க மாட்டேன். எத்தனை பெரிய அவமானம். கொஞ்சமும் குறையவில்லை கோபம்.

அவனும் இந்த சாமானிய பெண்ணுக்கு இவ்வளவு பெரிய தண்டனை அவசியம் தானா? கொஞ்ச நாட்களுக்குப் பிறகு யோசிக்கலாம் என்று கூட தள்ளி போட்டு பார்த்தான். இதோ ஒரு வருடமாகிவிட்டது இன்னும் அதே அவமானமும் கோபமும் குறையாமல் இருக்கவே. மாற்று வழிகள் யோசித்தான். ஏனெனில் அவன் முடிவு செய்திருந்த தண்டனை அவளோடு சேர்த்து

அவனையும் பாதித்துவிடுமோ என்னும் நெருடல் அவனுக்கே இருந்தது.

"யாருமற்ற அனாதையாய் தெருவில் நிறுத்தினால் என்ன? இல்ல, அடித்த கையை வெட்டிவிட்டால் என்ன? தொட்டேன் என்று தானே அடித்தாள் அதையே நான்கு பொறுக்கிகளை கொண்டு காங் ரேப் போல்... ச்சே என்ன இது? விஜயேந்திரா உன் தரம் தாழ்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறாய் என்பது உனக்குப் புரிகிறதா?

நாடாளவில்லை என்றாலும் நீ இன்றும் அரசன் தான் உன், குடிகளை காக்கா வேண்டிய பொறுப்பில் இருப்பவனின் சிந்தனை இவ்வளவு கேவலமாக யோசிக்கலாமா?" அவன் மனமே அவனை அதட்டி அடக்கியது.

(நீ ராஜாவா ரவுடியா...அவ தொட்டதுக்கே அடிக்கிறா... நீ ரேப் அது இதுன்னா உன்னைக் கொன்றுவா... பார்த்துக்க)

வேறு வழியில்லை நாகரீகமான முறையில் தண்டிக்க வேண்டுமானால் இதை செய்தே தான் ஆக வேண்டும். இறுதி முடிவை எடுத்துவிட்டான்.

இரவு வீட்டிற்கு வந்ததும் அன்னையை பார்த்து அவரது உடல் நிலை, அன்றய நடப்புகள் எல்லாவற்றையும் பேசிய பின்பு தான் படுக்க செல்வது வழக்கம். அன்றும் அப்படி தான் பேச்சு ஆரம்பித்தது.

"விஜயேந்திரா! இன்று ரகுநந்தன் என்னை பார்க்க வந்திருந்தான்." மகனின் முகத்தை ஆழ்ந்து நோக்க பெரிதாக எந்த பிரதிபலிப்பு இல்லாமல்,

"தங்கைக்காக தூது வந்திருப்பான்..." விட்டேற்றியாய் வந்து விழுந்தன வார்த்தைகள். இதை கேட்டதும் அன்னைக்கு பெரும் நிம்மதி தான். ரகுநந்தன் ராஜா மகேந்திர பூபதியின் ஒன்றுவிட்ட தங்கை கஸ்தூரியின் மகன்.

விஜயேந்திரனுக்கு தொழில் ரீதியான போட்டியாளன். அவனுக்கு நிர்மலா தேவி என்னும் ஒரே தங்கை. தங்கையின் மீது கூடுதல் அன்பு தான். நிர்மலா தேவி விஜயேந்திரனிடமே அவனை விரும்புவதாகவும் அவனில்லாவிட்டால் வாழ்க்கையே இல்லை என்றும் பல முறை சொல்லி, இல்லை மன்றாடிவிட்டாள் என்று கூட சொல்லலாம்.

கடைசியாய் என்னை தவிர நீ யாரை மணந்தாலும் உயிர்துறப்பேன் என்ற மிரட்டல் வேறு அதற்காக தான் அவன் தூது வந்திருப்பான் என அனைத்தையும் அன்னையிடம் சொல்லி முடித்தான்.

ராணி அம்மாவுக்கு தனது மகள் விஜயரேகாவின் நாத்தனார் ரேணுகா தேவியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்ததால் மகனுக்கும் நிம்மியின் விஷயம்

விருப்பமில்லாத ஒன்று என தெரிந்ததும் மகிழ்வு தான் அதையும் பேசி முடித்துவிட எண்ணி,

"விஜயேந்திரா! ரேகாவின் நாத்தனார் ரேணுகா படிப்பை முடித்துவிட்டு ஊருக்கு வந்துவிட்டாளாம். விரைவில் திருமணம் முடிக்கலாம் என பார்க்கிறார்களாம்... அவளது மாமியார் உன்னை மருமகனாய் எற்றுக்கு கொள்ள விரும்புவதாக கூறி ரேகாவை நம்மிடம் கேட்க சொல்லியிருக்கிறார்." சொல்லும் போதே அன்னையின் முகத்தில் தோன்றிய பிரகாசத்தை கவனித்தவன்.

"வேண்டாம் அம்மா. அவர்களை வேறு இடம் பார்க்கச் சொல்லுங்கள் ஒரே வீட்டில் பெண் கொடுத்து, பெண் எடுப்பது நன்றாக இருக்காது ஒருவரது பிரச்சனை இருவரது வாழ்வையும் பாதிக்கும்." தாட்சணியமற்ற மறுப்பு.

"நாம் அவளை நன்றாக வைத்துக் கொண்டால் எங்கிருந்து பிரச்சனை வரப்போகிறது? அதோடு நம் ரேகாவும் அங்கு இன்னும் நன்றாக இருப்பாளே..." பெண்ணை பெற்றவரால் விடமுடியவில்லை.

"இப்பொழுது அக்காவிற்கு என்ன குறை? ஏதேனும் இருந்தால் சொல்லுங்கள் போய் பேசுவோம். அதை விடுத்து இது வேண்டாம்... மேலும் சிக்கலை உண்டு பண்ணும். பிரச்சனை என்பது கணவன் மனைவிக்கிடையே பொதுவான ஒன்று.

அதிலும் நம் குடும்பங்களில் இன்னும் கூடுதலாகவே இருக்கும் இருவரும் சரிநிகர் சமாணம் என்பதுபோல்." இதற்குமேல் மறுக்க முடியாமல்

"அப்பொழுது வேறு சமஸ்தானங்களில் இருந்து வரும் ஜாதகங்களை பார்க்கவா?"

"வேண்டாம் அம்மா! உங்கள் மருமகளை நான் முடிவு செய்துவிட்டேன்... இன்னும் இரண்டு வருடங்கள் போகட்டும்."

"இதிலும் எனக்கு வேலை வைக்கக் கூடாது என நீயே முடிவு செய்துவிட்டாயா விஜயேந்திரா? எந்த சமஸ்தானத்து இளவரசி அவள்?" விரிந்த புன்னகையுடன் மகனின் முகம் தாங்க அன்னையின் முகம் பார்க்கமுடியாமல், முயன்று வரவழைத்த புன்னகையுடன், எழுந்து அங்கிருக்கும் ஜன்னலின் வழியாக நிலவில்லா வானத்தை வெறித்தவன்,

"மன்னித்துவிடுங்கள் அம்மா... அவள் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த சாமானிய பெண்."

"விஜயேந்திரா!" அன்னையின் அதட்டல் பலமாய் ஒலித்தது. இது அவன் எதிர்பார்த்தது தான் என்பதால் ஆழ்ந்த மூச்சுகளின் மூலம் தன்னை சமன் செய்து கொண்டவன், ரௌத்திரமாய் நிற்கும் அன்னையின் முன் மண்டியிட்டு கரம் குவித்து,

"எனக்கு அவள் வேண்டும் அம்மா! அவள் இல்லாவிட்டால் நான் மனதிற்குள் குமைந்தே இறந்துவிடுவேன். நான் நிம்மதியாக

வாழ வேண்டுமென்றால் அவள் வேண்டும். நான் நானாகவே இல்லை அம்மா. என்று அவள் கரம் பிடிக்கிறேனோ அன்று தான் என்னால் இயல்பாக சுவாசிக்க முடியும்.''

ஒற்றை யானையாய் இந்த சாம்ராஜ்யத்தியே கட்டி காப்பவன்... தன் முன் மண்டியிட்டு கரம் கூப்புவதை சகிக்க முடியாமல்,

"உன்னை இந்த நிலைக்கு கொண்டு வந்த பெண் யார்?" கம்பீரமான பார்வையுடன் மகன் முகம் நிமிர்த்த,

"பெயர் நந்தினி. பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள். கந்தவேலன் காலனியில் வாடகை வீட்டில் வசிக்கின்றனர். கம்பியூட்டர் சயின்ஸ் மாணவி. பரதம் பயின்றிருக்கிறாள், உயிருக்குயிரான இருநண்பர்களும், டிவியும் தான் அவள் பொழுதுபோக்கு. எனக்கும் அவளுக்குமான வயது வித்யாசம் எட்டு ஆண்டுகள். குழந்தைகள் என்றால் கொள்ளை பிரியம். (அந்த நொடி அவன் கண்களில் வெறி தோன்றியதோ?) நம் குடும்பத்துக்கும் அவளுக்கும், அவளது பழக்க வழக்கங்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள தொடர்பு தான். ஆனாலும் எனக்கு அவள் வேண்டும்."

"பேரழகியோ?"

"ஆஹா! அழகை பார்த்து மயங்குபவனா உங்கள் மகன்? என்னைப்பற்றி உங்கள் கணிப்பு இது தானா? எங்களது தோற்ற

பொருத்தம் ராஜாளியும் தேன்சிட்டையும் போல் தான் இருக்கும். எனக்கும் அவளுக்கும் எந்தவிதத்திலும் பொருத்தம் இல்லை அம்மா. ஆனாலும் அவள் வேண்டும் அவளில்லாத வாழ்வு எனக்கு நரகம்."

(நந்து... இங்க ஒரு ராஜா உனக்காக கெஞ்சிட்டு இருக்கான்... ஆனா இது வரமா... சாபமா?)

இறுகிய குரலில் சொன்ன மகனின் தோள் பற்றியவர்,

"என்ன தவறு நடந்தது விஜயேந்திரா? கொஞ்சமும் பொருத்தம் இல்லாதவளை தான் கட்டுவேன் என ஏன் இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறாய்? ஏதேனும் நடக்க கூடாத தவறு நடந்துவிட்டதா?" தன் வளர்ப்பு பொய்த்துப் போனதோ என்னும் சந்தேகம் வந்துவிட்டது அந்த தாய்க்கு.

"நான் உங்கள் மகனம்மா. [நடக்க கூடாத தவறு தான் நடந்துவிட்டது. என்னவென்று நான் சொன்னால் நீங்கள் அருவருப்பும் கோபமும் அடையக் கூடிய தவறு தான் நடந்துவிட்டது. என் நெஞ்சத்தில் ஆரா ரணமாய்... வேதனையாக இருக்கிறதம்மா...] என்று மனதினுள் ரௌத்திரமாய் நினைத்தவன், அவளை மணக்க சம்மதம் சொல்லுங்கள் அம்மா..." மீண்டும் கையேந்தினான்.

"ஒரு முறைக்கு இருமுறை யோசித்துக் கொள். இந்த திருமணம் நமக்கு பெரும் எதிர்ப்பை உண்டாக்கும். நம்

மரியாதையை குறைக்கும், உன் அக்காவின் வாழ்வைக்கூட பாதிக்கலாம்." தெளிவாக எடுத்து சொன்னார் ராணியம்மா.

"எதுவாக இருந்தாலும் சந்திக்க தயார் அம்மா. அதிகபட்சம் அக்காவை நம் வீட்டிற்கு அனுப்பமாட்டார்கள் அவ்வளவு தானே சமாளிக்க நான் தயார்." இவ்வளவு வீம்பாய் கட்டுமளவிற்கு என்ன தான் நடந்திருக்கும்? என்று யோசித்த ராஜமாதா ,

"பார் விஜயேந்திரா, சிறுபெண் என சொல்கிறாய். நன்றாக யோசித்துக் கொள்."

"ஒருமுறைக்கு நூறு முறை யோசித்து தான் சொல்கிறேன் அம்மா. எனக்கு அவள் தான் வேண்டும்." இனி பேசுவதற்கு ஒன்றுமில்லை என தோன்றிவிட மகனை அவன் போக்கிற்கே விட்டுவிட்டார் என்று தான் சொல்லவேண்டும்.

அவருக்கு பிடித்தமில்லை என்பது அப்பட்டமாக தெரிந்தபோதும் சம்மதித்ததே போதும் என அவனும் பாதி பாரம் குறைந்த நிம்மதியில் தூங்கிப் போனான்.

நிவி இந்த வருடம் பத்தாவது. மற்ற பாடங்களில் எல்லாம் எந்த பிரச்சனையும் இருப்பதில்லை இந்த கணிதம் தான் ஏன் இப்படி படுத்துகிறதென்று ஆதி அத்தானை பாடாய்படுத்தி அவனிடம் கொட்டு வாங்கி, கொட்டு வாங்கி கற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது என்னும் கவலை தான்.

நாளை மறுநாள் டிஸ்ட்ரிக்ட் மீட்டில் இவளது தலைமையில் இவள் பள்ளி அணி கால்பந்து விளையாடப் போவதைப் பார்க்க வருமாறு ஆதியை நச்சரித்துக் கொண்டிருக்கிறாள்.

"நீ பெரிய வேர்ல்ட் கப் க்கு விளையாடுகிறாய், நான் வந்து பார்ப்பதற்கு! உன் டீம் ஒரு டப்பா டீம். நிச்சயம் தோற்க தான் போகிறாய். இந்த காமெடியை நான் தடவை வேஸ்ட் பண்ணி பார்க்க வேறு வரணுமா?" என்றவனது கேலியில் அவள் மனம் சுங்கியது.

(இவன் ஏன் எப்போதும் என்னை மட்டம் தட்டியே பேசுகிறான்? இந்த மேட்சில் நிச்சயம் ஜெயித்துக் காட்ட வேண்டும்!) என உறுதி பூண்டவள், அங்கிருந்து நகர்ந்து விட்டாள். செமி பைனலில் இவளது அணி வெற்றி பெற்று பைனல்ஸில் தேறிவிட்டது.

நாளை இறுதி ஆட்டத்திலும் ஜெயித்துவிட்டு கப்போடு வந்து தான் இவனோடு பேச வேண்டும்!" என தனக்குள்ளாகவே சூளுரைத்துக் கொண்டவள், அவனிடம் வாய் கொடுக்காமல் படுத்துக்கொண்டாள். (நீ ம்... சொல்லு செல்லம் இவன் மண்டையை புட்பால் ஆக்கி கோல் போடுவோம்!)

"என்னடீ, இன்று மேட்ச் எப்படி இருந்தது? தோற்றுவிட்டாயோ? அதான் வாயைத் திறக்காமல் இருக்கிறாயா?" மீண்டும் அதே கேலி.

"நான் ஜெயித்தால் மட்டும் என்ன செய்திருப்பீர்கள் ஆதி அத்தான் ? என்னோடு விளையாடியவங்க, எங்களை விட டம்மி பீசான்னு கேட்கப் போறீங்க? இதுக்கெதுக்கு சொல்லணும்?"

"அடப்பாரடா! கோபம் வருது, இதை நாளைய மேட்சில் காமி! வெட்டி ரோஷம் வேலைக்காகாது. வெறியோட விளையாடனும்!"

“ ஜெயித்துவிட்டால் என்ன தருவீங்க?" என்பவளின் முறைப்பைக் கண்டவன்,

"நான் ஏன்டீ தரணும்... டோர்னமெண்டில் கப் கொடுப்பாங்க வாங்கி வந்து காபி ஊத்திக் குடி!" என கண் சிமிட்டினான். (காபி பொடி வாங்கியே காசைக் கரைப்பாங்க போல...)

"இவனோடு பேசவே முடியாது! அத்தை சொல்வது போல் சரியான தடியன்!" என முணுமுணுக்க,

"என்னடீ முணுமுணுப்பு?"

"ம்... சரியான தடியன்னு சொன்னேன்! போதுமா?"

"தடியனா? நானா? திமிர் தாண்டீ உனக்கு! பாவம், சின்ன பிள்ளை, போனா போகட்டும்னு வேலை மெனக்கெட்டு உனக்காக வந்து படுக்கிறேன்ல, ஏன் சொல்ல மாட்டாய்?" என அவள் காதைத் திருக ,

"வலிக்குது ஆதி அத்தான் !" அவனிடம் சரண்டரானாள்.

செமிபைனல்ஸைப் போலவே அவன் இன்றும் வரப் போவதில்லை, எதற்காக தேடி நேரத்தை வீணடிக்க வேண்டும்? என எண்ணமிட்டாலும், அவ்வப்பொழுது கண்கள் ஆதியின் முகம் தேடி அலையத் தான் செய்தன.

அன்றைய ஆட்டம் கொஞ்சம் சவாலாகத் தான் இருந்தது. முதல் பாதி வரை இருவருமே கோல் போடவில்லை. சிறிய ஷார்ட்ஸும் பனியனுமாக குளிர்ந்த நீரை முகத்திலடித்து கொண்டிருந்தவளுக்கே அருகே ,

"டேவிட் பெக்கம் நம்பர் வைத்திருந்தால் மட்டும் போதாது, அவரளவுக்கு இல்லைன்னாலும் , அந்த எண்ணின் மரியாதையைக் காப்பாற்றவாவது சிறப்பாக விளையாட வேண்டும்! உன் சோர்வே உனது முதல் எதிரி! " என கூறியபடி அவளை ஆழ்ந்து நோக்க,

"ஆதி அத்தான்...! எப்போ வந்தீங்க?"

"இப்போ அதுவா முக்கியம்? நான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறேன், நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் ? இதற்காகத் தான் நான் வர மாட்டேன்னு சொன்னேன். எப்படியும் தோற்கப் போகிறாய்... எனக்கு தான் நேர விரயம்!"

"நிச்சயம் நாங்கள் ஜெயிப்போம் ஆதி அத்தான், பாருங்களேன்!"

"உன் வாய் ஜாலத்தைக் கேட்க நான் வரவில்லை, ஜெயித்துக்காட்டு பார்க்கலாம்!"

"ஜெயித்துவிட்டால் என்ன தருவீர்கள்?"

"என்னையே தருகிறேன்!" என வாய் வரை வந்த வார்த்தைகளை அடக்கி, உனக்கு வேண்டியதைக் கேள், தருகிறேன்! ஒரு வேளை நீ தோற்றுவிட்டால் இனி என்னைக் கூப்பிடாதே, விளையாட்டைப் பார்ப்பதற்கு மட்டுமல்ல... இரவிலும் (மெரட்டுரராராமாம் ...)

அவ்வளவு தான் , 'இது என்ன கொடுமை!' என பதறியவள், தன் திறன் முழுவதையும் உபயோகப்படுத்தினாள். அதைப் பார்த்தவனுக்கு, அதற்காகவே அவளுக்கு பரிசு கொடுக்க வேண்டுமெனத் தோன்றியது.

கடைசி மூன்று நிமிடங்களுக்கு முன் தன் முதல் கோல் மற்றும் கடைசி கோலை போட்டு, இவளது அணியே வெற்றி பெற்றது. சந்தோஷ கூச்சல் மைதானத்தையே அதிர வைக்க,

"பரவாயில்லைடா உன் தங்கை ரோஷக்காரி தான்! " என பிரபாவிடம் பேசிக் கொண்டிருந்தவனை , ஓடி வந்து அனைத்துக் கொண்டவளுக்கு வெற்றி பெற்ற மகிழ்வு மட்டுமே இருந்தது. எதிர்பாராத அணைப்பில் ஆதி தான் திணறிப் போனான்.

முதல் முறையாக அவன் கன்னங்களை கிள்ளிக் கொண்டே,

"எப்படி ஆதி அத்தான்?" என புருவம் உயர்த்த,

"அது தான் டீ எனக்கும் புரியலை... எப்படி ஜெயித்தாய்?" என்றான் குறும்பாக.

"பாருங்கண்ணா!" என சிணுங்கியவளை தோளோடு அணைத்து ,

"அவனுக்கு பொறாமை நிவி! விடாதே... உனக்கு வேண்டியதைக் கேட்டு வாங்கிக் கொள்!" என கிளப்பி விட்டான் பிரபா.

"அடப்பாவி! அவள் மறந்தாலும், நீ விடமாட்ட போல! சொல்லுடீ , உனக்கு என்ன வேணும்? சாக்லேட், டிரஸ், சினிமா இல்ல நம்ம அம்சவல்லி பவனில் சிக்கன் பிரியாணி என்ன வேணும் சொல்லு?"

"மச்சான் நான் பஸ்ல போறேன் நீ நிவேதாவை கூட்டிகிட்டு வா...' ஆதி பதில் சொல்லும் முன்னமே கிளம்பிவிட்டான் பிரபா.

"ம்ஹூம்... எனக்கு இது எதுவுமே வேண்டாம். என்னை உங்க முதுகில் தூக்கிகிட்டு இந்த கிரவுண்டை சுத்தி வரணும்." புருவம் தூக்க மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது ஆதிக்கு.

இந்த குட்டி பிசாசு என்னை கதறடிக்கணும்னே தான் இதெல்லாம் பண்ணுதோ... (ஹஹா... நீ அவளை மெரட்டுறியா... அவ உன்னை எப்படி வச்சு செய்யுறா பாரு...)

"போடி பூசணிக்கா அதெல்லாம் முடியாது."

இதில் யார் வெற்றி பெறுவார்கள்?

# அத்தியாயம் 11

ஆதி அவளை தூக்க முடியாதென மறுக்க...

"ஆதி அத்தான், இது தப்பு. சொன்னா... சொன்னபடி செய்யணும்." முகம் திருப்பிக் கொண்டாள்.

"ஏய் இம்சை... படுத்தாதடி. வேற எதாவது கேளு"

"இதைச் செய்ய முடியுமா முடியாதா? உங்களுக்காகத் தான் இவ்வளவு கஷ்டப்பட்டு ஆடினேன் தெரியுமா?"

வெகு நேரம் சென்ற பிறகும் அங்கேயே அமர்ந்திருந்தனர். இவர்கள் இருவரையும் தவிர அங்கு வேறு ஒருவரும் இல்லை. இப்படியே அமர்ந்திருக்க முடியாதே... என்ன ஆனாலும் உன்னை தூக்கப் போவதில்லை. முடிவுக்கு வந்தவனாய்,

"வாடி, வந்து வண்டியில் ஏறு." பைக்கை ஸ்டார்ட் பண்ணிவிட்டு நிற்க, அவளோ அவனை கடந்து நடந்து சென்று கொண்டிருந்தாள்.

"ஏய் இம்சை... எங்க போற? உனக்காகத் தான் பிரபா பஸ்ல போறான். மரியாதையா வந்து வண்டியில் ஏறு." அதையெல்லாம் அவள் காதிலேயே வாங்கவில்லை. வண்டியை எடுத்தவன் அவளுக்கு முன்னே குறுக்காக நிறுத்தி.

"இப்போ என்னடி வேணும் உனக்கு?" அவள் வாயே திறக்கவில்லை. (வீம்புக்காரி) மீண்டும் தன் நடையை துவங்க அவள் கரம் பற்றி நிறுத்தியவன், வண்டியை விட்டு இறங்கி அவள் கையில் இருந்த பையை பறித்து கீழே வீசிவிட்டு, சுதாரிப்பதற்குள் பின்புறமாக அவளை தன் முதுகில் தூக்கிக் கொண்டான். முதுகோடு முதுகு உரச ஓடத் தொடங்கினான். நிவேதா பயந்து போனாள்.

"ஆதி அத்தான்... போதும் நிறுத்துங்க!! கீழே விழுந்துடப் போறேன். ப்ளீஸ்... ஆதி அத்தான்." கால்களை மடக்கி வானம் பார்த்து அவன் முதுகில் பயத்துடன் ஒரு பயணம். அவள் விரும்பியது போல் அந்த கிரவுண்டை முழுவதுமாக சுற்றி வந்த பிறகே இறக்கிவிட்டான்.

மேல்மூச்சு, கீழ் மூச்சு வாங்க கால்களைப் பிடித்துக் கொண்டு நின்றவனை அசையாது பார்த்துக் கொண்டிருந்தாள் நிவேதா. மெல்ல இயல்புக்குத் திரும்பியவன்,

"இப்போ வண்டில வருவ தானே?"

"தேங்க்ஸ் ஆதி அத்தான்!" அவனை கட்டிக் கொண்டவளை ஆசையாக பார்த்தவன் தன் உணர்ச்சிகளை வெகு சிரமப்பட்டு கட்டுக்குள் கொண்டுவந்து சிறு சிரிப்புடன் வண்டியை எடுத்துவிட்டான்.

நிவேதாவுக்கு பத்தாவது பப்ளிக் எக்ஸாமும் வந்துவிட்டது. ஆதியின் தயவால் அனைத்தும் படித்திருந்தாலும் எல்லாம் மறந்து போனது போல் ஒரு புரியா நிலை. தூக்கம் வரவில்லை. காலையில் முதல் பரிட்சை... நன்றாக எழுதவேண்டும்... நல்ல மதிப்பெண்கள் வாங்கவேண்டும். ஆதி அத்தான் வெரி குட் சொல்லவேண்டும் அவள் மண்டைக்குள் இது தான் ஓடிக் கொண்டிருந்தது.

எவ்வளவு நேரம் தான் அவனும் பொறுமையாக அந்த குட்டி கட்டிலில் முதுகோடு முதுகு உரசப்படுத்துக் கொண்டிருப்பது (தினமும் தீப்பிடிப்பது போல் இது ஒரு இம்சை. முதலில் இதை மாற்ற வேண்டும்.)

"ஏய் இம்சை தூங்காமல் இன்னும் என்ன தான் செய்கிறாய்? கண்ணை மூடி தூங்கி தொலை.'

"திட்டாதீங்க ஆதி அத்தான். எனக்கு தூக்கம் வராது. நீங்கவேனா உங்க ரூமுக்கு போங்க. தூங்கும்வரை தான் அவன் இங்கிருப்பான் என்னும் ரகசியம் இப்பொழுது அவளுக்கு தெரிந்திருந்தது.

"ஏன் தூக்கம் வராது? நாளை காலையில் பரிட்சையை வச்சுக்கிட்டு இப்படி முழிச்சிகிட்டு இருந்தா அங்கு போய் தூங்க வேண்டியது தான் நல்ல மார்க்கு வாங்குற கனவில் பெயிலாகி தொலைக்கப் போற ஒழுங்கா தூங்கு."

"எனக்கு தூக்கம் வரல பயமா இருக்கு. நான் உங்களை கட்டிபிடிச்சுக்கவா?"

"என்னது?" அதிர்ந்து போனவனாய் எழுந்து அமர்ந்துவிட்டான். அவனோடு சேர்ந்து எழுந்தவள்…

"ம்ம்… உங்கள கட்டிபிடிச்சுகிட்டா எனக்கு பயமெல்லாம் போய்டும் ஆதி அத்தான் அப்படியே தூங்கிருவேன். ப்ளீஸ்… ப்ளீஸ்…" என கெஞ்ச

"ஏய் லூசு விளையாடறியா? ஒழுங்கா மரியாதையா தள்ளி படுத்து தூங்கு இல்ல நான் என் ரூமுக்கு போய்டுவேன்."

"போங்க… நாளைக்கு எக்ஸாம் ஹால்ல தூங்கி நான் பாஸ் பண்ணாம போய்ட்டேன்னா அதுக்கு நீங்க தான் காரணம் சொல்லிட்டேன்." முகம் திருப்பிக் கொண்டாள்.

"உன்னால என்னைக்கு அம்மாகிட்ட மாட்டப் போறனோ… இதோ பாரு கட்டிப்பிடிக்கிற வேலையெல்லாம் வேண்டாம். என் மடியில் படுத்துக்கோ நான் நெற்றி வருடிக் கொடுப்பேன் தூங்கிடணும் சரியா?"

"பாக்கலாம், எனக்குத் தூக்கம் வராது…" நச்சென அவள் தலையில் கொட்டியவன்,

"கொன்னுடுவேன். முதல்ல தூங்கணும்னு நினை. அப்போ தான் தூக்கம் வரும் மூஞ்சியை பாரு பிசாசு… கண்ணை மூடுடி" அவ்வளவு தான்…

இறுக கண்களை மூடி அவன் மடியில் படுத்து வயிற்றில் முகம் உரச அவளது மூச்சுக்காற்று அவனை சுகமாய் இம்சிக்க அவள் தலையை வயிற்றோடு இறுக்கிக் கொள்ள நீண்டுவிட்ட தன் கரம் கண்டு மிரண்டு போனான்.

'என்ன காரியம் செய்ய துணித்துவிட்டோம்? இவள் அருகாமை அநியாயத்துக்கு படுத்துதே. சீக்கிரம் வளரந்துவிடேன் தங்கம்....' தவிப்பும், ஏக்கமுமாய்...

"ஏய் அந்தப்பக்கம் திரும்பி படு!" குரலே எழும்பவில்லை அவனுக்கு.

'இப்படி ஏதாவது சொல்லிக்கிட்டே இருந்தா எப்படி தூங்குறது? சொன்னா திட்டுவான் போடா லூசு'

ஏனோ அவளிடமிருந்து கரத்தை விலக்க மனமின்றி நெற்றியை வருடிக் கொடுக்க, இதமான வருடலில் கொஞ்ச நேரத்தில் தூங்கிப் போனாள். இரண்டு பரிட்சை முடிந்ததும் தைரியம் தானாகவே வந்துவிட்டது போலும்...

"ஆதி அத்தான்... நான் நல்ல மார்க் வாங்கினா எனக்கு என்ன தருவீங்க?"

"உனக்கு என்ன வேணும்னு முதல்ல சொல்லு. முடியுமா முடியாதுன்னு நான் சொல்றேன். இல்லன்னனா நீ என்னை இம்சிக்கிற மாதிரி எதாவது கேட்டு வைப்ப... இன்னொரு தரமெல்லாம் முடியாது மகமாயி..."

"பயப்படாதீங்க இந்த தடவ தூக்க சொல்லமாட்டேன். புதுசா ஏதாவது செய்யணும். என்ன செய்யலாம்...?"

"முதல்ல பரிட்சையை ஒழுங்கா எழுது. நானுற்று ஐம்பதுக்கு மேல் மார்க் வாங்கு... அப்புறம் யோசிக்கலாம்.

"ஐயோ நானுத்தம்பதெல்லாம் நிவிக்கு ரொம்ப ஓவர் ஆதி அத்தான். நாநூறு வச்சுக்கலாம்." பரிதாபமாய் பார்க்க (இப்படி பாத்து பாத்தே காரியம் சாதிக்கிறியா சும்மாவா?)

"உனக்கே உன் மேல நம்பிக்கை இல்ல நீ என்னத்த மார்க் வாங்கி என்னத்த கிழிக்கப் போற?" இருந்தும் அவள் திறமை தெரிந்ததால் சரியென்று ஒத்துக் கொண்டான்.

"ஆதி அத்தான்... நாம ரெண்டு பெரும் சேர்ந்து ஒரு செல்ஃபீ எடுக்கணும் உங்க போனில் அதை தான் நீங்க வால் பேப்பரில் வைக்கணும். சரியா?"

"இதெல்லாம் அநியாயம்டி கருவாச்சி..! காலேஜில் எனக்குன்னு ஒரு இமேஜ் இருக்கு. போனை நண்பர்களெல்லாம் பார்ப்பாங்கடி. பொண்ணுங்களெல்லாம் கூட பார்க்கும். நானும் ஹாட் பிகர் தான்டி செல்லம். வேறு சொல்லேன்... தங்கமில்ல... பட்டுக்குட்டி தானே? அத்தான் பாவமில்லையா? யாருடா இந்த கருவாச்சின்னு கேட்டா என்ன சொல்லறது?"

'ஓவரா இமேஜ் பாக்கறதால தான் அதை காலி பண்ணணும்ணு பார்க்கிறேன். சரி ஒளிஞ்சு போங்க' என்றெண்ணியவள் ,

"ஐ! இது கூட நல்லா இருக்கே... இந்த செல்லம், தங்கம், பட்டுக்குட்டி, புஜிம்மா, பேபி, பாப்பூ இப்படியே கூப்பிடுங்க. இது தான் டீல் ஆதி அத்தான்..! நீங்க சொன்னபடி நான் மார்க் வாங்கிட்டா, இனி என்னை இம்சைன்னு கூப்பிடக் கூடாது... இப்படி செல்லம்மா தான் கூப்பிடனும் சரியா?"

"இதெல்லாம் உனக்கே ஓவரா இல்லையாடி? கன்னுக்குட்டி, பன்னிக்குட்டி, நாய்க்குட்டி இப்படிவேனா கூப்பிடறேனே..."

"போங்க ஒன்னும் வேண்டாம்... நான் உங்களுக்காக கஷ்டப்பட்டெல்லாம் படிக்க மாட்டேன். என் இஷ்டப்படி தான் படிப்பேன்... கொஞ்சமா தான் மார்க் வாங்குவேன்." வாசலில் போவோர் வருவோரை வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிட்டாள்.

"நாளைக்கு இங்கிலீஷ் எக்ஸாம் இருக்கு, இப்படி வேடிக்கை பார்த்துகிட்டு இருக்க... போய் படி. உன் டீலுக்கு அத்தானும் ஓகே..."

"நிஜமா ஆதி அத்தான்?"

"ம்... என் நேரம் இந்த குட்டி குரங்கிற்காக தான் எல்லாத்தையும் பண்ண வேண்டியதிருக்கு." செல்ல அலுப்பு அவனிடம்.

நல்லவிதமாக பரிட்சையை எழுதி முடித்துவிட்டாள் நிவேதா. அன்று ரிசல்ட்... அத்தையோடு பள்ளிக்குச் சென்று மார்க் சீட் வாங்கி பார்க்க நாநூற்று முப்பது வாங்கியிருந்தாள். ஒரே கொண்டாட்டம் தான் நிவேதாவுக்கு.

‘‘இனி ஆதி அத்தான் இம்சைன்னு கூப்பிடமாட்டாங்க’’ அத்தையை கட்டிக் கொண்டு சொல்ல, அவர் திருதிருக்க, தங்களது பேச்சை அவரிடம் பகிர்ந்து கொண்டாள்.

'பாவம் இந்த புள்ள எவ்வளவு வருத்தப்பட்டிருக்கு அந்த தடிமாடும் தான் ஏன் அப்படி சொல்லுமோ தெரியல... நல்ல காலம் இனியாவது ஒழுங்கா கூப்பிடுறானான்னு பார்க்கணும் இல்ல தலையிலேயே ரெண்டு போடணும்.' அவர் தன் போக்கில் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

மருமகளுக்கு பிடித்த இனிப்பு செய்து கொடுத்து,

"ஆதி தான் டாக்டருக்கு படிக்கமாட்டேன்னு சொல்லிட்டான்... நீயாவது படியேன் நிவி..!"

'ஐயோ அவனை படிக்க விடாம பண்ணதே நான் தானே... இப்போ நானே எப்படி படிக்க முடியும்? ஆதி அத்தான் பாவம்.' யோசித்தவள் ,

"ஆதி அத்தான் கிட்ட கேட்கணும் அத்தை."

"நீ ஏன் அவன் சொல்றதையே கேக்குற? உனக்குப் பிடிச்சதை பண்ணு நிவி."

"என்னைவிட எனக்கு எது நல்லதுன்னு ஆதி அத்தானுக்கு தான் தெரியும் அத்தை... அவங்க சொல்லட்டும்." வாயடைத்து போனார் மங்களம்.

ஆதி இணையதளம் மூலமாக அவளது மதிப்பெண்களை அறிந்திருந்தான். நண்பனுடன் பகிர்ந்து கொண்டான்.

"இந்த குட்டிப்பிசாசுக்கு ஏதாவது வாங்கிட்டு போகணும்டா... என்ன வாங்குறதுன்னு தான் தெரியல..."

"நிவிக்கு கிட்கேட் ரொம்ப பிடிக்கும் மச்சான்.."

"நண்பேண்டா..." ஆதி நண்பனை தழுவிக் கொண்டான். வீட்டை நோக்கி வந்த பைக் சத்தம் கேட்டு,

"அத்தை... ஆதி அத்தான் வராங்க. நீங்க எதுவும் சொல்லாதீங்க. என்ன செய்றாங்கன்னு பார்க்கலாம்." ஹாலில் சோஃபாவுக்கு முன்னே இருக்கும் குட்டி டீபாயில் மார்க் சீட்டை வைத்துவிட்டு தன் அறைக்குள் போய் படபடப்புடன் நின்று கொண்டாள். ஆதி அங்கு அமர்ந்து தான் தன் ஷூவை கழட்டுவான்.

"திட்டமெல்லாம் நல்லா தான் போடுறா..." அத்தை பெருமையாக நினைத்துக் கொண்டார். அவனோ வீட்டிற்குள் நுழையும் போதே...

"தங்கம்..." என அழைக்க, அந்த அழைப்பிற்காக ஏங்கியவள் தன் திட்டம் மறந்து குட்டிப் புயலாய் ஓடி வந்து

அவனை கட்டிக் கொண்டாள். ஆதியோடு சேர்ந்து அன்னையும் திகைத்து நிற்க,

"எத்தனை வருஷமாச்சு தெரியுமா ஆதி அத்தான்? என் அப்பா எப்போதும் இப்படி தான் கூப்பிடுவாங்க..." விசும்பலும் கண்ணீருமாய் சொல்ல...

'இதற்காக தானே இத்தனை நாளும் கூப்பிடாமல் இருந்தேன். படுத்துறியேடி...'

"பாரு தங்கம்... இப்படியெல்லாம் அழுகாச்சி ட்ராமாவை ஆரம்பிச்ச... பழையபடி இம்சைன்னு தான் கூப்பிடுவேன் பார்த்துக்கோ."

அவனிடமிருந்து விலகி கண்களை துடைத்துக் கொண்டவள்,

"இனி அழமாட்டேன். நீங்க இப்படியே கூப்பிடுங்க ஆதி அத்தான்."

குழந்தையாய் சிரிக்க,

"ஐயோ பாவம்!" என்றாகிப் போனது மங்களத்துக்கு.

அவளிடம் கிட்க்கேட்டை கொடுத்து 'வெரிகுட்' என கைகுலுக்கியவன், மார்க் சீட்டில் தன் பார்வையை பதித்து,

"எல்லாம் ஒகே. அது என்ன கணக்கில் மட்டும் இவ்வளவு குறைவு? திரும்பத் திரும்ப கணக்கை போட்டுப் பாருன்னா அழறியே... படிக்கிறதுன்னா அவ்வளவு கஷ்டமாயிருக்கு?" தாய் ஸ்தானத்தில் இருந்து கண்டித்துக் கொண்டிருந்தான்.

அத்தையும், மாமாவும் நிவியை பெற்றோர் இல்லா பிள்ளை என்று எதுவுமே சொல்வதில்லை. ஆதி தான் அனைத்திற்கும் சேர்த்து வைத்து திட்டுவான்.

நிவியை பொறுத்தவரை கண்டிப்பதில் தாயாய், பார்த்துப்பார்த்து தேவையறிந்து செய்வதில் தந்தையாய், மனபாரம் குறைக்கும் தோழனாய் தான் ஆதி இருந்தான். அவனோ, அவளை தன் மனைவியாகத் தான் நினைத்தான். ஆண்கள் தங்கள் காதலியை மனைவியாய் தான் பார்ப்பார்களாம்...

"சயின்ஸ் குரூப் எடு. அப்போ தான் மேல் படிப்புக்கு வசதியா இருக்கும்."

"ஆமா ஆதி... நான் கூட அதை தான் நினைச்சேன். அப்போ தானே டாக்டருக்கு படிக்க முடியும்?"

"ஐயோ அம்மா..! உங்களுக்கு ஏன் இந்த கொலை வெறி? இவ முதல்ல பனிரெண்டாவதை பாஸ் பண்ணட்டும் அப்புறம் அதையெல்லாம் யோசிக்கலாம்."

"நோ நோ... ஆதி அத்தான். நான் காமர்ஸ் குரூப் தான் எடுப்பேன். அதில் கணக்குக் கொஞ்சம் ஈசியா இருக்குமாம் விசாரிச்சேன்..."

"ஓ அப்போ பட்ட படிப்பையும் விசாரிச்சிருப்பிங்களே சொல்லுங்க... காலேஜில் என்ன படிப்பதாய் உத்தேசம்?" நக்கலாக கேட்க,

"BCOM..."

"அப்புறம்?" ரௌத்திரத்தை உள்ளடிக்கிய கேள்வி,

"அப்புறமென்ன சும்மா படிச்சுகிட்டேவா இருப்பாங்க..." சொல்லி முடிப்பதற்குள்ளாகவே அவள் தலையில் நச்சென கொட்டினான்.

வலியில் கண்களில் நீர் பெருகிவிட்டது. இவன் கொட்டிய சத்தம் கேட்டு அடுக்களையில் இருந்து மங்களம் வந்துவிட்டார்.

"என்னாச்சு? என்ன பண்ணின ஆதி?" மருமகளை ஆதரவாக அணைத்துக் கொள்ள,

‘‘நீங்க நகர்ந்து போங்கம்மா. சும்மா அவளை கொஞ்சிகிட்டே இருக்காதீங்க... உங்க பேங்க்ல லோன் அப்ளை பண்ணி ஒரு மாட்டு பண்ணை வச்சு கொடுங்க. அதுக்கு தான் லாயக்கு" தன்னறைக்குள் போய் கதவை சாத்திக் கொண்டான்.

"என்ன நிவி... இன்னும் சின்ன புள்ள மாதிரி அவன்கிட்ட அடி வாங்குறியே? நான் கேட்கும் போது சமத்தா ஆதி அத்தான் சொல்றதை தான் படிப்பேன்னு சொன்ன இப்போ என்னம்மா ஆச்சு?"

"எனக்கு கணக்கு கஷ்டமா இருக்கு அத்தை. சொன்னா கேக்கமாட்டேங்கறாங்க..."

அவர்கள் பேசுவது அவனுக்கும் கேட்டது. அவள் சொல்வது உண்மைதான் என்றாலும் முயன்றால் முடியாதது இல்லையே... அழுத்தமா கொட்டிடமோ பாவம்... சரிவிடு எப்படியும் நீ அவளை வேளைக்கு அனுப்ப போவதில்லை கண்ணுக்குள்ள வச்சு பாத்துக்கப் போற அவ இஷ்டப்படியே படிக்கட்டுமே... முடிவெடுத்தவனாய் வெளியே வர,

அத்தை செய்த இனிப்பை கொண்டுவந்து கொடுத்தவள்... அவன் முகம் பார்க்காமல்,

"நான் சயின்ஸ் குரூப்பே எடுக்கறேன்."

"என்னைப் பார்த்து சொல்லு நிவேதா" அவன் முகம் பார்த்தவளின் விழிகள் கலங்கியிருந்தன,

"அப்படியெல்லாம் ஒன்னும் கஷ்டப்பட்டுக்கிட்டு படிக்க வேணாம்... நீ விரும்பியதையே படி."

"இதை முதல்லயே சொல்றதுக்கென்ன ஆதி? பாவம் நீ கொட்டியதால் தலையில் வீங்கிடுச்சு. இதுக்கு தான் கை நீட்டாதன்னு சொல்றேன். நீ கொஞ்சமும் சொல்றது கேக்கமாட்டேன்கிறாய். உன்னை யார் அடிக்கிறதுன்னு தெரியல..."

ஆதி அமைதியாய் இனிப்பை சுவைத்துக் கொண்டிருந்தாலும் மனம் தன்போக்கில் அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்து.

இதோ, நிவேதாவும் பனிரெண்டாவது வந்துவிட்டாள். நிவேதா வளர்ந்து அழகிய மங்கையானது தவிர அவளிடம் பெரிய மாற்றம் இல்லை. எப்பொழுதும் போல்... ஆதியிடம் எடுபிடியாக , இன்னும் அவனிடம் படிப்பதற்கு கொட்டு வாங்கி கொண்டு தான் இருக்கிறாள்.

ஆதி இப்போது கட்டிளங்காளையாக இருந்தாலும் , அவளுக்கெனவோ தான் அன்று பார்த்த அதே ஆதி அத்தானாக தான் இருந்தான்.

இப்பொழுதைய சிறிய மாற்றம், அவன் அருகில் படுத்தால் தான் தூக்குவேன் என அடம் பிடிப்பதில்லை. தூங்கும் வரை அந்த அறையில் அவன் இருந்தால் போதுமென்பது தான்.

நந்தினியும் தன் படிப்பை முடித்துவிட்டாள். நண்பர்கள் இருவரும் தங்கள் கடைசி வருடத்தில் கால் பதித்திருந்தனர். இத்தனை நாளும் இதற்காகவே காத்திருந்தவன் போல விஜயேந்திரன் நந்தினியை நோக்கி தன் முதல் காயை நகர்த்தினான்.

அரச குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவரை அனுப்பி பெண் கேட்க, நந்தினியின் அப்பாவால் நம்ப முடியவில்லை. அதை தெரிந்து கொண்டவன் நேரிலேயே வந்துவிட்டான்.

நண்பர்கள் மூவரும் ஆதியின் வீட்டு மொட்டை மாடியில் நின்று கதை பேசிக் கொண்டிருக்க, படகு போலும் தன் வெள்ளை நிற பென்ஸில் இருந்து இறங்கியவன், சுற்றிப் பார்க்க...

"நந்து இங்க பார் உங்க வீட்டுக்கு யாரோ வந்திருக்காங்க..." பிரபா சொன்னதும் வேகமாக எட்டிப் பார்த்தவளை கண்டுகொண்டான்.

இதமான முறுவலுடன் 'நந்தினி' என அழைத்து வா என்பது போல் கையசைக்க திகைத்து போனவளுக்கு அவன் யாரென்பது தெரியவில்லை. விஜயேந்திரன் நந்தினியின் வீட்டிற்குள் நுழைந்துவிட்டான்.

"யாருன்னு தெரியல... ஆனால் அவருக்கு என்னை நல்லா தெரிஞ்சிருக்கு டா. நான் பார்த்துட்டு வரேன்..." நந்தினி கீழே போக, மூச்சு வாங்க மேலே வந்தாள் நிவி.

"ஆதி அத்தான் நந்தினி அக்கா வீட்டுக்கு ஒருத்தர் வந்திருக்கார் பாத்தீங்களா? செம ஸ்மார்ட்..." என சொல்லி அவனிடம் ஒரு கொட்டை வாங்கிக் கொண்டு பேந்த விழிக்க,

"வேடிக்கை பாக்காம படிக்கிற வழியைப் பார்!" அவனது மிரட்டலில் வாயை மூடிக் கொண்டு கீழே போய்விட்டாள்.

"ஆதி இதுக்கு பேர் தான் பொறாமையா?"

"ஒரு ஆமையும் இல்ல... தங்கச்சியை ஒழுங்கா வளக்க துப்பில்லை... பெருசா பேசவந்துட்ட..."

"நிச்சயமா இது பொறாமை தான் ஆதி!"

"ஆமாடா! இவ கண்ணுக்கு என்னை தவிர எல்லோரும் ஸ்மார்ட்டா தான் தெரியிறானுங்க..." இயலாமையுடன் சொன்னாலும் நண்பனுடன் சேர்ந்து சிரிக்கத்தான் செய்தான் ஆதி.

ராஜா விஜயேந்திர பூபதியின் திட்டம் கைகூடுமா?

# அத்தியாயம் 12

**வி**ஜயேந்திரன் நுழையும் போது அவர்கள் வீட்டு வாசல் சின்னதாக தான் தெரிந்தது. அவன் பின்னோடு நந்தினியும் வந்துவிட்டாள். சோஃபாவில் அமர்ந்தவன்,

"வணக்கம். என் பெயர் ராஜா விஜயேந்திர பூபதி. தேவகோட்டை சமஸ்தானத்து அரசன். விஜய் குரூப்ஸ் ஆப் கம்பெனியின் CEO. என்னைப் பற்றிய விளக்கம் போதுமென்று நினைக்கிறேன். உங்கள் மகள் நந்தினியை திருக்கல்யாணத்தின் போது கோவிலில் பார்த்தேன். மனதிற்கு பிடித்துவிட்டது. திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன். நீங்கள் சம்மதிக்க நான் என்ன செய்ய வேண்டும்.? "

பவ்யமாய் எழுந்து நின்று கேட்க நந்தினின் பெற்றோர் மிரட்சியில் இருக்க... நந்தினி அவன் கையில் இருந்த காப்பை கண்டு கொண்டாள். இவன் கரத்தை தான் அன்று பற்றியிருக்கிறோம். இவானா... அவன்? என்றெண்ணியபடி,

"ஆதி..." கத்திக் கொண்டே ஓடிவிட்டாள். சிறு சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான் விஜயேந்திரன். மகளின் கூவலில் சுயம் பெற்றவர்கள் பேசுவதற்கு அங்கு ஒன்றுமே இல்லை. அவன்

சொன்னதற்கெல்லாம் மந்திரத்துக்கு கட்டுப்பட்டது போல் தலையசைத்துக் கொண்டிருந்தனர்.

நண்பர்களுடன் வந்தவளை பார்த்து சிரித்தவன், தன் ஒற்றை விரல் கொண்டு அவள் முகம் நிமிர்த்தி,

"நந்தினி தேவியாருக்கு விஜயேந்திரனை திருமணம் செய்து கொள்ள சம்மதமா?" அவள் விழி பார்த்து கேட்க... இரு நண்பர்களுக்கும் நடுவில் நின்று கொண்டிருந்தவள், உள்ளே ஓடப் போக அவள் கரம் பற்றி நிறுத்தியவன்...

"எனக்கு உங்கள் பதில் வேண்டும் தேவியாரே..." அவளை ஆழ்ந்து நோக்க, சம்மதமாய் தலை அசைத்தாள். அவளது கரத்தை விட்டுவிட்டான்.

உள்ளே ஓடியவள், 'எல்லோருக்கும் முன்னாடி எப்படி கேக்குறான்... கையை பிடிக்கிறான்... நானும் லூசு மாதிரி... ஐயோ பப்பி சேமா போச்சே...' தலையணையில் முகம் புதைத்துக் கொண்டாள். (நந்து நீ வெட்கப்படுறியா... சொல்லிட்டு செய்மா... நாங்க குழம்பிட்டோம்ல !!)

வரும் நல்ல நாளிலேயே திருமணம் என்று முடிவாகியது.

‘‘மூன்று வருடங்களுக்கு முன், என்று உங்கள் மகளை பார்த்தேனோ அன்றே எங்களுக்குள் நிச்சயம் முடிந்துவிட்டது. அதனால் நேரே திருமணத்தை வைத்துக் கொள்வோம். அரண்மனையிலேயே திருமணத்தை வைத்துக் கொள்ளலாம்.

முதல் நாள் காலையில் உங்கள் பெண்ணையும் சொந்த பந்தங்களையும் அழைத்துக் கொண்டு போக பேருந்துகளுடன் எங்கள் விசுவாசிகள் வருவார்கள்.

சமஸ்தானம் அல்லாத சாமானிய பெண் என்பதில் என் இனத்திற்கு வருத்தம் அதிகம். அதனால் அவ்வளவு கூட்டமிருக்காது. என் அன்னையும், அக்காவும் கூட எனக்காகவே சம்மதித்திருக்கிறார்கள். நந்தினியின் குணம் எல்லோரையும் மாற்றிவிடும் என்னும் நம்பிக்கை எனக்கிருக்கிறது.

என்னை நம்பி உங்கள் மகளை மணமுடித்துக் கொடுங்கள். பத்திரிக்கை அடித்து அனுப்புகிறேன் கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுத்துவிடுங்கள்."

"உங்கள் அம்மாவுக்கு பிடிக்காமல் எப்படி?" நந்தினியின் தந்தை முடிக்க முடியாமல் திணற,

"மணந்து கொள்ளப் போகிறவனுக்குப் பிடித்தால் போதுமானது. கொண்டவன் துணையிருந்தால் கூரை ஏறி கோல் பிடிக்கலாம். ஆசிரியர்... உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை." அமர்தலான சிரிப்புடன் சொன்னான் விஜயேந்திரன். (யோசிக்கவிடமால் என்னமா பதில் சொல்றாம்பா ...)

விஜயேந்திரன் விடைபெற்றதும் அதிர்வில் ஒன்றும் செய்ய தோன்றாமல் அமர்ந்துவிட்டனர் நந்தினியின் பெற்றோர். ஒருபக்கம் மகள் அரசகுடும்பத்து மருமகளாகப் போகிறாள் என்பதில் மகிழ்வே என்றாலும் சின்ன பெண்ணாயிற்றே எல்லா நேரமும் கணவன் துணைக்கு இருக்க முடியாதே என்னும் கவலையும் வரத்தான் செய்தது இருந்தாலும் விஜயேந்திரனை விடவும் மனமில்லை.

ஆதியும் பிரபாவும் நந்துவின் அறைக்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண்டு,

"நந்தினி தேவியாருக்கு எங்கள் வணக்கம்!' என தங்கள் கலாய்ப்பை தொடங்க,

"தடிமாடுகளே..! நானே ஒன்னும் புரியாமல் இருக்கேன் இதுல நீங்க வேற படுத்தாம சும்மா இருங்கடா..." சிணுங்க,

"இன்னும் பதினைந்து நாட்களுக்குள் பேச முடியாவிட்டாலும் பேசுவதை புரிந்து கொள்ளவாவது பழகிக் கொள்ளுங்கள் நந்தினி தேவியாரே. அதற்காகத் தான் இந்தப் பயிற்சி." சிரிக்காமல் சொன்னான் ஆதி.

"ஆதி, இது என்னடா கண்ராவி... இலக்கணமாய் பேசுறானே..! எனக்கு ஒன்னும் விளங்கமாட்டேங்குது." (இது தான் உனக்குப் பிரச்சனையா... அவன் உன்கிட்ட பேசிட்டாலும்....)

"நீ பாவம் தான் நந்து. உனக்கு செய்யுள்... இலக்கணம்.... இதெல்லாம் பிடிக்காதே! இப்படி வகையா மாட்டிக்கிட்டியே..." நண்பர்கள் கேலி செய்தனர்.

திருமண வேலைகள் துரிதமாக நடந்தன. எதற்கும் வீட்டைவிட்டு வெளியே போக வேண்டி தேவையே இல்லாமல் அனைத்தையும் விஜயேந்திரனே பார்த்துக் கொண்டான். திருமண பத்திரிக்கை இரண்டே நாட்களில் தாயாராகி வந்தது. பட்டுப்புடவை மொத்தமாக வீட்டிற்கே ஜவுளிக் கடைக்காரர்களால் கொண்டுவரப்பட்டது. நகைகைகள் அனைத்தையும் நெருக்கமான விசுவாசியிடம் கொடுத்துவிட்டிருந்தான்.

நாளை திருமணம்... அரண்மனைக்கு வந்தாகிவிட்டது. அவர்கள் தங்கியிருந்தது விருந்தினர் மாளிகையாம்... அதுவே அரண்மனை போல் தான் இருந்தது.

ஏக்கர் கணக்கில் இடத்தை வளைத்து நடுவில் அரண்மனையும் அதைச் சுற்றி நீச்சல் குளம், டென்னிஸ் கோட், வாலிபால் கோட், பில்லியர்ட்ஸ், பார், பியூட்டி பார்லர் , நர்சிங் ஹோம், நந்தவனம், நாலைந்து விருந்தினர் மாளிகைகள் ஐலண்ட் பங்களா என்னும் அந்தப்புரம் குலதெய்வத்தின் கோவில் பெரிய விளையாட்டு மைதானம் கூட்டங்கள் நடத்தப்படும் வளாகங்கள் இப்படி பல இருந்தன.

பிரபா அனைத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டு குட்டி ஊரே இதற்குள் இருக்கிறது என்றான். இவை அனைத்தையும் கேட்ட நந்தினி மிரண்டு போனாள். முதல் முறையாக தனக்கு கொஞ்சமும் ஒத்து வரமுடியாத மிகப் பெரிய இடத்தில் வந்து மாட்டிக் கொண்டோமோ? என பயப்படத் தொடங்கினாள்.

விடிகாலை பிரம்ம முகூர்தத்திலிருந்து மணமகளுக்கான சடங்குகள் ஆரம்பமாகிவிட்டன. பிடிக்காத மருமகள் என்றாலும் முறை எதிலும் குறை வைக்கவில்லை சகுந்தலாதேவி. ரேகா நாத்தனார் என்னும் அதிகாரத்தை பகிரங்கமாகவே காட்டினாள்.

மெல்லிய சிரிப்புடன் நானிருக்கிறேன் நந்தினி என்பது போல் அவ்வப்பொழுது கரம் பற்றிக் கொள்வதும் தொடமுடியாத தூரத்தில் இருந்தால் கண்ணசைவிலேயே கவலை மறக்கச் செய்யவும் கற்று வைத்திருந்தான் விஜயேந்திரன்.

மெரூன் வண்ண லெஹங்காவில் குட்டி தேவதையாய் வலம் வந்தாள் நிவேதா.

"கருவாச்சிக்கு இந்த கலர் நல்லா இருக்கா... இல்ல... எனக்குத் தான் இவள் மேல கிறுக்கு கூடிப்போச்சா?" என்ற சந்தேகத்தோடு அவளின் உச்சி முதல் பாதம் வரை பார்வையால் வருடியவனுக்கு பெரும் அதிர்ச்சி.

நிவேதாவோ அவனைக் கவனிக்காமல் அரண்மனை முழுவதும் வண்ணவண்ண பூக்கள் கொண்டு அழகாக

அலங்காரம் செய்திருந்ததைக் கண்டு விழி விரித்தவள், தனது உடைக்கு பொருத்தமாக மெரூன் வண்ண மலரும் இருக்கவே அதை எடுத்து சூட்டிக் கொள்ளும் ஆவலில் சுவற்றில் சற்று உயரே ஒட்டியிருந்த பூங்கொத்தை குறிவைத்து எம்பிக் குதிக்க, இரண்டு அங்குலம் வயிறும், இடையும் தெரிந்ததற்கே அதிர்ந்து போனவன் இப்பொழுது முற்றிலுமாக தொலைந்து போனான்.

கையைத் தூக்கி எம்ப வயிறு தானாக குறுகி லெஹெங்கா இன்னும் கீழே இறங்கி அவளது மையத்தின் பெரும்பகுதியை பகிரங்கப்படுத்தியது. விழியெடுக்க முடியாமல் சொக்கிப்போய் பார்த்தவன், தன் மனதிற்கு 'நோ' சொல்லி, அவள் இன்னும் சிறு பெண் தான் என்பதை மூளைக்குள் பதிய வைக்க முயன்று ஒரு நொடி கண்களை மூடி... பின் மெல்லத் திறக்க, அதற்குள்ளாக பூவை கைப்பற்றியவள் நடக்கத் தொடங்கியிருந்தாள்.

ஆனால் ஆடையை சரிசெய்யவில்லை. நாபி தெரிந்தும் தெரியாமலும் இறங்கியிருந்தது பாவாடை. எவ்வளவோ முயன்றும் மீண்டும், மீண்டும் தன் கண்கள் அங்கேயே செல்வதை தடுக்க முடியாமல் தோற்றுப் போனவன், இதை சரிசெய்தால் ஒழிய தன்னால் நிலையாக இருக்க முடியாது என்னும் முடிவுக்கு வந்தவன், அவள் எதிரில் சற்று தொலைவில் அவளது பார்வைக்காக காத்து நின்றான். எதார்த்தமாய் நிமிர்ந்து நோக்கியவளை , கண்களால் ஜாடை காட்டி அருகே அழைக்க,

"ஐயோ! பார்த்துட்டானா... ஏன் பூவை எடுத்தேன்னு திட்டப்போறான் " என்றெண்ணியவளாய் சட்டென பூவை மறைத்துக் கொண்டு அசட்டுச் சிரிப்பு சிரிக்க, அவளை முறைத்தபடி ஓசை இல்லாமல் வாயசைத்து "வா" என அழைத்தான்.

"தனியா மாட்டின... செத்த! போகாத போகாத" என்று அவள் மனம் எச்சரிக்க, மீண்டும் கண்டுகொள்ளாமல் அத்தையிடம் போய்விட்டாள்.

நந்தினிக்கு சடங்குகள் செய்து கொண்டிருக்க... சுற்றிலும் ஆட்கள் நிறைந்திருந்ததால் அவளிடம் ஆடையை சரிசெய் என சொல்லத் தான் தனியாக அழைத்துக் கொண்டிருந்தான். அவளோ அதை புரிந்து கொள்ளாமல், அவன் பூவை எடுத்ததற்காக திட்டுவான், லெக்ச்சர் கொடுப்பான் என்று எண்ணி பயந்து போய் பம்மினாள்.

அடுத்த அரை மணி நேரத்தை அத்தையின் பின்னே வால் பிடித்து அலைந்தபடி அவனை நிமிர்ந்தும் பார்க்காமல் சுற்றி வந்து அவனுக்கு தண்ணி காட்டினாள்.

"இவளோட ஒரே இம்சை! நான் இவளையே பார்த்துட்டு இருக்கேன்... இவள் என்னை கண்டுக்கவே மாட்டேங்கிறா. அத்தான் கூட சுத்த வேண்டிய வயசுல இன்னும் அத்தையின் முந்தானையை பிடிச்சுட்டு சுத்துறா! இதுல கண்ணை அங்க

இங்க திருப்ப முடியாம ஷோ வேற காட்டுறா! இவளை.... ஆதி! ஏதாவது அதிரடியா செய்து தான் இவளைத் தூக்கணும். எத்தனை பொண்ணுங்களை என் பின்னாடி சுத்த விட்டுருப்பேன்? இந்த வாண்டு என்னை சுத்தல்ல விடுதே! " என்று கண் கொத்திப் பாம்பாய் அவள் பின்னே கண்ணை அலைய விட்டவன்,

நந்தினியை குல தெய்வம் கோவிலுக்கு அழைத்துச் செல்ல கூட்டமாய் கிளம்ப... இவளும் தயாராகி அத்தையின் பின்னே அவரை விட்டு விலகாமல் இருக்க அவரது முந்தானையை லேசாய் பற்றியபடி செல்ல, குறுஞ்சிரிப்போடு எதிர் திசையில் கடந்தபடியே தன் கையால் அவள் இடை பற்றி தரையில் இருந்து அரை அடி தூக்கியபடி நிற்காமல் கடந்து சென்றான் ஆதி. அந்த அதிர்ச்சியில் அத்தையின் முந்தானையை விட்டுவிட்டாள்.

"ஆதி அத்தான் ..." என்று ஏதோ சொல்ல வந்தவளை கண்களால் அடக்கியவன், மற்றவர் கவனம் தங்கள் மேல் திரும்பாமல் சட்டென அருகே இருந்த அறைக்குள் சென்றான். அவன் தொட்டு தூக்கியதை கருத்தில் கொள்ளாமல்,

"போச்சு! நல்லா மாட்டினேன். தலையில் கொட்டியே கொல்லப் போறான்! உனக்கு சுதாரிப்பு போதலை. நந்துக்காவை பார்த்து சிரிக்கிறான் நினைச்சு கோட்டை விட்டுட்ட. சரி,

எப்படியாவது சமாளிச்சு தப்பிச்சு ஓடிடு!" என்று தனக்குள் தானே திட்டம் தீட்ட,

இன்னமும் அவளைத் தன் பிடியில் இருந்து விலக்காதவன் அவள் முகத்தை தான் ஆழ்ந்து நோக்கி ரசித்துக் கொண்டிருந்தான். (ஆதி நீ இவளை தூக்கிட்டு வந்தது... அவளை திட்டவா... திருடவா )

தனக்குள் பேசி முடித்தவள் அவனை நிமிர்ந்து பார்த்து,

"ஆதி அத்தான்... நந்துக்காவோட துணைக்குப் போகணும்... அத்தை தான் போகச் சொன்னாங்க. ப்ளீஸ்... என்னை விடுங்க ஆதி அத்தான். என்னைத் தேடப் போறாங்க ஆதி அத்தான்..." என அவள் இதழ்களும் கண்களும் பரிதாபமாய் கெஞ்ச, சற்று நெகிழ்ந்தவன், தன் பிடியைத் தளர்த்த,தப்பித்து ஓடுவதிலேயே குறியாக இருந்தவள் அதை பயன்படுத்தி ஓடப் போக,

அவள் திட்டம் அறிந்தவனாய் அவள் ஓடமுடியாமல் பின்னிருந்து வயிற்றோடு சேர்த்து அணைக்க, அவனது வலிய கரம் முழுவதும் ஆடையற்ற அவள் வயிற்றில் பதிந்திருக்க... விரிந்த, உள்ளங்கையின் சூடு இடையில் விரவ... ஆணின் முதல் ஸ்பரிசம்... இயற்கையாய் பெண்மை விழித்துக் கொள்ள, ஒரு நொடி தவறாக தோன்றிய தொடுகை, தொட்டது ஆதி அத்தான் என்றதும் அத்தொடுகை பிழையற்றுப்போக... அவனிடம் இருந்து

விடுபட, அவன் கரத்தை தன் கரங்ககளால் பற்றிய போதும் அதை விலக்கத் தோன்றாமல்... இறுக பிடித்தபடி,

"விடுங்க ஆதி அத்தான்..." மந்திரம் போல் வாய் ஜெபித்துக் கொண்டிருந்தது. ஓடுவதை தடுக்க அவளை பிடிக்கப் போய், அது அவன் நிலையை இன்னும் மோசமாக்கியது. வெண்ணெயென குழைந்த மத்தியபிரதேசம் முழுவதையும் மொத்தமாய் தன் கரத்தில் உணர்ந்தவன்... உணர்ச்சிகளின் பிடியில் சிக்கி மீளவும் முடியாமல், அவளையும் விட முடியாமல், இன்னும் தன் பிடியை இறுக்கினான்.

மோகமாய் முத்தமிட தோள் வளைவை நெருங்கிவிட்டன அவன் இதழ்கள். கழுத்தடியில்அவனது சுவாசத்தை உணர்ந்தவள்," சுகமா!? இம்சையா?!" என பிரித்தறிய முடியா சுகமான இம்சையில் சிக்கிக் கொள்ள, மந்திரஜபம் நின்றுபோனது... அவன் கையணைப்பில் இருந்து விடுபடும் முயற்சியும் நின்றுபோக... அதில் தன்னிலை பெற்றவன், விலகி நின்று,

"டிரெஸ்ஸை ஒழுங்காப் போடு! அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்." என்றான் அதிகாரமாய். (ஆதித்யன் இஸ் பேக் !) அந்நேரம் இருவருமே படபடப்பாய் தான் உணர்ந்தார்கள்.

"இது லெஹங்கா ஆதி அத்தான். அப்படி தான் இருக்கும்."

கண்கள் மீண்டும் கஜினிமுகமதாய் படையெடுக்க, வெகு சிரமப்பட்டு முகம் திருப்பியபடி,

"இதை யார் வாங்கினது?"

"நானும் அத்தையும் தான். நந்துக்கா கல்யாணத்துக்கு வாங்கினோம். நான் உங்களை கூப்பிட்டேனே... நீங்க தான் கல்யாண வேலை இருக்குன்னு வரமாட்டேன்னு சொல்லிட்டீங்க..." (போ தப்பு உன் மேல் தான்)

"இந்த ட்ரெஸ்ஸை போட்டுப் பார்த்து வாங்கினியா?"

"ம்.. அத்தைகிட்ட போட்டு காண்பிச்சேனே! நல்லா இருக்குன்னு தான் சொன்னாங்க." (எதுக்கு இவ்வளவு கேள்வி?)

"உன் அத்தைக்கு அல்ட்ரா மாடர்ன் சிட்டில இருப்பதா நினைப்பு. இந்த ஷாலை எடுத்து தாவணி மாதிரி கட்டு." மிரட்டியவனைப் பார்த்து,

"ஐய! போங்க ஆதி அத்தான் நல்லாவே இருக்காது." என சினுங்க,

"இது, அதைவிட கண்ராவியா இருக்கு." அவன் சுட்டிக்காட்டிய பின்பு தான் வயிறும், இடையும் பளீரெனத் தெரிவது பெரிதாகத் தெரிந்தது. இருந்தும்,

"இது அப்படி தான் இருக்கும்." என அவள் யோசிக்காது உளற, அவளை முறைத்தவன்,

"நந்து போட்டு பாத்திருக்கேன். இதெல்லாம் தெரியாமலும் லெஹன்கா இருக்கும். இந்த 'ஷோயிங் ஆப்' பண்ற வேலையையெல்லாம் விடு. ஒழுங்கா ஒருபக்கம் போட்டுருக்க ஷாலை தாவணியா போடு." காண்டாகிப் போனவள்,

"லெஹங்காவுக்கு போய் யாராவது தாவணி போல போடுவாங்களா? ட்ரஸோட அழகே கெட்டுபோயிடும்" என்றவள், சொன்னதைச் செய்யாமல் அவனை திசைதிருப்ப எண்ணி தேரை இழுத்து தெருவில் விட்டாள்.

"நந்துக்கா உட் -பீயை பாருங்க, எவ்வளவு அழகா இருக்கார்? செம ஹாண்ட்ஸம் இல்ல? " எனவும், அது மிகச் சரியாய் வேலை செய்தது அவனிடத்தில். தான் அவள் ஆடையை சரி செய்ய சொல்லியதை மறந்து,

"என்ன திமிர் இவளுக்கு? நான் ஒருத்தன் இவளுக்காக உருகிகிட்டு இருக்க... இவ எந்த நினைப்பும் இல்லாமல் யாரையோ பத்தி பேசிகிட்டு இருக்கா என்று எண்ணி கடுப்பாகியவன்,

"என்னை விட அவர் அழகா?" என்றான் கோப முறைப்புடன். ( நீ டீன் ஏஜிலேயே நிதானமானவன் டா... இப்போ என்ன விடலைப் பையன் மாதிரி?)

"ம்... உங்களை விட உயரம், கலர் ஒரே மாதிரி தான் பட் மீசையெல்லாம் வைத்து பக்கவா இருக்கார் ஆதி அத்தான்!"

"ஏய்! அவர் நந்துவை கட்டிக்கப் போறவர்!" (இவள் ஏன் அவரைப் பார்க்கிறாள்?) என்று சினந்தான்.

"சோ வாட்? அழகைப் பார்ப்பது தப்பு இல்லை, ஆதி அத்தான்." எனக் கண் சிமிட்டினாள். (பார்டா ...)

"நான் உன் கண்ணுக்கு அழகா தெரியலையா?"

"சிறுபிள்ளைத் தனமாக அவள் தான் பேசுகிறாள் என்றால், நானும் ஏன் இப்படி அவளோடு வம்பிழுக்கிறேன்?" என எண்ண தான் முடிந்ததே ஒழிய, இவள் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறாள்? என அறிந்து கொள்ளும் ஆர்வம் அவளிடம் மேலும் பேச வைத்தது.

"நீங்க ஒன்னும் அவ்வளவு அழகில்லை! கொஞ்சம் கலர், நல்ல பிட்டா, ஹெல்தியா இருக்கீங்க, அவ்வளவு தான். எனக்கென்னவோ... நான் முதன்முதலில் உங்களை எப்படி பார்த்தேனோ, அதே போல் இருப்பதாகத் தான் தோன்றுகிறது.

அடங்காத கேசம், தாடி மீசையற்ற மொழுமொழு முகம், இன்னும் சிறு பையன் போல் தான் இருக்கின்றீர்கள். ஒரு வேளை எப்பொழுதும் உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதால் பெரிதாக ஒன்றும் தோன்றவில்லை போல!" எனத் தன் தோள்களைக் குலுக்கினாள். (எங்களாலேயே தாங்க முடியலையே... நீ ரொம்ப பேசின... ஆளை மாத்திருவோம்!)

"அடக் கடவுளே! இன்னும் சின்னப் பையனாகவா தோன்றுகிறேன்? பக்கத்தில் இருந்தால் என் அருமை தெரியாது. வாடி கருவாச்சி! கேம்பஸ் இன்டர்வியூவில் செலக்ட்டாகி ரெண்டு மூணு வருஷம் பாரீன் போயிட்டு வரேன்... அப்போ தான் நீ அடங்குவாய்!" என்று முடிவெடுத்தவன், தான் சொன்னபடி அவள் ஆடையை மாற்றப் போவதில்லை என்பதைக் கண்டுகொண்டு,

அவள் இடை பற்றி... வேண்டுமென்றே தன் கரம் முழுவதையும் படரவிட்டு... லெஹன்காவை ஏற்றி போட்டுவிட்டு முறைப்புடன்,

"இப்படியாவது போடு!" அவள் சுதாரிப்பதற்குள்அங்கிருந்து சென்றுவிட்டான்.

ஆதி அத்தான் தானே என்று எண்ணியவளின் கூச்சம் காணாமல் போக அவளும் சற்று நேரத்தில் இயல்புக்கு வந்துவிட்டாள். (ஆதி... நீ ரொம்ப பாவம்டா!)

தங்க ஜரிகையில் உடல் முழுவதும் தாமரைப் பூக்களும், அன்னங்களும் நிறைந்திருந்த பட்டு புடவையும், வைர மாலையும் அரச சம்பந்தத்தின் பாரம்பரியத்தை பறைசாற்ற , தேவதையென ஜொலித்தாள் நந்தினி.

வைரத் தாலியை அவள் சங்கு கழுத்தில் பூட்டும் அந்த நிமிடம் விழியெடுக்க முடியாமல் பார்த்தான் விஜயேந்திர பூபதி.

சட்டென கண்களில் கோபம் கொப்பளிக்க, பார்வையைத் தாழ்த்திக் கொண்டான்.

பாவம், தன்னிடம் அடி வாங்கியவன் தான் இவன் என்பதை அவள் மறந்துவிட்டாள். இடையைத் தீண்டியதும் அவமானத்தில் கோபம் கண்களை மறைக்க அவன் யாரென்று கூட சரி வர பார்க்காமல் அறைந்துவிட்டதால், இவன் முகம் மனதில் பதியவில்லை. என்றாலும், இந்த இரண்டு வருடங்களில் அவள் அதை முற்றிலும் மறந்துவிட்டாள்.

‘‘ஏதோ தவறு நடப்பது போல் தோணுது பிரபா!’’ நண்பனின் உள்ளுணர்வு அறிந்து கொண்டது.

"மன்னராட்சியை ஒழித்துவிட்டாலும், மன்னர் பரம்பரையாயிற்றே... அந்த பகட்டு தான்! போகப்போக சரியாகிவிடும் ஆதி! அதெல்லாம் நந்தினி சமாளித்துக் கொள்வாள். நீ கவலைப்படுவதால் இங்கு எதுவும் மாறப் போவதில்லை. நந்துவின் கண்களைப் பார்! விஜயேந்திரனைத் தான் விழுங்கிக் கொண்டிருக்கிறது. நீ உம்மென்று இருந்தால், அவளுக்கு வருத்தமாக இருக்கும்." எனத் தேற்றிய போதும்,

'நந்து சமாளித்துவிடுவாளா? விஜய்யை தவிர யாருமே யாரையுமே மதிக்கவில்லையே... பணம் இருந்தால் இப்படி தான் போலும். அவனும் கலங்க தொடங்கிவிட்டான்.'

நண்பர்களின் கரம் பிடித்துக் கொண்டவள்,

"பயமாயிருக்குடா... யாருமே இல்லாமல் நான் மட்டும் எப்படி?" கலங்க,

"என்ன நந்து இது சின்ன புள்ளை மாதிரி பண்ற... விஜய் இருக்கும் போது என்ன பயம்?" என ஆதியும்.

"எல்லா பெண்களும் இப்படி ஒரு இக்கட்டை சந்தித்துத் தான் ஆக வேண்டும் நந்து. போகப் போக சரியாகிவிடும். காலையில் நாங்கள் வந்துவிடுகிறோம்." என பிரபாவும்,

"அருகில் தானே இருக்கிறோம்! அடிக்கடி பார்த்துக்கொள்வோம்!" என பெற்றோரும் ஆறுதல் சொல்லி விட்டு சென்றனர். விஜயேந்திரனின் அக்கா விஜயரேகா, மிகவும் மெல்லிய வெண்பட்டை கொண்டு வந்து கொடுத்து,

"இது எங்கள் பாரம்பரிய ஆடை. இதைத் தான் இப்பொழுது நீ உடுத்திக் கொள்ள வேண்டும். மாற்றிக்கொள்!" என அங்கே நிற்க,

'இவர்களுக்கு முன் ஆடை மாற்றுவதா?' என்ற கூச்சம் ஏற்பட,

"நான் மாற்றிக் கொள்கிறேன். நீங்கள் வெளியே ..." என அவள் முடிக்கும் முன்,

"அது சரி, இவ்வளவு வெட்கப்பட்டால் இன்று குறித்த நேரத்திற்கு சாந்தி

முஹூர்த்தம் நடந்தது போல் தான். இதோபார்! என் தம்பியிடம் இப்படியெல்லாம் நடந்து கொள்ளாதே, ஜோசியரிடம் குறித்த நல்ல நேரத்தில் அனைத்தும் முறையாக நடந்தாக வேண்டும்! நான் என்ன சொல்கிறேன் என்பது புரிகிறதா? " என்றாள் அதட்டலாக.

அவளது பேச்சிற்கு ஒப்புதலாக தலை தானாக ஆடினாலும், கண்கள் இரண்டும் குளமாகிவிட்டன நந்தினிக்கு.

'என் மனநிலை பற்றி எந்த கவலையும் இல்லையா? குறித்த நேரத்தில் அனைத்தும் நடக்க வேண்டுமென்பது தான் இவர்களுக்கு முக்கியமாக போய்விட்டதா?' என ஆற்றாமையுடன் அரற்றிய மனதை தேற்றும் வழி தெரியாமல் கலங்கிக் கொண்டிருந்தவளை, கதவு திறக்கும் மெல்லிய ஒலி நடப்பிற்குத் திருப்பியது.

"இன்னும் புடவையை மாற்றிக் கொள்ளவில்லையா?" என அவள் அருகில் அவன் வர, அவளோ இரண்டடி பின்னே சென்றாள்.

"நந்தினி!" என்ற அதட்டலுடன் அவளை நெருங்கியவன், தன் ஒற்றை விரல் கொண்டு முகம் நிமிர்த்த, பயத்தில் கண்களை இறுக மூடிக் கொண்டாள். சிப்பியென மூடிய விழிகள் அவனை முத்தமிட அழைக்க, வெகு சிரமப்பட்டு தன்னை கட்டுக்குள் கொண்டு வந்தான்.

"என்னைப் பார் நந்தினி! கண்களைத் திற! நான் உன் கணவன் தான். வேற்றுலக வாசி இல்லை." என்றான் மென்குரலில். அந்த மென்மையான வசிய குரல் தானாக அவளை அவன் முகம் பார்க்க வைத்தது. நடுங்கும் அவளது கரத்தைப் பற்றியவன்,

"என்னிடம் என்ன பயம் நந்தினி? வா! வந்து இப்படி உட்கார்!" என சிம்மாசனம் போலும் பிரம்மாண்டமாக இருந்த சோபாவில் அமர வைத்தான்.

விஜயேந்திரன் அவள் கரம் பற்றியதும் இனம் புரியாத எதோ ஓர் உணர்வு. ஆதியும் பிரபாவும் எத்தனையோ முறை அவள் கரம் பற்றியிருக்கிறார்கள் அப்பொழுதெல்லாம் தோன்றாத எதோ ஒன்று உடலை சில்லிடச் செய்தது. உதடு உலர்ந்து போனது. அவனை நிமிர்ந்து பார்க்க முடியா கூச்சம் வந்து ஒட்டிக் கொண்டது.

உச்சிமுதல் பாதம் வரை தன் பார்வையை அணுஅணுவாக செலுத்த, துவண்டு போனாள். (ஏன் இப்படி பார்க்கிறான்? இதையே வேறு யாரேனும் செய்திருந்தால் இந்நேரம் கன்னம் பழுத்திருக்கும். கணவனாகிப் போனதால் ஒன்றும் செய்ய முடியவில்லை ப்ளீஸ் இப்படிப் பார்க்காதே...) கெஞ்சும் நிலைக்கு வந்துவிட்டாள் நந்தினி.

பாவம் அது பசித்திருக்கும் சிங்கம் வேட்டையாட போகும் இரையை பார்க்கும் பார்வை என்று அவளுக்கு தெரியவில்லை.

ராஜா விஜயேந்திர பூபதியால் நந்தினியை தண்டிக்க முடியுமா?

# அத்தியாயம் 13

"**வி**டிகாலை மூன்று மணி தான் நமக்காக குறிக்கப்பட்ட நேரம்! இன்னும் அதிக நேரம் இருக்கிறது. அதுவரை நாம் மனம் திறந்து பேசலாமே நந்தினி!" என்றவனுக்கு தலையாட்டல் தான் பதிலாகக் கிடைத்தது.

"உன் நண்பர்களிடம் வாய் ஓயாமல் பேசுகிறாய்... என்னிடம் ஏன் இப்படி பசை போட்டது போல் உன் உதடுகள் ஒட்டிக் கொள்கின்றன?" எனத் தன் விரல் கொண்டு அவள் இதழ்களை வருட, முதல் ஸ்பரிசத்தில் தடுமாறியவள், அவன் கரம் பற்றி தடுக்க,

"ஹா! எவ்வளவு குளுமை... நீ தீண்டியதும் என் உடற் சூடு குறைகிறது நந்தினி!" என்றான் கண்களில் குறும்பு கொப்பளிக்க.

'இது எதுடா வம்பாக போய்விட்டது!' என பட்டென்று அவன் கரத்தை விட்டாள். வாய் விட்டு சிரித்தவன்,

"புடவை மாற்றிக் கொள் நந்தினி. இது சீனப்பட்டின் வகையை சேர்ந்தது. எடை குறைவாக, உடலை உறுத்தாத மென்மையுடன், அணிந்திருப்பதே தெரியாத அளவிற்கு வெகு கச்சிதமாக உடம்போடு பொருந்தும். சிறப்பாக நெய்யச் செய்தது.

இது எங்கள் அரச பரம்பரை உடை. நானும் என் ஆடையை மாற்றிக் கொண்டு வருகிறேன்!" என எழுந்து சென்றான்.

"பெரிய ராஜ பரம்பரை! அக்காவும், தம்பியும் ஒரு சாதாரண புடவைக்கு இவ்வளவு பெருமையடிக்க வேண்டாம்!" என உதடு சுளித்தவள், எங்கே அவன் வந்துவிடுவானோ என குளியலறைக்கு எதிரே இருந்த உடைமாற்றும் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

அதுவே இவர்களது வீட்டின் அளவிற்கு விஸ்தாரமாக இருந்தது. அவ்வறை முழுவதும் கண்ணாடி பதித்திருந்தது. புதிய புடவையில் தன்னைப் பார்த்தவள், மிரண்டு போனாள்!

உடலோடு ஒட்டி, அவன் சொன்னது போல் அவளது உடலின் செழுமையையும், வனப்பையும், ஏற்ற இறக்கங்களையும் அப்பட்டமாக காட்டியது. அவள் தயாராகி வெகு நேரம் ஆகியும் அவன் வந்த பாடாய் இல்லை. அது வரை அந்த அறையில் வேடிக்கை பார்க்க பல விஷயங்கள் இருந்தன.

வரவேற்பறை! இவ்வளவு நேரமும் அங்கு தான் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அடுத்து, குளியலறையும், மறுபக்கம் உடைமாற்றும் அறையும் இருந்தது. அதனையடுத்து நீண்ட ஹால். அங்கு பல மேஜை, நாற்காலிகள், கோப்புகளுக்கான கண்ணாடி அலமாரி அனைத்தும் இருந்தது. அலுவல் அறையாக

பயன்படுத்துவான் போல! என எண்ணியபடியே கடந்து செல்ல,பெரிய படுக்கையறை.

அவளது பெட்ரூம் அளவிற்கு இங்கு கட்டிலே இருந்தது. அதைச் சுற்றி அழகான திரைச் சீலைகள், ஆங்காங்கே மலர்கொத்துக்கள் மனம் பரப்ப, சிறு சிறு விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. கட்டிலின் எதிரே கொழுகொழுவென கன்னம் குழிய ஆடைகள் ஏதுமின்றி, ஒரு கரடி பொம்மையைத் தன் மடி மீது படுக்க வைத்தபடி சிரித்துக் கொண்டிருக்கும் குழந்தையின் ஓவியம் இவளைக் கவர்ந்தது.

"ஆஹ்! எவ்வளவு அழகு ..." என அதன் கன்னம் வருட, ஒரு நொடி அவளை வெறித்தவன்,

"உன் கண்ணெதிரிலேயே இருக்கும் போது ஓவியத்தைத் தொட்டுப் பார்ப்பானேன்?" என அவள் கரம் பிடித்துத் தன் கன்னத்தில் வைத்துக் கொண்டதும், உடலில் சிறு நடுக்கம் தோன்ற… பார்வையை தாழ்த்தியவள், அவனது ஆடையைக் கண்டு தானாக விரிந்த உதடுகளைத் தவறாக நினைத்துக் கொள்வானோ? என இழுத்துப் பிடித்து நிறுத்தினாள். அதை கவனித்தவன்,

"என்ன நந்தினி, அந்த காலத்து அரசனைப் போல் இருக்கிறேனா?!" என புருவம் உயர்த்தினான்.

மேலே அங்கவஸ்திரமும், இடையில் கச்சை வைத்து கட்டிய வேஷ்டியுமாய் நின்று கொண்டிருந்தவனின் கம்பீரத்தில் கட்டுண்டவளாய் பேந்த விழிக்க,

"இதெல்லாம் கட்டி பழக்கமில்லையா, அது தான் சற்று நேரமாகிவிட்டது! இவை நம் முதலிரவுக்கு மட்டும்தான்! தினப்படிக்கு நம் விருப்பம் போல் அணிந்து கொள்ளலாம். நைட் பாண்ட்ஸ், பைஜாமாஸ் இப்படி... ஆனால் எனக்கு புடவை தான் பிடிக்கும்" என கண் சிமிட்டவும், முகம் சிவந்து போனாள்.

சிவந்த கன்ன கதுப்புகளில் தன் கரங்களை பதித்தவன்,

‘‘இப்படியெல்லாம் செய்தாயானால் மூன்று மணி வரையெல்லாம் காத்திருக்க முடியாது!" என குறும்பாக சிரித்து, அவளை மேலும் செம்மையுறச் செய்தான்.

"நந்தினி... இவற்றையெல்லாம் தினமும் அணிந்து கொள்ள வேண்டும். ஆனால் இரவில் கழட்டி வைத்துவிடு. இல்லையேல் தொந்தரவாக இருக்கும்."

'கடவுளே என்ன இப்படியெல்லாம் பேசுகிறான்?' என நினைத்தவளுக்குவெட்கம் வந்துவிட்டது.

அவள் விரல் பற்றி தன் ஈர உதடுகளால் ஓர் மென் முத்தம் வைக்க, ட்ரிம் செய்யப்பட்ட தாடி மற்றும் முறுக்கிய மீசையின் குறுகுறுப்பும், அழுத்தமான இதழ்களின் ஈரமும், சூடான மூச்சு காற்றும் அவளை கிறுகிறுக்கச் செய்தன.... முதல் முத்தம்...

இத்தனை சுகமாக இருக்குமா? அந்த சுகத்தில் இருந்து மீளாததால் அடுத்தடுத்து ஒவ்வொரு விரலுக்கும் அவன் கொடுத்த முத்தங்கள் அவளை எட்டவேயில்லை. மோதிரங்கள் அத்தனையும் கழட்டியிருந்தான்.

இப்பொழுது வலையல்கள்... வஞ்சகம் இல்லாமல் அனைத்திற்கும் முத்தம் வைத்தே கழட்டினான். காற்சிலம்பு நான் மட்டும் இளப்பமா? என்பது போல் பார்க்க அவளது கால்களைத் தூக்கி தன் மடிமீது வைத்துக் கொண்டவன்,

"இதை தினமும் போட வேண்டும் என்பதில்லை நந்தினி. உனக்கு பிடித்திருந்தால் போட்டுக் கொள்ளலாம் இல்லையேல் விசேஷங்களுக்கு போகும் போது மட்டும் அணிந்து கொள்."

இங்கு ஒன்றல்ல... சிலம்பைச் சுற்றி முத்தம் வைத்தவன் மெல்ல கழட்டி கணுக்காலில் செல்லமாக கடிக்க.., முடியவில்லை நந்தினிக்கு, மூச்சு நின்றுவிடும் போல் தவித்தவள்,

"போதும் விஜய் ப்ளீஸ்... அவளது குரல் அவளுக்கே கேட்கவில்லை. அமர்ந்த சிரிப்புடன்,

"இன்னும் ஆரம்பிக்கவே இல்லையே நந்தினி?" அவன் விழிகளை பார்த்திருந்தால் பயத்தில் நிச்சயம் திருதிருத்திருப்பாள். கால்களை இழுத்துக் கொண்டவள் அவனுக்கு முதுகு காட்டி திரும்பி அமர, அதுவும் அவனுக்கு வாகாக இருந்தது.

நெருங்கி அமர்ந்தவன் முதுகில் படர்ந்த கூந்தலை விலக்கி, பின்னங் கழுத்தில் தன் உதடு குவித்து ஊத, கூச்சம் நெட்டி தள்ள... படக்கென எழ முயற்சிக்க அதை எதிர் பார்த்திருந்தவன் போல் மறுப்பாக தலையசைத்து இடைபற்றி தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

"அமைதியாக இருந்தாயானால் சீக்கிரம் கழுத்தில் இருப்பவற்றையும் நீக்கிவிடுவேன்..." மறுக்க வழியின்றி அமைதி காக்க,

"இப்படி சொல்வதை உடனே மறுப்பின்றி கேட்பது தான் எனக்கு பிடிக்கும் நந்தினி." தன் விரல் கொண்டு கழுத்து வளைவை வருடி அவளைத் தூண்டிய பிறகே வைர மாலை, அட்டிகை அனைத்தையும் கழட்டினான். (ஒருவழியா எல்லாம் முடிஞ்சிருச்சு) இவ்வளவு நேரமும் இழுத்து பிடித்திருந்த மூச்சை மெல்ல வெளியிட, அவன் கரம் காது மடல்களை வருடி ஜிமிக்கியை கலட்டிக் கொண்டிருந்தது. அங்கு முத்தமில்லாமல் நாவால் வருட...

"விஜய் ப்ளீஸ்..." அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்,

"இந்த ப்ளீஸ் எதற்கு நந்தினி தொடரவா...? இல்லை நிறுத்தவா...?" குறும்பு கூத்தாட அவள் முகம் நிமிர்த்த,

'அது தானே எனக்கே புரியவில்லை' என அவன் விழி பார்க்க மறுத்தாள்.

"நான் எதிர்பார்த்தது போல் கொஞ்சம் கொஞ்சமாக நீ என் கட்டுக்குள் வந்துவிட்டாய் நந்தினி" இதழோர சிரிப்புடன், (அப்போ... அத்தனையும் நடிப்பா... கோபால்!?)

"என் மனைவிக்கு முதன்முதலாக நான் கொடுக்கும் பரிசு! பிரித்துப் பார்... உனக்காகவே பிரத்யேகமாக செய்தது!" என ஒரு பெட்டியை அவளிடம் கொடுத்தான். கைகள் நடுங்க பிரித்தவளின் விழிகள் ஆச்சர்யத்தில் விரிந்தன. உள்ளே கற்கள் பதிக்கப்பட்டு, கண்ணாடி போலும் உயர்ந்த குதியுடைய செருப்புகள் இருந்தன.

"வாவ்! சிண்ட்ரெல்லா வெட்ஜெஸ்! ரொம்ப அழகா இருக்கு!" என முகமெங்கும் புன்னகை விரவ கூறியவளிடம்,

"போட்டுக் கொள் நந்தினி. தேவைப்படும்!" என்றவனின் கண்கள் ஒரு நொடி இடுங்கி பின் இயல்பானது. இப்பொழுதே அணிய வேண்டுமா... இங்கு இதன் தேவை என்ன? புரியா குழந்தையாய் அவள் விழிக்க,

"நந்தினி இப்படி சிறுபிள்ளை போல் விழிக்காதே. இந்த பார்வை என்னை கட்டிப் போடுகிறது." உணர்ச்சி துடைத்த குரல் பயமேற்படுத்த… காரணம் அறியும் எண்ணம் தொண்டை

குழியோடு நின்றுவிட்டாலும் மறுப்பின்றி அணிந்து கொண்டவள் இப்போது அவனுக்கு வாகான உயரத்திற்கு வந்துவிட்டிருந்தாள்.

"நந்தினி... ராஜா விஜயேந்திர பூபதியை உனக்கு பிடித்திருக்கிறது தானே?" ஆமோதிப்பாய் தலை அசைக்க...

"எப்பொழுதும் இதையே சொல்வாயா நந்தினி?" அவளது பதிலுக்காக அவன் காத்திருக்கவில்லை. அவளது இதழ்களை சிறை பிடித்திருந்தான். துவண்டு போனவளை இதமாக அணைத்தபடி,

"நந்தினி! உனக்கு நியாபகம் இருக்கிறதா? இரண்டு வருடங்களுக்கு முன்பு கல்லூரி பேருந்து நிறுத்தத்தின் அருகில் உன்னை பார்த்து ஸ்னேஹமாக சிரித்தவனை அறைந்தாயே, ஏன் நந்தினி?" என்றதும் திடுக்கிட்டவளாய் அவன் முகம் பார்த்து,

"உங்களுக்கு எப்படி தெரியும் விஜய்?" என்றாள் நடுங்கும் குரலில்.

"நான் அங்கு இருந்தேன் நந்தினி"

"அவன் என்னை..." என்று உதடு துடிக்க, கண்கள் நீர் திரையிட, சொல்ல முடியாமல் தடுமாற,

"ஷ்!, இதற்கு ஏன் கண் கலங்குகிறாய்? நன்றாக யோசித்து சொல், அவன் தொட்டதை நீ பார்த்தாயா நந்தினி?" என்றான் அமைதியான குரலில். (ஆஹா... வலையை விரிக்கிறானே!)

"ஏன் இப்படி கேட்கிறான்? தவறு நடந்திருக்குமோ! யாரென நாம் பார்க்கவில்லையே! வெகு அருகில் தொடும் தூரத்தில் நின்றான், கோபமாக முறைத்தவளைப் பார்த்துச் சிரித்தான்... ஆம் சிரித்தான்!

அது கேலி சிரிப்பு இல்லையே, இவன் சொன்னது போல் ஸ்நேகச் சிரிப்போ!?" மனம் பலவற்றையும் நினைத்து மறுக,

"சொல் நந்தினி, அவன் தான் தொட்டான் என்பது ஊர்ஜிதமா?" அவனது அழுத்தமான குரல் கிலியூட்ட, மறுப்பாக தலை அசைத்தாள்.

"தவறு செய்யாதவனை அனைவர் முன்னிலையிலும் தண்டித்தது பெரும் தவறில்லையா?" அவள் விழிகளை ஊடுருவிய அவனது கூரிய பார்வையை சந்திக்க முடியாமல் தடுமாறியவளின் இடையில் தன் கரங்களை பதித்து அவளை தன்னருகே இழுத்தான்.

"இந்த வைரத்தாலிக்கு அவ்வளவு வலிமையா நந்தினி! நான் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பது உனக்குப் புரிகிறதா?" என்றவனின் கரங்கள் அவள் இடையை அழுந்தப் பற்ற, மூச்சுக்காற்று முகமெங்கும் விரவ தன் ஈர உதடுகளால் அவளை எச்சில்படுத்திக் கொண்டிருந்தான்.

"ஏன் அமைதியாக நிற்கிறாய் நந்தினி?அடி! புது செருப்பு வாங்கிக் கொடுத்திருக்கிறேனே... உபயோகப்படுத்திக் கொள் " என அவன் முன்னேறிக் கொண்டிருக்க,

"விஜய்... நீங்க என்ன சொல்றீங்க?" என உண்மையாகவே ஒன்றும் புரியாமல் மலங்க விழித்தாள் அந்த பேதை.

"அன்று உன்னிடம் அறை வாங்கிய அந்த பொறுக்கி நாய் தான் இன்று உன்னை தன் கட்டுக்குள் வைத்திருக்கிறது. நான் எல்லை மீறிக் கொண்டிருக்கிறேன் நந்தினி! இன்னும் ஏன் உன் கை உயரவில்லை? அடி நந்தினி!" என அவள் புடவையை நெகிழ்த்தியவன், அவனது வெற்று மார்பில் அவள் முகம் பதியும்படி இறுக்கி அணைக்க,

"ப்ளீஸ்... விஜய்! என்னை... பேச... விடுங்க!" என எல்லை மீறும் அவன் கரங்களை விலக்க போராடியபடி கெஞ்ச,

"தீர்ப்பிற்கு பின் பேசுவதால் எதுவும் மாறிவிடாது! உனக்கான தண்டனையை நான் நிறைவேற்றத் தொடங்கிவிட்டேன் நந்தினி!" கழுத்தை வருடும் அவன் உதடுகள் மீண்டும் தன் பணியைத் தொடர்ந்தன.

"விஜய்! ஒரு நிமிஷம்... ப்ளீஸ், குற்றவாளிக்கு தன் பக்க நியாயத்தை எடுத்துச் சொல்லும் வாய்ப்பை கொடுக்கணும்... என்னை விடுங்க விஜய்!" என்றாள் குழறலாக. இப்படி ஒரு

நிலையிலும் அவனிடம் தன் உடல் எப்படி நெகிழ்கிறது? என்பது தான் ஆச்சர்யமும், அவமானமாகவும் இருந்தது நந்தினிக்கு.

சட்டென, அவளை விட்டு விலகியவன், ராஜ தோரணையில் கட்டிலில் அமர்ந்து,

‘‘சொல்!" என்றான் ஒற்றையாய்.

"பல பேர் முன் என்னை ஒருவன் தீண்டும் போது என் மனநிலை எப்படியிருக்கும் என்று உங்களால் புரிந்து கொள்ள முடியாது! நீங்கள் ஒரு பெண்ணாக இல்லாத பட்சத்தில்... என் அவமானமும், தவிப்பும் புரியாது. என் மூளைக்கு எட்டிய வரை அந்த தவறை செய்ய மற்றவர்களை விட உங்களுக்கு தான் வாய்ப்பு அதிகம் என்று தோன்றியது. அதற்கேற்றாற் போல் நீங்களும் சிரிக்க மற்றவற்றை யோசிக்காமல் அடித்துவிட்டேன். உங்கள் சகோதரிக்கு இப்படியொரு நிலை வந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?"

"நந்தினி!" அதட்டியவன்,

"என் அக்காவிற்கு அப்படி ஒரு நிலையே வர விடாமல் செய்திருப்பேன். அதே பல பேர் முன்னிலையில் விஜய் குரூப்ஸின் CEO வைத் தான் நீ அறைந்தாய். இன்று நாடாளவில்லை என்றாலும் அரசனைத்தான், இந்த விஜயேந்திர பூபதியை தான், ஒரு குற்றமும் செய்யாதவனைத் தான்... நீ

தண்டித்தாய் நந்தினி!" என்று சொல்லும் போதே, அவன் முகம் அவமானத்தில் கன்றி சிவந்தது.

அவனது நிலையை புரிந்து கொள்ள முடிந்ததால்,

"தவறு தான்...! மன்னித்து விடுங்கள் விஜய்" என்று கண் கலங்க மன்னிப்பு கேட்டவளிடம்,

"ஊரறிய அடித்துவிட்டு, இந்த ஒற்றை அறைக்குள் மன்னிப்பு கேட்கிறாய்...! நன்றாக இருக்கிறது. நீ அனைவர் முன்னிலையிலும் மன்னிப்பு கேட்டாலும், என் அவமானம் மாறாது! உனக்கான தண்டனையில் எந்த மாற்றமும் கிடையாது! அருகில் வருகிறாயா?" எள்ளல் வழிந்தது அவன் குரலில். அவள் இன்னும் பின்னே நகர,

"நந்தினி! என் பொறுமையின் ஆயுள் மிகவும் குறைவு, நீ வேறு சிறு பெண்ணாக இருக்கிறாய்! என் கோபத்தின் வீரியத்தை உன்னால் தாங்க முடியாது. நான் சொல்வதை தட்டாமல் கேட்பது தான் உனக்கு நல்லது!" என்றதும் தயங்கித் தயங்கி அவனருகில் வந்தவள்,

"தண்டிப்பது தான் உங்க நோக்கம் என்றால், அப்பவே திருப்பி அடிச்சிருக்கலாம் இல்ல காவல்துறையிடம் முறையிட்டிருக்கலாம்! எதற்காக திருமணம் செய்ய வேண்டும்?" என்றாள் மென்குரலில்.

"என் புத்திசாலி பொண்டாட்டியே! அது அன்றோடு முடிந்திருக்கும், உன் தவறுக்கு நீ ஆயுள் முழுவதும் தண்டனை அனுபவிக்க வேண்டுமென நினைத்திருந்தேன். ஒவ்வொரு நாளும் என் தொடுகையின் போதும் நீ ஒன்றும் செய்ய முடியாமல் ஒடுங்க வேண்டும், என் தொடுகைக்காக ஏங்கி நிற்க வேண்டும்.

உன் மனம் உன்னிடம் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் நீ தவிக்க வேண்டும்! என்னை ஏற்கவும் முடியாமல், விலக்கவும் முடியாமல் உன் மனம் அலைப்புற வேண்டும். அது தான் உனக்கான தண்டனை! " (வச்சுட்டான்டா ஆப்பு ) என அவளை இழுத்து தன் மீது போட்டுக் கொண்டவனின் அணைப்பில்,

"இன்னும் மூன்று மணி ஆகல விஜய்!" என்றாள் தடுமாற்றத்துடன்.

‘‘மனமொத்து வாழப் போகிறவர்கள் தான் அதையெல்லாம் பார்க்க வேண்டும். தண்டனை கொடுப்பவரும், அதை ஏற்பவரும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை!" எனவும்,

பயத்தில் கண்களை இறுக மூடி... கீழுதட்டை பற்கள் கொண்டு அழுத்திய நிலையில் அசையாது அவன் மார்பில் தாடையை பதியவைத்து... பதட்டமும், படபடப்புமாய் அவனது அடுத்த நகர்விற்காக காத்திருக்க, அவளது சீரற்ற சுவாசமும்,

முகபாவமும் அவளை நோக்கி விரலைக் கூட அசைக்க முடியாமல் தடுத்து நிறுத்த... அவனும் அசையாமல் இருந்தான்.

மெல்ல, மெல்ல தன்னை நிலைப்படுத்திக் கொண்டவள் என்ன நடக்கிறது என்பதறிய ஒருகண்ணை சுருக்கி, உதடு சுளித்து ஒருகண்ணை மட்டும் மெல்ல திறந்து பார்க்க... அந்தக் கணம் தன்னால் இவளை எந்தக் காலத்திலும் தண்டிக்க முடியாது என்பதை உணர்ந்தான் விஜயேந்திரன், (நந்துவா...கொக்கா!) அவளது செய்கையில் மயங்கியவன் அட்டகாச சிரிப்புடன்,

"நந்தினி... என் நந்தினி!" என்ற கொஞ்சலுடன் தன் மேலிருந்தவளை பட்டென கீழே கொண்டுவந்து இருபுறமும் தன் வலிய கரங்களை ஊன்றி,

"உன் மனதில் என்ன திட்டம் இருக்கிறது நந்தினி? இந்த விஜயேந்திரனை மொத்தமாக இங்கு புதைத்துவிடும் எண்ணமா?" என நெஞ்சுக்குழியில் முகம் உரச, வெகு நேரத்திற்கு முன்பே புடவை தூங்க சென்றுவிட்டதால் கூச்சம் திணறடிக்க, அவனை விலக்க முயன்று தோற்றுப் போனாள்.

"போதும் நந்தினி! இனி முடியாது..." என முன்னேற அவளுக்கும் தெரிந்து போனது இனி இவனை விலக்க முடியாது என்பது.

அவள் மென்மையில், குழைவில் அவன் அவளுள் ஒடுங்கிப் போனான். அவனது ஸ்பரிசம் அவளை ஏங்கச் செய்வதாகத் தான் இருந்தது.

தன் தடை தகர்த்து மெல்ல முன்னேற... அவளது விரிந்த விழியில் பயம் பகிரங்கமாய் தெரிய,

"கூல் சிட்டு... ரிலாக்ஸ்... ரிலாக்ஸ்... நத்திங் டு ஒரி சிட்டு... ரிலாக்ஸ்..." இதமாய் நெற்றிவருடி மென் முத்தங்களால் அவள் விழி நீர் துடைத்து மீண்டும் மெல்ல மெல்ல வேகம் கூட்ட தான் அவனுள் மீள முடியாமல் தொலைந்து கொண்டிருக்கிறோம் என்பது புரிய, தன் தளிர் கரங்கள் கொண்டு பறந்து விரிந்திருந்த அவன் தோள்கள் தழுவ முயன்று தோற்று மெல்ல கரங்களை இறக்கி அவன் இடை பற்றிக் கொண்டாள்.

"பிடித்திருக்கிறதா தேன்சிட்டே?" வாய் திறந்து பதில் சொல்லும் நிலையிலெல்லாம் அவள் இல்லை. அவன் மேனியெங்கும் வருடிய விரல்கள் அவனுக்கான பதிலை அழகாக சொல்லிவிட்டன. அவன் வீணையென மீட்டியதில் அவள் உடல் முழுவதும் மென்மையான சுகம் பரவி விதிர்க்கச் செய்தது. சுகத்தின் உச்சத்தில் கண்கள் சொருக, அவனது பின்னந்தலையின் கேசம் பற்றி,

"விஜய்!" என பிதற்றத் தொடங்க, அந்த நொடி, நான் நினைத்ததென்ன இங்கு நடப்பதென்ன? ஏன் இப்படி

நடந்துகொள்கிறேன்? தன் மீதே கோபம் உண்டாக, தான் நினைத்ததில் பாதியாவது செய்தால் தான் நிம்மதியாக இருக்க முடியும் என தோன்றிவிட, மெல்லிய சிரிப்புடன்,

"எவன் உன்னை தொட்டான் என நினைத்து அடித்தாயோ... அவனது தீண்டலுக்கு... நீ ஏங்கி நிற்கிறாய் நந்தினி! " என்ற வார்த்தைகள் கூரான வாளாக அவள் இதயம் பிளக்க, உறைந்து போனாள் அவள். இதைவிட கேவலமாக யாராலும் அவமானப்படுத்த முடியாது. தண்டனை என்று சொன்ன பிறகும் உருகி நிற்கிறேனே... அவமானத்தில் கண்ணீர் கோடாய் காதை எட்ட, அதை துடைத்தவன்,

"எதற்கு இந்த அழுகை நந்தினி? இதனால் எதுவும் மாறப் போவதில்லை. இனி ஒவ்வொரு நாளும் இப்படி தான் இருக்கப் போகிறது. அதற்கேற்றாற் போல் உன்னை தயார் செய்து கொள். திட்டமிட்டு உன்னை என் கட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறேன் நந்தினி. அதில் இருந்து வெளியேறுவது என்பது முடியாத காரியம்.

உனக்கு வேறு வழியே கிடையாது. பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் ஏற்றுக் கொள்ள தான் வேண்டும். பிடித்தம் தான் இல்லையா நந்தினி?" குறுஞ்சிரிப்புடன் கேட்க,

மறுப்பாக தலையசைத்தவளின் கன்னம் வருடியவன்,

"பொய் சொல்கிறாய் நந்தினி! கண்களை மூடி தூங்க முயற்சி செய்... நமக்காக குறித்துக் கொடுக்கப்பட்ட நேரத்தின் கணக்கு வேறு பாக்கி இருக்கிறது." என கண் சிமிட்டி சிரிக்க,

இவன் கைப்பாவையாக ஆடப் போகிறோம்...எதிர்ப்பதற்கு வழியே இருக்கப் போவதில்லை என்பது தெள்ள தெளிவாக தெரிந்து போனது நந்தினிக்கு. அவனும் அதே நிலையில் தான் இருந்தான்.

அவளுக்கான தண்டனையை நோக்கி விரல் கூட அசைக்கப் போவதில்லை என்பது தெரிந்தும், மழையும் இல்லா வெயிலும் இல்லா வானிலை போல் மனதுக்கு இதமாக இருந்தது தான் அவன் வியப்புக்குக் காரணம். (இதற்குப் பெயர் தான் காதலா ? இதைக் கேட்டா எங்களை சிரச் சேதம் பண்ணிடுவான்... விட்டுப் பிடிப்போம்! )

சொன்னது போல் மீண்டும் அவளை நாடியவன் எந்த குத்தல் வார்த்தைகளும் இன்றி ஆசைக் கணவனாய் மோத்தில் மூழ்கடித்தான். இதற்கு முன் வார்த்தைகளால் வதைத்தவன் இவன் தான் என்றால் நம்புவது கூட சிரமம் தான்.

விடிந்து வெகு நேரத்திற்கு பிறகே,

"நந்தினி... போதும். விழித்துக் கொள்..." இதமாக நெற்றி வருட... தூக்கம் தெளியாமல் பதறி எழுந்தவளின் விழி

வட்டத்துக்குள், வெளியே செல்வதற்கு தயாராக கிளம்பி நின்று கொண்டிருந்தான் விஜயேந்திரன்.

"எப்பொழுதும் எட்டு மணிக்கெல்லாம் கீழே சென்றுவிடுவது வழக்கம் இன்று முதல் நாள் என்பதால் பரவாயில்லை. நாளை முதல் நீயும் என்னுடன் தயாராகி கீழே வந்துவிட வேண்டும் நந்தினி. இங்கு அனைத்து வேலைகளுக்கும் ஆட்கள் உண்டு என்ற போதும் உணவு பரிமாறுவது உன் வேலை தான்.

நான் கிளம்பி சென்றதும் அம்மாவுடன் இருக்க வேண்டும். அவர்கள் என்ன வேலை சொல்கிறார்களோ தட்டாமல் செய்ய வேண்டும். அரசர் குலத்து பெண் இல்லை என்றாலும் எதிலும் குறையற்ற பெண் என பெயரெடுக்க வேண்டும் நந்தினி. நீ பயப்படும் படி எந்த வேலைகளும் இருக்காது. மேற்பார்வை இடுவது, உத்தரவு பிறப்பிப்பது போன்றவைகள் தான். இதுவரை அம்மா செய்து வந்தவைகள் எல்லாம் இனி உன்னிடம் ஒப்படைக்கப்படும்.

இன்னொரு முக்கிய விஷயம்... நீ எப்பொழுதும் புடவை தான் உடுத்த வேண்டும். நேற்று சொன்னது போல் எல்லா நகைகளையும் அணிந்து கொள்ள வேண்டும். இங்கு யாரேனும் வந்த வண்ணம் இருப்பார்கள், உன்னை பார்த்ததுமே நீ தான் விஜயேந்திரனின் மனைவி என்று தெரிய வேண்டும். யாரென கேட்கும் படி இருக்கக் கூடாது. வேறு ஏதேனும் தெரிய

வேண்டுமா? " அவளருகே அமர்ந்திருந்தவன் இதமாக வினவ, (யாரங்கே...ரெண்டு காபி! ...ஒன்னு நந்துக்கு, ஒன்னு எங்களுக்கு..!)

"அடப்போடா... நீ இதுவர சொன்னதே ஒன்னும் புரியல... இன்னும் என்னத்த தெரிஞ்சுகிறது?" அவளது புலம்பலில் வாய்விட்டு சிரித்தவன்,

"நந்தினி... மை லிட்டில் ஃபேரி..'' என அணைத்து நெற்றியில் முத்தமிட்டு

''என்னை நான் கேட்க, போடா என சொல்லிய முதல் ஆள் நீ தான். பயப்படாதே, போக போக புரிந்துவிடும்.'' எனச் சிரிக்க,

"ஐயோ சத்தமாவா சொல்லிட்டேன்...?"

"ம்... இன்னும் கொஞ்சம், இல்லை... மைண்ட் வாய்ஸ் என்றால் சுத்தமாகவே சத்தத்தை குறைக்க வேண்டும்." அவள் நெற்றி முட்டி சிரித்தவன்,

"போ குளித்துவிட்டு வா! காத்திருக்கிறேன்." என வெற்று தோள்களில் தன் கரம் பதித்து விழி பார்த்து சிரிக்க,

"விஜய் ப்ளீஸ்... நீங்க வெளிய போங்களேன்..."

"இன்னும் வெட்கமா?" ஆச்சரியமாய் கேட்க,

"ப்ளீஸ்..."

"ம்... கிளம்பியதும் சொல். அலுவல் அறையில் இருக்கிறேன் சேர்ந்து போகலாம்." அவன் சொன்னது போல் அலங்கரித்துக் கொண்டவள் கண்ணாடியில் தன் பிம்பத்தை பார்த்துக் கொண்டிருக்க,

"போகலாமா நந்தினி?"

"விஜய் இது எல்லாத்தையுமே போடணுமா? வீதி உலா போற அம்மனுக்கு சாத்துன மாதிரி இருக்கு... இதை மட்டும் கழட்டி வச்சுடட்டுமா?"

"நந்தினி நீ ஒன்றை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நான் சொன்ன பிறகு...நீ அதை மாற்ற நினைக்கக் கூடாது. அது நேர விரயம் தான். எந்த மாற்றமும் நிகழாது." அவன் நடக்கத் தொடங்கிவிட, உன்னைவிட வேகமா எனக்கு நடக்க தெரியும் என்பது போல் அவனை முந்திக் கொண்டு போனவளை விஜயரேகா எதிர்கொள்ள, சிறு சிரிப்புடன் கடந்து சென்றுவிட்டான் விஜய்.

"நந்தினி! நேற்று குறித்த நேரத்தில் எல்லாம் ஒழுங்காக நடந்ததா?" (மிரட்டும் தொனியோ?)

'என்ன இது இப்படி கேக்கறாங்க?' குப்பென முகம் சிவக்க பதில் சொல்ல முடியாமல் திணறியவளைப் பார்த்து,

"நானும் பெண் தான். அதிலும் உன் நாத்தனார். என்னிடமே இப்படி வெட்கப்பட்டால் நேற்று..."

"அக்கா சாப்பிடலாமே..." மனைவி மலங்க மலங்க விழிப்பதைப் பார்த்தவனுக்கு அங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது புரிய அழைத்துவிட்டான். புது மனைவியை கூப்பிடாமல் தன்னை அழைத்தான் என்பதே சந்தோசத்தை உண்டு பண்ண,

"வா... இன்று நான் கற்றுத் தருகிறேன். நாளை முதல் நீயே தான் பரிமாற வேண்டும்..." கேள்வியை அத்தோடு நிறுத்திக் கொண்டு சாப்பாட்டுக் கூடம் நோக்கி நந்தினியையும் அழைத்துக் கொண்டு சென்றுவிட்டாள் ரேகா.

விஜயேந்திரன் மனைவியின் மனதுக்கு இதமான கணவனாக மாறுவானா?

# அத்தியாயம் 14

"முதலில் இனிப்பு..." என்று தான் சொன்னது போல் அனைத்தையும் சொல்லிக் கொடுத்த ரேகா அவ்விடம் விட்டு நகர,

"அக்கா என்ன கேட்டார்கள் நந்தினி?" குறும்பு கூத்தாட கேட்டவனை நிமிர்ந்தே பார்க்க முடியவில்லை அவளால்.

"இதற்கு தான் சொல்வதை கேட்க வேண்டும் நந்தினி. என்னோடு வந்திருந்தால் இதை தவிர்த்திருக்கலாம். குறித்த நேரத்திற்காக ஒன்று என நான் தான் அறிவுறுத்தினேனே நந்தினி. ஆம் என்பது போல் தலையசைத்திருக்க வேண்டியது தானே?

இது உன் புடவை நோக்கி தொடரும் அப்புறம்... இந்நேரம் திருப்தியாக மெத்தை விரிப்பு மாற்றப்பட்டிருக்கும். இங்கு, இதெல்லாம் கொஞ்சம் தீவிரமாகவே பார்க்கப்படும். எல்லாம் நேரம் காலத்தை வைத்து தான் முடிவு செய்யப்படும்.": கண்ணை கட்டியது நந்தினிக்கு.

"நந்தினி இப்படி சிறுபிள்ளை போல பேந்த விழிக்காதே. இங்கு உன்னை நூறு கண்கள் பார்த்துக் கொண்டிருக்கும்.

கொஞ்சலோ, கோபமோ... ரகசியம் காப்பது அவசியம். எதுவாக இருந்தாலும் சிரித்த முகமாகவே தான் சொல்ல வேண்டும்."

"எப்போதும் அடுத்தவர்களுக்காகவே வாழ முடியுமா விஜய்?"

"வாழ்ந்து தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை. குடும்ப கவுரவம் முக்கியம் நந்தினி. பொறுமை மிகவும் அவசியம். நீ சிறு பெண் என்பதால் தான் ஒவ்வொன்றையும் சொல்லித் தருகிறேன்... புரிந்து நடந்து கொள். உன் நண்பர்கள் வந்துவிட்டார்கள் என நினைக்கிறேன்... சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு கிளம்பு."

"எப்படி சொல்றிங்க?"

"வரவேற்கும் ஓசை கேட்டதே..." சட்டென விரையப் போனவள் கரம் பற்றியவன்,

"சாப்பிடச் சொன்னேன்."

"எங்க வீட்லயே சாப்பிட்டுக்கறேன்." புருவம் சுருங்க அவளை ஏறிட்டவன்,

"பேசும் போது அதிக கவனத்தோடு பேச வேண்டும் நந்தினி. நீ இந்த வீட்டின் மகாராணி என்பதை நினைவில் வை." கரத்தை விடுவித்தான். (நந்து..! நீ ஏன் ராஜகுமாரன் வேணும்னு கனவு கண்ட... இது ரொம்ப சிஸ்டமேட்டிக்கா இருக்கே . எல்லாத்துக்கும் ரூலா...)

"ஆதி... பிரபா...! வாங்க, வாங்க..." என இருவரின் கரம் பிடித்துக் கொண்டவள் முகம் ஆனந்தத்தில் ஜொலித்தது.

"உடன்பிறப்புகள் தான் அழைக்க வரவேண்டும். சமஸ்தானமாக இருந்தால் இதெல்லாம் தெரிந்திருக்கும்..." பட்டென சொன்னார் சகுந்தலா தேவி. மூவருக்குமே முகம் வாடிவிட்டது.

"இவர்களும் நந்தினியின் உடன்பிறப்புகள் போல் தான் அம்மா." சூழலை இலகுவாக்கினான் விஜயேந்திரன்.

"என்ன சாப்பிடறீங்க?"

"ராணியம்மா கொடுத்துட்டாங்க நந்து. ஒரே நாள்ள இவ்வளவு பொறுப்பாய்ட்டியே நம்பவே முடியல..." என சிரித்தான் ஆதி.

"போகலாம் ஆதி. நாங்க முன்னாடி போறோம் நீங்க வந்துடுங்க..." ராணியாரின் தெளிவற்ற முகம் கண்ட பிரபா நண்பனை இழுத்துக் கொண்டு கிளம்பினான்.

"நந்தினி... விஜய்க்கு நிறைய வேலைகள் இருக்கும். நாள் முழுவதும் உன்னோடு இருக்க முடியாது. நீ மட்டும் இருந்துவிட்டு இருட்டுவதற்குள் வந்துவிட வேண்டும். விஜய், உனக்கு மதிய சாப்பாடு எப்போதும் போல் வந்துவிடும்."

"ஆகட்டும் அம்மா. நாங்கள் கிளம்புகிறோம்." நந்தினிக்கு அழுகை அழுகையாக வந்தது. நான் மட்டும் போறதுக்கு பேரு

மறுவீட்டு விருந்தா? ஒரு நேரம் எங்க வீட்ல சாப்பிட்டா ஆகாதா? பாவம் அம்மா... இந்நேரம் அப்பாவை பாடாய்படுத்தி மார்க்கெட்டில் போய் எல்லாம் வாங்கிட்டு வந்திருப்பாங்க.

நாகரிகமே தெரியல என்ன அரச குடும்பம்? உள்ளே தனக்குள் மருகிக் கொண்டிருந்தாள். பேசாமல் வரும் மனைவியை கண்டவன், தன் அடுத்த பாடத்தை ஆரம்பித்துவிட்டான்.

"நந்தினி! வீட்டிற்கு வருபவர்களிடம் மிகவும் கவனமாகப் பழக வேண்டும்..."

"ஆதியும் பிரபாவும் என் சின்ன வயசு நண்பர்கள்..." இருந்த கோபத்தையெல்லாம் காட்டி வெடுக்கென சொல்லிவிட்டாள். ஆழ்ந்த பார்வையை அவள் மீது செலுத்தியவன்,

"தெரியும்... எல்லோரின் பார்வையும் ஒன்று போல் இருக்காது. அடிக்கடி சொல்லும் படி நடந்து கொள்ளாதே நந்தினி. நம் குடும்பத்திற்கு ஏற்றது போல் நீ உன்னை மாற்றிக் கொள்ளத் தான் வேண்டும்."

"என்னால முடியாது. உங்களுக்கு பிடிக்கலைன்னா நான் எங்க வீட்டிலேயே இருக்கேன்."

"என்னைப் பார்த்தால் பைத்தியக்காரன் போல் இருக்கிறதா நந்தினி? இதற்காகவா இத்தனை வருடங்கள் ஆறா ரணத்துடன்

காத்திருந்து உன்னை மணமுடித்தேன்? நல்ல விஷயங்களை கற்றுக் கொடுத்தால் ஏற்றுக் கொள்ள வேண்டும். சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளக் கூடாது." அத்தோடு பேச்சை முடித்துக் கொண்டான்.

நந்தினியின் பெற்றோர் மாப்பிள்ளையை வருந்தி அழைக்க, மறுக்க முடியாமல் உள்ளே சென்றவனிடம், தாயோடு பேசியபடி இயல்பாய் அடுக்களைக்கு சென்று சற்று நேரத்தில் திரும்பியவள், ஒரு தட்டில் சில பலகாரங்களும், காபியையும் வைத்து நீட்டி,

"உங்களுக்காக என் அம்மா செஞ்சிருக்காங்க. மரியாதைக்காகவாவது சாப்பிடுங்க! மதியமும் சாப்பிட வரமாட்டீங்க... அவங்க பாவம் விஜய்!"

"நான் மாமியார் வீட்டிற்கு சீராட வரவில்லை நந்தினி... உனக்கு ஞாபக மறதி சற்று அதிகம் தான்! உன்னை தண்டிப்பதற்காக மட்டுமே மணந்திருக்கிறேன் என்பதை உன் சிறிய மூளையில் பதிவு செய்!" என்றான் சீறும் குரலும், சிரித்த முகமுமாய் அவளுக்கு மட்டும் கேட்கும் விதமாய். என்ன திமிர்? பெற்றோர் வீட்டிலேயே இருப்பேன் என்கிறாளே... என்னும் கோபம் வார்த்தைகளாய் வந்துவிட்டது.

"தண்டனை எனக்கு மட்டும் தானே? உங்க மேல நல்ல மதிப்பும், உயர்ந்த எண்ணமும் கொண்ட என் பெற்றோரை ஏன் தண்டிக்கிறீங்க?" எவ்வளவோ முயன்றும் அவள் கண்களில் நீர்

கோர்ப்பதை தடுக்க முடியாமல் தன் விழிகளை அவள் தாழ்த்திக் கொள்ள,

"உன்னைப் பெற்றதால்!"என குத்தி கிழிந்தாலும் அவனால் அவ்விடம் விட்டு நகர முடியாமல் போக, அவள் கையில் இருந்த காபி கோப்பையை வாங்கியபடி அமர்ந்துவிட்டான். அங்கிருந்த ஆதி, பிரபா, நிவி, அண்டைவீட்டார் யாரோடும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

காபியைக் குடித்துவிட்டு சற்று நேரம் இருந்தவன், கண்களால் அவளிடம் விடை பெற்று மற்றவரை கண்டுகொள்ளாமல் சென்றுவிட்டான். முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல் அனைவரும் அவளிடம் இதமாகப் பேசினார்கள். தங்களின் வருத்தம் அவளை பாதிக்கக்கூடாது என்பதில் அவள் பெற்றோரும் நண்பர்களும் கவனமாய் இருந்தனர்.

மனதில் ஏதோ நெருட,

"ஏதும் பிரச்சனை இல்லையே நந்து?" என்று அவளை தனியே அழைத்துக் கேட்ட ஆதியிடம், மனதை திறந்து எல்லாவற்றையும் கொட்டி விடலாமா? என ஒரு கணம் நினைத்தவள், தன் உதடுகளைக் காது வரை இழுத்து பிடித்து சிரித்தபடி, மறுப்பாகத் தலையசைத்தாள்.

"அம்மா, மதியம் விஜய் வரமாட்டார்! ஏதாவது சிம்பிளா செய்யுங்க!" என சோபாவில் சுருண்டு அமர்ந்தவளின் அருகே வந்த நிவேதா,

"என்ன நந்துக்கா... இப்படி சொல்றீங்க? ஆன்ட்டி நடப்பது, பறப்பது, நீந்துவது என அனைத்தும் வாங்கி வந்திருக்கிறார்களே..." என சோகமாகிப் போக,

"அவரைப் போல் உள்ளவர்கள் இவ்வளவு தூரம் வந்ததே பெரிது. நந்துவை இன்று முழுவதும் நம்மோடு இருக்க அனுமதித்திருக்கிறார்களே அதுவே போதும்!" எனத் தேற்றினான் பிரபா. அவளது பெற்றோருக்கும் அவர்களது ஏற்றத் தாழ்வு நன்கு புரிந்தது.

"எப்படியோ, மகள் சந்தோஷமாக இருந்தால் அதுவே போதும்! " என நினைத்தனர். மகளை மாப்பிள்ளை நன்றாகப் பார்த்துக் கொள்கிறாரா? இருவரும் சந்தோஷமாக இருந்தார்களா? என கேட்க நினைத்தவர், நாகரீகம் கருதி அமைதி காத்தார்.

அவன் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் பழைய நந்துவாகி கலகலக்கத் தொடங்கியதும், அன்னையின் கவலை மறைந்தது,

"உன் கணவர் வரவில்லையென்றால் பரவாயில்லை! நாம் சாப்பிடுவோம். நீங்கள் அனைத்தையும் சமையுங்கள் ஆன்ட்டி!" என்றான் ஆதி.

"ஆதி அத்தான், நீங்க எப்போ சாப்பாட்டு ராமன் ஆனீர்கள்?" என்ற நிவியின் காதைப் பிடித்து திருகியவன்,

"ஏய்! விஜய் நிச்சயம் வருவார்! அதற்காகத் தான் செய்யச் சொன்னேன்!" என்றான்.

அவனது பேச்சை அங்கிருந்த யாரும் நம்பவில்லை, எனினும் சிறு நப்பாசையுடன் நந்துவின் அன்னை சமைக்கத் தொடங்கினார். ஆனால் ஆதி சொன்னது தான் நடந்தது. மதியம், ரெண்டு மணிக்கு விஜய் வீட்டிற்கு வந்தான்.

நண்பர்களுடன் கொட்டமடித்துக் கொண்டிருக்கும் மனைவியை ஒரு நொடி விழிகளால் விழுங்கியவன்,

"சாப்பிட்டாயா நந்தினி? பெரிய அத்தை நாலு மணிக்கு ஊருக்கு கிளம்ப வேண்டுமாம், உன்னை அம்மா அழைத்து வரச் சொன்னார்கள்! கிளம்பலாமா?" என்றான்.

ஆதியை முறைத்தாள் நந்தினி. அவனோ,

"உங்களுக்காகத் தான் காத்திருக்கிறோம் சர் ! வாருங்கள் சாப்பிட்டு விட்டு அதன் பிறகு கிளம்பலாம்." என்றான்.

"நான் சாப்பிட்டு விட்டேன். மன்னித்துவிடுங்கள்! நந்தினி சீக்கிரம் சாப்பிடு. கிளம்ப வேண்டும்!" என்று பரபரத்தான்.

"பரவாயில்லை சார், சும்மாவேனும் எங்களுக்கு கம்பெனி கொடுக்க எங்களோட சாப்பிடுங்களேன்!! ராஜா விஜயேந்திர

பூபதியுடன் சாப்பிட்டோம் என்ற பெருமை கிடைக்க செய்யுங்களேன்!" என பிரபா கூறவும், வாய்விட்டு சிரித்தவன்,

"இந்த சார், மோர் எல்லாம் வேண்டாம், விஜய் என்றே கூப்பிடுங்கள்!" என நேரே சென்று டைனிங் டேபிளில் அமர்ந்துவிட்டான்.

"அதெப்படி நந்து மகாராணியார் கோபித்துக் கொள்வார்களே!" என்ற ஆதியை முறைத்தவள்,

"பாருங்க... விஜய்! இவன் எப்படி பேசுறான்னு... நான் அப்படியெல்லாம் கோபப்படமாட்டேன் தானே!" என சிணுங்கலாய் கணவன் முகம் பார்க்க,

"ஆம்! நீங்கள் நந்தினி தேவியாரின் முழு உரிமையாயிற்றே! அவளைப் போல் நாங்களும் விஜய் என அழைத்தால் நன்றாக இராதே!" என்ற பிரபாவை, அவள் பொய் கோபத்தோடு காலால் உதைக்க,

"நீ என்னை உதைக்கிறாய் நந்தினி!" எனக் குறும்பாக அவள் கணவன் சிரிக்க, ஆதியும், பிரபாவும் வெடியாய் சிரித்தனர்.

"சாரி!" என அசடு வழியும் மனைவியை அப்பொழுதே அள்ளிக்கொள்ள வேண்டும் போல் எழுந்த ஆவலை வெகு சிரமப்பட்டு தான் விலக்க வேண்டியிருந்தது. நான்கு

மணிக்கெல்லாம் வீடு வந்து சேர்ந்த மகனையும், மருமகளையும் கண்டவர்,

"என்னப்பா... அலுவலகம் போகவில்லையா?" என்றார் சந்தேகத்துடன்.

"எங்கே, உங்கள் மருமகள் தான் மதியம் சாப்பாடு முடிந்ததில் இருந்து போன் அடித்த வண்ணமாய் இருக்கிறாளே... நம் வீட்டுக்கு செல்லவேண்டும்... வண்டி அனுப்புங்கள் என்று ஒரே நச்சரிப்பு! முத்துவை வெளிவேலையாக அனுப்பியிருந்தேன்.

ராமு அத்தையை அழைத்து சென்றுவிட்டான். கண்ணன் அக்காவை அழைத்துப் போயிருப்பதாகக் கூறினான். வேறு வழியில்லாமல் நானே அழைத்து வரும்படி ஆகிவிட்டது!" என அள்ளிவிட்டான்.

"அடப்பாவி! ஃப்ராடு பயலே!" என அவள் அவன் முகம் பார்க்க, அவனது அன்னையோ,

"இங்கே வாம்மா! கட்டினால் உன்னைத் தான் கட்டுவேன் என ஒற்றைக் காலில் நிற்கிறான். நம் குடும்ப பாரம்பரியம் தெரிந்து நடந்து கொள்பவளாக இருக்க வேண்டுமே என்ற கவலை இருந்தது. ஆனால் இப்பொழுது சற்று நிம்மதியாக இருக்கிறது.

இப்படித் தான் தாய் வீட்டிற்கு போனோம், வந்தோம் என்று இருக்க வேண்டும். அண்ணியைப் பார்! திருமணத்திற்கு முதல் நாள் தான் வந்தாள், இதோ இன்று மதியமே கிளம்பிவிட்டாள். எனக்கு வயதாகிவிட்டது. இனி பொறுப்பாக நீ தான் வீடு நிர்வாகம் பார்க்க வேண்டும்!" என அவள் கரம் பற்றி மென்மையாக அழுத்த,

"கவலையே படாதீர்கள் அம்மா! நீங்கள் சொல்லிக் கொடுக்க, கொடுக்க கற்றுக்கொள்வாள்!" என அவளுக்கு முன்பாக அவன் பதில் கூறவும்,

"நல்லது! போங்கள், சற்று நேரம் இருவரும் ஓய்வெடுத்துவிட்டு மாலை நம் குலதெய்வ படையலுக்கு தயாராகி வாருங்கள்" என அனுப்பி வைத்தார்.

நந்தினிக்கு முன்பாக இரண்டிரண்டு படிகளாக தாவி ஏறியவன், அறையின் உள்வாசலில் அவளுக்காக காத்திருந்தான். உள்ளே நுழைந்தவளை இழுத்து அணைக்க,

"விடுங்க... விஜய்!" என திமிர,

"ராஜாளியின் ஒரு பிடிக்கு தாங்கது இந்த தேன் சிட்டு. பாவம் என்று தான் விட்டு வைத்திருக்கிறேன்... இன்னும் விடுங்கள் என்கிறாயே நந்தினி! முடியாது... இதெல்லாம் நியாயமே இல்லை. உன் அம்மா வீட்டில், பாருங்க விஜய் என்று சிணுங்கினாயே, அப்போது எழுந்த ஆசை. இவ்வளவு நேரம்

பொறுமை காத்ததே பெரிய விஷயம்!" என்று கன்னத்தோடு கன்னம் உரச,

'வேண்டாம் நந்து! நெகிழாதே... இவன் சட்டென உனக்கு வலிக்கும்படி பேசிவிடுவான்!' என மனம் எவ்வளவோ எடுத்துரைத்தும், அதை காதில் போட்டுக் கொள்ளாமல் உருகியவள்,

"இவ்வளவு அவசரமா ஏன் அழைத்து வந்தீங்க? பெரியத்தை கிளம்புவதாக பொய் வேறு..."

"என்ன செய்வது, என் மக்கு பொண்டாட்டியை மாமியார் மெச்சும் மருமகளாக்க வேண்டுமே! அதற்காகத் தான்."

"என்ன அநியாயம்! நீங்க மட்டும் என் வீட்டில் பத்து நிமிஷம் கூட இருக்க மாட்டீங்க, சாப்பிட மாட்டீங்க. நான் மட்டும் என் ஆயுள் முழுவதும் உங்க வீட்டிலேயே இருக்கனுமோ?" விளையாட்டாக ஆரம்பித்த பேச்சு, வினையாக தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

"நந்தினி...நந்தினி!" என ஆழ்ந்த மூச்சை வெளியிட்டு, தன்னை சமன் செய்து கொண்டவன்,

"நந்தினி தேவியாருக்கு ஒரு சிறு அறிவுறுத்தல். இது நம் வீடு, அது உங்கள் பெற்றோர் வீடு! ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்" என வலிக்காமல் அவள் கன்னம் கிள்ளி,

"என் மாமனார் வீட்டில் நான் இருக்கவில்லையா? உணவு உண்ணவில்லையா? என்னைப் பார்த்து சொல்!?" என்றான் கேலி போலும்.

"ஆதியும், பிரபாவும் சொன்னதால் தான் சாப்பிட்டீங்க!"

"காலை, யார் சொல்லி காபி குடித்தேனாம்?"

ஒரு நிமிடம் உண்மை, 'உனக்காகத் தான்' என உறக்கக் கூவியதை கண்டு கொள்ளாதவளாய்,

"பிரபா, உங்களை ராஜான்னு புகழ்ந்ததும், பெருமை பிடிபடாமல் சாப்பிட வந்தீங்க! உங்களுக்கு தான் ஏற்கனவே வீட்டிலிருந்து சாப்பாடு வந்துடுச்சே!" என முகம் திருப்பிக் கொண்டாள்.

"வீட்டில் இருந்து வந்த உணவை சாப்பிட்டே ஆகா வேண்டும் என்று எனக்கு யாரும் ஆணையிட முடியாது நந்தினி! அதோடு பிரபா உண்மையைத் தானே சொன்னான். அரசனோடு குடிமக்கள் உணவருந்த விரும்புவது இயல்பு தானே! அது அவர்களுக்கு பெருமையும் கூட!" என புருவம் உயர்த்த,

"அவன் ஒன்னும் உங்களோட சாப்பிட ஏங்கல.... உங்க வீக்னஸ் தெரிந்து அழைத்தான். நல்லவேளை, மன்னராட்சி ஒழிந்துவிட்டது! இப்போதே இவ்வளவு ஆடுபவர்கள், ஆட்சி செய்தால் எங்கள் பாடு திண்டாட்டம் தான்!!" என்றாள் கிண்டலாக.

அவனை மட்டம் தட்டும் வேகம் அவளிடம். நண்பர்களிடமும், பெற்றோரிடமும் அவன் நடந்து கொண்ட முறையினால் ஏற்பட்ட மனத்தாங்கலை தான் அப்படி வெளிப்படுத்தினாள்.

"போதும், நந்தினி! உன் விளையாட்டு பேச்சை நிறுத்து. உன் வார்த்தைகள் என்னை காயப்படுத்துகின்றன!" என்றான் ஆழ்ந்த குரலில்.

ஒரு காலத்தில் நாட்டையே ஆண்டவர்களை கேலி செய்வதை அவனால் பொறுத்துக்க கொள்ள முடியவில்லை. அதிகாரத்தில் இருந்தவர்களிடம் அதைப் பறித்து சாமானியனாக்கினால், அது அவர்களை எவ்வளவு பாதிக்கும் என்பது அந்த சிறு பெண்ணிற்கு புரியவில்லை.

"நான் விளையாட்டாக பேசவில்லை அரசே! உண்மையைத் தான் சொல்கிறேன்! மிகவும் வலிக்கிறதா?" எனக் கண்களை தட்டி கேட்கவும், ( இவள் தேரை இழுத்து தெருவில் விடாமல் அடங்கமாட்டா போல!)

"நந்தினி!" என அதட்டியவன்,

"நீ சொன்னது போல் பழி வாங்குவதற்காக பிராத்தல் கேசில் உன்னை உள்ளே தூக்கிப் போடாமல், என் தரத்தைக் குறைத்துக் கொண்டு உன் கழுத்தில் தாலி காட்டினேன் அல்லவா? எனக்கு இது தேவை தான். தரம் தாழ்ந்தவர்களிடம் உயர்ந்த

எண்ணங்களை எதிர்பார்ப்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!" என மீண்டும் சொல்லம்பால் வேதனையுறச் செய்து விட்டே விலகிச் சென்றான்.

"பிராத்தல் கேசில் உள்ளே போடுவாயா? தரம் தாழ்ந்தவளாமே!நான் எத்தனை பேரோடு சுற்றியதைப் பார்த்தான்?" கோபத்தில் அவளை வறுத்த எண்ணி சொன்னதை நினைத்து, நினைத்து கண்ணீரில் கரைந்தாள்.

அந்த அறையில் இருந்த தொலைபேசி அலறி அவளை நிலைப்படுத்தியது. இவளது ஹலோவிற்குக் கூட நேரம் ஒதுக்காமல்,

"5:30 க்கு தயாராகி கீழே வா. கோவிலுக்குப் போக வேண்டும்!" எனக் கட்டளையாய் ஒலித்தது அவன் குரல். அவள் பதில் சொல்லும் முன்பாகவே துண்டிக்கப்பட்டது. சற்று நேரத்தில் உள்ளே வந்த விஜய்,

'இவன் அதிகாரத்திற்கெல்லாம் என்னால் ஆட முடியாது!' என சிந்தித்தபடி சிலையாய் அமர்ந்திருந்தவளின் கரம் பற்றி எழுப்பி,

"தெரியுமடி! இப்படி அலுச்சாட்டியம் பண்ணுவாய் என!" என்று கூறியபடி, அவள் புடவையைப் பற்றி இழுக்க, திகைத்துப் போனாள் நந்தினி.

அவள் கரம் பிடித்து குளியலறைக்கு இழுத்துச் சென்றவன், ஷவரின் அடியில் நிற்க வைத்தான். திமிறியவளைக் கட்டுப்படுத்த தானும் நனைந்தவன், அவளது ஜாக்கெட்டில் கை வைக்க... மிரண்டவள்,

"வேண்டாம் விஜய்! நான் கிளம்புகிறேன். ப்ளீஸ் விடுங்க... சீக்கி..ர..ம்... கிளம்பி விடுவேன்!" என அவன் கரங்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்ச, என்ன நினைத்தானோ பெரிய பூந்துவாலையை எடுத்து அவள் மீது போட்டவன், தானும் உடைகளைக் களைந்து, மற்றொரு துவாலையை கட்டியபடி வெளியேறினான்.

அவனது செயலில் ஸ்தம்பித்துப் போனவள், தான் நினைத்ததை செயற்படுத்த முடியாது ஆயுள் முழுவதும் இவனிடம் தோற்கப் போகிறோம் என எண்ணித் துவண்டு போனாள்.

கோவிலில் மாமியார் சற்று இளக்கமாக பேசினார்.

"உன்னை கட்டியதில் எங்கள் இனத்திற்கு மிகுந்த மணவருத்தம்! ரேகாவின் மாமியாரெல்லாம் அதனால் தான் திருமணத்திற்கு வரவில்லை. என்ன செய்வது? மகன் விருப்பத்திற்கு பணிந்து போகத் தானே வேண்டியிருக்கிறது! மங்களாம்பிகையிடம் வேண்டிக் கொண்டால் எல்லாம் சரியாகிவிடும்.

நான் நினைத்ததை போல அல்லாமல் நீ மிகவும் நல்ல பெண்ணாகத் தான் இருக்கிறாய். சீக்கிரமே அனைவரும் புரிந்து கொள்வார்கள். உன் மாமனார் மஹேந்திரபூபதியே உனக்கு மகனாகப் பிறக்க வேண்டுமென வேண்டிக்கொள் அம்மா!" எனத் திருநீறு பூசிவிட்டார்.

'தனக்கு குழந்தையா?' என எண்ணியவளுக்கு கணவனின் குழந்தைப் பிராயம் ஞாபகம் வர, கன்னங்கள் செம்மையுற்றது. அதை கவனித்த போதும், காணாதது போல் வேறு புறம் திரும்பிக் கொண்டான்.

இதோ, மூன்று நாட்களாகிவிட்டது. அவளோடு பேசுவதே கிடையாது அந்த ரோஷக்கார கணவன். பகல் முழுவதும் மாமியாரின் வால் பிடித்துக் கொண்டு, அவர் சொல்வதையெல்லாம் திறம்பட செய்து நற்பெயர் பெற்றாலும், இரவில் கணவன் அருகிலிருக்க, அவனது பாரா முகம் இவளை அதிகம் பாதித்தது.

ஆளுக்கொரு பக்கமாக படுக்க வசதியாக இருந்த பெரிய கட்டிலின் மீது

இன்று அவளுக்கு கோபம் வந்தது.

அவன் தண்டனைக்காக மணந்தாலும், இவள் மிகவும் விரும்பித் தானே திருமணம் செய்து கொண்டாள். அதோடு மாமியார் அவர்களது பரம்பரைக் கதையை கூறிய பிறகு தவறு

செய்தது தான் தான் என்பது தெள்ளத் தெளிவாக தெரிந்ததால், இவளுக்கு முதுகு காட்டி படுத்திருந்த கணவனிடம் மன்னிப்பு கேட்கவேண்டி, அவன் தோள் பற்றி,

"விஜய்... " எனவும்,

"கையை எடு! நான் உன்னை தொட விரும்பவில்லை!" என்றான் இரக்கமின்றி. ஒரு நொடி திகைத்தாலும்,

"இல்ல விஜய்! நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க... நான்... மன்னிப்பு கேட்கத் தான்..." என்றாள் குரல் நடுங்க.

"அடுத்தவர்களைப் பழிப்பதை மாற்றிக் கொள்ளவே மாட்டாயா?தவறாகப் புரிந்துகொண்டது நான் இல்லை! உன்னைப் பற்றி சரியாக கணித்ததால் தான் சொல்கிறேன்!" என்றான் அவள் முகம் பார்க்காமல்.

"போதும் விஜய்! வேணும்னே என்னை வதைக்காதீங்க. என்னைப்பத்தி என்ன தெரியும் உங்களுக்கு? நீங்க வேணும்னா தண்டிக்கிறதுக்காக கல்யாணம் பண்ணிருக்கலாம். ஆனால் நான் ஆசைப்பட்டுத் தான் உங்கள கட்டிக்கிட்டேன். உண்மையாவே நான் உங்களை விரும்புறேன் விஜய். ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க..." என்றவளது கண்ணீர் கன்னம் தொட்டது.

"தெரியும்! அரச குடும்பம், கணக்கிட முடியா செல்வம்... அழகான ஆண்மகன்! பிடிக்காமல் போனால் தான் ஆச்சர்யம்!?"

"கடவுளே! எப்படியெல்லாம் பேசுகிறான்... இவன் என்னை நம்பப் போவதும் இல்லை, மன்னிக்கப் போவதும் இல்லை!" எனக் கண்களை இருட்டிக் கொண்டு வர, இவன் மீது எனக்கு எப்படி... எப்போது காதல் வந்தது? பிரவீன் சொன்னது உண்மை தான்.

என்னை தீண்டிய காதல் நிச்சயம் உன்னையும் தீண்டும்னு சொன்னானே... அவனோட காதல் எனக்குப் புரியல... இன்று, என் காதல் இவனுக்கு புரியலையே... விசும்பல் சத்தம் கேட்கக் கூடாது என தலையணையில் முகம் புதைத்துக் கொண்டாலும் அவளது முதுகு குழுங்கல் காட்டிக் கொடுத்தது.

அவளை ஆழ்ந்து நோக்கியவன்,

"நந்தினி கையையும் வாயையும் உன் கட்டுக்குள் வைத்திருந்தால் இப்போது இந்த நிலை வந்திருக்காது. இதெல்லாம் நீயாக இழுத்துக் கொண்டது. போதும் நந்தினி... இப்படியே அழுது கொண்டிருந்தாயானால் நான் தூங்க வேண்டமா?"

"நான் அழுதா தான் உங்களுக்கு ரொம்ப சந்தோசமா இருக்குமே? அதுக்குத் தானே கட்டிக்கிட்டீங்க?" விசும்ப...

"நிச்சயம் மகிழ்வு தான் நந்தினி. முடிந்தால் உன் அழுகையை நிறுத்தி என் மகிழ்ச்சிக்கு முற்றுப்புள்ளி வை!"

சிறுபிள்ளையாய் வேக வேகமாக கண்களை துடைத்துக் கொண்டு விசும்பலை முற்றிலும் அடக்கி அவன் முகம் பார்க்க,

"அடடா! பட்டென நிறுத்திவிட்டாயே... போ... என் சிரிப்பு பாதியோடு நின்று போய்விட்டது." வருத்தம் போலும் முகத்தை வைத்துக் கொண்டாலும் இதழோர சிரிப்புடன் அவளுக்கு முதுகு காட்டி படுத்துவிட்டான்.

அதிகாலை வேளையில், அவள் முதுகில் அவன் பாரம் உணர்ந்தவளாய்,

"நந்தினி..." எனும் கிசுகிசுப்பான குரலும், இடை வருடும் அவனது கரமும் அவளை விழிக்கச் செய்தன. தன்னை மன்னித்துவிட்டான் என்பதே பெரிய ஆறுதலாக இருக்க, அவன் தேவைகள் அனைத்தையும் மறுப்பின்றி நிறைவேற்றினாள் அந்த பைத்தியக்காரி.

காதல் கொண்ட மனது விசித்திரமானது. இரவு, அவனது வார்த்தைகள் உயிரைக் குடித்தாலும், அதை மன்னிப்பது மட்டுமல்ல... மறந்தே போனாள் அந்த முட்டாள்! தன் மோகம் தீர்த்துக் கொண்டதும்,

"நந்தினி, இன்று காலை பத்து மணிக்கு ஆஸ்திரேலியா செல்கிறேன், திரும்பி வர பத்து நாட்களாகும். உனக்கு என்ன வேண்டும் சொல்? வாங்கி வருகிறேன்!" என்றான் அவளை தன்

மார்பில் சாய்த்து முதுகை வருடியபடி. அவன் மார்பில் இன்னும் அழுத்தமாக தன் முகத்தை புதைத்துக் கொண்டவள்,

"நீங்க எப்போதும் இப்படி இருந்தாலே போதும் விஜய்... வேறெதுவும் வேண்டாம்!" என்றாள். இதழோரம் சிறு சிரிப்புடன்,

"உனக்கு ஆசை அதிகம் தான்!" என்பதோடு நிறுத்திக் கொண்டான்.

நந்தினியின் ஆசை நிறைவேறுமா?

# அத்தியாயம் 15

ஆஸ்திரேலியா போய் சேர்ந்ததும் ஒரு போன் செய்து,

"ஹாய் நந்தினி! ஐயம் சேப்... அம்மாவிடம் சொல்லிவிடு! இந்நேரம் தூங்கியிருப்பார்கள் என்பதால் தான் உனக்கு அழைத்தேன். கிளம்பும் முன்பு கால் பன்றேன்னு சொல்!" என சொல்லிய அடுத்த நொடி அவளது பதிலுக்கு கூட நேரம் கொடுக்காமல் துண்டித்தான்.

'இவனுக்கு இதுவே பழக்கமாகிவிட்டது. எப்பொழுதும் இவன் மட்டுமே பேசுவான் எதிராளிக்கு வாய்ப்பே கொடுக்கமாட்டான்!' என செல்லமாக அலுத்துக் கொண்டவளுக்கு, பகல் முழுவதும் நேரம் போதாது போல் மாற்றி, மாற்றி மேற்பார்வையிடும் வேலைகள் இருந்து கொண்டே இருக்கும்.

இப்பொழுது அனைத்து வேலைக்காரர்களும், இந்த சின்ன ராணியிடம் தான் எல்லாவற்றிற்கும் உத்தரவு வாங்க வருகிறார்கள். அந்தளவிற்கு மருமகளை தயார் செய்து, தானாகவே ஒதுங்கி கொண்டார் மஹாராணி.

இந்த பத்து நாள் பிரிவு அவனுக்கு எப்படியோ? அவளை மிகவும் பாதித்திருந்தது. அடுத்த முறை அவன் செல்லும் போது,

தானும் உடன் செல்ல வேண்டும் என எண்ணுமளவிற்கு பாதிக்கப்பட்டிருந்தாள். நடுவில் அவளை அழைக்கவில்லை. அதை கூட மறந்து... மன்னித்தவள் அவன் வரவிற்காய் ஆவலாய் காத்திருந்தாள்.

விடிகாலை வேளையில் வீடு வந்து சேர்ந்தவனை, சூரியனைக் கண்ட தாமரையாய் ஓடிச் சென்று அனைத்துக் கொண்டாள். முத்தங்களில் அவனை மூச்சுத் திணற வைத்தாள். அவளது அன்பில் அரண்டு போனவன், தன்னை சமன் செய்துகொள்ள சில நிமிடங்கள் தேவைப்பட்டது.

"விஜய்! நான் உங்களை எவ்வளவு மிஸ் பண்ணினேன் தெரியுமா? இனி ஒரு முறை என்னை இப்படி விட்டுப் போகாதீங்க... நீங்க இல்லாமல என்னால இருக்க முடியாது விஜய்!" என மார்பில் சரண் புகுந்தவளின் அன்பில் நெகிழ்ந்தவன்,

"முதல் பிரிவில்லையா, அதனால் தான்! போகப் போக சரியாகிவிடும்." என தனக்கும் சேர்த்தே சொல்லிக் கொண்டான்... எங்கே அவள் அன்பில் கரைந்து போவோமோ? என்ற பயம் தோன்றியவனாய்.

குட்டி போட்ட பூனையாய் தன்னையே சுற்றி வருபவளைப் பார்க்க ஆச்சர்யமாகவும், ஆனந்தமாகவும் இருந்தது அவள் கணவனுக்கு.

அக்கா வீட்டிற்கு விருந்துக்கு செல்ல மறுத்து விட்டிருந்தான் விஜயேந்திரன். அன்னை எவ்வளவோ எடுத்துக் கூறியும்,

"என்னை சார்ந்தவர்கள் அவமானப்படுவதை என்னால் ஏற்க முடியாது, நந்தினியை ஏற்க முடியாமல் தானே அத்தை திருமணத்திற்கு வரவில்லை. இப்பொழுது நாங்கள் விருந்துக்கு செல்வது, அக்காவிற்கும், நந்தினிக்கும் நல்லதில்லை. அதனால் வேண்டாம். முதலில் அத்தை ஏற்றுக் கொள்ளட்டும். பிறகு பார்க்கலாம்" என்றான் பிடிவாதமாய்.

கேம்பஸ் இன்டர்வியூவில் வேலை கிடைத்ததை தோழியுடன் கொண்டாட, அன்று இரவு ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர் நண்பர்கள் இருவரும். பெரிய நட்சத்திர ஹோட்டலில் டேபிள் புக் பண்ணியிருக்க, கணவனுக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பிவிட்டு மாமியரிடம் பிறந்த வீட்டிற்கு போவதாக சொல்லிவிட்டு கிளம்பும் போதே,

"இன்றே போக வேண்டுமா? இருட்டிவிட்டதே நந்தினி..." என்ற மாமியாரிடம் கோபம் மூண்டாலும்...

"சீக்கிரம் வந்துடுறேன் அத்தை..." என ஓடிவந்துவிட்டாள். இருட்டிய பிறகு வெளியே செல்வதை மாமியார் அனுமதிப்பதில்லை. எப்படியும் விஜய் வருவதற்குள் வந்துவிடலாம் எண்ணமிட்டபடியே வந்து சேர்ந்தாள்.

அவளுக்காகவே காத்திருந்த நண்பர்கள் சிரித்த முகமாய் அவளை அழைத்துச் சென்றனர். நண்பர்களுக்கு வாழ்த்துச் சொல்லி கதை பேசத் தொடங்கினாள்.

இருவருக்கும் துபாயில் வேலை. ஆதியின் கம்பெனியில் சம்பளம் குறைவு. ஆனால் மூன்று மாதத்திற்கு ஒரு முறை பதினைத்து நாட்கள் விடுமுறையில் வரலாம். பிரபாவுக்கோ வருடத்திற்கு ஒருமுறை தான் வரமுடியும். ஆனால் சம்பளம் அதிகம்.

இவர்களும் போய் விட்டால் இன்னமும் மூச்சுமுட்டுமே? பயந்து போனாலும் அவரவர் வாழ்வை பார்க்க வேண்டுமே... என்று முயன்று புன்னகைத்தாள். தோழியிடம் முன்னிருந்த உற்சாகம் இல்லை என்பது அப்பட்டமாய் தெரிய,

"நந்து விஜய் இங்க தானே இருக்கார்?"

"ம்... மூனு நாளைக்கு முன்னாடி தான் வந்தார்."

"ஒன்னும் பிரச்சனை இல்லியே நந்து? விஜய் நல்லா தானே பாத்துக்கிறார்?" கவலையுடன் பிரபா வினவ,

"ம்... எனக்குத் தான் ஒன்னும் புரிய மாட்டேங்குது. மிலிட்டரி பெட்டாலியன் மாதிரி மூச்சு முட்டுது. இதை செய்யாத... அதச் செய்யாத! இப்படி பண்ணனும்... அப்படி பண்ணனும். முடியல பிரபா. விஜய் அதுக்கு மேல... ஒரு புரியாத புதிரா இருக்கார். அவரை எப்படி ஹாண்டில்

பண்றதுன்னு தெரியல..." என்று கண்கள் கலங்க சொல்லிய தோழியின் நிலை உணர்ந்தவர்கள்,

"கல்யாணம் ஆன புதுசில் அப்படி தான் இருக்கும் நந்து. மெல்ல மெல்ல எல்லாம் சரியாயிடும். எல்லோரையும் புரிஞ்சுக்கனும்ன்னு நினைக்காத... அது முடியாத காரியம். அப்படி அப்படியே ஏத்துக்கப் பழகு." அறிவுரை கூறினான் ஆதி.

"என்னால பொருந்த முடியல... தப்பு பண்ணிட்டனோன்னு தோணுது. ஏற்றத்தாழ்வு ரொம்பவே அதிகம் இல்ல...? பழக்கவழக்கங்கள் கூட ஒத்துப்போகல. அத்தைக்கு அவங்க பக்கம் கட்டலன்னு வருத்தம். மகன்கிட்ட சொல்ல முடியல... சில நேரங்கள்ல எங்கிட்ட சுருக்குன்னு சொல்லிடறாங்க. கஷ்டமா இருக்கு." கட்டுக்கடங்காமல் பெருகும் விழி நீரை கைக்குட்டை கொண்டு துடைக்க ஆதி ஆதரவாக அவள் கரம் பிடித்துக் கொண்டான்.

"மாமியார் எல்லாம் ஒரே மாதிரி தான் நந்து. அப்படி தான் இருப்பாங்க. அது சமஸ்தானத்து ராணியம்மாவா இருந்தாலும் சரி... நம்ம பக்கத்து வீட்டு மங்கம்மாவா இருந்தாலும் சரி..." என்றான் தேறுதலாய் பிரபா... லேசாக சிரித்தவள், தன்னை சமன் செய்து கொண்டு,

‘‘ராணியம்மாவை ஒருவிதத்தில் பாராட்டனும் பிரபா... திட்டுவதை எப்படி படக்குன்னு செய்றாங்களோ பாராட்டுவதும் அப்படி தான். உடனே சொல்லிடுவாங்க."

"அப்போ மன்னிச்சு விட்டுடலாம்..." சிரித்த நண்பர்களுடன் தானும் கவலை மறந்து சிரித்தாள்.

"சில நேரம் பிரவீனுக்கே ஓகே சொல்லிருக்கலாமோன்னு தோணும் ஆதி!"

"நந்து இது என்ன உளறல்?"

"உண்மையா என்னை விரும்பினவன ரொம்ப ஹெர்ட் பண்ணிட்டேன் போல அதான் கடவுள் என்னை தண்டிச்சுட்டாரு..."

"நந்து வேறெதாவது பிரச்சனையா? என்னன்னு சொல்லுடா உனக்கு நாங்க இருக்கோம்."

"அதெல்லாம் ஒன்னும் இல்ல... விஜய் அடிக்கடி வெளி ஊருக்கு போயிடுறார்ல அந்த ஸ்ட்ரெஸ் தான்..." சமாளித்தாள். நண்பர்களுக்கு சந்தேகம் வந்தது.

"பிரவீன் வந்துட்டானா ஆதி? என்னை பத்தி விசாரிச்சானா? ஏமாத்திட்டேன்னு நினைச்சிருப்பான்ல?"

"வந்துட்டான் நந்து. உனக்கு கல்யாணம் ஆனதை கேட்டு கொஞ்சம் ஷாக் தான் அவனுக்கு. பட் ஓகே. இதுல உன் தப்பு

எதுவும் இல்ல... விஜய் முந்திக்கிட்டாருன்னு தான் சொன்னான். நீயா எதையாவது போட்டுக் குழப்பிக்காத.’’

நண்பர்கள் மூவரும் பேசி முடித்து வீட்டிற்கு கிளம்ப இரவு ஒன்பதாகிவிட்டது. காருக்கு அருகில் வர காரோட்டிக்கு பதில் விஜய் நின்று கொண்டிருந்தான். (வந்துட்டான்யா... வந்துட்டான்)

இவன் எப்போ வந்தான்? உள்ளே உதறல் எடுக்க தொடங்கியது நந்தினிக்கு. எனினும் சிரித்த முகமாக நண்பர்களுக்கு விடை கொடுத்தவள் பேசாமல் வண்டியில் ஏறி அமர,

"ஏன் பொய் சொன்னாய் நந்தினி." முதல் கேள்வியே தடுமாற வைத்தது.

"என்ன பொய் விஜய்?"

"ஓ! அப்படியென்றால் நிறைய பொய் சொல்கிறாய்...?" (ஆரம்பிச்சுட்டான்யா...)

"ப்ளீஸ்! நானே நொந்து போயிருக்கேன். நாளைக்குப் பேசிக்கலாம்."

"அம்மாவிடம் உன் பெற்றோர் வீட்டுக்கு போகிறேன் என்றது பொய் தானே? என்னிடமும் சொல்லவில்லை. வெளியே செல்வதாக செய்தி அனுப்பியிருக்கிறாய். உன் மனதில் என்ன இருக்கிறது நந்தினி?"

"போதும் விஜய்! எதுவாக இருந்தாலும் நேரடியா கேளுங்க..."

"உன் நண்பர்களோடு கூத்தடிப்பதற்காக தானே பொய் சொல்லிவிட்டு வந்தாய்?"

"என்ன கூத்தடித்தேனா? எல்லாத்துக்கும் ஒரு அளவு இருக்கு விஜய். நீங்க எல்லை மீறி பேசுறீங்க..."

"உன்னை இந்த நிலையில் யார் பார்த்திருந்தாலும் அப்படி தான் நினைத்திருப்பார்கள். எங்களை பற்றி தானே குறை கூறிக் கொண்டிருந்தாய்?"

"விஜய்!" (எல்லாத்தையும் கேட்டிருப்பானோ?)

"போதும் நடிக்காதே. உன் கலங்கிய விழிகள் போதும் சாட்சிக்கு.

ராஜா விஜயேந்திர பூபதிக்கென்று மரியாதை இருக்கிறது. அதை கட்டிக் காக்கும் எண்ணம் தான் இல்லை. இழிவு படுத்தாமலாவது இருக்கலாம் தானே?"

"உங்க பேச்சு தவறான பாதையை நோக்கி போகுது. ஆதியும், பிரபாவும் எனக்கு எப்போதுமே நண்பர்கள் தான். இதை திரும்பத் திரும்ப சொல்ல வைக்காதீங்க விஜய்."

"எல்லோர் பார்வையும் ஒன்று போல் இருக்காது என்பதையும் மீண்டும் மீண்டும் சொல்ல வைக்காதே நந்தினி."

"சந்தேகம் அடுத்தவர்களுக்கு வரக் கூடாதுன்னு நினைக்கிறிங்களா இல்ல உங்களுக்கே வா விஜய்?"

"வாயை மூடு நந்தினி. என் மனைவியை சந்தேகப்படும் அளவிற்கு கீழ்தரமானவனில்லை நான்."

"நல்லது. உங்களுக்குத் தெரியாத இன்னொரு விஷயமும் இருக்கு. அதையும் இன்னைக்கே தெரிஞ்சுக்கங்க... என்னை ஒரு பையன் ஸ்கூல் படிக்கும் போது லவ் பண்ணான். படிச்சு முடிச்சுட்டு வந்து பொண்ணு கேக்குறேன்னு சொன்னான்.

அவனுக்கு கூட எங்க நட்பு உயர்ந்த விஷயமா தான் தெரிஞ்சுச்சு. இந்த மாதிரி நண்பர்கள் கிடைக்க கொடுத்து வச்சிருக்கணும். இவங்க பாதுகாப்பில் நீ இருப்பதால உன்னை பத்தி கவலை பட வேண்டியதில்லைன்னு சொன்னான்.

இவ்வளவு பெரியவர்... உலகமெல்லாம் சுத்துறவர்... எங்க நட்பை பத்தி உங்களுக்கு தெரியலையே! வருத்தமா இருக்கு விஜய். மத்தவங்களுக்காக பாத்து பாத்தே என்னைக் காயப்படுதறிங்க."

"பிரவீன்... தொழிலதிபர் தர்மராஜின் ஒரே மகன்! தெரியும் நந்தினி. அவன் நாடு திரும்பி இரண்டு மாதங்கள் ஆகிவிட்டது. உன் மனதில் அவன் இல்லாத போதும், படித்து முடித்து உன் பெற்றோர் சம்மதம் கேட்க வந்தானென்றால் நீ நிச்சயம் அவனை மணந்திருப்பாய் என்பதும் தெரியும்...

அதற்கு இடம் கொடுக்காமல் அவனது படிப்பு முடிந்த பிறகும் இங்கு வரவிடாமல் இலவச பயிற்சி என்னும் பெயரில் கால தாமதமாக்கியது நான் தான். அதர்க்காக எத்தனை லட்சம் டாலர்கள் செலவு செய்திருக்கிறேன் என்பது தெரியுமா நந்தினி? விஜயேந்திரன் முட்டாளில்லை என்பதை நீயும் தெரிந்து கொள்." அமைதியான ஆழ்ந்த குரல். எப்படி திட்டமிட்டிருக்கிறான்? திகைத்து போனாள் நந்தினி.

"அடுத்தவர்களுக்காக அல்ல... எனக்காக! என் வலி போக்கிக் கொள்ளத் தான் உன்னை காயப்படுத்துகிறேன். வெறும் வார்த்தைகள்... அதையே உன்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை அல்லவா? நீ அறைந்தது இன்னும் வலிக்கிறதே நந்தினி... நான் என்ன செய்யட்டும்?"

அவன் கேள்விக்கு அவளிடம் பதில் இல்லை. இது மீளமுடியா துயரம் என்பது தெரிந்து போக மனதை நிலைப்படுத்த வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிட்டாள்.

"நந்தினி" அமைதியான அழைப்பு. கோபமும் வருத்தமும் முற்றிலுமாக காணாமல் போயிருந்தது. அவளும் இயல்புக்கு திரும்பியிருந்ததால்,

"சொல்லுங்க விஜய்!" வழக்கமான துள்ளலுடன் அவன் முகம் பார்க்க,

"நான் உன்னை எவ்வளவு வதைக்கிறேன்? சிறுபிள்ளை போல் சட்டென அனைத்தையும் மறந்துவிடுகிறேயே... இந்த குணம் தான் உன்னிடம் என்னை கட்டி இழுக்கிறது நந்தினி. ஒன்று செய்கிறாயா? நான் போதுமென்று சொல்லும் வரை... உன் விரல் தடம் பதிந்த என் கன்னத்தில் குளிரக் குளிர இதழ் தடம் பதித்துவிடேன்." குறும்பு கூத்தாடியது அவனிடம்.

"இரவே இவனுக்காக தான் வர மாதிரி தினமும் இது ஒரு இம்சை...! இம்சை தானா நந்தினி?" மனம் அவளையே கேள்வி கேட்க,

"வாயை மூடு!" வழக்கம் போல் மைன்ட் வாய்ஸயும் பகிரங்கமாகச் சொல்ல...

“ நான் அமைதியாக தான் இருக்கிறேன். இன்னும் கோபமாக இருக்கிறாய் அல்லவா? உன் மரியாதையின் அளவை வைத்தே கண்டுபிடித்துவிடலாம். இன்று கூடுதல் சுவாரஸ்யமாக இருக்கும் இல்லையா நந்தினி? ” அவளை இப்படி குழப்பிவிட்டு குளிர் காயும் விளையாட்டு விஜயேந்திரனுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று.

"விஜய் எனக்கு தலைவலிக்குது. கொஞ்சம் பேசாம வரீங்களா?"

"எனக்கும் அதே நிலை தான் நந்தினி. உனக்கொன்று தெரியுமா? தலைவலிக்கு மிக சிறந்த மருந்து அதுதானாம் இன்று சோதித்து பார்த்துவிடுவோம்."

"எனக்கு பிடிக்கலைன்னாலுமா விஜய்?"

"அடுத்த பொய்யா நந்தினி?'' அட்டகாச சிரிப்பு அவனிடம்.

'மானம்கெட்ட தனமாய் நீ அவன் பார்வையிலேயே நெகிழ்வதால் தான் கண்டுபிடித்துவிடுகிறான் உனக்கெதற்கு வீராப்பு நீ ஒரு முட்டாப்புள்ள நந்தினி.' என்று தன்னையே நொந்து கொண்டாள்.

வீட்டிற்கு வந்ததும், அவளை தன் கரங்களில் ஏந்திக் கொண்டு கட்டிலை நோக்கிச் செல்ல, காரில் அவன் பேசியதை வைத்தே அவள் யூகித்திருந்தது தான் என்பதால் இவனோடு மல்லுக்கு நிற்க முடியாது என அமைதி காக்க,

"என்னவாகிவிட்டது நந்தினி தேவியாரே? ஒத்துழைக்க தயாராகிவிட்டது போல் தெரிகிறது?" கண் சிமிட்ட...' இந்த நக்கல் தான் கடுப்பேற்றுது' என்று நினைத்தபடி வேறு புறம் திரும்பிப் படுக்க,

"இது அருமை... நான் எதிர்பார்ததும் இதைத் தான். அமைதியாக ஏற்கும் நந்தினியைவிட சின்ன மறுப்புகளோடு ஏற்பவளை தான் இன்று தேடுகிறது..."

"விஜய்... ப்ளீஸ்... பேசாதீங்க..."

"ஆரம்பித்துவிடலாம் என்கிறாயா?" புருவம் உயர்த்தி கேட்டவனின் கரத்தில் நறுக்கென கிள்ளிவிட்டாள். அவளால் பொறுக்கவே முடியவில்லை. 'இவன் பேச்சு என்னை குறி தவறாமல் காயப்படுத்தும் என்பதால் தான் மறுக்கிறேன் என தெரிந்து கொண்டே செய்கிறானே பாவி!' மெல்ல அவன் முகம் பார்க்க,

"சண்டைக்கோழி போல பிராண்டி வைக்கிறாய்..! முதலில் நகம் வெட்டு!" தோல் வலண்டிருந்த இடத்தை ஊதிக் கொண்டான்.

வலிக்குதா அப்போ இனி உனக்கு இந்த ட்ரீட்மெண்ட் தான்... அவள் சிரிப்பதை அவன் கண்டுகொண்டான்.

சட்டென அவள் கால்களைத் தூக்கி தன் மடிமீது வைத்துக் கொண்டு, அவளது உள்ளங்காலில் விரல்களால் கூச்சமூட்ட.... சிரிப்பும், கெஞ்சலுமாய் அவள் மன்றாடிக் கொண்டிருக்க,

"கிள்ளி வச்சுட்டு சிரிக்கிற? இப்போ நல்லா சிரி சிட்டு..."

"ப்ளீஸ்... ப்ளீஸ் விஜய்... முடியல விட்டுடுங்க..." கெஞ்சத் தொடங்கிவிட்டாள்.

"இந்த பயம் இருக்கட்டும்..." என்றவன் அதோடு நில்லாமல் கழுத்து வளைவுக்கு வந்து மீண்டும் கூச்சமூட்ட,

'கடவுளே இன்று இப்படியே கொல்லப் போகிறான்... எப்படி தான் இவனுக்கு இந்த மாதிரி ஐடியாவெல்லாம் வருமோ?

இவனும் இவன் தண்டனையும்... தப்பும் வழி தெரியாமல் தடுமாறியவள், முதல் முறையாக அவனை நோக்கி முன்னேற...

அவன் கழுத்தை வளைத்து பிடித்து திரண்ட தோளில் முரட்டு முத்தத்தை பதித்து உருஞ்சிக் கொண்டிருக்க அதுவரை அவன் அறியா சுகம். மெல்ல தன் உடல் அதிர்வதை அவனால் உணர முடிந்தது.

கண்கள் மூடி அந்த சுகத்தில் அமிழ்ந்தவன் எங்கே விலகிவிடுவாளோ என பயந்து எதிரே மண்டியிட்டு தன் ரத்தம் குடித்துக் கொண்டிருப்பவளை இறுக தழுவிக் கொண்டான். பயந்து அவள் விலக,

"வேண்டும் நந்தினி..." கிறக்க குரல் கெஞ்சல் போலும் ஒலிக்க நம்ப முடியாமல் அவன் முகம் பார்க்க முயல பின்னங்கழுத்தில் கரம் பதித்து தன் கழுத்து வளைவில் அவளை புதைத்துக் கொண்டான்.

ராஜாளியை தேன்சிட்டு கொத்திக் கொத்திக் கொன்றது... தன் கூறிய நகங்களால் உடலெங்கும் கீரி கிழித்தது. இங்கு வலி சுகமாய் மாறிப் போனது. ராஜாளி மயங்கிக் கிடந்தது. ஆயினும் போதுமென்று சொல்ல மனம் வரவேயில்லை. காயப்படுத்தியே சிட்டு களைத்துப் போனது.

சிவந்த மேனியில் தெரிந்த காயங்களை போர்க்களத்தின் வீரத் தழும்புகள் போல் மகிழ்வுடன் பார்த்து ரசித்த ராஜாளி

தேன்சிட்டை தன் சிறகுகள் போல் விரிந்த கரங்களுக்குள் அடக்கி மார்போடு இறுக்கிக் கொண்டு சயனித்துவிட்டது. தேன்சிட்டு கணவனை புரிந்து கொள்ள முடியாமல் குழப்பத்துடனேயே தூங்கிப் போனது.

அவ்வப்பொழுது விஜயேந்திரனின் வார்த்தைகள் உயிர் குடித்தாலும், மனம் அவனையே சுற்றுவதை நந்தினியால் தடுக்க முடியவில்லை என்பது தான் உண்மை.

அவனும் அடிக்கடி பூங்கொத்து, புடவைகள், நகைகள், இவளுக்கு மிகவும் பிடித்த சாக்லேட் என பரிசுகள் கொடுத்துக்கொண்டே இருந்தான். இரவு எத்தனை மணிக்கு வீடு வந்தாலும், அவளை அணைக்காமல் உறங்குவதே இல்லை. இதுவே போதும் என முட்டாளின் சொர்க்கத்தில் மிதந்து கொண்டிருந்தாள்.

பிரபா, தனக்கு வேலை கிடைத்த விஷயத்தை ஸ்பான்சரிடம் தெரிவிப்பதற்காக செல்ல... அவனுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. அன்புடன் வரவேற்ற சிவானந்தன், அவனது வேலை பற்றிய சேதியில் உண்மையான மகிழ்ச்சி கொண்டார். அவனது கம்பெனி பற்றி விசாரித்து அறிந்தவர் அவனை வாயார பாராட்டினார்.

தன் உடல்நிலை ஒத்துழைக்காததால் கம்பெனி நிர்வாகத்தை கடந்த ஆறு மாதங்களாக மகளிடம் ஒப்படைத்திருப்பதாகச்

சொன்னார். பவானி, இளங்கலை வணிகவியல் முடித்துவிட்டு MBA முதலாமாண்டு படித்துக் கொண்டே கம்பெனியையும் கவனித்துக் கொள்வதால் சரிவரப் பார்க்க முடியவில்லை. நஷ்டம் வந்துவிடும் நிலைக்கு வந்துவிட்டது. சிறு பெண் என்பதால் பொறுப்புகள் புரியவில்லை.

நீ எங்கோ வெளிநாடு சென்று வேலை செய்வதைக் காட்டிலும் உள்ளூரில் தாய் தந்தையைப் பிரியாமல், உன் படிப்பிற்கேற்ற சவால் நிறைந்த பவானி இன்ஜினியரிங் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் ல் MD யாக பொறுப்பேற்று, எடுத்து நடத்த வேண்டும்.

இதை உன்னை படிக்க வைத்ததற்காக நான் கேட்கும் கைமாறாக எண்ண வேண்டாம். உன் திறமை நம் ஊரின் முன்னேற்றத்திற்கு பயன்படட்டுமே…'' என நைச்சியமாகப் பேசி அவனை சம்மதிக்க வைத்தார். பிரபாவால் மறுக்க முடியவில்லை.

இயந்திர உதிரி பாகங்கள் செய்வது தான் பவானி இன்ஜினியரிங் அண்ட் இண்டஸ்ட்ரிஸின் வேலை. இவனது படிப்புக்கு ஏற்றது என்ற போதும், பிரபாவை அடியோடு பிடிக்காத பவானியை நினைத்தால் கொஞ்சம் நெருடலாக தான் இருந்தது.

இருவருக்குமான சந்திப்பு அப்படி. இருந்தும் மறைமுகமாக மகளது தலையீடு இருந்தாலும் எந்த முடிவையும் எடுக்கும் அதிகாரத்தை உனக்கு முழுவதுமாக வழங்குகிறேன் என சிவானந்தன் உறுதி கொடுத்ததால் சம்மதம் சொல்லிவிட்டான்.

கல்லூரி படிப்பு முடிந்து, வேலையில் வந்து சேர்வதாக சொல்லிவிட்டு கிளம்பிய போது பவானி அவனை வாசலில் எதிர்கொண்டாள்.

இன்று இறுக்கிப்பிடிக்கும் ஸ்கின்னி ஜின்சும் இடை தெரியும் குட்டி டாப்பும் அணிந்திருந்தாள். நீண்ட கூந்தல் காற்றில் பறக்க யாரோ இவன் யாரோ இவன்... என விசிலடித்தபடி வந்தவள் பிரபாவை எதிர்பார்க்கவில்லை என்பதை அவளது திகைத்த விழிகள் காட்டிக் கொடுக்க இதழ் ஓரம் சிறு புன்னகையுடன் அவளை கடக்க முற்பட்டவனை,

"ஏய் நில்லு! உன் படிப்பு முடிஞ்சிடுச்சா? வேலை கேட்டு வந்தியா? உன் ரேஞ்சுக்கு என்ன வேலை... ம் முருகன் அங்கிள்க்கு ரெஸ்ட் கொடுத்துட்டு டிரைவரா சேர்ந்திடேன்... கார் ஓட்ட தெரியும் தானே?" அவன் பதில் சொல்லாமல் நகர, கோபமாக அவனுக்கு குறுக்கே வந்து நின்றவள்,

"படிச்சவன் தானே மேனர்ஸ் தெரியாதா? பதில் சொல்லாமல் போற..." அவளது திமிரும் அலட்சியமும் இவனைத் தூண்ட,

"கார் ஒட்டுவது யார் வேணா பாக்கலாம். இங்கு ஒரு அடங்காத குதிரை இருக்காமே... அதை அடக்குற வேலையை வேணா கொடுங்க செய்றேன்..." நக்கல் சிரிப்புடன் அவன் செல்ல,

இங்கு எங்கு குதிரை இருக்கு? சில மணித் துளிகள் தேவைப்பட்டது பவானிக்கு அவன் தன்னை தான் சொல்லியிருக்கிறான் என்பது புரிய,

"யூ இடியட்..." அவள் கால்களை உதைத்து கத்திக் கொண்டிருக்க அவன் போய்விட்டிருந்தான்.

அரண்மனையில்... ராணியாரின் கேள்விகள் நந்தினியை இந்த இரண்டு மாதங்களாய் அலைப்புற செய்து கொண்டிருக்கிறது. திருமணம் முடிந்து ஆறு மாதங்கள் நிறைவுற்றிருந்ததால்,

"திட்டமிட்டு தள்ளி போட்டிருக்கிறீர்களா? இந்த மாதமும் குளித்துவிட்டாயா? பேரப்பிள்ளையை சீராட்ட இன்னும் எவ்வளவு காலம் நான் காத்திருக்க வேண்டும்?" எனக் கேட்கத் தொடங்கிவிட்டிருந்தார்.

இன்று இதைப் பற்றி விஜயிடம் பேசிவிட வேண்டுமென்று முடிவெடுத்தவளாய், கணவனுக்காக காத்திருக்க, அவனோ வெகு தாமதமாக வீடு வந்ததும் இல்லாமல், தனது வெளிநாட்டு பயணத்திற்காக பெட்டியை தயார் செய்து கொண்டிருந்தான்.

மாதத்தில் பாதி நாட்கள் இப்படிப்பட்ட பயணங்கள் அவனது வழக்கம் என்பது தெரிந்தாலும்,எப்பொழுது திரும்பி வருவானோ, அதுவரை மனபாரம் தாங்க முடியாது போல தோன்றவே, இன்று நிச்சயம் பேசிவிட வேண்டும்... எனத் தீர்க்கமாக சிந்தித்தவள்,

"விஜய்,முக்கியமா விஷயம் பேசணுமே... ப்ளீஸ், எனக்காக கொஞ்ச நேரம் ஒதுக்குங்களேன்!" என்றாள் இறைஞ்சல் போலும். எப்பொழுதும் தனது பெட்டிகளைத் தானே தயார் செய்வது தான் கையாள வசதி என்பவன், தன் துணிகளை அடுக்கியபடி,

"சாரி நந்தினி! இந்த வேலை முடிய இன்னும் பத்து நிமிஷமாகும், அதோடு காலை ஐந்து மணிக்கே கிளம்ப வேண்டும். தூக்கம் கண்களை சுழற்றுகிறது! நான் பதினைந்து நாட்களில் திரும்பி வந்துவிடுவேன்! அதன் பிறகு முதல் வேலையாக உன்னிடம் பேசுகிறேன். நீ படுத்துக் கொள்!" என்று அவளை விரட்டினான்.

"இல்ல விஜய்! முக்கியமான விஷயம். ரெண்டு மாசமா அத்தை என்கிட்ட கேட்டுகிட்டே இருக்காங்க என்ன பதில் சொல்றதுன்னு தெரியாம தவிக்கிறேன்! ப்ளீஸ்... ஹெல்ப் பண்ணுங்க விஜய்!" என அவன் முகம் பார்க்க,

"அம்மாவா? என்ன கேட்டார்கள்?" என்றான் ஒன்றும் புரியாமல்.

"வந்து... நாம ஏன் இன்னும்... வந்து... குழந்தை... ஏன் தள்ளிப் போடுறோம்?" என முடிக்க முடியாமல் தடுமாறியவளை, தன் கை உயர்த்தி நிறுத்தியவன்,

"பார் நந்தினி! உன்னோடு கொஞ்சிக் குலாவி, குழந்தை பெற்றுக் கொள்வதற்காக நான் உன் கழுத்தில் தாலி கட்டவில்லை. உண்மையை சொன்னால் காயப்படுத்துகிறேன் என வருந்துவாய்! இருந்தாலும், மீண்டும் மீண்டும் என்னை சொல்ல வைப்பதையே முழுநேர வேலையாக செய்கிறாய்...

நான் வளர்ந்த விதமும், எனது குடும்ப பாரம்பரியமும், தாலி காட்டாமல்... தண்டனையே ஆனாலும்... ஒரு பெண்ணைத் தொடுவது கேவலமான செயல் என அறிவுறுத்துவதால் தான் உன்னை மணந்திருக்கிறேன்." என்று ஆழ்ந்த மூச்சின் மூலம் தன்னை நிலைப்படுத்த,

அவனது பேச்சின் பொருள் விளக்கியதும், அவள் உயிர் பறவை சுருள, கண்களை இருட்டிக்கொண்டு வர, கட்டிலை இறுக்கப் பற்றிக்கொண்டு இன்னும் என்ன பாக்கி இருக்கிறது? எல்லாவற்றையும் சொல்லிவிடு! என அவன் முகம் பார்க்க, அவளது வலியை அந்த ஜீவனற்ற கண்களில் கண்டவன், வெகு சிரமப்பட்டு,

"என் குழந்தையை சுமக்கும் தகுதி உனக்கு கிடையாது! நீ பட்டத்தரசி இல்லை... வெறும் அந்தப்புரத்து அழகி என்பதை மறக்காதே நந்தினி." என்றான் அழுத்தமாக.

இது தான் அவனது தண்டனையாக இருக்குமோ? நந்தினி என்ன செய்யப் போகிறாள்?

# அத்தியாயம் 16

"என் குழந்தையை சுமக்கும் தகுதி உனக்கு கிடையாது! நீ பட்டத்தரசி இல்லை... வெறும் அந்தப்புரத்து அழகி என்பதை மறக்காதே நந்தினி." என்றான் அழுத்தமாக.

அவ்வளவு தான், வெறி கொண்டவளாய் அவனது சட்டையை பிடித்துவிட்டாள்!

"ஏய்! என்ன பேசுற? எனக்கா தகுதியில்ல? உன்னை நினைச்சுக்கிட்டு உனக்காகவே வாழ்றேனே! இதைவிட பெரிய தகுதி என்ன வேணும்? ஒரு மனைவியா, இந்த வீட்டின் மருமகளா என்னிடம் என்ன தகுதி குறைச்சல் இருக்கு சொல்!? " என ஏகவசனத்தில் அவன் சட்டை காலரைப் பற்றி உலுக்க, மெல்ல அவள் கைகளை விலக்கி விட்டவன்,

"நான் உன்னை மனைவியாகவே நினைக்கவில்லை என்கிறேன். நீ மனைவியாக என்ன குறை வைத்தேன் என்கிறாய்! முட்டாள் பெண்ணே, குரலை உயர்த்திப் பேசுவதும், கணவனின் சட்டையை பிடிப்பதும் நல்ல மனைவியின் தகுதிகளா?" என்றான் கோபமாக.

"சாரி! சாரி... மன்னிச்சுடுங்க விஜய்! இதுக்காக என்னை தண்டிச்சுடாதீங்க'' என அவன் சட்டையின் சுருக்கங்களை நீவியபடி தவிப்பவளைக் கண்டவன்,

"அம்மாவிடம் நான் பேசிக் கொள்கிறேன். இனி அவர்கள் இதைப் பற்றி உன்னிடம் பேச மாட்டார்கள்! நீ நிம்மதியாக இருக்கலாம்!"

"இல்ல விஜய், எனக்கும் உங்களைப் போல் இதோ இப்படி குண்டு கண்களும், குழி விழும் கன்னங்களும் கொண்ட, உங்க வார்ப்பாக... குழந்தை பெற்றுக் கொள்ள ஆசை தான்!" என காதலுடன் அவன் முகம் தாங்க, அவளது மென்கரங்களை விலக்கியவன்,

"தெரியும் நந்தினி! நீ என்னை எவ்வளவு விரும்புகிறாய், எந்தளவிற்கு நேசிக்கிறாய் என்பது எனக்கு தெரியும். நான் உன்னைவிட்டுப் பிரிந்தால், நீ உயிரோடு இருக்கமாட்டாய் என்பது வரை தெரியும்! ஆனால் அதே காதல், உன்னிடம் எனக்கு வரவில்லையே! வரப் போவதும் இல்லை. எவ்வளவு வெறியோடு திட்டமிட்டு, காத்திருந்து, அனைவரையும் எதிர்த்து உன் கரம் பிடித்தேன் தெரியுமா?

அப்படியிருந்தவன் எப்படி இவ்வளவு இணக்கமாக, மென்மையாக உன்னோடு இசைந்து வாழ்கிறேன் என்பது எனக்கே ஆச்சரியமாகத் தான் இருக்கிறது! போதும் நந்தினி.

இதுவே பெரிய விஷயம்... இதற்கு மேல் என்னிடம் எதிர்பார்க்காதே!"

"தெரியாமல் செய்த தவறு தானே..., மன்னிக்கக் கூடாதா விஜய்!" என்றாள் அழுகையினூடே. ஒரு நொடி அவளை ஆழ்ந்து நோக்கியவன்,

"என்று நான் உன்னை மன்னிக்கிறேனோ, அன்று நீ என்னை பிரிய நேரிடும்! தயாராக இரு! மன்னிக்க முயற்சிக்கிறேன்!" என விலகிச் சென்றான். அவனது வார்த்தைகளில் ஆடிப் போனவள், சிலையாய் சமைந்துவிட்டாள்.

"என் மீது அன்பில்லையா? காதல் இல்லையா? பாழாய் போன இரக்கம் கூடவா இல்லை? சரியாகச் சொல்கிறானே, இவன் இல்லாமல் நான் இல்லை என்பதை கணித்து வைத்திருக்கிறானே. முதலிரவில் சொன்னது போலவே கச்சிதமாக தண்டிக்கிறானே, அவனை விடவும் முடியாமல், சேரவும் முடியாமல் மனதோடு மன்றாடிக் கொண்டிருக்கிறேனே!" என வற்றாத கண்ணீருடன் அசையாமல் அமர்ந்திருந்தாள்.

அலாரம் கூட அவளைக் கலைக்கவில்லை. அவளைப் பார்த்தவன் ஒரு கணம் ஸ்தம்பித்தாலும், தலையை உலுக்கி அவள் மீதான இரக்கத்தை உதறி எழுந்து தன் கடமைகளை முடித்து கிளம்பித் தயாரானான். இவை எதுவுமே கவனத்தில்

பதியாமல் சிலையென அமர்ந்திருந்தவளை ஏனோ அவனால் தாண்டிப் போக முடியவில்லை.

கண் விழித்ததிலிருந்து அவனும் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறான்… எந்த அசைவும் இன்றி, கண்களில் ஜீவனின்றி, இரவு எந்த நிலையில் அமர்ந்திருந்தாலோ அதே நிலையில் இருந்தாள்.

மெதுவாக அவளருகில் சென்றவன் அவள் தலை வருடி,

"போதும் நந்தினி! கிடைத்திருப்பதை நினைத்து மகிழ்ச்சியோடு இருக்க முயற்சி செய்! முகம் கழுவிக் கொள். நான் கிளம்புகிறேன்! டேக் கேர்!" என நெற்றியில் முத்தமிட்டு சென்றுவிட்டான். இங்கிருந்தால் தன் மனதை தனக்கெதிராய் திருப்பி விடுவாள் என்ற பயம் அவனைத் துரத்தியது. ( ராஜாவே ஆனாலும் பொண்டாட்டிக்கு பயந்துதான் ஆகணும்.... யாராச்சும் சொல்லுங்கப்பா!)

இதோ, ஒரு வாரம் ஓடிவிட்டது. அவன் பேசியதையே யோசித்து, யோசித்து குழம்பி தவித்தவள், ஒரு முடிவோடு தாய் வீட்டிற்கு வந்துவிட்டாள். மாமியார் பலமுறை போன் செய்தும் வீடி திரும்ப சாக்கு போக்கு சொல்லிக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டாள்.

சரி, ரெண்டு நாட்கள் இருந்துவிட்டு வரட்டும் என மாமியாரும் நச்சரிப்பதை நிறுத்திக் கொண்டார். அவள் திரும்பி வரப் போகும் முடிவில் இல்லை என்பது புரியாமல்.

கல்லூரி முடிந்து தாமதமாக வீடு வந்த ஆதியை துள்ளலுடன் எதிர்கொண்டாள் நிவேதா.

"ஆதி அத்தான்! நந்து அக்கா வந்திருக்காங்க! நீங்க தான் லேட்... சீக்கிரம் வாங்க!" என கரம் பற்றினாள்.

"கால் பண்றதுக்கென்ன தங்கம்?"

"நான் தான் வேண்டாம், அவன் மெதுவா வரும் போது வரட்டும்னு சொன்னேன்!" என்றாள் நந்தினி.

"இரு, பிரபாக்கு கால் பண்றேன்!"

"சொல் நந்து, உன் ஆள் பாரின் ட்ரிப் போயிருக்காரா? இந்த முறை எத்தனை நாட்கள்?"

"ம்! பதினைந்து..." என மெல்லிய சிரிப்பை உதிர்க்க,

"உனக்கென்ன வாங்கி வருவார் நந்து?" என்றபடி உள்ளே நுழைந்தான் பிரபா.

"டூர் போகும் போது தான் கிபிட்ங்கிற மாதிரி இல்லை பிரபா, அடிக்கடி ஏதாவது கொடுத்துட்டே தான் இருப்பார்!" மீண்டும் முயன்று வரவழைத்த புன்னகை.

"ஹை! உங்க கணவர் ரொம்ப நல்லவர்க்கா!" என கண்கள் விரிய சொன்ன நிவேதாவிடம்,

"விடு நிவி! எவன் உனக்கு டெய்லி கிப்ட் வாங்கிக் கொடுக்கிறானோ அவனுக்கே உன்னை கட்டி வைத்துவிடலாம்!" என்றான் பிரபா.

"டேய் பாசமலரே! அண்ணனும், தங்கையும் சேர்ந்து அவன் பர்ஸை காலி பண்ணாமல் விடமாட்டிங்க போலவே! பாவம்டா... அவன்!" என தனக்குத் தானே வக்காலத்து வாங்கிக் கொண்டான் ஆதி. அதை கேட்டு அனைவரும் சிரிக்க,

"ஏய் பட்டுக்குட்டி! படிக்கிற ஐடியா இல்லையா? இந்த வருஷம் 12த்... ஞாபகம் வச்சுக்க. கஷ்டப்பட்டு பாஸ் பண்ணிடு. பெயிலாகி என் மானத்தை வாங்கி விடாதே! உன் அத்தையின் முந்தானையை பிடித்துக் கொண்டு கிச்சனில் சுத்திக் கொண்டிருக்காமல் படி!" என்றான் அதட்டலாய்.

"அதெல்லாம் நான் பாஸ் பண்ணிடுவேன் ஆதி அத்தான்!" என்றாள் சிணுங்கலாய்.

"அப்போ உள்ளே போய் படி!" என்றான் கட்டளையாய். அவளது உதட்டு சுளிப்பை பார்த்து பிரபா சிரிக்க, ஏதோ ஓர் உலகத்தில் லயித்திருந்தாள் நந்தினி. அதை கவனித்த ஆதி,

"நந்து, ஏதாவது பிரச்சனையா? இல்ல, உடம்பு சரியில்லையா? ஏன் ஏதோ போல் இருக்கிறாய்?" மறுப்பாக தலை அசைத்தவள்,

"நான் கிளம்புகிறேன்... இனி இங்கு தான் இருப்பேன். நாளை பேசலாம்!" என சென்றுவிட்டாள்.

‘‘மச்சான் நந்துக்கு ஏதோ பிரச்சனைடா. அதான் நழுவுறா! நாம நாளை லீவு போட்டுடலாம்!" என ஆதி கூறியதைக் கேட்டு,

"ஆதி அத்தான், நானும் லீவ் போடவா?" எனக் கொஞ்சியபடி வந்த நிவேதாவை முறைத்தவன்,

"ஏன் லீவ் போடணும்?" என்றான் கோபமாக.

"நீங்க போடறீங்களே..."

"நாங்க நந்துவோட பேசணும்னு போடறோம்!"

"நானும் பேசுவேன்!"

"கிழிப்பாய்! நன்றாக வாயைப் பார்த்துக் கொண்டிருப்பாய்! ஸ்கூலில் உன் டீச்சரின் வாயைப் பார்த்தாலாவது பிரயோஜனம்! ஒழுங்கா ஸ்கூலுக்கு போற வழியைப் பார்!"

"நண்பர்கள் எல்லாம் சேர்ந்து இருப்பீங்க, நானும் உங்க பிரெண்ட் தானே ஆதி அத்தான்! ப்ளீஸ் லீவ் போடறேன்" எனக் குழந்தையாய் கெஞ்சுபவள் விழி பார்த்து,

‘‘நீ என் பிரெண்ட் இல்லை." என்றான் கண்ணோர சிரிப்புடன்.

இதைக் கேட்டவள் முகம் வாடிவிட்டது. சட்டென அங்கிருந்து சென்றும் விட்டாள். வழக்கம் போல் பிரபா, ஆதியை கடிந்து கொண்டான்.

(அண்ணனும், தங்கையும் சரியான லூசுக... என்னால பொண்டாட்டியை ஃபிரண்டா பார்க்க முடியாதுன்னு சொன்னா மூஞ்சிய தூக்குறவளுக்கு இவன் வக்காலத்து...)

"நாம் மனதார விரும்புவர்களை எப்படி நம்மால் காயப்படுத்த முடியும்? என்ன காதலோ,கண்றாவியோ!? அந்தப் பெண்ணை அழ வைப்பதே உனக்கு வேலையாகிப் போனது!" என்றான் எரிச்சலுடன்.

"இதெல்லாம் காதலில் சகஜம் மச்சான்... நீ கண்டுக்காத! என கண் சிமிட்டினான்.

இரவு வெகு நேரம் உறங்காமல் கணவனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தவள் வெகு தாமதமாகவே உறங்கினாள்.

காலை, அவள் துயிலெழும் முன்னே அவளுக்காக காத்திருந்தனர் அவளது உயிர் நண்பர்கள். அதற்கு மேல் மறைக்க முடியாது எனத் தோன்ற, மனபாரம் முழுவதையும் ஆதியோடு அந்தமாய், அவர்களிடம் கொட்டினாள்.

இவளது நிலையறிந்து நண்பர்கள் ஸ்தம்பித்துப் போயினர்.

முதலில் இயல்பிற்குத் திரும்பிய பிரபா,

"வேண்டாம் நந்து! இப்படி ஒரு அரக்கனுடன் வாழ்வதை விட நீ இங்கேயே வந்துவிடலாம்! அவனை விட்டு விலகி வந்துவிடு!" என்றான் கோபமும் ஆத்திரமுமாய்.

"பிரபா! உன் உளறலை நிறுத்து! நந்து நீ நினைப்பது தவறு... விஜய் உன்னை விரும்புகிறார். நீ அறியாமல் செய்தாலும், அவருக்கு அது பெரும் அவமானம் தான்! அதைத் தான் உன்னிடம் அவ்வப்பொழுது காட்டுகிறார். மற்றபடி நீ தான் அவர் உலகம்! நீயில்லாமல் நிச்சயம் அவரால் வாழ முடியாது! அவர் உன்னை காதலிக்கிறார் நந்தினி! பெட்டியைக் கட்டி உன் வீட்டிற்கு கிளம்பும் வழியைப் பார்! " என்றான் ஆதி திடமாய்.

"நீ தான் அவளைக் குழப்புகிறாய் ஆதி! மனைவியே இல்லை என்கிறான். குழந்தையை சுமக்கும் தகுதி இல்லை என்கிறான் இவனெல்லாம் ஒரு மனிதன்!? இவனுக்கெல்லாம் காதல் இருக்கிறது, கத்திரிக்காய் இருக்கிறதென்று நீ வக்காலத்து வாங்குகிறாய்!" என வெடித்தான் பிரபா.

"விஜய் நந்துவிடம் அன்பாகத் தான் இருக்கிறாரென நிரூபிக்கட்டுமா? நாம் பார்க்கவே மறுவீட்டிற்கு வந்த போது நந்துவுக்காக காபி குடித்தார்! அவளுக்காக மதியம் சாப்பிட வந்தார் மறந்துவிட்டாயா? அவர் அம்மாவிடம் இவள் நல்மதிப்பைப் பெற வேண்டும் என சீக்கிரமாக அழைத்துச் சென்றாரே... ஏன்?

இவளை யாரும் எதுவும் சொல்லிவிடக் கூடாது என்று தானே! தன் ஒரே அக்காவின் வீட்டிற்குக் கூட விருந்திற்குப் போகவில்லை. நந்துவை தண்டிப்பது தான் அவர் நோக்கம் என்றால் ஆயிரம் வழிகள் இருக்கும் போது , ஏன் திருமணத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்?

நந்துவால் ஆரம்பத்திலேயே விஜய் சலனப்பட்டிருக்கிறார்.

ஆனால் இவளது செயலால் மனம் முழுவதும் வெறுப்புடனேயே இவளை தன் மனதிற்குள் இருத்தியிருக்கிறார். அதனால் தான் இந்த கோபம். அவர் அன்பு எனக்குப் புரிகிறது. இன்னும் தெளிவாக நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என நினைத்தால் ஒரு சிறு குறுந்தகவல் அனுப்பு நந்து!

'உன்னோடு வாழ விரும்பவில்லை. நாம் பிரிந்துவிடலாம். இப்பொழுதே உன்னை விட்டு விலகுகிறேன்!' என அனுப்பிப் பார்." என்றான் தைரியமாய்.

"உண்மையாகவே அவரை விட்டுப் பிரிந்துவிடும் முடிவிற்கு வந்துவிட்டேன் ஆதி! அதனால் அனுப்புறேன்!"

"ஏன் பெண்கள் எல்லோரும் ஆண்களின் முரட்டுத்தனமான அன்பை புரிந்து கொள்ள முடியாத தத்திகளாய் இருக்கிறீர்கள்? என் வீட்டில் ஒன்று இருக்கிறதே! அதைப் போல் தான் நீயும் விஜயைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறாய்!" என்றான் அலுப்பாக.

"ஆதி! நீ நிவியை விரும்புகிறாயா? என்னால் நம்பவே முடியவில்லை.!" என்றாள் அதிர்ச்சியும் ஆச்சர்யமுமாய்.

‘‘ஆனால் அவளிடம் இவன் நடந்து கொள்ளும் விதத்தை பாரேன்!’’ என்றான் பிரபா உண்மையான வருத்தத்துடன்.

நண்பனின் சொல்படி கணவனின் மனமறிய எண்ணி,

"விஜய்! தொந்தரவிற்கு மன்னிக்கவும்! எனக்கு வேறு வழியில்லாததால் தான்...

உங்கள் அந்தப்புரத்து அழகியாய் என்னால் வாழ முடியாது. இனி உங்கள் அரண்மனையில் இருப்பது தற்கொலைக்கு சமம். நான் என் பெற்றோருக்கு மகளாகவேனும் இருக்க வேண்டுமென நினைக்கிறேன். சட்டப்படி என்றாலும் சரி இல்லை உங்கள் அரச வம்சத்து வழக்க படியென்றாலும் சரி நாம் பிரிந்துவிடலாம்... இனி உங்களோடு என்னால் வாழ முடியாது!" குறுஞ்செய்தி அனுப்பிவிட்டு... வருவானா? என்னிடம் காதல் கொள்வானா?" என ஏங்கியபடி காத்திருக்கத் தொடங்கினாள்.

குறுஞ்செய்தியை படித்த விஜய்க்கு தன்னை நிலைப்படுத்திக் கொள்ள வெகு நேரம் பிடித்தது. என்ன முட்டாள் தனமான உளறல் இது? என்று தான் தோன்றியது.

அன்னையின் அழைப்பில் தன்னுணர்வு திரும்பியவன் மிரண்டு போனான்... மிகவும் அவசரம் என்றாலொழிய அன்னை வெளி தேசம் சென்றிருக்கும் போது மகனை தொடர்புகொள்ள

மாட்டார். நந்தினி பைத்தியக்கார தனமாக ஏதேனும் செய்துவிட்டாளோ? தன் இயல்புக்கு மாறாக யோசித்தவன்,

"நந்தினிக்கு ஒன்றும் இல்லயே அம்மா? அவள் நன்றாக தானே இருக்கிறாள்?"

மகனின் பதட்டம் மகாராணிக்கு கோபமூட்ட, மருமகளை பற்றி குற்றப்பத்திரிக்கை வாசிப்பதற்காகவே அழைத்தவர் பொரிந்துவிட்டார்.

"அவள் எங்கே இங்கிருக்கிறாள்? அவள் நலம் பற்றி என்னை கேட்கிறாய்? வீட்டைவிட்டு போய் மூன்று நாட்களாகிவிட்டது. திரும்பி வரவுமில்லை. என் அழைப்பையும் எடுப்பதில்லை. இதற்கு தான் படித்துப் படித்து சொன்னேன்... தராதரம் தெரியாதவளை கட்டாதே என்று.. எங்கே கேட்டாய்!

இதுவே ரேகாவின் நாத்தனாரையோ இல்ல நம் கஸ்தூரியின் மகள் நிர்மலாவையோ கட்டியிருந்தாள் நம் குடும்பத்திற்கு தலைகுனிவு வரும் படி நடந்து கொள்வார்களா?" கோபமும் ஆற்றாமையும் விரவியிருந்தது அவர் பேச்சில்.

"கொஞ்ச நாட்கள் அவள் பெற்றோர் வீட்டில் இருந்துவிட்டு வருவதாக என்னிடம் சொல்லிவிட்டு தான் சென்றாள்! உங்களிடமும் சொல்லியிருப்பாள் என நினைத்தேன். இருந்துவிட்டு தான் வரட்டுமே விடுங்கள்!"

மகனிடம் சொல்லிவிட்டு தான் சென்றுக்கிறாள் என்றதும் கோபம் கொஞ்சம் மட்டுப்பட்டது.

"நீ என்ன பேசுகிறாய் விஜயேந்திரா? இப்பொழுது போய் பிறந்த வீட்டில் இருந்தால் நாம் தான் குழந்தை இல்லையென அவளை அங்கு அனுப்பிவிட்டதாக நம்மவர்களே சொல்லிவிடுவார்கள்!"

முடியவில்லை... கல்யாணமாகி என்னவோ நாலைந்து வருடங்கள் ஆனது போல் என்ன பேச்சு? என்ற கோபம் மூண்டாலும் அதை அன்னையிடம் காட்ட முடியாமல்,

"இப்பொழுது என்ன? நந்தினி வீட்டிற்கு வரவேண்டும் அவ்வளவு தானே? வருவாள்!" துண்டித்துவிட்டான்.

மனைவியை தாமதிக்காமல் தொடர்புகொள்ள, ஆதியின் பேச்சால் சற்று கணவனின் மனம் பற்றி தெளிந்திருந்தவள், சட்டென எடுத்துவிட்டாள்.

"நந்தினி! எதுவாக இருந்தாலும் நான் வந்ததும் பேசிக் கொள்ளலாம்! இப்போதே வீட்டிற்கு கிளம்பு!" அவனது அதிகார தொனி கோபமூட்ட....

"முடியாது விஜய்!" சொல்லியே விட்டாள். பட்டென இணைப்பை துண்டித்துவிட்டான்.

போ! நீ ராஜா என்றால் அது உன்னோடு! எனக்கு கணவன் தான்! உன்னிஷ்டத்திற்கு என்ன வேண்டுமானாலும் பேசுவாய்

அதற்கு எந்த விளக்கமும் கொடுக்காமல் வீட்டிற்கு போ என்பாய் உடனே நான் ஓட வேண்டுமா? முடியாது போ! கோபத்தை நீ மட்டும் தான் ஒட்டுமொத்த குத்தகைக்கு எடுத்திருக்கிறாயா? காண்டாக படுத்துவிட்டாள்.

குருஞ்செய்தியை கண்டவன் பதறுவான்... கெஞ்சுவான்... கொஞ்சுவான் என்றெல்லாம் ஆதியின் பேச்சை வைத்து நினைத்திருந்தவளுக்கு இது பெரும் அதிர்ச்சி தான்.

கல்லூரிக்கு செல்லத் தயாராகி வந்த நண்பனிடம் இரவில் கணவனிடம் பேசியதைச் சொல்ல,

"ஏன் நந்து இப்படி செய்தாய்? இரவே கிளம்பி போவதற்கென்ன?" சிடுசிடுத்தான் ஆதி!

"ஆணாதிக்க திமிர் இவனிடமும் வந்துவிட்டது நந்து... நீ வேண்டுமென்றால் அவர் வரட்டும்!" பிரபா சொல்லிக் கொண்டிருக்கும் போதே வந்துவிட்டான் விஜய்.

வீட்டு வாசலில் நின்று தான் மூவரும் பேசிக் கொண்டிருந்தனர். கணவனின் காரை அடையாளம் கண்டுகொண்டவளுக்கு, ஆச்சரியமும் அதிர்ச்சியும் ஒருங்கே தோன்றின. அவளுக்கு வெகு அருகில் நிறுத்தியவன்... கீழே இறங்கி வர,

"விஜய்!" எனக் கண்களில் காதல் மின்ன, அவனிடம் ஓட நினைத்த கால்களை வெகு சிரமப்பட்டு கட்டுக்குள் கொண்டு

வந்தாள். ஆனால் முதல் பிரிவின் போது அவளிடம் கண்ட காதல், தவிப்பு, ஏக்கம், அன்பு அத்தனையையும், அந்த ஒற்றை அழைப்பிலும், பார்வையிலும் உணர்ந்தவனது கோபம் மட்டுப்பட்டது.

"இவள் என்னை விட்டுப் பிரிபவளா? என்னைப் பதறடிக்கவே இப்படி செய்திருக்கிறாள்" என எண்ணமிட்டபடியே அவளருகே வர,

"பதினைந்து நாளாகும் என்றீர்கள், பத்தே நாட்களில் வந்துவிட்டீர்களே... ஏன் விஜய்? போன விஷயம், விரைவில் முடிந்துவிட்டதா?" என்பதற்குள்ளாகவே, அவள் கரத்தை இறுகப் பற்றியவன்,

"நான் ஏன் இப்படி பாதியில் வந்திருக்கிறேன் என்று உனக்குத் தெரியாதல்லவா? என்னோடு வா, சொல்கிறேன்!" என இழுத்துச் செல்லவும்,

"விஜய்! ஆதி... நான் அம்மாவிடம்... விடுங்கள் விஜய்!" என கரம் விலக்க முயற்சிக்க,

"நான் அழைத்துப் போனதாக அத்தையிடம் சொல்லிவிடுங்கள் ஆதி!" என அவளை காரினுள் தள்ளி கதவை மூடியவன், விரைந்து சென்று விட்டான்.

"ஏய் ஆதி! அந்த ஆள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்? அவளிடம் மன்னிப்புக் கூட கேட்காமல், இப்படி இழுத்துச் செல்கிறான்!" எனப் பதறினான் பிரபா.

"விடு மச்சான்! நந்து நமக்கு ஃபிரண்ட் தான்! அவருக்கு மனைவி என்பதை மறக்காதே!"

அப்பொழுது தான் வீட்டு வாசலுக்கு வந்த நிவி, நந்துவை விஜய் இழுத்து செல்வதைப் பார்த்து மிரண்டு போய் நின்று விட்டாள்.

"ஏய் என்ன திரு திருன்னு முழித்துக் கொண்டிருக்கிறாய்?"

"நந்துக்கா பாவம், ஆதி அத்தான்!"

"என்னடி பாவம்? அவ புருஷன் தானே அவளைக் கூட்டி போறார். என்னவோ ரவுடி கடத்தி செல்வது போல், ரெண்டு பெரும் சீன கிரியேட் பண்றீங்க! வாயை மூடிக்கிட்டு இருங்க. நானே ஆன்ட்டியிடம் சொல்லிக்கிறேன்!" என்றவனது அதட்டலில் வாயை மூடிக் கொண்டாள் நிவேதா.

காரை ஓட்டிக்கொண்டிருந்த விஜயின் முகம் செதுக்கிய சிலையென எந்த உணர்ச்சியையும் காட்டாமல் இறுகியிருந்தது, நந்தினியோ அதற்கெல்லாம்அசராமல்,

'போடா! உன் ஏமாற்று வேலை எனக்கு தெரிந்துவிட்டது. உனக்கு என் மீது காதல் இல்லையா? போ... போ... இன்னும்

எவ்வளவு தூரம் தான் போகிறாய் என நானும் பார்க்கிறேன்' என தெனாவெட்டாக அமர்ந்திருந்தாள்.

கார் அரண்மனைக்குள் செல்லாமல் அதே வளாகத்தில் தனி தீவாய் அமைந்திருக்கும் ஐலண்ட் பங்களா நோக்கி சென்றது. சுற்றிலும் நீர் நடுவில் பிரம்மாண்டமான பங்களா! நீண்ட பாலம் நிலத்தையும் பங்களாவையும் இனைக்கும்.

விஜய் இதை அந்தபுரமென்று தான் சொல்வான். எப்போதேனும் வரும் இடம் என்பதால் இன்று கதவை திறந்து வைத்துக் கொண்டு இரண்டு வேலைக்காரர்கள் காத்திருந்தனர். இவனைக் கண்டதும் விடைபெற்று செல்ல, உள்ளே சென்று அமர்ந்தவன் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தான்.

ஒவ்வொரு முறையும் தன்னை அவமானப்படுத்துவதே இவள் வேலையாகப் போய்விட்டது என்னும் கோபம் அவனிடம். தனக்கு கொஞ்சமும் மதிப்பு கொடுக்காமல் முடியாது என்று மறுத்துவிட்டாளே கோபம் கனன்றது.

(வீராதி வீரர் விஜயேந்திர பூபதிக்கு மனைவியிடம் காதல் சொல்ல இவ்வளவு தயக்கமா?) பெண்களின் காதல் விசித்திரமானது போலும்... தன்னைப் போலவே கணவனையும் நினைத்தது பேதை மனம்.

புதிதாக அடுக்கப்பட்டிருந்த பூஞ்சாடியில் லயித்திருந்தவள்...

"நந்தினி!" அவனது அதட்டலில் விதிவிதிர்த்து போனவளாய் திடுக்கிட்டு விழிக்க...

"இராஜ வம்சத்து மருமகள் என்னும் நினைப்பு கொஞ்சமாவது இருக்கிறதா? ராஜா மகேந்திர பூபதியின் குடும்பத்திற்கென்று மரியாதையும், கௌரவமும் இருக்கிறது. எல்லாவற்றையும் குழி தோண்டி புதைத்து விடும் எண்ணமா? அம்மாவின் அழைப்பை ஏன் எடுக்கவில்லை?"

ஓ! என் குறுஞ்செய்தியை பற்றி எந்த அக்கறையும் கிடையாது? ராணியாரை அவமதித்து விட்டேன் என்று தான் இவ்வளவு கோபமா? காண்டாகிப் போனவள்,

"நீங்கள் சொன்னதையெல்லாம் கட்டிக் காப்பற்ற நான் பட்டத்தரசி இல்லை... ராஜா விஜயேந்திர பூபதி அவர்களே... வெறும் அந்தப்புரத்து அழகி!" (யாருகிட்ட...?)

"நந்தினி!" பெண்களை அடிப்பதை இழிவான செயலாக நினைப்பவன் நான். என்னை தூண்டாதே! புத்திசாலி தனமாக பேசுவதாக நினைப்பா? ஊரைப் பொறுத்தவரை நீ அரச குடும்பத்து மருமகள் தான்! என்ன துணிவிருந்தால் நான் வரச்சொன்ன பிறகும் உன் பெற்றோர் வீட்டிலேயே இருந்திருப்பாய்?" (நீ கத்துறது காது வலிக்குது ராஜா ...)

"ஆறேழு மாதமாக அரச வம்சத்து சாப்பாடு சாப்பிடுகிறேன் அல்லவா? அதில் வந்த துணிவு தான்!" கொஞ்சமும் பயமில்லை

அவளிடம். (நந்து காதலில் விழுந்து கனா கண்டுட்டு இருந்தாள்... இப்போ முழிச்சுட்ட... இனி பாரு ஆட்டத்த ...)

"நீ தண்டனை கைதி என்பதை மறந்துவிடாதே... உனக்கு முடிவெடுக்கும் அதிகாரம் கிடையாது! உன்னோடு வாழ வேண்டுமா? உன்னை விலக்கி வைக்க வேண்டுமா? என முடிவெடுக்க வேண்டியது நான்! புரிகிறதா?"

இப்படி கத்தினா அடுத்தவர்களுக்கு கேட்காது என்பதற்காக தான் இங்கு கூட்டி வந்திருப்பான் போல... அவனது கோபத்தைக் கண்டு மிரளாமல் சமாளிக்கத் தொடங்கிவிட்டாள் நந்தினி. மிரளும் நந்தினியைத் தான் இது வரை பார்த்து காதலில் விழுந்தான். இனி மிரட்டும் நந்தினியை என்ன செய்வான்...?

# அத்தியாயம் 17

"**நா**ன் உங்கள் அடிமையில்லை! என்னால் உங்களோடு வாழ முடியாது!"

"ஏய்!" என்ற அலறலோடு அவளை பிடித்து தள்ள அங்கிருந்த வெண்கல சிலையில் மோதி நெற்றியில் ரத்தம் கசிய, அதை கவனிக்காதவன்,

"என் அரண்மனையில் இருந்து ஒரு அடி எடுத்து வைத்துப் பார்... உன் காலை முறித்து வீட்டோடு போட்டுவிடுவேன்."

நந்துவோ அவன் பேச்சை அலட்சியம் செய்து, நெற்றியை இறுக பற்றியபடி எழ... அவள் கையில் வழியும் இரத்தத்தைப் பார்த்து பதறிப்போனான்.

"நந்தினி... என்னவாகிவிட்டது?" வாய் அமர்த்தலாய் கேட்டாலும், கை தன் போக்கில் சட்டென முதலுதவி செய்தது. அரண்மனை மருத்துவருக்கு தொடர்புகொள்ள, அடுத்த ஐந்தாவது நிமிடம் சிகிச்சை கொடுக்கப்பட்டது.

"என்ன இது? இவ்வளவு மோசமாக நடந்து கொண்டுவிட்டோமே..." அவன் மீதே அவனுக்கு கோபம் வந்தது. அவள் முகம் பார்க்க அவமானமாக இருந்தது. அவளை

மட்டும் அங்கு விட்டுவிட்டு கதவை பூட்டிக் கொண்டு போய்விட்டான்.

அவனது கோபமும், முரட்டுத்தனமும் கண்டு சமைந்து போனவளுக்கு இதற்கு முந்தய வரவுகள் அநியாயத்திற்கு நியாபகம் வந்து தொலைத்தன...

திருமணம் முடிந்த இத்தனை மாதங்களில் இருமுறை மட்டுமே இங்கு வந்திருக்கிறாள். அப்பொழுதெல்லாம் தன் தகுதி, அந்தஸ்து, கௌரவம், கர்வம், வேலை, பழியுணர்ச்சி... அத்தனையும் மறந்து... நந்தினியின் காதலனாய்... ஆசை கணவனாய்... தாசனாய்... பித்தனாய்... அவளை மட்டுமே நினைவில் கொண்டு உருகினான்.

நந்தினி... நந்தினி... நந்தினி... அதை தவிர வேறொன்றும் அறியாதவனாய்... தரையில் விடாமல் தாங்கினான்... தானே சமைத்து... ஊட்டிவிட்டு எந்நேரமும் கைகளில் ஏந்திக் கொண்டு... நேரம் காலம் இல்லாமல் சுகித்து...

"விஜயேந்திர பூபதிக்கு நந்தினி பைத்தியம் பிடித்துவிட்டது!" என்றவளின் கேலிக்கு கூட மறுப்பில்லாமல்,

"ஆம்! இது அந்தப்புரம் நந்தினி... இங்கு எனக்கு, உன் பைத்தியம் பிடிக்காமலிருந்தால் தான் அதிசயம்!" என்று குழைந்ததெல்லாம் இன்று கண்களை கரிக்க செய்யும் நினைவுகளாகிப் போயின...

"ஆதி... நீ நினைப்பது போல் இல்லை இவன்! என் மீது காதல் இல்லை... அன்பு இல்லை! அன்றும் இன்றும் நான் வெறும் அந்தப்புர அழகி தான்! நாம் ஏமாந்துவிட்டோம் ஆதி!" என விசும்பியபடியே தூங்கிப் போனவள் விழிக்கும் போது சுற்று புறமே ஆழ்ந்த இருட்டில் இருந்தது.

மெல்ல தட்டு தடுமாறி விளக்குகளை போட்டவள் முதலில் நண்பனுக்கு தான் அழைத்தாள். அவளது கைபேசி அம்மா வீட்டில் இருப்பதால் தொலைபேசியையே பயன்படுத்த வேண்டியிருந்தது.

"ஆதி! நான் ..."

"சொல் நந்தினி! எவ்வளவு மோசமான சூழ்நிலை என்றாலும் முதலில் கணவனின் நியாபகம் வரவில்லை இல்லையா...?" விஜயின் ஆழ்ந்த குரல்.

இது என்ன... ஆதிக்கு தானே அழைத்தோம் அனிச்சை செயலாய் இவனுக்கே அழைத்துவிட்டோமோ? அவள் குழம்ப,

"அதிகம் யோசிக்காதே! நீ யாருக்கு அழைத்தாலும் எனக்கு தான் வரும். சாப்பிட்டாயா? நூடூல் இருக்குமே உனக்கு பிடித்தது... உனக்கு சமைக்கத் தெரிந்ததும் கூட இல்லையா...? எனக்கும் சேர்த்து செய்துவை இன்னும் பத்து நிமிடத்தில் அங்கு இருப்பேன்!" துண்டித்துவிட்டான்.

'என்னவாகிவிட்டது இவனுக்கு? தனியாக இங்கு வைத்திருக்கிறான்... இல்லை அடைத்து வைத்திருக்கிறான்... கால் டைவேர்ட் பண்ணியிருக்கிறான் ஏன்? பிரச்சனையே இவன் தான் என்னும் போது இவனுக்கு எப்படி அழைப்பார்களாம்? போ! எனக்கு சாப்பாடே வேண்டாம்!

இப்பொழுது அரண்மனையில் தான் இருக்கிறான்... வேண்டுமென்றே தான் என்னை இங்கு... வீட்டுக்காவலில் வைத்துள்ளானோ?' தனிமையும், பசியும் அவளை தாறுமாறாய் சிந்திக்க வைக்க, உடல் வெடவெடக்க அரண்டு போய் அமர்ந்திருக்க...விஜய் வந்துவிட்டான்.

"இன்னும் வலிக்கிறதா நந்தினி?... சாப்பிட்டாயா?" அவ்வளவு குழைவு அவனிடம். அவனை நிமிர்த்து கூட பார்க்காமல் அமர்ந்திருப்பவளை பார்த்ததும்,

"சாப்பிடவில்லை தானே? அப்போ சமைத்திருக்கவும் மாட்டாய்..." அவளருகே வராமல் சமையலறை நோக்கி சென்றுவிட்டான்.

'போன தடவை வந்த போது அவனே பிரியாணி செய்து ஊட்டிவிடல...! விடல..? நீ நூடுல்ஸ் செய்ய மனசில்லாமல் முறுக்கிக்கிற' அவளது மனசாட்சி அவளை கேட்க... அதை கண்டுகொள்ளவில்லை.

சற்று நேரத்தில் நூடுல்ஸ்சுடன் வந்தவன், அவளருகே அமர்ந்து,

"நந்தினி! சாப்பிடு!... வாயை திற... என்னைப் பார்... ஆ... சொல்லு!" என கெஞ்சிக் கொண்டிருக்க,

காலையில் மண்டையை பிளந்துவிட்டு இப்பொழுது என்ன கரிசனம் வேண்டிக்கிடக்கு? என்றெண்ணியவளாய் முகம் திருப்பிக் கொண்டு பிடிவாதக்கார குழந்தை போல் வாயை இறுக மூடிக் கொண்டாள்.

"நந்தினி... காலையில் இருந்து சாப்பிடவில்லை தானே, பசி தாங்கமாட்டாய்... உன் கோபத்தை என்னிடம் காட்டு. சாப்பாடிடம் அல்ல..."

"..........."

" எத்தனை நாள் பட்டினி கிடப்பாய் நந்தினி?"

"..........."

" இன்னும் 10 நிமிடத்தில் நீ சாப்பிடவில்லை என்றால் இன்று இரவு இங்கு தனியாக தான் இருக்க வேண்டும்!" கண்டிப்பு போலும் சொல்லிவிட்டு அவன் டீவியை உயிர்ப்பித்து அமர்ந்துவிட... (ஒழுங்கா வாயைத் திறந்திருந்தா அவனே ஊட்டியிருப்பான்...இப்போ மிரட்டுறான்... உனக்கு தேவையா?)

'இது என்ன கொடுமை? இவன் உடனிருக்கும் போதே இங்கிருப்பது பயமான விஷயம்... இதில் தனியா வேறு விட்டுச்

செல்வானா?' பயந்து போனவளாய் சாப்பிடத் தொடங்கிய பின் தான் தன் பசியின் வீரியம் புரிந்தது. சட்டென அனைத்தையும் காலி செய்துவிட்டு அவன் முகம் பார்க்க...

"இங்கு வா..." சின்ன சிரிப்பு அவனிடம்.

'போகாதே நந்தினி... இவன் வேண்டாமென முடிவெடுத்திருக்கிறாய் அசையாமல் உட்கார்!' மூளையின் கட்டளையை ஏற்பதா... இல்லை கணவனின் கண்ணசைவுக்கு கட்டுப்படுவதா? முடிவெடுக்க முடியாமல் அவள் தவிக்க... அவனே வந்துவிட்டான் அவளருகில்.

"என்னோடு பேசமாட்டாயா நந்தினி?"

'இதென்ன ஹஸ்கி வாய்ஸ்?' மனது அவன் பக்கம் எட்டிப் பார்க்க...

'இதெல்லாம் நல்லா கவனி... அவன் கேள்வியை கோட்டை விட்டுவிடு! ஆமாடா! பேசமாட்டேன்னு சொல்லி தொலையேன்...' மூளை சண்டையிட்டது.

"சாரி நந்தினி... கோபத்தில் யோசிக்காமல் செய்துவிட்டேன்... ரொம்பவும் வலிக்கிறதா?" அவளது முகத்தை கைகளில் ஏந்தி மெதுவாய் மிருதுவாய் ஒற்றை விரலால் காயம் தொட்டுப் பார்க்க, (மண்டையை ஒடைச்சுட்டு மன்னிப்பு கேளு...நல்ல மன்னருப்பா நீ!) அவன் கரத்தை தட்டிவிட்டாள் வேகமாக.

"என்னை ஏன் இங்கு அடைத்து வைத்திருக்கிறீகள் விஜய்?" கண்களில் கோபம் மின்ன அவன் விழி பார்த்து கேட்க,

"தவறாக சொல்கிறாய் நந்தினி! நீ விரும்பியதை தான் செய்திருக்கிறேன். அரண்மனையில் வாழ்வது தற்கொலைக்கு சமம் என்று சொன்னதால் தான் இந்த ஏற்பாடு!''

''நான் உங்களோடு வாழ விரும்பவில்லை என்பதை தான் அப்படி சொன்னேன்!"

"வேறு யாரோடு வாழ உத்தேசம்?" அவனது உக்கிரம் அடக்கிய அமைதியான கேள்வி இதயம் துளைக்க...

"ச்சீ போ!" வெடுக்கென முகம் திருப்பிக் கொண்டாள்.

"முடியாதல்லவா? பிறகென்ன வீம்பு? கோபம் வந்துவிட்டால் மரியாதை மறந்துவிடுகிறது... வெறும் 10 நிமிடங்கள் போதும் உன்னை சமன் செய்ய... உன் கோபத்தை கொஞ்சலாய் மாற்ற... பார்க்கிறாயா?" கன்னம் வருட, (நோ... நோ!)

"விஜய்! போதும் இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்! எனக்கு நீங்கள் வேண்டாம்... மனைவியின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுப்பவன் தான் சிறந்த கணவன்! நீங்கள் அரசனும் கூட. மறந்துவிடாதீர்கள்!"

நிச்சயம் அவன் சொன்னதை செய்பவன் என்பதாலா... இல்லை தன் மீதே நம்பிக்கை இல்லாததாலோ பயத்துடனேயே மன்றாடிக் கொண்டிருந்தாள்.

"நீ முன் போல் இயல்பாக இருப்பேனென்று சொல் இப்பொழுதே வீட்டிற்கு சென்றுவிடலாம்... அதோடு நீ தானே மனைவியில்லை என்று சொன்னாய்?" குறும்பு கூத்தாடியது அவனிடம்.

"நீங்கள் தான் சொன்னீர்கள் விஜய்!"

"நீயும் தான் சொன்னாய்!" உல்லாசமாக சிரித்தவன்,

"மறந்துவிடலாம் நந்தினி! நம்மை வருத்தும் விஷயங்கள் எனத் தெரிந்தும் மெனக்கட்டு தூக்கி சுமப்பானேன்? அது என்ன முட்டாள் தனமான குறுஞ்செய்தி? சற்று நேரம் எனக்கு ஒன்றுமே புரியவில்லை தெரியுமா?

நீ என்னைவிட்டு பிரிய மாட்டாய் என்பது நிச்சயம் என்றாலும் சிறு படபடப்பு தோன்றத் தான் செய்தது. இனி இதுபோல் சிறுபிள்ளை தனமாக ஏதும் செய்யாதே!" ( அப்போ நீ ஏன் அவள் அறைந்ததை தூக்கி சுமந்த?)

"அப்படி என்ன நிச்சயம்?"

"நிச்சயம் தான்! நீ என் மீது கொண்ட காதலால் வந்த உறுதி தான்! நிச்சயம் என்னை விட்டு போகமாட்டாய். படுக்கலாம் நந்தினி!" அவனது தெளிவில் திகைத்திருந்தவளை குழந்தையென தன் வலிய கரங்களில் ஏந்திக்கொள்ள முயல...

"விடுங்க விஜய்! நான் இங்கேயே படுத்துப்பேன்." முறுக்கிக் கொள்ள,

"நல்லது. கால்களை குறுக்கிக் கொண்டு படுக்க வேண்டும் கொஞ்சம் சிரமம் தான். உனக்காக செய்யலாம்... சரி எழுந்துகொள். நான் படுத்த பிறகு என் மீது படு."

"என்னது?" பட்டென எழுந்துகொண்டவள் பேந்தவிழிக்க,

"ம்... என் பாரம் உன்னால் தாங்க முடியாதே நந்தினி. நீ எனக்கு பூ பந்து போல சுகம் தான்." கண் சிமிட்டி சிரித்தான் அந்தக் கள்ளன்.

"விளையாடுறீங்களா விஜய்? நீங்க உள்ள போய் படுங்க..." நிற்கவா? போகவா? என தடுமாறும் கோபத்தை இழுத்துப்பிடித்து முறைப்பு வேறு.

"முடியாது தேன்சிட்டே... வா உப்பரிகைக்குப் போகலாம்." சட்டென கைகளில் ஏந்திக் கொண்டவன்,

"இன்று நிலவொளியில்... இந்த குட்டி தேவதை என் வசம். நீ ஆசைப்பட்டது தான் நந்தினி.

யாருமற்ற வெட்டவெளி... வட்ட நிலா... குளிர்ந்த காற்று... மலர்களின் சுகந்தமான மணம்... அருகே ராஜா விஜயேந்திரன்... அவன் நெஞ்சமே உனக்கான மஞ்சமாய் துயில் கொள்ள வேண்டும் என்பாயே... இன்றய இரவு அப்படித் தான்."

பேசியபடியே மொட்டை மாடிக்கு தூக்கி வந்திருந்தான். அவள் விரும்பியது தான் ஆனால் என்று சொன்னால் என்பது அவளுக்கே நினைவில்லை. அதை நியாபகம் வைத்து

செய்கிறானே... இருந்த கொஞ்ச நஞ்ச கோபமும் காணாமல் போக...

"நான் எப்பொழுது சொன்னேன்?" மென்குரலில் கேட்டவளை அணைத்துக் கொண்டவன்,

"இரண்டு மாதங்களுக்கு முன்பாக ஓர் விடிகாலை வேளையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவனை இறுக தழுவிக் கொண்டு பூனைக்குட்டியாய் மார்பில் முகம் உரசி... கதகதப்பை ரசித்து... நான் தூங்குவதாக நினைத்து,

"டேய் விஜயேந்திரா! எனக்கு ஒரு ஆசை... என ஆரம்பித்து இப்படித்தான் கவிதை போலும் சொன்னாய் நந்தினி." கழுத்தடியில் முகம் புதைத்துக் கொண்டான். காதல் பெறுக அவன் கேசம் களைத்து,

"அப்போ நீங்க தூங்கலையா?"

"உன் மூச்சுக் காற்றும், சிறு தொடுகையும் போதும் நந்தினி என்னை விழிக்கச் செய்ய... நீ இவ்வளவு செய்த பிறகு எங்கு தூங்குவது? கொஞ்சம் காத்திரு நந்தினி..."

அடுத்த பத்துநிமிடங்களில் அழகான மஞ்சத்தை தயார் செய்துவிட்டான். சொன்னது போல தன்னவளை தன் மீது தாங்கிக் கொண்டு நெற்றி வருட,

"ஐ லவ் யூ விஜய்!" முத்தமிடத் தொடங்கிவிட்டாள். (வேண்டாம் நந்தினி என்னை உன்னுள் இழுக்காதே...)

"போதும் நந்தினி முத்தம் கொடுத்தே மூர்ச்சையாகிவிடுவாய் தூங்கு." எவ்வளவு முயன்றும் மனதிற்கும் உதட்டிற்கும் தடை போட முடியாமல் இதழோடு இதழ் பதித்து இறுக தழுவிக் கொண்டான்.

காலையில் அரண்மனைக்கு அழைத்து சென்றுவிட்டான். அந்த நிகழ்வுக்குப் பிறகு அவனிடம் அதிக மாற்றங்கள் உண்டாகியிருப்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். முன்னைப் போல் வார்த்தைகளால் வதைப்பதில்லை. அதிக நெருக்கத்துடனேயே உறவாடுகிறான்.

தனது பயணங்களை கூட வெகுவாக குறைத்துக் கொண்டுவிட்டான். முக்கியமாக குழந்தை பிறப்பை தள்ளிப்போடும் எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை. கொஞ்சம் குழம்பியவள், வேறு ஏதேனும் செய்திருப்பான்! என தானாகவே முடிவுக்கு வந்துவிட்டாள். ஏனோ அவன்கூறிய வார்த்தைகளுக்கு மன்னிப்பு கேட்காதது மனதை நெருடத்தான் செய்தது.

இப்படியே நாட்கள் ஓடின... இது என்ன கொடுமை? இவனை விட்டு பிரியவும் முடியாமல்... வாழவும் முடியாமல்... என்றேனும் சுயபட்சாதாபம் தோன்ற தன் மீதே கோபமும், ஆத்திரமும் மேலிட அன்று முழுவதும் உண்ணாவிரதம் தான். இன்று மீண்டும் அது தொடர்ந்தது.

இரவு வெகு நேரம் கழித்து வீட்டிற்கு வந்தவன் தங்கள் அறைக்குள் நுழைய எத்தனிக்க,

"விஜயேந்திரா!'' அன்னையின் அழைப்பு தான். அவரது அறை வாசலில் நின்று கொண்டிருந்தார்.

"ரொம்பவும் சின்ன பெண்ணாக இருக்கிறாள்... நம் குடும்பத்திற்கு பொருந்தமாட்டாள் எனத் தலைப்பாடாய் அடித்துக் கொண்டேன் எங்கே கேட்டாய்... இதோ காலையில் இருந்து பட்டினி கிடக்கிறாள்... உங்களுக்குள் என்ன தான் பிரச்சனை?

நாளை ரேகா வீட்டிற்கு வேறு போக வேண்டும். இவள் அங்கும் இதே போல் சிறுபிள்ளைத்தனமாக ஏதேனும் செய்து வைத்தால் என்ன செய்வது?" அன்னை கேட்பது நியாயம் தான் எனத் தோன்றினாலும்,

"ஏன் அம்மா உண்ணாவிரதம் இருக்கிறாள்?"

"இதை நீ அவளிடம் தான் கேட்க வேண்டும்... அடிக்கடி இதுவே வழக்கமாகிவிட்டது."

"அடிக்கடியா? பிறகு ஏன் அம்மா என்னிடம் சொல்லவில்லை." பதட்டமும், தவிப்பும் வந்து ஒட்டிக் கொண்டது.

"அச்சமயங்களில் நீ ஊரில் இல்லை.." கோபமாக வந்து விழுந்தன வார்த்தைகள்.

"நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் தூங்குங்கள் அம்மா..." முடித்துக் கொண்டான். தூங்காமல் படுத்திருந்தாலும் கணவனை கண்டுகொள்ளவில்லை.

"நந்தினி! சாப்பிடலாம் வா..."

....

அவளிடம் எந்த பதிலும் இல்லை. உடைமாற்றி பிரஷ்-அப்பாகி வந்தவன் அவளருகே அமர்ந்து,

"போதும் நந்தினி! ஏன் உன்னையே வருத்திக் கொள்கிறாய்? உன் கோபத்தை என்னிடம் காட்டு. இப்படி சாப்பிடாமல் பட்டினி கிடக்காதே... உன் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து தான் நான் அமைதியாக இருக்கிறேன்.

அதை உனக்கு சாதகமாக்கிக் கொண்டு சிறு பிள்ளை போல் அதிகம் அலும்பு செய்கிறாய். கீழே சென்று உணவு எடுத்து வருகிறேன். முகத்தை கழுவிக் கொண்டு வந்து சமத்தாக சாப்பிட தயாராகு..." அவள் பதிலுக்கெல்லாம் அவன் காத்திருக்கவில்லை.

அவன் திரும்பி வந்த பொழுதும் அதே நிலையில் தான் இருந்தாள். ஆயாசமாக இருந்த போதும் கொஞ்சமும் அதை காட்டிக் கொள்ளாமல்,

"நந்தினி! எனக்கு பொறுமை மிகவும் குறைவு. அதிகமாக சோதித்து பார்க்காதே... எழுந்து உட்கார்." கத்தலின்றி

அமைதியாக வந்து விழுந்தன வார்த்தைகள் அன்று கேட்டது போலவே. பதறி எழுந்தவள், வேகமாக,

"எனக்கு வேண்டாம்." அவன் முகம் பார்க்காமல் மறுக்க...

அவனோ பால் சாதத்தை ஸ்பூனில் எடுத்து அவள் வாயருகே வைத்துக் கொண்டிருந்தான். எத்தனை மணி நேரமானாலும் நீ இதை சாப்பிடாமல் தூங்க முடியாது என்பது போல் கடுமையான பார்வை அவனிடம்.

"எனக்கு இது பிடிக்காது" பரிதாபமாக உதடு சுழிக்க... அவனிடம் எந்த மாற்றமும் இல்லை.

"நான் என்ன சின்ன புள்ளையா? பால் சாதம் சாப்பிட?" அவன் வாயை திறக்கவும் இல்லை, வாயருகே இருக்கும் கையை கீழே இறக்கவும் இல்லை.

"ப்ளீஸ் விஜய்! எனக்கு இது வேண்டாமே... வேறு எதாவது சாப்பிடறேனே..." தலைசாய்த்து கெஞ்சுதலாய் கேட்க...

"ஒழுங்காக சாப்பிடும் நேரத்திற்கு சாப்பிட்டிருந்தால் என்ன வேண்டுமானாலும் சாப்பிட்டிருக்கலாம் வெகு நேரமாக பட்டினி கிடக்கும் வயிற்றுக்கு இது தான் இதமாக இருக்கும்.

நான் ஊட்டி விட வேண்டும் என்று தானே பட்டினி கிடந்தாய்? போதும் இதோடு உன் உண்ணாவிரதத்தை முடித்துக் கொள். அடுத்த முறை இப்படி ஒரு திட்டம் தீட்டினால் அதிக நேரம் தாமதிக்காமல் எனக்கு அழை. சீக்கிரமே

வந்துவிடுகிறேன்." சிரிப்பின்றி சொல்லி முடித்தவனிடம் இருந்து வெடுக்கென வெள்ளி கிண்ணத்தை பறித்துக் கொண்டவள் உண்ணத் தொடங்கிவிட்டாள்.

அவள் உண்டு முடிக்கும் வரை காத்திருந்தவன்,

"பார் நந்தினி... நாளை மாலை நாம் அக்கா வீட்டிற்கு செல்ல வேண்டும். 4 மணிக்கெல்லாம் தயாராக இரு."

"ஓ! இதற்கு தான் இந்த நாடகமா?" எள்ளலாக வினவ,

"உனக்காக எவ்வளவு மாறினாலும் இப்படித் தான் எதையாவது சொல்லி இம்சிக்கிறாய் நந்தினி" கை முஷ்டி இறுக்கி தன் கோபத்தை தனித்துக் கொண்டவன்,

"ஆமாம் அப்படியே வைத்துக் கொள். அதில் ஒன்றும் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

"உங்களுக்கு காரியம் நடக்கணும்னா என்ன வேணாலும் செய்விங்க..." கேலி சிரிப்பு வேறு.

"நிச்சயம்! உன்னை திட்டமிட்டு கட்டுக்குள் வைத்திருப்பதில் இருந்து தெரியவில்லையா? நான் நினைத்ததை நடத்தி முடிக்க என்ன வேண்டுமானாலும் செய்வேன். உனக்காக அன்று அவர்கள் வீட்டிற்கு போக முடியாதென்றேன்.

இன்று அவர்களே கூப்பிடும் போது போகவில்லை என்றால் அது அவர்களை அவமதிப்பதாகும். என் அக்காவின்

குடும்பத்தாரிடம் என்னால் அப்படி நடந்து கொள்ள முடியாது. என் அக்காவிற்காக போய் தான் ஆக வேண்டும்."

அவன் சொல்வதெல்லாம் சரி என்று தோன்றினாலும் ஒவ்வொரு முறையும் நாம் இவனிடம் தோற்றுக் கொண்டே இருக்கிறோம் என்ற ஏமாற்றம் கோபமாகியது.

"நான் வரவில்லை!"

"வர வேண்டும் நந்தினி!"

"மிரட்டுறீங்களா விஜய்!" சிலிர்த்துக் கொண்டு முறைக்க, ஒருநொடி கோபம் உமிழ்ந்த கண்கள் சட்டென இயல்புக்கு திரும்பின.

"இல்லை எதிர்பார்ப்பு... என் நந்தினி எனக்காக வருவாள். அவளால் என்னை தண்டிக்க முடியாது."

"முடியும் விஜய். பாக்குறீங்களா...?" அமர்தலான சிரிப்புடன். அவளை தன் மீது சரித்துக் கொண்டவன்,

"நந்தினி... என் நந்தினி! உன்னால் அது முடியாது. அடுத்தவர்களை வருந்தச் செய்ய உனக்கு துணிவு கிடையாது. உன்னையே வேண்டுமானாலும் வருத்திக் கொள்வாயே தவிர என்னை வதைக்க மாட்டாய். உனக்கு ஒன்று தெரியுமா நந்தினி?

என்னால் இந்த தண்டனையை தான் தாங்கிக் கொள்ள முடியவில்லை. போதும் நந்தினி இனி பட்டினி கிடக்காதே. உன்னை பசியில் வாடவிட்டு நான் மட்டும் சாப்பிட்டிருக்கிறேன்

என நினைக்கும் போது குற்ற உணர்ச்சி கொல்கிறது. உனக்கு என்ன வேண்டும் நந்தினி? ஏன் இப்படி அலுச்சாட்டியம் செய்கிறாய்?" தன் கரங்களில் அவள் முகம் தாங்கி கேட்க...

"நீங்க கொடுத்த தண்டனை தானே விஜய்! உங்களை பிரியவும் முடியாமல் சேரவும் முடியாமல் குழம்பி தவிக்க வேண்டும் என்பது, அதை தான் அனுபவிக்கிறேன்... என்னால்... முடியவில்லை விஜய்!" அவள் விசும்ப,

"ஷ்! வேண்டாம் நந்தினி எல்லாவற்றையும் மறந்துவிடு. நான் முன்னை போல் இல்லை என்பது உனக்கு புரியவில்லையா நந்தினி? நானே மறக்க நினைக்கும் போது நீயாக ஏன் அதை பிடித்து தொங்கிக் கொண்டிருக்குகிறாய்? மறந்துவிடு நந்தினி..."

அழுகையில் துடிக்கும் அவளது இதழ்களில் மென் முத்தமிட்டு அதிர்வை நிறுத்தியவன், குழந்தையென மடியேந்திக் கொண்டு நீர் சுரக்கும் கண்களில் தன் ஈர உதடுகள் கொண்டு ஒற்றியெடுக்க...

அழுகை நின்று போனது கண்ணீர் தாங்கி நிற்கும் கன்னத்தின் கறைகளை தன் முகம் கொண்டு துடைக்க மொத்தமாக வசமிழந்து போனவள் அவனை தழுவிக் கொள்ள,

"மை லிட்டில் ஃபேரி... என்னும் முணுமுணுப்புடன் அவனும் தழுவிக் கொண்டான். அவனது தீண்டலால் அப்போதைக்கு அனைத்தையும் கனவென நினைக்கும் படி மறக்கத் தான்

வைத்தான். வழக்கம் போல் அவளுக்கு முன்னதாகவே அவன் எழுந்துவிட்டான்.

"நந்தினி!' நெற்றிவருடி இதமான அழைப்புடன் எழுப்ப, தூக்கம் புரியாமல் திருதிருத்துக் கொண்டிருப்பவளை கண்டவனுக்கு இதழ் கடையில் சிறு புன்னகை தோன்றத் தான் செய்தது.

"நந்தினி உனக்கு என்னவாகிவிட்டது? இப்பொழுதெல்லாம் அதிக நேரம் தூங்குகிறாய்.... உடம்புக்கு ஒன்றும் இல்லை தானே? இல்லை நம் மருத்துவரை வரச் சொல்லட்டுமா?" கரிசனமாகவே கேட்கவும்,

"சாரி விஜய். நல்லா தான் இருக்கேன்.10 நிமிசத்தில் ரெடியாயிடுவேன். குளியலறைக்குள் புகுந்து கொண்டாள். இருவரும் தயாராகி வெளியே வருவதற்கு முன் அவள் கரம் பிடித்து நிறுத்தியவன்,

"நந்தினி உன் சிறுபிள்ளை தனங்களையெல்லாம் இந்த இரண்டு நாட்களுக்கு ஒதுக்கி வைத்துவிட்டு ராஜா மகேந்திர பூபதியின் மருமகளாக இந்த விஜயேந்திரனின் மனைவியாக நடத்துக்கொள்.

உன்னை யாரேனும் ஒரு வார்த்தை சொன்னால் அது என்னையும் நம் குடும்பத்தையும் சொல்தாய் தான்

பொருள்படும். அதற்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும் சரியா?"

ஏற்கனவே இவளை அக்காவின் குடும்பத்தாருக்கு ஏன்... அக்காவிற்கே பிடிக்காது என்பது தான் உண்மை. கண்ணில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொண்டு குறைகளை கண்டுபிடிப்பார்கள்.

அதற்காகவே தான் அழைத்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் இருந்தாலும் வேறு வழியில்லை போகத்தான் வேண்டும்என்பதாலேயே மனைவிக்கு புரிய வைத்துக் கொண்டிருக்கிறான். அவள் தெளிவாகவே புரிந்து கொண்டாள்.

"உங்களுக்கு தேவை என்றால் நான் மனைவி இல்லையேல் அந்தப்புரத்து அழகி இல்லையா விஜய்?"

"நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய் நந்தினி? உன்னை எதற்காக அனைவரையும் எதிர்த்து திருமணம் செய்தேனோ இன்று வரை அதை நோக்கி என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. உன் நிலையில் தான் நானும் இருக்கிறேன்.

இருந்தும் நீயின்றி இந்த வாழ்கை நிறைவு பெறாது. வேறு வழியில்லை நந்தினி நமக்கு பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் நாம் இருவரும் கணவன் மனைவி தான். ஊருக்காகவேனும் வாழ்ந்து தான் ஆக வேண்டும். இதை இப்படியே விட்டு விடு.''

மாலை அவன் வரும் பொழுது கிளம்புவதற்கு தயாராக தான் இருந்தாள். ஆனால் எப்பொழுதும் அணிந்து கொள்ளவேண்டும் என்ற நகைகளை கூட போடவில்லை.

புடவைக்கு பொருத்தமாக சில நகைகளும் மெல்லிய ஒப்பனையுமாக இருந்ததில் தன்னை மறந்து அவளை ரசித்தவன், அவள் தன் போக்கிலேயே இருக்கட்டும்... என நினைத்ததால் அனைத்தையும் போட வேண்டும் என வற்புறுத்தவில்லை.

இரண்டு மணி நேர பயண தூரத்தில் இருந்தது அக்காவை கட்டி கொடுத்திருக்கும் சமஸ்தானம். காலத்திற்கு ஏற்றது போல் மாற்றம் காணாமல் அதே பழைய பிரம்மாண்டத்துடன் கம்பீரமாக காட்சியளித்தது விஜயரேகாவின் புகுந்த வீடு.

முதன் முதலில் வருகிறார்கள் என்பதால் சொந்த பந்தங்கள் அனைத்தும் கூடியிருந்தன. இன்முகத்துடன் வரவேற்ற போதும் அங்கிருந்த ஒருவருக்கும் இவர்களது ஜோடி பொருத்தம் உவப்பாக இல்லை என்பதை அவர்களது கண்களே காட்டிக் கொடுத்து.

நந்தினியை மட்டும் தனியாக அழைத்து சென்றுவிட்டனர். இது தான் அரண்மனை வழக்கம். ஆண்கள் அனைவரும் முதல் கூடத்தில் அமர்ந்திருந்தால் பெண்கள் அதற்கடுத்த விஸ்தாரமான

இடத்தில் கூடுவார்கள் ஆணும், பெண்ணும் ஒரே இடத்தில இருந்து பேசுவது வழக்கம் இல்லை.

ஆனால் விஜயேந்திரனின் வீட்டில் அதையெல்லாம் கடை பிடிப்பதில்லை என்பதாலோ, இதுவரை... தான் எந்த பெண்ணோடும் வராமல் இருந்துவிட்டு இப்போது சட்டென நந்தினியை பிரித்து கூட்டி போனதாலோ அன்றி அவள் சிறு பெண்ணாயிற்றே பிடிக்காத பெண்ணும் கூட. வார்த்தைகளால் வதைத்துவிடுவார்களோ என மனம் பதற... அவனால் பேச்சில் கவனம் செலுத்த முடியவில்லை.

என்னவாகி விட்டது எனக்கு? ஓ மை லிட்டில் ஃபேரி! நீ என்னை ரொம்பவும் படுத்துகிறாய். பார், உன்னால் என்னுடயை இத்தனை வருட சொந்தங்களையே சந்தேகித்துக் கொண்டிருக்கிறேன்... சட்டென தன்னை சமன் செய்து கொண்டவன் இயல்புக்கு திரும்பிவிட்டான்.

ஆனால் அவன் எதை நினைத்து பதறினானோ அது தான் நடந்து கொண்டிருந்தது. உள்ளே அழைத்து சென்றதோடு ஆளாளுக்கு ஒவ்வொரு பக்கம் போய் விட்டனர்.

அந்த நீண்ட ஹாலில் பிரம்மாண்டமான இருக்கைகளும், அழகிய ஓவியங்களும், வேட்டையாடிய விலங்குகளின் பதப்படுத்தப்பட்ட தலைகளும் தான் இருந்தன. இவளைத் தவிர

வேறு மனித நடமாட்டமே இல்லை. அவளும் எவ்வளவு நேரம் தான் தனியாக அசையாமல் அமர்ந்திருப்பது.

வேடிக்கை பார்ப்பது நம் நந்துவுக்கு கொண்டாட்டமான விஷயம் என்பதால் மெல்ல எழுந்தவள் ஓவியங்களையும், திரைச்சீலைகளையும், விலங்குகளையும் தொட்டுத் தொட்டு பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏய்! என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" திடீர் அதட்டலில் விதிர் விதிர்த்து போனாள் நந்தினி.

"இவையெல்லாம் என்னவென்று தெரியுமா? கொஞ்சமும் அறிவே இல்லாமல் தொட்டு தொட்டு பார்த்துக் கொண்டிருக்கிறாய். அதுசரி அரச வம்சமாக இருந்தல் தானே இதெல்லாம் தெரிவதற்கு?" மிடுக்காக கால் மீது கால் போட்டுக் கொண்டு ஓர் அரசியின் தோரணையோடு அந்த ஒற்றை இருக்கையில் அமர்ந்து ஏளன பார்வை ஒன்றை நந்தினியின் மீது செலுத்தினாள் அந்தப் புதியவள்.

யாரிந்த புதியவள்? விஜய்க்கும் நந்தினிக்கும் இடையில் வருவாளா?

# அத்தியாயம் 18

"**நா**ன் என்ன செஞ்சுட்டேன்? தொட்டுப் பார்க்கக் கூடாதோ? இதை தான் விஜய் சிறுபிள்ளை தனம் என்றானோ? அப்படியென்றால் தவறு தான்.

ராஜ தோரணை... அரசவம்சம் என்றாலே கால் மீது கால் போட்டு தான் அமருவார்களோ?

எப்போதும் எப்படி இப்படியே உட்கார முடியும்? இயல்பாகவே இருக்கமாட்டார்களோ? இல்லை சிறுவயது முதலே பழகிவிடுவதால் இது தான் இவர்கள் இயல்பாகிவிட்டதோ?"

தன் போக்கில் மனம் யோசித்துக் கொண்டிருக்க... எதிரே இருந்தவளின் அட்டகாச சிரிப்பே இவளை தன்னிலைக்குத் திருப்பியது.

"என்ன பட்டிக்காட்டான் எதையோ பார்த்ததை போல் பார்க்கிறாய்? நான் யாரென்று தெரியவில்லையா? விஜய் அத்தானின் மனைவியாகி இருக்க வேண்டியவள்... உன்னை கல்லூரி வாசலில் பார்த்து தடுக்கி விழுந்துவிட்டதில் நடக்காமல் போய் விட்டது.

அதுசரி, அத்தான் தலை குப்புற விழும் அளவிற்கு உன்னிடம் என்ன இருக்கிறதென்று தான் தெரியவில்லை..." ஏளன உதட்டு சுழிப்பு...

(அடக் கடவுளே நீயாவது புத்திசாலியாக இருப்பாய் என நினைத்தேன் அவன் தடுக்கிவிழுந்த கதையை நீயுமா நம்புகிறாய்?) இப்பொழுது ஏளனப் பார்வை இடம் மாறியது.

"என்னால் ஏற்க முடியவில்லை... என்னை நிராகரித்தவர் என்னைவிட அழகான பெண்ணாக பார்த்து கட்டியிருந்தால் கூட மனம் சமனப் பட்டிருக்கும்... அத்தான் சிங்கம். நீ அவர் பக்கத்தில் சிறு முயலாக இருந்தால் கூட பரவாயில்லை... எலியாக அல்லவா இருக்கிறாய்... ஐயோ இந்த அத்தானுக்கு புத்தி ஏன் இப்படி போனது?" இவளது புலம்பல் நந்தினியிடம் சிரிப்பை தான் உண்டாக்கியது.

"அட முட்டாளே! அவன் என்னவோ காதலாகி கசிந்துருகி என்னை கட்டியிருப்பது போல் ஏன் இப்படி தவிக்கிறாய்? எல்லாம் சும்மா. நம்பாதே... அவனது பழிவாங்கும் நாடகம் இது..." எண்ணியவளாய் ... விரிந்த புன்னகையுடன்,

"அழகா பேசுறீங்க!" என்றவளைக் கண்ட ரேணுகா மிரண்டு போனாலும் சமாளித்துக் கொண்டு,

"உங்களுக்கு திருமணமாகி, எட்டு பத்து மாதங்கள் இருக்காது? இன்னும் நாங்கள் பேசும் விதம் படிக்கவில்லையே

நீ...? அரண்மனையில் வேலைக்கு ஆள் எடுக்கும் போது கூட அவ்வளவு பார்ப்போம்... அதற்கு கூட தகுதியில்லாத உன்னைப் போய்..."

கணவனின் வார்த்தைகள் நந்தினியை அமைதி காக்க வைத்தன.

"இந்த திமிரும் கர்வமும் தான் உங்கள் தகுதி என்றால் எனக்கு அது தேவையில்லை." மனதோடு வார்த்தைகள் நின்று விட்டன.

"ஏதோ ஒரு குப்பத்தில் பிறந்து வளர்ந்த நீ எங்கே? அரச வம்சத்து என் அத்தான் எங்கே? இங்கிருக்கும் ஜடப்பொருள்களைக் கூடத் தொட தகுதியில்லாத நீ அத்தானை... ச்சீ நினைக்கும் போதே அருவருப்பாக இருக்கிறது."

நந்தினிக்கும் அருவருப்பாகத் தான் இருந்தது. எவ்வளவோ முயன்றும் முடியாமல்,

"போதும்! இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். அடுத்தவர்களின் அந்தரங்கத்தில் தலையிடுவது அநாகரீகம் என்பது கூடவா தெரியாது? உங்கள் அத்தானுக்கு பிடித்திருக்கிறது. தேவையில்லாமல் நீங்கள் வருத்தப்பட வேண்டியதில்லை." சற்று காட்டமாகவே சொல்லிவிட்டாள்.

அந்நேரம் அங்கே விஜய் வர, ரேணுகா விழிகளில் நீர் திரள,

"உன் நல்லதற்காகத் தானே சொன்னேன்? அதற்காக இப்படி பேசுவாயா? பாருங்கள் விஜய்! எல்லோரும் ஒருமாதிரியாக பேசுகிறார்கள் கொஞ்சம் கூடுதலாக நகை போட்டுக் கொண்டு வரக் கூடாதா என்று கேட்டேன் அதற்குத் தான் இவ்வளவு பேச்சு பேசுகிறாள் உங்கள் ஆசை மனைவி."

ரௌத்திரமான மனைவியின் வார்த்தைகள் அவனை எட்டியதால் தான் உள்ளே வந்தான். இப்போது சூழ்நிலை ரேணுகாவால் அழகாக சித்தரிக்கப் பட்டது.

"கடவுளே என்னமாய் நடிக்கிறாள்?" அதிர்ந்து போனாள் நந்தினி.

"இதில் தவறென்ன இருக்கிறது ரேணுகா? அவரவர் விருப்பம் அவரவருக்கு... இந்த நகையும், புடவையும் தான் விஜயேந்திரனின் புகழையும், பெருமையையும் பறை சாற்றும் என்றால் அது எனக்கு இழுக்கல்லவா?

ஒருவரது குணமும், நடத்தையும் தான் அவர்களின் உயர்வை பற்றி பேச வேண்டும் என்னும் கருத்து நந்தினிக்கு எப்போதுமே உண்டு. அதனால் அப்படி சொல்லியிருப்பாள் விட்டுவிடு."

"இங்கு குணமும், நடத்தையும் தான் தோற்றுப் போனதே..."

கண்களை மூடி... ஆழ்ந்த மூச்சின் மூலம் தன்னை நிலைப்படுத்தப் போராடி... தோற்றுப் போனவன்,

"பார் ரேணுகா... நந்தினி இப்போது என் மனைவி. மரியாதையாக பேசுவது நல்லது. கள்ளம் கபடம் இல்லா பிள்ளை மனம் தான் என்னை மயக்கியது. இங்கிருக்கும் ஒருவருக்கும்... என்னையும் சேர்த்து! நம் யாருக்குமே அந்த குணம் கிடையாது.

வெறும் 10 நிமிடங்களில் என் சீரற்ற மனநிலையை சரிசெய்யும் வரம் கைவரப் பெற்ற தேவதை என் நந்தினி. அதனால் நம்மையெல்லாம் விட உயர்வான பெண்ணைத் தான் மணம் முடித்திருக்கிறேன். இதில் என் குணமும், நடத்தையும் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை. அன்று பார்த்த அதே விஜயேந்திரன் தான் நான்."

அரச குடும்பத்தில் பெண் எடுக்கவில்லை என முகம் தூக்கிய அனைவருக்குமே பதிலடி கொடுத்தான் என்று தான் சொல்ல வேண்டும். ரேகா விருந்து உண்ண அழைக்க வரவும் பேச்சு அதோடு முடிந்துவிட்டது.

கணவனை புரிந்து கொள்ள முடியாமல் ஒரு பக்கம் தவித்ததாலும்... அப்படி என்ன இவர்கள் உயர்வு? எல்லோரும் மனிதர்கள் தானே? இங்கிருக்கும் பொருட்களை தொடும் தகுதி கூட கிடையாது என்றவள் வீட்டில் தண்ணீர் கூட குடிக்கக் கூடாது.

ஆனால் என் சுய கவுரவத்தை தூக்கி போட்டுவிட்டு இவனுக்காக வாயை காதுவரை இழுத்து பிடித்து சிரித்தபடியே அனைத்தையும் உள்ளே தள்ள வேண்டும். அந்த அளவிற்கு இவன் தகுதியானவனா என்றால் அதுவும் கிடையாது.

என்னமோ போ நந்தினி இந்த காதல் உன்னை பாடாய் படுத்துகிறது. பிரபா அன்று சொன்னானே வாழவும் விடாத... சாகவும் விடாத... வன்கொடுமை காதல் என்று அது நிஜம் தான்.

தட்டில் இருந்த பதார்த்தங்களை அலைந்து கொண்டிருந்தவள் கணவனின் பார்வை தன் மீதே நிலைத்திருக்கிறது என்பது தெரியாமல் தன் கனவுலகத்துக்கு போய் விட்டாள்.

இந்த லாலிபாப் சிக்கன் தான் ரேணுகா. இதோ இந்த முள் கரண்டி தான் நந்தினி. இது என்ன? ம்... காஸ்மீரி புலாவ் இது தான் விஜய். பாவம் பரிதாபமாக பார்த்துக் கொண்டிருக்கிறது...

பார், இப்போது நந்தினி ரேணுகாவுக்கு ஓர் அறை விடப் போகிறாள்... முள் கரண்டி கொண்டு நச்சென ஒரு குத்து. சிக்கன் ஒரு ஆட்டம் ஆடி நின்றது. அது! சிறு சிரிப்பு வேறு. மெல்ல அவள் புறம் சரிந்து,

"நந்தினி! சாப்பிடாமல் என்ன விளையாட்டு?" கோபமில்லா கிசு கிசுப்பான குரல் கணவனிடமிருந்து தான். 'ஐயோ

எல்லாத்தையும் பாத்துட்டானா?' தவறு செய்த குழந்தையாய் திரு திருக்க...

"உன் சண்டையை எல்லாம் இந்த அத்தானோடு வைத்துக் கொள். பாவம் சிக்கனும், ஃபோர்க்கும் விட்டுவிடு நந்தினி.

"அத்தானா?"

"ம்... ரேணுகாவே கூப்பிடுகிறாள் நீ கூப்பிடுவதற்கென்ன?" மீண்டும் சிறு சிரிப்பு அவனிடம்.

"உங்களுக்கு ஒன்று தெரியுமா விஜய்? நிவி ஆதியை அப்படி தான் கூப்பிடுவா..." குதூகலத்துடன் சொல்லியதிலிருந்தே அவள் இயல்புக்குத் திரும்பி விட்டாள் என்பது புரிய,

"எப்படி?" புருவம் உயர்த்தி கண்கள் சிரிக்க கேட்க,

"அத்தான்..." அவள் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே,

"குட்! இப்படி தான் கூப்பிட வேண்டும். சீக்கிரம் சாப்பிடு." அதுவரை இவர்களையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ரேகாவின் கணவன்,

"என்ன விஜய் கதையெல்லாம் முடிந்துவிட்டதா? இனியாவது சாப்பிடலாமா?" என சீண்ட பதில் சொல்வதை தவிர்த்து புன்னகையையே பதிலாக கொடுத்து சாப்பிட ஆரம்பித்துவிட்டான்.

'உன்னோடு சேர்ந்து சுற்றம் சூழல் மறக்கும் பழக்கம் எனக்கும் வந்துவிட்டது ' மனைவியிடம் செல்ல கோபம்

வரத்தான் செய்தது. உணவு வேளை முடிந்ததும் உப்பரிகைக்கு கூட்டி போனார்கள்.

அரண்மனையின் மேல் தளம். நிலவு வெகு அருகில் இருப்பது போல் ஓர் பிரேமை உண்டானது நந்தினிக்கு. மேலேயிருந்து பார்க்கும் போது தான் தெரிந்தது அரண்மனையை சுற்றி நீர் நிறைந்திருந்தது.

"விஜய்...! ஆச்சரியத்தில் சற்று சத்தமாகவே அழைத்துவிட்டாள். விஜய ரேகாவும் அவளது கணவனும் இருந்ததால் சிறு சங்கடத்துடன்,

"நந்தினி! அத்தான் என கூப்பிடு என்று சொன்னேன் அல்லவா? சொல், எதற்கு அழைத்தாய்?" கோபமில்லை அவன் குரலில்.

"இல்ல... இதென்ன அரண்மனையை சுத்தி தண்ணி இருக்கு? நாம வரும் போது பார்க்கலயே..."

"இது நீராழி! கோட்டையின் பாதுகாப்புக்காக. முன்னெல்லாம் இதற்குள் முதலைகள் இருக்கும். சட்டென எதிரிகள் உள்ளே நுழைய முடியாமல் தடுக்கும் வழி. கோட்டை சுவர் தாண்டி நீராழி இருக்கும். இப்போது அதை அடுத்தும் ஓர் சுற்று சுவர் எலுப்பிவிட்டார்கள் அதனால் தான் நம்மால் பார்க்க முடியவில்லை."

"ஓ! உங்க அக்காவுக்கு ரெண்டு பசங்க இருக்காங்கன்னு சொன்னீங்க... அவங்களக் காணுமே..."

"அவர்கள் ஊட்டியில் போர்டிங் ஸ்கூலில் படிக்கிறார்கள். நம் இனத்தில் அப்படி தான். பிள்ளைகள் ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்பதற்கான ஏற்பாடு. நான் கூட அப்படிதான் படித்தேன்."

"பெற்றோரை விட சிறப்பா யாராலயாவது ஒழுக்கத்தை கத்துக் கொடுக்க முடியுமா விஜய்?" பொட்டில் அறைந்தது போல் மனைவியின் கேள்வியில் மின்னல் வெட்ட நிமிர்ந்து பார்த்தவன், இதழோர சிரிப்புடன்,

"நம் பிள்ளைகளை இப்படி எங்கும் விட வேண்டியதில்லை நந்தினி!" தோளோடு அணைத்துக் கொண்டான்.

'என்ன சொல்கிறான் நம் பிள்ளைகளா? எனக்கு அதற்கான தகுதியெல்லாம் கிடையாது என்பான்...' குழம்பியவள் மீண்டும் தன் வேடிக்கையை ஆரம்பித்துவிட்டாள்.

"நந்தினி! ஏனென்று தெரியவில்லை இன்று என் மனம் மிகவும் சந்தோசமாக இருக்கிறது. இதை போலவே எப்போதும் இருக்க வேண்டும் என நினைக்கிறேன். அது சாத்தியப்படுமா என்று தெரியவில்லை. இருந்தாலும் இப்படி இருக்க முயற்சி செய்யவேண்டும் கண்டிப்பாக." தோளில் இருந்த கரம் இப்போது இடை வருடிக் கொண்டிருந்தது.

'ஏன் இப்படி சம்பந்தம் இல்லாமல் பேசுகிறான்? அரச குடும்பத்தில் எல்லோருமே இப்படி தான் இருப்பார்கள் போலும் எல்லாவற்றையுமே சூட்சமமாக பேசுவது. அடுத்தவருக்கு புரிந்துவிடக் கூடாது என்பதால் இந்த ஏற்பாடோ?'

அவனது எண்ண ஓட்டம் அவளுக்கு புரியவில்லை. அவனுக்கே புரியவில்லை என்பது அதை விடவும் கொடுமை. வெகு நேரத்திற்கு பிறகு விருந்தினர் அறைக்குள் சென்றதும்,

"நந்தினி... நந்தினி..." என பிதற்றிய படி அவளை இறுக தழுவிக் கொண்டவன்,

"யாரேனும் உன்னை ஏதும் சொன்னார்களா நந்தினி?"

'அதச்சொல்லு! என்னடா புருஸ்லீ பம்மறாரேன்னு நினைச்சேன்... குடும்ப மானத்தை பற்றிய நினைப்பு தானா?' சிறு எரிச்சல் மூண்டது.

அவனோ நம்மிடமே ரேணுகா அப்படி பேசினாளே தனியாக இருக்கும் போது இவளை ஏதேனும் வதைத்திருப்பாளோ என தெரிந்து கொள்ளவே கேட்டான்.

"யார் என்ன சொன்னாலும் நீங்க சொன்னது போல வாயை இறுக மூடிக்கிட்டு தான் இருந்தேன் விஜய்!" கோபமாக படுத்துவிட்டாள். ஆழ்ந்த மூச்சின் மூலம் தன்னை சமன் செய்து கொண்டவன், அவளருகே படுத்து இதமாக அவள் தலை கோதி,

"நந்தினி... இவ்வளவு நேரம் நன்றாக தானே இருந்தாய்? உனக்கு திடீர் திடீரென என்னவோ ஆகிவிடுகிறது."

"ஆமா பைத்தியம் பிடிச்சிடுது. இங்கிருக்க ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு உடம்பெல்லாம் எரியுது. முடிஞ்சா என்னை சீக்கிரம் வீட்டுக்கு கூட்டி போங்க."

"என்ன ஆனது நந்தினி? ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்?"

"இங்க இருக்கிற பொருளை தொடுற தகுதி கூட எனக்கு இல்லாதப்ப எப்படி இந்த கட்டில்ல படுக்கிறது? எப்படி சாப்பிடுறது? எனக்கு பசிக்குது விஜய்." காட்டமாக கத்தியேவிட்டாள்.

மனைவி பசி என்றதும் பதறியவனாய்,

"கிளம்பு நந்தினி!"

"எங்க?"

"நம் வீட்டிற்கு!" அவளது கைப்பையையும் அவனே எடுத்துக் கொண்டு அவள் கரம் பற்றி கீழே வந்து தன் தமக்கைக்கு குறுஞ்செய்தி அனுப்பிவிட்டு காத்திருந்தான். அடுத்த ஐந்து நிமிடத்தில் வந்தவள்,

"என்ன விஜய்? இந்த நேரத்தில் கிளம்புகிறேன் என்கிறாய்?" பதட்டத்துடன் வினவ,

"நம் வீட்டிற்கு ரெய்டு வரப் போவதாக தகவல். அம்மா மட்டும் இருப்பதால் பயந்துவிடுவார்கள் கிளம்பறோம் எல்லோரிடமும் சொல்லிவிடுங்கள்." நந்தினியை இழுத்துக் கொண்டு போயேவிட்டான்.

"விஜய் நிஜமாகவே ரெய்டா?" பதட்டமாக வினவ,

"கொஞ்ச நேரம் பேசாமல் வருகிறாயா நந்தினி..." வரும் வழியில் அணைத்து உணவகங்களும் மூடப்பட்டிருந்தன. ரோட்டோர தள்ளுவண்டி கடைகள் தான் இருந்தன.

"ரொம்பவும் பசிக்கிறதா நந்தினி? கொஞ்சம் பொறுத்துக்கொள்ள முடியுமா? ஒருகடை கூட இல்லையே... முன்னமே சொல்வதற்கென்ன? அப்பொழுதே கிளம்பியிருக்கலாம். சிறுபிள்ளையாக இருக்காதே என்றால் அதிமேதாவியாகி என்னை இப்படி வதைக்கிறாய்." கோபமும், இயலாமையும் போட்டி போட்டது அவனிடம்.

"நிறைய கடை இருக்கு நீங்க தான் நிறுத்த மாட்டேங்கிறீங்க விஜய்."

"இதெல்லாம் சுத்தமாக இருக்காது நந்தினி ஆரோக்கிய கேடு. கொஞ்சம் பொறுத்துக் கொள் வீட்டிற்கு போய் விடலாம்."

"அந்த பால் சாதத்தை சாப்பிடுறதுக்கு பட்டினியாவே கிடக்கலாம்." முணுமுணுப்புடன் அமர்ந்துவிட்டாள்.

வரும் பொழுதே வீட்டிற்கு அழைத்து உணவு தயாரித்து வைக்கும் படி ஆணை பிறப்பித்தான். நல்லவேளை அன்னை எழுந்து கொள்ளவில்லை. சிறு நிம்மதி பரவுவதை ரசித்தபடி மனைவியை அமர வைத்து உண்ணச் செய்தான்.

பசி அதிகம் தான்போலும் நந்தினியும் வேகமாக சாப்பிட்டு முடித்துவிட்டாள். அதற்குள் தங்கள் அறைக்கு சென்றிருந்தவன் தனது மடிக்கணினியில் வீடியோ சாட்டில் இருந்தான்.

இவளை கண்டதும் சிறு புன்னகையை உதிர்த்துவிட்டு மீண்டும் தன் பணியை தொடர, அவள் உறங்க சென்றுவிட்டாள். சிறிது நேரத்திற்கு பின் வந்தவன்,

"நந்தினி!" என்னும் அழைப்புடன் அவள் முதுகுவருட, மூச்சை இழுத்து பிடித்தபடி அமைதி காத்தாள்.

"நீ இன்னும் தூங்கவில்லை என தெரியும் நந்தினி! இந்த குட்டி வயிற்றிற்கு ரொம்பவும் பசித்துவிட்டதோ?" விரல்களைக் கொண்டு வயிற்றில் வருட கூச்சம் மேலிட அவன் கரத்தைப் பற்றி விலக்க, இனி எப்படி பேசாமல் இருப்பது? அவன் புறம் திரும்பியவள் அசடு வழிய ஆம் என்பது போல் தலையசைக்க,

"அத்தான் என அழைக்கப் போவதில்லையா நந்தினி?" ஏக்கம் நிறைந்த அவனது குரல் இம்சித்த போதும், அதற்காகவே காத்துக் கொண்டிருந்தவள் போல்,

"அந்த உறவுமுறை அழைப்பெல்லாம் உண்மையான கணவன் மனைவிக்கு தான். நீங்கள் தண்டனை கொடுப்பவர், நான் அனுபவிப்பவள் நமக்கு எதுக்கு அதெல்லாம்?" என புருவம் உயர்த்தி வினவ...

"உண்மையைச் சொல்ல வேண்டும் நந்தினி. இப்பொழுதும் உனக்கு அப்படித் தான் தோன்றுகிறதா?"

"இப்ப, அப்ப... இந்த கதையெல்லாம் எதுக்கு..? உண்மை அது தானே விஜய்?"

"நானே மறந்தாலும் நீ மறக்கப் போவதில்லை. நீ சுயபட்சாதாபத்தில் சுகம் காண்கிறாய் நந்தினி. வேண்டுமென்றே உன்னை வருத்திக் கொண்டு அதை சந்தோசமாக அனுபவிக்க நினைக்கிறாய்... இது நல்லதல்ல நந்தினி. வேண்டாம் உன்னை மாற்றிக் கொள். தூங்கலாமா?"

அவன் முத்தமிட்டு முன்னேறிக் கொண்டிருக்க, (இது தான் நீ தூங்கும் அழகா?)

"வேண்டாம் விஜய்!"

"நீ அருகில் இருக்கும் போது விலகிப் படுப்பதென்பது முடியாத காரியம் நந்தினி." பலவீனமான அவளது எதிர்ப்பு அவனிடம் செல்லுபடியாகவில்லை.

'என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்? நான் என்ன பொம்மையா? எல்லாமே இவன் இஷ்டப்படி நடக்க வேண்டும் எனக்கென்று மரியாதை கிடையாது, மதிப்பு கிடையாது.

அவள் என்னவோ நான் தான் இவனை ஓயாமல் நாடுவது போலவும் அவன் சகித்துக் கொள்வது போலவும் பேசுகிறாள். நினைக்கவே அருவருப்பாக இருக்கிறதாமே... சீ எவ்வளவு கேவலமாக சொல்லிவிட்டாள்.

இவன் எதைப் பற்றியும் அறிந்து கொள்ள நினையாமல் தன் விருப்பமே பிரதானமாய்.... என்ன மனிதர்கள் இவர்கள்?' எரிச்சல் கோபமாக மாறிப்போக மறுநாள் தன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துவிட்டாள். கீழே இறங்கி வரவேயில்லை. வழக்கமாக பார்க்கும் வேலைகளெல்லாம் மீண்டும் ராணியார் பார்க்கும்படி ஆகிப் போனது.

இது எதுவுமே தெரியாமல் வீட்டிற்கு வந்தவனை, தன் அறை வாசலில் நின்று எதிர்க்கொண்டார் ராணியம்மா.

"விஜயேந்திரா!'' சற்று காட்டமான அழைப்பு.

'ஆஹா என் குட்டி புயல் இன்று இவர்களை எந்த விதத்தில் தாக்கியதென்று தெரியவில்லையே... அவளைப் பற்றி குற்றப்பத்திரிக்கை வாசிக்காவிட்டால் இவர்களுக்கு தூக்கமே வராது போலும்...' இதழோர சிரிப்புடன் வந்தவனை இருக்கையில் அமர்த்தி,

"சாப்பிட்டாயா?" அமர்ந்த குரலில் நிதானமாகக் கேட்டார் அன்னை.

"ம்... பிஸ்னஸ் மீட் அங்கேயே எல்லாம் முடிந்துவிட்டது அம்மா.

"இங்கு ஒருத்தி காலையில் இருந்து உண்ணாவிரதம் இருக்கிறாள்..." மகனின் விழி பார்த்துச் சொல்ல,

ரேணுகாவின் வார்த்தைகளால் வருந்திய மனைவியின் மனவேதனையை போக்குவதற்காகவும்... மறக்கச் செய்வதற்காகவும் அவளது எதிர்ப்புகளை தவிர்த்து தீண்டியது தான் காரணம் என்பது அவனுக்கு சட்டென விளங்கியது.

"ஏன் அம்மா என்னிடம் முன்னமே சொல்லவில்லை?" வேதனை நிறைந்த குரல். அரசியார் கொஞ்சமும் அசரவில்லை,

"உண்டாயா? உறங்கினாயா? என நீ ஏன் உன் மனைவிக்கு அழைத்துக் கேட்கவில்லை?"

"தவறு தான். நந்தினி பசி தாங்கமாட்டாள் அம்மா. அவளை உண்ண வைத்துவிட்டு வருகிறேன் நிதானமாக பேசலாம்..." இறைஞ்சினான்.

"இவ்வளவு நேரம் தாங்கியவளுக்கு இன்னும் ஒரு பத்து நிமிடங்கள் தாங்குவது பெரிய சிரமமாக இருக்காது. உங்களுக்குள் என்ன பிரச்சனை?"

"பிரச்சனை என்று எதுவும் இல்லை அம்மா..." தயங்கியவனை இடைவெட்டியவர்,

‘‘போதும் நிறுத்து விஜயேந்திரா! நான் உன்னை பெற்றவள் என்பதை மனதில் வை. இன்று முழுவதும் மேலிருந்து இறங்கி வரவேயில்லை. அவள் இல்லாவிட்டால் இங்கு எந்த வேலையும் நின்றுவிடாது. அடிக்கடி இதுவே வேலையாக போய்விட்டது. இதையெல்லாம் யோசித்து தான் வேண்டாமென்றேன்!" கோபம் கனன்றது அன்னையின் கண்களில்.

"எங்கு சுற்றியும் இங்கு தான் வருவீர்களா அம்மா? இப்பொழுது அவளை விலக்கி வைக்க வேண்டுமென்கிறீர்களா? இந்த ஜென்மத்தில் இவள் தான் என் மனைவி! என்பதை மனதில் வையுங்கள்.

மெது மெதுவாக எல்லாவற்றையும் பழகிக் கொள்வாள்... சிறு பெண் தானே? கொஞ்சம் இதமாக சொன்னால் புரிந்துகொள்வாள் அம்மா!"

"நான் எதுவும் சொல்லப் போவதில்லை! திருமணம் முடிந்து ஒருவருடமாகப் போகிறது இன்னும் எவ்வளவு மெதுவாக தான் பழகிக்கொள்வாள் உன் மனைவி?

உன்னிடம் ஒழுங்காக தானே நடந்துகொள்கிறாள். பொறுப்பான மருமகளாக தான் இல்லை... மனைவியாகவேணும்

நடந்து கொண்டால் சரிதான்! ரேகா அன்றே சொன்னாள் ரொம்பவும் வெட்கப்படுகிறாள் என்று.

இதெல்லாம் எங்கு போய் முடியுமோ? உங்களுக்குள் எல்லாம் ஒழுங்காக தானே நடக்கிறது?" ராஜ தோரணை அவரிடம்.

ஆழ்ந்த மூச்சின் மூலம் தன்னை சமன் செய்து கொண்டவன்,

அன்னையின் கரம் பற்றி,

"மன்னித்துவிடுங்கள் அம்மா! அவள் ரொம்பவும் சின்ன பெண்ணாக இருப்பதால்... நான் தான் இப்பொழுது வேண்டாமென தள்ளிப் போட்டிருந்தேன்.''

"எனக்கு புரியவில்லை விஜய்... இன்னும் என்ன சிறு பெண்? ஏன் இப்படி தயங்குகிறாய்?"

'தோற்றத்தில் தான் சிறுபெண் போல் இருக்கிறாள் என்றால் மனமும் அப்படித் தான் இருக்கிறது. அவள் செய்யும் அட்டகாசமும், அலுச்சாட்டியமும்... எனக்கென்னவோ குழந்தையோடு குடும்பம் நடத்துவது போல் தான் இருக்கிறது.' வாய் வரை வந்த வார்த்தைகளை விழுங்கி,

"பிள்ளைப்பேரு வலி... தாங்கமாட்டாள் அம்மா..." உண்மையான காரணத்தைச் சொன்னான்.

"எத்தனை ஆண்டுகள் தள்ளிப் போட்டாலும் அதற்கு மாற்றே கிடையாது. பொருத்துத் தான் ஆகவேண்டும் விஜயேந்திரா... இரண்டு நாள் இருந்துவிட்டு வருவதாக சொன்னவன் அர்த்தராத்திரியில் அழைத்து வந்திருக்கிறாய்... என்ன நடந்தது?" (வகையாக வச்சு செய்கிறார் ராணியம்மா.)

"ரேணுகா நந்தினிடம் கீழ்த்தரமாக நடந்து கொண்டாள். என் நந்தினியை அவமதித்துவிட்டாள் அம்மா."

"சொன்னது நந்தினியா?" அவரது கூறிய பார்வையை சீராக எதிர்கொண்டவன்,

'நந்தினி பொய் சொல்வதும், புரம் பேசுவதும் அறியாதவள் அம்மா. நந்தினியை மணந்ததால் தரம் தாழ்ந்து போனேன் என ரேணுகா என்னிடம் தான் சொன்னாள்." வேதனையில் விழி மூடிக் கொண்டான்.

'இப்படிப்பட்ட பேச்சுக்கள் எதிர்பார்த்த ஒன்று தானே?"

"எதிர்ப்பார்த்தாவை தான். அதை சமாளிக்கவும் தயாராக தான் இருந்தேன். ஆனால் இங்கு தாக்கப்பட்டது நான் இல்லை... நந்தினி! அதை சகித்துக்கொள்ள முடியாமல் தான் வந்துவிட்டேன்."

"நல்லது! இன்று கஸ்தூரி வந்திருந்தாள்." ஆழ்ந்த பார்வையை மகன் மீது செலுத்தியபடி சொல்ல,

"இன்றய நாள் மிகவும் மோசமானது போலும்... என்னவாம்?"

"நிர்மலாவிற்கு வரன் அமைந்திருக்கிறதாம். நல்லகாலம் என் மகள் கொடுத்துவைத்தவள். தப்பித்துவிட்டாள். பழுதாகிப் போனது வித்தா? விளைநிலமா? என என்னையே கேள்வி கேட்கிறாள். என்ன பதில் சொல்லட்டும் விஜயேந்திரா?" அன்னையின் மனவேதனையை உணர்ந்தவன்,

"மன்னித்துவிடுங்கள் அம்மா! இப்படி ஒரு இக்கட்டை உருவாக்கியது நான் தான். நந்தினிக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம்...

நீங்கள் வருத்தப்பட்டதாக நந்தினி சொன்னதும் முடிவை மாற்றிக் கொண்டேன் அம்மா! சத்தியம். வெகு சீக்கிரம் நல்ல செய்தி சொல்லிவிடுவோம் அம்மா!"

"ஒருவருடத்திற்குள் குழந்தை பற்றிய நல்ல செய்தி சொல்லவில்லை என்றால் பெரிய குறையாகப் பேசப்படும் என்பதால் தான் சொல்கிறேன்! புரிந்து நடந்துகொள்ளுங்கள். உன்னை பற்றி யாரும் குறை சொல்லிவிடும் சூழலை உண்டாக்கிவிடாதே!"

"நம்புங்கள் அம்மா! என்றுமே நம் கௌரவத்திற்கு களங்கம் வரும் படி எதுவும் செய்யமாட்டேன்!"

ஒட்டுக் கேட்பவர்கள் நல்லது எதையும் கேட்பதில்லை என்பார்கள். நந்தினியும் அந்த நிலையில் தான் இருந்தாள். கணவன் வந்து வெகு நேரமாகியும் இன்னும் மேலே வரவில்லையே என கீழே வர எத்தனிக்க மாமியாரின் அறையில் கணவன் கடைசியாக பேசியதை கேட்க நேர்ந்தது.

'இவன் மாறவே மாட்டானா? எல்லாம் கௌரவத்திற்காகவும், அம்மாவிற்காகவும் தானா?' அதிர்ச்சியில் அங்கிருந்து போக வேண்டும் என்பது கூட தோன்றாமல் அப்படியே வேரோடி நின்றிருக்க, வெளியே வந்த விஜயும் திகைத்துத் தான் போனான்.

விஜயின் திகைப்புக்குக் காரணம் கள்ளம் கபடம் இல்லா பிள்ளை மனம் கொண்டவள்... அதை உடைக்கும் வண்ணம் ஒட்டுக் கேட்கும் தவறை செய்துவிட்டாள் என்பதாலா? அன்றி இதுவரை கண்டிறாத வெறுப்பை அவள் கண்களில் கண்டதாலா?

# அத்தியாயம் 19

**தி**கைப்பில் இருந்து மீண்டவன், அவள் கரம் பற்றி தங்கள் அறைக்கு அழைத்துச் சென்று,

"இது என்ன தரக் குறைவான பழக்கம் நந்தினி?" நந்தினியிடம் இருந்து இப்படி ஒரு செயலை அவன் எதிர்பார்க்கவில்லை என்பதால் கோபம் கூடுதலாகவே இருந்தது.

"யார் யாரைச் சொல்வது? தரத்தை பற்றி பேசும் தகுதியாவது உங்களுக்கு இருக்கிறதா விஜய்?" ஏளனப் பார்வையுடன், ஆழ்ந்த குரலில் வினவியவளின் தாடை பற்றி,

"என்னிடம் என்ன தரக் குறைவு கண்டாய்? உன்னை போல் யார் பேசுவதையும் நான் ஒட்டுக் கேட்கவில்லை!"

"ஒட்டுக்கேட்க வேண்டுமென்று வரவில்லை! எதார்த்தமாக காதில் விழுந்தது தான்! அதுவும் நல்லதற்குத் தான்! உங்களைப் பற்றி முழுவதுமாக தெரிந்து கொள்ள உதவியாக இருந்தது."

"ஓ! என்னை பற்றி என்ன தெரியும் உனக்கு?"

"எல்லாம் தெரியும்! நீங்கள் வேஷதாரி... ஏமாற்றுக்காரன்... மனைவியையும் போகப் பொருளாக நினைக்கும்..." அதற்கு மேல் பேசமுடியாமல் அவனது அழுத்தம் கூட... எங்கே தாடை எலும்பு நொறுங்கி விடுமோ என பயந்து, அவன் கரம் பற்றி

விலக்க முற்பட... தன் தவறு புரிய சட்டென விலக்கிக் கொண்டான்.

"சபாஷ்! உன்னை எதற்காக மணமுடித்தேனோ அதைத் தவிர அனைத்தையும் உனக்காக செய்து கொண்டிருக்கிறேன் அல்லவா? அதனால் தான் இந்த திமிர் பேச்சு... தவறு செய்தது நான் தான்.

உன்னோடு இணக்கமாக வாழ வேண்டும் என நினைத்தது தான் நான் செய்த முதல் தவறு... அதற்காக என் வீம்பு, வைராக்கியம் அனைத்தையும் தூக்கிப்போட்டு விட்டு இறங்கி வந்தேன் பார்... இது என் தவறின் உச்சம்.

இந்தக் கணம் உன்னை தண்டனையில் இருந்து விடுவிக்கிறேன் நந்தினி. இனி முடிவெடுக்கும் அதிகாரம் உன் கையில். உன் விருப்பம் போல் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்." கோபம் கனன்றது அவனிடம்.

"தண்டனையில் இருந்து விடுவிக்கிறானா? அப்போ பிரிந்து போகச் சொல்கிறானா? சரி தான்! அவனிடம் எந்த மாற்றமும் இல்லை. நான் தான் காதல் வயப்பட்டு தவிக்கிறேன்!" கண்ணீர் கன்னம் தொட, சட்டென அதை துடைத்துக் கொண்டவள்,

இவனைப் பற்றிய உண்மை தெரிந்ததும் இனிமேல் நடிக்க முடியாதென்பதால் விரட்டிவிடப் பார்க்கிறான்... எனத் தவறாக கிரகித்துக் கொண்டு உளறி தொலைத்தாள்.

"நான் என் அம்மா வீட்டிற்கு போக வேண்டும்!" உறுதியாகச் சொல்லிவிட,

'எவ்வளவு துணிவிருந்தால் என்னைவிட்டு போவேன் என்று சொல்வாய்? என வலிக்க கன்னம் கிள்ள எத்தனித்த கரத்தை கட்டுக்குள் கொண்டுவந்து,

"நல்லது! போ... போய்விடு! எங்கே கோபத்தில் உன்னிடம் மிருகத்தனமாக நடந்து கொண்டுவிடுவேனோ? என எனக்கு பயமாக இருக்கிறது. நீ விலகி போவது எனக்கு இழுக்கு தான்! அதை விட பெரிய அவமானம் விஜயேந்திரனின் மனைவி அர்த்தராத்திரியில் அவனை விட்டு போய்விட்டாள் என்பது. எதை எனக்கு கொடுக்க வேண்டுமென நினைக்கிறாயோ, தாராளமாகச் செய்!"

செய்யக் கூடாத தவறையும் செய்துவிட்டு மன்னிப்புக் கேட்பதை விடுத்து பெற்றோர் வீட்டிற்குப் போகிறேன் என்கிறாள் என்ன ஒரு திமிர்? போகட்டும். நாலு நாள் பிரிந்திருந்தால் தான் தனித்து இருக்க முடியாது என்பது புரியும். (யாருக்கு?)

ஒருவருக்கொருவர் முதுகு காட்டி படுத்துக் கொண்டனர்.

என்னவெல்லாம் சொல்லிவிட்டாய் நந்தினி? அன்பிற்கு ஆயிரம் பரிணாமங்கள் உண்டு என்பதை அறியாதவளாய் இருந்துகொண்டு என்னை வேஷதாரி என்கிறாய்...

உன்னையெல்லாம் காதலிப்பதாகச் சொல்லி கொஞ்சி குலாவிவிட்டு கழட்டிவிட்டுருக்க வேண்டும்... இந்நேரத்திற்கு பைத்தியமாகி இருப்பாய்... என் ஆண்மையின் முழு வீரியம் தாங்கமாட்டாய் என பார்த்துப் பார்த்து பூவைப்போல் கையாளும் என்னை... என்னவெல்லாம் சொல்லிவிட்டாய்.

இன்னும் உன்னை விலக்கி வைக்க முடியாமல் ஏதோ ஒன்று உன்னோடு என்னை இழுத்து கட்டுகிறது... அது என்னவென்று தான் புரியவில்லை... விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையில் நிறுத்தி இம்சிக்கிறாய் நந்தினி. மனம் ஊமையாய் உருக தலையணையில் முகம் புதைத்துக் கொண்டான். பாவம் தூங்கத்தான் முடியவில்லை இருவராலும்...

காலையில் கிளம்பிவிட்டாள். மகனையும் மருமகளையும் கணிக்க முடியாமல் ராணியம்மா குழம்பித்தான் போனார். (வொய் பிளட்... சேம் பிளட்! ராணிம்மா... இவங்க ரெண்டு போரையும் மூணு நாளைக்கு ஒரே ரூம்ல பூட்டி வச்சுட்டா என்ன... ஆளுக்கொரு பக்கம் பிச்சிகிட்டு கிளம்புதுங்க பாருங்க!)

மாமியார் வீட்டில் அவளை இறக்கிவிட, பள்ளிக்கு கிளம்பிக் கொண்டிருந்த பெற்றோர் மாப்பிள்ளையை வீட்டிற்குள் அழைக்க... இவளே முந்திக்கொண்டு பதில் சொல்லிவிட்டாள்...

"விஜய்க்கு அவசர மீட்டிங் இருக்குப்பா... 'போ நீ வர வேண்டாம்'

கீழே இறங்க எத்தனித்தவன் முறைப்புடன் சென்றுவிட்டான். 'நீயாக அழைக்கும் வரை வரமாட்டேன் போ ' ( என்ன நடக்குது இங்க?!)

"நந்தும்மா என்னடா காலங்காலையில் வந்திருக்க... நான் லீவ் போடட்டுமா?" ஏதேனும் விசேஷமாக இருக்குமோ? ஆர்வமும் குறுகுறுப்புமாக மகளிடம் வினவினார் வாணி.

"ஷப்பா! முடியல... நானே ராணியம்மாவை சமாளிச்சு கொஞ்ச நாள் இங்கிருக்கலாம்னு வந்தா ஆரம்பிச்சுட்டியா? ரொம்ப நாளைக்குப் பிறகு இன்னைக்கு விஜய் ஃபாரின் கிளம்பறார். அவரே வந்து கூட்டி போறவரை இங்க தான் இருக்கப் போறேன்...

ஆதிக்கும் பிரபாக்கும் எக்ஸாம் முடியப் போகுது. சோ இனி சந்தோசமா இங்கேயே பொழுதைப் போக்கப் போறேன்... டீச்சரம்மா நீங்க கிளம்புங்க. நான் பார்த்துப்பேன்." மகளின் தெளிவான பேச்சில் அவர்களுக்கு சந்தேகமே வரவில்லை.

"மதியத்துக்கு சாப்பாடு? முன்னமே ஒரு போன் பண்ணிருக்கக் கூடாதா நந்து?"

"அப்பா... நான் என்ன சின்ன புள்ளையா? பிரபா வீட்டில் வள்ளி ஆன்ட்டி எப்போதுமே நிறைய தான் சமைப்பாங்க... அவங்க தான் மதியமே வந்துடுவாங்கல்ல... அங்க போய் சாப்பிட்டுக்கிறேன்.

இல்ல காலனியில் யார்கிட்டயாவது பிரியாணி வாங்கிட்டு வரச்சொல்லி சாப்பிட்டுக்கிறேன். இதெல்லாம் ஒரு பிரச்சனையா... கிளம்புங்க ரெண்டுபேரும்." மகளின் மிரட்டலுக்கு சிரித்தபடியே தலையாட்டிவிட்டு கிளம்பிச் சென்றனர் வாணியும் கண்ணனும்.

'எவ்வளவு பெரிய பிரச்சனையையே அசால்ட்டா ஹாண்டில் பண்றேன்... நந்துவை பத்தி தெரியாமல் சும்மா நை நைன்னு...'

யாருமில்லா தனிமை நியாயமாக தெளிவைக் கொடுக்கும். இங்கு நந்தினிக்கும் பெரும் தெளிவு கிடைத்தது. கணவனைக் கண்ட நாள் முதலாய் நடந்தவைகளையெல்லாம் ஒன்றுகூட்டிப் பார்க்க...

அரச குடும்பத்தின் கௌரவமும், மரியாதையும் தான் முக்கியம் என்பது போல் தான் அவனது செயல்கள் இருந்ததாகவே தோன்றியது. தன் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளத் தயங்காமல் அன்பானவன் போல் நடிப்பான்... இவனது அடிமையாக இருந்தால் கொண்டாடுவான்.

நிச்சயம் நம் பிரிவு இவனை வருந்தச்செய்யாது... என் வாழ்வை வீணாக்கியவனை சும்மாவிடுவதா? என்ன செய்யலாம்? இருக்கும் கொஞ்சநஞ்ச மூளையையும் உபயோகப்படுத்தி வித விதமான திட்டங்கள் போட்டுப் பார்த்தாள்.

எதுவும் திருப்திகரமாக இல்லை. சரிவிடு... அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என பிரபா வீட்டில்போய் சாப்பிட்டு வள்ளி ஆன்டியுடன் கதையளந்துவிட்டு, நண்பர்கள் வந்ததும் அவர்களுடன் கொட்டமடித்துவிட்டு குதூகலமாகப் பொழுதைக் கழித்தாள். முதல் நாள் உற்சாகமாகத் தான் இருந்தது.

அடுத்த நாள் காலையில் இந்நேரம் எழுந்திருப்பான்... இப்போ யார் சாப்பாடு போடுவார்கள்? மனம் தன் மன்னவனை நோக்கி ஓட, இவள் அதன் பின்னே ஓடிச் சென்று இழுத்துப் பிடிக்க வேண்டியதிருந்தது.

'ம்ஹூம் இவனை விட்டு விலகி வந்தால் அவனுக்கு ரொம்பவும் கொண்டாட்டமாக்கிப் போகும் வேறு ஒரு இளவரசியை மணந்து கொண்டு உல்லாசமாக இருப்பான். நோ... நந்து பழி தீர்த்தே ஆகவேண்டும். கூடயிருந்தே குழிபறிப்போம்.' (அட மங்குனி அமைச்சரே! போ... மோதிப்பார்)

இரண்டு நாட்கள் விட்டுப் பிடிப்போம்... அவனாக வருகிறானா என பார்க்கலாம். கோபமாக காத்திருந்தாள் நந்தினி.

இதோ மூன்று நாட்கள் கடந்துவிட்டது. வெளிநாட்டில் இருக்கும் போது பிரிவு ஒன்றும் பெரிதாகத் தெரியவில்லை. உள்ளூரில் இருந்து கொண்டு மனைவியை பிரிந்திருப்பது கோபத்தையும், எரிச்சலையும் ஏற்படுத்த, அலுவலகத்தில் அனைவரையும் கதறடித்தான் விஜயேந்திரன்.

அவனது கடுகடுப்பான முகம் கண்டு அன்னையே பேச பயந்து போனார் என்று தான் சொல்ல வேண்டும். (எங்கேயோ போற மாரியாத்தா... என் மேல வந்து ஏறாத்தா! )

இரவெல்லாம் தூக்கம் வராமல் மருகினான். ஏன் அனைவரிடமும் இவ்வளவு கடுமையாக நடந்துகொள்கிறேன்? அந்த அளவிற்கா அவள் பிரிவு என்னை பாதிக்கிறது? ஏன்?... ஏன்? எனக்கே தெரியாமல் நான் அவளை விரும்பத் தொடங்கி விட்டேனா? குழம்பிப் போனான்.

திருமணத்திற்குப் பிறகு தான் அவள் கைகளில் சாப்பிடுகிறான். ஏனோ அவளில்லாது உணவு உள்ளே இறங்க மாட்டேன் என சதி செய்கிறது. வீம்புக்கு கூட சிரமப்பட்டு சாப்பிட முயற்சித்து விட்டான்... தன் மீதே கோபம் வந்தது தான் மிச்சம்.

இவள் பிரிவு என்னை ஏன் இவ்வளவு பாதிக்கிறது? அடிக்கடி அனுபவித்த பிரிவு தானே! இப்பொழுது மட்டும் ஏன் இந்த சகிக்க முடியாத வேதனை? குழம்பித் தவித்தவனுக்கு விடை கிடைத்தது.

இத்தனை நாளும் நாம் தான் அவளை விட்டு பிரிந்து சென்றிருக்கிறோம்... தன்னை விட்டு ஒரு கணமும் பிரியமாட்டாள் என நினைத்திருந்த இறுமாப்பு பொடிப்

பொடியாகிப் போனது தான் காரணம் என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிந்து போனது.

"போய்விட்டாயா நந்தினி...? என்னைவிட்டு உன்னால் தனித்து வாழ முடியுமா நந்தினி? என்னால் முடியவில்லையே.... வந்து விடு நந்தினி. பைத்தியமாகிவிடுவேனோ என பயமாக இருக்கிறது நந்தினி... வந்துவிடு நந்தினி! வந்துவிடு!

நான் உன்னை விரும்புகிறேன் நந்தினி! நீ இல்லாத வாழ்வை கற்பனை கூட பண்ணிப் பார்க்க முடியாது நந்தினி. நீ வேண்டும் நந்தினி. நீ என் உயிர் நந்தினி... வந்துவிடு நந்தினி... உனக்கு என் காதல் புரியவில்லையா? உனக்காகத் தானே எல்லாம் செய்தேன். என்னையே மாற்றிக் கொண்டேன்... வந்துவிடு சிட்டு... போதும் உன் விளையாட்டு.

காலையில் வந்துவிடுவாய் தானே? குட் மார்னிங் விஜய் என்று என் கன்னம் கிள்ளுவாய் தானே? நீ வரவில்லை என்றால் நானே வந்துவிடுவேன் நந்தினி. நீ எனக்கு வேண்டும் நந்தினி... " தன் சுயம் தொலைத்து தன்னை முழுவதும் ஆக்கிரமித்திருந்தவளிடம், மனதோடு மன்றாடினான்.

மனைவி இல்லாமல் வாழ்வது சாத்தியமில்லை என ஐயம் திரிபுர அறிந்து கொண்டவனுக்கு, தான் அவளிடம் காதல் வயப்பட்டுவிட்டோம் என்பதும் புரிய...

கவுரவம், தன்மானம், அரசன் என்னும் மிடுக்கு எல்லாவற்றையும் தூக்கிப் போடு விட்டு காலையில் மனைவியை வீட்டிற்கு அழைத்து வந்துவிட வேண்டும் என முடிவெடுத்தவனாய் அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பினான். (பஞ்சாயத்து முடிஞ்சு போச்சு!) வழக்கம் போல் அன்னையை சந்திக்கச் செல்ல,

"இங்கு என்ன தான் நடக்கிறது விஜயேந்திரா? தன் போக்கில் வருவதும் போவதும் இதென்ன சத்திரமா? மாமியார் என்று ஒருத்தி இருக்கிறேன் என்ற நினைப்பே இல்லாமல் என்னிடம் ஒருவார்த்தை கூட சொல்லாமல் கிளம்பினாள் உன் மனைவி.

இப்பொழுது வந்த பின்னும் எதுவும் சொல்லாமல் உங்கள் அறையில் முடங்கிக் கொண்டாள். இது எங்கு போய் முடியப் போகிறதோ? அரச குடும்பத்து மருமகளுக்கு இந்த விட்டேற்றியான குணம் இருக்கக் கூடாது." அன்னையின் மொழியெல்லாம் அவன் காதில் விழவே இல்லை.

"நந்தினி வந்துவிட்டாளா? என் நந்தினி எனக்காக வந்துவிட்டாளா?" முகமெங்கும் புன்னகை விரவ,

"நான் பார்த்துக் கொள்கிறேன் அம்மா!" சிரித்தபடியே வெளியேறும் மகனைப் பார்த்து திகைத்துப் போனார் சகுந்தலா தேவி.

நந்தினி வந்துவிட்டாள் தான்! இந்த முறை காதல் மனைவியாக அல்ல... தன் வாழ்வை கெடுத்துவிட்டு இவன் மட்டும் எந்தவிதக் கவலையையோ, குற்ற உணர்ச்சியோ இல்லாமல் தனித்திருந்து இன்பம் காண்பதா? அனுமதிக்க முடியாது! உடனிருந்தே உன்னை கதறடிக்கிறேன் வா... என்னும் திட்டத்தோடு பூ புயலாகி வந்திருக்கிறது... (என்னது...மறுபடியும் முதல்ல இருந்தா ...!?)

மெத்தையில் சயனித்திருக்கும் மனைவியை கண்டவன், அவளருகே அமர்ந்து,

"நந்தினி! வந்துவிட்டாயா?" தலை கோத, சட்டென எழுந்து அமர்ந்தவள் சிரிப்பின்றி அவன் முகம் பார்க்க... சிறு நெருடல் தோன்றினாலும்,

"நன்றி நந்தினி. இந்த மூன்று நாட்களாக நான் நானாகவே இல்லை நந்தினி. நாளை நானே வரவேண்டும் என நினைத்தேன் அதற்கு கூட காத்திராமல் வந்துவிட்டாயே... நந்தினி... மை லிட்டில் ஃ பேரி!" அமர்ந்திருந்தவளை வாரி அணைத்துக் கொண்டான்.

"நிஜமாத் தான் சொல்றானா... பேசாமல் அங்கேயே இருந்திருக்கலாம் இவனாக வந்து கூப்பிடறனான்னு பார்த்திருக்கலாம்" (இனிமேல் மைண்ட் வாய்ஸ்-ல் பேசின... மண்டையிலேயே போடுவேன்!!!)

இப்பொழுது நந்தினியை தூக்கி மடிமீது அமர்த்திக் கொண்டவன், கன்னத்தோடு கன்னம் உரசி,

"நந்தினி இந்த ராஜாளிக்கு தேன்சிட்டிடம் கொஞ்சம் முரட்டுத் தனமாக காதல் சொல்ல வேண்டும் என்பது வெகு நாளைய ஆசை. என் சிட்டு மிரண்டு மூர்ச்சையாகிவிடுமோ என்னும் பயத்தில் செய்யத் துணிந்ததில்லை. ஆனால் இப்பொழுது எனக்கு அது மிகவும் அவசியத் தேவையாக இருக்கிறது நந்தினி... கொஞ்சம் பொறுத்துக் கொள்."

'இவன் ஒழுங்கா பேசினாவே எனக்கு புரிய நேரமாகும் இதுல ராஜாளி தேன்சிட்டுன்னு... ஆரம்பிச்சுட்டானே' சற்றும் எதிர்பாராத இறுகிய அணைப்பு. எலும்புகள் உடைந்து மூச்சு நின்றுவிடும் போல்...

"அம்மா!" அலறியவள் சுதாரிக்க சற்று நேரம் பிடித்தது. அவனது பிடி தளரவேயில்லை.

"விஜய்!" திணறலாக அவனை தள்ள முயற்சிக்க,

"இன்னும் கொஞ்ச நேரம் நந்தினி."

"நான் செத்துடுவேன் விஜய்!" பட்டென விலக்கியவன்,

"நான் தான் சொன்னேனே நந்தினி... பயந்துவிட்டாயா? அப்படியெல்லாம் ஒன்றும் ஆகாது. எனக்கு உன்னை எவ்வளவு தேடியது தெரியுமா? விஜயேந்திரனையே உன்மத்தம் கொள்ளச் செய்துவிட்டது என் தேன்சிட்டு."

(அவ்வ்... அவள் பிளான் புரியாம நீயா வந்து வலையில சிக்குறியே... காதல் வந்தா எல்லாரும் மூளையை கழட்டி முச்சந்தியில் வீசிருவாங்களோ!)

"இது காதல் பித்துன்னா சந்தோஷப்படலாம்... ஆனால் காம பித்தாக அல்லவா இருக்கிறது. என் முடிவில் மாற்றம் இல்லை விஜய்." (தைரியம் இருந்தா வாயைத் திறந்து சொல்லு...)

விஜயேந்திரனின் விதி அழகாக விளையாட, நந்தினிக்கு காதல்... காமமாகத் தெரிந்தது...

மடியில் இருப்பவளின் செழுமைகளில் முகம் புதைத்துக் கொண்டான். அவனது சுவாசக் காற்றில் தேகம் சிலிர்க்க... கூச்சத்திலும் அனிச்சை செயலாய் அவளது விரல்கள் அவன் கேசத்தில் விளையாடின. அதில் அவள் காதலை கண்டுகொண்டவனுக்கு மனம் நிறைந்து போனது. காதல் உணர்வு விழித்துக் கொண்டதை அவள் உணரவே இல்லை.

"நந்தினி இந்த குளுமையும், இதமும் இல்லாமல் தான் எத்தனை கஷ்டம்? என்னை மயக்கி வைத்திருக்கிறாய் சிட்டு... ராஜா விஜயேந்திர பூபதி இந்த குட்டிப்பெண் நந்தினியிடம் மனதை பறிகொடுத்துவிட்டு இப்போது திருதிருத்துக் கொண்டிருக்கிறார்.

நானும் நல்லவன், அன்பானவன்... பார்! பார்... என் மனதைப் பார்... எனக் காட்டப் போக... என் குட்டி தேவதை

கண்ணிமைக்கும் நேரத்தில் களவாடிவிட்டது. இருக்கும் இடம் தெரியும்... எடுக்கத் தான் மனதில்லை.

நீ என்னைப் பிரிந்தால் பைத்தியமாகிவிடுவேன் என்பதை இந்த மூன்று நாட்களில் தெரிந்து கொண்டேன் நந்தினி. நான் உன்னை விரும்புகிறேன் நந்தினி. உனக்கு சந்தோசம் தானே?"

'எனக்கு எந்த சந்தோஷமும் இல்லை. இப்படி நடிக்கிறதுக்கு நீ முன்னைப் போலவே இருந்திருக்கலாம்... மனைவி பிரிந்து போனால் உன் உலகம் உன்னை கேலி செய்யுமே... நாலு பேர் உன்னையும் உன் குடும்ப கௌரவத்தையும் வைத்து செஞ்சுருவாங்கன்னு தானே?

எப்படி...எப்படி? நான் இல்லன்னா நீ பைத்தியமாயிடுவியா? ஏன் இனி இவளை பைத்தியமாக்க முடியாதுன்னு தோணிடுச்சோ... சூப்பர் சீன்!! ராஜா விஜயேந்திர பூபதி பெரிய நடிகன் என்பது எனக்கு தெரிந்த விஷயம் தான்! ஒரு முறைக்கு இருமுறை பொய்த்துப்போனாயே அப்பொழுதே தெரியும். இன்று உலக மகா நடிகனாகிவிட்டாய் சபாஷ்' (மறுபடியும் மைண்ட் வாய்ஸ்)

"ராஜா விஜயேந்திர பூபதி தண்டனை கைதியிடம் மயங்கி நிற்கிறார். அவளது தீண்டலுக்கும்... தேகத்துக்கும் ஏங்குகிறார் பாவம் தான்." புருவம் உயர்த்தி, உதடு சுளித்து... கண்களில்

கர்வம் மின்ன சொல்லிவிட்டாள். விஜயேந்திரனை காயப்படுத்தி கதறடிக்கும் திட்டத்தைத் தொடங்கிவிட்டாள் நந்தினி.

ஒரு நொடி அவளுக்கு கொடுத்த வலியை உணர்ந்த போதும்,

"சந்தர்ப்பம் கிடைக்கும் போது கட்டாயம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்... இல்லையா நந்தினி? இந்த சிட்டிடம் சிறைபட்டிருப்பதில் மகிழ்வு தான்."

எந்த வருத்தத்தையும் காட்டாமல் அவள் மீது படர்ந்து தன் தேவையை நிறைவேற்றிக் கொண்டவனுக்கு இசைந்து கொடுத்தவள் நெஞ்சத்தில் வேறு சிந்தனை அலைமோதிக் கொண்டிருந்தது.

'என்னைப் போல் இவன் வருந்தவில்லை. எப்படி எதார்த்தமாக எடுத்துக் கொள்ள முடிந்தது? இவனும் சிரித்துக் கொண்டு தானே சொன்னான்... எனக்கு அசிங்கமாகவும் அவமானமாகவும் இருந்ததே... இவனால் இதற்கு பிறகும் எப்படி தொடர முடிகிறது?"

தன் கையணைப்பில் மனைவியை இறுக்கிக் கொண்டு சயனித்திருந்த போது அவனும் இதைப் பற்றி தான் யோசித்துக் கொண்டிருந்தான்.

'ஏன் நந்தினி அப்படிச் சொன்னாய்? எனக்கு வலிக்க வேண்டும் என்பதற்காக தானே? வலித்தது... நான் விரும்பும்

போது உன் குத்தல் கூடுதல் வலியை கொடுக்கத் தான் செய்தது. அதை உன்னிடம் காட்டினால் நானே உன்னை ஜெயிக்க வைத்தது போல் ஆகிவிடாதா?

இது இங்கு பால பாடம் நந்தினி... நம் வலியும், வேதனையும் அடுத்தவருக்கு இன்பத்தை கொடுக்குமென்றால் அதை வெளியே காட்டாது சகித்துக் கொள்! நீ ஜெய்த்துவிடுவாய். உன்னால் என்னை தோற்கடிக்க முடியாது நந்தினி... நான் விஜயேந்திர பூபதி."(சிங்கம்டா!!)

"விஜய்!"

"நீ இன்னும் தூங்கவில்லையா நந்தினி?"

"நான் ஏன் வந்தேன்னு கேக்கமாட்டீங்களா?"

"ஏன் கேட்க வேண்டும் நந்தினி? கணவனோடு சண்டையிட்டு பிறந்தவீடு போவதும்... சமாதானமாகி புகுந்த வீடு வருவதும் பெண்களின் உரிமையல்லவா?" கன்னம் வருட, (ரைட்டு... கூடிய சீக்கிரமே தெரிஞ்சுக்குவீங்க ராஜா விஜயேந்திர பூபதி அவர்களே....)

வெடுக்கென திரும்பி படுத்துக்கொள்ள அவளது புறக்கணிப்பு மனதை வருத்த,

"ஏன் இந்த கோபம் நந்தினி?"

"இந்தக் கேள்வியை உங்க அக்கா வீட்லயே கேட்டிருக்கணும் விஜய்?" (காதல் ன்னா என்னன்னு கேட்ட நந்தினியா இது? இந்த மிரட்டு மிரட்டுறா.. அதுவும் ராஜாவை!)

"அவசியம் இல்லை நந்தினி. சந்தேகம் தோன்றினால் தான் கேட்டு தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும்."

'ஓ! அவ்வளவுக்கு அந்த ரேணுகா மீது நம்பிக்கையோ? அதுசரி, எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தானே?!' அவள் தெளியா முகம் கண்டவன்,

"நந்தினி... என் நந்தினி..." அவள் முகம் பற்றி தன் வெற்று மார்பில் இறுக்கிக் கொண்டு,

"நான் என்ன சொல்கிறேன் என்பது கூட புரியாத குழந்தை நந்தினி நீ. உன்னிடம் பொய் புரட்டு கிடையாது. கள்ளம் கபடம் இல்லா பிள்ளை மனம் கொண்டவள். நீ தவறு செய்ய வாய்ப்பேயில்லை என்னும் போது என்ன நடந்ததென ஏன் கேட்க வேண்டும் நந்தினி?

அது மேலும் உன்னை ரணப்படுத்தாதா? எனக்கு எதுவும் தெரிய வேண்டிய அவசியமே இல்லை நந்தினி. விட்டுவிடு. கண்டதையும் நினைத்து குழம்பாதே. இன்னும் ஒன்று கூட சொல்ல வேண்டும்.... சிட்டு!

அன்று அரைகுறையாய் கேட்டதை வைத்துக் கொண்டு எதையும் முடிவு செய்யாதே. இந்தக் கணம்... நான் உன்னை உண்மையாகவே விரும்புகிறேன் நந்தினி.

அன்று... உன் மீது அடங்காத கோபம் இருந்த போது கூட, பழிவாங்க எத்தனையோ வழிகள் இருந்தும், ஏன் திருமணத்தை தெரிவு செய்தேன் என்பதற்கு கூட உன் மீது ஒரு விதமான ஈர்ப்பு இருந்தது தான் காரணம் எனத் தோன்றுகிறது. புரிந்து கொள் நந்தினி..." அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

காதல் நிராகரிக்கப்படுவதால் உண்டாகும் வேதனையை முற்றிலுமாக உணர்ந்தான் விஜயேந்திரன். அவனது வலியை அவன் கண்கள் காட்டி கொடுத்தன.

‘என்ன நடந்ததெனக் கேட்கவில்லை என்று தானே கோபமே? இவன் புதுக்கதை சொல்கிறானே... என்னை குழப்பிவிட்டு வேடிக்கை பார்ப்பதே இவன் வேலை. போ நம்பமாட்டேன்.’

கொஞ்ச நேரத்திற்கு மேல் அமைதியாக படுக்க முடியவில்லை. இவன் நிஜமாகவே விரும்புறானோ? இல்லை நடிப்பா? இப்படியெல்லாம் நடிக்க முடியுமா? இவனால் எதுவும் முடியும்.

மனம் அவனுக்கு எதிராக யோசித்தாலும் அவள் கரம் அவனைத் தழுவிக் கொண்டது. இவன் இதய துடிப்பு நம் பெயர்

சொல்கிறதா? என அறிந்து கொள்ள வேண்டும் எனத் தோன்ற, அவன் மார்பில் ஒண்டிக் கொண்டாள். அவள் நிலை அவனுக்குப் புரிந்தது.

"நந்தினி, உன் நம்பிக்கையைப் பெற, நான் காத்திருக்க வேண்டும். என்னை அதிகம் தவிக்க விடமாட்டாய் என்னும் சிறு நம்பிக்கை இருக்கத் தான் செய்கிறது. ஐ லவ் யூ மை லிட்டில் ஃபேரி!" இதமாக அனைத்துக் கொண்டவன், அவள் தலையில் கன்னம் வைத்து உறங்கிப் போனான்.

காலையில் எழுந்தவளுக்கு சற்று நேரத்திற்கு ஒன்றும் புரியவில்லை. எப்பொழுதும் ஏழுமணிக்கெல்லாம் 'நந்தினி... நந்தினி' என எழுப்பிவிடும் இம்சை அரசனை காணவில்லை.

மெல்ல எழுந்து மணி பார்க்க... பத்து என்றது. வெகு தாமதமாகிவிட்டதே எனப் பதறி எழுந்தவள் மீண்டும் கட்டிலில் சாய்ந்து அமர்ந்துவிட்டாள்.

‘எழுப்பாமலேயே சென்றிருக்கிறான் ஏன்? இவனது ஒவ்வொரு செயலுக்கும் இப்படியே யோசித்துக் கொண்டிருந்தால் வாழ்நாள் முழுவதும் அதற்கே போய்விடும். நல்லது... இனி இப்படி பதறி எழுத்து அவன் பின்னோடு வால்பிடித்துக் கொண்டெல்லாம் அலையப் போவதில்லை.

முதல் வேலையாக ராணியம்மாவிடம் போய் எல்லாத்தையும் சொல்லி விடவேண்டும். இனி நான்

நானாகத்தான் இருக்கப் போறேன்... யாருக்காகவும் எதையும் மாத்திக்க முடியாது.

திட்டமிட்டபடியே சாவதானமாக தன் வேலைகளை முடித்துக் கொண்டு வெளியே வர, வரவேற்பறையில் அமர்ந்து அன்னநடை பயின்று வரும் மருமகளையே வெறித்துக் கொண்டிருந்தார் சகுந்தலா தேவி.

"நான் உங்ககிட்ட பேசணும்." அவர் விழி பார்த்து வினவ, அவரும் இதை தான் எதிர்பாத்துக் கொண்டிருந்தார் என்பதால்,

"முதலில் உன் உணவை முடித்துக் கொண்டு வா பிறகு பேசலாம்..."

"இல்ல முதல்ல பேசிடறேன்."

"நான் எங்கும் ஓடிவிடமாட்டேன். நீ உணவு எடுத்துக் கொண்ட பின்னரே பேசலாம்." சின்ன முறைப்பும் , சிறுபிள்ளை தனமான உதட்டு சுளிப்புமாய் சென்றவளை பார்த்தவருக்கு அவளிடம் கோபப்பட முடியவில்லை.

தன் மக்களை பசியில் வாடவிடுபவன் அரசனே இல்லை என்னும் உணர்வு ரத்தத்தில் ஊறியிருந்ததால் மருமகள் பசியோடு இருப்பது பிடிக்காமல் உணவருந்திய பின்னரே மற்றது எனக் கண்டிப்பாக சொல்லிவிட்டார்.

இவளும் தான் அதற்கேற்றது போல் நாள் முழுவதும் கொலை பட்டினி கிடக்கிறாளே...

மாமியாரின் முன் இப்படியெல்லாம் அமர்ந்து இதுவரை பேசியதேயில்லை என்பதாலும், பேசப் போகும் விஷயம் ரொம்பவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதாலும் கொஞ்சம் பயம் உண்டாகத்தான் செய்தது. விஜயேந்திரனை நினைத்ததும் அனைத்தும் பஞ்சாய் பறக்க,

"நான் நேராவே விஷயத்தை சொல்லிடுறேன். உங்க பையன் என்னை விரும்பியெல்லாம் கல்யாணம் பண்ணிக்கல. எனக்கும்... அவருக்கும் ஒரு பிரச்சனை. அதற்குப் பழி தீர்த்துக் கொள்ளத் தான் என் வாழ்க்கையை கையில் எடுத்திருக்கார்.

நானும் இத்தனை மாசமா இப்போ மாறிடும் , அப்போ மாறிடும்னு காத்துக்கிட்டிருந்து, இந்த குடுபத்துக்கு நல்ல மருமகளாவும் உங்க மகன் விரும்பும் மனைவியாகவும் இருக்கு எவ்வளவோ செஞ்சுருக்கேன்... அதற்கு எந்தப் பலனும் கிடையாது. நிலைமை மோசமானது தான் மிச்சம்.

இனி நான் எதுக்குக்காகவும் மெனக்கடப் போவதில்லை. என்னை இந்த வீட்டின் மருமகளாக ஏற்றுக் கொண்டதற்காக தான் இதெல்லாம் சொல்லிட்டிருக்கேன். இனி, அதையெல்லாம் என்கிட்ட எதிர்பார்க்காதீங்க.

உங்க மகன் எப்போ என்னை மனைவியா அங்கீகரிக்கிறாரோ அப்போ பார்க்கலாம்... அதுவரை, நான்

என்போக்கில் தான் இருப்பேன்." (இதுவரை பயந்த பெண் என நினைத்திருந்தவள் என்னமாய் பேசுகிறாள்?)

"ஆகட்டும்! அப்படி என்ன தான் பிரச்சனை? அதையும் சொல்லிவிடு."

"மன்னிச்சுடுங்க! உங்க பையனே சொல்லாத போது நான் எப்படி சொல்றது?"

"என் மகன் எப்போது உன் கரம் பிடித்தானோ அன்றே நான் உன்னை மருமகளாக ஏற்றுக் கொண்டுவிட்டேன். இப்பொழுது பிடித்தமான மருமகளாகவும் மாறிவிட்டாய்.

உனக்கான மரியாதையை உன் கணவன் கொடுக்காத போது அவனுக்காகவோ, அவன் குடும்பத்திற்காகவோ நீ உன்னை அர்ப்பணிக்க வேண்டுயதில்லை. இங்கு பெண்களுக்கு முழு சுதந்திரம் உண்டு. நீ உன் விருப்பப்படியே இருக்கலாம்.

யாரும் யாருக்கும் அடிமையில்லை. நான் உன்னை வற்புறுத்தப் போவதில்லை. உன் மனநிலை எனக்குப் புரிகிறது. இனியாவது என்னை அத்தை என்று உரிமையோடு அழைக்கலாம் தானே?" ஆதுரமாய் கேட்க (சபாஷ் ! )

"சாரி அத்தை! இவ்வளவு உயர்ந்த பெண்மணியிடம் நாமும் தான் முகம் காட்டிவிட்டோமே வருத்தம் தோன்றத்தான் செய்தது. பட்டென அவரருகில் மண்டியிட்டு அவர் முகம் பார்க்க,

"இப்படி இருக்காதே நந்தினி. இதைத் தான் விஜயேந்திரன் விரும்புகிறான். மண்டியிடுவதை நிறுத்து. உனக்கும் சுயகௌரவமும், மரியாதையும் இருக்கிறது. அவன் கொடுத்து தான் ஆகவேண்டும்...

எங்கள் குலப் பெண்கள் இளகமாட்டார்கள். கணவனே ஆனாலும் ஆயிரம் சோதனை வைத்து தான் அவன் அன்பையும் காதலையும் உறுதி செய்வோம்.

அவன் அரச குடும்பத்து பெண்களை நிராகரித்ததற்கு இதுவும் கூட காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. முதலில் நீ உன்னை மாற்றிக்கொள். அவன் தானாகவே மாறிவிடுவான்."

ராணியம்மாவிடம் இருந்து இதுபோன்ற வார்த்தைகளை எதிர்பார்க்காததால் குழம்பிப்போனாள் நந்தினி. எனினும் மகனிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை தெளிவு படுத்தி, தான் ஒரு சிறந்த அரசி என்பதை நிரூபித்ததோடல்லாமல், அன்றிலிருந்து மகனை ஊன்றிக் கவனிக்கத் தொடங்கினார்.

சில தினங்களிலேயே அவனது காதலை அவரால் கண்டு கொள்ள முடிந்தது. இருந்தும் தன் காதலை மகன் மருமகளிடம் நிரூபிக்க வேண்டியது அவனது கடமை மட்டுமல்ல அவசியமான ஒன்று என்றும் நினைத்தார்.

மன்னவன் தன் காதலை நிரூபித்து மங்கையின் மனதை வெல்வானா?

# அத்தியாயம் 20

விஜயேந்திரனுக்கு நந்தினியிடம் காதலில்லாத போதும் மயக்கமும் கிறக்கமும் எப்போதுமே உண்டு. ஆனால் காதல் கணவனான பின்... என்று அவள் வார்த்தைகளால் தாக்கினாளோ அந்த கணம் வீம்பிற்காக தன் தோல்வியை ஒப்பமனமின்றி தொடர்ந்தானே தவிர அதன் பிறகு அவளை நாடவேயில்லை.

மனைவி தன் அருகில் இருந்தாலே போதும் என்ற நிலையில் இருந்ததால் அவளுக்கு பிடித்தமான கணவனாக இருக்க முயன்றானோ இல்லையோ பிடிக்காதவனாக இருக்கக் கூடாது என்பதில் அதிக கவனம் செலுத்தி தன் நடத்தைகளை மாற்றிக் கொண்டான்.

நந்தினியிடமும் நிறைய மாற்றங்களைக் கண்டான். முன்னைப் போல் அலங்கார பூஷிதையாக வளம் வருவதில்லை. நினைத்தால் கீழே இறங்கிச் செல்வாள்... இல்லையேல் தன் அறைக்குள்ளேயே முடங்கிவிடுவாள்.

அவளது உடைகள் அவள் விருப்பம் என்றது மட்டுமல்ல அவளது விருப்பம் மட்டுமே அங்கு பிரதானமாக இருந்தது. இந்த அலுச்சாட்டியங்களை ரசித்தானே ஒழிய கோபப்படவில்லை அவள் கணவன்.

அவனை காண்டாக்க நினைத்து, அன்று வேண்டுமென்றே அரைக்கால் மிடியும் அழகிய டாப்பும் அணிந்து காத்திருந்தாள். திருமணத்திற்கு முன் கூட இப்படியெல்லாம் அணிந்ததில்லை. மிடி முட்டியோடு நின்றுபோக வளவளப்பான கால்களில் தங்க கொலுசுகள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன.

அலுவலகத்தில் இருந்து வந்தவன் அவளைக் கண்டதும் ஒருநொடி திகைத்து விழிக்க, அதற்காகவே காத்திருந்தவள் போல்,

"எப்படி இருக்கிறது விஜய்?" மிடியை விரித்துப் பிடித்து கேட்க... (படுத்துகிறாய் நந்தினி! வேண்டுமென்றே என்னை பரிட்சித்துப் பார்க்கிறாய்...) சட்டென தன்னை நிலைப்படுத்திக் கொண்டவன்,

"நந்தினி தேவியார் எந்த உடை உடுத்தினாலும் அழகு தான்... உடுத்தா..." அவன் என்ன சொல்ல வருகிறான் என்பது புரிய,

"விஜய்" சிறு அதட்டலுடன் அவன் வாய் மூடி...

"கேக்குறதுக்கு மட்டும் பதில் சொல்லுங்க போதும்!" உதடு சுளித்து,

"இந்த டிரெஸ்ல உங்க சொந்தக்காரங்க பார்த்து யார் இந்த பொண்ணுன்னு கேட்டா... என்ன சொல்விங்க விஜய்? ராஜா விஜயேந்திர பூபதியின் மனைவி போல் தெரியாதே... அதான்

கேக்கிறேன்..." ஒன்றும் அறியாக் குழந்தை போல் முகத்தை வைத்துக் கொண்டு கேட்க,

"என் மனைவியின் தங்கை... அத்தானை வளைக்க திட்டமிட்டுக் கொண்டிருக்கிறாள்! என்று தான் சொல்ல வேண்டும்..." எப்படியென்பது போல் குறுஞ்சிரிப்புடன் ஒற்றை புருவத்தை ஏற்றி இறக்க... அவள் தான் காண்டாகிப் போனாள்.

"விஜய்!" என தலையணை கொண்டு அடிக்கத் தொடங்கிவிட்டாள். அட்டகாச சிரிப்புடன் அவளை ரசித்தவன்,

"போதும் நந்தினி. கை வலிக்கப் போகிறது..." என தடுத்து நிறுத்தி,

"உன் விருப்பம் போல் இருக்கலாம் நந்தினி. நீ என்ன செய்தாலும் எனக்கு பிடிக்கும் தேன்சிட்டே..." என நெற்றி முட்டி சிரித்தான். கதறடிக்கவே வந்தவள் கதிகலங்கிப் போனாள்.

தான் செய்வது... போக போக தன்னையே காண்டாக்க செய்வதறியாது... மறந்து போயிருந்த வேடிக்கை பார்க்கும் பழக்கத்தை இன்று கையில் எடுத்துக் கொண்டு தங்களது பால்கனியில் இருந்து நந்தவனத்தை பார்வையிட...

ஏதோ ஒன்று கால்களுக்குள் வருவது போல் தோன்றவும்... துள்ளி குதிக்க நாய் குட்டி ஒன்று அவளைச் சுற்ற,

"ஏய்! நோ... நோ... ஓடு... ஓடு" என செல்லமாக மிரட்டியபடி அவள் தான் அந்த அறையையே சுற்றி சுற்றி ஓடிக்

கொண்டிருந்தாள். வாயிலில் கைகளை கட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கும் கணவனைக் கண்டவள்,

"விஜய் இது என்னைத் தொரத்துது... ப்ளீஸ் போகச் சொல்லுங்க..." என அவன் பின் மறைந்துகொள்ள,

"சிட்டு... இதுவும் உன்னைப் போல குழந்தைதான். கடிக்காது... பேசாமல் ஓர் இடத்தில் நில்.." என்றவன் குனிந்து அதை தூக்கி அவளருகே கொண்டு போக,

"கடிக்காது தானே?" என்னும் பயத்துடனேயே மெல்ல தொட்டுப் பார்த்தாள். அது முனகிக் கொண்டு இவள் கரத்தை நக்கியதும் கொண்டாட்டமாக்கிப் போனது நந்தினிக்கு.

அதன் பிறகு கணவன் இருப்பதையே மறந்து அதனுடன் விளையாடியவள் ஓடி களைத்து அந்த நாய் குட்டியை மடியில் அமர்த்திக் கொண்டு கட்டிலில் மூச்சு வாங்க அமர்ந்த பிறகு தான் கணவன் இவ்வளவு நேரமும் தன்னை விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்தாள்.

சட்டென கோபம் எட்டிப் பார்க்க,

‘‘இப்போ எதுக்கு இந்த பரிசு விஜய்? இந்த நாய் குட்டி மாதிரி நானும் உங்க பின்னாடி சுத்தணும்னு தானே?" தன் வேதனையை விழிமூடி மறைத்தவன்,

"அப்படி எந்த அவசியமும் கிடையாது நந்தினி. பொழுது போகாமல் இந்த அறைக்குள்ளேயே முடங்கியிருக்கிறாயே என்று

தான் வாங்கி வந்தேன். இதன் பெயரும் ஸ்விட்டீ தானோ? ஆனால் இது ஆண் குட்டி... அந்த பெயர் சரிவராதோ?" மெல்லிய சிரிப்புடன் அவள் விழிபார்க்க,

'ஆணா? அப்போ உன் பெயர் தான் வைக்கணும்...' அவள் எண்ண ஓட்டத்தை கண்டுகொண்டவன் போல்,

"இருவருக்கும் ஒரே பெயரென்றால் அழைக்கும் போது குழப்பம் வந்துவிடுமல்லவா? எங்களுக்கு..." என புருவம் உயர்த்த.

'கண்டுகொண்டான்! ஆனால் சிரிக்கிறான்...? விஜயேந்திரன் தானா? இல்லை ஏதேனும் குளோனிங்கா? பெருத்த சந்தேகம் உண்டாக, கட்டில் மீது ஏறி அவன் கழுத்தை வளைத்து திருப்ப,

"என்ன செய்கிறாய் நந்தினி?"

புரியாமல் பார்த்தவனை கண்டுகொள்ளாமல் அவன் காதோர மச்சத்தை சரிபார்த்து விஜய் தான்! நிம்மதி பெருமூச்சுவிட்டவள், அவன் தோள்களில் தன் கரங்கள் பதித்து விழி பார்த்து,

"உங்களுக்கு ஆசை அதிகம் தான் விஜய்! உங்கள் பெயரையாவது சொல்லி கொஞ்சிகிட்டு இருக்கணும்னு நினைக்கிறீங்க? இதுக்கு நான் பேர் வச்சுட்டேன் ஜிம்மி. நல்லாயிருக்கா?"

"அழகு! என் தேன்சிட்டைப் போல்..." அவள் மூக்கை செல்லமாக கிள்ளி சிரித்தான் அவள் கணவன்.

இப்பொழுதெல்லாம் அடிக்கடி அலுவலகத்திலிருந்து அவளுக்கு அழைக்கிறான். ஓவரா பண்றான் எனத் தோன்றினாலும் அவளும் அதை ரசிக்கத் தான் செய்தாள்.

ஹலோ என்று கூட சொல்லவிடாமல் தான் சொல்ல வந்ததை மட்டும் சொல்லிவிட்டு வைத்துவிடுபவன், காதலில் விழுந்ததும் போதும். சிட்டு… சிட்டு என கொஞ்சுவதென்ன? சாப்பிட்டாயா? தூங்கினாயா? உன் ஜிம்மி என்ன பண்ணுது? இப்படி ஏதேனும் விஷயமேயில்லாத விஷயங்களையெல்லாம் பேசிக் கொண்டிருந்தான்.

முதலாமாண்டு திருமண நாள் பரிசாக மனைவிக்கு கொடுப்பதற்கு மலேசியாவில் தியோமான் தீவில் ஒரு ரிசார்ட் வாங்கியிருந்தான். திருமண நாள் கொண்டாட்டத்தை திட்டமிட்டவன், துள்ளலுடன் தொடர்பு கொண்டு,

"சிட்டு… இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவேன் வெளியே போகலாம் தயாராக இரு."

"நான் எங்கையும் வரல விஜய்." அதை கண்டுகொள்ளாதவன் போல்,

"சாப்பிட்டாயா நந்தினி...?" பேச்சை மாற்றிவிட்டான். சிறு கோபத்தோடு பேசி முடித்து வைத்தவள்,

போ! நான் எங்கயும் வரமாட்டேன்... கல்யாணமாகி ஒருவருடம் ஆகப் போகுது இப்போ தான் வெளியில் கூட்டி போகணும்கிற நினைப்பே வருது. டிசைனர் புடவையில் இருந்தவள் அழகாக பின்னலிட்டுருந்த தலையை விரித்து விட்டுக் கொண்டாள்.

ரொம்பவும் சாதாரண நகைகள் தான் அணிந்திருந்தாள். இவளை பார்த்ததுமே அவனுக்கு தெரிய வேண்டுமாம் அவள் தயாராகவில்லை... எங்கும் வரப் போவதில்லை என்று... திட்டம் பலமாக தான் இருந்தது.

தன் ஜிம்மியுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்க, அவன் வந்துவிட்டான். நிச்சயம் தயாராகி இருக்கமாட்டாள் என்பது அவன் அறிந்தது தான் என்பதால்,

"நந்தினி இந்த புடவை உனக்கு அழகாக இருக்கிறது... சீக்கிரமாகவே தயாராகிவிட்டாயே சமத்துப் பெண். அப்படியே ஒரு வாரத்திற்கு தேவையான ஆடைகளை எடுத்துவை. நான் அம்மாவிடம் பேசிவிட்டு வருகிறேன்." வாய் தான் சொன்னதே தவிர அவளை உரசிக் கொண்டு அமர்ந்துவிட்டான்.

"உங்களுக்கு நீங்க எடுத்து வச்சுக்கிறது தானே வழக்கம்."

'இவன் பாராட்டுறானா நம்ப முடியலையே... எதுவானாலும் என்னால் செய்ய முடியாது போ!'

"உன் ஆடைகளை தான் எடுத்து வைக்கச் சொன்னேன் நந்தினி. ஒருவாரம் தியோமான் ஐலண்ட்ஸ் போகலாம்... " அவள் முதுகில் தன் முதுகு சாய்த்து கட்டிலில் அமர்ந்து கொண்டு தான் பேசிக் கொண்டிருந்தான். பட்டென அவள் விலக மெத்தையில் விழுந்தவன் அவள் முகம் பார்த்து,

"ராஜா விஜயேந்திர பூபதியை விழச் செய்ததில் மகிழ்ச்சி தானே?" கண்களில் குறும்பு மின்ன கேட்க,

"நான் விழ வைக்கல... வேணுமே நீங்களா தான் விழுந்தீங்க... என்னை திசை திருப்பாதீங்க. நான் எங்கயும் வரல..." முகம் திருப்பிக் கொண்டாள்.

"ம்... நீ வேண்டுமென்பதால் தான் விழுந்தேன்... போதும் நந்தினி! இன்னும் ஒருவாரத்திற்கு உன் அலும்பு, அலுச்சாட்டியம், கோபம், நடிப்பு எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு என் நந்தினியாக சந்தோசமாக இருக்கலாமே... நம் திருமண நாளை அங்கேயே கொண்டாடலாம்..." அவன் அவளின் கன்னம் தாங்க,

"ஓ! ஹனி மூனா? அதெல்லாம் கணவன் மனைவிக்குள் புரிதல் வரவேண்டும் என்பதற்காக போவது. உங்களை பற்றி எனக்கு நல்லாவே தெரியும்... என்னை பத்தியும் உங்களுக்கு தெரியும்! (நீங்க ரெண்டு பேரும் யாருன்னு ஊருக்கே தெரியும்!) அதோடு நாம் தான் கணவன் மனைவியே இல்லையே...

தண்டனை கைதிக்கு எதற்கு இந்த வேண்டாத வேலை?" உதடு பிதுக்க.

அவள் கேட்டபோது, அவன் சொன்ன அதே காரணம்... வார்த்தை மாறாமல் அவள் வாயிலாக கேட்கும் போது வலித்தது. மனம் ஊமையாக அழுதது. ஒரு நொடி அவன் வேதனை அவளையும் பாதித்தது.

'ச்சே! ரொம்பவும் கஷ்டப்படுத்துறோமோ? இந்த வலியும், வேதனையும் இருவரையுமே பாதிக்குது அவனுக்காக நானும் வருந்துகிறேன்... இது தேவை தானா? அவன் எப்படியோ இருந்து தொலைக்கட்டும். நான் நானாகவே இருந்துவிடலாமோ?

அன்பையும், காதலையும் மறைத்து நடிப்பது சிரமம் மட்டுமல்ல கொடுமையாகவும் இருக்கே... போடா உன்னை காயப்படுத்த போய் நானும் தான் தண்டனை அனுபவிக்கிறேன். (ஒரு வழியா புரிஞ்சுருச்சா!) அவள் அசையாது அமர்ந்திருக்க, இருவருக்குமே அவன் பெட்டி அடுக்க,

"விஜய் நான் எங்கயும் வரப் போறதில்ல. மிரட்டி காரியம் சாதிக்கும் வேலையெல்லாம் இனி நடக்காது." அவன் கண்டுகொள்ளவேயில்லை. பெட்டிகளை எடுத்துச் செல்ல ஆள் வந்துவிட்டது.

"போ... எனக்கு பதிலா என் பெட்டியோடு ஊர் சுற்று" சட்டமாக அமர்ந்திருந்தவளிடம்,

"போகலாமா நந்தினி?" கொஞ்சலாய் கேட்க,

"பை! போயிட்டு வாங்க..." என முகம் திருப்பியவளை லாவகமாக தன் கைகளில் ஏந்திக் கொண்டான். இதை சற்றும் எதிர்பார்க்காதவள் திகைத்து மெல்ல இயல்புக்கு வருவதற்குள் மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்தான் விஜயேந்திரன். (இது எப்படி இருக்கு?)

"விஜய்... இங்கு, உங்களை நூறு கண்கள் பார்க்கும். ராஜா விஜயேந்திர பூபதியின் மானம் காற்றில் பறக்கும். இது உங்க கௌரவத்துக்கு இழுக்கு இறக்கிவிடுங்க." அவனிடம் இருந்து அசையக் கூடமுடியவில்லை அவளால்.

"நீ என் மனைவி நந்தினி. நான் வலுக்கட்டாயமாக எந்த வேற்று பெண்ணையும் தூக்கி வரவில்லை... மானமும், கவுரவமும் பாதிக்கப்படுவதற்கு. நான் சொன்னவற்றையெல்லாம் திருப்பி கொடுத்துவிட்டாய் என்று நினைக்கிறேன்... சரிதானே?

இல்லை, இன்னும் ஏதேனும் பாக்கி இருக்கிறதா? இனியாவது நாம் இணக்கமாக இருக்கலாம் அல்லவா?" கண் சிமிட்டி வினவ, தன் மென்கரம் கொண்டு அவன் மார்பில் குத்தியபடியே,

"இறக்கி விடுங்கள் விஜய்! நான் எங்கும் வரமாட்டேன்..." கோபமாய் கத்தியவள்,

"ஒருவேளை இது தான் உங்க திட்டமோ? நான் இப்படி அடம் பிடிக்கிறத பாக்குற உங்க வேலைகாரங்க என்னை ராங்கின்னு நினைக்கணும்... உங்க புகழ் தன்னால் உயரனும் அப்படித் தானே?"

"என்னைப் பற்றிய உன் கணிப்புகளை கேட்கும் போது ரொம்பவும் மகிழ்ச்சியாக இருக்கிறது நந்தினி." கண்ணிமைக்கும் நேரத்திற்குள் காணாமல் போனது அவன் வேதனை. காரில் அமர்த்தியவன் தானும் அமர்ந்து காரை கிளப்ப,

"வண்டியை நிறுத்துங்க விஜய்! இல்ல... குதிச்சுடுவேன் !" மிரட்டியவள் கதவை திறக்க முயற்சி செய்ய, அவன் கண்டுகொள்ளாமல் கருமமே கண்ணாய் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான். முயன்றும் முடியாமல் போக,

"ஒவ்வொரு முறையும் என் உணர்ச்சிகளை நீங்க மதிக்கிறதே இல்ல விஜய். உங்களை பார்க்கப் பார்க்க எரிச்சலா இருக்கு..."

"நந்தினி, வேறு எங்கும் வேண்டாம் ஒரு லாங் டிரைவ் போகலாமே... உனக்கு பிடித்தமான விஷயம் தானே?"

"இப்போ பிடிக்கல... உங்களையும் பிடிக்கல, உங்க கூட போறதும் பிடிக்கல... நான் வீட்டுக்குப் போகணும்..." முகம் திருப்பிக்கொள்ள,

"பொய் சொல்கிறாய் நந்தினி.... என் மீது உனக்கிருக்கும் காதல் இம்மியும் குறையவில்லை. கூடவே கோபம் இருக்கிறது அது மட்டும் தான் இந்த புறக்கணிப்புக்குக் காரணம். உன் உணர்வுகளை மதிப்பதால் தான் பொறுமையாக இருக்கிறேன் நந்தினி. என்னை உன் கணவனாக பார்க்க வேண்டாம், நண்பனாக ஏற்றுக்கொள்."

"ஆதியும், பிரபாவும் மட்டும் தான் என் நண்பர்கள். எனக்கு வேறு யாரும் வேண்டாம். உங்களை அந்த இடத்தில வச்சு பாக்கவே முடியாது பட்டாசாய் வெடிக்க, ( ஆதி நிவியை பிரெண்ட் -ஆ நினைக்க முடியாதுங்கிறான்... நீ விஜய் பிரெண்ட் கிடையாதுங்கிற... நல்லா வந்து சேர்ந்துருக்கீங்கம்மா!)

"ஏன் நந்தினி? நான் உன் காதலன் என்பதால் தானே!" விஜய் தன் வலியை மறைத்து ,விளையாட்டாய் கேலி பேச , நந்தினியின் கோபம் எல்லை மீற, அருகே இருந்த கிளச்சை தூக்கி வீசினாள்.

அதன் கூர்மையான முனை அவன் நெற்றியை பதம் பார்த்தது... வண்டியை ஓரமாக நிறுத்தியவன் ரத்தத்தை டிஸ்யூவினால் ஒற்றி எடுக்க, மிரண்டு போனாள் நந்தினி.

"ஐயோ..! சாரி விஜய்!! தெரியாமல்... இப்படி காயப்படுத்தும்னு நினைக்கல... ரொம்ப வலிக்குதா?" விழிகளில் நீர் திரள அவன் முகம் தாங்க,

"பெரிதாக ஒன்றும் காயம் இல்லை, லேசான ரத்த கசிவு தான். உனக்கு இன்னும் ஆழமாக இருந்தது இல்லையா நந்தினி?"

"சாரி... சாரி… ரியலி சாரி விஜய். கோபத்தில் என்ன செய்றேன்னு தெரியாம நடந்திடுச்சு..."

"ஷ்... போதும் நந்தினி... இதிலும் திருப்பிக் கொடுத்துவிட்டாய் என்பதில் மகிழ்வு தான். இனியேனும் உன் மனஉளைச்சல் குறையட்டும்... வருந்தாதே... இனி ஒருமுறை இதை போல் செய்யாதே… அது நம் இருவர் உயிருக்கும் ஆபத்து.

வண்டியை நிறுத்த சொல்லிவிட்டு செய். எங்கு போகலாம் நந்தினி வீட்டிற்கா? இல்லை லாங் ட்ரைவா?" ஒன்றுமே நடவாதது போல் அழகாக சூழலை மாற்ற நினைக்க காதல் கொண்ட மனது விழித்துக் கொண்டது, அவன் தோள் சாய்ந்து விசும்ப,

"எதற்கு இந்த அழுகை நந்தினி? இப்பொழுதாவது புரிகிறதா? உனக்கு இன்னும் காதல் இருக்கிறதென்பது…. எல்லாவற்றையும் மறந்துவிடேன். என்னை புதிய விஜயாக ஏற்றுக்கொள்ள முயற்சி செய். ப்ளீஸ் நந்தினி..." இதமாக அணைத்து நெற்றியில் முத்தமிட்டவன் வீட்டிற்கே அழைத்து வந்துவிட்டான்.

ராணியம்மாவுக்கு ஒருபுறம் பரிதாபமாகவும் மறுபுறம் வேதனையாகவும் இருந்தது இருவரின் நிலையும்... சீக்கிரம் இது ஒரு முடிவுக்கு வர வேண்டும் என வேண்டிக் கொள்ள தான் முடிந்தது அவரால்.

ஓரளவுக்கு கணவனின் புறம் மனம் கனிந்திருந்தது நந்தினிக்கு. அவளது ஊசி குற்றும் பேச்சுக்கள் இல்லாததால் அவனாலும் அதை உணரமுடிந்தது.

அன்று விஜயேந்திரனுக்கும், நந்தினிக்கும் திருமண நாள். பெரும் கோபத்தோடு அவளை மணமுடித்த போதே அவனது உணர்வுகள் மோகத்தில் தள்ளின... இன்றோ காதல் கணவனாகிப் போக... தீரா மோகம் தூண்ட, அவளது மாற்றமும் அவனை ஊக்கப்படுத்தவே, கட்டுக்குள் கொண்டுவர நினையாமல் மனைவியை நாடினான்.

விடிந்தும் விடியாத இளங்காலைப் பொழுதில் வெகு நாட்களுக்குப் பிறகு உறக்கத்தில் இருக்கும் மனைவியை அணைத்துக் கொண்டவன், காதலும் காமமுமாய்...

'உனக்கு நியாபகம் இருக்கிறதா நந்தினி? நம் முதலிரவன்று ஒருகண்ணை மூடி ஒன்றைமட்டும் லேசாக திறந்து செப்பு இதழ்கள் சுளித்து நான் என்ன செய்கிறேன் என நோட்டம்விட்டாயே...?

அந்தக்கணம் என் மனதில் சிம்மாசனம் இட்டு அமர்ந்துவிட்டாய் நந்தினி.

முதன் முதலில் கோவிலில் என் கரம் பிடித்தாயே... அப்பொழுதும் இந்த கண்கள் துறுதுறுவென அழைந்து என்னை அணுஅணுவாய் ஆராய்ந்ததே... எத்தனையோ இரவுகள் உன் பார்வை என்னை தூங்கவிடாமல் செய்திருக்கிறது நந்தினி.

உன் முகம் நினைவில் இல்லை ஆனால் இந்த வண்டு விழிகளை என்னால் மறக்கவே முடியாது நந்தினி. நெற்றியில் ஆரம்பித்து தாடி, மீசை, கை... அதிலிருக்கும் காப்பு, விரல்கள்... ஏன் இடுப்பில் கட்டியிருந்த கச்சை வரை அனைத்தையும் துளைத்தது உன் பார்வை.

கையையும் விடாமல் இறுக பற்றிக் கொண்டு என்ன ஒரு ஆராய்ச்சி? பிடித்திருந்தது நந்தினி. நேரமாகிவிட்ட போதும் கோபமே வரவில்லை நந்தினி. அரைப்படி போல் இருந்து கொண்டு ஆராய்ச்சியைப்பார்...? என்று தான் தோன்றியது.

மனைவி விழித்துக் கொண்டு கேட்பதுபோல் பேசியவன் தன்னை மிகவும் கவர்ந்த விழிகளில் முத்தமிட, பிரிக்க முடியாமல் ஒட்டிக் கொண்டிருந்த இமைகளை மெல்ல தட்டி விழித்தவள், வெகு அருகில் கணவன் முகம் பார்த்து திடுக்கிடலுடன்,

"தூங்கலயா விஜய்?" திருத்திருக்க... எப்பொழுதுமே தூக்கம் புரியாமல் அவள் விழிப்பது அவனுக்கு மிகவும் பிடித்த ஒன்று என்பதால் மீண்டும் ஓர் முத்தம் வைத்து,

"ஹாப்பி அனிவர்சரி நந்தினி." என்றவன், ரிஸாட்டின் பெயரும், படமும் போடபப்பட்ட சாவி கொத்தை அவளிடம் கொடுத்தான்.

"இது என்னது விஜய்?"

"நம் திருமணநாள் பரிசாக உன் பெயரில் தியோமான் தீவில் ஒரு ரிசாட் வாங்கியிருக்கிறேன் நந்தினி." தலை கோதி நெற்றியில் முத்தமிட்டான்.

"நன்றி! உங்களோடு ஒருவருடம் வாழ்ந்துவிட்டேனே சாதனை தான்." மறந்திருந்த பழக்கம் மீண்டும் தலைதூக்கியது. சிறு வருத்தம் உண்டானாலும் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் உறவை சீர்செய்யவே முயன்றான்.

"நந்தினி! இன்று உன்னை அதிகம் தேடுகிறது... நீ இல்லாமல் முடியாது... வேண்டும் நந்தினி... என் குட்டி தேவதை எனக்கு மொத்தமாக வேண்டும்..." காதலாய் இதழ் வருட, (இது ஒன்னு தான் இப்போ குறைச்சல். இவ்வளவு நாளா ஒழுங்கா இருக்கானேனு நினச்சேன்... காலையிலேயே ஆரம்பிச்சுட்டான்.)

"விஜய்! என்னை தூங்க விடறீங்களா?"

"உன் தூக்கம் தெளிந்து வெகு நேரமாகிவிட்டது நந்தினி.'' கன்னம் வருட,

"இப்போ நான் இந்த மூடில் இல்ல... பேசாம படுங்க விஜய்."

"என்னை அதிகம் வதைக்காதே நந்தினி. நம் முதல் இரவை நினைத்துப் பார்... நீ என்னிடம் உருகி நின்றதும் நான் உன்னுள் கரைந்து காணாமல் போனதும் நினைவில்லையா? மறுக்காதே சிட்டு... உன் விஜய் உனக்காக இன்று ஏங்கி நிற்கிறான்... பாவமாக இல்லையா?"

அவளுக்கும் நியாபகம் வந்தது. இதற்குத் தானே இவ்வளவு நாடகமும்? நீ திருந்தப் போவதே இல்லை. அன்று போல் இன்றும் என்னை உன் காலடியில் விழ வைக்கலாம் என்ற எண்ணமா? எரிச்சல் மூண்டது நந்தினிக்கு.

"இன்னைக்கு நம்ம கல்யாண நாள் இல்லையா? சோ, உங்களுக்கு என்ன வேணும் சொல்லுங்க எல்லாத்தையும் நந்தினி மறுக்காம கொடுப்பா..." கணவனின் கன்னம் தாங்கி கொஞ்ச... அவளது திடீர் மாற்றம் கருத்தில் பதியாமல் போக...

"நிஜமாகவா நந்தினி? ஏக்கமும், கிறக்கமுமாக

"இந்த தளிர் விரல்கள் என் மார்பை வருடுமே அது தான் வேண்டும்." ஒவ்வொரு விரலிலும் முத்தமிட... அவனிடமிருந்து

விலகியவள், பழத்தோடு வைக்கப் பட்டிருந்த கத்தியை எடுத்து சட்டென வலது கை விரல்களில் கிழித்துக் கொண்டாள்.

"நந்தினி..! என்ன காரியம் செய்துவிட்டாய்?"அவள் கரம் பற்ற முயல,

"என்னை தொடாதீங்க... பக்கத்தில வந்தா என் கழுத்தை அறுத்துக்குவேன் விஜய்.’’

"நந்தினி... என்ன முட்டாள் தனம் இது...? கீழே போட்டுவிடு... ப்ளீஸ்... கத்தியை கீழே போட்டுவிடு நந்தினி. முதலுதவி செய்யத்தான் முயல்கிறேன் நந்தினி... புரிந்துகொள். ரத்தம் வருகிறது நந்தினி... ப்ளீஸ் அனுமதி..."

"நோ... வேறென்ன வேணும்? சொல்லுங்க!" கர்வத்தோடு கூடிய அலட்சியம் அவளிடம் ததும்பி வழிந்தது.

"வேண்டாம்... எனக்கு எதுவும் வேண்டாம். இனி உன் நிழலைக் கூட தீண்டப் போவதில்லை... நான் எதுவும் செய்யவில்லை. ரத்தப்போக்கு அதிகமாக இருக்கிறது நந்தினி... மருத்துவரை அழைக்கிறேன். நீயே முதலுதவி செய்துகொள்." பதட்டமும் படபடப்புமாய் அவன் பதற...

"நீங்க இருக்கும் இடத்தில இருந்து அசஞ்சா கூட சொன்னதை செய்வேன் விஜய்!"

"ராட்சசி... ராட்சசி! ஏன் இப்படி என்னை உயிரோடு கொள்கிறாய்? என்னால் முடியவில்லை நந்தினி. என்னை

வதைத்ததையெல்லாம் தாங்கிக்கொள்ள முடிந்தது. இது முடியவில்லை நந்தினி.

நான் தோற்றுவிட்டேன்! ராஜா விஜயேந்திர பூபதி இந்த சிறு பெண்ணிடம் தோற்றுவிட்டான். உன்னை வதைத்துக் கொள்வதை என்னால் தாங்கிக் கொள்ளவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாது நந்தினி.

சிகிச்சைபெற்றுக் கொள் நந்தினி. நான் என்ன செய்யவேண்டும்? நீ என்ன சொன்னாலும் செய்கிறேன். என் தவறுகளை மன்னித்துவிடு... மன்னிக்க முடியாவிட்டால் தண்டனையை எனக்குக் கொடு.

நீயே உன்னை தண்டித்துக் கொள்ளாதே... வலிக்கிறது நந்தினி. நான் செத்துக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது உன் மீது உயிரையே வைத்திருக்கிறேன் நந்தினி. என்னை நம்பு. உன்னையும் வதைத்து, என்னையும் கொல்லாதே நந்தினி."

ராஜா விஜயேந்திர பூபதி மனைவியின் முன் மண்டியிட்டு... கரம் குவித்து... கதறிக் கொண்டிருக்க... அதிர்ச்சியில் பேச்சற்றுப் போனாள் நந்தினி.

பெண்கள் மண்டியிடுவதையே பெரும் கௌரவக் குறைச்சலாகவும், இழுக்காகவும் நினைக்கும் அரச வம்சத்தில் பிறந்து, அரசனாக முடிசூட்டிக் கொண்டவன் இன்று நம்மிடம்.... கதறுகிறானே... கடவுளே உண்மையாகவே என்னை

விரும்புகிறான்! பாவமே என் விஜய்... மனதின் பெரும் பாரம் குறைந்தது போல் ஓர் உணர்வு நந்தினிக்கு.

"விஜய்!" என்னும் கூவலோடு இரண்டடி இடைவெளியை ஒரே எட்டில் கடந்து அவனருகில் வந்தவள், தன் வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொள்ள,

"மன்னித்துவிட்டாயா நந்தினி...? போதும். முதலில் உன் கையை காட்டு..." அவளை நிமிர்ந்து கூட பார்க்கவில்லை. தன் முதலுதவியை தொடங்கிவிட்டான். இளஞ்சூடான நீர் பட்டதும் காயத்தில் எரிச்சல் உண்டாக ஸ்... என்னும் அவளது வேதனை குரல் மேலும் வலியை உண்டாக்கியது அவனிடம்.

"ஏன் இப்படி செய்தாய் நந்தினி? இப்பொழுது பார்... யாரேனும் வேதனையை வழியப் போய் வரவழைத்துக் கொள்வார்களா? படுத்துகிறாயே..."

நேரம் கடத்தாமல் அடுத்தடுத்து போட வேண்டிய மருந்துகளை போட்டு சிறிய கட்டும் கட்டிவிட்டவன், மருத்துவரை அழைத்து ஊசியும் போடச் சொன்னான். அதன் பின்னரே அவனால் இயல்பாக மூச்சு விட முடிந்தது.

அவ்வளவு நேரமும் அவனது வேதனையை கண்டுகொண்டிருந்தவள் கட்டிலில் அயர்ந்து படுத்தவனை தன் மடி தாங்கிக் கொண்டாள்.

"வேண்டாம் நந்தினி!" விலக எத்தனிக்க,

"ஷ்... நந்தினி தேவியின் கட்டளைக்கு இணங்கித் தான் ஆக வேண்டும் அரசே..." என கேசம் கலைக்க நகர முடியாமல் கண்மூடி அசையாது படுத்திருந்தான்.

"சாரி விஜய். ரொம்பவும் வருத்திட்டேனா?" பெரிய பெரிய நீர்மணிகள் அவன் கன்னத்தில் தெறித்து விழுந்தது.

"நந்தினி! என்ன இது? சிறுபிள்ளை போல... வருத்தமாக மட்டுமல்ல கேவலமாக... மனிதத்தன்மை அற்ற செயலாக தான் இருந்தது நந்தினி. நான் எவ்வளவு மோசமாக உன்னை காயப்படுத்தியிருக்கிறேன் என நினைக்கும் போது..." அவள் விழி நீர் துடைத்து தன்னருகே அவள் முகம் இழுத்து கன்னத்தில் முத்தமிட்டு,

"தெரியாமல் செய்த தவறுக்கு தான் மன்னிப்பு கேட்கலாம்... நான் தெரிந்தே தான் செய்தேன் நந்தினி. மன்னிப்பு கேட்கும் அறுகதையெல்லாம் கிடையாது. எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடு நந்தினி ஏற்றுக் கொள்கிறேன்."

"போதும் விஜய் இருவரும் ஒருவரை ஒருவர் காயப்படுத்திக் கொண்டதெல்லாம் போதும்." நெற்றியில் இதழ் பதித்தவளை விலக்கி,

"இல்லை நந்தினி... இன்னும் ஒரு கணக்கு தீர்க்கப் படாமல் இருக்கிறது. எந்த வார்த்தை உன் இயல்பை மாற்றி இந்த

அளவிற்கு மோசமாக்கியதோ அதற்கான தண்டனை இன்னும் பாக்கி இருக்கிறது நந்தினி.

சொல்லக் கூடாத வார்த்தை… எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாய்? திருப்பிக் கொடுத்துவிடு நந்தினி வார்த்தையாக மட்டுமல்ல… நடைமுறையிலும்,

நீ மனிதனே இல்லை. உன் குழந்தையை சுமக்கமாட்டேன். என்னை தாயாக்கும் தகுதி உனக்கி..." அதற்கு மேல் சொல்லவிடாமல் தன் கரம் கொண்டு அவன் வாய் மூடிவிட்டாள்.

அந்தக்கணம் கண்களில் கரை உடைப்பட்டது விஜயேந்திரனுக்கு. 'தேவதை! வார்த்தையாகக் கூட அனுமதிக்க மாட்டேன் என்கிறாளே... நான் கொன்றுவிட்டேனே...' துடித்துப் போனான்.

"ஏன் விஜய் இப்படியெல்லாம் பேசறீங்க? மறந்துடுங்க விஜய்… ப்ளீஸ் அழாதீங்க..." மார்போடு அணைத்துக் கொண்டாள். மெல்ல இயல்புக்கு திரும்பியவனின் தலை வருடி,

‘‘நிச்சயமா தண்டனை கொடுப்பேன் விஜய். ஒன்றல்ல நாலைந்து குழந்தைகள் பெற்று… எல்லாம் ஒன்றாக சேர்ந்து உங்களை பாடாய் படுத்தனும் நான் ரசிச்சு பார்க்கணும். எப்படி?" குரும்பாய் சிரிக்க,

"ஒன்னும் வேணாம் போடி..." என தலையணையில் முகம் புதைத்துக் கொள்ள,

"இப்ப என்ன சொன்னிங்க விஜய்?" ஆச்சரியமாய் அவன் தோள் பற்றி உலுக்க,

"உனக்கு நாங்க பேசுற விதம் பிடிக்காதில்ல சிட்டு? அதான் மாத்திக்கிட்டேன். உன்னை மாதிரியே பேசுறேனா?" சிரிப்போடு அவள் மடியில் தலைவைத்துக் கொண்டான்.

"இது ஏதுடா புது பிரச்சனை? உங்கள் ரேணுகா என்னையே இன்னும் உங்களை போல பேச பழலன்னா. இப்போ நீங்களும் மாறினா... நான் தான் உங்களை கெடுத்துட்டேன்னு சொல்லுவா... இதெல்லாம் வேண்டாம். எப்போதும் போலவே பேசுங்க விஜய்.''

"ம்ஹூம்... அதை விட இது தான் நல்லாயிருக்கு சிட்டு. அதென்ன என் ரேணுகா? காத்துவாக்கில் தெரிஞ்சாக் கூட தாலியோடு வந்து நிற்பா... பரவாயில்லையா?"

"என்னது?" நந்தினி மிரண்டு விழிக்க,

"நிஜம் தான் நந்தினி. அரசர்கள் பலதார மணம் புரிவது ஒன்னும் கொலைக் குற்றமில்லை. அதெற்கெல்லாம் இடம் உண்டு தெரியுமா? முன்னெல்லாம் ஒரு அரசனுக்கு... பட்டது அரசி, அனுக்கி, தோழி, அந்தப்புரத்து அழகிகள் இப்படி பலபேர் இருப்பாங்க..." என சொல்லவும்,

"போடா..." மடியில் இருந்தவனை கீழே தள்ளிவிட்டு விலகிச் சென்றவளை இழுத்து தன்னோடு இறுக்கிக் கொண்டவன்,

"என் தேன்சிட்டுக்கு கோபம் வந்துவிட்டது. எனக்கு எல்லாமாகவும் நீ தான் இருக்கிறாய் நந்தினி... நீ மட்டும் போதும் சிட்டு. யூ ஆர் மை லிட்டில் ஃபேரி டீ..."

"இதென்ன ராஜா விஜயேந்திர பூபதி ராணியை டீ என மரியாதை இல்லாமல் அழைக்கிறார்?"

"கோபம் வந்துவிட்டால் கணவனையே வாடா போடா என பேசுவதும், சட்டையைப் பிடித்து உலுக்குவதும்… கையில் கிடைப்பதை எடுத்து மண்டையை பிளப்பதுமாய், மரியாதை கொடுப்பவளுக்கு இந்த மரியாதை போதும்... முதலில் நீ என் மனைவி பின்னர் தான் அரசி. பொண்டாட்டியை கூப்பிடலாம் தப்பில்லை சிட்டு."

"உங்க அம்மாக்கு முன்னாடியும் இப்படியே கூப்பிடுவீங்களா விஜய்?" கேலிச் சிரிப்புடன் அவன் விழி பார்க்க,

"ஆஹா ஹா... ராணியரிடம் வசமாக சிக்க வைக்க திட்டமிடுகிறாய் போலிருக்கிறதே? மரியாதை குறைவாக அழைத்தால் அம்மா கோபித்துக் கொள்வார்கள் நந்தினி.

அதனால் நமக்குள் மட்டும் தான். கொஞ்சம் இப்படியும் அப்படியும் பேசுகிறேனல்லவா? சீக்கிரம் சரி செஞ்சுக்கிறேன் தேன்சிட்டே" (எல்லாம் காதல் படுத்தும் பாடு...)

"ஹாப்பி அனிவேர்சரி விஜய்" அந்த முரட்டு இதழ்களை கவ்விக் கொண்டாள். நீண்ட நெடிய முத்த யுத்தம் முடிந்து

மஞ்சமெனும் போர்க்களம் புகுந்து இருவரும் வெற்றிவாகை சூடி காலை உணவுக்கு கீழே வர மதியமாகிவிட்டது.

இனி இந்த ராஜாளி தேன்சிட்டை தன் சிறகுகளுக்குள் பொத்தி வைத்துக் கொள்ளப் போகிறது என்பது ராணியாருக்கு தெரிந்துவிட்டது. மனமெங்கும் நிம்மதி விரவ அன்று மாலை தங்கள் குல தெய்வமான மங்களாம்பிகைக்கு சிறப்பு பூஜைக்கு ஏற்பாடு செய்ய சென்றுவிட்டார்.

பரிமாற வந்தவர்களை போகச் சொல்லிய விஜய் தானே எடுத்து பரிமாறினான் ஒரே ஒரு தங்கத் தட்டில்.

"எனக்கு விஜய்?"

"உனக்குத் தான்!?"

"அப்போ உங்களுக்கு...?"

"அது தான் நீ இருக்கியே... கொஞ்சம் தர மாட்டாயா?" புருவம் உயர்த்த

"நான் ரொம்ப பசியில் இருக்கேன்... நீங்களே போட்டு சாப்பிடுங்க!"

"தெரியும். நானே ஊட்டி விடுறேன்.". மனைவியை அருகமர்த்தி உணவை ஊட்டிவிட,

"விஜய் இங்கு உங்களை நூறு கண்கள் பார்க்கும்..." குறும்பு கூத்தாடியது அவளிடம்.

‘‘நூறென்ன ஆயிரம் கண்கள் பார்க்கட்டும்! ஆண் என்றால், தங்கள் மனைவிகளுக்கு ராஜா விஜேந்திரனைப் போல் ஊட்டிவிடட்டும். பெண் என்றால் கணவனை ஊட்டச் சொல்லி கேட்கட்டும்.

மதிய உணவை நம் அறைக்கே கொண்டுவரச் சொல்ல வேண்டும். இப்படி அமர்ந்திருப்பது வசமாக இல்லை. உன்னை மடியில் அமர்த்தி ஊட்ட வேண்டும் சிட்டு..."

"போதுமே, இப்படியெல்லாம் காதலை கொட்டினால் உங்க சிட்டு மூர்ச்சையாகிவிடும்."

"தெளிய வைக்க தெரியும் போது அதை பற்றிய பயமே தேவையில்லை நந்தினி தேவியாரே..." இதழ் கொண்டு இதழ் துடைக்க வெட்கத்தில் விலகி ஓடியது சிட்டு. ஒரே பாய்ச்சலில் தூக்கிச் சென்றது ராஜாளி. அன்றய நாள் இருவருக்குமே மறக்க முடியாத ஒன்றாக அமைந்தது.

ஒருவழியாக நந்தினி வாழ்வில் வெற்றிவாகை சூடிவிட்டாள். ஷைனிங் ஸ்டார்ஸ்-ன் ஜொலிக்கும் நட்சத்திரம் தான்! என்பதை நிரூபித்துவிட்டாள். ஆதியும், பிரபாவும் என்ன செய்யப் போகிறார்கள்?

# அத்தியாயம் 21

**ஆ**தி தனக்கு வேலை கிடைத்துவிட்டதை நிவியிடம் எப்படி சொல்வது என தயக்கத்துடனேயே நாட்களை கடத்தினான். இதற்கு மேலும் சொல்லாமல் தள்ளிப்போட முடியாது…

எப்படியும் இன்று சொல்லிவிட வேண்டும் என இறுதி முடிவை எடுத்துவிட்டாலும், ஆரம்பிக்கும் வழி தெரியாமல் மருகிக் கொண்டிருந்தான்.

வீட்டில் அனைவரும் சாப்பிட்டு படுக்கச் சென்றுவிட்டனர். வழக்கத்திற்கு மாறாய் ஆதி நிவேதாவின் அறைக்குச் செல்லாமல் மொட்டை மாடியில் நிலவை வெறித்துக் கொண்டிருந்தான்.

என்ன தான் வெளிநாட்டு வேலையே கிடைத்திருந்தாலும் அவனால் அதை முழு மனதோடு ஏற்க முடியவில்லை. அவனது வேலையை விட நிவியே அவனது மூச்சாகியிருந்தாள்.

வேலையைப் பற்றி நிவியிடம் எப்படி சொல்வது? அவள் அதை எப்படி ஏற்பாள் ? ஒருவேளை அவளுக்குப் பிடிக்கவில்லை என்றால் அதை வெளிப்படையாக சொல்வாளா?

அந்தச் சூழ்நிலையை எப்படி கையாள்வது? வேலையை உதர வேண்டுமா?

இல்லை நிவிக்கு புரிய வைக்க முடியுமா? தான் இல்லாது அவள் இங்கே சமாளித்து விடுவாளா...? தன்னை ரொம்பத் தேடுவாளோ? மனம் பலவித எண்ணங்களில் சிக்கித் தவித்தது. (நிவி கூட விட்டுட்டு இருந்துடுவா போல... இவன் தான் ரொம்பத் தேடுறான்!)

ஒவ்வொரு இரவும் தன்னை தூங்க வைப்பதற்காக வரும் ஆதி அத்தானை இன்னும் காணவில்லையே என நிவி தேடத் தொடங்கிவிட்டாள். அவன் அறையில் சென்று பார்த்தவள், ஆதி அங்கு இல்லையென்றதும்... அவனது போனையே எடுத்து பிரபாவிற்கு அழைத்தாள்.

‘‘பிரபாண்ணா ஆதி அத்தானை காணும்?" அவளது பதட்டத்தைக் கண்டு பிரபாவே ஒரு நொடி பயந்துவிட்டான்.

"பயப்படாத நிவிம்மா... பின் கதவு திறந்திருக்கான்னு பாரு... தோட்டத்தில் இருப்பான்..."

"இல்ல கதவு மூடி இருக்கு..." சொல்லும் போதே அழுகை வந்துவிட்டது.

"அழாதடா... அவன் என்ன சின்ன பையனா? காணாமல் போக... மொட்டை மாடியில் இருக்கலாம்... கண்ணை

துடைச்சுக்கிட்டு போய் பாரும்மா. அங்கும் இல்லன்னா நான் வரேன்.

பக்கத்தில் எங்காவது வாக்கிங் போயிருப்பான் தேடி கண்டுபிடிச்சு உன் முன்னாடி அந்த தடியனை கொண்டு வந்து நிறுத்துறேன். கவலைப்படாதே!" பெரும் நிம்மதி பரவ, சிட்டாய் பறந்தாள் மொட்டை மாடிக்கு.

"பிரபாண்ணா லைட் எரியலையே... கதவு சாத்தியிருக்கு... ஆதி அத்தான் இங்கே வரல போல... எனக்கு ஆதி அத்தானை இப்போவே பார்க்கணும். ஏன் என்கிட்டே சொல்லிட்டுப் போகலை? நான் தேடுவேன்னு தெரியாதா?" அவள் குரலில் அழுகையும், ஆதங்கமும் போட்டி போட்டது.

இவளது குரல் ஆதியின் செவியைத் தீண்டிய அடுத்த நொடி, வேகமாக வந்து கதவைத் திறந்தான். கதவின் மேல் சாய்ந்தபடி பேசிக் கொண்டிருந்த நிவி, பிடிமானம் இன்றி பின்னே சாய, அவளைத் தன் மேல் தாங்கி, பின்னிருந்து அணைக்க... அலறிவிட்டாள்.

"என்னாச்சு நிவி... நிவி!? என்னமா?" போனில் பிரபா பதற,

"ஷ்... தங்கம் நான் தான்! உன் ஆதி அத்தான் தான்... பயப்படாதே!" என்று அவள் காதருகில் மென்குரலில் கூற, அவன் உதடுகள் பட்டும்படாமல் அவள் செவிமடலைத் தீண்டிச் சென்றது.

"நிவிம்மா... என்னாச்சுடா?!" பிரபாவின் குரல் போனில் அலற, ஒரு கையால் அவளை அணைத்தபடி, மறு கையால் அவளிடமிருந்து போனை வாங்கி,

"நான் தான் பிரபா... அவளுக்கு ஒன்றுமில்ல. மொட்டை மாடியில் காற்று வாங்க வந்தேன். கதவைத் திறந்தால் உன் தங்கை என் மேல சாஞ்சுட்டு கத்தி ஊரைக் கூட்டுறா!"

"போடா லூசு...! ஒரு நிமிஷம் உயிரே போன மாதிரி இருந்துச்சு. என்னாச்சோ... என்னவோன்னு! இனி மேல் அவகிட்ட சொல்லாம போகாதே... பாவம் ரொம்ப பயந்துட்டா... ஷி இஸ் மிஸ்ஸிங் யூ வெரி மச்! பார்த்துக்கோ மச்சான்... இது தான் கடைசி வார்னிங். என் தங்கை அழுதா உன்னை சும்மா விடமாட்டேன்!" என்று மிரட்டிவிட்டே அழைப்பைத் துண்டித்தான்.

நண்பன் திட்டியது கூட அவனுக்கு கூடை பூக்களை அள்ளி தலையில் கொட்டியது போல் சுகமாயிருந்தது. இருக்காதா பின்னே... ?ஆதியே அவன் காதால் கேட்டானே, நிவி தன்னைத் தேடி பதறியதை...

இருட்டு என்றால் பயப்படுபவள், தன்னைத் தேடி இங்கே வந்திருக்கிறாளே? பிரபாவிடம் விசாரிக்கும் அளவிற்கு என் தங்கம் பெரிய ஆள் ஆகிவிட்டாளே என்று மனம் துள்ள, தன்னவளைப் பார்க்க,

அவளோ ஆதி அத்தான் கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் இரு கைகளாலும் அவன் இடையை சுற்றி பிடித்திருந்தாள். எங்கே விட்டால் அவன் தன்னை விட்டு சென்று விடுவானோ என்று அஞ்சுபவள் போல.

ஆதி அவள் முகம் பார்க்க முயல, அவளை அலைய விட்டதற்கு தண்டனையாய் தன் முகம் காட்டாமல் அவன் மார்பில் முகத்தை அழுத்திக் கொண்டாள்.

"தங்கம்... என்னைப் பாரேன்!"

"ம்ஹூம் ..." தலையை உருட்டி, அவனது மார்பில் தன் வார்தையைப் புதைத்தாள்.

"நிவி செல்லம், என்னைத் தேடுனீங்களா?"

"....."

" பிரபாகிட்ட ஏன் என்னை மாட்டிவிட்ட?"

"...."

"அவன் என்னை லூசுன்னு திட்டுறான்... மிரட்டுறான்! என் நண்பனையே என்னைத் திட்ட வச்சுட்டியே நிவி!"அவன் குரலில் என்ன தோன்றியதோ,

சட்டென நிமிர்ந்து... கோபமாய் இருக்கிறானோ என்று அரைக் கண்ணைத் திறந்து பார்க்க, அதற்காகவே காத்திருந்ததைப் போல் அவளைக் கைகளில் அள்ளிக் கொண்டான்.

"விடுங்க... ஆதி அத்தான்!" அவன் கைகளிலிருந்து விடுபட எண்ணி நெளிய, அவன் பிடி இறுக்கியிருந்ததால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் அவளது அசைவுகள் அவனை இம்சிக்க, இறக்கி விட்டவன்,

"சொல்லுங்க, நிவி பேபி ஏன் என்னைத் தேடுனீங்க?"

"நீங்க ஏன் என் ரூமுக்கு வரலை?"

‘‘ ம்... பரவாயில்லையே... என் செல்லம் எதிர் கேள்வி கேட்கிற அளவுக்கு பெரியவங்களாகிட்டாங்களே?" என்று அவள் மூக்கை செல்லமாக பற்றி ஆட்ட,

"ஆதி அத்தான்... என் கிட்ட ஏதாவது மறைக்கிறீங்களா? இல்ல எனக்கு பிடிக்காத எதையாவது சொல்லப் போறீங்களா?"

"எப்படி சொல்லற?" சிறு திடுக்கிடல் ஓடி மறைந்தது அவன் கண்களில்.

"ரொம்ப மரியாதையா... இப்படி கொஞ்சி கொஞ்சி பேசறீங்களே அதான்..."

"ஹா ஹா ... கொஞ்சினது குற்றமா? என் தங்கம் என்னைத் தேடி பதறிட்டாளே, அந்த சந்தோஷம் தான்." மூக்கோடு மூக்கை உரசி சிரிக்க,

"இல்ல... எதோ இருக்கு... நீங்களும், மாமாவும் எனக்குத் தெரியாம பேசிக்கறீங்க?"

"இது எப்போ?"

"இன்னைக்கு தான். சாப்பிடும் போது!"

"நான் கண்ணால் பார்த்தால் உனக்கு அர்த்தம் புரியுமா?" அவள் கண்களை ஆழ்ந்து நோக்கியபடி அவன் வசியக் குரலில் கேட்க, அதன் அர்த்தம் புரியாவிட்டாலும், அவன் கண்கள் அவளை ஏதோ செய்ய, பார்வையைத் தாழ்த்தினாள்.

"நீ சாப்பிடாமல் என்னைத் தான் பார்த்துட்டு இருந்தியா?"

"ஆமா... மீன் முள்ளை நீக்கித் தறுவீங்கன்னு காத்துட்டுருந்தேன். நீங்க ஏதோ யோசனையில் இருந்தீங்க. மாமா கூப்பிட்டு என்னவோ சொல்ல, சாப்பிட ஆரம்பிச்சுடீங்க. என்னை கவனிக்கவேயில்லை!" என்றாள் உதடு சுழிய.

"அச்சோ... சாரி தங்கம்! என் தப்பு தான்... ஏதோ ஞாபகத்தில் இருந்தேன். நீ மீன் சாப்பிட்டியா இல்லையா?"

"நீங்க எடுத்துத் தராமல் எப்போ நான் சாப்பிட்டுருக்கேன்?"

ஆதிக்கு ஐயோ என்று இருந்தது. அந்த வீட்டிற்கு அவள் வந்ததிலிருந்து அவன் தான் மீன் துண்டுகளின் முள்ளை நீக்கித் தருவான். அவளாக எடுத்து சாப்பிடத் தெரியாமல் முழித்த போது, அவளை திட்டியபடி எடுத்துக் கொடுத்தான்.

அதன் பிறகு, அதுவே பழக்கமாகி விட்டது. நிவேதா கேட்கக் கூட மாட்டாள். மீனின் முள் குத்திவிடும் என்று அவளைத் தொட விடமாட்டான். அவன் இல்லாத போது அவள்

மீனை சாப்பிட மாட்டாள். அதுவும் அவன் அறிந்ததே. அத்தை எடுத்துத் தருவதாகச் சொன்னாலும் ஒப்புக் கொள்ள மாட்டாள்.

"நிவிம்மா உன் ஆதி அத்தானுக்கே மீன் முள்ளை எடுக்கச் சொல்லிக் கொடுத்தது நான் தான். என்னை விட உன் அத்தான் பெரிய எக்ஸ்பர்ட்டோ?" என்று அத்தை கூட அலுத்துக்கொள்வார் செல்லமாய்..

அவளை கீழே அழைத்துச் சென்றவன், டைனிங் டேபிளில் அமர வைத்துவிட்டு, மீன் வறுவலும், தயிர் சாதமும் எடுத்து வந்து ஊட்டிவிட்டான். மறுப்பின்றி முழுவதுமாய் வாங்கிக் கொண்டவளை,

"ஏன் பேபி... ஒழுங்கா சாப்பிடலையா?" என வருத்தத்துடன் வினவ...

"இந்த தயிர் சாதம் டேஸ்ட்டா இருக்கே!"

"ஊட்றது நான் தானே... "

"அம்மா கூட இப்படி தான் ஊட்டி விடுவாங்க!"

"சரி, அம்மா இல்லைன்னா, ஆதி அத்தான் ஊட்டி விடுறேன். நான் இல்லைன்னா..." சொல்லி முடிப்பதற்குள்ளாகவே, அவனைத் தாவி அணைத்துக் கொண்டவள்,

"நோ... ஆதி அத்தான், அப்படி சொல்லாதீங்க..." அலறிவிட்டாள்.

"ஷ்... ஷ்... மெதுவாடி! நான் ஊருக்குப் போனால், அத்தை உன்னை பார்த்துப்பாங்கன்னு சொல்ல வந்தேன்"

"நீங்க ஊருக்குப் போறீங்களா?" கண்களை மட்டும் மலர்த்தி அவனைப் பார்க்க,

“ நீ சரின்னு சொன்னால் போவேன்!"

"நான் ஏன் சரின்னு சொல்லணும்?"

"என்னை கேம்பஸ் இன்டெர்வியூவில் ரெண்டு கம்பெனிகள் செலக்ட் பண்ணியிருக்காங்க. ஒரு கம்பெனி மும்பையில் இருக்கு மற்றொன்று துபாயில். இப்போ சாய்ஸ் என்னிடம். அதை உன்னிடம் ஒப்படைக்கிறேன்!"

அவனை விட்டு விலகி, பரிதாபமாய்ப் பார்த்தாள். அவளது பதிலுக்காய் காத்து நின்றான் அவளது கண்களைப் பார்த்தபடி. கண்கள், என்னை விட்டுப் போகாதே என்பது போல் சுருங்கி விரிய, கண்மணிகள் அங்கும், இங்கும் அலைய, இதழ்களோ,

"எப்போ அத்தான் போகணும்?" என்றது மெல்லிய குரலில்.

"இன்னும் ஒன்னு ரெண்டு மாசத்தில் கால் போர் லெட்டர் வரும். வந்தவுடன் போக வேண்டியது தான்."

"எங்கே போனால் நிறைய லீவ் கொடுப்பாங்க?"

"ஏண்டி... நான் போறது வேலைக்கு. இதென்ன ஸ்கூலா? நினச்சா லீவ் போட ..."

"நான் எப்படி உங்களை பார்க்கிறது? நீங்க தானே லீவ் போட்டுட்டு வரணும்!?"

"விவரம் தான்... நான் ஏன் வரணும்? நீ தான் நான் ஸ்மார்ட்டா இல்லன்னு சொன்ன, நான் உன்னை திட்டறேன், கொட்டுறேன். நான் இல்லைன்னா நீ ஜாலியா அத்தை, மாமாவோட ஊர் சுத்திட்டு இருக்கலாமே!

நான் தான் உன்னை எப்பவும் மிரட்டுறேன், அவங்க ரெண்டு பேரும் உன்னை செல்லமா வச்சுப்பாங்களே... என்ஜாய் பண்ணு!"

"நீங்க இல்லைன்னா யார் என்னைத் தூங்க வைப்பாங்க? யார் எனக்கு இப்படி ஊட்டி விடுவாங்க? யார் பாடம் சொல்லிக் கொடுப்பாங்க? யார் எனக்கு என்ன வேணுமோ... அதை நான் கேக்காமலேயே செய்து கொடுப்பாங்க?"

இதழ்கள் கேள்வி கேட்டுக் கொண்டிருக்க, கைகளோ அவன் சட்டைக் காலரை பற்றி இழுத்து நிமிண்டிக் கொண்டிருந்தது. அவள் கேள்விகளில் பிரம்மித்தவன்... அதைக் காட்டிக் கொள்ளாமல், சூழலை இலகுவாக்க,

"உன்னைத் தவிர வேறு யாரும் என் சட்டையைப் பிடிச்சு இப்படி கேள்வி கேட்க முடியாது பேபி!" என்று அவள் கன்னம் கிள்ளி சிரித்தான்.

"நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்க ஆதி அத்தான்!"

"நீ என்னை ரொம்பத் தான் மிரட்டுற... போடி! அதுக்காகவே நான் தூரமாய் போறேன்!" என்றான் விளையாட்டாய். அவளோ, அவனது விளையாட்டை உணராமல்,

"சாரி... சாரி! அத்தான்... நான் இனிமேல் இப்படி பேச மாட்டேன்!" என்றாள் தவிப்பாக.

"ச்சு... நான் விளையாட்டுக்குத் தான் சொன்னேன். என் அம்மா, அப்பாவிற்கு பிறகு என்னை கேள்வி கேட்கிற உரிமை உனக்குத் தான் இருக்கு தங்கம்." காதல் வழிந்தது அவன் கண்களில். அவள் தோளைச் சுற்றி தன் கைகளால் இறுக்கியபடி....

"நான் மும்பைக்குப் போனால் வருஷத்துக்கு பத்து நாள் தான் லீவ் தருவாங்க. அது கூட எடுக்காமல் இருந்தால் தான் சீக்கிரம் வேலை நிரந்தரமாகும். சம்பளம் திருப்தியாக இருக்கும்.

துபாய் கம்பெனியில் பத்து நாள் லீவில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஊருக்கு வரலாம். ஆனால் சம்பளம் குறைவு. ப்ராஜக்ட் முடிந்ததும் ஊர் திரும்ப வேண்டியது தான். ஷட் டவுன் போது ஒரு மாதம், ரெண்டு மாதம் போக வேண்டியதிருக்கும். நான் எதைத் தேர்ந்தெடுக்க?"

"அத்தை, மாமா என்ன சொன்னாங்க?"

‘‘உன் இஷ்டம் என்று சொல்லிட்டாங்க!"

"அப்பறம் ஏன் என்னை கேட்கறீங்க?" (வளைச்சு வளைச்சு கேள்வியா கேட்குறாளே.... கொஞ்சம் வளர்ந்துட்டாளோ? )

"நீ தான் எனக்கு முக்கியம். எனக்கான முடிவு உன்னைச் சேர்ந்தது."

"நான் சொல்ற முடிவு தப்பாயிருந்தா?"

"நீ எது சொன்னாலும் சரியாத் தான் இருக்கும்!"

"நான் சொல்ற முடிவு உங்களுக்குப் பிடிக்கலைன்னா?"

"உன்னைப் பிடிக்கும் போது உன் முடிவும் பிடிக்கும்."

"அப்படின்னா... நான் ஆதி அத்தான் கிட்ட கேட்டுச் சொல்றேன். அவங்க என்ன சொன்னாலும் சரியாய் இருக்கும்!" என்றாள் கண்கள் மின்ன. (ஆன்னா... ஊன்னா... ஆதி அத்தனா... சொந்தமா யோசிக்கவே மாட்டியா? என்னமா நீங்க இப்படி பண்றீங்களேம்மா!)

அவன் கண்களில் பெருமிதமும், காதலும் போட்டி போட, அதைப் படிக்கத் தெரியவில்லை நிவேதாவிற்கு. அவளைத் தன்னோடு சேர்த்தனைத்தவன்,

"நிவி செல்லத்துக்காக நான் துபாய்க்கே போறேன்."

"நீங்க இல்லைன்னா நான் எப்படி இருப்பேன்?" (மறுபடியும் மொதல்ல இருந்தா.... ஆதி... நீ காலி!)

"அத்தை, மாமா, பிரபா அண்ணா, நந்துக்கா எல்லாரும் இருக்காங்களே! அப்பறம் என்ன?" ( நீ இவ்ளோ பொறுமைசாலியா?)

"யார் இருந்தாலும் ஆதி அத்தான் மாதிரி வருமா?" அவன் மார்பில் சலுகையாய் சாய்ந்தபடி அவனைப் பார்க்க, அவளை முத்தமிடத் துடித்த உணர்வை பெரும்பாடு பட்டு அடக்கினான்.

"நான் வார இறுதியில் நிச்சயம் உன்னோடு பேசறேன்… உனக்கு என் கூட பேசத் தோன்றினால் மிஸ்ட் கால் கொடு. நான் கூப்பிடுறேன். நீ அத்தை , மாமாவை பத்திரமா பார்த்துக்கோ. எனக்காக… உன்னை ரொம்ப ஜாக்கிரதையா பார்த்துக்கோ… செய்வியா?" என்றான் ஆழ்ந்த குரலில் அவள் முகம் நிமிர்த்தியபடி.

அவளால் பேச முடியவில்லை. கண்களில் நீர் மல்க 'சரி' என்பதாய் தலையசைத்தாள். அவள் முகத்தை தன் இரு கரங்களால் தாங்கி, சிந்திய கண்ணீர் துளியை கன்னம் தாண்ட விடாமல் முத்தத்தால் தடுத்து நிறுத்தினான்.

"சரி... ரொம்ப நேரம் ஆகிட்டது. நீ போய் படு. நான் கொஞ்ச நேரம் கழித்து வரேன்!"

"நீங்க ஊருக்குப் போற வரை என் கூடத் தான் இருக்கணும். உங்க மடியில் தான் தூங்குவேன்!" (நீ தூங்குவ...

உன் அத்தான் தூங்க வேண்டாமா? என்னடா இது ஆதிக்கு வந்த சோதனை!)

அவள் கேட்டுக்கொண்ட படியே கட்டிலில் அமர்ந்து, மடியில் ஒரு தலையனையை வைத்து, அவளை படுக்க வைத்தான்.

தலையை வருடிக் கொடுத்த பத்து நிமிடங்களில் உறக்கத்திற்குச் சென்றவளை பிரிய மனமின்றி வெகு நேரம் மடி தாங்கி அமர்ந்திருந்தான்.

விடிகாலை வேளையில் முருகனும், வள்ளியும் சாப்பாட்டுக் கூடை, மாற்று உடைகள் அடங்கிய பை மற்றும் தேங்காய் பழக்கூடை எல்லாவற்றோடும் மதுரையில் இருக்கும் அழகர் கோவிலுக்கு செல்வதற்காக தயாராகி வாசலில் வந்து நிற்க,

வேஷ்டியும், கருநீல நிற அரைக்கை சட்டையுமாய் வந்த பிரபா கதவைப் பூட்ட ,

"ஏய்யா! அந்த வெள்ளை சட்டையை போடப்படாதா? இது கருப்பு மாதிரியில்ல இருக்கு? கோயிலுக்குப் போய்..."

"இது ஊதாம்மா , வெள்ளைச் சட்டை அங்க போடுறதுக்கு எடுத்து வச்சுருக்கேன். சாமி கும்பிடத்தானே போறோம், பொண்ணு பார்க்க போற மாதிரி பில்ட் அப் பண்றீங்க..." செல்ல அலுப்பு ஏற்பட்டாலும், சிரிப்பும் வந்தது பிரபாவிற்கு. ஒரு

வழியாக திருப்பத்தூரிலிருந்து பஸ்-சில் அழகர் கோவில் அடிவாரத்துக்கு வந்துவிட்டனர்.

"மேலே போய் தீர்த்தமாடிவிட்டு வருவோம்" என்ற வள்ளியின் கட்டளையை ஏற்று மூவரும் நடக்கத் தொடங்கினர். பாதி தூரம் கடந்து விட்டிருந்தனர்.

எதிரே ஒரு இளம்பெண் இரண்டு கையிலும் பெரிய பிளாஸ்டிக் பைகளுடன் ஓடிவர, அவளைத் துரத்திக் கொண்டு, பத்து பனிரெண்டு குரங்குகள் கூட்டமாய் வர... கண் மண் தெரியாமல் ஓடிவந்தவள் பிரபாவின் மீது மோத,

நிலை தடுமாறியவன் இருவரும் கீழே விழாமல் இருக்க அவள் இடை பற்றி அணைத்தபடியே அவள் கையில் இருந்த பைகளை பறித்து வீச, குரங்குகள் அதை தூக்கிக் கொண்டு ஓடிவிட்டன. அவன் மார்பில் முகம் புதைத்திருந்தவள் வேக மூச்சுகளுடன் அவனை நிமிர்ந்து பார்க்க,

‘‘ஏய் பார்பி!" என எண்ணியபடி ஆச்சர்யமாய் விழிவிரிக்க,

"இந்தக் கருவாயனா?" என நினைத்தவள், பட்டென விலகிக் கொண்டாள்.

"பவானிம்மா, நீங்க எங்கம்மா இங்க? சொல்லியிருந்தா நான் கூட்டி வந்திருப்பேனே?"

"பிரெண்ட்ஸ் கூட பிக்னிக் வந்தேன். ஸ்னேக்ஸ் பேகை பார்த்ததும் குரங்கெல்லாம் துரத்த ஆரம்பிச்சுடுச்சு அங்கிள்!"

என்று தனது காரோட்டியிடம் விளக்கம் வைத்தவள், எங்கோ பார்வையை பதித்திருந்த பிரபாவின் மீது உக்கிர பார்வையை வீசினாள்.

"இந்த கருவாப்பயலுக்கு இவ்வளவு திமிர் ஆகாது. பார்க்கிறானா பாரு, இருடா! உன்னை ..." அவள் கருவிக் கொண்டிருக்கும் போதே தோழிகள் வந்துவிட்டனர்.

"ஏய் பவானி! ஸ்னாக்ஸ் எல்லாத்தையும் உன் தம்பி, தங்கச்சிக்கு கொடுத்துட்டியா?" கலகலவென சிரித்த நாலு தோழிகளையும் முறைத்தவள்,

"ஆமாடி... தூக்கி போடுன்னு சொல்ல புத்தி இல்ல... இப்போ வந்து கேளுங்க!" கடுப்படித்தாள்.

"பவானிம்மா மேலே தீர்த்தமாடிட்டீங்களா?"

"ஹிப் ஹாப், ஜாஸ் தெரியும். பரதம் ஆடுறது கூடத் தெரியும். அதென்ன ஆண்ட்டி தீர்த்தம் ஆடுறது?" அறியாக் குழந்தையாய் இமை தட்டி பேந்தப் பேந்த விழிக்க,

எவ்வளவு தான் சிரிப்பை அடக்க... பற்களால் உதடு அழுத்தினாலும் சிரிக்கும் கண்களும், விரிந்த உதடுகளும் பிரபாவின் சிரிப்பை அவளுக்குக் காட்டிக் கொடுத்தன. (என்னைப் பார்த்தா சிரிக்கிற... இரு... உன்னை கதறடிக்கிறேன்!)

"மேலே புனித தீர்த்தமெல்லாம் இருக்கும். இங்கு வந்தால் அதில் கண்டிப்பா குளிக்கணும். அதைத் தான் அப்படி சொல்றா." முருகன் எடுத்துச் சொன்னார்.

"அச்சச்சோ... எனக்கு தெரியாதே!"

"அதனால் என்னம்மா? வாங்க... இப்போ போகலாம்!" வெள்ளந்தியாய் வள்ளி அம்மையார் சொல்ல...

"இல்ல ஆண்ட்டி... நான் வேற ட்ரெஸ்ஸெல்லாம் கொண்டு வரல..."

"கீழே கடை இருக்கும். நாம போய் வரிசையில் நிப்போம். பிரபா வாங்கிட்டு வருவான்."

"ஐயோ! அம்மா இவ புடவையெல்லாம் கட்ட மாட்டாளே... நான் எப்படி வாங்குவேன்?" மிரண்டு விழித்தானே தவிர மறுப்பு சொல்லவில்லை. அவனருகே வந்தவள்,

"நடந்து தான் போகணும் இல்ல பிரபா?" எள்ளல் வழிந்தது அவளிடம்.

"திமிர்?! உன் சைஸ் என்ன?" கேலி கூத்தாடியது அவனிடம்.

"ஏய்!" மென்குரலில் அவள் சீற,

"சுடிதார், மிடி, புடவை இது தான் இங்கெல்லாம் இருக்கும்... சைஸ் தெரியாமல் எப்படி வாங்குவது?" புருவம் உயர்த்தி வினவ, பல்லைக் கடித்தவள்,

"... " என முணுமுணுக்க...

‘‘கேக்கல.." மந்தகாச சிரிப்பு அவனிடம். சட்டென அவன் சட்டையில் இருந்த பேனாவை எடுத்தவள், அவன் உள்ளங்கையில் எழுத, அவளது தீண்டல்களை சற்றும் எதிர்பார்க்காதவன் திகைத்து விழித்தாலும் பெண்ணின் முதல் ஸ்பரிசம் என்னன்னவோ செய்தது.

அவளோ அதையெல்லாம் அறியாதவளாய் தன் பர்சில் இருந்து பணம் எடுக்க,

"பவானிம்மா... உள்ளே வைங்க. எங்ககிட்ட இருக்கு. பிரபா வாங்காத...!" என முருகன் மகனுக்கு ஆணையிட,

"வைங்க வனிம்மா... நீங்க எவ்வளவோ செஞ்சுருக்கீங்க, உங்களுக்கு ஒரு டிரஸ் வாங்கிக் கொடுக்க மாட்டோமா?"கனிவாகச் சொன்னவன், விலகி கீழே இறங்கத் தொடங்கிவிட்டான்.

வனிம்மா இதுவரை தான் கேட்டிறாத அழைப்பு... இப்போது திகைப்பது அவள் முறையாயிற்று.

"ஏய் பவானி... திரும்ப மேலே போகப் போறியா?"

"ம்... இன்னைக்கு முருகன் அங்கிள் கூடத் தான் இருக்கப் போறேன். ஆபத்துன்னதும் என்னை கழட்டி விட்டுடீங்கள்ள... போங்கடி! உங்க கூட வரமுடியாது."

"ஏய்! அப்போ நாங்க எப்படிப் போறது? நீ தானே இந்த பிளானை போட்ட..."

"நீங்க என் காரை எடுத்துட்டு போங்க, நான் முருகன் அங்கிள் கூட வருவேன்..." ஏனோ இந்த குடும்ப சூழலை அனுபவிக்க வேண்டும் என்ற வீம்பு வந்துவிட்டது பவானிக்கு.

"பவானிம்மா! நாங்க பஸ்ல வந்தோம்..." முருகன் பதற,

"அதனால் என்ன? என்னையும் கூட்டிப் போக மாட்டடீங்களா?"

மறுக்கவே முடியாமல் பாவம் போலும் கேட்க, தலையாட்டி வைத்தார் முருகன். தோழிகளை அனுப்பி வைத்தவள் , வள்ளியின் கரம் பிடித்துக் கொண்டு நடக்கத் தொடங்கிவிட்டாள்.

மேலே நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது. ஒரு வழியாக இவர்கள் முறை வந்ததும், வள்ளியுடன் சென்று நீராடி விட்டுவர , பிரபா வந்த பாடாயில்லை. (நீ அவனை நடக்க வெச்... அவன் உன்னை நடுங்க வைக்கிறான்!) ஈர உடையுடன் வெடவெடத்துக் கொண்டிருக்க, பிரபாவின் துண்டை எடுத்து தலை துவட்டி தோளோடு போர்த்தி விட்டார் வள்ளி.

"இங்கேயே இருங்கம்மா, பிரபா இப்போ வந்துருவான். நான் சேலையை மாத்திட்டு வரேன்..." என சென்று விட்டார். பிரபாவும் வந்துவிட்டான்.

"இந்தா... மாத்திக்கோ!" எனத் துணிப்பையை அவளிடம் நீட்ட,

"இங்க... எப்படி?" அவள் முழிக்க,

"கஷ்டம் தான்! சரி கூட்டம் இல்லாமல் இருக்கு. நான் குளிச்சுட்டு வந்துடறேன். கொஞ்சம் இதையெல்லாம் பிடி!" என அவன் வாட்ச், வாலெட், பேனா எல்லாவற்றையும் கொடுக்க, முறைப்புடன் வாங்கிக் கொண்டவள், கை கொள்ளாமல் நிற்க, தன் சட்டையைக் கழட்டி அவள் தோளில் போட்டவன்,

"கையில் இருக்கிற பையில் போட வேண்டியது தானே?" கூறியபடி சென்றுவிட்டான்.

"நான் என்ன உன்... எல்லாத்தையும் என்கிட்ட திணிக்கிற..." பல்லை கடித்தாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனோ அவனது வாலட்டை பிரித்துப் பார்க்க கை பரபரத்தது.

முருகன் அங்கிளையும் காணோம்... வள்ளி ஆன்ட்டியையும் காணோம்... இவனும் பார்க்கமாட்டான்... திறந்து பார்த்திடலாம்... திறக்க உள்ளே இரண்டு வங்கி அட்டைகள், கொஞ்சம் பணம்... பெற்றோருக்கு நடுவில் நின்று இருவரையும் அணைத்தபடி குட்டியாய் ஒரு புகைப்படம்.

அதை பார்த்தும் ஏனென்று தெரியாமல் விழிகளில் நீர் கோர்த்துக் கொண்டது. பட்டென மூடி அவன் சொன்னபடி செய்தவள், தோளில் கிடந்த சட்டையை எடுக்கத் தோன்றாமல் நின்று கொண்டிருக்க, வள்ளி வந்துவிட்டார்.

"பிரபா வந்துட்டானாம்மா? அதெல்லாம் இப்படிக் கொடுங்க!" என சட்டையை எடுத்துக் கொண்டதும், பையையும் கொடுத்தவள்,

"இங்கன (இங்கு) மாத்துறது உங்களுக்கு சங்கடமா இருக்குமே!" என செய்வதறியாது திகைத்திருக்க, ஈரம் சொட்ட, சொட்ட வந்தவன்,

"அம்மா... துண்டு!" என வெடவெடக்க, வெள்ளை பனியனும், வேஷ்டியுமாய் நின்றவனைக் கண்டவள் (பார்டா... கருவாயன் கூட அழகாத் தான் இருக்கான்) எனப் பார்த்துக் கொண்டிருக்க,

"துண்டைக் கொடு! " என அவன் முணுமுணுத்ததும் தான் இவ்வளவு நேரமும் அவன் துண்டைத் தான் போர்த்தியிருக்கிறோம் என்பது விளங்க, அவனிடம் நீட்டினாள். சற்று நேரத்தில் உடை மாற்றிக் கொண்டு வந்தவன்,

"அம்மா, கீழே போற வழியில் காட்டு சரிவில் இறங்கி உங்க புடவையில் தடுப்பு உண்டாக்கி கொடுக்கலாம். வனிம்மா அதுல உடை மாத்திக்கட்டும்!" என்றதும் தான் அனைவராலும் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது.

அவனது அக்கறை பிடித்திருந்தாலும் இதெல்லாம் நீ ஏன் பண்ணனும்? எனும் கோபமும் வந்தது பவானிக்கு... இது எங்கு போய் முடியுமோ?

# அத்தியாயம் 22

"ஈரத் துணியோடு எவ்வளவு நேரம் இருக்க முடியும்... புதுத் துணி வாங்கியும் போட முடியலையேன்னு சங்கடமாப் போச்சு... இது நல்ல யோசனை பிரபா!" என்றபடியே முருகனிடம் அணைத்து பைகளையும் ஒப்படைத்துவிட்டு, பிரபாவும், வள்ளியும் பவானியை அழைத்துக் கொண்டு மலைச்சரிவில் இறங்கி காட்டிற்குள் நடக்கத் தொடங்கினர்.

அவளது உடைகள் அடங்கிய பையை பிரபாவே வைத்திருந்தான். கொஞ்சம் அடர்த்தியான மரங்களுக்கு இடையில் வந்ததும், அருகருகே இருந்த மரங்களைச் சுற்றி அன்னையின் புடவையை வைத்து அரண் உருவாக்கினான். (இன்ஜினியரிங் படிச்சது வீண் போகல மாப்பிள்ளை...)

"நான் அந்தப் பக்கம் இருக்கேன்... மாத்திட்டு வாங்க!" என அம்மாவிடம் சொல்லிவிட்டு, இவர்கள் கண்பார்வைக்குள் இருக்கும்படி கொஞ்சம் தொலைவில் சென்று நின்று கொண்டான்.

'ஐயோ இதென்ன எல்லாமே வாங்கிட்டு வந்திருக்கானே... கருமம் கருமம் பப்பி சேமா போச்சே... இது உனக்கு தேவையா? ஒழுங்கா பிக்னிக் வந்தமா... அந்த வானரங்களோட கூத்தடிச்சோமா... வீட்டுக்கு போனோமான்னு இல்லாம... இந்த

கருவாயனெல்லாம் ஒரு ஆளுன்னு கிறுக்கு தனமா என்னென்னவோ பண்ணி அசிங்கமா போச்சே...' நொந்துபோனாள் பவானி.

இதுவரை அவளுக்கு யாரும் உடையெல்லாம் வாங்கிக் கொடுத்ததில்லை. எல்லாம் அவள் தெரிவு தான். இன்று சுடிதாரோடு சேர்த்து உள்ளாடைகளும் வாங்கி வந்திருந்த பிரபாவின் அக்கறை எரிச்சலூட்டியது. அவள் நிறத்திற்கு பாந்தமாய்... அளவெடுத்து தைத்தது போல் கனகச்சிதமாக இருந்தது சுடிதார்.

ஒரு வழியாய் உடை மாற்றி வர, அவளை நிமிர்ந்தும் பார்க்காமல் தாண்டிச் சென்று சேலையை அவிழ்க்கத் தொடங்கினான். அவன் தன்னைப் பார்க்காதது அவள் ஈகோவிற்கு அடி விழுந்தது போல் தோன்ற, அவனுக்கு நன்றி சொல்ல நினைத்தவள், அதைச் சொல்லாமல் அவனைத் திரும்பி திரும்பி பார்த்தபடி வள்ளியுடன் சென்றாள்.

பிரபா ஓரக்கண்ணால் அனைத்தையும் பார்த்தாலும், ஏதும் நடக்காதது போல் திரும்பினான். பழமுதிர்சோலைக்குச் சென்று முருகனை வழிபட அவள் எங்கே சுவாமியைப் பார்த்தாள்... பக்த கோடிகளையும், அவர்களது உரையாடல்களையும் பார்த்து திணறிக் கொண்டிருந்தாள்.

இவர்கள் ஏன் வீட்டு விஷயங்களையும், பொது விஷயங்களையும் பேசுகிறார்கள்? இங்கு அமைதியாய் இருக்க வேண்டாமா? அமைதியில் தானே மனம் ஒருமுகப்படும். அப்பொழுது தானே தனக்கு என்ன வேண்டும் என்பதை தெளிவாய் சிந்திக்க முடியும்.

சிந்தித்தால் தானே அதை கடவுளிடம் கேட்க முடியும்? அவள் எண்ணம் இப்படிச் செல்ல, சாமியும் கும்பிடவில்லை, விபூதியும் வாங்கவில்லை. அடுத்ததாக கருப்பர் சன்னிதிக்கு வர, அப்பொழுது தான் ஒருசிலர் ஆட்டு கிடாயை பலிகொடுத்துக் கொண்டிருந்தனர்.

அவ்வளவு தான் ரத்ததையும், துடித்து அடங்கும் ஆட்டு கிடாயின் உடலையும் கண்டவள் வெகுண்டு எழுந்துவிட்டாள் என்று தான் சொல்ல வேண்டும். அவள் கோபத்தில் முருகனும், வள்ளியும் எங்கே சண்டை வந்துவிடுமோ என மிரண்டு போயினர். பிரபா தான் அவள் கரம் பிடித்து அங்கிருந்து இழுத்துவந்தான்.

"வனி! இதெல்லாம் வேண்டுதல் அவங்களுக்கு ஏதாவது நல்லது நடந்திருக்கும் அதுக்கு நன்றிக்கடனா பலி கொடுக்கறாங்க. இதிலென்ன தப்பு?"

"கையையோ காலையோ வெட்டிக்க வேண்டியது தானே? அதெல்லாம் செய்யமாட்டாங்களே... அதையெல்லாம் சாப்பிட முடியாதே..."

"ஆமா சாப்பிடத்தான் வெட்டுறாங்கன்னே வச்சுக்கோ. அதில் என்ன தப்பு இருக்கு? அவங்க மட்டும் சாப்பிடப் போறதில்லை... யார் போனாலும் சாப்பாடு போடுவாங்க. எத்தனையோ பேர் இதெல்லாம் வாங்கி சாப்பிட முடியாத ஏழைகள் கூட இப்படி போய் சாப்பிடுவாங்க. அது நல்ல விஷயம் தானே.

எல்லா கெட்டதுலயும் ஒரு நல்லதும், எல்லா நல்ல விஷயத்திலும் ஒரு கெடுதலும் இருக்கத் தான் செய்யும். உன் கண்ணுக்கு தெரிந்து நடந்தால் அது கொலை... இல்லன்னா சாதாரண நான்வெஜ்... அப்படி தானே?" அமைதியாய் கேட்டவனுக்கு பதில் சொல்ல முடியாமல் விழிக்கத்தான் வேண்டியிருந்தது.

கோவிலுக்குள் சென்று அழகரை வழிபட, கூட்ட நெரிசலால் அவன் பின்னே செல்லும்படி நேர்ந்தது. அவன் மீது இரண்டு முறை முட்டிக் கொண்டாள். சட்டையைப் பற்றி இழுத்தவளை திரும்பி பார்க்க,

"நான் முன்னாடி போறேன். நீ என் பின்னே வா!" என்றாள் கோபமாக. புருவம் ஏற்றி இறக்கினாலும், அவள் முன்னே செல்ல

வழிவிட்டான். என்ன முயன்றும் அவன் மேல் படாமல் செல்ல முடியவில்லை.

அதற்கும் அவன் மீதே எரிச்சல் கொண்டவள், அவன் காலை மிதித்து விட்டே சென்றாள். பலி கொடுத்த நிகழ்விலேயே அவள் மனம் நின்றுவிட, பிரசாதம் கூடப் பெறாமல் அவள் எங்கோ கவனத்தில் இருப்பதைக் கண்டவன், சற்றும் யோசிக்காமல் தன் கையில் இருந்ததை வைத்து விட்டான். அவன் தொடுதலில் தன்னிலை பெற்றவள்,

"என்ன?" என்றாள் கண்களில் கனல் பறக்க.

"பிரசாதம்..." என்றான் திணறலாக. அவனை முறைத்தபடி, அதை அழிக்க சென்ற கையை கடைசி நொடியில் இறக்கி விட்டாள்.

"தேவையில்லாமல் என்னைத் தொட்டுப் பேசினால் எனக்குப் பிடிக்காது... பீ கேர்புல்!" என்றாள் கடினக்குரலில். சட்டென அவன் முகம் வாடிவிட்டது. இருந்தாலும் தன்னை சமன்படுத்தியவன், அங்கிருந்து நகர்ந்து சென்றான்.

வெளியே, நிழலாய் ஓரிடம் பார்த்து அமர்ந்தவர்களிடம் வள்ளி வீட்டிலிருந்து செய்துகொண்டு வந்த புளியோதரையையும், பருப்பு துவயலையும், உருளைக்கிழங்கு சிப்ஸோடு தர, அமிர்தமாய் இறங்கியது தொண்டையில். நடந்ததும், குளித்ததும் அவளுக்கு நல்ல பசியைத் தந்திருந்தது.

வள்ளியின் கைப் பக்குவம் அபாரம், சாப்பாட்டில் அன்பையும் சேர்த்து அல்லவா கொடுத்திருந்தார். ஒரு நொடி பவானி அதில் மயங்கித் தான் போனாள்.

"ஆன்ட்டி... இது என்ன சாதம்?"

"இது புளியோதரைம்மா!"

"சூப்பரா இருக்கு. நான் இது வரை சாப்பிட்டதே இல்லை. இந்த சைடு டிஷ் கூட சூப்பர்!" என்றாள் மனப்பூர்வமாய்.

"இதெல்லாம் எங்க வீட்டு குக் செய்ய மாட்டார். ஒரு வேளை, எங்க அம்மா இருந்திருந்தால் செய்திருப்பாங்களோ...?" என்றாள் எதிர்பார்ப்பும், நிராசையுமாய்.

அவள் கண்களில் எட்டிப் பார்த்த ஏக்கத்தைக் கண்டு பிரபாவிற்கு தலைக்கு ஏற... இருமத் தொடங்கிவிட்டான். அவன் கண்களில் கண்ணீர் ஊற்ற, முருகனும்,வள்ளியும் பதறி விட்டனர்.

தலையை வள்ளி தட்ட, நெஞ்சையும், முதுகையும் தடவி முருகன் ஆசுவாசப்படுத்தினார். அவன் நிலைபெற ஐந்து நிமிடங்கள் ஆனது.

"இவ்ளோ பெரிய பிள்ளையானாலும், தன்னால ஒழுங்கா சாப்பிடத் தெரியுதா? நானே ஊட்டியிருப்பேன். இப்போ பாரு பொறை ஏறிடுச்சு! இங்க கொடு. ஊட்டுறேன்." என்று சொன்னபடியே அவனுக்கு ஊட்டத் தொடங்கிவிட்டார்.

ஆர்வமாய் அவன் வாங்கத் தொடங்கினாலும், பவானியின் பார்வையை சந்தித்தவன், சற்றே அசடு வழிய பார்வையை திருப்பிக் கொண்டான்.

பவானியோ இவர்களது பாசப் பிணைப்பை கண்டு ஒரு நொடி ஏங்கினாலும், தன்னை மீட்டவள் பிரபாவை ஏளனமாய் ஒரு பார்வை பார்த்தாள்.

"இன்னும் தானாக சாப்பிடத் தெரியாதா?" என்பதாய்.

சாப்பிட்டு முடித்தவன், தன் தாய்க்கு ஊட்டி விடவும் மறக்கவில்லை. அவர் கை வேலையை செய்து கொண்டிருக்க, இவன் ஊட்டினான்.

"ஷப்பா... இவங்க ட்ராமா தாங்க முடியலையே!" இப்பொழுது ஏக்கம் கோபமாய் மாறியிருந்தது. தனக்கு என்றும் கிடைக்காத ஒன்று இவனுக்கு தினம், தினம் சுலபமாய் கிடைக்கிறதே... அப்போ நான் பணக்காரி மட்டும் தான். பாசத்தில் நான் ரொம்ப ஏழையோ... முயன்று தன் எண்ணத்தைக் கட்டுப்படுத்தினாள்.

"அம்மா... ஒரு அரை மணி நேரம் ரெஸ்ட் எடுத்துட்டுப் போகலாம்மா... ப்ளீஸ்!" என்றான் கெஞ்சலாய்.

"பவானிம்மா, என்ன பண்ணுவோம்? வெயில் கடுமையா இருக்கு. இங்கே நிழலில் சற்று ஓய்வெடுப்போமா இல்லை கிளம்புவோமா?" என்று முருகன் அவளிடம் தன்மையாய் கேட்க,

பிரபாவிற்காகவே கிளம்பலாம் என்று சொல்ல நினைத்தவள், ஏனோ,

"ரெஸ்ட் எடுத்துட்டு போகலாம்!" என்றாள்.

"நீங்க இங்க படுக்கறீங்களாமா?" என்றார் வள்ளி.

"ச்சே... ச்சே! இங்கே எப்படி...?"

"அம்மா, உங்க புடவையைக் கொடுங்க!" என்று வாங்கியவன், அதை விரித்து அவன் தாயை அமர வைத்து அவர் மடியில் தலை வைத்து கால் நீட்டி படுத்துவிட்டான்.

"ஆண்ட்டி , இப்படியேவா இருப்பீங்க? உங்க கால் வலிக்காதா?"

"இது எனக்கு பழக்கம் தான். தாய்க்கு பிள்ளை என்னைக்குமே பாரமாகாது." என்றார் சிரித்தபடி.

"இவ்வளவு பெரியவனா வளர்ந்தப்பறம் கூட, சின்ன பிள்ளை மாதிரி மடியில படுக்கிற பையனை இப்போ தான் பார்க்கிறேன்!" என்றாள் முணுமுணுப்பாக.

தாயின் தலை கோதலில் படுத்த ஐந்தாம் நிமிடம் உறங்கிவிட்டான். ஒரு பக்கம் அவன் சிறு பிள்ளைத் தனம் ஆச்சர்யம் அளித்தாலும், மனதின் ஓரம் பொறாமை எட்டிப் பார்த்தது.

"சே! என்னதிது? போயும், போயும் இவனோடு போட்டி போடுகிறேன். இவனை இம்சை செய்வதாய் தான் பிளான்

செய்து, தோழிகளை கழட்டி விட்டு வந்தேன். போகிற போக்கை பார்த்தால் இவன் தான் என்னைத் தன் செய்கைகளால் வதைக்கிறான். நான் போட்ட திட்டம், எனக்கு எதிராய் திரும்புகிறதோ?

இவன் கண்ணை மட்டும் பார்க்கவே கூடாது. அதில் ஏதோ ஒன்று என்னை அவன் சொல்படி நடக்க வைக்கிறது. இவன் சிரிப்பு என்னோடு சேர்ந்து கொள்ளேன் என்று அழைக்கிறது.

நான் அர்ஜூனிடம் கூட இப்படி நெருக்கமாக உணர்ந்ததில்லை! என்று தனக்குள் போராடி கலைத்துப் போனவளாய், வீசிய காற்றின் தாலாட்டை ஏற்று, அவனருகில் சேலையின் மீதே படுத்துவிட்டாள்.

தன் கையையே மடக்கி தலைக்கு வைத்து படுத்து உறங்கியவளை பார்க்க வள்ளிக்கு ஏனோ பாவமாய் தோன்ற, தன் அருகில் இருந்த துணிப்பையை தலையணையாய் வைக்க எண்ணி, சற்று அசைய, பிரபா விழித்துக் கொண்டான்.

"என்னாச்சும்மா?"

"ஷ்... மெதுவா. பவானிமா தூங்குறாங்க!" என்றார் மென் குரலில்.

"எங்கே?" என்றபடியே மறுபுறம் திரும்ப, தனக்கு வெகு அருகில் அவள் படுத்திருப்பதை நம்ப முடியாதவனாய் பார்த்துக்கொண்டிருந்தான். அவள் மீது படாதவாறு வெகு

ஜாக்கிரதையாய் எழுந்தவன், தாயை கால் நீட்டச் செய்து, அவளது தலையைத் தூக்கி மடியில் கிடத்தினான்.

அலங்கார கட்டிலில், விலை உயர்ந்த மெத்தையில், ஏசி இல்லாமல் தூங்கியே பழகியிராத இந்த மங்கை, இங்கே எப்படி இவ்வளவு நிம்மதியாய், நிச்சலனமாய் தூங்கினாளோ? இருபது நிமிடங்கள் களைத்து விழித்தவள், தான் வள்ளி ஆண்ட்டியின் மடியில் இருப்பதை உணர்ந்து வெடுக்கென்று எழ,

"மெதுவாம்மா... தூங்கி எழும் போது திடுக்குன்னு எந்திரிக்கக் கூடாது." என்றபடி ஆசுவாசப்படுத்தினார் அந்தத் தாய். தண்ணீர் பாட்டிலை கொடுத்து,

"முகம் கழுவிட்டு வாங்க பவானிம்மா... சூடா டீ சாப்பிடலாம்..." என்றார் அன்பான வருடலுடன். இதுவரை சுவைத்தே அறியாத பருப்புவடை அமிர்தமாக இருந்தது.

"இது என்னன்னு கேட்டா சிரிப்பானே... எதிரியையும் தன் பக்கம் இலகுவாக சாய்க்கும் சிரிப்பாக வேறு இருந்து தொலைக்குமே..." அவள் மனதை படித்தவனாய்,

"அம்மா டீ கடையில் சூடா பருப்பு வடை போட்டாங்க... அதான் வாங்கினேன் எப்படி இருக்கு?" மலர்ந்த முறுவலுடன் அன்னையிடம் தான் கேட்டான்.

இவனால் சிரிக்காமல் பேசவே முடியாதோ? மூஞ்சியைப் பார்... லாஃபிங் புத்தா மாதிரி... இதுக்குப்பேர் பருப்பு

வடையாக்கும் டீக்கடையில் கிடைக்குமோ...? அடுத்த முறை டிரை பண்ணிட வேண்டியது தான்.

கண்ணை பாரு அப்படியே வள்ளி ஆன்டியோடது ரெண்டு பேரும் கண்ணில் காந்தம் வச்சிருக்காங்க போல... அச்சுவோட பார்வை கூட என்னை இந்த அளவுக்கு பாதிச்சதில்லை... இவன் ஏறெடுத்துக் கூட பார்க்க மாட்டேங்கிறான்... ஆனாலும் எதோ ஒன்னு... அதற்கு மேல் யோசிக்க பிடிக்காதவளாய் தலை சிலுப்பி தன்னை நிலைப்படுத்திக் கொள்ள...

"பவானிம்மா... நான் தலை சீவிவிடட்டுமா?" தாயின் பரிவு அவரிடம். எப்போதும் தலைவிரி கோலமாய் இருப்பது தான் அவள் இயல்பு. ஆனால் மறுக்கத் தோன்றாமல் இசைவாக தலையசைக்க...

"பிரபா... பூவும் ஹேர்பின்னும் வாங்கிட்டுவா..." அன்னை சொன்னதோடு சேர்த்து அவள் உடைக்கு பொருத்தமான ஹேர் பேண்டும் வாங்கி வந்திருந்தான். நேர் வகிடெடுத்து இருபுறமும் முடியை டிவிஸ்ட் பண்ணி பின்கள் குத்தி தளரப்பின்னி மதுரை மல்லியையும் வைத்து விட,

"அம்மா! இதெல்லாம் உங்களுக்கு தெரியுமா?" ஆச்சரியம் தாங்காமல் கேட்டேவிட்டான் பிரபா.

'நீ பெண்பிள்ளையா பிறந்திருந்தா அழகழகா செஞ்சுவிட்டிருப்பேன்." பெருமையாகச் சொன்னார் வள்ளி.

இன்று எல்லாமே பவானிக்கு புதிய அனுபவம் தான். காலையில் குரங்கு துரத்தியதில் இருந்து ஆரம்பித்தது... இன்னும் தொடர்கிறது. தனக்கு பொருத்தமான வண்ணத்தில் சுடிதார் வாங்கியது பிரபா என்றாலும்,

தோடு வளையலெல்லாம் போடாதவளை கடைக்கு அழைத்துச் சென்று கண்ணாடி வளையல்களும், தோடும் மெல்லிய செயினும் சேர்ந்திருப்பது போல் அவள் உடைக்கு பொருத்தமாய் கவரிங் நகை செட்டும் வாங்கிக் கொடுத்து போடவும் வைத்திருந்தார் வள்ளி.

தளரபின்னிய கூந்தல் இன்று புதிதாய் இடை உரசுவது போல் ஒரு பிரேமை உண்டாக்க... தோள்களில் வழியும் மல்லிகை சரம், மற்ற அணிமணிகள் அனைத்திலும் செல்ஃபியின் மூலம் தன்னை பார்த்தவளுக்கு ரொம்பவும் வித்தியாசமாய் இன்று தான் பெண் என்னும் உணர்வே வந்திருப்பது போல் தோன்றியது.

ஆடை ஆபரணங்களில் பெரிதாக ஈடுபாடு இல்லாத போதும் இவை எதையுமே மறுக்காமல் வள்ளியின் விருப்பப்படி செய்தது ஆச்சரியமாக வேறு இருந்தது. பிரபாவிடம் தனது கைபேசியை கொடுத்து முருகன் மற்றும் வள்ளியுடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டாள்.

முதலாளி அம்மாவுடன் படமெடுக்க முருகன் கூச்சப்பட்டார் என்றால் வள்ளியோ ரொம்பவும் வெட்கப்பட்டார். அதெல்லாம் ரசித்த படியே புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தான் பிரபா. பஸ்சிற்காகவும் காத்திருக்க வேண்டியதிருந்தது.

ஒருவழியாக பஸ்ஸில் அன்னையை முதலில் ஏறச் சொன்னவன், அடுத்து பவானிக்கு கண் காட்ட உயரமான படியில் தன் ஹீல்ஸ் செருப்புடன் ஏறுவதற்குள் தடுமாறிப் போனாள்.

'கவனம் வனிம்மா!' சொன்னவன் அவள் கீழே விழாதவாறு அரணாக நின்றான். அதற்குள் தந்தையும் ஏறிவிட்டார். வள்ளி பஸ்ஸின் நடுவில் மாட்டிக் கொண்டார். முருகன் படிக்கு அருகே நிற்க பிரபா அவருக்கு கொஞ்சம் முன்னாள் நின்றான். அவனை ஒட்டி பவானி நின்றுகொண்டாள்.

அமருவதற்கெல்லாம் இடமில்லை. கூட்டம் வழிந்தது. எங்கு பிடிக்க? தடுமாறியவள் அவன் கை பார்த்து மேலே பிடிக்க, ஹீல்ஸ் போட்டிருந்தாலும் எட்டியும் எட்டாமலும் சிரமப்பட வேண்டியதாக்கிப் போனது.

"இங்கு பிடி வனி!" சீட்டில் இருக்கும் கம்பியை காட்டினான். கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டாலும், பஸ் போகும் போக்கில் எங்கு போய் விழப் போகிறோமோ? பயம் வந்துவிட்டது பவானிக்கு.

இது தேவையா? இவனை வெறுப்பேத்த திட்டம் போட்டு நீ எங்காவது விழுந்து வச்சிடுவ போல இருக்கே... இவன் எப்படி அசையாமல் நிற்கிறான்?' அவளது ஆராய்ச்சி புரிந்தவனாய்,

"கால்களை கொஞ்சம் அகட்டி வச்சு நின்னா தடுமாற மாட்டோம்." சொன்னவனிடம் கேலி இல்லை. ஸ்நேகச் சிரிப்பு மட்டுமே.

அடுத்தடுத்த நிறுத்தங்களில் மக்கள் ஏறினார்களே தவிர யாரும் இறங்கவில்லை. கூட்ட நெரிசல் பழக்கமில்லாததால் யாரேனும் உரசினால் இவள் நெளிய, அவளது சங்கடம் புரிந்தவனாய் கீழிருக்கும் கம்பியை இரு கைகளாலும் பிடித்து யாரும் இடிக்காதபடி தன் கைவலயத்துக்குள் நிறுத்திக் கொண்டான்.

அவளது நெருக்கம் அவனை இம்சிக்கத்தான் செய்தது. அரைமணி நேரம் கடந்துவிட்டது.

"இன்னும் எவ்வளவு நேரமாகும்?" நிற்க முடியாமல் கால் மாற்றி தவித்தாள்.

'ஒருமணி நேரமாகும் வனி! செருப்பை கழட்டிட்டு என் கால் மேல நில்லு!"

"ஏய்! என்ன ரொம்ப ஓவரா போற?" அவள் காண்டாகி சீற,

"ஆமாடி! உன்னை தூக்கி சுமக்கனும்னு வேண்டுதல் பார். பாவம் ஹீல்ஸ் போட்டு ரொம்ப நேரம் நிக்க முடியாதேன்னு சொன்னா ரொம்பத்தான்."

"பிரபா! இட்ஸ் டூ மச்... கொஞ்சமும் மரியாதை இல்லாமல் வனி... நீ... வா... போன்னு பேசுறன்னு பார்த்தா... இப்போ டீ போட ஆரம்பிச்சுட்ட?" உக்கிரமாய் உரும,

"எப்படியும் உன்னைவிட சில மாசமாவது நான் பெரிய பையனா தான் இருப்பேன். முதல்ல நீ மரியாதையா கூப்பிடு அப்புறம் எதிர்பார்க்கலாம்..."

"நான் யார் தெரியுமா?" எண்ணையில் போட்ட கடுகாய் வெடிக்க,

"உன்னிடம் வேலை பார்ப்பது என் அப்பா தான். நான் இல்ல! அதுவும் உன் அப்பா தான் முதலாளி... சும்மா எகிராத..."

"ஏம்பா உங்க காதல் சண்டையையெல்லாம் அப்புறம் வச்சுக்கோங்க... நான் இறங்கணும் கொஞ்சம் வழி விடுங்க!" இருக்கையில் இருந்த பெரியவர் எழ,

"காதல் சண்டையா? போயும் போயும் இந்த கருவாயனையா? நெவர்! எனக்கு ஏற்கனவே ஆள் இருக்கு." முகம் திருப்பிக் கொண்டவள் அந்த இருக்கையில் அமர்ந்துவிட்டாள்.

"போடி வெள்ளெலி! எனக்கும் தான் ஆள் இருக்கு!" அவன் சும்மா தான் சொல்லி வைத்தான். கோபம் கண்களை மறைக்க நச்சென அவன் காலை மிதித்துவிட்டாள்.

"ஸ்... அம்மா!" சத்தமில்லாமல் அலறியவன் ஹீல்ஸ் குத்தியதில் துடித்துப் போனான். ஒரு நொடி பாவமாக இருந்தாலும் சட்டென இயல்புக்கு திரும்பியவள் வேடிக்கை பார்க்கத் தொடங்கிவிட்டாள். அவளுக்கு அருகே இருந்த பெண்மணி எழுந்துவிட,

"ஏய்! நகர்ந்து உட்கார்!"

"முடியாது!"

"அப்போ நான் உள்ளே போய் உட்காரவா?" வேறொருவன் கேட்க... உனக்கு இவனே தேவலாம் என்பது போல் முறைப்புடன் நகர்ந்து கொள்ள... பிரபா அமர்ந்துவிட்டான்.

"ஏன்டா என்ன வெள்லெலின்னு சொன்ன?"

"நீ ஏண்டி கருவாயன்னு சொன்ன?"

"போடா குரங்கு!"

"போடி குட்டிக்குரங்கு!" சொன்னவன் தன் காலை பின்னுக்கு இழுத்துக் கொண்டான்.

"இந்த பயம் இருக்கட்டும்" சிரிப்புடன் சொன்னவள் வேறுபுறம் திரும்பிக் கொண்டாள்.

களைப்பு, நல்ல உணவு, பஸ் பிரயாணம் தூங்கி வழிந்தாள் பவானி. தன் தோள் சாய்ந்து உறங்குபவளைக் கண்டவன்,

'தொடுற வேலையெல்லாம் வச்சுக்காதன்னு குதிப்ப... இப்போ ஏண்டி என்னை தொடுற?' முணுமுணுத்தவன், வாகாக தோள் சாய்த்துக் கொண்டான்.

'ஏய் பார்பி! உனக்கும் எனக்கும் ஏணி வச்சாக் கூட எட்டாதுன்னு தெரியும்... இருந்தும் உன்னை பார்த்தாலே மனசு குளிர்ந்து போயிடுது. இன்று முழுக்க கூடவே இருந்து ஏன்டி என்னை இம்சிக்கிற?

இதுவரை எந்த பொண்ணுகிட்டயும் சலனப்பட்டதேயில்ல... நீ தான் விதிவிலக்கு. பார்பியை ஆசைதீர பார்க்கலாம்... நிரந்தரமா வச்சுக்க முடியாதுன்னு புத்திக்கு தெரியுது... மனசு தான் ஏத்துக்க மாட்டேங்குது.

இந்த ஒரு நாள் உனக்கு எப்படியோ? எனக்கு பொக்கிஷம். தேங்க்ஸ் டி பொம்மை!" பார்வையால் பருகிக் கொண்டே வந்தான். ஊர் வந்ததும் மெல்ல கன்னம் தட்டி எழுப்ப, அவள் பதறி விலக...

"பதறாத வனி நான் தான்! ஊர் வந்திடுச்சு. அம்மா அப்பாவும் தூங்குறாங்க... நான் எழுப்பிட்டு வரேன்." விலகி சென்றுவிட்டான்.

"வள்ளி நீ பிரபாவோட வீட்டுக்குப் போ நான் பவானிம்மாவை வீட்டில் விட்டுட்டு வரேன்."

"ஏன் அங்கிள் என்னை உங்க வீட்டுக்கு வரச்சொல்ல மாட்டீங்களா?" அன்றய நாளை இன்னும் நீட்டிக்க விரும்பினாள் பவானி.

அவர்களது அன்பையும் வாஞ்சையையும் சட்டென விட்டு செல்ல மனமில்லாதவளாய்... இதுவரை ஒருநாளும் இப்படியெல்லாம் ஏங்கியதில்லை இன்று எல்லாம் தலைகீழ்...

அம்மா, அப்பா, ஒரே பையன் அழகான குடும்பம். ஏக்கமும், பிரபாவின் மீது பொறாமையும் தோன்ற, பதில் சொல்லாமல் நின்ற முருகனை ஒரு நொடி வெறித்தவள்,

"நான் கிளம்பறேன். பை அங்கிள்! வரேன் ஆண்ட்டி!!" கையாட்டி விடை பெற, தனக்குள் இருந்த ஏதோ ஒன்றை யாரோ பிய்த்து எறிவது போல் பெரும் வேதனை உண்டாக சிலையாய் நின்றவனிடம்,

"பிரபா... ஆட்டோ பிடி!" ஆணையிட்ட அன்னை, பவானியின் கையை இறுகப் பற்றியிருந்தார்.

"தப்பா எடுத்துக்காதீங்க பவானிம்மா... எங்க வீட்டில் உங்களுக்கு வசதி பத்தாதுன்னு தான் இந்த மனுஷன் கூப்பிடத் தயங்கினார்... வாங்க வீட்டுக்கே போகலாம்!"

அந்தத் தாய்க்குப் புரிந்தது அவளது மனநிலை. சட்டென சரி செய்துவிட்டார். போன உயிர் மீண்டது போல் இருந்தது பிரபாவுக்கு.

"வேண்டாம் பிரபா, விலகியே இரு... நடக்க வாய்ப்பே இல்லைனு தெரிஞ்சும் ஏங்காதே!" மனதிற்கு கடிவாளமிட்டவனாய் ஆட்டோவின் முன்புறம் அமர்ந்து கொள்ள, மற்ற மூவரும் பின்னே அமர்ந்து கொண்டனர்.

சின்ன வயதில் இருந்து பார்த்து பழகிய தனது காரோட்டியிடம் எப்போதுமே தனி பாசம் உண்டு பவானிக்கு. இந்த முருகன் அங்கிள் காரோட்டி மட்டுமல்ல, சிறந்த பாதுகாவலன், நல்ல பேச்சு துணை என இருந்ததால் இவர்கள் இருவருக்கும் சொல்லப் படாத தோழமை இழையோடும். அந்த முதலாளியம்மா தன் இல்லம் வந்ததில் பெரும் மகிழ்ச்சி அவருக்கு.

வீட்டைச் சுற்றிப் பார்த்தாள். சிறிய ஹால், இரண்டு பிளாஸ்டிக் சேர்கள், குட்டி டிவி கொஞ்சம் கோப்பைகளும், ஷீல்டுகளும் என பிரபாவின் பரிசுப் பொருட்கள் அடுத்து கிட்சன்...

பொருட்கள் எல்லாம் அதனதன் இடத்தில் அழகாக இருந்தது. அழகுப் பொருட்கள் கொண்டு அழகு

படுத்தப்படாமலேயே இயற்கையான அழகுடன் இருந்ததே அவளை மிகவும் கவர,

"வீடு அழகா இருக்கு ஆன்ட்டி!" வெட்கம் வந்துவிட்டது வள்ளிக்கு.

ஒற்றை அரை பார்த்ததுமே பிரபா தான் உபயோகப்படுத்திகிறான் என்பது தெரிந்து போனது. ஒற்றை கட்டில் மெத்தை குட்டி அலமாரி அதன் மேல் இரண்டு பெட்டிகள் சிறியதாய் ஒரு மேசையும் நாற்காலியும் படிக்க உபயோகப்படுத்துவான் போல...

முகம் பார்க்கும் கண்ணாடி, அதனருகே சிறிய ஸெல்ஃப் அதில் எண்ணெய், சீப்பு, ரோலான் பெர்ஃபியும் பாட்டில் அவ்வளவு தான். தன் ட்ரெசிங் டேபிளை நினைத்து சிரிப்பு வந்தது. இவள் அரை அளவே இருந்தது அவர்கள் மொத்த வீடும்.

மீண்டும் வள்ளியின் கையால் ஒரு காபி. பவானிக்கு மனம் நிறைந்த உணர்வு தோன்றிவிட்டது. அதற்குள் பிரபாவும் ஆதியின் பைக்கை வாங்கி வந்திருந்தான். அலைபாய்ந்த மனதை முற்றிலுமாக கட்டுக்குள் கொண்டு வந்தவனாய்,

"வனிம்மா போலாமா?"

"பை அங்கிள், தேங்க்ஸ் ஆண்ட்டி!" என்றபடி வள்ளியை கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டு விடைபெற்றவள் முகம்

தான் சிரித்ததே தவிர மனம் கனத்துப் போனது. தனக்கு அன்னை இல்லை என்ற வருத்தம் ரொம்பவும் வதைக்க, அமைதியாகவே பயணித்தாள்.

வீட்டில் இறக்கிவிட்டு கிளம்பியவனை,

‘‘பிரபா! ஒரு நிமிஷம்! " அவள் குரல் தடுத்து நிறுத்த, என்ன என்பது போல் புருவம் ஏற்றி அவள் முகம் பார்த்தவன் கரம் பிடித்து, கற்றை நோட்டுகளை திணித்தாள்.

"எதுக்கு இது?" இறுகிய முகமும், அனல் கக்கும் விழிகளும், கோபத்தை உள்ளடக்கிய குரலுமாய் கேட்க,

"இன்னைக்கு காலையிலிருந்து சந்தோஷமா இருக்கேன்னு சொல்ல மாட்டேன், நிறைய ஏக்கம், கொஞ்சம் ஏமாற்றம், உன் மேல் பயங்கர பொறாமை, கோபம் எல்லாம் கலந்த ஒரு உணர்வு, சுகமான வலியாய்... பட் பிடித்திருந்தது. முதன் முதலா நிறைவான குடும்பச் சூழலை முழுசா உணர்ந்தேன். நன்றி!"

இனியும் பிரபா தொடர்வான் என நினைக்கிறீர்களா?

# அத்தியாயம் 23

"பவானி! எல்லாத்தையும் பணத்தால் வாங்கிட முடியாது. அன்பு, பாசம், நேசம் இதுக்கெல்லாம் விலை வைக்க முடியாது, வைக்கவும் கூடாது... மனித உணர்வுகளை மதிக்கப் பழகு... உனக்கெப்படியோ, எங்களுக்கு இந்த நாள் ரொம்ப விசேஷமானது.

என் பெற்றோர் இன்னும் பத்து நாளைக்கு வாய் வலிக்க, வலிக்க உன்னைப் பற்றி தான் பேசிட்டு இருப்பாங்க. இந்த பணத்தை கொண்டு போய் கொடுத்தா மிரண்டு போயிடுவாங்க.

உன் மேல் அதிக மதிப்பு வச்சிருக்காங்க பவானி. உன் குணம் அவங்களுக்கு தெரியாமலேயே போகட்டும். இதை கொடுத்து அதை சிதைக்க விரும்பல!" அவள் கையில் கூட கொடுக்க விரும்பாதவனாய் நின்று கொண்டிருந்த காரின் மீது வைத்து விட்டுச் சென்றான்.

ஏனோ அவனது பவானி எனும் அழைப்பு கொடுத்த வேதனைக்கு முன்... இந்த புறக்கணிப்பு ஒன்றுமில்லாததாய் தோன்றியது.

"தப்பு பண்ணிட்டேன்! இவங்கெல்லாம் யார்? ஏன் இவங்க கூட போகணும்? என்னவோ நினைக்க என்ன என்னவோ

நடந்துடுச்சு... வேதனை தான் மிச்சம்." அவள் தனக்குள் மறுகிக் கொண்டிருக்க, அந்நேரம் அவளது கைபேசி அலற,

"பிரபாவோ? ஹர்ட் பண்ணிட்டோம்னு சாரி சொல்ல கூப்பிடறானோ? ஆவலாய் பார்க்க, ( நீ ஏன் அவனையே நினைக்கிற?)

"அச்சு" என ஒளிர்ந்தது. முதல் முறையாக விட்டேற்றியாக,

"சொல்லு அர்ஜூன்"

"ஹாய் பேபி! மீட் பண்ணலாமா?" குழைந்தது அவன் குரல்.

"ஐம் நாட் இன் எ குட் மூட்... இன்னொரு நாள் பார்க்கலாம்"

"வொய் பேபி? மூட் சரியில்லன்னா வா, 'நிர்வாணா' போகலாம்"

போகலாம் தான். மனம் கொஞ்சம் சமனப்படும் எனத் தோன்றிய போதும்,

"நான் எங்கேயும் வரல அர்ஜூன்... என்னை இரிடேட் பண்ணாதே!" பட்டென வைத்துவிட்டாள்.

"ராங்கி!" திட்டியபடியே அவனும் வைத்து விட்டான்.

பிரபாவுக்கு மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. பவானி அடங்கா குழந்தை, கொஞ்சம் திமிர் கொண்ட சண்டி ராணி இப்படித்தான் நினைத்திருந்தான். ஆனால் தன் நினைப்பு

முற்றிலும் வேறுபட்டுப் போனதை அவனால் ஏற்கவே முடியவில்லை.

ஏண்டி இப்படி செய்தாய்? வலிக்குதடீ... இந்த பார்பி, பிரபாவுக்கு வேண்டாம். தூரத்தில் பார்த்தத்தோடே இருந்திருக்கலாம். உன்னைப் பற்றி தெரியாமலேயே இருந்திருக்கும். பணம் தான் பிரதானமா? பொய்த்துப் போனாயே... எனக்கும் உனக்கும் செட்டாகாது. இனி கற்பனையில் கூட நீ எனக்கு வேண்டாம். முற்றிலுமாய் முறித்துக் கொண்டான்.

உன்னை சந்திச்ச ஒவ்வொரு முறையும் என் நிம்மதி காணாமல் போயிடுது. உன்னால் இன்று அர்ஜூனிடம் கோபப்பட்டுட்டேன். உன்னை நினைக்கக் கூட விரும்பலை. போ... அவளும் விலகினாள்.

பிரபா சொன்னது போல், அவனது பெற்றோர் பவானியை பற்றி தான் பேசினார்கள்... பேசினார்கள்... போதும்! போதும்!! என இவன் கதரும் வரை பேசினார்கள். பெற்றோர் தவறே செய்தாலும் அவர்களிடம் கோபம் கொள்ளக் கூடாது என்பதை கொள்கையாக வைத்துக் கொண்டவனுக்கே அதை மீறிவிடுவோமோ என்னும் பயம் வந்துவிட...

"அப்பா, முதலாளி அடுத்த வாரத்தில் நல்ல நாள் பார்த்து வேளையில் சேரச் சொல்லி இருக்கார்." அவன் எண்ணியது

போல் இது கொஞ்சம் கை கொடுத்தது. நல்ல நாள்... நேரமெல்லாம் பார்த்தவர் மறுபடியும் வேறு மாதிரி ஆரம்பித்துவிட்டார்.

"பிரபா, பவானிம்மா தான் உனக்கு முதலாளி... சின்ன பொண்ணு தானேன்னு நினைக்க கூடாது... மரியாதையா நடந்துக்கணும்... உன் வேளையில் கவனமா... யாரும் குறை செல்லாதபடி நடந்துக்கணும்...

பவானிம்மா ரொம்ப நல்லவங்க. அவங்க மனசு கஷ்டப்படுற மாதிரி எதுவும் செய்திடக் கூடாது.' (முடியலை! நல்லவ...? சலங்கை கட்டி விடுங்க! )

"அப்பா... அவ கம்பெனியோட சொந்தக்காரி அவ்வளவு தான். உங்கள மாதிரி எனக்கும் ஐயா தான் முதலாளி."

"பிரபா... இப்போ தானே சொன்னேன் மரியாதையில்லாம பேசுற...?"

"மரியாதையை அவங்க நடத்துகிற விதம் பார்த்து நாமே கொடுக்கணும் பா..." அலுப்பாக வந்தது.

"பவானிம்மா தப்பாவே நடந்துக்கிட்டாலும் நீ சரியாய் தான் நடக்கணும்... அவங்க என்ன தப்பு செய்தாலும் நான் பவானிம்மாவை தப்பு சொல்ல மாட்டேன். அவங்களுக்கு நல்லது, கெட்டது சொல்லிக் கொடுத்து வளர்க்க ஆளில்லை பிரபா.

முதலாளியம்மா (பவானியின் அம்மா) பவானிம்மா பிறந்ததும் இறந்துட்டாங்க. ஐயா அம்மாவை காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க... அம்மாவோட இழப்பில் இருந்து மீண்டு வர வருஷக் கணக்கானது பிரபா.

பாவம், பச்சபுள்ளை வீடு முழுக்க வேலைகாரங்க இருந்தாலும் கவனிக்க ஆளில்லாமல் கேட்பாரற்று அழும். உனக்கும், பவானிமாக்கும் ஆறேழு மாசங்கள் தான் வித்தியாசம் இருக்கும். நீ அழுது நான் பார்த்ததே இல்லை.

உன் அம்மா நீ சிணுங்கும் போதே உன் தேவைகளை பார்த்துப் பார்த்து செஞ்சிடுவா.. காரோட்டி, வீட்டுக்குள்ள போக முடியாது... அந்த குழந்தையோட அழுகையை கேட்கவே முடியாது மனசு பதறும்.

பத்து மாசப்புள்ளையா இருக்கலாம், பால் பாட்டிலை வாயில் வச்சுக்கிட்டு தத்தி தத்தி நடந்து வரும்... அதை சாய்ச்சு குடிக்கணும்னு தெரியாது. மடியில் படுக்கவச்சு கொடுக்க யாருக்கும் அன்போ... அக்கறையோ அங்கு கிடையாது.

பயங்கர பசி போலும் அத்தனை படியையும் கடந்து காருக்கு பக்கத்தில் இருந்த என்கிட்ட வந்துச்சு... ரெண்டு பல்லு தான் இருக்கும் அதில் பாட்டில் ரப்பரை பிடிச்சிருக்கு என்னை பார்த்ததும் சிரிக்க, பாட்டில் கீழே விழிந்திடுச்சு... அன்று தான், என் பக்கத்தில் உட்காரவச்சு பாட்டிலை சாச்சுக் குடிக்க கத்துக்

கொடுத்தேன்." சொல்லும் போதே கண்கள் கலங்கிவிட்டது முருகனுக்கு.

"பவானிம்மா அழகு மட்டுமில்ல அறிவும் கூட... அப்புறமெல்லாம் அவங்களே சமத்தா குடிக்க பழகிட்டாங்க. எனக்கு தான் மனசு கேட்காமல் எல்லாத்தையும் ஐயா கிட்ட சொல்லிட்டேன். ஐயா அவங்க அம்மாவை ஊரில் இருந்து கூட்டிவந்து இருக்க வச்சாங்க...

பவானிம்மா அச்சு அசல் முதலாளியம்மா போலவே இருப்பாங்க... பெரியம்மாவுக்கு பவானிமாவை பிடிக்காது. பாவம் ஏதாவது திட்டிகிட்டே இருப்பாங்க... அந்த குழந்தைக்கு ஒன்னும் புரியாது.

தன்னை யாரும் கவனிக்க மாட்டாங்களான்னு ஏங்கி, ஏங்கி ஒருகட்டத்தில் நீங்க யாருமே என்னை பார்த்துக்க வேண்டாம்கிற மனநிலைக்கு வந்துட்டாங்க. ஐயா உட்பட அந்த வீட்ல இருக்க யார்கிட்டயும் சுமூகமா பேசமாட்டாங்க பவானிம்மா.

ஆனால் என்கிட்ட எல்லா கதையும் சொல்லுவாங்க. பள்ளிக்கூடத்து கதை, கூட்டாளிகளோட சண்டை இப்படி நிறைய பேசுவாங்க... எட்டாவது படிச்சுக்கிட்டு இருந்தாங்க. ஐயா வெளிநாட்டுக்கு போயிருந்தாங்க...

கணக்குப்புள்ளை வந்து முருகா பவானிம்மா உன்னோட பேசனுமாம், கூப்பிடுறாங்கன்னு சொன்னார். இப்போதான்

பள்ளிக் கூட்டத்துல விட்டுட்டு வந்தோம்... என்னாச்சோன்னு பதறி போய் போனை எடுத்தா,

'முருகன் அங்கிள் நான் பெரிய பெண்ணாயிட்டேனாம்... வீட்டுக்கு போக சொல்றாங்க! வந்து கூட்டி போறிங்களான்னு கேட்டாங்க... யோசிச்சு பாரு பிரபா... பாவப்பட்ட புள்ள. என்ன இருந்து என்ன பண்ண? அம்மா இல்லன்னா ரொம்ப கஷ்டம்...

பல வருசத்துக்குப் பிறகு அழகர் கோவில்ல தான் பவானிம்மா கண்ணில் அந்த ஏக்கத்தை பார்த்தேன். வள்ளியையும், உன்னையும் மாறி மாறி பார்த்துக்கிட்டே இருந்தாங்க... கஷ்டமா இருந்துச்சு. நம்மாள வேறொன்னும் பண்ண முடியாது.

மேற்கொண்டு வருத்தப்படுத்தாமலாவது இருக்கனும்னு தான் சொல்றேன். பவானிம்மா காலேஜுக்கு போனதில் இருந்து, தானே கார் ஓட்டிக்கிட்டு போயிடுவாங்க.

நெருக்கம் குறைஞ்சிடுச்சுன்னு நினைச்சேன். இல்ல, நீங்க எப்போதுமே என் முருகன் அங்கிள் தான்னு சொல்லாம சொல்லிட்டாங்க." மனபாரம் முழுவதும் இறக்கி வைத்ததில் அமைதியாக அமர்ந்துவிட்டார் முருகன்.

பிரபாவிற்கு தான் பெரும் பாரம் வந்து குடிகொண்டுவிட்டது.

சிவானந்தனே அலுவலகத்திற்கு வந்து பிரபாவை மற்ற ஊழியர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

கடந்த ஒன்றரை வருடமாக பவானி தான் நிர்வாகம் பார்க்கிறாள் என்ற போதும், இந்த ஆறுமாதமாகத் தான் தொழில் வீழ்ச்சி. அதற்கான காரணம் தெரிந்தாலும், பிரபாவிடம் அதைச் சொல்லி மகளின் தரத்தை குறைக்க மனமற்றவராய் தவிர்த்துவிட்டார். இருந்தும் அவனுக்கு தன்னிச்சையாய் முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்கி சென்றார்.

அன்று மாலை பவானியிடம் இருந்து அழைப்பு,

'ஹாய் வனி!' குதூகலமாய் ஆரம்பிக்க,

'பாருங்க பிரபாகரன் இப்போ நான் உங்க முதலாளி. நீங்க என்கிட்ட கைகட்டி சம்பளம் வாங்குற சாதாரண தொழிலாளி! அதை நினைவு வச்சுக்கோங்க. கால் மி மேம்... மரியாதை ரொம்ப முக்கியம்.

கண்ட நேரத்தில் கால் பண்ற வேலையெல்லாம் வச்சுக்காதீங்க. வேலை விஷயமா என்ன கேட்பதா இருந்தாலும் மெசேஜ் போடுங்க... பகலெல்லாம் எனக்கு காலேஜ் இருக்கும்.

ஈவினிங் ஏழுமணிக்கு மேல் பத்து மணிவரை என் பெர்சனல் ஸ்பேஸ் அதிலும் தொந்தரவு பண்ணாதீங்க. மத்தபடி எப்போ வேணா தொடர்பு கொள்ளலாம்." அவன்

பதிலையெல்லாம் அவள் எதிர்பார்க்கவேயில்லை வைத்துவிட்டாள்.

தந்தையின் பேச்சால் பவானியின் பால் ரொம்பவும் இளகியிருந்தான் பிரபா. நறுக்கு தெரித்தது போல் பட்டென அவள் தன்னை அந்நியப்படுத்தியது மனதின் ஓரத்தில் வலியை உண்டாக்கியது.

முன்னைப்போல் வம்பளக்காமல் நல்ல தோழனாகவேனும் இருக்க முயற்சிக்க வேண்டும். நிச்சயம் இனியேனும் நல்லது கெட்டது பிரித்தறிய சொல்லிக் கொடுக்க வேண்டும் என என்னென்னவோ நினைத்திருந்தவனுக்கு தன்னை நிலைப்படுத்திக் கொள்ள சில மணித்துளிகள் தேவைப்பட்டது.

நிவி பனிரெண்டாவது முடித்துவிட்டு ஆதியின் அறிவுரைப்படி இளங்கலை வங்கி மேலாண்மையில் சேர்ந்திருந்தாள். இன்று கல்லூரியின் முதல் நாள். ஆதி தனது கல்லூரி படிப்பை முடித்துவிட்டு துபாய் வேலைக்கான பர்மிட்டுக்காக காத்திருந்தான்.

"ஆதி இன்னைக்கு நிவியை நீயே காலேஜில் கொண்டுபோய் விடு. முதல் நாள் பயந்துடப் போறா..."

"அம்மா இதெல்லாம் உங்களுக்கே ஓவரா தெரியலையா? இன்னும் உங்க மருமக என்ன பேபியா? தனியா போய்

பழகட்டும். எப்படியும் ராகிங்கையெல்லாம் தனியா தான் ஃபேஸ் பண்ணனும். நான் போய் ஒன்னும் பண்ண முடியாது.

இந்த மகாராணி படிக்கிற அழகுக்கு, நந்து வேற அவளோட ஸ்கூட்டியை கொடுத்திருக்கா எத்தனை தடவை விழுந்து எந்திரிக்கப் போகுதோ?" கேலியாக சொன்னாலும் சிறு கவலையும் இருக்கத் தான் செய்தது ஆதிக்கு.

"அதனால் தான் சொல்றேன் ஆதி... முதல் நாளே விழுந்து எந்திரிச்சா என்ன பண்றது? இன்னைக்கு நீயே கூட்டி போ... நாளைக்கு அவளை ஸ்கூட்டியை ஓட்டச் சொல்லி பின்னாடி உட்கார்ந்து போ... அப்புறம் அவளையே தனியா ஓட்டவிட்டு ஃபாலோ பண்ணு. நீ ஊருக்கு போறதுக்குள்ள கொஞ்சம் பழக்கிவிட்ரு ஆதி.

"இந்த ஐடியாவெல்லாம் உங்களுக்குன்னு எப்படி தான் தோணுமோ தெரியல... நல்லா என்னை வேலை வாங்குங்க..."

கல்லூரிக்கு பரபரப்பாக கிளம்பிக் கொண்டிருந்தவள்,

"ஆதி அத்தான்! சீக்கிரம் வாங்க... ஆதி அத்தான்!" என்று மூச்சுவிடாமல் அழைக்க,

"ஆதி சீக்கிரம் போயெண்டா! புள்ள எவ்வளவு நேரமா கூப்பிடுது."

"என்னடி? ஏன் இப்படி கூப்பாடு போடுற?" என அவளது அறையினுள் நுழைய, அழகான பூந்துவாலையுடன் (டவல் பா !)

கைக்கொன்றாக இரண்டு சுடிதார்களை பிடித்தபடி நின்று கொண்டிருந்தாள் அவனது இம்சை.

"என்னடியிது...?!" அரைகுறையாய் அவளை பார்த்து திகைத்து விழிக்க...

"நல்லா இருக்கா? இது அத்தை செலக்ட் பண்ணினது... இது மாமா செலக்ஷன்! எதைப் போட்டுக்கட்டும்? நீங்க சொல்லுங்க ஆதி அத்தான்?"

அவன் எங்கே ஆடைகளைப் பார்த்தான்!? கழுத்தடி மச்சத்திலும், பளீரென்ற நெஞ்சுக்குழியிலும் மிச்சமில்லாமல் மொத்தமாக தொலைந்து சுயம் திரும்பியவன்,

"எதையோ ஒன்னைப் போடு... ஏன் இப்படி அரைகுறையாய் நின்று என்னை இம்சிக்கிறாய்?" என சிடுசிடுக்க,

"சோ வாட்? நீங்க கூடத் தான் அத்தை, மாமாக்கு முன்னாடி துண்டோடு திரியுறீங்க! சீக்கிரம் சொல்லுங்க, லேட்டாகுது!"

"அவங்க என் அப்பா அம்மாடீ!"

"நீங்களும் எனக்கு அப்படி தான்!" என கண் சிமிட்டி சிரிக்க, திகைப்பிலிருந்து மீளாதவனாய் ஒன்றை கை காட்டினான்.

கல்யாணத்திற்குப் பிறகாவது என்னை கணவனா பார்ப்பியா ? இல்லை அப்பவும் இப்படி குழந்தையா இருந்து கொல்வியா? எனும் கேள்வியை கண்களில் தேக்கி அவளைப் பார்க்க,

‘‘போங்க... போங்க நான் டிரஸ் மாத்தணும். லேட்டாயிடுச்சு!" என அவனை வெளியே தள்ளினாள்.

"ஆதி! குறைந்தபட்சம் இன்னும் மூன்று வருஷமாவது காத்திருக்கணும்... செத்தடா!" என நொந்தபடியே கல்லூரியில் இறக்கிவிட,

"ஆதி அத்தான், நீங்களும் வரீங்களா?" என்றாள் படபடப்புடன்.

‘‘இங்கு எனக்கென்ன வேலை?" என புருவம் தூக்க,

"ப்ளீஸ், ஆதி அத்தான். .. ராகிங் இருக்குமோன்னு பயமா இருக்கு?!" என முழிக்க,

"எல்லாத்தையும் என்ஜாய் பண்ண கத்துக்கோ... போ...!" என அதட்டிவிட்டு போய் விட்டான். வசமாக பெரிய பட்டாளத்திடம் மாட்டிக் கொண்டாள்.

ஆண்களும், பெண்களுமாய் பத்து பதினைந்து பேர் இருந்து கொண்டு,

"இப்போ உன்னை கொண்டு வந்துவிட்டது உன் அண்ணனா?"

"இல்லை. ஆதி அத்தான்!"

"அத்தானா ..?" எனக் கூச்சலிட,

"அட லூசுகளா! இதில் இப்படி கத்த என்ன இருக்கு?" என விழிக்க, (அத்தான்ல ஆயிரம் இருக்கு ஆனால் உன் அர்த்தம் எல்லோருக்குமே புதுசு)

"என்ன மேஜர்?"

"BBM"

"வாவ்! உன் அத்தானைப் பற்றி ஒரு கவிதை சொல்!"

"எனக்கு தெரியாது"

"அப்போ பாட்டு பாடு!"

"என்ன தவம் செய்தனை..."

"ஏய்... நிறுத்து, நிறுத்து! அத்தான்னு வர்ற மாதிரி பாட்டு பாடு"

"அத்தான்... என்னத்தான்... அவன் என்னைத் தான் எப்படி சொல்வேனடி..." கூச்சலும், விசிலும் காதை பிளந்தன.

"சொல்லு... உன் அத்தான் என்ன செய்தார்?"

"அவள் தான் எப்படி சொல்றதுன்னு வெட்கப்படுறாளே விடுங்க பக்கிகளா" என்றான் ஒருத்தன்.

"உன் பேர் என்ன?"

"நிவேதா"

"இனிமே அத்தான்னு பேர் மாற்றம் பெருகிறாய்! நாங்க எங்கு உன்னை பார்த்து அத்தான்னு கூப்பிட்டாலும் வணக்கம் வைக்கணும். சரியா?"

"ம்"

"எங்க...? ‘அத்தான்!’

"வணக்கம் சீனியர்ஸ்!"

"கலக்குற போ! கிளம்பு" என ஒருவழியாக அனுப்பி வைத்தனர். கல்லூரி வாழ்க்கை இனிமையாகவே இருந்தது.

ஆதி தனது துபாய் பயணத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்க... போ என்றும் சொல்ல முடியாமல் இரு என்றும் சொல்ல முடியாமல் மருகிக் கொண்டிருந்தாள் நிவேதா. பகலெல்லாம் கலகலப்பாக இருந்தாலும் இரவின் தனிமையில் வருந்தினாள்.

விலகி இருந்து தான் இவளுக்கு தன் இருப்பை உணர்த்த வேண்டும் என முடிவெடுத்தே அந்த வேலையை தேர்ந்தெடுத்திருந்தான். அவனுக்கும் அவளது வருத்தம் புரிந்தது. இருந்தும் இந்த பிரிவு இருவருக்குமே அவசியம் என நினைத்ததால் அவனும் அவளிடம் அதிகம் வம்பு வளர்க்கவில்லை.

எங்கே இவள் டாமை திறந்துவிட்டு போகாதே என்று சொல்லிவிடுவாளோ என்ற பயமும் கொஞ்சம் இருக்கத்தான் செய்தது ஆதிக்கு.

பிரபா சிவானந்தனின் கம்பெனியில் MD ஆக பொறுப்பு பேற்றுக் கொண்டு ஒரு மாதமாகிவிட்டது. அதன் CEO பவானி தான் என்ற போதும் அவள் ஒருமுறை கூட கம்பெனியின் பக்கம் எட்டி பார்க்கவேயில்லை.

இதோ, இண்டஸ் இண்டஸ்ட்ரிஸ் டெண்டர் அறிவிப்புக் கொடுத்திருந்தனர். பிரபாவே இந்த முறை கொட்டேஷன் தயாரித்தான். அதற்குக் காரணம் இருந்தது. சமீபத்தில் அவன் வேளைக்கு சேர்வதற்கு முன் சிறு கவன பிசகால் ஒரு டென்டர் கை நழுவிப் போயிருந்தது.

அதனால் ரகசியம் காக்கப் படவேண்டிய வேலையை தானே எடுத்து செய்து தனது செகரட்டரி ரவியின் உதவியுடன் அனைத்தையும் பவானிக்கு மெயில் செய்தான்.

அடுத்த 10 நிமிடங்களிலேயே அவளிடமிருந்து அழைப்பு, பிரபாவை சந்திக்க தான் வருவதாகச் சொல்லி காத்திருக்கச் சொன்னாள். வேலை நேரம் முடிந்துவிட்டது. மாலை ஏழு மணியை நெருங்கிக் கொண்டிருக்கவே ரவியை அனுப்பி வைத்துவிட்டு காத்திருந்தான்.

பவானி MBA இரண்டாம் ஆண்டு மாணவி. கல்லூரி முடிந்து வீட்டிற்கு வந்தவள் அடுத்து தன் காதலனை பார்க்க தயாராகிக் கொண்டிருக்க... அந்நேரம் தான் பிரபாவின் மெயிலைக் கண்டாள். அதில் சில விஷயங்கள் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியதிருக்கவே நேரில் சந்திக்கப் போகிறாள்.

காத்திருக்க தொடங்கியவன் நந்தினியுடன் பேசிக் கொண்டிருக்க, விஜயின் மாற்றத்தை சொல்லி சந்தோசப் பட்டுக் கொண்டிருந்தாள் தோழி. இவனும் மகிழ்வுடன் சிரித்து பேசிக் கொண்டிருக்க புயலாய் நுழைந்தாள் பவானி.

"பை நந்து! முக்கிய வேலை வந்துடுச்சு அப்புறம் கால் பண்றேன்." சில நொடிகளே காத்திருந்தாள் என்ற போதும் (கொஞ்சமும் மரியாதையில்லாமல் இது என்ன திமிர் தனம்?) எரிச்சல் மூள, அவனை ஏறிட்டவளுக்கு அவனது சிரித்த முகம் இன்னும் காண்டை கிளப்பவே,

"ஹலோ! நிஜ உலகுக்கு திரும்பியாச்சா? இல்ல இன்னும் கேர்ள் பிரண்ட் மயக்கத்தில் தான் இருக்கியா?" அவனுக்கு முன் சொடக்குப் போட்டு வினவ,

"ஹாய் பவானி. அவ என் பிரண்ட். தப்பா மீன் பண்ணாதீங்க."

"ஷட் அப்! நான் உனக்கு சம்பளம் கொடுக்கறவ, அந்த மரியாதை இருக்கட்டும். கால் மீ மேம்."

"சாரி. நமக்குள்ள பெருசா வயசு வித்தியாசம் இருக்காது. அதோட படிக்கிற பொண்ணு தானே சோசியலா இருப்பீங்கன்னு நினைச்சேன் தப்பு தான் மேம்."

அவன் மன்னிப்புக் கேட்டதும் சப்பென்றாகிவிட்டது பவானிக்கு. ஒவ்வொருமுறை இருவருக்குமான சந்திப்பின் போதும் ஏனோ இவன் திமிராக நடந்து கொள்வதாகவே அவளுக்கு தோன்றியது.

சட்டென அவன் மன்னிப்பு கேட்டதும் அவனை கணிக்க முடியாமல் தடுமாறியவள், கொட்டேஷனைப் பற்றி பேசத் தொடங்கினாள். அவளது பல கேள்விகளுக்கும், சில சந்தேகங்களுக்கும் தெளிவாக விளக்கம் கொடுக்கவே, அந்தத் தொகையை ஏற்றுக் கொண்டாள்.

அதற்குள்ளாகவே ஒருமணி நேரம் கடந்திருந்தது. வேலையின் போது வந்த இரு அழைப்புகளையும் அவள் எடுக்காதது கண்டு உள்ளூர பெருமைபட்டுக் கொண்டான் பிரபா.

"பார்க்கத் தான் சின்ன புள்ள மாதிரி இருக்கா, வேலையில் கெட்டி தான்!" பாராட்டு வேறு. கொஞ்ச நேரத்தில் அவள் செய்யப் போகும் வேலை தெரிந்தால் இப்படியெல்லாம் யோசிக்க மாட்டான் என்பது வேறு விஷயம்.

பவானி தன்னிடம் முதலாளியாக மட்டுமே நடந்து கொண்டாள் என்பதில் ஏனென்று தெரியாத வருத்தம் இருந்தது

பிரபாவுக்கு. அவளோ வந்தது போலவே விலகியும் சென்றுவிட்டாள். எதுக்கு உன்னிடம் நெருங்கனும் அப்புறம் வருந்தனும்? பாதுகாப்பு உணர்வு போலும்.

எதிரிபார்த்தது போல் அந்த டெண்டர் அவர்களுக்கு கிடைக்கவில்லை. மாறாக போன முறை தட்டிச் சென்ற அதே விஷ்னு அன் பிரதர்ஸ்க்கு கிடைத்தது. பிரபாவின் முதல் வேலையே தோல்வி காணவே எங்கு தவறு நடந்தது? வாய்ப்பே இல்லையே எல்லாவற்றையும் தயாரித்ததே நான் தானே குழம்பியவனுக்கு பவானியிடம் இருந்து அழைப்பு.

"என்ன செய்து கொண்டிருக்கிறாய் பிரபா? கொஞ்சமும் அனுபவமில்லாதவனை இவ்வளவு பெரிய பொறுப்பில் அமர வைத்தால் இப்படி தான் நடக்கும்.

அன்று வாய்கிழிய பேசினாய் இது தான் உன் திறமையின் அளவு தெரிஞ்சுக்க. இனி எல்லாம் தெரிந்தது போல் ஆடாதே." அவனுக்கு பேச வாய்ப்பே கொடுக்காமல் துண்டித்துவிட்டாள். வெகு நேரம் யோசித்தவன் ரவியை அழைத்தான். நேரடியாக விசயத்திற்கு வந்துவிட்டான்.

'டபுள் கேம் ஆடறீங்களா ரவி?" அவனுக்கும் புரியவே,

"மன்னிச்சுடுங்க பாஸ்... பெரிய முதலாளி உங்களிடம் சொல்லியிருப்பார்னு நினைச்சேன். தப்பு செஞ்சது நான் இல்ல பாஸ். பவானி மேம்."

"வாட்?"

"எஸ் பாஸ்... விஷ்னு அன் பிரதர்ஸ் பையன் மேமோட லவ்வர்... ரெண்டு பேரும் நம்ம நிர்வானால அடிக்கடி மீட் பண்ணுவாங்க. அங்கு தான் சொல்லியிருக்கனும்."

முதல் அதிர்ச்சி... ஐயோ என் பார்பிக்கு காதலன் இருக்கானா? இதயம் ஒரு நொடி நின்று பின் துடித்தது. எட்டா கனி தான் இருந்து மனம் ஏற்க மறுத்தது. ரவி எதிரே இல்லை என்றால் தலையை இறுக பிடித்து சுருண்டு படுத்திருப்பான் அவ்வளவு வேதனையையும் உள்ளடக்கி,

"ஸ்டுப்பிட் மாதிரி பேசாதீங்க ரவி. லவ்வராவே இருந்தாலும் யாராவது தன் கம்பெனி ரகசியத்தை சொல்வாங்களா? அதுவும் பவானி நிச்சயம் சொல்ல மாட்டாங்க."

"நீங்க சொல்றது சரி தான் பாஸ். மேம் சுயநினைவோடு இருந்தால் சொல்ல தான் மாட்டாங்க. பட் நிர்வானாங்கிறது பப். குடி போதையில் உளறிடுவாங்கன்னு நினைக்கிறேன்.

குடிச்சிட்டு உளறினேன்னு என் பொண்டாட்டி காரி துப்புவா ஆனால் என்ன பேசினேன்னு ஒண்ணுமே நியாபகம் இருக்காது பாஸ். அப்படி தான் ஏதோ நடக்குது. நான் நிறைய தடவை மேமையும், அந்த அச்சுவையும் பார்த்திருக்கேன்."

என் பார்பி குடிகாரியா? அடுத்தடுத்த அதிர்ச்சியில் மயக்கமே வந்துவிடும் போல் இருந்தது பிரபாவுக்கு. குளிர்ந்த நீரை குடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன்,

"பவானி குடிப்பாங்களா?'' நம்ம ஊரில் பப் இருக்கா? அதென்ன பேர் அச்சு?"

"பாஸ்... இருந்தாலும் நீங்க அநியாயத்துக்கு நல்லவரா இருக்க வேண்டாம்." என சிரித்தவன்,

"அர்ஜூன் அதைத் தான் அப்படி கூப்பிடுவாங்க..."

(அது சரி இவளுக்கு தெரியாம எப்படி அமவுண்ட் கோட் பண்ணுவது? இவன் உண்மையை தான் சொல்கிறானா? பார்த்துவிட வேண்டியது தான்.) ஒருமுறைக்கு இருமுறை ஒரே கம்பெனிக்கு கிடைத்திருப்பது ரவி சொல்வதில் உண்மை இருக்கிறது என சொல்லாமல் சொல்லியது. இருந்தும் தன் கண்காணிப்பு பணியை ஆரம்பித்தான் பிரபா...

சில தினங்களிலேயே அர்ஜூனின் குணத்தை அவனால் எளிதில் கண்டுகொள்ள முடிந்தது. காதலுக்கு கண் தான் இல்லை என கேள்விபட்டுருக்கிறேன். இங்கு மூளையுமில்லாமல் போய்விட்டதே ஆயாசமாக இருந்தது பிரபாவுக்கு.

எப்படி அவளால் இனம் காண முடியாமல் போகிறது? நடிக்கிறான்... தங்கள் கம்பெனியை முதலிடத்திற்கு கொண்டுவர,

இவள் கம்பெனியை குழி தோண்டி புதைக்க நினைக்கிறான். இதை ஏன் அவளால் உணர முடியவில்லை.

சொன்னால் புரிந்து கொள்வாளா? நம் மன திருப்திக்கு முயற்சி செய்து பார்ப்போம் இல்லையேல் முதலாளியிடம் சொல்லிவிட வேண்டியது தான். அவளை நேரில் சந்திக்க வேண்டுமென்று நான்கு மெசேஜுகளுக்குப் பிறகு அனுமதி கொடுத்தாள்.

"பவானி... மேம்! உங்ககிட்ட கொஞ்சம் பெர்சனலா பேசணும்." அமைதியாக... அவள் முகம் பார்க்க,

"எனக்கும் உனக்கும் என்ன பெர்சனல் இருக்கு? என்ன கரெக்ட் பண்ணலாம்னு பார்க்கிறியா? வீண் முயற்சி.. எனக்கு ஏற்கனவே ஆள் இருக்கு. (திமிர் தான்டி உனக்கு. உன்னை போல ஒரு குடிகாரி எனக்கு வேண்டாம்.)

"உங்க ஆளை பத்தி தான் பேசணும் மேம்." கோபமின்றி வந்து விழுந்தன வார்த்தைகள்.

"முட்டாள்! நீ என்னிடம் கைகட்டி சம்பளம் வாங்குறவன். உன் அளவு தெரிஞ்சு நடந்துக்க. என் அப்பா சொன்னதால் தான் இன்னும் இங்கு இருக்க... என் அச்சுவை பத்தி பேச நீ யார்?" கோபத்தின் உச்சத்தில் இருந்தாள் பவானி.

"பவானி! ப்ளீஸ் சொல்றதை கொஞ்சம் காது கொடுத்து கேளுங்க... உங்ககிட்ட சம்பளம் வாங்குற விசுவாசத்தில் தான்...

உங்க நல்லதுக்காக தான் சொல்றேன்.. அந்த அர்ஜூன் நல்லவனில்ல... உங்களை ஏமாத்துறான்." நிமிர்ந்து அமர்ந்தவள்,

"நாங்க கல்யாணம் பண்ணிக்கப் போறோம் இந்த நிலையில் எதுக்காக அவன் என்னை ஏமாத்தனும்?"

"உங்க கம்பெனியை இழுத்து மூடணும்கிறது தான் அவங்க நோக்கம். ஏன்னா அவங்களோட ஒரே போட்டி நீங்க தான்.."

"லூசே... காமெடி பண்ணாத என்னை கட்டிக்கிட்ட பிறகு இந்த கம்பெனி மட்டுமில்ல என் சொத்து முழுவதுமே அவங்களோடது போல தானே? பிறகு ஏன் இழுத்து மூடனும்?" கேலி சிரிப்புடன் கேட்க,

"உங்க சொத்து முழுவதும் அவன் காலடியில் கொட்டினாலும் அவன் உங்களை கல்யாணம் பண்ணிக்க மாட்டான் பவானி. அப்படியே பண்ணிக்கிட்டாலும் உங்களை மதிக்க மாட்டான். உங்க கூட நல்லபடியா வாழணும்னு நினைக்கிறவன் கெடுக்க நினைக்க மாட்டான். புரிஞ்சுக்கோங்க..."

"நல்லது உன் அட்வைசுக்கு நன்றி. சீக்கிரமே பத்திரிகை கொடுக்கிறேன். கல்யாண வேலையெல்லாம் நீ தான் முன்ன நின்னு நடத்தணும்." சென்றுவிட்டாள்.

"போடி லூசு அவன் உன்ன கழட்டிவிடும் போது தெரியும்..." படித்த முட்டாள் முணுமுணுக்கத் தான் முடிந்தது பிரபாவால்.

ஆதி துபாய் செல்லும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கவே நந்துவையும் பிரபாவையும் சிறு விருந்துக்கு அழைத்திருந்தான்.

"சிட்டு நானும் வரேண்டி... உன்னை விட்டு ரெண்டு மூணு மணி நேரமெல்லாம் இருக்க முடியாது."

"இதெல்லாம் டூ... டூ மச் விஜய். நாள் பூரா என்னை விட்டு தானே ஆபிஸில் இருக்கீங்க? இப்போ என்ன அதிசயமா படுத்துறீங்க?" இடையை கட்டிக் கொண்டு விட மறுக்கும் சிறு குழந்தையாய் அவள் மடியில் படுத்துக் கொண்டு அலுச்சாட்டியம் செய்வது விஜயேந்திர பூபதியே தான்.

"நான் போகலாம்... நீ தான் என்னை தனியா விட்டு போகக் கூடாது."

"ஏன் விஜய் இப்படி இம்சிக்கிறிங்க? பாவம் ஆதி ஊருக்கு போகப் போறான். சீக்கிரம் வந்துடறேன். சமத்து தானே நீங்க? சொன்னா கேக்கணும்."

"உன்னை போக வேண்டான்னா சொல்றேன்... நானும் வரேன்னு தானே சொல்றேன். இதெல்லாம் அநியாயம் சிட்டு... ராஜா விஜயேந்திர பூபதியை கெஞ்சவிடுற..."

"நீங்க எவ்வளவு கெஞ்சினாலும் நோ தான். எங்க செட்டுல வேறு யாருக்கும் இடமில்லை." (என்னா பெரிய செட்டு... நாங்க பாக்காத டபரா செட்டு! )

"போடி போங்கு... ஆதி நிவியை கூட்டி வருவான் பாரு. அதெல்லாம் வரமாட்டான். இது எங்களுக்குள் பெர்சனல் அக்ரிமெண்ட் தெரியுமா?"

"சரி நானே உன்னை கூட்டி போறேன். உங்க கூட சேராமல் வேறு டேபிளில் உட்கார்ந்திருக்கேன். முடிந்ததும் சேர்ந்து வந்துடுவோம்."

அவ்வளவு தான் நந்தினிக்கு கோபம் வந்துவிட்டது.

"விஜய்! உங்களுக்கு என்ன பிரச்சனை? உங்க குடும்ப கௌரவம் பாதிக்கிற மாதிரி நடந்துக்க மாட்டேன் நம்பலாம்."

"போடி லூசு. உன்னோடயெல்லாம் பேச முடியாது கிளம்பு." அவளுக்கு முன் அவன் வெளியே கிளம்பிவிட்டான். (ரொம்ப தான் போ. எனக்கும் பெர்சனல் ஸ்பேஸ் வேணும்.) அவளும் சென்றுவிட்டாள்.

யாருகிட்ட? நந்தினியை கட்டாதன்னு எத்தனை பேர் புத்தி சொன்னாங்க கேக்கலையே...

ராஜா விஜயேந்திர பூபதியின் பரிதாப நிலையை...?

# அத்தியாயம் 24

**வி**ஜயின் மாற்றத்தால் தோழியின் முகம் தெளிந்திருப்பது கண்டு நண்பர்கள் இருவருமே சந்தோஷப்பட்டனர்.

பிரபா, பவானியின் காதல் பற்றியும் அவளது அறியாமை பற்றியும் சொல்லி வருத்தப்பட, நந்து பவானிக்கு ஆதரவாக,

"காதல் கொண்ட மனது சந்தேகப்படாது பிரபா... விஜயின் நடவடிக்கைகள் நேரடியாக என்னை காயப்படுத்தும்போது கூட தவறா நினைக்க மனம் வராது."

"அனுபவம் பேசுது... கேட்டுக்க பிரபா..."

"ஆதி... காதல் விஷயத்தில் நீ சொன்னது தான் சரி... எதார்த்தமும் கூட... காதலாகி கசிந்து உருகுவதெல்லாம் இப்போது முட்டாள் தனமாக தெரியுது. வயசு கோளாறில் ஏதோ உளறிவிட்டேன் நந்தினி.

அந்த அர்ஜுனை பார்க்கும் போது நான் நினைத்தது போல் தான் நடந்து கொள்வதாக தெரியுது. பேபி பேபின்னு தரையில் விடாமல் தாங்குறான். அதுலயே ஜில்லாயிடுது இந்த லூசு. கொஞ்ச நேரத்தில் அவன் புத்தியை காட்டும் போது இவளுக்கு பிரித்தறிய தெரியல...

பாவம் ஆதி, அம்மா இல்லாததால் அன்புக்கு ஏங்குவான்னு நினைக்கிறேன். பட் அதை காட்டிக்க மாட்டேங்கிறா. இவன் கொஞ்சம் கொஞ்சியதும், வேறெதையும் யோசிக்கமாட்டேன்கிற.

எல்லாத்துக்குமே இவ தான் பே பண்றா... தான் ஏமாத்தப்படுறோம்னு தெரியாமலேயே ஏமாந்துகிட்டு இருக்கா. பண விஷயம் மட்டுமில்ல கம்பெனி விசயத்திலும் கோட்டைவிடுறா அதான் முதலாளிகிட்ட சொல்லிடலாமான்னு பார்க்கிறேன்."

"என்னடா... ரெமோ இப்படி மாறிட்டான்?" ஆச்சரியப்பட்டாலும்,

"உனக்கு பவானி மேல ஒரு சாஃப்ட் கார்னர் இருக்கு தானே பிரபா?" எனக் கேட்கவும் மறக்கவில்லை நந்து.

"இருக்கலாம்..." உண்மையை ஒத்துக் கொண்டான் பிரபா. அதன் பின் கூத்தும் கும்மாளமுமாய் உணவை முடித்துக் கொண்டு நண்பனுக்கு வாழ்த்துச் சொல்லி பிரியா விடை கொடுத்து வெளியே வர அன்று போல் இன்றும் விஜய் அவளுக்காக காத்திருந்தான்.

ஆதியின் கரம் குலுக்கி வாழ்த்துச் சொன்னவன் தன் பாட்டனரின் கார்டை கொடுத்து துபாயில் எந்த உதவி தேவையென்றாலும் தொடர்பு கொள்ளும் படி கூறி விடைபெற்றான்.

கணவனை பெருமை பொங்க பார்த்தவள், சட்டென நண்பனின் புறம் திரும்பி கையசைத்து விடைபெற்று காரில் ஏறிக் கொண்டாள்.

"என்னடி... நமக்காக காத்திருந்து கூட்டிட்டு வரானே, அவனுக்கு ஒரு தேங்க்ஸ் சொல்லுவோம்... இல்ல சண்டை போட்டு சிலுத்துகிட்டு வந்தோமே... அதுக்கு ஒரு சாரி சொல்லுவோம்... எதுவுமில்லாம வேடிக்கை பார்த்துட்டு வர்ற?"

"நான் உங்களை காத்திருக்கச் சொன்னேனா? நான் எதுக்கு தேங்க்ஸ் சொல்லணும்? வம்பிழுத்தது நீங்க, சோ சாரியும் நீங்க தான் சொல்லணும்."

"சும்மா இருந்த புள்ளைக்கு ராஜவம்சத்து பழக்கத்தை கத்துக் கொடுத்து இப்போ கண்ணுக்குள்ள விரலைவிட்டு ஆட்ட வச்சுட்டாங்களே ராணியம்மா..." வாய்விட்டு புலம்ப,

"விஜய்! அத்தை என்கிட்ட பேசினது உங்களுக்கு எப்படி தெரியும்?" ஆச்சரியமாய் விழி விரிக்க,

"மருமக பண்ற அட்டகாசத்துக்கெல்லாம் குற்றப் பத்திரிக்கை வாசிக்காமல் இருக்கும் போதே தெரியும்... நீ என்னை படுத்தி எடுக்கும் போதும் கண்டுக்காம இருந்தாங்களே அநியாயம்டி சிட்டு." போலியாக வருந்தியவன்...

"ஏய் சாரி சொல்லுடி" மீண்டும் விட்ட இடத்திற்கே வந்தான்.

"நீங்க தான் காரணம். சோ நீங்க தான் சொல்லணும்..."

"நோ, நோ... நீ தான்... சின்ன புள்ள தனமா சண்டை போடுறோம்ல? எப்படி இருந்த ராஜா விஜயேந்திர பூபதியை இப்படி ஆக்கிட்டியே... ஒன்னு செய்யலாம் வீட்டில் போய் முத்த சண்டை போடலாம் யார் தோற்று போறோமோ அவங்க சாரி சொல்லணும் சரியா?"

"எல்லாத்தையும் உங்களுக்கு சாதகமாவே யோசிப்பீங்களா விஜய்? குத்து சண்டை போடலாம்..." அட்டகாசமாக சிரித்தவன்,

"என்னோட இருகிய அணைப்பையே தாங்கமாட்ட இதுல குத்து சண்டை? ஒரு குத்துக்கு தாங்குவியா?"

"பேச்சை குறைங்க விஜய்! பெர்பாமென்ஸை பார்த்துட்டு சொல்லுங்க..."

ஆகட்டும் மகாராணி..." அமைதி காத்தான் விஜயேந்திரன். வீட்டிற்கு வந்ததும் வராததுமாக தன் சட்டையை கழட்டியவன் சண்டைக்குத் தயாராகி,

"வாடி!" தன் முஷ்டி மடக்கி குத்துவதற்கு தயாராக வைத்துக் கொண்டிருக்க,

"இப்போ எதுக்கு விஜய் சட்டை போடாமல் நிக்கறீங்க? இந்த ஜிம் பாடியைப் பார்த்து பயந்துடுவேன்னு தானே? அதெல்லாம் நடக்காது." (அட லூசே உன்னை மயக்க திட்டம் போடுறான்...)

"பயப்படுறவளா நீ? ராஜா விஜயேந்திர பூபதியையே தண்டனிடச் செய்தவள்." சிறு சிரிப்புடன்,

"பேச்சை மாத்தாம வாடி..." சொல்லி முடிப்பதற்குள்ளாகவே அவனை குத்த தொடங்கிவிட்டாள்,

"இதெல்லாம் போங்க்கு ஸ்டார்ட் சொல்லாமல் குத்த ஆரம்பிச்சுட்ட..." தடுப்பதை மட்டுமே வேலையாக செய்து கொண்டிருந்தவன் முகம் பார்த்தவள்...

"இங்கு இப்படி தான். நோ ரூல்ஸ்... எல்லாம் என் இஷ்டம் தான். பேசிக் கொண்டே சரமாரியாக அவன் கைகளில் குத்த,

"ஏய் வலிக்குதுடி நான் குத்தினால் நீ தாங்க மாட்ட ஒழுங்கா இரு சொல்லிட்டேன்..."

"போட்டின்னு வந்துட்டா நான் பின்வாங்க மாட்டேன் தோற்றுட்டீங்கன்னு ஒத்துக்கோங்க விட்டுடறேன்..." அவனது கரம் தன்னை நோக்கி வரவும் பின்னுக்கு நகர்ந்தவளை லாவகமாக இழுத்து இறுக அணைக்க...

"அம்மா! விடுடா காட்டுவாசி..." கத்தியவளால் அசையவே முடியவில்லை.

"நீ தானே சொன்ன நோ ரூல்ஸன்னு... சாரி சொல்லுடி..." வேறு வழியின்றி,

"சாரி! விடுங்க..." முகம் திருப்பிக் கொண்டாள் நந்தினி.

"அது! என்ன குத்து குத்துற...? ராட்சஷி..." பேசிக் கொண்டிருக்க அவன் வயிற்றில் குத்திவிட்டாள். எதிர்பாராத தாக்குதலில் நிலைகுலைந்து போனவன் பொத்தென கட்டிலில் விழுந்துவிட்டான். அவ்வளவு தான் பதறியவள்,

"விஜய்... விஜய்... கண்ணை திறங்க" வெடித்து அழ

"சிட்டு... இவ்வளவு தான் உன் தைரியமா? சும்மா..." என கண் சிமிட்ட

"போப்பா நான் பயந்துட்டேன் தெரியுமா?"

"இதெல்லாம் உனக்கே கொஞ்சம் ஓவரா இல்லையாடி? இந்த தேன்சிட்டு ராஜாளியை என்ன செஞ்சுட முடியும்?" புருவம் உயர்த்தி வினவ...

"முடியும்! சிட்டு... சிட்டு... ப்ளீஸ் கெஞ்சவிடாதடின்னு உங்களை சுத்தவிட முடியும். பாக்கறீங்களா?"

"அம்மா வலிக்குதே... சிட்டு பயங்கரமா குத்திட்டடி ரொம்ப வலிக்குது..." என வயிற்றை பிடித்துக் கொள்ள

"விஜய்!' என பதட்டத்துடன் அருகே வந்தவளை தன் பிடிக்குள் கொண்டுவந்தவன்...

"என்னை கெஞ்சவிடுவியா? பாக்கலாம் இன்று யார் கெஞ்சுறாங்கன்னு..." அவளை பேசவிடாமல் மலைப்பாம்பு தன் இறையை முறுக்கி துவம்சம் செய்வது போல் மூச்சு திணற

வைத்தான். கெஞ்சுவதற்கு கூட இயலா நிலையில் அவனிடம் சரணாகதி அடைந்திருந்தாள் நந்தினி.

நாளை காலை ஆதி துபாய் கிளம்ப வேண்டும். அச்சமயம் ஆளுயர குரங்கு பொம்மையுடன் வீட்டிற்குள் நுழைந்தவனைப் பார்த்து,

"இது எதுக்கு ஆதி அங்கு யாருக்கும் வாங்கிப் போகணுமா?"அப்பாவியாய் மங்களம் கேட்க...

"இது நம்ம வீட்டு குரங்குக்குத் தான். இந்தாடி வச்சுக்கோ..." என கண் சிமிட்டி நிவியிடம் கொடுக்க,

"ஏன்டா உனக்கு கரடி பொம்மையெல்லாம் கிடைக்கலையா? இதப் போய் வாங்கிட்டு வந்திருக்க?"

"இதுக்கு என்னம்மா குறைச்சல்? குரங்குக்கு குரங்கைத் தான் பிடிக்கும். கரடியை பார்த்து பயந்துவிடும் அதெல்லாம் யோசிச்சுட்டோம்ல..."

"ஆதி புள்ளையை குரங்குன்னு சொல்லதான்னு எத்தனை தடவை சொல்றது..."

"அம்மா... இதுக்கு ஒரு பஞ்சாயம் வைக்காதிங்க. குரங்கை குரங்குன்னு தான் கூப்பிடுவாங்க... மண்ணு மாதிரி நிக்காதடி. எனக்கு பிடிச்சிருக்குன்னு சொல்றதுக்கென்ன?"

"அடப்பாவி இதெல்லாம் அநியாம்டா... நீ கூப்பிடும் அழகுக்கு அவ உனக்கு வக்காலத்து வேறு வாங்கணுமா?"

"தங்கம்னு கூப்பிடற மாதிரி இதுவும் செல்லப் பேர் தான் அத்தை... நீங்க கோபப்படாதிங்க."

"அதைச்சொல்லு... இவனுக்குன்னு வந்து சேர்ந்திருக்கியே... உன்னையெல்லாம் மாத்தவே முடியாது."

இரவில் வழக்கம் போல் அவளது அறைக்கு வந்தவன் தன் இருக்கையில் அமர, நாளை இந்நேரம் இங்கு இருக்கமாட்டானே கண் கலங்கியபடி ஜன்னல் புறம் திரும்பி நின்று கொண்டிருந்தாள் நிவேதா.

"பட்டுக்குட்டி... இப்படி வா..." தன்னருகே அழைத்தவன், புத்தம் புதிய கைபேசியை அவளிடம் கொடுக்க,

"இது எதுக்கு அத்தான்?"

"என்னோட பேசணும்னெல்லாம் உனக்கு தோணவே தோணாது... ஆனால் எனக்கு அப்படி இல்ல. வாரத்தில் ரெண்டு நாள் பேசுவேன். அங்கு போனதும் சிம் வாங்கிட்டு நம்பர் தரேன்... உனக்கு எப்போ பேசணும்னு தோன்றினாலும் கால் பண்ணு.

தூக்கம் வராமல் கஷ்டப்பட்டா, உடனே அத்தானுக்கு கூப்பிடனும் சரியா? மூணு மாசத்துக்கு ஒரு தரம் கண்டிப்பா வந்துடுவேன். அப்புறம் பத்து நாள் உன்னோடு தான். சமத்தா இருக்கணும் தங்கம். கண்டதையும் நினைச்சுக்கிட்டு வருத்தப்படக் கூடாது.

இப்போ ரொம்பவே பெரிய பெண்ணாகிட்டீங்க சமத்தா இருப்பிங்க தானே? இனி, இந்த குரங்கு பொம்மை தான் உன் ஆதி அத்தான் சரியா? வேறு என்ன வேணும்? இன்னும் இப்படி உம்முன்னு இருந்தா எப்படி பட்டு...? அத்தான் அங்கு போய் ஒழுங்கா வேலை பார்க்க வேண்டாமா?" அருகே அமர்ந்திருந்தவளின் கன்னம் தாங்கி வினவ,

இந்த பொம்மையும் நீங்களும் ஒன்னா?" விழிகளில் நீர் இதோ அதோ என நிற்க..."

"இல்லையா பின்ன...? இந்த குட்டி குரங்கோட ஜோடி குரங்கு! பொருத்தமா தானே இருக்கு..." சூழலை இலகுவாக்க முயன்றான்.

"ஆதி அத்தான்... கண்டிப்பா போகணும் இல்ல...?" தானாகவே அவனை கட்டிக் கொண்டு மார்பில் முகம் புதைத்துக் கொள்ள, (ஐயோ! என்னடி இப்ப போய் இப்படி கேட்கிற?) பதில் சொல்ல தெரியாமல் விழிக்க அவனது சட்டை பட்டனை திருகியபடிய,

"ஆதி அத்தான் நாளைக்கு ஏர்லைன்ஸ் ஸ்ட்ரைக் இருந்தா நல்லா இருக்கும் இல்ல?" (கிழிஞ்சுது)

"தங்கம் உனக்கு இந்த பட்டன் ரொம்ப பிடிச்சிருக்கோ... இன்னும் கொஞ்சம் தான்... டிரை பண்ணு கையயோட வந்துடும்..."

"ம்... எனக்கு இந்த சட்டையே பிடிச்சிருக்கு... இப்போ அதுவா முக்கியம்? கண்டிப்பா கரெக்ட் டயமுக்கு ஃபிளைட் கிளம்பிடுமா?" அவள் முறைப்பாக கேட்க...

"லூசு லூசு... நாளைக்கு இல்லன்னா நாளை மறுநாள். போறது உறுதி ஆன பிறகு எதுக்கு இந்த யோசனை?" என்றபடி அவளை கட்டிலில் அமர்த்தியவன் தன் சட்டையை கழட்ட...

"ஆதி அத்தான் என்ன பண்றிங்க?" அவள் மிரண்டு விழிக்க...

"அடிங்க! இப்படியெல்லாம் யோசிக்க தெரியுமா உனக்கு? நீ தானே இந்த சட்டை பிடிச்சிருக்குன்னு சொன்ன... போட்டுக்கோ..."

"சோ ஸ்வீட் தேங்க் யூ" வேகமாக அணிந்து கொண்டாள். நைட்டியின் மீது அவன் சட்டை... லூசு தனமாக இருந்தாலும் இருவருக்குமே பிடித்திருந்தது.

"உங்க மடியில் படுத்துக்கட்டுமா ஆதி அத்தான்...?" வேறு எந்த உணர்ச்சியும் காட்டாமல் அமைதியாய் அவன் முகம் பார்க்க... மறுக்க முடியாமல் படுக்க வைத்துக் கொண்டான். சற்று நேரத்திலேயே தூங்கிப் போனாள். அவனுக்கும் அவளை பிரிய வேண்டுமே என்னும் வருத்தம் தலைதூக்க அவளருகிலேயே படுத்துவிட்டான்.

மறுநாள் ஆதியின் பெற்றோர், நிவி, பிரபா, நந்து அனைவரும் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். மங்களம் மகனை கட்டிக் கொண்டு அழ அதிசயமாய் தன் டேமை திறக்காமல் நின்றது நிவிக்குட்டி. நந்து நண்பனைத் தோளோடு அணைத்து விடைகொடுக்க, பிரபாவும் ஆதியும் இறுகத் தழுவிக் கொண்டனர்.

அன்னைக்கும் தந்தைக்கும் முத்தம் வைத்து இருவரையும் கட்டிக் கொண்டு விடைபெற்றவன், விமான நிலையத்திற்குள் நுழையும் சமயம் திரும்பி பார்த்து நிவியை நோக்கி 'வா' என்பது போல் கையசைக்க சிட்டாய் பறந்து அவனருகே நிற்க,

"பை தங்கம்... இப்படித் தான் தைரியமா இருக்கனும். அவள் கையோடு கைகோர்த்துக் கொண்டான். கிளம்பட்டுமா? முத்தமிட வேண்டும் போல் மனம் பரபரக்க பெற்றோரும் நண்பர்களும் நிற்கும் போது எப்படி... என தயங்கிக் கொண்டிருக்க, எம்பி அவன் கன்னத்தில் வேகமாய் முத்தமிட்டவள்,

"பை ஆதி அத்தான்!" விரிந்த புன்னகையுடன் கையாட்டி விடை கொடுத்து திரும்பிச் சென்றுவிட எதிர்பாராத முத்தத்தில் திகைத்து நின்றவன் சிறு சிரிப்புடன் தன்னை சமன்செய்து கொண்டு அனைவர்க்கும் கையசைத்து விடை கொடுத்து கிளம்பிவிட்டான்.

"அத்தை... ஆதி அத்தான் நான் தைரியமா இருக்கேன்னு பாராட்டுனாங்க தெரியுமா? தங்கம்ன்னு சொன்னாங்க..." குதூகலமாய் சொல்லிக் கொண்டுவர (இது தான் முத்தத்துக்கு காரணமா? நான் கூட என்னவோ ஏதோன்னு நினச்சேன் ரெண்டும் பிடிகொடுக்க மாட்டேங்குதுகளே ...) ஆயாசமாய் இருந்தது மங்களத்துக்கு.

அவனில்லாது வீடு வெறிச்சென்று இருக்கவே ஒரே அழுகாச்சி தான். அத்தையும், மாமாவும் சமாதானம் செய்யும் நிலையில் இருந்தாள் நிவி.

"இவ்வளவு தான் உன் தைரியமா? இன்னும் கொஞ்ச நேரத்தில் ஆதி போன் பண்ணுவான் நீ அழுதன்னு தெரிந்தால் அவன் வந்ததும் நியாபகம் வச்சிருந்து கொட்டுவான். அது உனக்கு தேவையா?" அத்தை வடிவேலு பாணியில் கேட்க சிறு சிரிப்புடன் தன்னை சமன் செய்து கொண்டாள்.

'நிர்வாணா' பாரில் பவானியும், அச்சுவும் எதிரும் புதிருமாக அமர்ந்திருக்க... அர்ஜுன் இறுகியிருந்தான். பவானி குழப்பத்தில் இருந்தாள்.

"பார் பேபி... நானும், நீயும் நண்பர்கள் தான். என்னால் உன்னை கல்யாணமெல்லாம் பண்ணிக்க முடியாது. நான் உன்ன விரும்பல. நட்போட தான் பழகினேன்... புரிஞ்சுக்க."

"பொய் சொல்லாத அச்சு. உன் பேரண்ட்ஸை நினைச்சு பயப்படுறியா? என் அப்பாவை பேசச் சொல்றேன். அது ஒரு பிரச்சனையே இல்ல..."

"பவானி நான் உன்ன விரும்பினால் யாரை வேணாலும் எதிர்த்து திருமணம் பண்ணிக்குவேன். பட் இங்கு பிரச்சனையே நாம நட்பாக பழகியதை நீ தப்பா புருஞ்சுகிட்டு இருக்கங்கிறது தான். நான் எப்பவாவது உன்னை காதலிக்கிறேன்னு சொல்லியிருக்கேனா? இந்த பாரையும், பப்பையும் தவிர வேறு எங்காவது சந்திச்சிருக்கோமா?"

"போதும் அர்ஜுன்... உன் விளையாட்டை நிறுத்து. என்னை டென்ஷன் பண்ணாத. இதை பத்தி நாம இன்னொரு நாள் பேசுவோம்..."

இவனுக்கு என்ன தான் பிரச்சனை? எனக்காக உருகியது, பார்த்து பார்த்து தாங்கினது இதெல்லாம் காதல் இல்லையா? கோபத்தில் கத்திவிடப் போகிறோம் எனப் பயந்தே பேச்சை ஒத்திவைக்க விரும்பினாள். ஆனால் அவனோ இதை இன்றோடு முடித்துவிட வேண்டும் என நினைத்து,

"நோ பவானி இன்னொரு நாள் பேச்சுவதற்கெல்லாம் இதில் ஒண்ணுமே இல்லை. இன்னும் எத்தனை நாள் கழித்து பேசினாலும் என் முடிவு இது தான். இனி நாம் சந்திக்கவே வேண்டாம். உன்னை ஃபிரண்டா கூட பார்க்க முடியாது.

அதற்கான தகுதியை நீ இழந்துட்ட. புரியுதா? இனி எனக்கு போன் பண்ணாத... நமக்குள் எல்லாம் முடிஞ்சு போச்சு..."

"அர்ஜூன்!" அலறியவள் அவனை அறைய கையை ஓங்க, அதை தடுத்து அவள் கரம் பற்றியவன்,

"உன்னை போல் ஒரு ராங்கியை என்னால் மனைவியாக ஏற்க முடியாது. இன்றோடு எல்லாம் முடிந்தது குட் பை!" போய்விட்டான். நடந்த எதையும் அவளால் நம்ப முடியவில்லை.

பிரபாவிடம் பேசிய பிறகு இரண்டு மூன்று முறை அர்ஜூனிடம் திருமண பேச்சை எடுக்க... அவன் தட்டிக்கழித்தான். அது நன்கு புரியவே அவன் மனதில் இருப்பதை தெளிவாக தெரிந்து கொண்டுவிடும் பொருட்டு விடாப்பிடியாய் பேசப் போய் இப்படி ஆகிவிட்டது.

இன்னும் கூட தங்களுக்குள் பிரிவு நேர்ந்துவிட்டது என்பதை அவளால் நம்ப முடியவில்லை. குடிக்கவேண்டும்... அதைவிட முக்கியமாய் யாரிடமாவது மனதில் உள்ளவற்றை கொட்ட வேண்டும்.

இதற்கெல்லாம் முன் முக்கிய சந்தேகம் ஒன்றை தீர்த்துக் கொள்ள வேண்டும் வேகமாக பிரபாவுக்கு அழைக்க முதல் ரிங்கிலேயே எடுத்துவிட்டான்.

"சொல்லுங்க மேம்..." அமைதியாக காத்திருக்க,

"பிரபா, லவ் பண்றவங்க பேபின்னு கூப்பிடுவாங்க தானே?" ( கடவுளே அந்த நரியின் சாயம் வெளுத்துவிட்டது போலவே... இப்போ இவ எங்கிருக்கான்னு தெரியலையே?) தவிப்புடன்,

"நீங்க எங்கிருக்கிங்க மேம்?"

"நிர்வாணால தான். கேட்டதுக்கு பதில் சொல் பிரபா... உனக்குத் தெரியுமா தெரியாதா? கோபமாகவே கத்த,

"எனக்கு தெரிந்த யாரும் இப்படி கூப்பிட்டதில்ல மேம். வேறு வேறு செல்ல பேர் சொல்ல கேள்விப்பட்டிருக்கேன் இது தெரியல.."

"நீ உன் கேர்ள் ஃபிரண்டை எப்படி கூப்பிடுவ?"

"பவானி! எனக்கு கேர்ள் ஃபிரண்டெல்லாம் கிடையாது. அப்படி இருந்தாலும் என் பொண்ண தவிர நான் யாரையும் பேபின்னு கூப்பிட மாட்டேன்." அவனும் நிர்வாணாவை நோக்கி ஆட்டோவில் வந்து கொண்டிருந்தான்.

"அப்போ நீ சுத்த வேஸ்ட்! உனக்கு காதலை பத்தி ஒண்ணுமே தெரியாது. அதற்குள் முதல் ரவுண்டை முடித்துவிட்டிருந்தாள் பவானி. போதை லேசாக ஏறத் தொடங்க,

"பிரபா நீ சொன்னது சரிதான். இந்த அச்சு என்ன லவ் பண்ணலன்னு சொல்லிட்டான். ஃபிரண்டா தான் பழகினானாம்... அவன் பொய் சொல்றான் தானே? நான் ஃபீல் பண்ணேன் பிரபா... உள்ளுணர்வு பொய் சொல்லாது. நான் அவனை

எவ்வளவு லவ் பண்றேன் தெரியுமா? ஏன் நோ சொன்னான்?" அவள் புலம்பிக் கொண்டிருக்க நேரில் வந்து நிற்கும் பிரபாவைக் கண்டவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ஏய் பிரபா.... வா வா... ஏதோ விருந்துக்கு வந்தது போல் பலமாக வரவேற்று,

"உன்னோட ஃபேவரைட் என்ன?" ஆர்வமாய் அவன் முகம் பார்க்க

"சாரி மேம் எனக்கு பழக்கமில்லை."

"பின்ன எதுக்கு வந்த?" கேலி சிரிப்புடன் வினவியவளை பார்க்க பாவமாக இருந்த போதும்,

"உங்களுக்காகத் தான் மேம்.. கிளம்புங்க வீட்டில் கொண்டுபோய் விடறேன்."

"ஏய்! நான் இன்னும் ஆரம்பிக்கவே இல்லை."

அடுத்த ட்ரிங்க் ஆர்டர் செய்தவள் இவனுக்கு கோக் ஆர்டர் பண்ணியதோடு நில்லாமல் தன் புலம்பலை தொடங்கிவிட்டாள்.

"பிரபா நீ யாரையாவது லவ் பண்ணிருக்கியா?"

"இல்ல மேம்..."

"இந்த மேமெல்லாம் வேண்டாம் கால் மீ பவானி... இப்போ நாம ஃபிரண்ட்ஸ் ஆகிட்டோம் சரியா? கிவ் மீ எ ஹாய்

பைவ்...." விரிந்த புன்னகையுடன் அவன் கரத்தோடு தன் கரம் தட்டியவள்,

"சொல் பிரபா, உன்னை எந்தப் பொண்ணாவது இப்படி கழட்டிவிட்டிருக்கா?"

"இல்ல பவானி... போதும் கிளம்பலாம்."

"ஷட் அப்! உன்னை யாரும் ஏமாத்தல, அதான் என் வலி உனக்கு புரியல..." (எடுத்து சொன்னப்போ புரிஞ்சுக்காம இப்போ வேதனை படுறியேடி...) அவள் வருத்தமும், வேதனையும், ஏமாற்றமும் அவனை பாதித்தது.

ஏதேனும் செய்து அவள் துயர் துடைத்துவிட வேண்டும் என்ற மனதின் வேகம் கண்டு அவனுக்கு ஆச்சரியம். கூடவே ஆதியின் காதல் இலக்கணமும் நியாபகம் வர, தான் அவளை விரும்புகிறோம் எனத் தெரிந்து போனது.

ஆனால் அந்த காதல் நிரைவேறுவதற்கு ஒரு சதவீத வாய்ப்புக்கு கூட இல்லை என்னும் போது கோபமும் ஏமாற்றமும் போட்டி போட, அதை மறைத்து வாய் வஞ்சனையில்லாமல் பொய் சொன்னது.

"நான் யாரிடமும் இப்படி ஏமாறலன்னும் சொல்லலாம்..."

"ஏதோ ஒன்னு... நான் ஏமாந்துட்டேன்ல?! எப்படி ஏமாந்தேன்? அதான் புரியமாட்டேங்குது. அச்சு எவ்வளவு

கேரிங் தெரியுமா?" (ஆமா, அவன் கேரிங்கில் கொல்லியை வைக்க) கடுப்பாகிய போதும்,

"சரி, இப்போ என்ன செய்யலாம் பவானி?" என்றான் அமைதியாக.

"ஹாங்... இது! ஹலோ அங்கிள்..." தடுமாறியபடியே அடுத்த மேசைக்கு சென்றவள் அங்கிருந்த இரண்டு பெரிய மனிதர்களிடம்,

"பாருங்க அங்கிள்... ஒருத்தன் என்னை லவ் பண்ணிட்டு இப்போ இல்லைங்கிறான் அவனை என்ன பண்ணலாம்?" அவர்கள் மேசையில் போய் உட்கார்ந்துவிட்டாள்.

'கடவுளே பேசாமல் வாயை வச்சுக்கிட்டு இருந்திருக்கலாம் நான் என்னவோ நினைச்சு கேட்கப் போய் இவ ஆரம்பிச்சுட்டாளே...' செய்வதறியாமல் அவளருகே போக,

"இவனா? பாப்பா அம்சமா இருக்கு தம்பி... ஏன் வேணான்னு சொல்ற?" இவனை நோக்கி கேள்வி பாய...

"ஐயோ இல்ல அங்கிள், இவன் என் ஃபிரண்ட்." அவனைத் தோளோடு அணைத்துக் கொள்ள, அவள் ஸ்பரிசம் மூச்சடைக்க வைத்தது. (இதென்ன கொடுமை?) மெல்ல அவள் கரத்தை விலக்கியவன்,

"போகலாம் பவானி..." என கரம் பற்ற

"வெயிட் ஒன் மோர் கொஸ்டின்.... அங்கிள் அவன் என்ன ஃபிரண்டுன்னு சொல்லிட்டான் இப்போ நான் என்ன பண்ண...?"

"ஹா ஹா ஹா... நீங்க எல்லாம் அண்ணன்னு சொல்லி கழட்டிவிடுவிங்க. பசங்க ஃபிரண்டுன்னு சொல்லுவானுகளா?" அங்கிள்கள் இருவரும் போதையில் உளறியபடி சிரிக்க, அவளை இழுத்துக் கொண்டு சென்றவன்,

"சாவியைக் கொடு பவானி..." தடுமாறிக் கொண்டிருந்தவள்,அவன் தோள் சாய்த்து நின்று, தன் ஜீன்ஸில் கையை விட்டு துழாவ சாவி தான் அகப்பட மாட்டேன் என்றது.

"காணுமே.." சிறுபிள்ளை போல இரு கையையும் விரித்து உதடு பிதுக்க... அவளை அங்கேயே நிறுத்திவிட்டு உள்ளே சென்று பார்க்க அவளது கிளட்ச் மேசையில் இருந்தது.

அதில் சாவியும் இருக்க, விரைந்து வெளியே வர ரோட்டில் நின்று லிஃப்ட் கேட்டுக் கொண்டிருந்தாள் பவானி. (முடியல...) கோபமும் அலுப்புமாய் அவளை மீண்டும் இழுத்து வந்து காருக்குள் தள்ளி வண்டியை கிளப்பினான்.

வழி நெடுகிலும் இதே புலம்பல்...

"பிரபா என்னை பாரேன்... இந்த முகத்தை பார்த்தால் ஏமாறுவது போலவா இருக்கு..." வண்டி ஓட்டவிடாமல் அவன் கரத்தை பிடித்து இழுப்பதும், முகத்தை தன் புறம் திருப்பவும் முயற்சித்துக் கொண்டிருக்க,

"இப்படி பண்ணா எங்கயாவது போய் மோத வேண்டியது தான்... கொஞ்ச நேரம் பேசாமல் வா பவானி..."

"நோ, எனக்கு பதில் சொல்லு..."

"ஷ்... பேசாத! வாயை மூடு! அமைதியா உட்காரல... பிடிச்சு வெளியே தள்ளிவிட்டுருவேன்." கோபம் போலும் மிரட்ட, அது நன்றாகவே வேலை செய்தது. காலை தூக்கி டாஸ் போர்டு மேல் வைத்து கொண்டு அமர, தலையில் அடித்துக் கொண்டவன்,

"ஒழுங்கா உட்கார்!' என அவள் காலை தட்டிவிட...

"என்ன மிரட்டுற? நான்... நான் உனக்கு என்ன வேணும்?" குழப்பமாய் அவன் முகம் பார்க்க (நாசமா போச்சு...) பதில் சொல்ல விரும்பாதவனாய் அமைதி காக்க சற்று நேரம் யோசித்தவள்,

"ஏய்! நான் உன் பாஸ்..." (இதுலயெல்லாம் தெளிவா இரு)

"கொஞ்ச நேரம் அமைதியா இரு பவானி."

"யூ இடியட்! கால் மி மேம்..." (குடிகாரி... குடிகாரி...) ஆயாசமாக இருந்தது அவனுக்கு. நல்ல காலம் ஒருவழியாக அவள் வீடு வந்துவிட்டது. இரவு நேரம் என்பதால் முருகன் வீட்டிற்கு சென்று விட்டிருந்தார்.

கீழே இறங்கியவள்,

"கொடு!" வெடுக்கென அவனிடம் இருந்து சாவியை பறித்துக் கொண்டு தடுமாறியபடி உள்ளே செல்ல (இந்த

படியிலெல்லாம் உருண்டு விழாமல் போய்விடுவாளா?) திரும்பி செல்ல மனம் இல்லாமல் அவள் வீட்டிற்குள் நுழையும் வரை பார்த்துக் கொண்டிருந்தவன் ஆட்டோ பிடித்து வீடு வந்து சேர்ந்தான்.

இதில் இருந்து எப்படி மீண்டுவரப் போகிறாள் என்னும் பெரும் கவலை வந்து ஒட்டிக் கொண்டது பிரபாவுக்கு. நாம் ஏன் இவளுக்காக கவலை படவேண்டும்? மனதின் கேள்விக்கு விடை இல்லாத போதும் அவள் நினைவு நீங்கா இம்சையாய் குடிகொண்டது அவனிடம்.

அடுத்த இரண்டு நாட்களுக்கு அவள் நினைவாகவே இருக்க, இருமுறை தொலைபேசியில் தொடர்பு கொண்டவனின் அழைப்புகள் எடுக்கப் படாமலேயே முடிவுக்கு வந்தது.

குறுஞ்செய்திகளுக்கும் பதிலே இல்லாது போக, இதில் நாம் ஒன்றும் செய்ய முடியாது என்னும் முடிவுக்கு வந்தவன் புதிதாக பெரிய கம்பெனியின் டெண்டர் ஒன்றுக்கு கொட்டேஷன் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்க, அந்நேரம் எந்த அறிவிப்புமின்றி அவனது அறைக்குள் நுழைந்தவள்,

"பிரபா! VJRக்கு கொட்டேஷன் ரெடி பண்ணிட்டியா?"

"எஸ் மேம்... அதை தான் பிரிப்பர் பண்ணிட்டு இருக்கேன்."

"நாம கொட்டேஷன் அனுப்ப வேண்டாம்."

"ஏன்?" ஒற்றையாய் வந்து விழுந்த வார்த்தையில் ஆயிரம் அர்த்தம் இருந்தது.

"நான் சொல்றதை மட்டும் செய் போதும். நீ என்னிடம் கைகட்டி வேலை பார்ப்பவன். கேள்வி கேட்கும் வேலையெல்லாம் வச்சுக்காத..."

"சாரி மேம்... என்னை உங்க அப்பா கொஸ்டின் பண்ணுவாங்க... சரியான காரணம் இல்லாம பெரிய ஆஃபரை விட முடியாது."

"உனக்கு எல்லாத்தையும் சொல்லணும்ல? அச்சு அந்த டெண்டரை எடுக்கணும்... அப்போ தான் எங்க கல்யாணம் நடக்கும். இதைக் காட்டித் தான் அவனும் தொழிலில் வெற்றி பெறுவான் என்னும் நம்பிக்கையை அவன் தந்தைக்கு கொடுக்கனும். அதன் பிறகு தான் எங்க கல்யாணத்தைப் பற்றி பேசனும் என்பதில் பிடிவாதமாக இருக்கிறான். விளக்கம் போதுமா?"

"பவானி... உங்களுக்கு புரியலையா? நம்மை ஜெயிக்கவிடாம பண்றதுக்கு இதெல்லாம் ஒரு காரணம் மத்தபடி அவன் உங்களை கல்யாணமெல்லாம் பண்ணிக்கமாட்டான். மறுபடி இதையும் கோட்டை விட்டுடாதீங்க. இது ரொம்ப பெரிய ஆர்டர்.

இதுமட்டும் கிடைச்சா இதுவரை இழந்த ரெண்டு பிராஜெக்ட்டோட லாபத்தையும் சேர்த்து அள்ளிடலாம். நிச்சயமா பாஸ் இதை விட ஒத்துக்க மாட்டாங்க. அவனோட திறமையை காட்டி நம்மை ஜெய்க்கட்டும் யார் வேண்டான்னு சொன்னது?"

அர்ஜூனின் சூழ்ச்சி பவானிக்கு புரியுமா?

# அத்தியாயம் 25

"பிரபா புரிஞ்சுக்க... என் கல்யாணம் நின்னு போய்டும். அப்பாகிட்ட பேசிட்டேன். அச்சு வீட்டில் இருந்து பெண் கேட்டு வராத வரை அப்பா எந்த ஸ்டெப்பும் எடுத்து வைக்க மாட்டாங்களாம். அர்ஜுன் இந்த பிராஜெக்டை சக்ஸஸ் பண்ணாத் தான் கல்யாணத்தைப் பத்தி பேசலாம்னு அவன் அப்பா சொல்லிட்டாராம்..."

"ஒரு நிமிஷம் பவானி! அவன் தான் உங்கள லவ் பண்ணலன்னு சொன்னானே அப்புறம் எப்படி இப்போ கல்யாணம்?" புரியாமல் கேட்க,

"எனக்காகத் தான் மனசை மாத்திட்டுருக்கான் பிரபா. அவன் வெற்றிக்கு ஹெல்ப் பண்ண வேண்டியது என்னோட கடமை இல்லையா?" (இந்த சூழ்ச்சியை இவ புரிஞ்சுக்கவே மாட்டாளா? பாவி எப்படி கதை சொல்லியிருக்கான்? ஏன்டா ஒரு பொண்ணோட பாவத்தை வாங்கி கொட்டிக்கிறீங்க?) இவள் ஓயப் போவதில்லை என்பதை உணர்ந்தவன்,

"ஒன்னு செய்யலாம் மேம். நாம கொட்டேஷன் அனுப்புவோம்... அதில் ஒரு காப்பிய கொண்டு போய் அர்ஜுன்கிட்ட கொடுங்க. அதுக்கு மேல அவன் பாத்துப்பான்.

உங்க அப்பாவும் நம்மை கேள்வி கேட்க மாட்டாங்க. வழக்கம் போல் இந்த டெண்டரும் அவங்களுக்கே கிடைக்கும்."

"நல்ல ஐடியா தான். தேங்க்ஸ் பிரபா..."

"உங்கமேல வருத்தம் தான் மேம்... உங்க கம்பெனியோட வளர்ச்சியை நீங்களே கெடுக்கறீங்க..." தாட்சண்யமின்றி சொல்லிவிட்டான்.

"எனக்கு புரியுது பிரபா... கல்யாணத்துக்கு பிறகு தொந்தரவு இல்லாமல் நம்ம பிஸ்னஸை பார்க்கலாம்."

"எந்த நம்பிக்கையில் சொல்றீங்க மேம்? வேறெதாவது விஷயத்தில் மறுபடியும் உங்களை கார்னர் பண்ணுவாங்க. அப்போ என்ன செய்விங்க?"

"போதும் பிரபா! நீ என்னை குழப்பாதே... அப்படி ஏதாவது செய்தால் போடா நீயும் வேண்டாம், உன்னோடான வாழ்க்கையும் வேண்டாம்ன்னு தூக்கி எறிஞ்சுட்டு வந்துடுவேன்."

"அதைத் தான் இப்பவே செய்ங்கன்னு சொல்றேன்..." விடாமல் அவனும் பதிலுக்கு பதில் கொடுக்க,

"நான் அச்சுவை கல்யாணம் பண்ணிக்கிறதுல உனக்கென்ன பிரச்சனை?" நேராகவே விசயத்திற்கு வந்தாள்.

"பெர்சனலா எதுவும் இல்ல. நல்ல பொண்ணோட வாழ்கை வீணா போகக் கூடாதுங்கிற எண்ணம் தான்!" எங்கோ வெறித்தபடி அவன் கூற,

"ஏன் இந்த அக்கறை?" எள்ளலுடன் கேட்டவளின் விழி பார்த்தவன்,

"என்னை படிக்கவச்சவரோட பொண்ணுங்கிறதால தான். நீங்க கஷ்டப்பட்டா அது உங்க அப்பாவையும் பாதிக்கும்கிறதால தான். உங்களுக்கே உங்க மேலும் கம்பெனி மேலும் இல்லாத அக்கறை எனக்கெதுக்கு? கொட்டேஷனை உங்க மெயிலுக்கு பார்வேர்ட் பண்ணிவிடறேன்."

அதற்கு மேல் பேச ஒன்றும் இல்லை என்பது போல் அவன் தன் கணினிக்குள் முகத்தை நுழைத்துக் கொள்ள விடைபெறாமலேயே வெளியேறினாள் பவானி.

பவானியின் வாழ்வை காப்பாற்ற இதைவிட சிறந்த வழி இருக்க முடியாது. நம்பிக்கை துரோகம் தான் ஆனால் வேறுவழி இல்லை. எங்கிருந்தாலும் என் பார்பி நல்லாயிருக்கணும். அவளோட நிம்மதியும் சந்தோஷமும் எனக்கு முக்கியம்.

சாரி வனிம்மா தப்புன்னு தெரிஞ்சே தான் செய்றேன். முடிவெடுத்தவனாய் டெண்டர் அமவுண்டை மாற்றிவிட்டான்.

அதன் விளைவாக டெண்டர் பவானி இன்ஜினியரிங்கிற்கே கிடைத்துவிட அலுவலகமே கொண்டாட்டத்தில் இருந்தது.

அப்பொழுது தான் சிவானந்தன் பிரபாவுக்கு அழைத்து வாழ்த்துச் சொன்னார். அங்கே ஆவேசமும் கோபமுமாய் நுழைந்தாள் பவானி.

"பிரபா!" அவளது அலறல் அலுவலகத்தையே கிடுகிடுக்கச் செய்தது என்று தான் சொல்ல வேண்டும்.

"நீ..." எனத் தனது செகரடரியை பார்க்க, அவன் வெளியேறிவிட்டான்.

"எல்லோரையும் உன் கட்டுக்குள் வச்சிருக்க திமிரா? ஏன் இப்படி பண்ண பிரபா? உன்னால நான் அங்கு நம்பிக்கை துரோகியா பார்க்கப்படுறேன். இனி என்னை திரும்பிக் கூட பார்க்கப் போவதில்லைன்னு சொல்லிட்டான் அர்ஜூன்."

"சாரி மேம். நீங்களும், இந்த கம்பெனியும் நல்லா இருக்கனும்னு தான் அமவுண்டை மாத்திட்டேன்."

"இது என் கம்பெனி. அது நல்லா இருக்கு இல்ல நாசமாப் போகுது உனக்கென்ன? ஒவ்வொரு தரமும் நீ இங்கு வேலை பார்ப்பவன் என்பதை மறந்துடற பிரபா." தன் காதல் கைகூட இருந்த ஒருவழியையும் அடைத்துவிட்டானே என்னும் வெறியில் கொட்டித் தீர்த்தாள்.

"உங்களுக்கு இது சாதாரண கம்பெனியா இருக்கலாம். சிவானந்தன் ஐயா கஷ்டப்பட்டு உருவாகியிருக்கார். உழைப்பு, பணம்... இதோட அருமையெல்லாம் தெரியாததால் தான் இப்படி பேசறீங்க... உங்க சொந்த உழைப்பில் உருவாக்கியிருந்தால் கஷ்டம் தெரியும். அடுத்தவனுக்கு தாரை வார்த்துக் கொடுப்பது அவ்வளவு சுலபமில்லைங்கிறது புரிஞ்சிருக்கும்." என்று

முடிப்பதற்குள்ளாகவே அவன் கன்னத்தில் அவள் கரம் இடியாய் இறங்கியது.

"ஒரு வார்த்தை பேசின..." அவள் சொல்வதை கேட்க, அவன் அங்கு இருக்கவில்லை.

இதோ மூன்று நாட்கள் ஓடிவிட்டது. அவளிடம் அரைவாங்கியதில் இருந்து மீள முடியாமல் மறுகிக் கொண்டிருந்தான். அலுவலகத்திற்கு போகவில்லை.

நந்தினியை பார்க்கப் போனான். நிவியோடு பொழுதை கழித்தான். அன்னையோடு சத்துணவு கூடத்திற்கு கூட சென்று பார்த்துவிட்டான். ஒன்றும் அவன் மனநிலையை மாற்றுவதாக இல்லை. கடைசியில் ஆதிக்கு அழைத்து பேசியவுடனேயே இயல்புக்கு திரும்பினான்.

இனி அங்கு வேலை பார்க்க முடியாது என்னும் முடிவுக்கு வந்தவனாய் சிவானந்தத்தை பார்க்கச் செல்ல, இவனுக்கு முன்னால் தட்டு தடுமாறி உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள் பவானி.

அவள் ஒருபக்கம் செல்ல எத்தனிக்க கால்கள் வேறு பக்கம் அழைத்து சென்றன. எங்கு விழப் போகிறாளோ என்னும் பதட்டத்துடன் அவள் பின்னே சென்றவனை கண்டுகொண்டவள்,

"ஹாய் பிரபா! ஆர் யூ ஆல்ரைட்?" என அவன் கன்னம் தடவி... மயங்கி விழப்போக தாங்கிக் கொண்டவன், கைகளில்

ஏந்திக் கொண்டு வேலையாள் அவளது அறையை காட்ட… மாடிக்கு தூக்கிச்சென்று கட்டிலில் கிடத்தி விலகியிருந்த டீ ஷர்ட்டை சரிசெய்து, நெற்றிவருடி,

"வனிம்மா!" அவனது அழைப்புக்கு சிறு முறுவல் தோன்றியது அந்த செப்பு இதழ்களில்.

"சாரிடா உன்னோட இந்த நிலைக்கு நான் தான் காரணம். இது தற்காலிகம் தான். நிரந்தரமா உன்னை பலிகொடுக்க முடியாமல் தான் செஞ்சேன். இந்த குடியையும், அர்ஜூனையும் விட்டு நீயும்... உன் நினைவில் இருந்து நானும் எப்படி மீளப் போறோம்னு தெரியல... சீக்கிரம் மீண்டு வந்துடு வனிம்மா..." பார்வையால் வருடியவன், கீழே செல்ல...

சிவானந்தன் தனது அறைக்கு அழைத்துச் சென்று,

"பிரபா... உங்கிட்ட மனசு விட்டு பேசணும். பேபிம்மாவை பத்தி உனக்கு தெரிஞ்சிருக்கும்... இயல்பா ரொம்ப நல்ல பொண்ணு தான். எனக்குத் தான் ஒழுங்கா வளர்க்கத் தெரியல... இந்த ஆறு மாசமா தான் எல்லாம்.

அர்ஜூன் கனடால படிப்பு முடிச்சுட்டு வந்த பிறகு தான் நம்ம கம்பெனிக்கு கஷ்டகாலம் ஆரம்பம் ஆச்சு. பேபிகிட்ட எவ்வளவோ சொன்னேன் யாரையும் சட்டுன்னு நம்பாத அதிலும் அவனுங்க நம்மை இவ்வளவு நாளா எதிரியா பார்தானுங்க திடீர் மாற்றம் நல்லதுக்கு இல்ல...

ஏதாவது திட்டம் போட்ருக்கலாம்னு எடுத்துச் சொன்னேன். கேக்கலையே.. ரெண்டு ஆர்டர் கை விட்டு போன பிறகு தான் எனக்கும் ஓரளவுக்கு புரிஞ்சுது அதான் உன்னை தேர்ந்தெடுத்தேன்.

கம்பெனியை காப்பாத்திக் கொடுத்துட்ட... என் பெண் வாழ்க்கையையும் காப்பாத்திட்ட அதே போல அவளையும் காப்பாத்திடு என் மகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை கொடு பிரபா...

இத கேக்குற அருகதை எனக்கிருக்கான்னு தெரியல... ஆனால் நீ தான் வேணும்னு பிடிவாதமா இருக்கா... இப்போ மூணு நாளா தான் இந்த குடிப்பழக்கம்... ஏமாந்தவலி உன்னால் அவளை சரிபண்ணிட முடியும்... தயவுசெஞ்சு மறுக்காத.." என கரம் பற்றிக் கெஞ்ச... சற்று நேரத்திற்கு ஒன்றுமே விளங்கவில்லை பிரபாவிற்கு.

பாவம் இதய நோயாளியான அந்த தந்தைக்கு மகளின் குடிப்பழக்கம் கடந்த நான்கைந்து மாதமாக இருப்பது தெரியவில்லை. இரவு சீக்கிரம் உறங்க சென்றுவிடுவதால் அவரால் பவானியின் பழக்கத்தை இனம் கண்டுகொள்ள முடியவில்லை.

தன்னை படிக்கவைத்தவர் என்பதாலா அன்றி தன்னால் பாவனியை மறக்க முடியாது என்பதாலா என பிரித்தறிய

முடியாமல் அவர் கெஞ்சுவது மனதை பாதிக்க சட்டென தன்னவளை மணக்க சம்மதம் சொல்லிவிட்டான்.

"அர்ஜுனை பேபிம்மா விருப்பினது தெரியும் தானே பிரபா...?" பரிதவிப்புடன் கேட்க...

"எனக்கு எல்லாம் தெரியும். தெரிஞ்சு தான் சம்மதம் சொல்றேன். பவானிம்மா உங்க பொண்ணு ஐயா! நான் அவங்கள மணக்க அந்த ஒரு காரணம் போதும்." என்றவனை கண்ணீர் மல்க அனைத்துக் கொண்டார் சிவானந்தன். சம்பந்தம் பேசுவதற்காக முருகனின் இல்லம் நோக்கிச் சென்றார்.

முதலாளி தன் வீட்டிற்கு வரவும், என்னவோ ஏதோ என்ற பதட்டத்தில் திகைப்பும் விழிப்புமாய் வரவேற்கக் கூட தோன்றாமல் முருகன் நிற்க... அவர் தோளில் இடித்து உள்ளே வரச் சொல்லுங்கள் என்பது போல் கண்ஜாடை காட்டினார் வள்ளி. அதன் பிறகே பல வணக்கங்களை வைத்து முதலாளியை உள்ளே அழைத்துச் சென்றார்.

மூவர் அமர்வது போல் மூங்கில் இருக்கை அதில் தான் அமர வைக்க வேண்டியதிருந்தது. இதுவும் பிரபா வேளைக்கு சென்ற பிறகு வாங்கியது தான். அதற்கு மேல் இருக்கைகள் போட அங்கு இடமில்லை. அதோடு அவர்கள் மூவருக்கும் இந்த வீடு போதும் என்பதாலும் வசதிகள் அதிகம் இல்லாமலேயே இருந்தது.

முருகன் கையை கட்டிக் கொண்டு நிற்க, வள்ளி அடுக்களையில் கையை பிசைந்து கொண்டு நின்றார். முதலாளிக்கு குடிக்க என்ன கொடுப்பது? என்பது தான் அவரது பெருங்கவலையாக இருந்தது. காபி குடிப்பாரா? இல்ல பாலாவே கொடுப்போமா? அதற்குள் சிவானந்தம் வள்ளியை அழைத்துவிட்டார்.

"அம்மா இப்படி கொஞ்சம் வாம்மா... இது உங்க ரெண்டு பேரையும் வச்சுக்கிட்டு பேசவேண்டிய விஷயம். அருமையான பிள்ளைய பெத்து வச்சிருக்க மகராசி. சுத்தி வளச்சு பேச விரும்பல. என் பொண்ணை உங்க பிரபா வுக்கு எடுத்துக்கறீங்களா?" அவர் பணிவோடு கேட்க,

முருகனும், வள்ளியும் மயங்கி விழாத குறையாய் என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்து நிற்க, அந்நேரம் தான் பிரபா வந்தான்.

"வாங்கய்யா..." வரவேற்போடு வந்தவனை

"மாமா என்றே கூப்பிடுங்கள் மாப்பிள்ளை." சந்தோசமாக சொல்லிக் கொண்டிருந்தார் முதலாளி. இது கனவிலும் பிரபாவுக்கு கிடைக்க முடியாத பேரதிர்ஷ்டம், முதலாளி நல்லவர், கோடிக்கணக்கான சொத்துக்கு ஒரே வாரிசான மகள்.

பெண்ணும் அழகி, இங்கு பெண்ணெடுப்பது கொடுப்பினை அல்லவா? அப்படி தான் இருவருக்கும் ஓடிக் கொண்டிருந்தது.

பாவம் வெள்ளந்தியான மனிதர்கள்... இவ்வளவு பெரிய கோடீஸ்வரர் தன் வீட்டு டிரைவரின் மகனை ஏன் கேட்டு வந்தார்? என யோசிக்கத் தவறிவிட்டனர்.

பவானியின் குடிப்பழக்கம் மட்டும் தெரிந்திருந்தால் முதலாளியின் காலில் விழுந்து திருப்பி அனுப்பியிருப்பார் வள்ளி. மாற்றுக் கருத்துக்கு வழியேயில்லை என்னும் போது சந்தோஷமாகவே சம்மதித்தனர் இருவரும்.

அடுத்து பிரபா வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க வேண்டுமென்றார் சிவானந்தன். இது ஓரளவிற்கு முருகன் எதிர்பார்த்ததே. வள்ளிக்கு வருத்தம் என்பதை அவர் முகமே கட்டிக் கொடுத்துவிட்டது. பிரபாவுக்கு இதில் சுத்தமாக உடன்பாடில்லை என்பதை அவன் பேச்சு உணர்த்தியது.

"ஐயா மன்னிக்கணும்... இந்த வீடு உங்க பொண்ணுக்கு வசதிப்படாது தான். இதைவிட நல்ல வீடா பார்த்து உங்க பொண்ணை என்னால வசதியா வாழ வைக்க முடியும்." பணிவோடு சொன்னவனை தோளோடு அணைத்துக் கொண்டவர்,

"மாப்பிள்ளை உங்க தகுதியும், திறமையும், நல்ல குணமும் தெரிஞ்சு தான் வந்திருக்கேன். என் பொண்ணோட வசதிக்காக நீங்க என் வீட்டோட இருக்கணும்னு சொல்ல வரல, எனக்காகத் தான்.

என் மகளை விட்டா எனக்குன்னு யாரும் இல்ல. நீங்க தனிக்குடித்தனம் போய்ட்டா நான் அநாதையாயிடுவேன். செத்துக்கிடந்தாக் கூட யாருக்கும் தெரியாது மாப்பிள்ளை! " அவரது வருத்தம் புரிய அதற்குமேல் அங்கு யாராலுமே மறுக்க முடியவில்லை.

வரும் முகூர்தத்திலேயே திருமணம் என முடிவாகியது. அதற்கான காரணம் பிரபாவுக்கும், சிவனந்தனுக்கும் மட்டும் தான் தெரியும்.

அர்ஜூனின் திருமணத்தன்றே தனக்கும் திருமணம் நடக்க வேண்டும். பிரபா தான் வேண்டும்.... என்பது மகளின் கட்டளை.

அவளின் பிடிவாதம் அவர் அறிந்ததே. இந்த அளவுக்காவது அர்ஜூன் பைத்தியம் தெளிந்ததே எனத் தேற்றிக் கொண்டவர் திருமண வேளைகளில் ஈடுபடத் தொடங்கினர்.

இரண்டு நாட்களாகவே நந்தினியின் மனம் அவளுக்கு இன்பக்குடைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தது. தாய் அறியாத சூளா? தான் தாய்மை அடைந்துவிட்டோம் என தெரிந்தாலும் அதை எப்படி கணவனிடம் சொல்வது என்பதில் தான் பிரச்சனை.

நாட்கள் தள்ளிப்போயிருந்தாலும் கர்பவதிகளுக்கே உரிய எந்த உபாதையும் அறிகுறியுமில்லை என்பது தான் பெரும்

குழப்பத்திற்கு காரணம். இதற்கு மேல முடியாது என்று தோன்றிவிட ராணியம்மாவிடம் சென்றுவிட்டாள்.

"அத்தை நான் உங்ககிட்ட பேசணுமே..." தயங்கித் தயங்கி சொல்ல, இவ பேசணும்னு சொன்னாலே வில்லங்கம் தான். இப்ப எதை பற்றி சொல்ல போகிறாளோ தெரியவில்லையே உள்ளூர பீதியுடனேயே மருமகளை அருகமர்த்திக் கொண்டார் சகுந்தலாதேவி.

'அவனிடம் சொல்வது தான் சிரமமென்று நினைத்தாள் இவரிடம் சொல்வது அதைவிட சிரமமாக இருக்கிறதே...' சிந்தனை வயப்பட்டிருந்தவளை,

"நந்தினி!" என்னும் மாமியாரின் அழைப்பே சுயம் திருப்பியது.

"அது வந்து அத்தை... எனக்கு நாள் தள்ளிப்போயிருக்கு!" சரியாய் தானே சொன்னோம்? புரியுமா? மருமகளை அணைத்து உச்சிமுகர்ந்தவர்,

"மங்களாம்பிகா...! சந்தோஷம் தாயே...! உன் மாமனார் நம்மிடம் மீண்டும் வரும் நேரம் வந்துவிட்டது. எத்தனை வருட காத்திருப்பு..." கண்கள் பனிக்க மீண்டும் அணைத்துக் கொண்டார்.

"அத்தை, எனக்கு தலை சுத்தல், வாமிட் இந்த மாதிரி எந்த உணர்வும் இல்லையே..." தெளியாமல் சொல்லும் மருமகளின் கன்னம் வழித்து திருஷ்டி கழித்தவர்,

"நம் டாக்டரை வரச் சொல்வோம். எல்லோருக்கும் ஒரே மாதிரி இருக்காது. எனக்கு கூட ரேகாவுக்கு ஒருமாதிரியும் விஜய்க்கு ஒருமாதிரியும் இருந்தது."

மருத்துவர் வந்து அனைத்து சோதனைகளையும் முடித்து கருவுற்றிருப்பது உறுதி செய்தார்.

"இனி அதிக கவனத்தோடு இருக்க வேண்டும் நந்தினி. உன் கணவன் ஏற்கனவே நீ சிறு பெண்ணாக இருக்கிறாய் என்று தான் தள்ளிப் போடிருப்பதாகச் சொன்னான். போம்மா ஓய்வெடுத்துக் கொள். விஜய்க்கு தெரியுமா?"

"தெரியாது அத்தை. நான் வரச்சொல்கிறேன் நீயே சொல்..."

அவளும் விதம் விதமாகத் தான் கண்ணாடிக்கு முன் நின்று சொல்லிப் பார்க்கிறாள்... எதுவும் பிடிக்கத்தான் மாட்டேங்கிறது.

"குட்டி நீங்க வந்துட்டீங்கன்னு அப்பா கிட்ட எப்படிச் சொல்ல? விஜய் நான் கன்சிவா இருக்கேன்... ம்ஹூம் ரொம்ப சாதாரணமா இருக்கே... விஜய் நீங்க அப்பாவாகப் போறீங்க... இப்படிதானே எல்லோரும் சொல்வாங்க... வேறுமாதிரி யோசி நந்தினி .

விஜய் கடவுள் நம்ம ரெண்டு பேருக்கும் ஸ்பெஷல் கிஃப்ட் கொடுத்திருக்கார். இது கொஞ்சம் ஓகே... இன்னும் பெட்டரா சொல்லலாமோ? போ நாம ஏன் சொல்லணும்? உன் அப்பாவே கண்டுபிடிக்கட்டும்..." சட்டமாக கணவனுக்காக காத்திருக்கத் தொடங்கிவிட்டாள்.

அன்னையின் ஆணைப்படி அவனது வேலைகளை விரைவில் அடுத்தவருக்கு பிரித்துக் கொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்தவன், அன்னையை தான் முதலில் எதிர்கொண்டான்.

"அம்மா ஏன் இவ்வளவு அவசரமாக அழைத்தீர்கள்? அக்கா வீட்டில் அனைவரும் நலம் தானே?"

"விஜய் இப்படி உட்கார். எல்லோரும் நலம் தான். ஏதேனும் சாப்பிடுகிறாயா?" அவன் பதிலுக்கு காத்திராமல் வேலையாளிடம் இனிப்பு எடுத்துவரச் சொல்லி அதை மகனுக்கு ஊட்டினார்.

"உனக்கு இனிப்பான செய்தி ஒன்று இருக்கிறது... உன்னை எதிர்பார்த்து நந்தினி காத்திருக்கிறாள். அவளுக்கும் ஊட்டிவிடு" மகனை அனுப்பி வைத்தவர், சாயங்காலம் மங்களாம்பிகைக்கு சிறப்பு பூஜைக்கு ஏற்பாடு செய்ய சொல்லி காரியஸ்தரிடம் கூறிக் கொண்டிருந்தார்.

"சிட்டு..." என்னும் அழைப்பு வந்தது தான் தாமதம், ஓடிச் சென்றவள் அலுவல் அறைக்கு முன்பாக அவனது விரிந்த கரங்களுக்குள் புகுந்து கொண்டாள். கண்களில் நீர் பெருக,

"தேங்க்ஸ் விஜய்... தேங்க்ஸ்... தேங்க்ஸ்..." இதைத் தவிர வேறு ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை அவளுக்கு.

"சிட்டு என்னடா...?" அவள் அமைதியாக இருந்திருந்தால் நிச்சயம் கண்டுபிடித்திருப்பான். கண்ணீரும் சிரிப்புமாய் அவள் நன்றி சொல்ல அவன் மூளை வேலை நிறுத்தம் செய்துவிட்டது. சுத்தமாக எதையும் யோசிக்க முடியவில்லை அவனால்.

அவன் மடியில் அமர்ந்தவளுக்கு யோசித்து வைத்திருந்தது எல்லாம் மறந்துவிட்டது. கழுத்தைக் கட்டிக் கொண்டு எவ்வளவு நேரம், எத்தனை முத்தம் என்பதெல்லாம் கருத்தில் பதியாமல் அவன் கேசம் களைத்து… கன்னம் கடித்து தேங்க்ஸ் தேங்க்ஸ் என்னும் புலம்பலோடு முத்தங்களின் அர்ச்சனை நீண்டு கொண்டிருக்க, அவளது காதலில் தடுமாறியவன் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள சில மணித்துளிகள் தேவைப்பட்டன.

"போதும் சிட்டு... முதலில் இதெல்லாம் எதுக்குன்னு சொல்லு?" அவள் கன்னம் தாங்கிக் கேட்க,

"என்னை உங்க மனைவியா ஏத்துக்கிட்டதுக்கு..." விசும்பலுடன் சொல்ல...

"புரியலம்மா..."

"பட்டத்து அரசிக்கு தானே குழந்தை பெத்துக்கிற தகுதி இருக்குன்னு சொன்னீங்க... இப்போ எனக்கு அந்த தகுதி

வந்துடுச்சான்னு தெரியல விஜய். பட், நீங்க உங்க மனசை மாத்திக்கிட்டீங்கல்ல அதுக்கு தான்."

"நந்தினி... என் மனம் புரிந்த பின்னும் ஏன் அதில் இருந்து மீளாமல் தவிக்கிறாய்? நீ என் தேவதை நந்தினி. என் வார்த்தைகள் உன்னை இவ்வளவு காயப்படுத்தும் என நினைக்கவில்லை. மன்னித்துவிடு முற்றிலுமாக மறந்துவிடு சிட்டு! ப்ளீஸ்..."

சற்று நேரம் அவளது விசும்பலைத் தவிர அங்கு வேறு சத்தமே இல்லாமலிருக்க கை என்னவோ அவள் முதுகு வருடினாலும் மூளை தன் வேலையே தொடங்கிவிட்டது.

"நந்தினி கருவுற்றிருக்கிறாயா?" கண்களில் மின்னல் வெட்ட மார்பில் தலை சாய்த்திருந்தவளின் முகம் நிமிர்த்திக் கேட்க, ஏனென்று தெரியாது வெட்கம் வந்து ஒட்டிக் கொள்ள பதில் சொல்லாமல் அவன் முகம் பார்க்க முடியாமல் இன்னும் இன்னும் தன்னை அவனுள் புதைக்க முயன்றாள். அவளது முகம் இடமும் வலமுமாய் அவன் மார்பில் அளைய கிளர்ந்தான்.

"நந்தினி என்னைப் பார்..." அன்னை கொடுத்துவிட்ட இனிப்பை அவளுக்கு ஊட்டியவன், அவள் விழுங்குவதற்குள்ளாக வாயோடு வாய் வைத்து அதை தனதாக்கிக் கொண்டான். இதை எதிர்பார்காதவளின் நாவில்

வெறும் இனிப்பு சுவை மட்டும் ஒட்டியிருக்க செல்ல கோபத்துடன்,

"போடா..." முகம் திருப்பிக் கொண்டாள்,

"வா... அத்தான் கிட்ட வந்து எடுத்துக்கோ..." நாவில் இருக்கும் இனிப்பை காட்டி அழைக்க,

"வேண்டாம் போ..."

"நீ சொன்னா நான் விட்டுடுவேனா?" மீண்டும் இனிப்பு அவள் வாய்க்குள் வந்திருந்தது. எப்படி தான் இடம் மாற்றினானோ? என விழித்துக் கொண்டிருக்க...

"இப்படியே பார்த்துகிட்டு இருந்தா திரும்ப நானே எடுத்துப்பேன்" அருகில் வர, அவன் மார்பில் கை வைத்து தள்ளியவள் அவசரமாக விழுங்கிவிட்டாள்.

"சிட்டு, நான் தாண்டி தேங்க்ஸ் சொல்லணும். ஐ லவ் யூ டீ சிட்டு..." அவனது இறுகிய அணைப்பில்,

'அம்மா...' என கத்த வாய் திறந்தாள் சத்தம் தான் வரவில்லை அவன் தான் தடை செய்துவிட்டிருந்தானே. மெல்ல விலகியவனை முறைத்தவள்,

"போங்க விஜய். வலிக்குது... எப்போ என் எலும்பெல்லாம் நொறுங்கப் போகுதுன்னு தெரியல..."

"போடி மாவுருண்டை... நீ எப்போ தான் இதுக்கு பழகப் போறன்னு தெரியல..." கேலி செய்தவன் மீண்டும் தன் மெல்லிய அணைப்புக்குள் கொண்டு வந்திருந்தான்.

"சிட்டு இனியாவது என்னை அத்தான்னு கூப்பிடலாம் தானே?" ஏக்கமாய் கேட்க...

"மஹூம்... எனக்கு விஜய் தான் பிடிச்சிருக்கு."

"போடி" வாய் தான் சொன்னது. கையோ அவளை தன் மீது இழுத்துப் போட்டுக் கொண்டது. ஏனோ நந்தினிக்கு இன்று காதலும் காமமும் போட்டி போட்டுக் கொண்டு பெறுக...

கணவனின் உதடு கிள்ள... கன்னம் கடித்து... காதை திருகி முரட்டுத்தனமாக காதல் செய்தாள். கண்களை மூடி சுகத்தில் மூழ்கிக் கொண்டிருந்தான் விஜயேந்திரன். தேன்சிட்டு ராஜாளியை பிய்த்து தின்றது.

"கொல்றடி சிட்டு..." பகலையும் இரவாக்கி அரசனை பித்தனாக்கினாள் அந்த அரசி.

நந்தினி இந்த இனிய செய்தியை பெற்றோரிடமும், நண்பர்களிடமும் பகிர்ந்து கொண்டாள். ராணியம்மா மருமகளை தரையில்விடாமல் தாங்கினார் என்று தான் சொல்ல வேண்டும்.

"உன் மாமா எனக்கு வாக்கு கொடுத்திருக்கிறார் பிறக்கப் போவது ஆணோ, பெண்ணோ எதுவாக இருந்தாலும் அது என் கணவரின் ஆத்மாதான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை."

கவனம்... கவனம்... லேசாக சோர்ந்து அமர்ந்தாலும் பதறிப்போனார்.

நந்தினிக்கு தான் ஐயோ பாவம் என்றாகிப் போனது மாமியாரின் நிலை. நந்தினி அதிகம் வெளியே செல்வதை அனுமதிக்கவில்லை. விஜய் அன்னைக்கு மேல் இருந்தான்.

அலைச்சல் கூடாது என்று மருத்துவர் சொன்னதும் போதும் மாடியில் இருந்து கூட கீழே இறங்க அனுமதிப்பதில்லை. உடனடியாக மின்தூக்கி அமைத்தான். அதுவரை யாரைப் பற்றியும் கவலைப்படாமல் கைகளில் ஏந்திக் கொண்டே ஏறி இறங்கினான்.

"விஜய் உங்க குழந்தைக்காக ரொம்பவும் தான் மாறிட்டீங்க..." கேலி செய்தவளின் கன்னம் கிள்ளியவன்,

"ஆமா இந்தக் குழந்தைக்காக தான்! இன்னும் கொஞ்சம் தள்ளிப் போட்டிருக்கலாமோன்னு தோணுது சிட்டு... நீ சின்ன பொண்ணுங்கிற மாதிரியே ஒரு ஃபீல்..." மனைவியின் மூக்கோடு மூக்கை உரசிக் கொஞ்ச,

"விஜய்... நீங்க பெரிய பையனா இருப்பதால நான் உங்க பக்கத்தில் ரொம்ப சின்னதா தெரியறேன்... மத்தபடி நானும் பெரிய பொண்ணு தான். அந்த கார்த்திகா சொன்ன மாதிரி எலி இல்ல..."

"எலியா? உன்னை அப்படியா சொன்னா? கரெக்ட் தான்..." என்றவன் காதை திருகி அலறவிட்டாள்.

அந்த நேரத்தில் தான் பிரபா நந்தினியைப் பார்க்க வந்தான். முன்னை போல் இல்லாமல் இன்முகத்துடனேயே வரவேற்றார் சகுந்தலா தேவி.

நண்பனுக்கு திருமணம் என தெரிந்ததும் ஒரே கொண்டாட்டம் நந்தினிக்கு. முதலில் இங்கிருந்து வெளியே செல்லலாம் என்று தான் தோன்றியது.

"பிரபா கடைசியில் பவானி தான் உன் காதல் மனைவியா?" கண் சிமிட்டி சிரிக்க,

"காதலெல்லாம் இன்னும் வரல நந்து. கூடிய சீக்கிரம் வரவச்சுடலாம்... முதலாளி கேட்கும் போது தட்டமுடியல, அதோட அவளும் அர்ஜுன் நினைவில் இருந்து மீண்டு வரனும் இல்லையா அதான் சரின்னு சொல்லிட்டேன். அவள் மனம் மாறும் வரை காத்திருக்கனும். அப்புறம் என் மனசை புரிய வைக்கணும் பார்க்கலாம்..." சிறு சிரிப்புடன் முடித்துக் கொண்டான். அவனது நிலை புரிந்ததால் அவளும் அமைதி காத்தாள்.

பிரபா ஆதியிடம் திருமண விசயம் பற்றிப் பேச,

"என்ன மச்சான் ரெண்டு நாளைக்கு முன் தான் அவகிட்ட வேலை பாக்க மாட்டேன்னு சொன்ன இப்ப அவளையே

கட்டிக்கிறேங்கிற... விஜய் போல ரிவெஞ் எடுப்பதற்காக ஏதும் செய்யவில்லையே? ராஜா விஜயேந்திர பூபதியே நம்ம நத்துக்கிட்ட சரண்டராய்ட்டார். நீ ரொம்ப நல்லவன்! உனக்கு பழி வாங்குவதெல்லாம் செட்டாகாது... திரும்பவும் ஆப்பு வாங்கிடாத மச்சான்!' என கலாய்க்க

"அந்த மாதிரி எண்ணம் எல்லாம் இல்ல ஆதி. பெரிய மனுஷன்... என்னோட உயர்வுக்கு காரணமானவர் கையேந்தி கேட்கும் போது மறுக்கத் தோணல... அதோட அவ மீது விருப்பம் இருக்கோ இல்லையோ வெறுப்பு இல்ல அந்த தைரியத்தில் தான் ஒத்துக்கிட்டேன். (அடப்பாவி காதல் வந்துட்டா பொய்யும் புரட்டும் தானாக வந்துவிடுமோ?)

நீ சொன்னதுக்கு பிறகு தான் யோசிக்கிறேன் ஒருவேளை அவ பழிதீர்த்துக்க தான் என்னை சூஸ் பண்ணிருப்பாளோன்னு ஒரு சந்தேகம்... பார்க்கலாம். எதுவாக இருந்தாலும் என் திருமண வாழ்வு அவளோடு தான். கடைசி நேரத்தில் சொல்றேன். வந்துடு மச்சான்... அவசரக் கல்யாணம்..."

"டேய் நான் இல்லாமலா? கண்டிப்பா வந்துடறேன். பணம் ஏதாவது வேணுமா எவ்வளவு அனுப்பட்டும் மச்சான்?"

"இருக்கு ஆதி. கல்யாண செலவெல்லாம் அவங்க தான் பார்த்துக்கறாங்க... கையில் பணம் இருக்கு. அம்மாக்கு கொஞ்சம் நகை வாங்கணும்... அதோடு அவளுக்கு தாலி

செயின், கூரைப்பட்டு வாங்கணும். அப்புறம் நம்ம நந்துக்கும், நிவிக்கும் புடவை.

அம்மா அப்பாவுக்கு, எனக்கும், உனக்கும் டிரஸ் அவ்வளவு தான். சோ பண தேவை இருக்காது. இருந்தா நிச்சயமா வாங்கிக்கிறேன்டா... இன்னும் ஒன்னு கூட உங்கிட்ட சொல்லணும் மச்சான். நான் வீட்டோட மாப்பிள்ளையா இருக்கனும் மச்சான்..." ஆழ்ந்த மூச்சின் மூலம் தன்னை சமன் செய்து கொள்வதில் இருந்து பிரபாவின் மனநிலை ஆதிக்கு புரிந்தது.

"எங்க மச்சான் போகப் போற... நம்ம வீட்டில இருந்து அரைமணிநேர பிரயாணம். நினைச்சவுடனே வீட்டுக்கு வரலாம்... பவானி மனசு மாறும் வரை பொறுத்துக்கோ அப்புறம் அவளே உன்னோடு வந்துடுவா..." நண்பன் சொல்வது நடக்குமோ நடக்காதோ கேட்கும் போது சந்தோஷமாகவே இருந்தது.

அண்டை வீட்டாரும் சொந்த பந்தங்களும் பிரபா கொடுத்து வைத்தவன் எனக் கொண்டாட...

(வழியப் போய் வலையில் விழப் போகிறேன்... உங்களுக்கெல்லாம் இப்படி ஒரு நினைப்பா?) சிரித்துக் கொண்டான்.

திருமணத்திற்கு முதல் நாள் காலை தான் வந்திறங்கினான் ஆதி. வந்தவுடனேயே நண்பனுடன் சேர்ந்து கொண்டவன் தான்... நிவியை கண்டுகொள்ளவே இல்லை.

நந்து விஜயேந்திரனை கொஞ்சிக் கெஞ்சி ஒருவழியாக முதல் நாள் காலையே பெற்றோர் வீட்டுக்கு வந்துவிட்டாள். ஊரின் மிக பெரிய திருமண மண்டபம் பிடித்திருந்தார் சிவானந்தன்.

அவசரத் திருமணம் என்றாலும் எந்தக் குறையும் இன்றி அற்புதமாகவே அனைத்து ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருந்தது. நந்தினியும் ஆதியும் சேர்ந்து நண்பனுக்கு பிரேஸ்லெட் வாங்கியிருந்தனர். விஜய் வைரத்தில் வாங்கச் சொல்ல,

"இது அரச வம்சத்து பெருமையை காட்டும் விஷயமல்ல... ஆதியும் நானும் ஷேர் பண்ணிக்கிறோம். அவனால் எவ்வளவு முடியுமோ அது தான் என் பங்கும். தப்பா எடுத்துக்காதீங்க விஜய்... இது நட்பு சம்பந்தப்பட்ட விஷயம்..." நாசுக்காக சொல்லிவிட்டாள்.

"அசத்துறடி!" மனைவியின் மனம் உணர்ந்தவனாய் அதோடு நிறுத்திக் கொண்டான்.

பிரபாவிற்கும் பவானிக்கும் திருமணம் நடக்குமா?

# அத்தியாயம் 26

**தி**ருமணத்தின் முதல் நாள் மாலை, பாவாடை தாவணியில் வந்த நிவி,

"ஆதி அத்தான், எப்படி இருக்கு?" அழகாக சுற்றிக் காட்ட…

"முதல்ல ஒரு இடத்தில நில்லுடி. ரெங்க ராட்டினம் மாதிரி சுத்தினா எப்படி பார்த்துச் சொல்றது?" உதட்டு சுழிப்புடன் சிலை போல் அசையாது நிற்க,

அம்மாடி! அநியாயத்துக்கு அழகா இருக்கியே… கொல்றடி குட்டி பிசாசே… மனம் மயங்கினாலும் வாய் வேறு மாதிரி சொன்னது…

"பரவாயில்ல கொஞ்சம் வளர்ந்துட்டடி… இது உன் அத்தை செலக்சன் தானே? ட்ரெஸ் செலக்ட் பண்றதுல என் அம்மாவை அடிச்சுக்க ஆளே கிடையாது…" அன்னையை கட்டிக் கொண்டு கொஞ்ச,

"போதும் நீயும் ட்ரெஸ்ஸை மாத்திகிட்டு கிளம்பு ஆதி. பிரபா பாவம்… தனியா இருப்பான்."

"இதோ கிளம்பறேன் மா… ஏய் குட்டி பிசாசே! நான் குளிச்சுட்டு வரதுக்குள்ள என் சட்டையை அயன் பண்ணிவை."

அவளது ஆடைக்கு பொருத்தமான நிறத்தில் ஒரு சட்டையை எடுத்து வைத்திருந்தான். அவளும் அவன் சொல்லும் வேலைகளை சந்தோஷமாகவே செய்தாள்.

மகனின் மனநிலை அறிய எண்ணிய மங்களம்,

"ஆதி பிரபாவுக்கும் கல்யாணம் ஆகப் போகுது நீ மட்டும் தான் பாக்கி..."

"அவங்களுக்கெல்லாம் ஆஃபர் வந்துச்சும்மா.... எனக்கு ஒன்னும் வரலையே" நிவியையே வருடிக் கொண்டிருந்தது அவன் பார்வை.

"நிறையப் பேர் கேக்குறாங்க... என்ன சொல்லட்டும்?"

"ஆதி அத்தான் மேட்ரிமோனில ரிஜிஸ்டர் பண்ணினா உங்களுக்கும் நிறைய ஆஃபர் வரும் பட்... கொஞ்சம் கெட்டப் மாத்தனும். இந்த ஹேர் ஸ்டைல், அப்புறம் மீசை இல்லாத முகம் இதெல்லாம் கல்யாண கெட்டப்பே இல்ல... கொஞ்சம் மாத்துங்க. இன்னும் காலேஜ் பையன் லுக்கோட தான் இருக்கீங்க. பொண்ணுங்களுக்கு மேன்லியா இருக்க பசங்களத் தான் பிடிக்கும்."

‘‘உனக்கு பிடிக்கும்ன்னு சொல்லு குரங்கே...’’ நச்சென அவள் தலையில் கொட்ட,

"பாருங்க அத்தை... தலையை கலைக்காதீங்க ஆதி அத்தான்..." கோபம் வந்துவிட்டது நிவேதாவுக்கு.

"புள்ளைய எதுக்குடா கொட்டுற? அவ சொல்றதுல என்ன தப்பு? உன் தலையும் ஆளும்…? இப்படி இருந்தா எந்த பொண்ணும் பார்க்காது." அன்னையும் சிடுசிடுக்க ,அவருக்கு பின்னால் நின்று கொண்டு பழிப்புக் காட்டினாள் நிவி.

‘லூசே நான் உன்னை நினச்சுகிட்டு இருக்க… நீ மேட்ரிமோனி ஐடியா கொடுக்கற எல்லாம் என் நேரம்…’

"போதும் போதும் என்னை இப்படியே ஏத்துக்கற பொண்ணு கிடைத்தால் போதும் விடுங்க." இதழோர சிரிப்புடனேயே சொன்னான். (எவளாவது தட்டிகிட்டு போகப் போறா திருதிருன்னு முழிச்சுகிட்டு இருக்கப் போற பாரு…)

நிவியை கட்டிக்கிறேன்னு சொல்ல மாட்டேங்கிறானே தெளிவுபடுத்திக் கொள்ளப் போய் மேலும் குழம்பியது தான் மிச்சம். மாலை வரவேற்பில் நண்பர்கள் கூட்டணி பலமாக அமைந்தது.

பிரபாவோடு ஆதியும், நந்துவும் கூடவே நிவியும் நிற்க, விஜய் தனித்து விடப்பட்டான். அவனை யாருமே கண்டுகொள்ளவில்லை. மாமனார் தான் உபசரித்துக் கொண்டிருந்தார்.

‘இவளுக்கு கொஞ்சமாவது அக்கறை இருக்கா? நண்பர்களோடு சேர்ந்துட்டா புருஷனை கழட்டிவிட்டுடுவா…’ விஜய் முறைத்துக் கொண்டிருக்க அவனை பார்த்தால் தானே

இதெல்லாம் தெரியும்... நந்தினி புன்னகை விரவிய முகமாய் ஜொலித்துக் கொண்டிருந்தாள்.

பவானியை குடி போதையில் அவள் வீட்டில் பார்த்து தான் கடைசி. அதன் பிறகு இப்பொழுது தான் பார்க்கிறான் பிரபா. அழகோவியமாய், சிரித்தமுகமாய் அவனருகே நின்று கொண்டிருந்தாள்.

பிரபா அறிமுகப்படுத்திய போதும் அதன் பின்னரும் அனைவரிடமும் நன்றாகவே பழகினாள் பவானி. நண்பர்களின் கேலிக்கு சிரிப்பதும், அனைவருடனும் புகைப்படம் எடுப்பதுமாகவே பொழுது கழிந்தது. நிவி பசி தாங்க முடியாமல் சாப்பிடச் சென்றுவிட்டாள்.

கூட்டம் குறைந்தவுடன் மண மக்களுடன் ஆதியும், நந்துவும் சேர்ந்து சாப்பிடச் சென்ற பொழுது தான் நினைவு வந்தவளாய்,

"சாப்பிட்டீங்களா விஜய்?" அவனருகே வந்து கரம் பற்றி வினவ,

"'பரவாயில்லையே, என்னை நியாபகம் இருக்கா உனக்கு?" சிரித்த முகமும் சீறும் குரலுமாய் கேட்க,

"சும்மா கோபப்படாதீங்க விஜய். அப்பா உங்களை சாப்பிட கூட்டிப் போனதை பார்த்தேன்... இன்னைக்கும் நாளைக்கும்

தான், அப்புறம் உங்க கூடவே தானே இருக்கப் போறேன்... சிரிங்க விஜய்." அவனை உரசிக் கொண்டு கொஞ்ச,

"உங்க கூட்டனியில் நிவி மட்டும் எப்படி வந்தாளாம்? என்னைத் தான் கழட்டிவிடுவாய்..."

"இது தான் உங்க கோபத்துக்கு காரணமா? அவ ஆதியோட ஆளுன்னு அவளுக்கே இன்னும் தெரியாது விஜய். பிரபாவுக்கு தங்கை முறையில் தான் எங்க கூட நிக்கிறா... சாப்பிட போகட்டுமா? பசிக்குது விஜய்..."

"உன்னோடு சேர்ந்து நம்ம பேபியும் பசியில் இருக்கும். சீக்கிரம் போடி"

"கோபமில்லையே?" கரத்தோடு கரம் பிணைத்துக் கொள்ள...

"இல்ல... இன்னும் ரெண்டு நாளைக்குத் தானே ஒளிஞ்சு போ..." மந்தகாசப் புன்னகையுடன் கூறவும் தான் சாப்பாட்டுக் கூடம் நோக்கி நகர்ந்தாள்.

"என்ன நந்தினி தேவியாரே கொஞ்சல்ஸ் எல்லாம் முடிஞ்சிருச்சா?" என்ற ஆதியின் தோளில் அடியை போட்டவள் அவனருகிலேயே அமர்ந்து சாப்பிடத் தொடங்கிவிட்டாள்.

இரவு ஆதியும் பிரபாவும் மண்டபத்திலேயே தங்கிவிட நந்து, நிவி,பவானி அனைவரும் வீட்டிற்கு சென்றுவிட்டனர்.

"என்ன மச்சான் பவானி அப்படி இப்படின்னு கதைவிட்ட... அவளை பார்த்தா நல்ல பெண்ணாத் தான் தெரியுறா?"

"அதான்டா எனக்கும் ஒன்னும் புரியல... அவ்வளவு சீக்கிரமா மனசு மாறி இருப்பாங்கிற நம்பிக்கையெல்லாம் இல்ல. வேறேதாவது உள்குத்து இருக்குமான்னு தான் யோசனையை இருக்கு."

"நீயா எதையாவது கற்பனை பண்ணிக்காத மச்சான். அர்ஜுனைப் பத்தி தெரிஞ்சுதானே விலகியிருக்கா அதோடு உன் நல்ல குணமும் புரிஞ்சிருக்கும் அதனால் கூட அமைதியா இருக்கலாம். நல்லதையே நினை."

"நீ எப்போ மச்சான் நிவிகிட்ட உன் காதலை சொல்லப் போற?"

"நான் சொன்னாலும் அப்படியே புரிஞ்சுகிட்டு தான் உன் தங்கச்சி மறுவேலை பார்ப்பா... அடப்போடா! எனக்கு மேட்ரி மோனியில் விளம்பரம் கொடுக்கணும்னு என் அம்மாவுக்கு ஐடியா கொடுக்கறா. இதை எங்கு போய்ச் சொல்ல...?" நொந்து போனவனாய் சொல்ல, வெடிச்சிரிப்பு சிரித்த பிரபா,

"சூப்பர் மச்சான்! செத்தடா! பொண்ண பார்த்து... ஃபீல் பண்ணி அப்படியே நூல் புடிச்சுகிட்டு போய் கல்யாணம் பண்றவன்ல நீ! மாட்டினடி..."

"அடப்பாவி! இதுல உனக்கு இவ்வளவு சந்தோஷமா?" நண்பனை தலையணை கொண்டு நாலு சாத்து சாத்தினான் ஆதி.

காலையில் நண்பன் வாங்கிக் கொடுத்த புடவையையே உடுத்திக் கொண்டு வந்திருந்தாள் நந்தினி. நிவியும் அதே போல் பிரபா வாங்கிக் கொடுத்த புடவையில் வரவும் ஆதி அசந்து போனான்.

சிறுபெண்ணாக இருக்கும் போது அவளை புடவையில் பார்த்ததற்கும் இப்பொழுது பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருந்தன.

தளரப்பின்னிய கூந்தல்... காற்றில் அலையும் முன்நெற்றி முடி, குட்டிப் பொட்டு, அதன் மீது சந்தனக் கீற்று, மல்லிகைச்சரம், இளமை வனப்புகளை எழிலுறக் காட்டும் பட்டுப்புடவை உதட்டுக்கு அருகே இருக்கும் மச்சம்... இன்னும் இரண்டு... முதுகிலும், கழுத்தடியிலும் என அவன் மச்சங்களை தேடிக் கொண்டிருக்க...

"ஆதி அத்தான் எப்படி இருக்கு? எனக்கும், நந்துக்காவுக்கும் ஒரேமாதிரி பார்த்தீங்களா?" (இப்படி காட்டி காட்டியே என்னை கொல்றடி!) அவள் அழகில் மூச்சுத் திணற நின்று கொண்டிருந்தவனின் தோள் பற்றி உலுக்க,

"நல்லாத்தான் இருக்க... வா ரெண்டு பேரும் சேர்ந்து ஒரு ஸ்னாப் எடுத்துக்கலாம்." விரிந்த புன்னகையுடன் அழைத்தான்.

"என்னோட சேர்ந்து எடுத்தா உங்க இமேஜ் பாதிக்கும்ன்னு சொல்விங்க?" (இதெல்லாம் நல்லா நியாபகம் வச்சுக்க)

"என் கூட வேலை பார்க்கும் பொண்ணுங்களுக்கு இவ தான் எங்க ஊர் கருவாச்சின்னு காட்டனும்ல அதுக்குதான். ஓவரா பண்ணாம நில்லுடி!" அவள் முதுகோடு ஒட்டி நின்று நெருக்கமாக ஒரு புகைப்படம் எடுக்க,

அவனது சுவாசக் காற்று பின்னங்கழுத்தில் விரவுவதை அவஸ்தையாய் உணர்ந்தவள் சட்டென விலகிக் கொண்டாள். அவள் நிலை உணர்ந்த போதும் அதைக் கண்டுகொள்ளாமல்,

"ஏய் நில்லுடி! இன்னும் முடிக்கல... அதுக்குள்ள எங்கு போற?"

"எடுத்துட்டோமே?" அவன் முகம் பார்க்க முடியாமல் தயக்கத்துடன் பதில் சொல்ல,

"ஒரு போட்டோவை மட்டும் எப்படி காட்டுவது நிறைய வேணும்டி பட்டுக்குட்டி." அவன் செல்ல அழைப்பு அவளை கட்டிப் போட்டது. கொஞ்சம் முன்னும் பின்னுமாக நின்று அவள் தோள் தொட்டு அணைக்க, விரல்கள் என்னவோ கழுத்தடியில் தன் கச்சேரியை ஆரம்பித்துவிட்டிருந்தன. கூச்சம் ஏற்பட அவள் நெளிய,

"ஆடாமல் நில்லுடி! ஷேக் ஆகுது பார்." முறைப்பு போலும் சொன்னவனின் கை விலகியபாடாய் இல்லை.

"கருவாச்சி சிரிடி!" குரல் குலைந்தது. அடுத்து வலது புற இடையில் கரம் பதித்து ஒன்று என்பதாய் முன்னேற, இப்போது இன்னும் நெருக்கத்தில் அவன் ஸ்பரிசத்தையும், அவனது பிரத்தியேக மணத்தையும் உணர்ந்தவளுக்கு அடிவயிற்றில் பட்டாம் பூச்சி பறப்பதாய், தொண்டைக்குழி வறண்டு தாகம் எடுப்பது போல் ஓர் புது உணர்வு உண்டானது.

அவளது முகமே அவனுக்கு அவள் நிலையை உணர்த்தியது, (சபாஷ் ஆதி! இப்படி ஏதாவது பண்ணித் தான் நீ அவளுக்கு அத்தான்ங்கிற நினைப்பை உண்டாக்கணும்) மெச்சுதலாய் தனக்கு தானே பாராட்டு பத்திரம் வாசித்தபடி,

"வா... வா!" என மண்டபத்தில் இருந்து வெளிய அழைத்துச் செல்ல, அங்கே இது போல் புகைப்படம் எடுப்பதற்காகவே பூங்கா போலும் ஒன்றை ஏற்படுத்தியிருந்தனர்.

அங்கு செடிகள் அழகாய் விலங்குகள் உருவத்தில் வெட்டப்பட்டிருந்தன, சிறிய ஊஞ்சலில் கொடிகள் பின்னிக் கொண்டு இருக்க சுற்றிலும் ரோஜா செடிகள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. அவளை மட்டும் தனியாக நிற்க வைத்து விதம் விதமாக எடுத்தவன் ஊஞ்சலில் போய் அமர்ந்து கொண்டு இப்படி வா என கண்ணசைக்க, அவனருகே சென்றாள்.

நிவேதா மந்திரத்துக்கு கட்டுப்பட்ட பொம்மையாகி வெகு நேரமாகிவிட்டது என்பது வேறு விஷயம். சட்டென இழுத்து தன்

மடியில் வைத்து இறுக்கிக் கொள்ள, அதிர்வில் அவன் முகம் பார்க்க... கன்னத்திற்கு வெகு அருகில் அவள் உதடுகள் அவளது மூச்சுக்கு காற்றை கன்னத்தில் உள்வாங்கிக் கொண்டவன் உள்ளே உணர்வுகளால் கரைய... கண்கள் சுகத்தில் சொருக அப்படியே ஒரு ஸ்னாப்.

"இப்படி திரு திருன்னு முழிக்காதடி... கொஞ்சம் சிரி." அவளின் திணறலை ரசித்து அவன் நன்றாகவே சிரித்துக் கொண்டிருந்தான்.

"போதுமா ஆதி அத்தான்?" போதும் என்று சொல்லாமல் போதுமா? என கேட்கும் உதடுகள் இப்போதே வேண்டும் என்று உள்ளம் பரபரக்க... (இதுவே இவளுக்கு அதிகம் பாவம்... மெல்ல மெல்ல முன்னேறலாம்) என தோன்றிவிட,

"இன்னும் வேணும்!" (உன்கிட்ட இருந்து என்னென்னவோ வேணும்... ஆனால் கேட்கவும் முடியல, விடவும் முடியல. ஆர்த்தி அத்தை சதி பண்ணிட்டிங்க. இவ விஷயத்தில் பிளானிங்கை கொஞ்சம் தளர்த்தியிருக்கக் கூடாதா? ஒரே வயசோ இல்ல ஒன்னு ரெண்டு வருஷம் முன்ன பின்ன இருந்தால், இந்நேரம் உங்க பொண்ணை.... முடியலையே)

தவிப்புடன் அவளை ஊஞ்சலில் அமர்த்தி அவள் பின்னே சென்று நின்று கொண்டவனுக்கு தான் தோற்றுக் கொண்டிருக்கிறோம் என்பது தெரிந்தது. இருந்தும் எந்த கணமும்

ஆதியால் இயல்புக்கு வரமுடியும் என்னும் நம்பிக்கையில் பின்னிருந்து கழுத்தைச்சுற்றி தன் கரம் கொண்டுவந்து அவள் தோள் பற்றி ஒன்று, இப்போது அவன் மொத்தமாக அவள் மீது சாய்ந்திருந்தான்.

மல்லிகையின் மணம் வெகு அருகே... பித்துப்பிடிக்கச் செய்தது. அதற்கு மேல் முடியாமல் போக அவள் கன்னம் கவ்வியிருந்தான். அது முத்தமில்லை... விழுங்கல்... இதை சற்றும் எதிர்பாராதவள் அதிர்ந்து போய் அமர்ந்திருக்க, பட்டென விலகிவிட்டான்.

இதற்கு முன்னும் அவன் முத்தமிட்டிருக்கிறான், அணைத்திருக்கிறான் அவளுமே அவனைவிட அழுத்தமாக அனைத்து அவன் நெஞ்சில் தஞ்சம் புகுந்திருக்கிறாள் ஆனால் இன்று தன்னுள் எதோ ஒன்று புரள்வதை அவளால் உணரமுடிந்தது.

அவனது தீண்டல்களை விலக்க மனமில்லாமல் நின்றது, முத்தத்தை திகைப்பும் விழிப்புமாய் ஏற்றுக் கொண்டது எல்லாம் அவளைக் குழப்ப,

"கடைசியா ஒன்னு இதோட போதும்!" இதயம் தடதடக்க அந்த ஓசையை அவள் கேட்டே ஆகவேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டவன் போல் அவளை தன் நெஞ்சில் சாய்த்து அணைத்தபடி ஒன்று என்றதோடு முடித்துக் கொண்டான்.

அவனுள் இன்னும் இன்னும் அந்த சுகம் ஆழப் பரவ… அதை முற்றிலுமாக அனுபவிக்க எண்ணி,

"நீ போ தங்கம்! நான் வரேன்..." அவன் அங்கேயே அமர்ந்துவிட்டான். அவளோ இன்னும்... தோளிலும், இடையிலும், கழுத்திலும், கன்னத்திலும் அவன் ஸ்பரிசம் இருப்பதாய் ஓர் மாயையில் அவனையும் தன்னோடு சுமந்து நடக்க முடியாமல், கால்கள் பின்னிக்கொள்ள... இடை தளர… திண்டாடியபடியே மண்டபத்தை அடைந்தாள்.

ஆதி ஏன் இப்படி செய்தான்? எதற்காக செய்தான்? எதையும் யோசிக்க தோன்றாமல் முதல் முறையாக சொக்கிப்போய் அமர்ந்துவிட்டாள் அந்தப் பேதை.

பிரபாவின் குடும்ப வழக்கப்படி மஞ்சள் கயிறில் தாலி கட்டுவது தான் பழக்கம். பெரிய இடமாயிற்றே வள்ளி மருமகளுக்கு ஆறு பவுனில் தாலிக்கொடி வாங்கியிருந்தார்.

மங்கள நாதம் ஒலிக்க பிரபா பவானியின் கழுத்தில் திருமாங்கல்யத்தை பூட்டினான். அதன் பின்பு தான் அவனால் இலகுவாக இருக்க முடிந்தது. அதுவரை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பவானி திருமணத்தை நிறுத்த வாய்ப்பிருக்கிறது என்ற எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது.

சிரித்த முகமாகவே தன்னோடு இசைந்து நிற்பவளை கண்டவனுக்கு தன்னை அறைந்தவளா இவள்? என்னும் பெரும்

சந்தேகம் வந்துவிட்டது. அதன் பின் நண்பர்களின் கலாய்ப்பு பெரியவர்களிடம் ஆசீர்வாதம் என நேரம் வேகமாக ஒடிவிட்டது.

ஆதி நாளையே ஊருக்கு கிளம்ப வேண்டுமென்றான். நந்தினி மாலையே தன் வீட்டிற்கு கிளம்பிவிட்டாள். சிவானந்தன் இன்றிலிருந்தே மருமகன் தங்கள் வீட்டில் இருக்கட்டுமென்றார். அவரது பேச்சை தட்ட முடியாமல் அனுப்பி வைத்தனர் முருகனும் வள்ளியும். ஆதி உடன்வந்தான்.

இரவு நெருங்கியதும் புகுந்த வீட்டில் பெண்ணை விட்டுச் செல்வது போல் அனைவரும் பிரபாவை விட்டுச் செல்ல ஒருவித விசித்திரமான மனநிலையில் அமர்ந்திருந்தான் பிரபா. பவானி மேலே போனவள் தான் ஆளையே காணும்.

மாமனாருடன் எவ்வளவு தான் பேசுவது? அடுத்து என்ன தான் பேசுவது? என்னும் நிலைக்கு வந்துவிட்டான் பிரபா. மணி பத்தை நெருங்கியதும்,

"பேபிம்மா ரூம், மேல தான் மாப்பிள்ளை. இந்நேரம் எல்லாம் தயாராகி இருக்கும் நீங்க போங்க..."

"சரிங்க மாமா. நீங்களும் போய் படுங்க. மாத்திரையெல்லாம் எடுத்துக்கிட்டீங்களா?" அக்கறையாய் கேட்க அவருக்கு கண்கள் பனித்துவிட்டது. இதுவரை மகள் கூட இந்த

கேள்வியை கேட்டதில்லையே என தோன்றிவிட. அவனருகே வந்து அணைத்துக் கொண்டவர்,

"நன்றி மாப்பிள்ளை. நீங்க எங்களுக்கு கிடைத்தது பெரிய கொடுப்பினை. அம்மா இல்லாம வளர்ந்த பொண்ணு. இப்போ வில்லங்கத்தில் வேற மாட்டிக்கிட்டிருக்கா. பிடிவாதம் அதிகம், மத்தபடி நல்ல பொண்ணு தான். கொஞ்சம் அனுசரணையா நடந்துக்குங்க மாப்பிள்ளை." கரம் பிடித்து கெஞ்சுபவரைப் பார்க்க பாவமாக இருக்கவே,

"கவலைப் படாதீங்க மாமா பவானி இப்போ என் மனைவி. நான் பார்த்துக்கறேன்." ஆதரவாக அவர் கரம் அழுத்தி விடைபெற்றான். அங்கே அவன் மனைவி மெத்தையில் சயனித்திருந்தாள்.

'தூங்கிட்டாளா? பாவம் களைப்பாக இருக்கும் தானே? மெல்ல அறையை நோட்டம் விட அப்பொழுது தான் அவளது நகைகள் அனைத்தும் பாலும், பழமும் வைத்திருக்கும் மேசையில் இருப்பதைக் கண்டான். கழுத்தில் தாலிச் சரடைத் தவிர வேறு குண்டுமணி தங்கம் கூட இல்லை. இதையாவது போட்டிருக்கிறாளே... என அவளருகே அமர விசுக்கென எழுந்து அமர்ந்துவிட்டாள்.

"நீ தூங்கலையா? சாரி டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?" தன் கைக் கடிகாரத்தைக் கழட்டி அவளது நகைகளுக்கு அருகே

வைத்தவன் பேணா, வாலட் என அனைத்தையும் எடுத்து வைத்தான்.

அங்கிருந்து எழுந்தவள் வலதுபுறம் இருக்கும் வாட்ரோபின் அருகே சென்று,

"இது உங்களோடது.... உங்களுக்கு தேவையானது எல்லாம் இருக்கு. வேறெதுவும் வேணுமான்னு பார்த்துச் சொல்லுங்க. ட்ரெசிங் ரூம் அங்க.., இது ரெஸ்ட் ரூம்."

'தேங்க்ஸ்' தனது வாட்ரோபை திறந்து பார்த்தவனுக்கு கொஞ்சம் அதிர்வு வரத்தான் செய்தது. விதவிதமான சூட்டுகள், வீட்டிற்கு போடும் ஆடைகள், ஆபீஸ் வேர், பல வண்ணங்களில் டைகள் என அனைத்தும் தனி தனியாக தொங்கிக் கொண்டிருந்தது. விதவிதமான கைக்கடிகாரங்கள், கைகுட்டைகள் எல்லாம் அழகாக அடுக்கிவைக்கப் பட்டிருந்தன.

"உங்க பெர்ஃபியும், சோப்... ஷாம்பு இதெல்லம் என்ன பிராண்டுன்னு தெரியாது. சோ இப்போ இருப்பதை யூஸ் பண்ணிக்கோங்க. நாளைக்கு மணிகிட்ட சொல்லிட்டீங்கன்னா வாங்கிட்டு வந்துடுவான். வேறேதாவது வேணுமா? எதுவா இருந்தாலும் தயங்கமால் கேளுங்க." அவன் முகம் பார்க்க,

"தேங்க்ஸ். இதெல்லாம் எதுக்கு? என்னோடதையே யூஸ் பண்ணிப்பேன்."

"இதுவும் உங்களோடது தான். அப்பா உங்களுக்காக வாங்கினது. பாருங்க பிரபா... இப்படியேவா படுக்கப் போறீங்க? நீங்க டிரஸ் மாத்தனும் தானே? சீக்கிரம் மாத்திட்டு வந்திங்கன்னா நான் சொல்ல வேண்டியதை சொல்லிடுவேன்."

பவானிக்கு கொஞ்சமும் பொருந்தாத அமைதி, நிதானம், திமிரற்ற நிமிர்வு இதெல்லம் பிரபாவுக்கு புதிதாக தோன்றியது. என்ன பேசப் போகிறாள்? எதுவாக இருந்தாலும் சமாளிக்கத் தான் வேண்டும்...

எனக்கும் உன்னிடம் கேட்கவேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது வனி... உண்மை சொல்வாயா? கேள்வியுடனேயே தன் பட்டுவேஷ்டி சட்டையை களைந்து காட்டன் வேஷ்டியும், கை இல்லா பணியானுமாய் வந்தவனின் மீது ஒரு நொடி அவளது பார்வை பதிந்து மீண்டது அழகர் கோவில் நினைவில்.... அவளும் புடவையில் இருந்து பைஜாமாசுக்கு மாறியிருந்தாள்.

ஏனோ பிரபாவின் மனதில் ஏமாற்றம் வந்து போனது. புடவையில் இருப்பாள் என்று நினைத்தது தான் காரணமோ? இவ்வளவு தூரம் இணக்கமாக இருப்பதே பெரிய விஷயம் இதற்கு மேல் இப்போது எதிர்பார்க்கக் கூடாது. மனதுக்கு கடிவாளமிட்டவன்,

"வனிம்மா எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சுக்கணும்..." அவள் விழி பார்க்க,

"நீங்க கேக்கப் போறதும் நான் சொல்லப் போறதும் ஒரே விஷயம் தான் பிரபா. ஏன் உங்களைத் தான் கட்டுவேன்னு சொன்னேன்னு தானே தெரிஞ்சுக்கணும்? அந்த அர்ஜூன் உன் வீட்டு வேலைக்காரன் கூட உன்னை கட்டமாட்டான்னு சொன்னான். அதுக்காக மட்டும் தான் உங்களை கட்டிக்கிட்டேன்."

பிரபா இப்படி ஒரு காரணத்தை எதிர்பார்க்கவில்லை என்பதை அவனது வெளிறிய முகமே காட்டிக் கொடுத்தது.

"பொய் சொல்ற வனி. என்னைவிட உனக்கு பொருத்தமான எத்தனையோ பேர் உங்கிட்ட வேலை பார்க்கிறாங்க இருந்தும் ஏன் என்னை தேர்ந்தெடுத்தாய்? எதுவாக இருந்தாலும் உண்மையை சொல்லிடு..." அந்த காந்த விழிகளில் வேதனையைக் கண்டவள்,

"ஒருவிதத்தில் எனக்கும் அர்ஜூனுக்கும் நடக்க இருந்த திருமணத்தை தடுத்ததில் உங்களுக்கும் பங்குண்டு." (இவ திருந்தவே மாட்டாளா?)

"ஒருவேளை அந்த திருமணம் நடந்திருந்தால் கடைசி வரை அவனது மறுமுகம் தெரியாமலேயே வாழ்ந்திருப்பாய் வனி."

"செஞ்ச தப்பை நியாயப்படுத்தாதீங்க பிரபா. அவன் கேட்டதை கொடுத்திருந்தால் மறுமுகம் பார்க்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. இனி அதைப்பற்றி பேசி எந்த பிரயோஜனமும் இல்லை.

நீங்க என் விஷயத்தில் தலையிடக் கூடாது... நானும் உங்க விஷயத்தில் தலையிடமாட்டேன். நாம வெறும் ரூம் மெட்ஸ் தான். அதைத் தாண்டி நமக்குள்ள எந்த உறவும் கிடையாது. இல்ல எனக்கு கணவன்கிற உரிமை இருக்கு, உனக்கு மனைவிங்கிற கடமையிருக்குன்னு ஏதாவது உளறினா பக்கத்து ரூமுக்கு போக வேண்டியதிருக்கும்.

நீங்க நல்லவர்னு நம்புவதாலும், என் அப்பா வருத்தப் படக் கூடாதுங்கிறதாலயும் தான் நாம ஒரே ரூம்ல இருக்கோம். பிடிங்க... நீங்க கட்டின தாலி. இனி நமக்குள்ள எந்த உறவும் இல்லை."

காலையில் அவன் அணிவித்த தாலிச் செயினைத் தான் அவன் கரத்தில் வைத்து அழுத்தினாள். இதை சற்றும் எதிர்பார்க்காத பிரபா ஸ்தம்பித்துப் போனான். அர்ஜுன் சொன்னதை உடைப்பதற்காகவே தன்னை மணந்திருக்கிறாள் என்பது அதிர்ச்சி என்றால் தாலியை கழட்டி கொடுத்தது பேரதிர்ச்சியாக தான் இருந்தது.

அதற்கு மேல் அவனால் யோசிக்க என்ன? சுவாசிக்கவே முடியவில்லை என்று தான் சொல்ல வேண்டும். தன்னை நிலைப்படுத்திக் கொள்ள எண்ணி அவளது அறையில் இருக்கும் கண்ணாடிக் கதவை திறந்து கொண்டு பால்கனிக்கு செல்ல, இதமான குளிர் காற்று முகத்தில் வந்து மோத, கண்களை மூடி மெல்ல மெல்ல மனதை சமன் செய்து கொண்டிருந்தான். அவனையே வெறித்துக் கொண்டிருந்தவள் சற்று நேரத்திலேயே தூங்கிப் போனாள்.

எல்லாவற்றையும் எதிர்க்கொள்ள தன்னை தயார் செய்து கொண்டவனும் மெல்ல அவளருகே வந்து படுத்துவிட்டான். தூக்கம் தான் வராமல் விலகி ஓடியது. சீரான சுவாசத்தில் அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதை உணர்ந்து கொண்டவன்,

"ஏய் பார்பி! இதென்ன பெரிய சீனச்சுவரா? இதை தாண்டி என்னால உன்னை தொட முடியாத? நீ அர்ஜுனனின் சவாலை ஜெய்க்கவோ இல்ல... என்னை பலி வாங்கவோ என் கையால் தாலி வாங்கி இருக்கலாம். ஆனால் நான் ஆசைப்பட்ட பந்தம் இது. பிடிக்காத பெண் என்றாலே தாலி கட்டிய பிறகு விடமுடியாது. நீ என் பார்பிடி! எத்தனை நாளைக்கு என்னை ரூம் மெட்டாவே பார்க்கப் போறேன்னு பார்க்கிறேன்...." மென் குரலில் சொன்னவன் இருவருக்கும் இடையில் இருந்த

தலையணையை எடுத்து காலுக்கு வைத்துக் கொண்டு அவளருகே படுத்துவிட்டான்.

"வனி... எழுந்துக்கோ..." அவனது கரம் அவள் கன்னம் தட்ட, சில்லென்ற அவனது ஸ்பரிசம் அவளை விழிக்கச் செய்தது.

"குட் மார்னிங் வனிம்மா..." சிரித்த முகமாய் சொல்பவனை பார்த்தவளுக்கு இரவு இவனோடு பேசினோமா? இல்லை அனைத்தும் கனவா? என்ற எண்ணம் தோன்றிவிட்டது.

"ரூம் மேட்டாக இருந்தால் குட் மார்னிங் கூடவா சொல்லக் கூடாது?" இதழோர சிரிப்புடன் கேட்கவும்,

'நான் எல்லாம் சொல்லியும் பேசுறானே இவன் நினைப்பு தான் என்ன?' புரியாமல் விழித்தவளிடம்,

"ஆபிஸ்க்கு டயமாச்சு நான் கிளம்பறேன். நீ காலேஜ் போற தானே? இல்ல இன்று லீவா?" தனது கை கடிகாரத்தை எடுத்துக் கட்டிக் கொண்டே கேட்டவன்,

"நகைகளை எடுத்து போட்டுக்க வனி... இல்ல வைக்கும் இடத்தில் பத்திரமாக எடுத்து வை. பை..." கையசைப்புடன் விரைந்துவிட்டான்.

அவனது கேள்வி ஒன்றிருக்கு கூட அவள் பதில் சொல்லவேயில்லை. அதை அவன் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை என்பது வேறு அவளை குழப்பியது.

அமைதியாக வகுப்பிற்குள் வந்தவளை அவளது தோழியர் பட்டாளம் சூழ்ந்து கொண்டது.

"ஏய் பவானி... பிரபாகிட்ட சொல்லிட்டியா? உன் மனம் மாற டைம் கொடுத்தாரா?" தோழிகள் சொல்லிக் கொடுத்தது அது தான். அவள் அவனிடம் அப்படி பேசவில்லையே... இருந்தும் ஆமோதிப்பாய் தலையசைத்தாள். அவளை கட்டிக் கொண்டவர்கள்,

"பிரபா செமடி. நீ ரொம்ப லக்கி..." என புகழ்ந்தனர். அதற்காக நிர்வாணாவில் பார்ட்டி என்னும் பிட்டையும் போட, அந்த வாரா இறுதி என்று முடிவானது.

காலை உணவு வேலையாள் பரிமாற அமைதியாகவே நடந்தது. அலுவலகம் செல்பவனுக்கு மதியம் வீட்டில் இருந்து உணவு வந்தது. பவானியும் கல்லூரிக்கு கிளம்பிவிடுவதால் பகல் பொழுது சிவானந்தனுக்கு ஒன்று போல் தான் இருந்தது. மாலை ஏழு மணிக்கெல்லாம் பிரபா வீட்டிற்கு வந்துவிடுவான்.

பவானி தன்னறையில் படிப்பதாக பேர் பண்ணிக் கொண்டிருக்க மாமனாரும் மருமகனும் அன்றய நிகழ்வுகள் பற்றியும், அரசியல் பற்றியும் பேசி... செஸ், கேரம் இப்படியேதாவது ஒன்றை விளையாடியும் பொழுதைக் கடத்தினர்.

அனைத்தும் ஒருவாரத்திற்கு தான். அதன் பிறகு பவானி பழைய படி நிர்வானாவை நோக்கி படையெடுக்கத் தொடங்கிவிட்டாள். தோழிகளுடன் சேர்ந்து படிப்பதாக மாமனாரிடம் கதை சொல்லி மனைவியையும் மாமனாரையும் ஒருசேர காப்பற்றினான் பிரபா.

சிவானந்தன் இதய நோயாளி என்பதால் அவருக்கு தெரியாமல் இருப்பதே நல்லது என நினைத்தான். இதோ ஒரு மாதமாகிவிட்டது. எதுவும் செய்ய முடியாமல் கையை கட்டிக் கொண்டிருந்தவன் இன்று இதை முடிவுக்கு கொண்டு வரும் முதல் அடியை எடுத்து வைத்திருந்தான்.

அவள் நிச்சயம் அழைப்பாள் என எதிர்பார்த்தவன், இரவு பத்தாகியும் அலுவலகத்தைவிட்டு செல்ல மனமில்லாதவனாய் அணைத்து வேலைகளும் முடிந்த பின்னும் அங்கேயே அமர்ந்திருக்க, அவன் எதிர்பார்த்து காத்திருந்த தொலைபேசி,

"வெண்மேகம் பெண்ணாக உருவானதோ...

இந்நேரம் எனைப் பார்த்து விளையாடுதோ...

உன்னாலே பல ஞாபகம்... என் முன்னே வந்தாடுதே,

ஒரு நெஞ்சம் திண்டாடுதே...

வார்த்தை ஒரு வார்த்தை சொன்னாலென்ன...

பார்வை... ஒரு பார்வை பார்த்தாலென்ன,

உன்னாலே பல ஞாபகம்... என் முன்னே வந்தாடுதே...

ஒரு நெஞ்சம் திண்டாடுதே..."

என காதல் ரசம் பிழிய, இதழோரம் சிறு சிரிப்புடன் அதை உயிர்ப்பித்தவன்,

"சொல்லுமா! எங்கே இருக்க?" என கனிவுடன் கேட்க,

"போனை எடுக்க இவ்வளவு நேரமா? நல்லா சாப்பிட்டு தூங்குறியா? ஏன் என் கார்டு லிமிட்டை குறைத்தாய்? நீ என்ன பெரிய இவானா? தாலி கட்டின திமிரா? இப்போ நான் எப்படி பே பண்றது?" என பொரிந்து கொட்டினாள் அவன் சஹதர்மினி.

பிரபாவின் திட்டம் வெற்றி பெறுமா?

# அத்தியாயம் 27

**ம**னைவியின் வார்த்தைகளைக் கேட்டவன், ஆழ்ந்த மூச்சின் மூலம் தன்னை சமன் செய்து கொண்டு,

"இப்போ எங்க இருக்கன்னு சொல்லு. நான் வரேன்!"

"எல்லாத்துக்கும் உன் கையை எதிர்பார்த்து நிக்கனும்னு பிளான் பண்ணித்தானே இதெல்லாம் செய்ற? 'நிர்வாணா பார்'ல இருக்கேன்! இன்னும் 20 தவ்சண்ட் வேணும்!" என்றவளிடம் கோபமும், அவமானமும் நிறைந்திருந்தது.

மறுபேச்சின்றி, " இன்னும் அரை மணி நேரத்தில் வந்திடுவேன்! வெயிட் பண்ணு!" என துண்டித்தான். அவன் வருவதற்குள்ளாக மீண்டும் இரண்டு ரவுண்ட் முடித்திருந்தாள்... அவனிடம் கையேந்தும் அவலநிலைக்கு மருந்தாக. சொன்னது போலவே வந்தவனை, தோழியர் பட்டாளத்துடன் எதிர் கொண்டவள்,

"சீக்கிரம் வருவதற்கென்ன?" என சிடுசிடுத்தபடி, தட்டுத்தடுமாறி முன்னே விரைய, அவள் கரம் பற்றி தடுத்தவன்,

"ஒரு நிமிஷம்! நான் சொல்வதை ஏற்றுக்கொண்டால் மீதிப் பணத்தைக் கட்டுவேன்!" என அவள் முகம் பார்க்க,

"சொல்லித் தொலை... என் மானத்தை வாங்காத!"

"உன்னோட டெய்லி லிமிட் இருபது ஆயிரம் தான். இன்று தான் கடைசி. இனி லிமிட் தாண்டி செலவு செய்தால் நான் பே பண்ண மாட்டேன்!" என்றான் கறாராய்.

"விளையாடுறியா? ஸ்காட்ச்சோட விலை என்ன தெரியுமா? உனக்கெப்படி தெரியும்? எப்பொழுதும் கம்பனியையும், மாமனாரையும் கட்டிக் கொண்டு அழும் சாமியாராயிற்றே நீ! என் லிமிட்டை அதிகப்படுத்து!"

"நோ!"

"பிரபா, இட்ஸ் டூ பேட்!" எனக் கத்தியவள், நிற்க முடியாமல் தடுமாற, அவளைத் தன் தோளில் தாங்கியவன்,

"இனி இருபதாயிரம் ரூபாய்க்கு மேல உங்க தோழியால செலவு செய்ய முடியாது. ஒன்று, அதற்குள்ளாக குடிங்க... இல்லன்னா உங்க பணத்தைக் கொடுங்க!" என காட்டமாக கூறியவாறு பில் செட்டில் செய்தான்.

போதையில் துவண்டவளை, கைகளில் ஏந்திக் கொண்டவன் கார் நோக்கி விரைய, இறுக்கமாக அணிந்திருந்த வெள்ளை சட்டையும், கருப்பு ஜீன்சும் அவளது வனப்பை வெளிப்படுத்த, சட்டையின் மேல் இரண்டு பட்டங்கள் வாய் பிளந்து வஞ்சனையில்லாமல் அவளது செழுமையை அம்பலப்படுத்த, தடுமாறிப் போனான் அவள் கணவன்.

பின்னிருக்கையில் படுக்க வைத்து, வண்டியை கிளப்பினான். பப்பில் கூத்தடிக்கும் பழக்கம், இந்த ஒரு மாதத்தில், வாரத்திற்கு மூன்று நாட்களாகி, ஒரு நாள் விட்டு ஒருநாளாகி, அதுவும் குறைந்து இந்த ஒரு வாரமாய் தினமும் என்று தொடர, அதைத் தடுக்க எண்ணியே அவளது கிரெடிட் லிமிட்டை குறைத்தான். அவளுக்கு தான் அவனைப் பிடிக்காது... அவனுக்கு இல்லையே! அது தான் இப்படி எந்நேரம், எங்கிருந்து அழைப்பாலோ என் வீட்டிற்கு கூட செல்லாமல் விழித்திருக்கிறான்.

நல்ல காலம், மணி பதினொன்றை நெருங்கி விட்டதால் மாமனார் தூங்கிவிட்டார். இல்லையேல் மகள் அடிக்கும் கொட்டத்தைப் பார்த்து, அவருக்கு மீண்டும் நெஞ்சுவலி வந்துவிடும். வேலையாட்கள் எல்லோரும் ஒன்பது மணிக்கெல்லாம் தங்கள் இல்லத்திற்கு சென்றுவிடுவதால் இவள் அடிக்கும் கூத்து யாருக்கும் தெரியவில்லை.

பூ மாலையென கைகளில் ஏந்தியபடியே, கட்டிலில் கிடத்த, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு,

"பிரபா!" என சினுங்க, காதல் கொண்ட மனது விழித்துக் கொள்ள, அவளைத் தன் மார்போடு அனைத்துக் கொண்டான். அது நொடிகளா? நிமிடங்களா என தெரியாமல் கட்டுண்டிருந்தவனை,

"பிரபா... அச்சு ஏன்... அப்படி செஞ்சான்....?" எனும் கேள்வியே சுயம் பெறச் செய்தது.

"அவனுக்கு இந்த தேவதையின் அருமை தெரியல!" என விரித்து விடப்பட்டிருந்த கூந்தலை ஒதுக்கியவனின் காலரை இறுகப் பற்றியவள்,

"உனக்குத் தெரியுமா...?" என்றாள் கொஞ்சும் குரலும், சொக்கும் விழிகளுமாய். அவளது கரத்தை விலக்க முயன்றபடி,

"தெரிந்ததால் தான் கட்டிக்கிட்டேன்! தூங்கு வனி!" என்றான் இதமாக.

"பசிக்குதே!" என பரிதாபமாக வயிற்றைப் பிடித்துக் கொண்டு எழுந்து அமர்ந்த மனையாளைப் பார்த்ததும், பதறியவனாய்,

"இரு... நான் சாப்பிட ஏதாவது கொண்டு வறேன்!"

"எனக்கு காரமா... எதாவது வேணும்... சிக்கன் பிரியாணி?"

''இப்ப எப்படி?"

"அப்போ பரோட்டாவும் சிக்கன் குழம்பும் வாங்கிட்டுவரியா? நம்ம தெரு முனையில்... ஒரு கடை இருக்குமே ப்ளீஸ்... ப்ளீஸ் பிரபா... ரொம்ப பசிக்குது.' குழந்தையாய் சினுங்க, ஆமோதிப்பாய் தலையசைத்தான்... அவன் வாங்கிக் கொண்டு வர... தட்டுத்தடுமாறி மாடிப்படியில் இறங்கிக் கொண்டிருந்தாள்.

"இப்போ நீ ஏன் வந்தாய்? எங்காவது விழுந்து வைப்பதற்கா? நான் எடுத்துட்டு வருவேன்ல!" என்றான் கண்டிப்புடன்.

"விழ மாட்டேன் பிரபா... எவ்வளவு அடித்தாலும் ஸ்டெடியா இருப்பேன்." என்றபடியே சாய்ந்தவளைத் தன்னோடு சாய்த்துக் கொண்டான்.

"வனி! எல்லாத்தையும் மறந்துடு! இப்படி குடித்து உடம்பை கெடுத்துக்காத! இந்த ஒரு வாரமாய் எல்லை தாண்டி போய்ட்டிருக்க, உன் பிரச்சனை தான் என்ன?" எனக் கரிசனமாய் கேட்க,

சட்டென அவனிடமிருந்து விலகியவள்,

"நீ தான் எல்லை தாண்டுற! அதிக உரிமை எடுத்துக்கிற வேலையை நிறுத்து. உன் வேலையை மட்டும் பார்!" வெடுக்கென அவன் கையிலிருந்த பார்சலை பறித்து சென்றாள்.

மெல்ல, தன்னை சமன் செய்து கொண்டவன் சாப்பாட்டு மேசையில் அவளெதிரே அமர்ந்தான். பின்னப்படாமல் விரிய விடப்பட்டிருந்த கூந்தல் இடை வரை பரவ, சைடு பாங் கண்ணை மறைக்க, மாசுமருவற்ற முகத்தில் பொட்டோ , கழுத்தில் தாலியோ, காலில் மெட்டியோ, தோடு, வளையல் போன்ற ஆபரணங்களோ இல்லாத போதும், அழகுப்

பதுமையாய், உயிரோவியமாய் இருந்தவளைப் பார்வையால் பருகிக் கொண்டிருந்தவனிடம்,

"ஏன் இப்படி பார்க்கிற? உனக்கு வேணும்னா சேர்த்து வாங்கிட்டு வர வேண்டியது தானே? எனக்கு வயிறு வலி வந்திடப் போகுது!" என்றவளிடம் கோபமில்லை. அவன் அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க,

"இப்போ என்ன பிரச்சனைன்னு உனக்கு தெரியணும். அவ்வளவு தானே? அந்த ஏமாற்றுக்காரனை பார்த்தேன்! புது பொண்டாட்டியோடு கொஞ்சி கூத்தடிச்சுக்கிட்டு இருந்தான்.'' என்றவளுக்கு கோபத்தில் கன்னங்கள் சூடேறி சிவந்தன.

"ஏமாந்தது நீ! உனக்கும் தான் புதுசா திருமணமாகியிருக்கு!"

"ஆமா, நீ சொன்னதை நம்பாமல் அவனிடம் ஏமாந்தது நான் தான். அதற்காக நானும் உன்னோடு இளையணுமா?"

"புருஷனோடு கொஞ்சிக் குலாவுவது தவறில்லை!" என முடிப்பதற்குள்ளாகவே, அங்கிருந்த டம்ளர் அவன் நெற்றியை பதம் பார்த்தது.

"போடா பொறுக்கி! எல்லா ஆம்பிளைகளும் ஒரே மாதிரி தான்! உடம்பு சுகத்திற்காக அலைபவர்கள்!" என வெடித்தவள், தன்னறைக்குச் சென்றுவிட, அவளால் உண்டான வெட்டுக் காயத்தை விட அவளது வார்த்தைகளே அவனை அதிகம் வேதனைப்படுத்தியது.

"போடி முட்டாள்! உடல் சுகமே பிரதானம் என நினைத்திருந்தால் திருமணமான இந்த ஒரு மாதத்தில் முக்கால் வாசி நாட்கள் போதையில் இருந்த உன்னை உபயோகப்படுத்தி இருப்பேன். நீ எவ்வளவு வதைத்தாலும், நான் தணிந்து போகக் காரணம், உன் மனம் என் வசமாக வேண்டும் என்பதற்காகத் தான்.

உனக்கு வேண்டுமானால் இந்த திருமணம் உன்னை ஏமாற்றியவனை பழி வாங்குவதற்காக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை இது ஆத்மார்த்தமான பந்தம்.!" என மறுகியவனை முதல் இரவு நினைவு மேலும் வருத்தியது.

பழைய நினைவு என்றாலும், இன்று நடந்தது போல் மீண்டும் துடித்துப் போனான் பிரபா. சூரியன் முகத்தில் தன் கதிர்களை பரப்புவதை உணர்ந்து, மெல்ல சோம்பல் முறித்து எழுந்தவள், ஆபீஸிற்கு கிளம்பிக் கொண்டிருக்கும் கணவனைக் கண்டாள்.

எப்போதும் சிரித்த முகமாய் தனக்கு குட் மார்னிங் சொல்பவனுக்கு இன்று என்னவாகிவிட்டது? என்ற சிந்தனையுடன், அவன் முகம் பார்க்க, நெற்றியில் பளிச்சென தெரிந்த வெட்டுக் காயமும் அதனால் உண்டான சிறு வீக்கமும், இரவு நடந்தவற்றை அரைகுறையாய் அவளுக்கு உணர்த்தின.

தவறு செய்த குழந்தை, தாயிடம் தயங்கித் தயங்கி மன்னிப்பு கேட்குமே... அவளது மன்னிப்புக்காக மருகுமே, அதே பரிதவிப்புடன் கண்ணாடி முன் நின்று 'டை'யை கட்டிக் கொண்டிருந்தவன் அருகே வந்து,

"ஐயம் சாரி, பிரபா!" எனவும், மெல்ல அவள் முகம் பார்த்து,

"இரவு என்ன நடந்துச்சுன்னு உனக்கு ஞாபகம் இருக்கா? உன் கொடிய வார்த்தைகளால் என்னை கூறு போட்டது நினைவிருக்கா? அதை விட இது பெரிய வேதனையைக் கொடுக்கல." என்றபடி விலகி சென்றுவிட்டான்.

எவ்வளவு தான் யோசித்துப் பார்த்தாலும், தான் அவனிடம் என்ன பேசினோம்... என்று அவளுக்கு நினைவு வரவில்லை. அன்றோடு அவன் அவளிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டான். அவன் பேசாதது அவளிடம் சிறு பாதிப்பை உண்டாக்கியது.

என்ன சொல்லித் தொலைச்சேன்னு நியாபகம் வரமாட்டேங்குதே... சரியான தொட்டாச் சுருங்கி! குடி போதையில் உளறியது தானே? அதுக்கு போய் சின்ன புள்ள மாதிரி பேசாம இருக்கான். லேசாக மனம் சுணங்கினாலும்... ரொம்ப தான் பண்ற போடா... அவளும் முறுக்கிக் கொண்டாள்.

தோழிகள் பட்டாளத்தில் பவானிக்கு மட்டுமே திருமணம் முடிந்திருந்தது. மற்றவர்களும் பணக்காரர்கள் என்ற போதும், இவளைப் போல் அவர்களிடம் பணம் புழங்காது.

இருபது ஆயிரம் ரூபாய் ஆறு பேருக்கு போதுமானதாக இல்லையென்பதால் அவர்களின் கூத்துக்கள் குறைந்தது. கம்பெனி இல்லாமல் குடிப்பது கொடுமையாக இருந்தது.

அதோடு அர்ஜுனை சந்திக்க நேரிட்டால் அவன் முன் தரம் தாழ்ந்து நிற்பதை விரும்பாததாலும் பவானி அதிக நேரம் வீட்டில் தான் இருக்கிறாள் என்பதால் பிரபாவும் நிர்வாணா சொல்ல வேண்டிய நிலை இல்லாததால் நேரத்தோடு வீட்டிற்கு வந்துவிடுகிறான். பிரபாவுக்கும் மாமனாருக்கும் நெருக்கம் கூடியது.

அன்று ஆதி பிரபாவிடம் பவானி பற்றி விசாரிக்க, பட்டும் படாமலும் இருவருமே விலகியிருப்பதாய் சொல்ல...

"இப்படியே எத்தனை நாளைக்கு இருப்ப மச்சான்? நீயாவது அவள் மனதை மாற்ற எதாவது ஸ்டெப் எடுத்துவை. முதல்ல அவளோட உட்கார்ந்து பேசு. பிடிச்சதை வாங்கிக் கொடு. நண்பனாய் இருக்க முயற்சி பண்ணு மச்சான். விலகி இருந்தா என்றுமே சேர முடியாது."

நண்பனின் அறிவுரையை பரிட்சித்து பார்க்கலாம் என்று தோன்றிவிட மனைவிக்கு என்ன பிடிக்கும் என்று

தெரியாததாலும் சாக்லேட் அனைவருக்கும் பிடித்தமானது என்பதாலும் பெரிய சாக்லேட் பார் வாங்கி வந்தான். போனில் விளையாடிக் கொண்டிருந்தவள், அருகே வந்த பிரபாவை என்ன என்பது போல் பார்க்க...

"வனிம்மா... உனக்கு ஒரு கிஃப்ட். பிடிச்சிருக்கான்னு பாரு..." மறுப்பின்றி வாங்கிக் கொண்டவள் பிரித்துப் பார்க்க உள்ளே பெரிய சாக்லேட் பார்."

"நான் என்ன பேபியா? எனக்கு சாக்லேட் பிடிக்காது." மறுபடியும் அவனிடமே கொடுத்தாள்." (சரக்கடிக்கிறவளுக்கு சாக்லேட் கொடுக்கறியே நீ ரொம்ப நல்லவன்டா...)

"ஓ! நிவியும், நந்துவும் நல்லா சாப்பிடுவாங்க... அதான் பொண்ணுங்களுக்கு பிடிக்கும்னு நினைச்சுட்டேன்...". தயங்கியவனை கூர்ந்து நோக்கியவள்,

"நான் பவானி! நிவியோ நந்துவோ இல்ல..."'அங்கிருந்து விலகி சென்றுவிட்டாள். கொடுத்ததை தூக்கி எரியாமல் பிரித்தாவது பார்த்தாளே... கொஞ்சம் கொஞ்சமாகத் தான் மாற்ற வேண்டும் எனத் தேற்றிக் கொண்டான்.

பிரபா மனைவியின் மனம் கவர புதிய, புதிய உத்திகளை கையாளத் தொடங்கினான். காலை உணவின் போது நகைச்சுவையாய் ஏதேனும் பேசுவான். பேசுவது என்னவோ மாமனாரோடு தான் என்றாலும் பார்வை முழுவதும்

மனைவியிடம் தான் இருக்கும். அவனது பள்ளிக்கதை, காலேஜ் கலாட்டா... ஆபிஸ் கூத்து இப்படி எதையாவது ஆரம்பித்து இடையில் இவளையும் கோர்த்துவிடுவான்.

"உனக்கு இப்படி ஏதேனும் அனுபவம் இருக்கிறதா வனிம்மா?" என கேட்டு திணறடிப்பான். மாப்பிள்ளையின் 'வனிம்மா' என்னும் செல்ல அழைப்பு தந்தையை நெகிழ வைத்தது.

அவனது பேச்சுக்கும் அவளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பது போல் சாப்பாட்டில் கவனமாக இருந்தாலும் உள்ளூர ரசிக்கத்தான் செய்தாள். அவன் வரவிற்கு பின் வீட்டில் நிறைய மாற்றம் வந்திருந்தது.

சேர்ந்து உண்பது, பவானி நேரத்தோடு வீட்டிற்கு வருவது, தந்தைக்கும் மகளுக்கும் இடையே வேண்டுமென்றே பொறாமையை தூண்டிவிடுவது. அவன் மாமனாரோடு குழைவது அவளுக்கு அப்படி தான் தெரிந்தது. ஏனோ கணவன் இருக்கும் போது அப்பாவோடு இணக்கமாக பேச அவளுக்கு மனம் வரவில்லை.

எப்பொழுதுமே சிவானந்தன் தான் மகளிடம் உருகுவார். தேவைகள் என்றாலொழிய பவானி அவரிடம் அதிகம் பேசுவதில்லை. இப்போது எப்படி தானாகவே போய் பேசுவது? என தோன்றினாலும் பிரபாவின் மீது கோபம் வந்தது.

இவனை யார் என் அப்பாகிட்ட கொஞ்ச சொல்றது? முகம் திருப்பிக் கொள்ளத் தான் முடிந்தது. அவள் தன் கூட்டை உடைத்துக் கொண்டு வெளியே வரவேண்டும் என்பதற்காக தான் இதெல்லாம் என்பது அவன் மட்டுமே அறிந்த ரகசியம்.

அன்று மீண்டும் ஒரு பரிசுடன் வந்தான். கட்டில் முழுவதும் புத்தகங்கள் பரப்பி இருக்க போனில் எதையோ தேடிக் கொண்டிருந்தாள்.

நாளை வகுப்பில் செமினார் ஒன்று எடுக்க வேண்டும் அதற்கான குறிப்புகள் தான் திரட்டிக் கொண்டிருக்கிறாள். இன்னும் தொகுத்து வேறு எழுதவில்லை. அவளது தோழி ஒருத்தியும் உதவிக்கு வரவில்லை.

எல்லாம் இவளை விட அறிவுக் கொழுந்துகள்… எழுதியாவது கொடுங்கள் என்று கேட்டால் நிர்வாணாவிற்கு போகலாம் என்பதில் தான் குறியாக இருக்கின்றார்கள். அங்கு போனால் பணத்திற்கு மீண்டும் இவனிடம் வரவேண்டும் எதற்கு இந்த வேண்டாத வேலை? என தானே காரியத்தில் முழு மூச்சுடன் இறங்கிவிட்டிருந்தாள்.

‘‘காலேஜ் எப்படி போகுது வனி?"

"காலேஜ் எங்கும் போகல…" வெடுக்கென வந்தது பதில். சிறு சிரிப்புடன் அவளது பொய் கோபத்தை ரசித்தவன்,

"என்னடா முக்கியமா ஏதாவது எழுதிட்டு இருக்கியா? இல்ல எக்ஸாம் இருக்கா?"

"இப்போ உங்களுக்கு என்ன வேணும் பிரபா? சும்மா என்னை டென்ஷன் பண்ணாதீங்க..." கோபமாக முறைத்தவளின் அருகே வந்து அமர்ந்தவன்,

"உன் தேவை என்னன்னு சொல்லு நான் உதவி பண்றேன்..."

"கொஞ்ச நேரம் தொன தொனக்காம போறிங்களா?" அவன் அதையெல்லாம் கண்டு கொள்ளவேயில்லை. அவளது குறிப்புகளை பார்வையிட்டான்."

"இன்ஜினியர் சர்! இது காஸ்ட் அனலைசிங்! உங்களுக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்ல..." பேப்பரை கொடுக்கறீங்களா?" கேலி சிரிப்புடன் கேட்டவளை விழி எடுக்க முடியாமல் பார்த்தவன்,

"CEO மேடம்... அனுபவ அறிவு நிறையவே இருக்கு... அதோடு பேசிக்கா இதை பத்தி தெரியும். உங்களுக்கு என்னால உதவ முடியும்... ஒரே ஒரு சான்ஸ் கொடுத்து பாருங்களேன்... என் மேல நம்பிக்கை இல்லன்னா... நீங்க கலெக்ட் பண்ணி வச்சிருக்க இன்போவை வச்சு ஸ்கிரிப்ட் ரெடி பண்றேன். அதை யார்வேனாலும் செய்யலாம் தானே? நீங்க உங்க தேடுதல் வேட்டையை தொடருங்க..."

இதில் மறுப்பதற்கு ஒன்றுமே இல்லை தான். இப்போது இது ரொம்பவுமே அவசியமான உதவியும் கூட. இவள் தகவல் திரட்டி... தொகுத்து எழுத அதிக நேரம் பிடிக்கும். இருவர் செய்வதென்றால் சீக்கிரம் முடித்துவிடலாம். அதோடு இவனும் வெட்டியாக தானே இருக்கிறான் செய்யட்டும்.

முடிவெடுத்தவளாய் எழுத வேண்டியவற்றை அவனோடு விவாதிக்கப் போக... அவன் கூகுளை விட அதிக தகவல் கொடுத்து அதிர வைத்தான்.

'பார் டா! கருவாயனுக்குக் கூட இவ்வளவு விஷயம் தெரிஞ்சிருக்கு...' அவள் கண்களில் தோன்றிய மின்னலை அவன் கண்டுகொண்டான்.

"வனிம்மா! மாமாகிட்ட இன்னும் நிறைய மேட்டர் இருக்கு. நீதான் பார்க்க தயாராயில்ல. இது போலவே எல்லாத்துக்கும் ஒரு சான்ஸ் கொடுத்துப் பாரு அப்போ தெரியும் நான் யாருன்னு..."

"போதுமே... நீங்க யாருன்னு நான் தெரிஞ்சுக்கவே வேணாம்... ஓவரா பில்டப் பண்ணீங்க எழுத வேண்டாம்னு சொல்லிடுவேன்." (கருவாப்பயலுக்கு ஆசையை பாரு மாமாவாம் மாமா...) உதடு சுளித்தாலும் அவளிடம் கோபமில்லை.

"வனிம்மா! இது ஓகேவான்னு பாருடா..." அவள் கையில் கொடுத்தவன், கழுத்தை சுழற்றி, தோள்களை அழுத்திவிட்டுக்

கொள்ள... பாவம் எழுதியது வலிக்குது போல... மனம் இளக பார்வையிட, அவளது மகிழ்வை முகமே காட்டிக் கொடுக்க... அதை ரசித்தபடி அமர்ந்திருந்தான் அவள் கணவன். இவள் கொடுக்காத தகவல்களையும் சேர்த்தே கொடுத்திருந்தான். மகிழ்ச்சி கூத்தாட,

"தேங்க்ஸ் பிரபா..." தானாகவே அவன் கரம் பற்றிக் கொண்டாள். தோளோடு தோள் உரச நெருங்கி அமர்ந்தவள் அவனிடமே தன் செமினாரை பிரசன்ட் பண்ண... சிறு திருத்தங்கள் சில சொன்னான்.

மறுப்பின்றி கேட்டுக் கொண்டவள் அப்படியே படுத்துவிட அவளது புத்தகங்கள் அனைத்தையும் அதனதன் இடத்தில் அவனே எடுத்து வைத்தான். அதற்கும் ஒரு நன்றியை சொன்னவளிடம் தனது பரிசைக் கொடுத்தான்.

கொஞ்சம் நல்லா பேசினா போதுமே உடனே கவர் பண்ற வேலையை ஆரம்பிச்சிடுவான் எரிச்சல் வந்துவிட்டது பவானிக்கு. முறைப்புடன் பார்க்க,

"நிவிக்கு ட்ரெஸ் வாங்கிக் கொடுக்க சொல்லி ஆதி சொல்லியிருந்தான். இன்னைக்கு போயிருந்தோம். பார்த்ததும் பிடிச்சிருந்துச்சு... உனக்காக வாங்கிட்டு வந்தேன்..." என அவளிடம் ஒரு பெட்டியை நீட்ட,

"புடவை தானே? எனக்கு பிடிக்காத டிரெஸ்னா அது புடவை மட்டும் தான்." இன்று பிரித்துக் கூட பார்க்காமல் அவனிடம் கொடுத்தாள்.

"உன்னோட வாட்ரோபிலாவது இதுக்கு ஒரு சின்ன இடம் கொடுக்கக் கூடாதா வனிம்மா?" ஏனோ அவனது அப்பட்டமான வருத்தம் அவளையும் வருத்த,

"இப்போ எதுக்கு இதெல்லாம் வாங்கிட்டு வரீங்க பிரபா? நான் தான் சொன்னேன்ல நாம வெறும் ரூம் மெட்ஸ் தான்னு மறந்து போச்சா...?" முகம் முறிய பேசினாலும் அமைதியாகவே,

"எப்போதும் அப்படியே இருக்கணும்கிற அவசியமெல்லாம் இல்ல வனி. நீ உன் வாழ்க்கையை தொலச்சுட்டு இருக்கும் அளவுக்கு அவன் தகுதியானவன் கிடையாது. உனக்கு எப்படியோ? எனக்கு இது ஆத்மார்த்தமான பந்தம் அப்படியெல்லாம் சட்டுன்னு விலகிட முடியாது.

இந்த ஜென்மத்தில் நீ தான் என் மனைவி. கொஞ்சம் கொஞ்சமா உன் மனசை மாத்திக்க முயற்சி பண்ணு வனிம்மா. வர சண்டே நிவிக்கு பிறந்த நாள். பார்ட்டி இருக்கு நீயும் வரியா?" ஆவலாய் அவள் முகம் பார்க்க,

"உங்க கூட நான் எங்கும் வரல... ப்ளீஸ் என்னைத் தொந்தரவு பண்ணாம போங்க..." கரம் கூப்பி வேண்ட, அவளை சரிசெய்யும் வகை தெரியாமல் குழம்பிப் போனான்.

குடிப்பழக்கம் வெகுவாக குறைந்திருப்பதை கண்டுகொள்ள முடிந்தாலும் அர்ஜூனை பற்றிய அவள் நிலையை கணிக்க முடியவில்லை. மனம் நோக பேசினாலும்... அவள் மனதில் தனக்கென ஓர் இடம் இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. ஆழ்ந்த மூச்சுடன் விலகிச் சென்றுவிட்டான்.

அவன் கொடுத்த புடவை வாட்ரோபின் ஓர் மூலையில் பதுங்கியது. ஏனோ அவனது கோபமில்லா அமைதியும், கண்ணியமும், பொறுமையும் அவளை பாதிக்க நல்லவனை ரொம்பவும் நோகடிக்கிறோமோ? என முதல் முறையாக யோசிக்கத் தொடங்கியவள்,

'எல்லோரும் இப்படித் தான் முதல்ல ஆரம்பிப்பானுங்க. எனக்கு யாரும் வேண்டாம். ஒரு முறை ஏமாந்து நிற்பதே போதும். நான் நானாவே இருப்பது தான் நல்லது. (கட்டியவனுக்கு கண்டவனுக்கும் வித்தியாசம் தெரியவில்லையே...) மீண்டும் தன்னுள்ளேயே முடங்கிப் போனாள்.

வார இறுதியில் பிரபா எப்போதுமே பெற்றோர் வீட்டுக்கு போய்விடுவான். பகல் முழுவதும் அவர்களோடு இருந்துவிட்டு படுக்கும் நேரத்திற்கு தான் வருவான்.

கண்கள் புத்தகத்தில் நிலைத்திருந்தாலும் மனமென்னவோ அவனோடு தானும் போயிருக்கலாமோ? இப்படி காலேஜும்

வீடுமா இருப்பது ரொம்பவும் கஷ்டமா இருக்கே... வள்ளி ஆன்ட்டி நல்லா கேரிங்கா பார்த்துப்பாங்க... என தன் போக்கில் சிந்தித்துக் கொண்டிருந்தது.

தந்தையிடம் வெளியே செல்வதாகச் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டாள். இவளை வெறுப்பேற்றுவதற்காகவே வந்தவன் போல கடைத் தொகுதியின் வாயிலில் பவானியை எதிர்க்க கொண்டான் அர்ஜூன்.

"ஹாய் பேபி! எப்படி இருக்க? மூணு மாசமாச்சு கட்டுக்குலையாமல் இருக்க, உன் புருசன் விலக்கி வச்சிருக்கானா? ரோஷப்பட்டு, தரம் இறங்கி வேலைக்காரனை கட்டிக்கிட்டா இப்படி தான் நிக்கணும். புத்தியை காட்டிட்டான்ல?

நீயும் உன் திமிரை விட்டு கொஞ்சம் இறங்கி போகணும் பவானி. நல்ல நண்பனா அட்வைஸ் பண்றேன், பொறுப்பா நடந்துக்க. என்னோட போட்டி போட்டுக்கிட்டு என் திருமணத்தன்றே உன் திருமணத்தையும் வேலைக்காரனோடு நடத்திட்ட... ஸ்வீட் எடுத்துக்கோ என் மனைவி கன்சீவா இருக்கா... நீ...? " என எள்ளலுடன் இனிப்பை நீட்ட,

"உனக்குத் தானே?" கொஞ்சமும் பயமற்ற திமிரான கேள்வியில் கோபம் தலைக்கேற,

"ஏய்!" அடிக்க கை ஓங்க அதை தடுத்து அவன் கரம் பற்றியவள்,

"உன் மனைவியை பத்தி பேசினா வலிக்குதுல்ல? என் கணவனை பத்தியும் தரக் குறைவா பேசாத... பிரபாவைப் பற்றி என்ன தெரியும் உனக்கு? அன்பிற்காக ஏங்கும் பெண்களிடம் பணத்திற்காக நடிக்கும் உன்னைப் போல பொறுக்கின்னு நினைச்சியா? அவர் பக்கா ஜென்டில் மேன். பிரபாவைப் பத்தி பேசும் தகுதியோ, அருகதையோ உனக்குக் கிடையாது." ஏளனப் பார்வையுடன் அவனை கடந்துவிட்டாள்.

ஆனால் அவன் வார்த்தைகள் மட்டும் ரணமாய் தகிக்க செய்தது. ஏனோ தன்னை அறியாமல் மனம் பிரபாவையும் அர்ஜூனையும் ஒப்பிட்டுப் பார்க்க கணவனின் மனமும் குணமும் தெள்ளத்தெழுவாக தெரிய ஏற்பதா? விடுப்பதா? குழம்புவது அவள் முறையாயிற்று.

மாமா, அத்தையுடன் நிவி ஆதி வாங்கிக் கொடுக்கச் சொன்ன ஆடையை அணிந்து கோவிலுக்குச் சென்றுவிட்டு வீடுவர, பக்கத்துவீட்டு வாண்டுகள், பலூன்கள், பெரிய கேக், இனிப்புகள், சாக்லேட், கூல்ட்ரிங்ஸ், தோரணங்கள் என வீடே பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு தயாராகியிருந்தது.

ஆதி இல்லாதது ஒன்று தான் குறையாகிப் போனது. நந்து களைப்பாக இருப்பதால் வரமுடியவில்லை என போனிலேயே வாழ்த்துக் கூறினாள். அனைவரும் வாழ்த்துச் சொல்ல குதூகலமாக கேக்கை வெட்டி அனைவருக்கும் கொடுத்தாள்

நிவி. பிரபாவின் பெற்றோர், நந்துவின் பெற்றோர் அனைவரும் பரிசுகள் கொடுக்க ஆதி அழைத்துவிட்டான்.

என்ன மச்சான் கேக் வெட்டியாச்சா?"

"இப்போதான் வெட்டி சாப்பிட்டுக்கிட்டு இருக்கோம். இரு நிவிகிட்ட கொடுக்கறேன்."

"ஆதி அத்தான் எப்படி இருக்கீங்க?" (ரெண்டு நாளைக்கு ஒருதடவை பேசினாலும் இவ இப்படி தான் பேச ஆரம்பிப்பா...)

"என்னடி பர்த்டே பேபி... என்ன பண்ற?"

"கேக் சாப்பிடறேன்..." (விஷ் பண்றானா பாரு...)

"இந்த கொண்டாட்டமெல்லாம் எதுக்குன்னு தெரியுமா? இன்னும் நீ சின்ன பெண் இல்லை. உன் டீன் ஏஜை கடந்துட்டன்னு நியாபகம் வச்சுக்கனும்கிறதுக்காக தான். இனி பொறுப்பா பெரிய பொண்ணா நடந்துக்கணும் புரியுதா?"

"ம்... புரியுது! புரியுது..."

"என்னடி ரொம்ப தான் அலுத்துக்கற..."

அதற்காகவே காத்துக் கொண்டிருந்தவள் போல,

'உங்களுக்கு கொஞ்சம் கூட என் மேல அன்பே கிடையாது ஆதி அத்தான். எப்போ பார்த்தாலும் சும்மா மிரட்டிகிட்டே இருக்கீங்க... பர்த்டே அன்னிக்கு கூட செல்லமா கூப்பிடக் கூடாதா? எப்போ பார் வாடி போடின்னு... இன்னும் ஒரு விஷ்

பண்ணல... ஒரு முத்தம் கொடுக்கல... நீங்க சுத்த வேஸ்ட் ஆதி அத்தான்." பொரிந்து கொட்டினாள்.

ஆதி அசந்து போனான். இவளுக்கு இப்படியெல்லாம் பேச தெரியுமா? இந்த எதிர்பார்ப்பெல்லாம் இருக்கா...? என்னவோ முத்தம்னு சொன்னாளே இயல்புக்கு திரும்பியவன்,

"பட்டுக்குட்டி விஷ் பண்ணலன்னு சொன்ன சரி. அது என்ன முத்தம் கொடுக்கலன்னு சண்டை போடுற?"

"பாருங்க... துபாய் போனதும் உங்களுக்கு எல்லாமே மறந்து போச்சு... இப்படியே போனா என்னையும் மறந்துடுவீங்க... நீங்க வேலையும் பார்க்க வேண்டாம்... என்னை விட்டு பிரிஞ்சு இருக்கவும் வேண்டாம். ஊருக்கு வாங்க...

நான் உங்கள எவ்வளவு மிஸ் பண்றேன் தெரியுமா? நீங்க தான் என்னைவிட்டு சந்தோசமா இருக்கீங்க... இம்சைன்னு கூப்பிடும் போது கூட விஷ் பண்ணி நெற்றில முத்தம் கொடுப்பீங்க... இப்போ ஒண்ணுமே பண்ண மாட்டேங்கிறீங்க..." கோபம் சிணுங்கலாய் மாறிப் போனது. மனம் துள்ளாட்டம் போட,

"பிறந்த நாள் வாழ்த்துக்கள் பட்டுக்குட்டி! அத்தானுக்கும் சேர்த்து நீயே கேக்கும், சாக்லேட்டும் சாப்பிடு. டிரஸ் பிடிச்சுருக்காடி? இங்கிருந்து உனக்கு என்ன வாங்கிட்டுவர? ஒன்னென்ன ஓராயிரம் தர எனக்கும் ஆசை தான் இப்போ

இதை வாங்கிக்கோ... நேரில் வந்து நிறைய தரேன்..." என்றவன் கைபேசி வழியாக சில முத்தங்களை அனுப்பிவைக்க சந்தோசம் பிடிபடவில்லை நிவிக்கு.

"தேங்க்ஸ் ஆதி அத்தான். எனக்கு எதுவும் வேண்டாம் நீங்க சீக்கிரம் வாங்க போதும். நானும் எவ்வள்வு நாள் தான் பயப்படாத மாதிரியே நடிக்கிறது? நிறைய நாள் தூக்கமே வரமாட்டேங்குது தெரியுமா? உங்க காண்டிராக்ட் எப்போ முடியும்? சீக்கிரம் வர முடியாதா?"

(என்னடி தங்கம் இப்படி படுத்துற? இப்பவே என்னால கட்டுப்படுத்த முடியல... சில நேரம் கொஞ்சம் ஓவராய்டுது. இப்போ நீ பெரிய பெண் தாங்கிற மாதிரி மனசு சண்டித்தனம் பண்ணுது. பக்கத்தில் இருந்தால் ரொம்ப கஷ்டம்டி.

உன் படிப்பு முடியட்டும் நேர கல்யாணம் தான். கல்யாணத்திற்கு பிறகு ஆபிஸுக்காவது போக விடுவியா இல்ல அப்போதும் மிஸ் யூ பாட்டு பாடுவியா? அவன் தன்னுள் மூழ்கி இருக்க இங்கே நிவி ஊரை கூட்டிவிட்டாள்.

"ஆதி அத்தான்... ஆதி அத்தான்..."

அடுத்து கைபேசி பெற்றோரிடம் கை மாறியது. அரைமணி நேரத்திற்குப் பிறகு மிண்டும் பிரபாவிடமே வர,

"என்ன மச்சான், நிவியை ரொம்ப மிஸ் பண்றியோ?"

"நிறைய..." சத்தமில்லா வார்த்தை அவன் வேதனையை நண்பனுக்கு எடுத்துரைத்தது.

"போட்டோஸ் அனுப்பறேன் மச்சான் பாரு... சம்பாதிக்க ஆரம்பிச்சதும் நிவிக்கு ஏதாவது பண்ணனும்னு தானே இந்த ஏற்பாடு?" குறும்பு கூத்தாட கேட்ட நண்பனுக்கு,

"என் மனசை புரிஞ்சுக்கிட்டவன் நீ மட்டும் தான்டா! நண்பேன்டா..." வெடிச்சிரிப்புடன் இணைப்பு துண்டிக்கப் பட்டது.

சம்பாதிக்கிற காசெல்லாம் போனுக்கே போகுது என்ன பண்ண? இந்த பட்டுக்குட்டி அநியாயத்துக்கு படுத்துதே... செல்ல அலுப்பு தோன்றினாலும் அவளோடு பேசுவதை குறைக்கவில்லை ஆதி.

தங்கம் என்னை தேடுதா...? இது தான்டி காதல். காண்டிராக்ட் முடிவதற்குள் என் மீதான காதலை புரிந்து கொள்வாயா? (தம்பி ஓவரா பொங்காத! தனியா படுக்க பயந்து தான் உன்னை தேடுறா இது காதல் இல்ல பெரியவங்க சொல்றோம் நம்பு) அதற்கும் பெரிய ஆப்பு காத்திருப்பது தெரியாமல் சிந்தித்துக் கொண்டிருப்பதே ஆதியின் வேலையாய் போனது தான் மிச்சம்.

அர்ஜுன் ஏற்படுத்திய காயம் மனதை ரணமாக்க, பழைய நினைவுகள் குறிப்பாக தான் ஏமாந்த நிகழ்வுகள் பாடாய்படுத்த… இரண்டு நாட்களுக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

இத்தனை நாள் குடிக்காமல் இருந்தவளுக்கு இன்று குடித்தே ஆக வேண்டும் போல் தோன்ற, ஒவ்வொரு தோழிக்கும் 'போன்' செய்ய , அவர்களோ ஆளுக்கொரு காரணம் சொல்லி அவளை தவிர்த்தனர்.

உண்மையான காரணம், இனி பவானியோடு கும்மாளம் போட்டால் அவர்களது பெற்றோரிடம் சொல்லி விடுவேன் என்ற பிரபாவின் மிரட்டல் தான். ஆகக் கடைசியில் பிரபாவையே கம்பெனிக்கு அழைக்க எண்ணி தொடர்பு கொள்ள, இரு முறையும் இணைப்பைத் துண்டித்தான்.

(என்னோடு எங்கும் வரமுடியாது, என் உறவுகளை மதிக்க முடியாது... நான் மட்டும் ஏன் உடனேயே இவளுக்காக ஓடவேண்டும்? அப்படி என்ன தலை போகும் அவசரம்? என் அழைப்புகளை ஒருமுறை கூட எடுப்பதில்லை. இன்று அந்த வலியை உணரட்டும்.)

"ஏதாவது முக்கியமான 'கால்' என்றால் பேசு பிரபா! டீ எடுத்துக்கோ" என உபசரித்துக் கொண்டிருந்தாள் ஆறு மாத கர்ப்பிணியான நந்தினி. ஆம்! தனது தோழி நந்தினியைக் காண, தங்கையையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தான் பிரபா.

"விஜய் எங்க நந்து?"

"நேற்று தான் கான்பெரென்ஸ்காக மும்பை போனார்! ஆதி 'போனே' பண்ணலயே பிரபா! ரொம்ப பிஸியாகிட்டான் போல!" என்றவள் வருத்தம் உணர்ந்து,

‘‘இப்பொழுது உன்னை கண்ட நேரத்தில் தொந்தரவு செய்யக் கூடாதென மங்கா ஆன்ட்டி சொன்னார்களாம். அதான் அவன் கூப்பிடும் நேரம் நீ தூங்கி கொண்டிருப்பாயோ என தயங்கியிருப்பான். மெசேஜ் போடு, உடனே கால் பண்ணுவான்!" என்றான் ஆறுதலாக. நிவி, ராணியம்மாவிடம் கதையளக்க, நண்பனின் வாட்டம் கண்டு,

"பிரபா, பவானி உன்னிடம் நல்லா நடந்துக்கிறா தானே? எதுவும் பிரச்னை இல்லையே?" என்றவள் அக்கறையில் மனம் நெகிழ்ந்தவன்,

"எந்த பிரச்சனையும் இல்லை. அம்மா இல்லாமல் வளர்ந்தவ இல்லையா... அதான் அடமும், பிடிவாதமும் கொஞ்சம் அதிகம்! மத்தபடி ஓகே தான்." என சிரிக்க முயன்றவனின் வேதனையை உணர்ந்தாள். அவளும் ஒரு காலத்தில் விஜயேந்திரனிடம் வதைபட்டவள் தானே!

கணவன் மனைவி விஷயத்தில் மூக்கை நுழைப்பது அநாகரிகம் என நினைத்து அவள் ஒதுங்கிக்கொள்ள, தோழியிடம் மனைவியை விட்டுக்கொடுக்க முடியாமல் அவனும் அமைதி காத்தான்.

கூப்பிடும் போது போகாமல் இருந்து பிரபா வில்லங்கத்தை விலை கொடுத்து வாங்குவானோ?

# அத்தியாயம் 28

"விஜய் இப்போ உன்னை நல்லா பாத்துக்கறார் இல்லையா நந்து?"

"முடியல... ஓவர் கவனிப்பு. பிடித்து தள்ளாத குறையா நான் தான் இந்த டிரிப்புக்கு அனுப்பி வச்சிருக்கேன். அத்தை அதற்கும் மேல்... அம்மா ரொம்ப பாவம் பிரபா.

வளைகாப்பு முடிந்ததும் நான் அங்கு இருப்பேன்னு நினைச்சுகிட்டு இருகாங்க. இவங்க ரெண்டு பேரும் நான் இங்கு தான் இருக்கணும்னு சொல்லறாங்க... என்ன பண்றதுன்னு தெரியல?

விஜயை கன்வின்ஸ் பண்ணிடுவேன். பட் அத்தை இந்த பேபி அவங்க கணவரோட மறுபிறவிங்கிற மாதிரி ஃபீல் பண்றாங்க. அவங்கள சமாளிக்கிறது கஷ்டம்.

அம்மாகிட்ட சொன்னா கோபப்படறாங்க. பிரசவத்துக்கு கூட அனுப்பமாட்டாங்களான்னு என்னோடு ஒரே சண்டை... நீ கொஞ்சம் பேசு பிரபா.

இந்த அரண்மனைக்குள்ளயே ஹாஸ்ப்பிட்டல் வச்சிருக்காங்க. என்னை எப்படி வெளி இடத்துக்கு

அனுப்புவாங்க. அத்தை அம்மாவையும் அப்பாவையும் இங்கு வந்து என்னோடு இருக்க சொல்றாங்க.

நான் பேசிட்டேன் அப்பா கூட ஓகே சொல்லிட்டாங்க. அம்மாக்கு இஷ்டமில்லை. எனக்கு என்ன பண்றதுன்னு தெரியல... சம் டயம்ஸ் அம்மாவை தேடுது...." தோழியின் நிலை உயர்ந்தவனாய்...

"ஆன்டிகிட்ட நான் பேசுறேன் நந்து. நீ இதையெல்லாம் நினைச்சு கவலைப்பட்டுக்கிட்டு இருக்காத. வளைகாப்பில் இருந்து பாப்பாக்கு மூணு மாசம் ஆகும் வரை ஆன்டியும், அங்கிளும் உன்னோடு இருந்தால் போதுமா?' சிரிப்புடன் வினவ,

"செய்டா... ரொம்ப சந்தோஷப்படுவேன்..." உரிமையோடு நண்பனின் தோள் சாய்ந்து கொண்டாள்.

தூரத்தில் இருந்து இவர்களை பார்த்துக் கொண்டிருந்த ராணியம்மாவுக்கு இப்போது அண்ணன் தங்கையின் பாசமான உறவாக தான் தெரிந்தது. நிவி அவர்களது அரச வம்சத்து கதையை கேட்டு கூடுதலாய் ராணியை குளிர வைத்தாள் என்று தான் சொல்ல வேண்டும்.

"உடம்பை பார்த்துக்கோ நந்து! நிவியை வீட்டில் விட்டு அப்பா, அம்மாவுடன் கொஞ்ச நேரம் இருந்துட்டு போகனும்!" என விடைபெற்றான்.

மீண்டும் மனைவியின் அழைப்பை சட்டை செய்யாமல் பெற்றோர் இல்லம் நோக்கி சென்றவன், அவர்களுடன் நேரத்தை கழித்துவிட்டு, இரவு சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு மாமனார் வீட்டிற்கு வர,

இந்த பதினைந்து நாளாய் நல்ல பிள்ளையாய் 'பப்பு'க்கு போகாமல் வீட்டில் இருந்த மனைவியை மாலை முதல் காணவில்லை எனும் விஷயமறிந்து தானாகவே அவளைத் தொடர்பு கொண்டான்.

அவளது கைபேசி பலமுறை அலறிய பிறகே எடுக்கப்பட்டது.

"ஹலோ" என்ற ஆண் குரலைக் கேட்டு திடுக்கிட்டவன், யாரென விசாரிக்க, 'நிர்வாணா'வின் பார் அட்டெண்டன்ட், பவானி அதிகமாக குடித்து மட்டையாகி விட்டதாகச் சொன்னான்.

'கடவுளே! அவள் கால் பண்ணும் போதே எடுத்திருக்கணும், எடுக்காமல் விட்டது தவறாகிவிட்டதே!' என நொந்தபடி 'நிர்வாணா' சென்றவன், சுத்தமாக மயங்கியிருந்தவளை கைகளில் ஏந்த, அட்டெண்டன்ட் அவளது கார்டை கொடுத்து,

‘‘மேடம் மட்டுமே இருபதாயிரத்துக்குக் குடித்தார்கள். ரெண்டு அயிட்டம் புதுசு. கொஞ்சம் ஓவர் டோஸ் கூட. சீக்கிரம் தெளியாது" என்றபடி கார் கதவை திறந்து விட்டான்.

தங்களது அறைக்கு தூக்கி வந்தவன் ஷவரின் அடியில் நிறுத்த, கொஞ்சம் கொஞ்சமாக உணர்வு பெற்றவள்,

"ஏய்! லூசு, என்ன பண்ற? எனக்கு குளிருது!" என அருகில் நின்றவனோடு ஒண்டினாள்.

இன்னும் பத்து நிமிஷத்திற்கு நீ இங்கு தான் நிற்கணும். நகர்ந்த கொன்னுடுவேன்! " என மிரட்டியபடி, லெமன் ஜூஸ் கொண்டு வந்து கொடுக்க,

"லூசாடா நீ! இதை குடிச்சா போதை இறங்கிடும்!" என படபடக்க.

" அதற்காகத் தான் கொடுக்கிறேன். பேசாமல் குடி!" என மிரட்டியவனின் மார்பில் குத்த, அவள் மூக்கை பிடித்துக் கொண்டு வாயில் ஊற்ற, வேறு வழியின்றி குடித்து முடித்து வாந்தியெடுத்தாள்.

ஆதரவாக அவள் தலை தாங்கிக் கொண்டவன், மீண்டும் ஷவரில் நிறுத்த,

‘‘போதும் பிரபா, குளிருது!" என வெடவெடக்கத் தொடங்கியவளின் மீது டர்க்கி டவலை கட்டி ஈரத்தை உறிய செய்தவன், அவளது சட்டை பட்டன்களைக் கழட்ட,

"ஏய்! என்ன பண்ற? நோ... பிரபா! இட்'ஸ் டூ பேட்... கையை எடு!" எனக் குழறியவளால், அவனது செயலைத் தடுக்க முடியவில்லை. குடி போதையில் இருப்பவளை மனைவியாக

அல்லாமல் குழந்தையாக பார்க்க வேண்டும் என மனதில் உருப்போட்டபடி இயன்றவரை அவளைப் பார்ப்பதை தவிர்த்து நைட் வேரின் சட்டையை போட்டான்.

"விடு! நானே போட்டுக்குவேன்!" என அவனைத் தள்ளியவள், பட்டன் போட முடியாமல் தடுமாற, அதை ரசித்துச் சிரித்தவன், உதவிக்கு வந்தான்.

"ஏன் பைஜாமாவை எடுத்த? நைட் கவுனை எடுக்க வேண்டியது தானே?" என சண்டைக்கு வந்தவளால் நிலையாக நிற்க கூட முடியவில்லை. தன் தோளில் சாய்த்த படி ஜீன்ஸில் கை வைக்க,

"ஹேய்! பிரபா இடியட்... கையை எடு. கொன்றுவேன்! டோன்ட் டச்!" என்றாள் சீறலாய்.

"பாண்ட்ஸ் ஈரமாயிருக்கு வனிம்மா... இப்படியே படுத்தா ஜுரம் வந்துடும். நான் உன்னை பார்க்க மாட்டேன். நீயே கழட்டி மாத்திக்கோ! பிடிக்கலன்னா விழுந்துடுவ! புரிஞ்சுக்கோ வனிம்மா!" என்றவனின் கனிவில் மறுக்க முடியாமல், ஒரு வழியாக நைட் பாண்ட்ஸ்-ஐ மாற்றிக் கொண்டாள்.

ஈர உடைகளை தனியாக எடுத்து வைத்தவன், தனது உடைகளையும் மாற்றிக் கொண்டு வர, அங்கே அவன் மனைவி கட்டிலின் குறுக்காக சயனித்திருந்தாள்.

'இவளைத் தூக்குவதற்காகவே நான் கூடுதலா சாப்பிடணும் போல!' என முணுமுணுத்தவன், மெல்ல தூக்கி வசதியாக படுக்க வைத்தான். சட்டென கண் விழித்தவள்,

"ஏய்! பிரபா... நீ என்னைப் பார்த்த தானே?" என்றாள் முறைப்பாக.

"இல்ல, பாக்கல..."

"பொய் சொல்ற நீ பாத்த!"

" நிஜமாவே பாக்கல ..."

" நீ பாத்த! நீ பாத்ததை நான் பாத்தேன்!"

(இதென்ன குஷி ஜோதிகா மாதிரி ஆரம்பிச்சுட்டாளே... உன்னை உசுப்பேத்தி பார்க்கிறா பிரபா… அசந்து மறந்து கூட பார்த்தேன்னு சொல்லிடாத! காளி அவதாரம் எடுத்துருவா!) என எச்சரிக்கையாக,

"சத்தியமா தப்பா பார்க்கல வனிம்மா!" என்றான் குழைவாக.

"அப்போ, நீ பார்த்த அப்படித் தானே? நீ பார்த்ததை தவறில்லைன்னும் சொல்ற…?" என்றவள் கேள்வியில் திகைத்தவன்,

"நான் உன் புருஷன்டா... பார்த்தாலும் தப்பில்லை. பட் நான் பார்க்கல! நம்புமா!" என்றவனது கண்களை ஊடுருவி,

"ஏன் பார்க்கல? நான் நல்லா இல்லையா?அந்த அர்ஜுன் சொன்னது போல் நான் மொக்க பிகரா?" எனவும்,

"அந்த கடங்காரனை மறக்கவே மாட்டியா பவானி?!" என்றான் பரிதவிப்புடன்.

"சொல்லு பிரபா... உனக்கும் என்னை பிடிக்கலையா? அதனால் தான் பார்க்கலையா?" என்றவள் வேதனை புரிய,

"போடி மக்கு! நீ தேவதை டீ , உன் பேசும் கண்ணும், குண்டு கன்னமும், சிவந்த உதடும், பால் போன்ற மேனியும், சங்கு கழுத்தும், வழவழப்பான தோள்களும், ஆளை அசரடிக்கும்..." என்பதோடு நிறுத்திக் கொண்டவன்,

"நீ பேரழகி டீ!" என்றான் அவள் முகம் வருடி. என்றும் இல்லா திருநாளாய், அவன் மடியில் படுத்து,

"உனக்கு என்னை பிடிக்குமா பிரபா?" என்றவளது தளிர் விரல்கள் அவன் கழுத்தில் இருந்து கீழ் நோக்கி பயணிக்க உணர்வுகளை சிரமப்பட்டு அடக்கியவன்... மார்பை வருடிய கரத்தை இறுகப் பற்றி, விழியோடு விழி கலக்க,

"ம்... பிடிக்கும்! உன்னை ரொம்ப பிடிக்கும்டி பார்பி!" ஏதேனும் செய்துவிடுவோமோ என பயந்தவனாய் இருகரத்தையும் அவள் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டான்.

"ஹா ஹா ஹா... உனக்கு என்னை பிடிக்கும்ன்னு எனக்கு தெரியுமே... எப்படின்னு கேளு... கேளு..."

"எப்படி?" சிரிப்புடன் அவள் நெற்றி வருடி கேட்க,

"நீ வனிமான்னு கூப்பிடும் போதே தெரியும்... பவானி கிளவர் கேர்ள் தெரியுமா?"

"ஆஹா! அதிமேதாவியாச்சே..." என கன்னம் கிள்ளி சிரித்தவனின் கனிந்த கீழுதடை பற்ற, எதிர்பாராத தீண்டலில் தாக்கப்பட்டவனாய் விழிக்க,

"சிரிக்காத பிரபா... உன் சிரிப்பு என்னை டிஸ்டர்ப் பண்ணுது. நீ சொல்லு... நான் புத்திசாலி தானே? அப்புறம் எப்படி அந்த அர்ஜூன் கிட்ட ஏமாந்தேன்?"

"கடவுளே அதில் இருந்து மீளவேமாட்டாயா வனி? எங்கு சுத்தியும் அவனிடம் தான் வரணுமா?" கடுப்பாகவே கேட்க...

"அர்ஜூன் மோசம்... நீ நல்லவன்டா... ஐ லவ் யூ பிரபா!" என இடையோடு அவனைக் கட்டிக்கொள்ள, மனைவியின் முதல் அணைப்பில் திகைத்தவன்,

"இந்த குடிரகாரி நிஜமாவே சொல்றாளா? இல்ல போதையில் உளறுறாளான்னு தெரியலையே..." என எண்ணியபடி 'உம்' கொட்ட,

"பிரபா... ஐ லவ் யூ சொன்னா... திரும்ப சொல்லணும். .. அது தான் குட் மேனர்ஸ்! நீயும் சொல்..." என சினுங்க,

"இது வேறயா?" என திணறியவன்,

"மீ டூ !" எனவும்,

"அப்படி இல்லடா... நீ என்னை கொஞ்சுவாயே... எப்படி? ம்... அம்மு, புஜ்ஜி... பாப்பா... இல்ல... ஆஹ்! வனி... வனிம்மா... ஐ லவ் யூடா சொல்!"

"ஏண்டி என்னை படுத்தி எடுக்கிற?" என விழி பார்த்து முதல் முறையாக,

"ஐ லவ் யூ வனிம்மா!" என நெற்றியில் இதழ் ஒற்றினான்.

"டேய் நல்லவனே... உனக்கே என்னை பிடிச்சிருக்கு, பின்னே ஏன்டா அந்த மாங்கா மடையன் அர்ஜுனுக்கு என்னைப் பிடிக்கல? ஏன்டா ... என்னை ஏமாத்தினான்? நான் அவனை எவ்வளவு லவ் பண்ணேன் தெரியுமா? சொல்லுடா... நான் எங்க தப்பு செய்தேன்? அவன் எப்படி என்னை ஏமாற்றினான்? ..." என மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்லி புலம்பத் தொடங்க,

(ஆரம்பிச்சுட்டா !) என எரிச்சல் தோன்றிய போதும், அவள் நிலையறிந்து,

"வனி! போதும்... தூங்கு. எல்லாத்தையும் மறந்துடு வனிம்மா... வனி நிறுத்து... ஸ்டாப்!" என அவன் சொல்லிக் கொண்டே இருக்க, அவளோ நிறுத்தாமல் புலம்பிக் கொண்டிருந்தாள்.

ஒரு கட்டத்தில், இவள் ஓயமாட்டாள் எனத் தோன்றிவிட,

"பவானி!" என்ற அதட்டலில் அரண்டு அவன் முகம் பார்க்க,

"நீங்க பண்ணினதுக்கு பேர் லவ்வா? அவன் பிசினஸை உயர்த்திக்க உன்னை யூஸ் பண்ணிக்கிட்டான். நீயும் டெண்டர் அமவுண்டை சொல்லி இரண்டு ப்ரொஜெக்ட்டை கை நழுவவிட்ட... அவனோடு சுற்றிய ஆறு மாதத்தில், பதினைந்து லட்ச ரூபாய் செலவு பண்ணியிருக்க...

உனக்கு இணையான வசதியோடு ஒரு காதலன் இருக்கான்னு பெருமையாக சொல்லிக்க ஆசைப்பட்டு, அவன் பின்னாடி சுத்தின.... உங்க பிசினஸை இழுத்து மூட திட்டம் போட்டு அவன் உன்னோடு சுத்தினான். இது ஒன்னும் பெரிய அமரகாதல் இல்ல. இப்படியே உருகி, உருகி என் நிம்மதியையும் குலைக்காதே!" என்றான் கடுப்புடன்.

(சுத்தினேனா...? என் காதலை பத்தி என்ன தெரியும் உனக்கு? நான் அவனை எவ்வளவு உண்மையா விரும்பினேன்னு எனக்கு தான் தெரியும். நீ என்ன பெரிய யோக்யனா?)

தன் காதலை தவறாக சொல்லிவிட்டானே என்று சினந்தவளுக்கு இவ்வளவு நேரம் நல்லவனாக தெரிந்தவன், இப்போது வேறு மாதிரியாக தெரிந்தான்.

"ஆமா, அவரவருக்கு ஒரு தேவை இருந்தது! உன் தேவை என்ன பிரபா? எதற்காக என்னை கட்டிக்கிட்ட? கோடிக்கணக்கில்

மதிப்பு பெரும் என் சொத்திற்காக..." என்றவள் ஏளனப் பார்வையை உணர்ந்தவன், சட்டென மடியில் படுத்திருந்தவளை கீழே தள்ளிவிட்டு எழுந்துவிட்டான்.

"சீ! என்ன பொண்ணுடி நீ! நாக்கா... இல்ல தேள் கொடுக்கா? அன்று, உடல் சுகத்திற்கு அலைறேன்ன... இன்று சொத்திற்காக கட்டிக்கிட்டேங்கிற.... என் மனம் படும் பாடு புரியலையா?!" என்றான் வேதனையோடு.

"வேறொருவனோடு சுற்றியவளை உன்னால் எப்படி ஏற்க முடிந்தது? கொஞ்சம் அப்படி இப்படி இருந்தாலும் சொத்து நிறைய இருக்குன்னு தானே?" என முடிப்பதற்குள்ளாகவே அவன் கை அவள் கன்னத்தில் இடியாய் இறங்கியது. ஒரே அறையில், போதை சுத்தமாக இறங்கிப் போனது பவானிக்கு.

இவளைப் போய் காதலித்தேனே... என் புத்தியை... உன் மீது காதலும் இல்ல ஒரு மண்ணாங்கட்டியும் இல்ல நீ எனக்கு வேண்டாம்... வெகுண்டவன்,

"கொன்டுவேன்டி! இனி ஒரு வார்த்தை பேசின... பல்லைத் தட்டி கையில் கொடுத்துடுவேன். உன் அப்பா, என்னை படிக்க வைத்த ஒரே நன்றிகடனுக்காகத் தான் உன்னை கட்டிக்கிட்டேன். நீ பெரிய அழகின்னோ பணக்காரிங்கிறதுக்காகவோ இல்லை! உன்னைப் போன்ற முட்டாளை கட்டியிருக்கக் கூடாது.

உனக்கும் அன்பாக இருக்கத் தெரியாது. அன்பாக இருப்பவனையும் நம்பத் தோன்றாது. எந்தக் காலத்திலும் நீயும் நிம்மதியா இருக்கப் போவதில்ல... என்னையும் வாழவிடப் போவதில்ல. இந்த திருமணம் நம் இருவருக்குமே ஆயுள் தண்டனை தான் !" எனத் தலையணையை எடுத்துக்கொண்டு வராண்டாவிற்கு போய்விட்டான்.

காலை, அவள் கண் விழிக்கும் போது அவன் அலுவலகம் சென்றிருந்தான். மெல்ல எழுந்து அமர்ந்தவளுக்கு தலை கிறுகிறுத்தது. கூடவே, வலிக்கவும் செய்தது. வெகு சிரமப்பட்டு எழுந்தவள், பதறி அமர்ந்துவிட்டாள்.

"நான் ஜீன்ஸ் தானே போட்டிருந்தேன்? இது எப்போ... எப்படி மாற்றினேன்?" எனத் தலையை பிடித்துக் கொள்ள, அவன் அறைந்தது தவிர வேறொன்றும் ஞாபகம் வரவில்லை.

அவளாகவே, கணவன் தன்னிடம் அத்து மீறியதாகவும், அவனுக்கு உடன்படாததால் அடித்திருக்கிறான் என்றும் நினைத்துக் கொண்டு, அவனைத் தொடர்பு கொள்ள, எப்பொழுதும்,

"சொல்லுமா..." என்பவன் "ம்!" என்றதோடு நிறுத்திக்கொண்டான்.

குற்ற உணர்ச்சியில் தான் இப்படி பேசுகிறான் என எல்லாவற்றையும் தனக்கு சாதகமாகவே யோசித்தவள்,

"நைட் என்னை என்ன செய்தாய்?" என்றாள் ரௌத்திரமாக.

"ம்... ரேப் பண்ணேன்!" என வில்லங்கமான அவனது பதிலில் கோபம் தலைக்கேற,

"பொருக்கி! மனுஷனா நீ? சுயநினைவு இல்லாத பெண்ணை அடித்து, பலாத்காரம் பண்ணியிருக்கியே! உன்னை... சீ! இரு போலீசில் கம்ப்ளெயிண்ட் பண்ணி உள்ளே போடறேன்!" என ஆங்காரமாய் கத்திவிட்டு வைத்துவிட்டாள்.

"அடித்ததாவது நினைவிருக்கிறதே!" எனத் தனது வேலைகளில் கவனத்தை செலுத்தினான். மாலை ஐந்து மணியைப் போல, அவனது தொலைபேசி சினுங்க... பவானியின் குடும்ப வைத்தியர் தான் பேசினார்.

" பிரபா... உங்களுக்கும், பவானிக்கும் என்ன பிரச்சனை? அந்தப் பெண்ணை நிம்மதியா இருக்க விடமாட்டீங்களா? படித்தவர் தானே நீங்க? திருமணத்திற்கு முன் அவ எப்படி இருந்தா என்ன? தாயில்லாத பெண், ஏமாற்றப்பட்டிருந்தால் கூட பரவாயில்லன்னு ஏத்துகிறது தான் பெருந்தன்மை. நீங்க அவளை விர்ஜினிட்டி டெஸ்ட் எடுக்க சொல்லியிருக்கிங்க...

சிவா, உங்களைப் பத்தி எவ்வளவு உயர்வாக சொன்னான் தெரியுமா? இந்த விஷயம் மட்டும் அவனுக்குத் தெரிந்தால்?!... பாவம் மகளின் வாழ்க்கையை கெடுத்த குற்ற உணர்விலேயே செத்துடுவான்.

என்ன மனிதன் நீங்க ? உங்களிடமிருந்து நான் இதை எதிர்பார்க்கல...!" என எண்ணையில் போட்ட கடுகாய் வெடிக்க, அவனோ எந்த அதிர்வுமின்றி,

"டெஸ்ட் எடுத்துட்டீங்களா?" என்றான் கண அக்கறையாக.

"யூ இடியட்! எடுத்தாச்சு... அவள் விர்ஜின் தான்! இனியாவது அவளோடு குடும்பம் நடத்தலாம் தானே?" என்றவரின் கோபம் மனதை வருத்த,

"ரிசல்ட்டை அவகிட்ட சொல்லுங்க! இனியாவது என் மீது நம்பிக்கை வருதான்னு பார்க்கிறேன்!" என துண்டித்துவிட்டான்.

"என்ன பேசுறான் இவன்?" எனக் குழம்பிப் போனார் மருத்துவர். எனினும், பவானியை உள்ளே அழைத்து,

"இதோ உன் டெஸ்ட் ரிப்போர்ட். பாசிட்டிவ் தான்! உன் புருஷனிடம் காட்டு!" என்றார் எரிச்சலுடன்.

"பாசிட்டிவ்வா! யாருக்கு? என்னை ரேப் பண்ணிட்டானா?" எனப் பதற,

"பவானி! நீ சொல்வது புரியல... பதட்டப்படாதே! நீ இன்னும் கன்னி என்பதைத் தான் அப்படி சொன்னேன். உன் புருஷனுக்கு கால் பண்ணி நல்லா திட்டிவிட்டேன். இனி உன்னிடம் வாலாட்டமாட்டான்! ஏதோ ரேப்ன்னு உளறினாயே என்ன?" (அப்பாடா.... ஒரு வழியா நிதானத்துக்கு வந்தீங்களே டாக்டரம்மா!)

"ஐயோ! பிரபாவை ஏன் திட்டினீங்க? அவன் டெஸ்ட் எடுக்க சொல்லலை. நான் தான்… நேற்று ராத்திரி கொஞ்சம் ஓவராயிடுச்சு, என்ன நடந்துச்சுன்னு ஞாபகம் வரலை. டிரஸ் மாத்தியிருந்தது. எப்படின்னு தெரியலை… அவனுக்கு கால் பண்ணி கேட்டேன். ரேப் பண்ணினேன்னு சொன்னான். அதான்..."

அவ்வளவு தான். வேதாளம் மரமேறிய கதையாய்,

"அறிவிருக்கா உனக்கு? இன்னும் குடியை விடலையா? பெண் தானே நீ? உன் அப்பன் என்ன லட்சணமா உன்னை வளர்த்திருக்கான்! ஏழை என்றால் உங்களுக்கு அவ்வளவு இளக்காரமா? அப்பனும், மகளும் சேர்ந்துக்கிட்டு அந்த பையன் வாழ்க்கையை கெடுத்துட்டிங்க.

புருஷன் தானே... அவனுக்கில்லாத உரிமையா? இதுக்கு எவளாவது விர்ஜினிட்டி டெஸ்ட் எடுக்க வருவாளா? ச்ச... நீ அவனை சந்தேகப்பட்டது தெரியாம, அவன் உன்னை சந்தேகப்பட்டதா நினைத்து, நானும் அந்த பையனைக் காயப்படுத்திட்டேனே!

பெண்பிள்ளைக்கு ஓவரா செல்லம் கொடுக்காதே. மறுகல்யாணம் பண்ணு… இல்ல ஊட்டி கான்வென்டில் விடு ஸ்ட்ரிக்ட்டா இருப்பாங்கன்னு படித்தபடித்து சொன்னேனே, எங்கே கேட்டான்!?

என் மகளை பிரிந்து இருக்க முடியாதுன்னு உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியிருக்கான். நான் சொன்ன எதைத்தான் அவன் கேட்டிருக்கான்.

உன் அம்மா ஒரு இதய நோயாளி. அவளை கட்டாதேன்னு அடித்துக் கொண்டேன். ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும்ன்னு ஒற்றைக்காலில் நின்றானே, மகராசி, பிரசவத்தில் போய் சேர்ந்துட்டா. அவள் ஞாபகத்திலேயே அவன் வாழ்ந்துட்டான். நீ இப்படி தருதலையா போய்ட்டியே!" என ஆதங்கப்பட்டார் சிவானந்தனின் பள்ளித் தோழியும், குடும்ப மருத்துவருமான கீதா.

‘‘கல்யாணமாகி இத்தனை நாளாகியும், அவனுக்கு பொண்டாட்டியா நடந்துக்காமல் இப்படித் தான் கூத்தடிக்கிறியா? அந்த அர்ஜுனோடு ஊர் சுற்றியதெல்லாம் போதாதா? இனியாவது இவனோடு இணக்கமா குடும்பம் நடத்தக் கூடாதா? புருஷனை கொண்டாடிய சாந்தியின் மகளா நீ?

இல்ல அவள் இறந்த பதட்டத்தில் மருத்துவமனையில் உன்னை மாற்றிவிட்டார்களா?" என மூச்சிரைக்க கத்தியவர், ஒரு மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டார்.

"இன்னும் ஏன் நிற்கிறாய்? போ… உன் புருஷனிடம் மன்னிப்புக் கேட்டு உருப்படியா குடும்பம் நடத்துற வழியைப்

பாரு... கண்ட தருதலையையும் நினைச்சுகிட்டு நல்லவனை நோகடிக்காதே. பிறகு இதுவும் நிலைக்காது!" என விரட்டினார்.

அவனை உள்ளே போட நினைத்து ஆதாரம் தேடி வந்தவள், படு சேதாரமாக வீடு போய் சேர்ந்தாள். தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்த தந்தை மீது பாசம் தோன்ற, தானாகவே அவரிடம் சென்று,

"அப்பா!" என அவர் கரம் பற்றிக்கொள்ள,

"பேபிம்மா! வெளியில் போயிட்டு வர்றியா? மாப்பிள்ளை வர லேட்டாகுமா?" என இதமாக விசாரிக்க, தான் ஒரு நாள் கூட இவரோடு இவ்வளவு சினேகமாக பேசியதில்லையே என நொந்துகொண்டாள்.

"ம்... நீங்க... நீங்க மாத்திரைகள் எல்லாம் ஒழுங்கா எடுத்துகிறீங்களா?" என்றாள் முதன்முதலில் பரிவோடு.

"அதெல்லாம் கரெக்ட் டையமுக்கு போட்டுவிடுவேன்டா... மாப்பிள்ளை தான் 'போன்' பண்ணி மூன்று நேரமும் விசாரிப்பாரே... ரொம்ப நல்ல பையன் இல்லடா?" என்றவரின் அன்பில் நெகிழ்ந்தவள், மீண்டும்

"ம்!" கொட்டினாள்.

"என் பெண்ணை கட்டிக்கிறியான்னு கேட்டப்போ மறுவார்த்தை பேசாம, 'சரிங்கய்யா' ன்னு தான் சொன்னார்! இருந்தும் சின்ன கலக்கம், அர்ஜுன் விஷயம் தெரிந்தும்

சட்டென சம்மதித்துவிட்டாரே, ஏன்னு கேட்க... கொஞ்சமும் யோசிக்காமல், 'அவங்க உங்க மகள் என்பதால்!' என பதில் சொன்னார்.

நான் ஆடிப் போயிட்டேன்டா! சின்ன வயசில் இருந்து அவர் படிப்பு செலவை தான் நாம செய்தோம். அதற்கு இவ்வளவு நன்றிக்கடன்.

கேம்பஸ் இன்டெர்வியூவில் கிடைத்த வேலையை விட்டு, நான் கேட்டுக் கொண்டதற்காக தான் நம் கம்பெனியை பார்க்கத் தொடங்கினார்.

கடும் உழைப்பாளி!! நீ ஆறு மாதத்தில் காலி செய்ததை விட, இரண்டு மடங்கு டர்ன் ஓவரை அவர் சேர்ந்த இந்த சில மாதத்தில் காட்டியிருக்கார்!"

"சாரிப்பா!"

"தவறு என்னுடையது தான் குட்டிமா! உன்னை மகளாகப் பார்க்காமல், மகனாக வளர்த்துட்டேன். மிகவும் பண்பானவரும் கூட, சந்தோஷமா இருக்குடா! இனி உன்னைப் பற்றிய கவலை எனக்கில்லை... எப்பொழுது எமன் வந்து கூப்பிட்டாலும் போக தயாராகிவிட்டேன்!"

"அப்பா! அப்படி பேசாதீங்க!" என்றவள் கண்கள் கரை உடைத்த வெள்ளமாய் கண்ணீரை உகுக்க,

"அழாதடா! என் செல்ல மகள் அழவே கூடாது! உனக்காக இனி பிரபா இருக்கார்! என்னை விட நன்றாகவே உன்னை பார்த்துக்கொள்வார்! என சொல்லவந்தேன். அப்பாவுக்கு ஒன்றும் ஆகாது! வருத்தப்படாதே" என்றார் ஆறுதலாய்.

ஏனோ தனக்காகவே வாழ்ந்த தந்தையின் தியாகத்தையும், பாசத்தையும் புரிந்து கொள்ளாமல் தான்தோன்றித்தனமாய், நடந்து கொண்டதை நினைத்து மனம் கனத்து போனவளாய், தனது செல்ல கரடி பொம்மையைக் கட்டிபிடித்தபடி சுருண்டு படுத்தாள்.

இன்டெர்க்காம் ஒலியில் கண் விழித்தவள், தந்தையிடமிருந்து வந்த அழைப்பு என்று புரிய, பதறியவளாய்,

"அப்பா! ஏதாவது எமர்ஜென்சியா? இதோ வறேன்!" என படபடக்க.

"இல்லம்மா! எனக்கு ஒன்றும் இல்ல! மாப்பிள்ளை எப்பொழுதும் போல அழைத்தார். ஸ்டாக் அனாலசிஸ் போயிட்டு இருப்பதால் அவருக்காக காத்திருக்காம உன்னை சாப்பிட்டு படுக்கச் சொன்னார். நேரம் கிடைக்கும் போது உனக்கு அழைக்கிறேன்னார்! உடம்பைக் கெடுத்துக் கொள்ளாமல் நேரத்திற்கு சாப்பிடும்மா!"

"சரிப்பா! நீங்க சாப்பிட்டீங்க தானே?" என்ற மகளின் அன்பு, மகிழ்ச்சியை தோற்றுவிக்க,

"சாப்பிட்டேன் பேபிம்மா, மாத்திரையும் போட்டாச்சு..." என சிரித்தார். அவனது அழைப்புகளை நான் எடுப்பதே இல்லை என்பதால் தான் எனக்கு அழைக்கவில்லையோ? என எண்ணமிட்டவள்,

ஜன்னலையும், கடிகாரத்தையும் மாற்றி மாற்றி பார்ப்பதையே தனது முழுநேர வேலையாக்கிக் கொண்டு இருக்க… தனது வீட்டிற்குள் இருந்து வெளியே வந்த குருவி பதினோரு முறை கூவிவிட்டு உள்ளே சென்று கதவை சாத்திக் கொண்டது, மெல்ல கைபேசியில் தயங்கி, தயங்கி அழைக்க,

"வெண்மேகம் பெண்ணாக உருவானதோ..." எனப் பாடிப் பாடி ஓய்ந்து போனது. ஆறேழு கால்கள் எடுக்கப்படாமல் விடப்பட, முதல் முறையாக கணவனுக்கு ஒரு எஸ் எம் எஸ் தட்டினாள்.

"எங்கேயிருக்கீங்க பிரபா? எப்போ வருவீங்க?" நீண்ட ஐந்து நிமிடங்கள் எந்த பதிலும் இன்றி அமைதி காத்த கைபேசி 'மெசேஜ் பார் யு' எனக் கொஞ்சியது.

ஆர்வமாக அதை எடுத்தவளுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது.

"என் குடும்பத்தாரோடு என் வீட்டில் இருக்கிறேன்."

"அவன் குடும்பமா? அப்போ நான் யார்?" என மனம் அரற்ற, அதையே வார்த்தைகளாக்கினாள்.

"இது யார் வீடு? நான் யார் பிரபா?" அவளது வலியை உணர்ந்த போதும், அவன் பெற்ற அவமானம் சினமேற்ற,

"நீங்க உயர்திரு சிவானந்தன் ஐயாவின் மகள்! அது உங்க வீடு! நான் கட்டிய தாலியை கழட்டி என் முகத்தில் வீசுவதற்கு முன் இதை யோசித்திருக்க வேண்டும்!" வார்த்தைகள் ஒவ்வொன்றும் அச்சிறு பெண்ணின் இதயத்தை கூர்வாள் கொண்டு அறுப்பதாய் வந்து விழுந்தன.

உண்மை தானே! அவன் சொல்வதெல்லாம் உண்மை தானே! இவனும் என்னை விட்டு போய் விட்டானா? இந்த பாழாய் போன குடியால் வந்த வினை தானே இது! அந்த அர்ஜூன் கடன்காரன் தான் பணக்காரர்களின் அடையாளம் 'பப்' என பழக்கிவிட்டான்...

போச்சு! எல்லாம் போச்சு! இனி பிரபா திரும்பி வர மாட்டானா? அப்பாவிடம் என்ன சொல்வேன்? குடும்ப வாழ்க்கைக்கும் எனக்கும் ராசியில்லையோ? அளவுக்கு அதிகமாகவே அவனை வதைத்து விட்டேன்! இனி எப்படி வருவான்?" என விசும்பத் தொடங்கி விட்டாள்.

பிரபா மீண்டும் வருவானா? பவானி மன்னிப்பு கேட்பாளா?

# அத்தியாயம் 29

இப்படி ஏதாவது பேசி நோக செய்து விடுவேன்! என பயந்து தானே இங்கு வந்தேன். வழிய வந்து வாங்கிக் கட்டிக்கிறாளே! என மனைவியின் பால் உருகிய மனதை சமன் செய்ய முடியாமல், அடுத்த பத்தாவது நிமிடம் மெசேஜாகத் தட்டினான்.

"ஏய் பொண்டாட்டி! தூங்கிட்டியா?" என்றதைப் பார்த்ததும் போன உயிர் மீண்டது போல் சந்தோஷத்தில் செய்வதறியாது திகைத்துப் போனவள்,

"இல்ல... பிரபா போகமாட்டான்... பொண்டாட்டின்னு போட்டிருக்கான்! என்னை வெறுக்கல... கோபம் போனதும் வந்திடுவான்..." என மருகி, அந்த 'ஏய் பொண்டாட்டி'யை மட்டும் நூறாவது முறையாக படித்து ரசித்துக் கொண்டிருக்க,

"என்ன டீ சத்தத்தையே காணோம்... சரக்கடிக்க கிளம்பிட்டியா?" என அடுத்த பிட்டை பார்த்து, 'திமிரைப் பார்!' என முறைத்தாலும்,

'விடு வனி! அவன் என்ன இல்லாததையா சொல்லிவிட்டான்?' என மானங்கெட்ட மனம் அவனுக்கே

வக்காலத்து வாங்கியது. உரிமையாக அவன் போட்ட 'டீ ' யில் மயங்கியவள்,

"சாரி பிரபா! ஆன்ட்டி இப்படி ரிவர்ஸில் யோசிப்பாங்கன்னு நான் நினைக்கவே இல்லை. ரொம்ப திட்டி விட்டார்களாமே... சாரி!" என வருந்த,

"உன் ஆண்ட்டின்னு இல்ல, யாரா இருந்தாலும் என் மீது தான் சந்தேகப்படுவாங்க, உருப்படியான பொண்டாட்டியா நடந்துக்கறியோ இல்லையோ ஊரெல்லாம் என் மானத்தை வாங்குற! நடத்து... நடத்து!" என நக்கலடித்திருந்தான்.

கண்ணீர் இமை தாண்டத் தயாராக, மீண்டும் இருவரிடமும் மௌனம். அந்த தர்மசங்கடமான அமைதியை உடைத்தவனாக,

"சாரிடீ! இருந்த கோபத்திற்கு உன்னை அடித்துவிடுவேனோ என்று தான் வீட்டிற்கு வரவில்லை. காலையில் வந்துடுறேன்! உன் கற்பனை குதிரையை தூங்க வச்சுட்டு, நீயும் தூங்கு! ஐ லவ் யூ டீ பொண்டாட்டி!" அவனது வார்த்தைகள் மழைச்சாரலாய் மனம் நனைக்க,

"இது எப்போதிருந்து?" என ஆச்சர்யமாக நினைத்தவள்,

"குட் ஜோக்!" என அனுப்ப,

"ஆஹா.. ஹா.. சிரிப்பு தான் வரலை! ராத்திரியெல்லாம் ஐ லவ் யூ பிரபா! நீயும் சொல்லு... ஐ லவ் யூ வனிம்மான்னு சொல்லுன்னு புலம்ப வேண்டியது, இப்போ குட் ஜோக்னு

கமெண்ட் போட வேண்டியது! இது தான் குடிகாரி பேச்சு விடிஞ்சா போச்சுன்னு சொல்றது போல..."

"அடக் கடவுளே! இந்த கூத்தெல்லாம் வேற நடந்திருக்கா?" என வெட்கம் மேலிட, தலையணையை கட்டிக் கொண்டவள், (நீ சரியான லூசுடி வனி! இன்னும் என்னென்ன காமெடியெல்லாம் பண்ணி வச்சியோ தெரியலையே.

அவன் தான் உனக்கு உடை மாற்றியிருக்கான். நேற்று ரொம்பவும் தான் ஆடிவிட்டாய் போல. இது வரை குடிகாரி என்றெல்லாம் அவன் சீண்டியதே கிடையாது! ஐயோ! மானம் போச்சே!) என மருகினாள்.

நேற்றைய மனைவியின் கொஞ்சல் நினைவில்... இன்றைய மன அழுத்தம் குறைய,

"அது எப்படி குஷி ஜோதிகா மாதிரி நீ பார்த்தாய்... நான் பார்த்தேன்னு' சண்டைக்கு வந்த...? போதையிலும் புருஷன் விஷயத்தில் ஸ்டெடியா தான் இருந்தாய்!" கேலி கூத்தாடியது அவனிடம்.

"எதைப் பார்த்தான்? எல்லாத்தையுமே பார்த்துட்டானா? ஏன் இப்படி மானத்தை வாங்குகிறான்?" என இதயம் தடதடக்க,

"ப்ளீஸ், பிரபா...சரண்டர்! போதும். விட்டுவிடுங்கள்!" எனக் கதற...

"அடிப்பாவி! நான் எதுவுமே பண்ணல. சிவனேன்னு என் அம்மா வீட்டில் வந்து இருக்கேன்! என்னவோ ரேப் பண்ண வந்த வில்லனிடம் ஹீரோயின் கெஞ்சுவது போல பில்ட் அப் கொடுக்கிறாய்?’’

"பொறுக்கி... பொறுக்கி ... எப்படி பேசுறான் பார்!" என்ற செல்ல கோபத்தோடு தூங்கித் தொலைக்காமல், சும்மா இருந்த சிங்கத்தை சுரண்டினாள்.

"ஏன் பிரபா, நேற்று என்னை அடித்தீர்கள்?" (உனக்கு நாக்கில் சனி நர்த்தனம் ஆடுறார் வனி...) மீண்டும் அவளது செயல்கள் நினைவில் வர, சினந்தவன்,

"என் பொண்டாட்டிக்கு தான் பெரும் பணக்காரி, பேரழகிங்கிற கர்வம் கண்ணை மறைத்தது. உடம்பெல்லாம் பணத்த திமிர். அந்த தெனாவெட்டில் புருஷனின் அன்பும், கண்ணியமும் கேலி கூத்தாக தெரிய, வாய் காது வரை நீண்டதா... அதை குறைப்பதற்காகத் தான் அறைந்தேன்!" என வேண்டுமென்றே ரணப்படுத்தினான்.

அவளுக்கோ தான் என்ன பேசினோம் என்பதே நினைவில் வராமல் போக கண்ணீர் பெருகியது.

நடந்தவற்றை அவ்வளவு சீக்கிரம் தன்னால் மறக்கவோ மன்னிக்கவோ முடியாதென்பது தெரிந்து போக, அவன் அமைதி சுத்தமாக தொலைந்து போனது.

காதல் கொண்ட மனமாயிற்றே, பொண்டாட்டிக்காக வருந்தியது. ஆனாலும் மன்னிக்க மறுத்தது. வெகு நேரத்திற்குப் பிறகும் தூங்க முடியாமல்,

"அம்மா!" என அழைத்தபடி தன் அறையில் இருந்து ஹாலுக்கு வந்தான். அவர்கள் வீட்டில் எப்போதுமே அது தான் வழக்கம். அந்த ஒற்றை அறை அவனுடையது. படிப்பு, படுக்கை அனைத்தும் அங்கு தான்! பெற்றோர் ஹாலில் தான் படுப்பார்கள். மகனது குரலைக் கேட்டு எழுந்தமர்ந்தவர்,

"என்னப்பா? ஏதாவது வேணுமா?" என்றார் பாசத்துடன். மெல்ல அவரருகே வந்தவன், அன்னைக்கும் தந்தைக்கும் நடுவில் படுக்க,

"ஏண்டா மெத்தையில் படுக்காம, இப்படி பாயில் படுக்கிற…. அழுத்தப் போகுது!" என்றார் தந்தை கரிசனத்துடன்.

"தூக்கம் வரமாட்டேங்குது! நான் இப்படியே படுத்துக்கறேன்!"

"பிரபா, பவானிம்மா உன்னிடம் நல்லா நடந்துக்கிறாங்க தானே?" சந்தேகமாக கேட்ட தந்தையின் புறம் திரும்பியவன்,

"அப்பா! இப்போ அவ என் பொண்டாட்டி! உங்க மருமகள். இன்னும் என்ன பவானிம்மா?" என்றான் வெடுக்கென.

"முதலாளி மகளாச்சே... அவங்க சிறு பிள்ளையாய் இருக்கும் போதிலிருந்து அப்படியே கூப்பிட்டு பழகிட்டேன்!"

"திருமணத்தன்று வந்தது! அதன் பிறகு இங்கு வரவோ… பேசவோ இல்ல... எங்களோடு எப்படி இருந்தால் என்ன? உன்னோடு இணக்கமாக தானே இருக்காங்க?" என ஆதங்கமும், வேதனையுமாய் கேட்ட தாயின் மடி சாய்ந்தவன்,

"ம்... இப்போ கூட இங்கு கிளம்பி வரவான்னு மெசேஜ் போட்டா. நான் தான் வேண்டாந்தாயி! இன்று மட்டும் என் அப்பா அம்மாவோடு இருக்க விரும்புறேன்னு சொல்லிட்டேன்!" ( அட பொய்சொல்லிப் பயலே!)

"நான் போய் கூட்டி வரவா?" என ஆர்வமாக எழுந்தவரை,

"அப்பா, இப்போ மணி என்ன? அவதான் லூசு மாதிரி பேசுறான்னா நீங்க அவளுக்கு மேல... அடுத்த முறை வரும் போது கூட்டிட்டு வரேன்... பேசாமல் படுங்க!"

"கல்யாணத்தில் பார்த்தது. அதுக்கு பிறகு வேலையை விட்டு நின்னுட்டேன்ல... பார்த்து ரொம்ப நாளச்சு... அதான் வீட்டுக்கு வந்தாங்கன்னா நல்லா இருக்கும்னு பார்த்தேன்.."

முதலாளி அம்மா தன் வீட்டிற்கு வருவதே பெரும் பாக்கியம் போல அந்த காரோட்டி பேச,

"அட சும்மா இருங்க! அவுக வர்றதுக்கு முன்னாடி தம்பி கட்டிலை மாத்தி ரெட்டைக் கட்டிலும், மெத்தையும் வாங்கணும்... ஒரு ஏசி போடணும், ஏதோ நம்மால் முடிந்தளவுக்கு கொஞ்சம்

வசதி பண்ணிட்டு தான் வரச் சொல்லணும்!" என வராத மருமகளுக்கு வரவேற்பு திட்டமிட்ட அன்னையை முறைத்தவன்,

‘‘ நம் வசதி தெரிந்து தானே கட்டிக்கிட்டா?" என முகம் திருப்ப,

"பிரபா! அது பெரிய இடத்து பொண்ணு, கொஞ்சம் அப்படி, இப்படி தான் இருக்கும். நீ தான் அனுசரித்துப் போகணும். என் மகன் பொறுப்பானவன், பொறுமைசாலின்னு தெரியும்... இருந்தாலும்..."

"அம்மா! " அப்படி இப்படின்னா... எப்படி? பாட்டிலும் கையுமாவா? வாய் வரை வந்த வார்த்தைகளை விழுங்கியவன்,

"போதும்மா! எங்களுக்குள் எந்தப் பிரச்சனையும் இல்ல! ஏதோ கட்டிக் கொடுத்த பொண்ணு புருஷனிடம் கோவிச்சுக்கிட்டு வந்த மாதிரி அட்வைஸ் பண்றீங்க...!

என் நிலையில் இருந்து பாருங்கம்மா! உங்களையும் , நம் வீட்டையும் நான் எவ்வளவு மிஸ் பண்றேன் தெரியுமா? விதவிதமான சாப்பாடு இருந்தாலும், பசிக்க மாட்டேங்குது. உங்க சாப்பாட்டுக்காக எவ்வளவு ஏங்குறேன் தெரியுமா?

என்ன தான் அவங்க தங்கத் தட்டில் வச்சு தாங்கினாலும், என் சுயத்தை தொலைச்சுட்டு தான் இருக்கேன்! நான் இப்போ உங்க மகனா இல்லை... அவர் மருமகனாத் தான் இருக்கேன். அங்கு எனக்கு மூச்சு முட்டுது. இப்போ தான் சுதந்திரமா

சுவாசிக்கிறேன்! என்னைத் தூங்க விடுங்க! காலையில் போயிடுவேன்!" என படபடத்துவிட்டு கண்களை மூடிக் கொண்டான்.

ஏனோ முந்தைய இரவில் மனைவி தன் மடியில் படுத்து இடையை கட்டிக் கொண்டது அநியாயத்திற்கு ஞாபகம் வந்து தொலைத்தது. ஒரு குடிகாரியை கட்டிகிட்டு... அவ வார்த்தையிலும், செயலாலும் என்னை கொன்னு கூறு போடுறா... அதெல்லாம் தெரியாது. ஒரு இரவு அவளை விட்டுவந்தது தான் பெரிய குத்தமா போச்சு..." என மனம் அழ, அன்னையின் அன்பான தலை வருடலில் தூங்கிப் போனான்.

பாவம், அவள் தான் தூங்கவே இல்லை. காலையில் வந்துவிடுவேன் என்றவனை எதிர்பார்த்து கண்கள் சோர்ந்தது தான் மிச்சம்! இளமாலை வேளையில்அவளுக்கு ஒரு மெசேஜ் போட்டான்.

"ரெண்டு நாள் பெங்களூரு போகிறேன். கிளையண்ட் மீட்டிங்.. டிரஸ் பேக் பண்ணி ரவியிடம் கொடுத்து விடு! செய்ய விருப்பம் இல்லன்னா தயவு தாட்சண்யம் பார்க்காமல் நோ சொல்லிடு! நானே வந்து பேக் பண்ணிக்கிறேன்!"

"அப்படியே போய்விடுவானா? நான் அவனைப் பார்க்க வேண்டுமே!" என மனம் அடித்துக்கொள்ள,

"நோ" என ரிப்லை செய்தாள்.

"திமிர்! பணத்திமிர்!" என்ற வசையைக் கண்டவள், (இருந்துட்டு போகட்டும் விடு! உன்னை நான் பார்க்கணும்... நீயே பேக் பண்ணு.) என அவனுக்காக காத்திருக்க,

வந்தான்... சிறு பெட்டியில் அனைத்தையும் எடுத்து வைத்தான்... சென்றுவிட்டான். கட்டிலில் அமர்ந்து அவனையே விழியெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

அவனது பாராமுகம் வலித்தாலும், அந்த நொடிகளைத் தன் நினைவு பெட்டகத்தில் சேர்த்துக் கொண்டிருந்தாள் பேதையவள். அதன் பின் இருவரும் மெசேஜில் கூட பேசிக் கொள்ளவில்லை.

அவரவர் வழியில் சென்ற போதும், காலை உணவின் போது எப்போதும் கதையளப்பது பிரபா தான் என்பதாலும் மாமனாருக்கு தங்கள் பிரச்சனை தெரியவேண்டாம் என நினைத்ததாலும் பொதுவான கதைகளை விடுத்து அவர்களது கம்பெனி நிலவரம் பற்றியே பேசினான்.

ஸ்டாக் அனலைசிங், ஆடிட்டிங் இப்படி அவனுக்கும் பேச நிறைய விஷயம் இருந்தது. முன்னெல்லாம் நிமிர்ந்து கூட பார்க்கத்தவள் இப்பொழுது உண்பதை மறந்து தன்னவனை பார்க்கத் தொடங்கியிருந்தாள்.

ஒரே இடத்தில இருந்து கொண்டு பேசாமல் இருப்பது பெரும் கொடுமையாக இருந்தது பவானிக்கு. அவளும் இதை

செய்திருக்கிறாள் தான்... ஆனால் அதையெல்லாம் கண்டுகொள்ளாமல் அவளது பதிலையும் எதிர்பார்க்காமல் பிரபா ஏதேனும் தொணதொணத்துக் கொண்டே இருப்பான்.

இப்பொழுது அவள் ஒருத்தி அங்கு இருக்கும் நினைவே இல்லாமல் தன் போக்கில் இருந்தான். அவன் முன்னே உலாத்துவது... அவனது செயல்களை ஆவலாக பார்ப்பது... பேசேன் என கண்களால் கெஞ்சுவது... இப்படி ஏதேனும் செய்து அவளும் தன் இருப்பை உணர்த்த முயன்று கொண்டிருந்தாள்.

அவளது உணர்வுகள் புரிய இன்னும் சங்கடமாக்கிப் போனது அவள் கணவனுக்கு. இப்படியே ஒருவாரம் போனது. அன்று மருமகனும், மாமனாரும் கேரம் ஆடிக் கொண்டிருக்க, ஆழ் கடல் வண்ண புடவையில் ஆளை அசரடிக்கும் அழகுடன் வந்தவளை பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தவனை,

"என்னடாம்மா நிச்சயம் முடிந்து விட்டதா? சாப்பிட்டாயா? ஏன் என்னவோ போல் இருக்கிறாய்?" என்ற மாமனாரின் கேள்விகள் தான் யதார்த்தத்திற்கு அழைத்து வந்தன.

"ம்... முடிஞ்சிடுச்சுப்பா. சாப்பிட்டேன்! தலைவலி... நான் படுக்கப் போறேன்ப்பா!"

"உனக்காகத் தான் மாப்பிள்ளை சீக்கிரம் வந்தார்... அவரோடு போயிருக்கலாம்!"

"ஏன் மாமா, நான் உங்களை போரடிக்கிறேனா? மீட்டிங் கான்சலாகும்னு நினைக்கல மாமா! நான் தான் அவளை போகச் சொன்னேன்!" என பதில் சொல்லத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தவளைக் காப்பாற்றினான்.

ஆட்டத்தை முடித்துக் கொண்டு அவன் மேலே வரும் போது, புடவையைக் கூட மாற்றாமல், கட்டிலில் படுத்திருந்தவளின் முதுகு குலுங்கலில் அவளது அழுகை புரிய, அவளருகே அமர்ந்தவன்,

"வனி... வனிம்மா... எழுந்து இந்த பாலைக் குடி.'' நீண்ட நெடிய ஏழு நாட்களுக்குப் பிறகு கணவனின் முதல் அழைப்பு. சந்தோஷமும் கூடவே கோபமும் வந்தது.

'போ' இத்தனை நாள் பேசாமல் தானே இருந்த... இப்ப என்ன கரிசனம் வேண்டிக்கிடக்கு? விசும்பல் கூடுதல் சத்தத்துடன் வெளிவர...

‘‘போதும் வனி... இப்படி அழுதுக்கிட்டே இருந்தா தலைவலி இன்னும் அதிகமாயிடும்! எழுந்துக்கோ!" என்றதும்,

(இவன் கண்டு கொண்டானா? என்னென்ன சொல்லி கேவலப் படுத்துவானோ?) என எண்ணியபடி கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தவளிடம், பாலைக் கொடுக்க, மறுப்பாகத் தலையசைத்தாள்.

“நிச்சயத்தில் வயிறு நிறைய சாப்பிட்டிருந்தாலும் பரவாயில்ல. இந்த ஒரு டம்ளர் பாலைக் குடிப்பதால் வயிறு வெடித்து விடாது!" என்றான் எரிச்சலுடன்.

அவள் எங்கே சாப்பிட்டாள்? பயந்து பதறி அடித்துக் கொண்டு ஓடிவந்திருக்கிறாள்... பசி, தானாகவே வாங்கிக் குடிக்கச் சொன்னது. மெல்ல குடித்து முடித்ததும்,

"என்ன பிரச்சனை?" என்றான் அழுத்தமாக.

"ஒன்னும் இல்ல... தலைவலி தான்!" அவன் முகம் பார்க்க முடியாமல் தலைகவிழ்ந்து மென் குரலில் சொல்ல,

"இந்த கதையை உன் அப்பாவிடம் சொல்! நிச்சயத்திற்கு என்னை ஏன் கூப்பிடல?"

"ஆமா... என்கூட பேசுறதுக்கே காசு கேட்பவர் கூப்பிட்டதும் அப்படியே வந்துடப் போறீங்க... உங்களுக்கு தான் என்னை கண்டாவே ஆகமாட்டேங்குதே..." விழி நீர் இதோ அதோ என வெளியே வர தருணம் பார்த்துக் கொண்டிருக்க...

"எனக்கு? உன்னை கண்டா ஆகல... எல்லாம் என் நேரம்! சரி எதுக்கு இந்த அழுகை?" முகம் தாங்கி வினவ... அவன் உள்ளங்கை சூட்டை கன்னங்களில் உணர்ந்தவளுக்கு அந்த கதகதப்பு தேவையாக இருந்தது.

அவனது அனுசரணை மேலும் அழுகையை தூண்ட... கண்ணீர் கோடாய் கன்னத்தில் இறங்க...

"ஷ்... வனிம்மா... அழாத!" என அன்போடு அணைத்து முதுகை நீவிக் கொடுத்தான். சிறிது நேரத்தில் அவளாகவே,

"பிரபா! அந்த நாய்... என்னை... என்னிடம்..." என அவன் மார்பில் தன்னை இன்னும் அழுத்தமாக புதைத்துக் கொண்டவள், தன் கரங்களைக் கொண்டு இறுக்கமாக கட்டிக் கொண்டாள். சுயத்தில் இருக்கும் மனைவியின் முதல் தீண்டல் தடுமாறச் செய்த போதும் அவனால் பிரச்சனையை ஓரளவுக்கு ஊகிக்க முடிந்தது.

"தெருப்பொறுக்கி! இவளிடம் ஏதோ வம்பு செய்திருக்கிறான்... பயந்து விட்டாள்" என கணித்தவனுக்கு இன்னும் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியிருந்ததால்,

"வனிம்மா! மாமா பாரு... பயப்படாதே. நானிருக்கேன்! என்ன வம்பு செய்தான்?" என கலைந்திருந்த கூந்தலை ஒதுக்கி விட்டபடி கேட்க, அவன் அன்பில் கரைந்தவள்,

"அவன் மனைவியோடு வந்திருந்த போதும் அசிங்கமாக என்னையே பார்த்துக்கிட்டு இருந்தான் பிரபா! சுஜி அம்மா, என்னிடம் மோதிரம் எடுத்து வரச் சொன்னாங்களா, மணமகள் அறைக்குள் போனேனா... இவனும் என் பின்னோடு வந்து,

"பவானி... சாகடிக்கிறடீ! உன்னைவிட்டு என் கண்களை எடுக்க முடியல... முன்னை விட இப்போ ரொம்ப அழகாயிட்ட! எல்லாம் உன் புருஷன் கவனிப்பா? கண்ணுக்கு குளிர்ச்சியா

இருக்க! இன்று உன்னை நினைத்து...." என அதற்கு மேல் பேச முடியாமல் கேவியவளின் உடல் இப்பொழுதும் பயத்தால் நடுங்குவதை அவனால் உணரமுடிந்தது.

கண்கள் சிவக்க, புருவம் சுருங்க... தாடை இறுக... நாணேற்றிய வில்லாய் உடல் விறைக்க ரௌத்திரமாய் இருப்பவனைக் கண்டு திடுக்கிட்டவளை கண்டவன் விழிகள் மூடி ஆழ்ந்த சுவாசத்தின் மூலம் கோபம் குறைத்து... தன்னவளை இறுக தழுவிக் கொண்டான்.

நான் இருக்கிறேன். என்னை தாண்டி உனக்கு எதுவும் நிகழ்ந்துவிடாது என்பதாய் தான் இருந்தது அந்த அணைப்பு. அவன் நிலைபெற சிறிது நேரம் பிடித்தது. சீரற்ற அவனது இதய துடிப்பை அவளால் உணரமுடிந்தது.

"வனிம்மா... உன்னை நோகடிச்ச அந்த தெருப்பொறுக்கிக்கு பாடம் கத்துக் கொடுப்போமா? உன்னைப் பார்க்க கண்களுக்கு குளிர்ச்சியா இருப்பது உண்மை தான்!

ஆனால் நீ என் பொண்டாட்டியாயிற்றே! அடுத்தவன் பொண்டாட்டியை பார்ப்பவனை சும்மா விடலாமா? திருமணத்திற்கும் வருவான், உன்னை பார்வையால் பருகவேனும்..." என்றவனை முறைத்தவள் செல்லமாக மார்பில் குத்தினாள்.

அவள் கரங்களைப் பற்றியவன், (கையில் சிக்கட்டும்...) வெறியை உள்ளடிக்கி,

"நிஜம்! அப்போ கொஞ்சம் என்னிடம் நெருக்கமாக இல்ல… சின்ன சிரிப்பை உதிர்த்தால் கூட போதும், பொசுங்கிவிடுவான்! செய்யலாமா?" என புருவம் உயர்த்த,

"வேண்டாம். நான் கல்யாணத்திற்கு போகப் போறதில்ல...!" என அவனிடமிருந்து விலகி அமர்ந்தாள். போனால் தானே பிரச்சனையை எதிர்கொள்ளணும்… அவசியமே இல்லை என்பது அவள் நினைப்பு.

"வெறி குட். உன் காதல் தோற்று விடக்கூடாதல்லவா? அவனும் இதைத் தான் எதிர்பார்க்கிறான், அப்படியே செய்!" என இறுகிய முகத்துடன் வெளியே சென்றுவிட்டான்.

"காதலா? இவன் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறான்?'' (நீயும் இப்படி செய்தால் அவன் வேறு என்ன தான் செய்வான்? உனக்காக மெனக்கெடுகிறவனிடம் விட்டேற்றியாக பேசினால் எப்படி வனிக்குட்டி? அந்த நாய்… நீ வரக்கூடாது… அவனையே நினைத்து ஏங்கிக் கொண்டிருக்க வேண்டுமென நினைக்கிறான். நீயும் அதற்கு தோதாக ஒளிந்து கொள்ளப் பார்க்கிறாய்... ) என மனது இடித்துரைக்க,

வராண்டாவில் நின்று வானத்தை வெறித்துக் கொண்டிருந்தவனைக் கண்டவள் (அதற்காக இவனோடு இளைய

வேண்டுமா? எல்லாவற்றிலும் ஆதயம் தேடவே பார்க்கிறான். எல்லா ஆண்களும் ஒன்று போல் தான் சந்தர்ப்பம் கிடைக்கும் வரை ரொம்பவும் நல்லவர்கள் தான். கணவனாகிப் போனதால் சந்தர்ப்பத்தை உருவாக்குவதில் தீவிரமாக இருக்கிறான். போடா...) சுருண்டு படுத்துக்க கொண்டாள்.

(அவன் செய்தது துரோகம்னு தெரிஞ்ச பிறகும் பிடிச்சுக்கிட்டு தொங்குறாளே... எப்போதான் பழைய நினைவில் இருந்து வெளிய வரப்போறான்னு தெரியல அதற்கான முயற்சி எடுத்தாலும் ஒத்துழைக்காம இப்படி முறுக்கிக்கிட்டா நானும் என்ன தான் பண்றது?)

கணவனை பிடித்திருந்தாலும் சூடுபட்ட பூனையாய் அவள் மனம் சுணங்குவது புரியாமல் ஏதேதோ நினைத்துக் கொண்டு இருக்கும் விரிசலை இன்னும் அதிகமாக்கினான் பிரபா. அன்று அதிகாலையிலேயே பிரபாவுக்கு ஆதியிடம் இருந்து அழைப்பு,

"ஹாப்பி பர்த்டே மச்சான்! ஒரே கொஞ்சல்சா... டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?"

"அதான் பண்ணிட்டியே... நன்றி டா!" என சிரித்தான்.

"கல்யாணத்திற்குப் பிறகு வர்ற முதல் பிறந்த நாள், எப்படி மச்சான்.... ஷாக்கிங் சர்பிரைஸா ஆரம்பிச்சுருக்கா?"

தலையணையின் மீது கால்களைப் போட்டுக் கொண்டு தூங்கும் மனைவியை பார்த்தபடியே,

"ம்!" என்றான் ஒற்றையாய்.

"பவானிகிட்ட கொடு. நான் கேக்கிறேன்!"

"அவ குளிக்கிறா மச்சான்!"

"என்ஜாய் மச்சான்!" என போனை துண்டித்துவிட்டான். (நீ விஷ் பண்றது தான் இன்று எனக்கு ஷாக்கிங் சர்பிரைஸ்... பண்ணுவியா வனிம்மா?)

ஆழ்ந்து உறங்கும் மனைவியின் கன்னத்தில் முத்தமிட, அவனது மீசையின் குறுகுறுப்பில் மறுபுறம் திரும்பிக் கொண்டாள். அதன் பின் அன்னையிடம் இருந்து வந்த அழைப்பு,

"நன்றி ம்மா! சாயங்காலம் வரேன், வெளியில் போகலாம்!"

"..........."

"பால் கேசரி!"

"............."

"குளிக்கிறா மா!"

"............"

"தேங்க்ஸ் அப்பா."

"................"

"கண்டிப்பா வரேன்.... உங்க பவானிம்மாக்கு வேலை இருக்கு. இன்று ஒரு முக்கியமான கிளையண்டை மீட்

பண்ணனும், நான் அங்கு வருவதால், அவள் தான் போகப் போறா!"

" ................."

"ஒரு டப்பாவில் போட்டு கொடுங்க. உங்க மருமகள் கிட்டே கொடுத்துட்றேன்... சத்தியமா நான் சாப்பிட மாட்டேன்!" என சிரித்தவன், மனைவியின் விழிப்பு நிலை கண்டு திடுக்கிட்டாலும், சட்டென தன்னை சமன் செய்து கொண்டான்.

"என்ன மீட்டிங்? எங்கு போகணும் பிரபா?" எனக் குழம்பியபடியே எழுந்தவள்,

"ஏதாவது பிரச்சனையா? உனக்கு போன் வந்துகிட்டே இருக்கு?" என அவள் முகம் பார்க்க,

"நல்ல விஷயத்திற்குக் கூட போன் பண்ணலாம்... நீ எங்கும் போக வேண்டியதில்லை. லீவ் இட்!" என பேச்சை முடித்துக் கொண்டான்.

அவன் குளித்துக் கொண்டிருக்கும் போது மீண்டும் போன் அழைத்தது.

"நந்து காலிங்..." என ஒளிர்ந்தது. நந்து கன்சிவா இருக்கான்னு சொன்னானே... ஏதவாது அவசரமா இருக்குமோ? பதட்டத்துடன் குளியலறைக் கதவை தட்ட,

"என்ன வனி?" என்றவன் அரைகுறையாக துவட்டியபடி, இடையில் பூந்துவாலையுடன் வெளியே வர, முதன்முதலாக

கணவனை இப்படிப் பார்த்ததில் திகைத்துப் போனாள். அப்பொழுதும் கைபேசி சிணுங்கிக் கொண்டிருக்க, அவளது கரத்திலிருந்து எடுத்துக் கொண்டவன்,

"நந்தும்மா, எப்படி இருக்க?"

"......"

"தேங்க்ஸ் டா!"

"............"

" ஈவினிங் டின்னர் போலாமா? விஜய் இருக்காரா?"

"........"

"நான் வேலைக்குப் போன பிறகு வரும் முதல் பிறந்தநாள் இல்லையா... அதான் எல்லோரையும் கூப்பிடலாம்னு நினைத்தேன். மங்கா ஆன்ட்டியிடமும் சொல்லணும்!"

"....."

"ஈவினிங் ஏழு மணிக்கு 'நளாஸ் 'சில் டேபிள் புக் பண்ணிடவா?"

" ............."

"அவளிடமா? இதோ..." போனை ஸ்பீக்கரில் போட்டு மனைவியிடம் நீட்ட,

"நலமா நந்தினி?"

" ம்... செல்லாக்குட்டி இன்று அவனுக்கு பிறந்த நாள்ன்னு சொன்னானா?" சட்டென அவள் கையிலிருந்து பறித்தவன்,

"ஏய் நந்து! இட்'ஸ் நாட் ஃபேர், என்ன கிப்ட் கொடுத்தான்னு கேட்கப் போறேன்னு நினைச்சா, நீ கதையையே மாத்றியே..."

"நீ சொன்னது தெரியாமல், நான் எப்படி கேட்பது செல்லாக்குட்டி?"

"இந்த ஐடியாவைக் கொடுத்தது அவள் தான்! பட் அவ வர முடியாது. எனக்கு பதில் ஒரு மீட்டிங் அட்டென்ட் பண்ணப் போறா! ஈவினிங் பார்க்கலாம். பை!" தலையில் இருந்து நீர் திவலைகள் காதோரம் இறங்கி தோளில் பட்டுத் தெறிப்பதையே பார்த்துக் கொண்டிருந்தவள், வாழ்த்து சொல்ல மறந்தே போனாள்.

மீண்டும் நினைவுக்கு வரும் போது, அவன் நிவியோடு பேசிக் கொண்டிருந்தான். ஒரு வழியாக காலை உணவிற்கு அமர, அன்று அவளே அவனுக்குப் பரிமாற, திகைப்பது அவன் முறையாயிற்று.

மெல்ல அவனருகே நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தவள், பிறந்த நாள் வாழ்த்து சொல்ல, சிறு சிரிப்பும், 'தேங்க்ஸ்' எனும் ஒற்றை வார்தையுமாய் மீண்டும் சாப்பிடத் தொடங்கிவிட்டான்.

"பிரபா... நந்து உங்கள எப்படி கூப்பிடுவாங்க?" புரியாத பார்வையுடன்

"பிரபான்னு தான் கூப்பிடுவா"

"இல்ல காலையில வேற மாதிரி கூப்பிடங்களே..." முழுவதும் சொல்ல முடியாமல் இழுக்க,

‘‘சின்னதில் இருந்தது நான் தான் அவளோட பெட். அதனால சந்தோசமா இருக்கும் போது செல்லாக்குட்டின்னு கூப்பிடுவா...’’ தோழியின் நியாபகத்தில் விரிந்த புன்னகையுடன் சொல்ல

"செல்லாக்குட்டி..." மெல்ல சொல்லிப் பார்க்க தலைக்கேறியது அவனுக்கு.

"சாரி... சாரி... சும்மா தான் சொல்லிப் பார்த்தான். நல்லா இருந்துச்சு... சாரி..." என்னவோ அந்த அழைப்பு நந்துவுக்கு மட்டுமே பட்டா போடப்பட்டது போல் இவள் மன்னிப்பு கேட்கவும் அவனுக்கு பாவமாகிப் போனது.

‘‘வனிம்மா உனக்கு பிடிச்சிருந்தா நீயும் அப்படியே கூப்பிடலாம்... இதுக்கு ஏன் இத்தனை சாரி..." (அதைச் சொல்லு நானும் அப்படி கூப்பிடணும்னு சொல்லாமல் சொல்ற... ஆதாயம் தேடுகிறாயே பிரபா) மனம் சுனங்கினாலும் வேகமாக எழுந்தவள்,

இவன் முன்னமே சொல்லி இருந்தால் ஏதேனும் இனிப்பு செய்ய சொல்லி இருக்கலாம் என எண்ணமிட்டபடியே, பிரிட்ஜ்ல்

உருட்ட, அவன் முதன் முதலில் இவளுக்கு வாங்கிக் கொடுத்த சாக்லேட் கண்களில் பட்டது. அதை பிரித்து அவனிடம் நீட்ட,

"நான் சாப்பிடுவதில்லை!" என நகர்ந்துவிட்டான். இவள் சொன்னது தான். அதையே அவன் சொல்லும் போது கண்களில் நீர் திரண்டுவிட்டது. அதை அப்படியே டேபிளில் போட்டுவிட்டு தன் அறைக்கு சென்றவளுக்கு, ஏமாற்றமும், அழுகையும் போட்டியிட்டன.

பிரபா பவானியை தன் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு அழைப்பானா?

# அத்தியாயம் 30

'**தா**ன் கொடுத்ததை உண்ணவில்லை... தன்னை டின்னருக்கு அழைக்கவில்லை... இவனாகவே அனைவரிடமும் 'நான் வரமுடியாது' என்கிறான். என்னை ஏன் அவாய்ட் பண்றான்?' என தேம்பி அழ,

நிவியின் பிறந்தநாளின் போது அவன் கொடுத்த பரிசை, தான் இன்று வரை பிரித்துப் பார்க்கவில்லையென்பது உரைக்க, அதைத் தேடி கண்டுபிடித்து பிரித்துப் பார்க்க... செர்ரி ரெட் இல் முத்து வேலைப்பாடுகள் செய்த டிசைனர் புடவை இருந்தது.

புடவையின் மீது பெரிய ஈடுபாடில்லாதவளையே கவர்ந்து விட்டது அந்தப் புடவை. அவனோடு எங்கும் வரமுடியாது என்று சொன்னதால் தான் அழைக்கவில்லை போலும்... மீண்டும் மனம் அவனிடமே செல்ல, அழுகை நிற்பேனா என அலுச்சாட்டியம் செய்தது.

'நான் ஏன் இதையெல்லாம் எதிர்பார்க்கிறேன்? ரூம் மேட்டாக இருக்கலாம் என்று சொன்னதை அவன் சரியாக கடை பிடிக்கிறானோ... நான் தான் தடுமாறுகிறேனோ?' மனதில் குழப்ப மேகங்கள் சூழ,

நேரில் அழைக்கவில்லை எனினும் போனிலாவது சொல்வான் என ஏழு மணி வரை எதிர்பார்த்தவளுக்கு பெரிய ஏமாற்றம் உண்டாக, 'நிர்வாணா'விற்கு சென்றுவிட்டாள். (கிளம்பிட்டாய்யா... கிளம்பிட்டா!!)

இரவு பத்து மணிக்கு வீட்டிற்கு வந்தவனின் பின்னேயே வந்தவள்,

"ஹாய் மாமா!" என உல்லாசமாக அழைத்தபடி காரில் இருந்து இறங்க, அவளது தடுமாற்றத்தில் அவள் நிலை புரிந்ததும், இறுகினான்.

"என்ன மாமா? பார்ட்டிக்கு பொண்டாட்டியை விட்டு போய்ட்ட! நீ கூப்பிடலைனா என்ன? உன் பிறந்த நாளுக்கு நானே பார்ட்டி வச்சுக்கிட்டேன்!"

"குடிச்சிருக்கியா?" (உன்னை மாமான்னு கூப்பிட்டா... அது கேட்கலை... குடிச்சிருக்கியான்னு விசாரணை வேற... அவள் ஒழுங்கா இருந்தா இப்படி கூப்பிடுவாளா?)

" லைட்டா! " என கண் சிமிட்டி,

"பார்! நானே கார் ஓட்டிட்டு வந்துட்டேன்!" என முன்னே நடந்தவள் வாயில் படியில் தடுமாற,

"வனி!" என்ற கூச்சலுடன் அவளை அடைந்தவன், தன் கைகளில் ஏந்திக் கொண்டு தங்கள் அறை நோக்கி சென்றான்.

"லேசா ஸ்லிப் ஆயிடுச்சு... மத்தபடி வனி ஸ்டெடி மாமா! இறக்கி விடு... நானே நடந்து போறேன் பாரு!" (கைப்புள்ள... சிக்கிறாத)

"எதுக்கு? மாடிப் படியில் இருந்து உருண்டு வைப்பதற்கா?" என சிடுசிடுத்தவனுக்கு, இன்று அவளின் நிலைக்கு, தான் தான் காரணம் என்று புரிந்தது.

தனது அழைப்பை நிராகரித்து, தன்னோடு எங்கும் வர விரும்பவில்லை என தவிர்த்ததால் தனக்கு உண்டான வலியை உணர்த்த வேண்டி செய்தால் அதை கொஞ்சமும் புரிந்துகொள்ளாமல் மீண்டும் முட்டாள் தனத்தை தொடருகிறாளே என நொந்து போனவனாய் அவளைக் கட்டிலில் கிடத்த, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டவள், தனது பிடியை இறுக்கி,

"ஹாப்பி பர்த் டே மாமா!" எனக் குழைய, அவளது மாமாவை இப்பொழுது தான் உணர்ந்தவனாய்,

"மாமாவா? இது எப்போதிருந்து?" (மாமான்னு சொன்னா மனசு இறங்கேண்டா... கேள்வியா கேட்டு மூடை கெடுக்கிறானே... ஒரு வருஷமானாலும் நீ பிரமச்சாரி தான்... போடா டேய்!)

"வள்ளி ஆன்ட்டி முருகன் அங்கிளை அப்படி தான் கூப்பிடுவாங்க... பார்த்திருக்கேன்" என கண் சிமிட்ட, ஆழ்ந்த மூச்சுடன்,

"நன்றி. விடு, டிரஸ் சேஞ் பண்ணனும்!" என்றவனுக்குத் தெரிந்தது, அவள் உடுத்தியிருப்பது தான் வாங்கிக் கொடுத்த புடவையென்று. பெண்களுக்கு புடவை ஒரு அழகு தான்! என ரசித்து இதழ் விரிக்க, சட்டென அவன் இதழ்களைப் பிடித்தவள்,

"டவல் மட்டும் கட்டிக்கோ மாமா! காலையில் செம செக்ஸியா இருந்த!" எனக் கிள்ள, (அடி ஆத்தி... குடிச்சா இந்த புள்ளைக்கு ரொமான்ஸ் மூட் செட்டாகிறும் போல... ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு பீலிங் !!)

"இவ ஒரு மார்க்கமா தான் இருக்கா!" கழுத்தை வளைத்துப் பிடித்தபடி படுத்திருந்தவளின் இரு பக்கமும் கைகளை ஊன்றி, குனிந்த நிலையில் இருந்தவன்,

‘‘அதற்கு முதல்ல நீ என்னை விடணும். இப்படியே இறுக்கிப் பிடிச்சிருந்தா என்னால எதுவும் செய்ய முடியாது!" என்றான்.

"சோ ஸ்வீட்! ஐ லவ் யூ மாமா!" எனக் கொஞ்ச,

"இவளுக்கு சரக்கடிச்சா லவ் மூட் ஸ்டார்ட் ஆகிடுது..." என்றபடி,

"மீ டூ லட்டு!" என்றான் அவள் தலையில் முட்டி.

"போ மாமா! உனக்கு லவ் சொல்லவே தெரியலை..." என சிணுங்க, (ஆமா, இவுக phd வாங்கினவுக...!)

இவ அலும்பு தாங்க முடியலையே... என்று எண்ணினாலும் வாய் அதன் போக்கில்,

"ஐ லவ் யு வனிம்மா! போதுமா...? கை வலிக்குதுடி! எவ்வளவு நேரம் தான் இப்படியே இருப்பது?" என்றவனை தன்னை நோக்கி இழுக்க,

"ஏய்!" எனக் கத்தியபபடி அவள் மீது விழுந்தான். தன்னை இறுக்கியிருந்தவளின் பிடியில் இருந்து விடுபட எண்ணி விலக,

"ஏன் மாமா... பிடிக்கலையா? என்றவளின் குழைவில் தவித்துப் போனவன்,

"பிடிச்சிருக்கு. ஆனால் இன்று வேண்டாம்!" என அவள் தலை கோத,

"இன்று தானே உன் பிறந்தநாள்? அப்போ இன்றைக்கு தான் கிப்ட் கொடுக்கணும்! எடுத்துக்கோ!" என அவன் காது மடல் கடிக்க, (காலையில எந்திரிச்சதும் நீ யாருன்னு கேப்பாக... இதெல்லாம் நாங்க பார்த்துகிட்டு தான் இருக்கோம்)

"படுத்துறாளே!" என சட்டென எழுந்தமர்ந்தான்.

"டிரஸ் சேஞ் பண்ணப் போறீயா மாமா?’’

"ம்... நீ தூங்கு!"

"நோ...நோ... நான் ஹெல்ப் பண்றேன்!" (நிக்கவே முடியல... இதுல ஹெல்ப் பண்றியா?)

"படு வனிம்மா... ! நான் வரேன்" என ட்ரெஸ்ஸிங் ரூம் கதவை சாத்திக்கொள்ள,

"பயந்துட்டான்!" என சிரித்தாள். எவ்வளவு நேரம் தான் அங்கேயே இருக்க முடியும்? ஷாட்ஸும், பனியனுமாக அவன் வெளியே வர, சட்டென அவனை இழுத்து அணைத்தவள்,

"கண்ணா லட்டு திங்க ஆசையா?" என கண் சிமிட்ட, அவளை விலக்கி,

"இல்ல... என்னைப் படுத்தாம போடி!" என சீறத் தான் நினைத்தான். ஆனால் அவனையும் மீறி குழைந்தது அவன் குரல்.

"ஏன் மாமா, நான் அழகா இல்லையா? மொக்க பீசா?" என்றவளுக்கு கண்களில் நீர் திரண்டுவிட்டது.

"வனிம்மா! நீ தேவதைடா! மாமாக்கு இந்த லட்டு வேணும். ஆனால் இப்போ இல்லை, நாளைக்கு. சரியா?"

"நான் உனக்கு கிப்ட் கொடுக்கலையே?!" எனப் பரிதாபமாக அவன் முகம் பார்க்க,

"கொடுத்தீங்களே... மாமா மனசு நிறையுற மாதிரி காலையில் சாப்பாடு போட்டீங்க, சாக்லேட் கொடுத்தீங்க, அதெல்லாம் என்ன?" என புருவம் தூக்க,

"ஓ!" என சிந்தனையாய் நெற்றியை தேய்த்துவிட்டுக் கொண்டவளிடம், நம்பாத பாவனையைக் கண்டவன், தனது பையில் இருந்து பாதி சாக்லெட்டை எடுத்துக் காண்பித்தான்.

அதைக் கண்டு அவள் முகம் மலர்ந்தது. நம்பிவிட்டாள் என அவனும், வேறு திட்டத்தோடு அவளும் சிரித்தனர். அவனிடமிருந்து சாக்லெட்டை வாங்கியிவள்,

"சாப்பிடலாமா?' என அவன் தோள் சாய,

"சாப்பிடும்மா!" என்றான் அன்பொழுக.

"போடா தத்தி" தலையில் தட்ட வேண்டும் போல் தோன்றிய எண்ணத்தை கைவிட்டவள், சாக்லேட்டின் ஒரு பாதியை தன் வாயில் வைத்துக் கொண்டு அது உனக்கு என்பது போல் கண் ஜாடை காட்ட, அவள் திட்டம் புரிந்தவனாய்,

"வேண்டாம்" என மறுக்க,

"அப்போ நீ சொன்னது எல்லாம் பொய். நான் உனக்கு எதுவும் கொடுக்கல இப்போ தரேன் வா!" என மீண்டும் கட்டிக் கொள்ள, (இது என்ன கொடுமை?) என பதறியவனாய் சாக்லேட் சாப்பிட ரெடியானான்.

ஆரம்பம் நன்றாகத் தான் இருந்தது. அதன் பிறகும் நன்றாகத் தான் இருந்திருக்கும்... அவள் சுயநினைவோடு செய்திருந்தால்...

தன் இதழ்களை சுவைத்துக் கொண்டிருக்கும் மனைவியை விலக்கவும் முடியாமல், அணைக்கவும் முடியாமல் தடுமாறிப் போனான். மெல்ல அவளிடமிருந்து விலக எத்தனிக்க அவளோ சிறு குழந்தையாய் அலுச்சாட்டியம் செய்தாள்.

"மாமா நீ ரொம்ப நல்லவன்டா... ஐ லவ் யூ டா செல்லாக்குட்டி." (திரும்ப முதல்ல இருந்தா?)

"ஐ லவ் யூ வனிம்மா" கூடுதல் கவனத்தோடு சொன்னான். அவன் மடி சாய்ந்தவள்,

"மாமா உனக்கொன்னு தெரியுமா? இப்போ நான் உன்னை அடிக்கடி நினைக்கிறேன்... நீ இல்லன்னா ரொம்ப ஃபீல் ஆகுறேன்... மனசு உன்னையே சுத்தி சுத்தி வருது ஏன் மாமா? ஐ திங்... ஐ லவ் யூ... ஆனா உன்னிடம் சொல்ல பயமாயிருக்கு.

அந்த அச்சு மாதிரி நீயும் ஃபிரண்டா தான் பழகினேன்னு சொல்லிடுவியோன்னு தான் யோசிக்கிறேன். நீ என்ன சொல்ற மாமா? நாம நண்பர்களா? இல்ல காதலர்களா?" (ஏன்... இவ்ளோ நேரம் நல்லா தானே போயிட்ருந்துச்சு... அச்சு... உன்னை பிச்சுடுவேன் பிச்சு!)

"குடிகாரி நல்லா குழப்புறாளே... இவ என்ன சொல்வரான்னு தெளிவா புரியமாட்டேங்குதே... லவ் இருக்கா? இல்லையா? இவ குடிச்சுட்டு என்னை சுத்தல்ல விடுறா. காலையில் எழுந்து

கேட்டா சொல்லவேயில்லன்னு சத்தியம் பண்ணுவா... முடியலடா சாமி!"

(இது உன் தலையெழுத்து! நீ ஏன் ரெகார்ட் பண்ணி காலையில போட்டு காட்டக் கூடாது? அவள் பேசுறதை மட்டும் பா... சண்டைக்கு வராதீங்க!)

"என்ன மாமா தூங்கிட்டியா?இல்ல என் அழகில் மயங்கிட்டியா?" அவன் கன்னம் கிள்ள,

இதுவேறையா? என்பது போல் பார்த்தவன்,

"சொல்லுடா..."

"ம்... என்ன சொல்ல...? நீ ரொம்ப நல்லவன்டா! (ஐயையோ) வெரி கைய்ண்டு... அன்பானவன்... என் அப்பாவையே கரெக்ட் பண்ணி வச்சுருக்கியே... (உன்னை கரெக்ட் பண்ண முடியலையே)

சோ ஸ்வீட்... நல்லா கேர் பண்ற... தூக்கம் வருதே... நாளைக்கு... சொல்லவா? ஐ லவ் யூ... ஐ லவ் யூ டா மாமா..." புலம்பலுடனேயே தூங்கிப் போனாள்.

பிரபாவுக்கு அவள் மனம் தன்னை நோக்கி திரும்பிவிட்டது என்பதுவரை தெளிவாகப் புரிந்தது. காலையில் வழக்கம் போல் தன் பாரா முகத்தைக் காட்ட ,இவள் தான் இரவில் உருகியவளா? இல்ல கனவு எதாவது கண்டோமா? என எண்ணும்படி ஆகிப் போனது பிரபாவின் நிலை.

(இது தானே டெய்லி நடக்குது!) இருந்தும்... அன்று அலுவலகம் கிளம்பி செல்லும் பொழுது முதல் முறையாக,

"பை லட்டு!" செமஸ்டருக்கு படித்துக் கொண்டிருந்தவளின் அருகில் வந்து சொன்னான். ( எங்கிருந்து டா இந்த செல்ல பேரெல்லாம் பிடிப்பீங்க... இதெல்லாம் வேற நாங்க ஞாபகம் வச்சுக்கணும்)

அதிர்ச்சியும் ஆச்சரியமுமாய் அவள் நிமிர்ந்து பார்க்க, நெற்றியில் முத்தமிட்டு விலகிச் சென்றுவிட்டான். திகைத்து அமர்ந்திருந்தவளுக்கு முன்னைப் போல் ஏதும் அபத்தமாக தோன்றவில்லை. (இதுவும் முதல் முறையாக என்று பதிவு செய்ய வேண்டும். கண்ணைக் கட்டுதே...)

நாட்கள் பெரிய மாறுதல் இன்றி வேகமாய் நகர, அன்று நந்துவின் வளைகாப்பிற்காக ஆதி வருகிறான் என்பதால் பிரபா, நந்து, நிவி மூவரும் ஏர்போர்ட்டில் அவனுக்காக காத்திருந்தனர்.

பவானியும் தன் கல்லூரித் தோழியுடன், அவள் வருங்காலக் கணவனை வரவேற்க உடன் வந்திருந்தாள். இருவரும் இங்கு வருவதை சொல்லிக் கொள்ளவில்லை. சொல்லி மட்டும் என்ன ஆகப்போகிறது என்ற வீம்பு தான்... வேறென்ன?

"பிரபாண்ணா... ஆதி அத்தான்!" என்ற நிவியின் கூச்சலில், பிரபாவா எனத் திரும்பினாள் பவானி. அத்தனை கூட்டத்திலும்

பிரபா என்ற சொல் அவள் கவனத்தைக் கவர்ந்ததை அவள் உணர்ந்தாளா?

கண்களால் வலை வீசி தேடியவளின் விழியில் சிக்கினான் சந்தோஷமாக நண்பனை நோக்கி கையாட்டிக் கொண்டிருக்கும் அவள் கணவன் பிரபா.

அவனோ, வெகு நாட்களுக்குப் பிறகு சந்திக்கும் நண்பனை எதிர்கொள்வதில் கவனத்தை வைத்திருந்தான். ஆதி வெளியே வந்ததும், நந்துவும், பிரபாவும் அவனைத் தழுவிக்கொள்ள...

நிவியோ படிய வாரிய தலையும், லேசான தாடி மீசையுமாய், பிரேம்லெஸ் கண்ணாடியுடன், புள்-ஆர்ம் ஷர்ட் அணிந்து பக்காவான மாடல் போல் இருந்த ஆதியிடம் தயங்கி நிற்க,

"என்னடீ? திரு திருன்னு முழிக்கிற? ஏதாவது எக்ஸாம் கட் பண்ணிட்டு வந்திட்டியா?" என வம்பளந்த போதும், அவன் கண்கள் காதலுடன் அவளை விழுங்கின.

"ம்கூம்... நீ... நீங்க... ஸ்மார்ட்டா இருக்கீங்களா... முன்னைப் போல அந்த அமுல் பேபி லுக்கை காணோம்! அதான் ஷாக் ஆகிட்டேன்!" (நிவி... இதை... இதைத் தானே எதிர்பார்த்த!)

"ஏய்! நீ பாராட்டுறியா? இல்ல கலாய்க்கிறியா என்றே தெரியலையே பட்டுக்குட்டி!"

"இது தான் வஞ்சப்புகழ்ச்சி அணி மச்சான்!" என பிரபா ஆதியின் தோளில் தட்ட,

"இல்ல மச்சான், இது வஞ்சிப் புகழ்ச்சி அணி!" என சிரித்தனர் இருவரும்.

"நந்து குட்டி எப்படிடா இருக்க? குட்டி நந்து என்ன சொல்றாங்க? விஜய் எப்படி உன்னை அனுப்பினார்?" என தோழியின் தோள் பற்றி நடக்க,

"அவரிடம் யார் சொன்னது? அம்மா வீட்டுக்குப் போய்ட்டு வரேன்னு சொல்லிட்டு வந்தேன்" எனக் கண் சிமிட்டியவள்,

"குட்டி நந்து ஹாப்பி டா!" எனும் போதே அதை ஆமோதிப்பதை போல் குழந்தை அசையத் துவங்க,

"ஏய்!" எனக் கூச்சலிட்டபடி நண்பர்கள் இருவரின் கையையும் எடுத்து தன் வயிற்றில் வைக்க, குழந்தை உதைப்பதை மூவரும் உணர்ந்தனர்.

"நிஜமாகவே ஹாப்பி நந்து!" என இருபுறமும் இருவரும் தோழியை இதமாக அணைத்துக் கொள்ள, நிவி முகம் திருப்பிக் கொண்டாள்.

"ஏய்! பட்டு, இப்போ எதுக்கு மூஞ்சியைத் தூக்குற? உன்னையும் இப்படி கட்டிப் பிடிக்கணுமா? வா..! பார்டா... உன் தங்கச்சிக்குப் பொறாமையை!" என ஆதி சிரிக்க,

"ஒரு ஆமையும் இல்ல! நந்துக்கா நீங்களும் இவங்களோட சேர்ந்துக்கிட்டு என்னை அவாய்ட் பண்றீங்கள்ல...?" என டேமைத் திறக்க,

"சாரிடா நிவிக் குட்டி! நெக்ஸ்ட் டைம் உனக்கு மட்டும் தான்! இந்த தடியன்களுக்கு வேண்டாம்" என அவள் தாடை தாங்கி கொஞ்சியவள், தன் வயிற்றில் கை வைத்து,

"பாப்பா... உங்களைப் போலவே இங்க ஒரு குட்டி பாப்பா இருக்கு. சீக்கிரம் ரியாக்ட் பண்ணுங்க. அவங்க உங்களை பீல் பண்ணணுமாம். ஹாய் நிவி அத்தை சொல்லுங்க!" என்றதும் குட்டியும் புரள,

நந்துவின் வயிற்றில் இரு கரங்களையும், வைத்து முழுவதுமாக ஆக்கிரமித்து காத்திருந்தவளின் உள்ளங்கையில் குட்டி நந்து உதைய, அங்கே ஆனந்த கூச்சல் காதைப் பிளந்தது.

"நீ ஒரு அழுகாச்சின்னு பாப்பாக்குக் கூட தெரிஞ்சுருக்குடி!" என்ற ஆதியின் கேலியை உதட்டு சுழிப்பில் உதறியவள்,

"பசிக்குது நந்துக்கா!" எனத் தொடங்க,

"மங்காம்மா நமக்காக ஸ்பெஷலா சமைக்கிறாங்க. லேசா ஏதாவது ஸ்வீட் அண்ட் காபி ஓகேவா?" என அனைவருக்கும் வாங்கி கொடுத்தான் பிரபா. அங்கே கூத்தும், கும்மாளமுமாக இருப்பதை ஆசையாக பார்த்துக் கொண்டிருந்தாள் பவானி.

தோழியின் வருங்கால கணவன் வருவதைக் கண்டவள், அப்பொழுதே தோழியிடம் தலையசைத்து விடைபெற்று, தனியாக வந்து கணவனை சைட் அடித்துக் கொண்டிருந்தாள்.

"நந்து குட்டி, இப்படியே நகைக்கடைக்கு போய்டலாம். நாளை விஜய் விடுவாரான்னு தெரியலை. நாளை மறு நாள் வளைகாப்பு! நாங்கள் இருவருமே ப்ரெசென்ட் பண்ணனும்!" என்றான் ஆதி.

"என்ன வாங்கப் போறீங்க ஆதி அத்தான்?"

"நந்துக்கு நானும், ஆதியும் சேர்ந்து வளையல் வாங்கிக் கொடுக்க போறோம்’’

"நந்துக்கா, நீங்க ரொம்ப லக்கி!"

"ஆரம்பிச்சுட்டடா உன் தங்கை! மகமாயி... போதும் நிறுத்து!. உன் அண்ணன் மாசா மாசம் நகை வாங்கிக் கொடுக்கும் மாப்பிள்ளை தேடத் தொடங்கி விடுவான்!" என்றான் ஆதி பீதியுடன்.

"அந்த பயம் இருக்கட்டும்!" என அழகாக சிரிக்கும் கணவனை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் பவானி.

"என்ன மச்சான், நந்துவைப் போல நீயும் பவானியிடம் சொல்லாமல் தான் வந்தாயா?" என்றதும், குடித்துக் கொண்டிருந்த

காபி தலைக்கேறி கண்கள் கலங்கி நின்ற பிரபாவைப் பார்த்து அனைவரும் சிரிக்க,

"டேய்! பிரபா... பவானியிடம் அவ்வளவு பயமா?" என சீண்டினாள் நந்து. பிரபாவோ சீரியஸாக முகத்தை வைத்துக்கொண்டு,

"ஆம்!" என்றதும்,

"பிரபா எனிதிங் ராங்?" என நண்பர்கள் இருவரும் முகம் தாங்க, சட்டென தன்னை சமன் செய்து கொண்டவன்,

"ஹி... ஹி...ஹி... அதெல்லாம் ஒண்ணுமில்லைன்னு கெத்து காட்டாமல் உண்மையை ஒத்துக்கிட்டேன். அவ்வளவு தான்!" என சிரித்தான். ஆதியும், நந்துவும் இதை நம்பவில்லை என்பது அவர்களின் பார்வையிலேயே தெரிந்தது.

இவை அனைத்தையும் கேட்டுக்கொண்டும், கணவனின் முக மாற்றத்தைப் பார்த்துக்கொண்டும் இருந்தவளுக்கு, அவனது பயம் புரிந்தது.

"குடிகாரியைக் கட்டிக் கொண்டவனின் நியாயமான பயம் தானே? ஆனால் நான் இப்பொழுதெல்லாம் குடிப்பதில்லை என்பது உனக்கு தெரியுமா பிரபா?" என ஊமையாய் மனம் அழ, சட்டென அங்கிருந்து விலகி நடக்கத் தொடங்க, மனைவியை எளிதாக அடையாளம் கண்டு கொண்டான் பிரபா!

அவன் பார்த்தது தெரியாமல் அவ்விடம் விட்டு மறைந்து போனாள் பவானி. நண்பர்களுடன் பொழுதைக் கழித்துவிட்டு இரவு வெகு தாமதமாக வீடு வந்தவனுக்கு மனைவியின் கண்ணீர் கறை படிந்த முகமே அனைத்தையும் காட்டிக் கொடுத்தது.

தோட்டத்து திண்டில் அமைதியாக அமர்ந்திருந்தவளிடம் வந்தவன்,

"வனிம்மா..." என அழைத்தபடி அருகே அமர, என்ன என்பது போல் அவன் முகம் பார்க்க,

"செமஸ்டர் எப்போ முடியும்?" (போடா மங்குனி அமைச்சா)

"எக்ஸாம் முடிஞ்சு ஒரு வாரமாச்சு..." எங்கோ பார்த்தபடி சொல்ல,

"ஓ! அப்போ நாளைக்கு நீ ஃபிரீ தானே?" அவளது மென் கரம் பிடித்து அழுத்தியபடி கேட்க,

வளைகாப்புக்கு அழைக்கப் போகிறான் மனம் துள்ளாட்டம் போட்டாலும், அதை காட்டிக் கொள்ளாமல்.

"ஏன்?" என்றாள் ஒற்றையாய்.

"தளிர் விரல்களில் சொடக்கு எடுத்தபடி,

"நாளை நந்துக்கு வளைகாப்பு. நீயும் என்னோடு வரியா?" தயங்கிபடி சொன்னவன் அவள் முகம் பார்க்க,

"காலேஜ் முடிஞ்சிடுச்சா... ரொம்ப போரடிக்குது அதனால் வரேன்..." பெரிய மனது பண்ணி ஒத்துக் கொண்டது போல் பிட்டைப் போட அதை கண்டு கொண்டவன்,

"அப்போ இனி என்னோடு ஆஃபீஸ்க்கு வந்துடேன் வனிம்மா..." கன்னத்தை வருட... அவன் கரம் பிடித்து தடுத்தவள்,

"ம்... பார்க்கலாம்." என்பதோடு அங்கிருந்து நழுவினாள்.

"நல்ல முன்னேற்றம் தான்! முகம் கொடுத்து பேசுறா... தொட்டதுக்குக் கூட பெரிசா எதிரிப்பு இல்லை. இப்படியே கொஞ்சம் கொஞ்சமா மூவ் பண்ணி முன்னேற வேண்டியது தான்." மனம் தன்போக்கில் கணக்கு போட்டது.

அரண்மனையே விழாகோலம் பூண்டிருந்தது என்று தான் சொல்ல வேண்டும். திருமணத்திற்கு வராதவர்கள் கூட இனி எதிர்ப்புக் காட்டுவதால் எந்த பிரயோஜனமும் இல்லை என்பது புரிந்து வந்துவிட்டனர்.

சகுந்தலா தேவி வைர காப்புடன் முறைசெய்யத் தொடங்க, விஜயரேகா தன் பங்கிற்கு இரண்டு வைர வளையல்களை பூட்ட, நந்தினியின் தாய்க்கு மனம் லேசாக சுனங்கியது. தங்களால் இந்த அளவுக்கு செய்ய முடியவில்லையே என்னும் வருத்தம் வரத்தான் செய்தது.

அதன் பின் ஒவ்வொரு உறவு முறையும் அவரவர் உறவுக்கு ஏற்றது போல் நவரத்தினங்களில் வளையல் எடுத்துவர,

"குழந்தைக்கு வளையல்களின் சத்தம் கேட்க வேண்டும் என்பதற்காகத் தானே இந்த வளைகாப்பு. உங்கள் முறைகளை நாங்கள் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறோம். நந்தினி பின்னாளில் இதையெல்லாம் அணிந்து கொள்வாள். பிள்ளைக்கு பெயர் சூட்டும் விழாவில் அவளிடம் நீங்கள் இவற்றைப் பார்க்கலாம் இப்போது கண்ணாடி வலையைகளை போட்டு விடுங்கள்."

உத்தரவு போலும் ராணி சகுந்தலா தேவி சொல்ல, விஜய் நன்றியுடன் அன்னையை பார்க்க... நந்துவின் பெற்றோருக்கும், சொந்த பந்தங்களுக்கும் பெரும் நிம்மதி பரவியது.

அனைவரும் போட்டதும் மங்களமும், வள்ளியும் ஆளுக்கொரு கையில் தங்கள் மகன்கள் வாங்கிய தங்க வளையல்களை போட்டுவிட வைபவம் முடிவுக்கு வர, ராணியம்மா பவானியை மனையில் ஏற்றினர்.

"இது என்ன?" என்பது போல் கணவனைப் பார்த்து மிரண்டு விழிக்க, அவன் அதற்குமேல் ஒன்றும் புரியாமல் விழித்தான். ராணி சகுந்தலா தேவி விளக்கம் தந்தார்.

"விரைவிலேயே உனக்கும் இவைகளெல்லாம் செய்யப் படவேண்டும் என்பதற்காக செய்யப்படுவது. ஒருவரை மட்டும் மனையில் இருந்து இறக்குவது கூடாது.

அதனால் தான் அடுத்து குழந்தை பெற்றுக் கொள்ள சமயம் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும் முறை செய்வது. இது எங்கள் வழக்கம். கையை காட்டும்மா..."

தானே இரு வைர வளையல்களை பூட்டி ஆரம்பித்து வைத்தார். நந்தினியைப் போல் பவானியின் கைகளும் நிறைந்துவிட்டது.

"பவானி கருவுறும் வரை இந்த வளையல்களை கழட்டக் கூடாது. இதிலிருக்கும் அனைத்து வளையல்களும் உடைவதற்குள் நிச்சயம் நீ தாய்மை அடைந்துவிடுவாய் பாரேன்..."

நந்தினி கேலி போலும் சொன்னது உண்மை தான் என ராணியரும் ஆமோதிக்க, குங்குமமாய் சிவந்து போனது பவானியின் முகம்.

'பார்டா இவளுக்கு வெட்கப் படக் கூட தெரியுமா?' அசந்து போனான் பிரபா. வள்ளியின் மனம் குளிர்ந்து போனது. ராணியம்மா சொன்னது போல் விரைவிலேயே எல்லாம் நடக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார்.

சம்பிரதாயத்திற்காக நந்துவின் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டு அன்று மாலையே அரண்மனைக்கு திரும்பினர் அனைவரும். நந்துவின் பெற்றோரும் அரண்மையில் தங்கவே நண்பனுக்கு நன்றி சொன்னாள் நந்தினி.

இரவு உணவையும் அரண்மனையிலேயே முடித்துக் கொண்டு தான் நண்பர் பட்டாளம் வீட்டிற்கு திரும்பியது.

"சிட்டு..." ஆசையாக பின்னிருந்து மனைவியைக் கட்டிக் கொண்டான் ராஜா விஜயேந்திர பூபதி.

"நீயும் பாப்பாவும் சேர்ந்து இருக்கும் போதுகூட என் கை நிறயமாட்டேங்குது... ரொம்ப சின்னதா இருக்கடி." தலையில் கன்னம் வடித்து அழுத்திய படி செல்லம் கொஞ்ச,

"நீங்க ரொம்ப பெருசா இருக்கீங்கன்னும் சொல்லலாம் விஜய்."

"அதுசரி... நந்தினி தேவியாருக்கு அம்மா அப்பா கூட இருப்பதில் பெரும் மகிழ்வு இல்லையா? எனக்கும் சந்தோசம் தான்."

"இந்த கிரெடிட் எல்லாம் பிரபாவுக்கு தான் விஜய். அவன் தான் அம்மாவை கன்வின்ஸ் பண்ணினான் தெரியுமா? இல்லன்னா உங்க மாமியாராவது இங்கு வந்து இருப்பதாவது?"

"உனக்கென்னம்மா கொடுத்துவச்ச மகராசி... நல்ல அம்மா அப்பா... நீ சொல்றதையெல்லாம் கேட்கும் அருமையான நண்பர்கள். உன் கட்டளைக்கு காத்திருக்கும் கணவன்..." என கண் சிமிட்டி சிரிக்க,

"இது எப்போதிருந்து?"

"பொண்டாட்டி காலை மடியில் வச்சு இதமா பிடிச்சுவிடும் போது தெரியலையா ராஜா விஜயேந்திர பூபதி மனைவியிடம் மண்டியிட்டு வெகு நாளாச்சு என்பது..."

"அரசருக்கு வருத்தம் ஏதும் இல்லையே...?" என அவன் கேசம் கலைக்க,

"இல்லை நந்தினி! உன்னிடம் கட்டுண்டு இருப்பதில் எப்போதுமே மகிழ்வு தான்." அவளது மேடிட்ட வயிற்றில் கன்னம் வைத்து குழந்தையின் அசைவுக்காக ஆசையாக காத்திருக்கத் தொடங்கினான் அவள் கணவன்.

"அத்தான்..." ஆசையான அவளது அழைப்பு அவனை எட்டவேயில்லை. மனம் பழய நினைவுகளில் சிக்கி தவித்தது. 'பாவம் சிறு பெண்ணை எவ்வளவு காயப்படுத்திவிட்டோம்'

"அத்தான்... விஜய் அத்தான்..."

"சிட்டு... என்னையா கூப்பிட்ட?" ஆச்சாரியமாய் அவள் கன்னம் தாங்க

"பார்த்தீங்களா? இதுக்கு தான் கூப்பிட மாட்டேன்னு சொன்னேன்." செல்ல சிணுங்கலுடன் முகம் திருப்ப,

"சாரி டா... ஏதோ நியாபகத்தில் கவனிக்கல..."

"போடா... இனி அத்தான்... சட்டை பொத்தானெல்லாம் கிடையாது! எப்போதும் போல் விஜய் தான்."

"உங்கள் விருப்பமே பிரதானம் அரசியாரே... எனக்கும் அத்தான் என்னும் அழைப்பு அந்நியமாக தான் தெரிகிறது... கூப்பிட்டால் இருவருக்குமே பழகிவிடும். நந்தினியில் இருந்து நான் சிட்டுக்கு மாறவில்லையா? முயற்சி செய்து பாரேன்..." அவளது மறுப்பை ஏற்க முடியாமல் சுற்றி வளைத்து கெஞ்சிக் கொண்டிருந்தான் அவள் கணவன்.

வழக்கம் போல் மாமனார் தூங்கச் சென்றுவிட புதுப் புது கனவுகளுடன் மனைவியை பின் தொடர்ந்தான் பிரபா. வந்ததும் வராததுமாய் வளையல்கள் அனைத்தையும் கழட்டிக் கொண்டிருக்க... அவனது கனவுகள் பின்னங்கால் பிடரியில் பட ஓடியே போயின...

(இவ தாலியே போடமாட்டா இதையெல்லாம் எப்படி போடுவா?) மனம் சுனங்கினாலும் அதை காட்டிக் கொள்ளாமல்,

"உதவி செய்யட்டுமா வனிம்மா?" மென் முறுவலுடன் அவள் கரம் பற்ற அதற்காகவே காத்திருந்தவள் போல்...

"எவ்வளவு வளையல்? கஷ்டமா இருக்கு...!"

"அப்படி யாரு கஷ்டப்பட்டு கழட்டச் சொல்றது?" வாயோடு நின்று போயின வார்த்தைகள்.

"வனிம்மா... அடுத்து நம்மகிட்ட எல்லோரும் எதிர்பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க இல்லையா? அவங்களுக்கு என்ன தெரியும் நாம வெறும் ரூம் மேட்ஸ் தான் என்பது..." அவள் என்ன

சொல்லப் போகிறாள் என்னும் எதிர்பார்ப்பு எகிறிக்குதிக்க... கீழ் கண்ணால் அவள் முகம் பார்த்தபடி, வளையல்களை கழட்டிக் கொண்டிருக்க...

"ரூம் மேட்ஸ்ஸா? எந்த ஊரில் ரூம் மெட் இப்படி கையை பிடிச்சு கொஞ்சிகிட்டு இருப்பானாம்?" முகம் வாடிவிட்டது பவானிக்கு.

"வாயைத் திறந்துடாத முத்து கொட்டிடப் போகுது..." என்று தனக்குள் எண்ணி கடுப்பாகியவன் அதற்கு மேல் எதுவும் பேசவேயில்லை.

வண்ணம் வாரியாக வளையல்களை பிரித்து ஸ்டாண்டில் மாட்டிய பிறகு இரவு உடைக்கு மாறி அவள் வந்து படுக்க,

"லட்டு... தேங்க்ஸ் டா! முதல் முறையா என்னோட வெளியில் வந்த அனுபவம் எப்படி இருந்துச்சு?" மெல்லிய அணைப்புடன் கழுத்து வளைவில் முகம் பதித்து வினவ, அவனது மூச்சுக் காற்றை இம்சையாய் உணர்ந்த போதும் விலக்க தோன்றாமல்,

"ம்... கொஞ்சம் மிரண்டுட்டேன்..." அவள் எதைச் சொல்கிறாள் என்பது புரிய, சிறு சிரிப்புடன்,

"நானும் தான் லட்டு... பட் உனக்கு அந்த சடங்கெல்லாம் செஞ்சது பார்க்க நல்லா இருந்துச்சு." கன்னத்தில் முத்தமிட

(என்ன செய்கிறான் இவன்?) பட்டென எழுந்தவள் கரம் பற்றியவன்,

"ப்ளீஸ் லட்டு... உனக்கு பிடிக்கலைன்னா வேண்டாம். மெல்லிய அணைப்பு, சின்னதா சில முத்தம் இதிலெல்லாம் பிடிக்காமல் போக ஏதாவது இருக்கா லட்டு? நாம ரெண்டு பெரும் சண்டைக்காரங்க இல்லையே... பிடிச்சிருக்கு தானே?"

பதில் சொல்லாமல் அவனிடமிருந்து விலகியவள், ஒரு பத்திரிகையை கொண்டுவந்து கொடுக்க,

"கேக்குறதுக்கு பதில் சொல்லாத... பிடிச்சிருக்கா பிடிக்கலையா எப்படி எடுத்துகிறது? படுத்துறடி" (பிரபா மைண்ட் வாய்ஸ் தான்! சத்தியமா நாங்க இல்லை ...)

"என்னடா இது ...?"

"நாம ரெண்டு பெரும் சேர்ந்து போகலாம்ன்னு சொன்னிங்களே பிரபா... அந்த கல்யாண இன்விடேஷன்..."

"ஓ... எப்போ கல்யாணம்?"

"அடுத்த வாரம்"

"சரி போகலாம்... ரொம்ப நெருக்கமான தோழியா? எப்போ போகணும்."

"காலையிலேயே போகணும்... இவ தான் ஸ்கூல்லே இருந்தே என்னோட பெஸ்ட் ஃபிரண்ட்."

"தூங்கலாமா? குட் நைட்." எதற்கு வம்பென்று தொடும் தூரத்தில் இருந்தாலும் தொடாமலேயே மனதை கட்டுப்படுத்தி படுத்துவிட்டான். இருக்கும் நெருக்கமும் போய்விடுமோ என்ற பயம் தான்.

அவளோ வெகு நேரத்திற்கு பிறகு அவனது கரத்தை எடுத்து தன் இடையில் படரவிட்டு இறுக பிடித்தபடியே தூங்கிப் போக... தூங்காமல் விழித்திருந்தவனுக்கு மனைவியை மூச்சு திணற இறுக்கிக் கொள்ள வேண்டும் போல் வேகம் வந்தது.

"வேண்டாம் பிரபா இப்போதான் ஒரு ஃபார்முக்கு வந்திருக்கா கெடுத்துறாத..." மனதிற்கு ஆணையிட்டவன், மீண்டும் தன் தூக்க நாடகத்தை தொடர்ந்தான். அன்று அவனால் கண்களை மூடவே முடியவில்லை என்பது தான் உண்மை.

வழக்கம் போல் இரவின் தனிமையில் ஆதியுடன் கதையளக்க தொடங்கிவிட்டாள் நிவி.

"ஆதி அத்தான் உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்ல மறந்தே போயிட்டேன். எங்களுக்கு புது கோச் வந்திருக்கார். அவர் உங்களுக்கும் தெரிஞ்சவர் தான்... யாருன்னு சொல்லுங்க பார்க்கலாம்?"

"அப்பா! ஒருவழியா நல்ல கோச் கிடைச்சுட்டாரா? இனி அதைப் பத்தி புலம்பமாட்டியே? தப்பிச்சேன். எனக்கு

தெரிஞ்சவன்னா பிரபவா? மச்சான் எதுவும் சொல்லலையே... தெரியலடி நீயே சொல்லு."

"சிவா... சிவாண்ணா... நியாபகமில்லையா?" குதூகலமாய் கேட்க,

"அந்த கடன்காரனை எப்படி மறப்பேன்... ? அவன் எதுக்கு வந்து தொலச்சான்? உனக்கு ஆப்படிக்கத் தான்..." என்ற மனதின் பதில் சரிதான் என்பது போல,

‘‘ஞாபகம் இருக்கு தானே? இப்போ பெரிய ஆளா, சூப்பரா இருக்காங்க! உங்களைக் கேட்டதா சொல்ல சொன்னாங்க" என அளந்து கொண்டிருக்க,

"இவளுக்கு என்னைத் தவிர ஊரில் இருக்கும் அனைவரும் சூப்பராக தான் இருப்பானுங்க, நந்து புருஷனையும் இப்படி தான் சொன்ன, இப்போ இந்த கடன்காரன்." கடுப்பாகியவன்,

"ஏண்டி என்னைப் பார்த்தா மேன்லியா இல்லையா?"

'ஏன் சம்பந்தம் இல்லாம கேக்குறான்? எதுக்கு வம்பு?' என்று நினைத்தவள்,

"சூப்பரா இருக்கீங்க ஆதிஅத்தான்." (இவ ஃபீல் பண்ணி சொல்ற மாதிரி இல்லையே கேட்டதுக்காக அடிச்சுவிடறாளோ?)

"ஆதி அத்தான் ரெண்டு டோர்னமெண்ட் போனோம். சிவாண்ணா மாறவேயில்லை செம கேரிங்... வீட்டில பொண்ணு பார்க்கிறாங்களாம்... உங்களுக்கு கல்யாணம் ஆயிடுச்சான்னு

கேட்டாங்க. உங்களை பார்க்கணும்னு சொன்னாங்க. நீங்க வந்திருக்கிங்கன்னு சொல்லவா?"

"என்னை எதுக்கு பார்க்கணுமாம்? அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்."

"ஏன் இப்படி சொல்றிங்க... அவங்க உங்க ஃபிரண்டு தானே?"

"ஊன்கென்னடி வருத்தம்? எனக்கு பிரபாவையும், நந்துவையும் தவிர நண்பர்கள் யாரும் கிடையாது. அவன் என் கிளாஸ் மேட் அவ்வளவு தான். சும்மா அவனை பத்தி தொணதொணப்பதை நிறுத்து." வெடுக்கென சொல்லிவிட்டான்.

பாவமாய் முகத்தை வைத்துக் கொண்டு படுத்துவிட்டாள் அவனும் மேற்கொண்டு பேசவேயில்லை. மனதில் இனம் புரியாது பாரம் வந்து குடி கொண்டது ஆதிக்கு. கைப் பொருள் களவு போகப் போவது போல் பதைப்பு மேலிட தூக்கம் தொலைத்து...

அறியாப்பிள்ளையென தூங்குபவளையே பார்த்துக் கொண்டு இரவை நெட்டி தள்ளினான். மூன்று நட்புகளுக்குமே அன்றய இரவு வித்தியாசமானதாகத் தான் இருந்தது.

விடியல் எப்படி இருக்குமோ...?

# அத்தியாயம் 31

ஆதி ஊரில் இருக்கும் போதெல்லாம் நிவியை அவன் தான் கல்லூரியில் கொண்டு போய் விடுவான். அன்றும் அப்படிதான் இருவரும் கிளம்பிச் சென்றனர்.

கல்லூரியை அடைந்ததும் வண்டியில் இருந்து கீழே இறங்கியவளையும் ஆதியையும் கண்டுகொண்டான் சிவா.

"ஆதி!" என கை அசைத்தபடி அவனை நோக்கி வர, கண்டுகொள்ளாதவன் போல் வண்டியை எடுத்தவனின் கரம் பற்றி,

"ஆதி அத்தான் சிவாண்ணா... உங்களை தான் பார்க்க வராங்க..." அவர்கள் பேச்சு காதில் விழும் அளவுக்கு நெருக்கமாக வந்துவிட்டான் சிவா.

"உன் வேலையை பார்த்துக்கிட்டு போடி... யார்கிட்ட எப்படி நடந்துக்கணும்னு எனக்கு தெரியும்." முறைப்புடன் சிடுசிடுத்தவன் கிளம்பிச் சென்றுவிட்டான்.

'ஏன் இவ்வளவு கோபம்?' ஒன்றும் புரியாமல் விழித்தவளிடம்,

"ஆதி இன்னும் மாறவேயில்லை தானே? உன்னிடம் மோசமாத் தான் நடந்துக்கறான்... திமிர்"

"ஐயோ! அப்படி இல்ல சிவாண்ணா. எப்போதும் அன்பா தான் பேசுவாங்க. ஏன்னு தெரியல இப்ப தான் கோவிச்சுக்கிட்டாங்க."

"அவனுக்கு வக்காலத்து வாங்குறதை நிறுத்தவே மாட்ட... இனி 'சிவா'ன்னு கூப்பிடு! அண்ணனெல்லாம் வேண்டாம். ஈவினிங் பிராக்டிசுக்கு வருவ தானே?"

"இல்ல, ஆதி அத்தான் இருக்கும் வரை சீக்கிரம் வீட்டுக்குப் போகணும்."

"என்னவோ பண்ணு. உன்னை திருத்தவே முடியாது." அவனும் கோவமாக கிளம்பிவிட்டான்.

சிவாவிற்கு நிவியின் மீது எப்போதுமே ஒரு சாஃப்ட் கார்னர் உண்டு. பெற்றோர் இல்லாமல் மாமாவிடம் வளர்பவள் என்பது ஒரு காரணமென்றால் அவன் கண்களுக்கு மட்டும் ஆதி எப்போதுமே வில்லனாக தெரிந்தது மற்றொரு காரணம்.

எப்படியாவது நிவேதாவை அவனிடமிருந்து காப்பாற்றிவிட வேண்டுமெனும் எண்ணம் இப்போது வலுப்பெறத் தொடங்கியது. அதற்கான முதல் படி தான் அண்ணன் என அழைப்பதை தடுத்தது.

சிவாவின் பெயரைச் சொன்னாலே ஆதி கோபப்படுகிறான் என்பதால் நிவேதா ஆதியிடம் சிவாவைப் பற்றிப் பேசுவதே

கிடையாது. இருவரும் தன்னால் தான் முட்டிக் கொள்கிறார்கள் என்பது தெரியாமலேயே அமைதி காத்தாள்.

பவானியும், பிரபாவும் சேர்ந்து செல்ல திட்டமிட்டிருந்த திருமண விழாவும் வந்தது. காலையில் கண்விழித்து எழப் போனவளை தன்னோடு இறுக்கியவன்,

"மாமா இன்று வேஷ்டியும், சட்டையும் தான். என்கிட்ட இருக்க சட்டைக்கு பொருத்தமா புடவை சூஸ் பண்ணு வனிம்மா... சேம் ட்ரெஸ் கோடில் இருந்து ஆரம்பிப்போம்.!" என அவள் காதுமடலில் தன் மீசை உரச கிசுகிசுத்தான்.

ஆமோதிப்பாய் தலையசைத்து சிறு சிரிப்புடன் விலகிச் சென்றாள். கொஞ்ச நாட்களாக இவர்கள் உறவில் முன்னேற்றம் வந்திருந்ததது. கணவனது சிறு, சிறு தீண்டல்களை அனுமதிப்பது மட்டுமல்ல அதை ரசிக்கவும் ஆரம்பித்திருந்தாள் பவானி. அழகு சிலை ஒன்று தன்னை நோக்கி வருவது போல் தான் தோன்றியது பிரபாவுக்கு.

"போகலாமா வனிம்மா?" பார்வையால் விழுங்கியபடி வினவ,

'ஏன் இப்படி பார்த்து தொலைக்கிறான்?' வெட்கமும், கூச்சமும் போட்டி போட இதயம் படபடக்க அவன் கண்ணில் இருந்து மறைந்துவிட துடிப்பவள் போல் விரைந்தவளை இழுத்து அணைத்தவன்,

"அசத்துரடி லட்டு! அந்த நாய் பார்த்ததுமே சாகப் போகுது... உண்மையை சொல்லட்டுமா? என்னால முடியல... மயக்குறடி மோகினி!" என மோகத்துடன் அவள் இதழ் நோக்கி குனிய, எல்லை மீறுகிறான் என்று உள்மனம் பதற,

"போதும் பிரபா..." விலக்க மனமின்றி அவன் மார்பில் கைவைத்து தள்ளினாள். அவளது பலவீனமான நிலையை சாதகமாகிக் கொள்ள துடித்த மனதை கட்டுக்குள் கொண்டுவந்தவன்,

"கொல்றடி!" என சிரித்தபடியே விலகிவிட்டான்.

"பாவம் ரொம்பவும் ஆசையாக வந்தானோ... அனுமதித்திருக்கலாமோ... ஒரு முத்தம் தானே..." அவன் நினைத்து போல் அவள் மனம் அங்கேயே நின்றது.

இரவு திட்டத்துக்கு இப்போதே அடிப் போடுகிறான் என்பது தெரியாமல் அவனுக்காக வருந்திக் கொண்டிருந்தாள் அந்தப் பேதை.

தோழிகள் மட்டுமல்ல... அர்ஜூனும் இவர்களை தான் பார்த்துக் கொண்டிருந்தான். இன்று மனைவியை விட்டு தனித்து வந்திருந்தான். அவனைக் கண்டதும் உடல் முழுவதும் மெல்லிய பயம் பரவ தானாகவே கணவனது கரத்தை இறுக பற்றிக் கொண்டாள்.

சுஜா மேடைக்கு அழைக்க, தலையசைப்பில் அனுமதிகொடுத்த கணவனுக்கு கண்களாலேயே நன்றி கூறியவள் தோழிகளுடன் சேர்ந்து கொட்டமடிக்க தொடங்கினாள். பயம், தயக்கம் ஏதுமின்றி சந்தோசமாக சிரித்துக் கொண்டிருப்பவளையே ரசித்து பார்த்துக் கொண்டிருந்தான் அவள் கணவன்.

இவர்களது இணக்கம் வெறியேற்ற அவனருகில் வந்து அமர்ந்த அர்ஜூன்,

"எச்சில் சாப்பாட்டிற்கே இவ்வளவு அலைப்புறுதலா? உன் தகுதிக்கு இதுவே அதிகம் தான் இல்லையா?" இகழ்ச்சியாய் வினவ, பொது இடம் என்பதால் கை முஷ்டி இறுக்கி தன் கோபத்தை குறைத்துக் கொண்டவன், முகம் கடுக்க அங்கிருந்து விலகி சென்றுவிட்டான்.

பிரபா தனக்கு பயந்து செல்வதாக நினைத்த அர்ஜூன் அவனை சீண்ட எண்ணி பின்தொடர, இதையெல்லாம் மேடையில் இருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்த பவானியும் பதட்டத்துடன் இவ்விருவரையும் தொடர்ந்து வந்தாள். (இது நல்லதுக்கான்னு தெரியலையே?)

மண்டபத்திற்கு வெளியே ஆளரவமற்ற இடத்திற்கு வந்தவன் தன் கோபத்தை சமன் செய்துகொள்ள பிரயத்தனப் பட்டுக் கொண்டிருக்க, அங்கு வந்த அர்ஜூன்,

"உண்மை வலிக்கத் தான் செய்யும் புரோ..." என நக்கலடிக்க, அன்று மனைவியிடம் பேசிய பேச்சிற்கே கொலைவெறியில் இருந்தவனை இந்த வார்த்தைகள் கொதிநிலைக்கு கொண்டு வர... சட்டென அவன் மூக்கில் குத்தினான் பிரபா. மூக்கு உடைந்து ரத்தம் கொட்டத் தொடங்க அந்நேரம் அங்கு வந்த பவானி,

"ஐயோ!' என அலறியபடி விரைந்து வர,

"சொன்னேன்ல! எச்சில் இலை தான். என்னை அடித்ததும் எப்படி துடிக்கிறா பார்!' என புருவம் ஏற்றி சிரிக்க,

‘‘கொன்றுவேண்டா! என் பொண்டாட்டியை பத்தி எனக்குத் தெரியும்.’’ வெறியாகிப் போனவன் வாயிலேயே குத்த உதடு கிழிந்து ரத்தம் வந்தது.

இவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? யாரேனும் பார்த்தால் என்ன நினைப்பார்கள்? அந்த மிருகத்திடம் இவன் எதற்கு மல்லுக்கு நிற்கிறான்? பார்ப்பவர்கள் இவனையும் அல்லவா தவறாக நினைப்பார்கள். கணவனை காக்க பதட்டத்துடன் விரைந்து,

"என்ன பிரபா இது? வாங்க!' என கணவனின் கரம் பற்றி மண்டபத்திற்குள் இழுத்துச் சென்றவள் பின் வரிசையிலேயே அவனை அமரச் செய்து தானும் அருகமர்ந்து, குளிர்பானம் தருவித்து... குடிக்கச் செய்து, மெல்ல அவன் கரத்தை அழுத்திக்

கொடுக்க அவளது அன்பிலும் அனுசரணையிலும் அவன் கோபம் மட்டுப்பட்டது.

"பிரபா இப்போ ஓகேவா?" கன்னம் தாங்கி கேட்க, இதை பார்த்துக் கொண்டிருந்த தோழிகள்,

"மக்களே பவானிக்கு ஒரு ஓ போடுங்க... சுஜா நல்லா பார்த்துக்கோ... நீயும் இப்படி தான் கேர் பண்ணனும்" என கூச்சலிட, பட்டென தன் கரத்தை விலக்கிக் கொண்டவளின் கன்னங்கள் சூடேரி சிவக்க அப்பொழுதே அவளை அள்ளிக் கொள்ள வேண்டும் போல் இருந்தது அவனுக்கு.

இது தான் சமயமென்று மணப்பெண்ணை விட்டு இவளை சூழ்ந்து கொண்டு கலாய்க்க, அவர்களை சமாளிக்க முடியாமல் திணறியவள் கணவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

"போதும் விட்டுடுங்களேன்..." என்று மனைவிக்காக பரிந்து கொண்டு வந்தவனையும் ஓட்டினார்கள். மனைவியின் அழகில் கிறுகிறுத்து போயிருந்தவனுக்கு அவளது இணக்கமான பேச்சும், சிரிப்பும், செல்ல சிணுங்கலும், தீண்டல்களும் மோகமேற்ற சூழ்நிலை மறந்து அவளிடம் லயித்திருந்தான்.

இன்று இவளில்லாமல் முடியாது என்பதை உணர்ந்தவன், வரும் வழி நெடுகிலும் பார்வையால் வருடியபடியே வர, மகளும் மருமகனும் இணைந்து வருவதை கண்டவரின் மனம் நிறைந்து போனது.

"பேபிம்மா கல்யாணம் நல்லபடியா முடிஞ்சிருச்சா? சாப்பிட்டீங்களா மாப்பிள்ளை?" என இருவரையும் விசாரிக்க,

"சாப்பிட்டாச்சு மாமா. நீங்க சாப்பிட்டீங்க தானே? நான் ஆபிஸ் கிளம்பறேன். நீங்க ரெண்டு பேரும் ரெஸ்ட் எடுங்க. சாயங்காலம் பார்க்கலாம் மாமா."

"நீங்களும் கொஞ்ச நேரம் படுக்கலாமே மாப்பிள்ளை. மணி இப்பவே மூணாச்சு. ஒருவழியா நாளைக்கே போகலாமே..."

"இல்ல மாமா புரொடக்சன் எப்படி போயிட்டு இருக்குன்னு பார்த்துட்டு வந்துடறேன்... நீங்க படுங்க.." உடை மாற்ற மேலே சென்றுவிட்டான்.

" பொறுப்பான மனுஷன்டா! சுஜாவை ஒரு நாள் விருந்துக்கு வரச் சொல்லுடா... எப்போ அமெரிக்கா போறா...?"

"ஒருமாசம் ஆகும்னு சொன்னாப்பா... அவங்க கமிட்மெண்ட்ஸ் எல்லாம் முடியட்டும் சொல்றேன்னு சொல்லிருக்காப்பா. எல்லா ஃபிரண்ட்ஸயுமே கூப்பிடலாம்னு இருக்கேன்..." மகள் இவ்வளவு பொறுப்பாக பேசுவதை பார்த்தவருக்கு பெருமை பிடிபடவில்லை.

"மாப்பிள்ளை உன்னை நல்லாவே தயார் பண்ணியிருக்கார் பேபிம்மா... பேச கத்துகிட்ட. முன்னாடியெல்லாம் இந்த அப்பனோட நின்னு பேச நேரம் இல்லாமல் இருப்ப... இப்போ நிறைய மாறிட்டடா..." மகளின் தலை கோத...

"சாரிப்பா..." தந்தையின் தோள் சாய்ந்து கொண்டாள்.

"என்ன வனிம்மா... அப்பவோட ஒரே கொஞ்சல்சா? அப்படியே எனக்கும் ஒரு பை சொல்லிடேன். நானும் சந்தோஷப்படுவேன்." சிரித்தபடியே அருகில் வந்தவன்,

"வரேன் மாமா... பை டா!" என அவள் கன்னம் தட்டிச் செல்ல...

'அப்பாவுக்கு முன்னாடியே கன்னத்தை தட்டுறான்... ஒரு மார்க்கமா தான் இருக்கான்.' ஏனோ கோபமில்லா மனநிலை அவளையே அதிரச் செய்தது.

பிரபா நினைத்தது போல் அன்று விரைவாக வீட்டிற்கு வரமுடியவில்லை. தவறுதலாய் தொழிலாளியின் கை மெஷினில் மாட்டி அறுபட... பெரும் பிரச்சனை கிளம்பியது.

வேலைநிறுத்தம் செய்யப்பட்டது. பாதுகாப்பு நடவடிக்கைகள் சரியாக செய்யப்படவில்லை என்பது தான் கரணம் என கண்டுபிடிக்கப்பட. ... யூனியன் கூடியது. உடனடியாக நஷ்டஈடு கேட்டது. நேரடியாக இவனே களமிறங்க வேண்டியதிருந்தது.

ஒருவழியாக எல்லா பிரச்சனையும் சுமுகமாக முடிந்து வீடுவந்து சேர பாதி ஜாமம் ஆகிவிட்டது. ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் மனைவியை பார்த்ததும் அன்றய நிகழ்வுகள் வரிசை கட்டிக் கொண்டு வந்து அவனை மீண்டும் கிளறச் செய்தன.

அதோடு தொழிலாளர் பிரச்சனையால் உண்டான மன அழுத்தத்தில் இருந்தும் மீண்டு வர ஒரு வடிகால் தேவைப்படவே, தூங்குகிறாள் என தெரிந்தும் கட்டுப்படுத்த முடியாமல்,

"வனிம்மா..." இடை தழுவி, கன்னம் உரசி காதில் கிசுகிசுக்க... கண்களை திறக்க முடியா தூக்கத்தில்

"ம்..." என்பதே பதிலாய் கிடைக்க,

"சாரிடா... தொந்தரவு பண்றேன்னு தெரியுது. பட் முடியலடா... ப்ளீஸ் கண்ணை திறந்து பாரேன்... மாமாக்கு நீ வேணும் லட்டு..." மூடிய இமைகளில் ஈர உதடுகள் கொண்டு வருட, தூக்கமும் இல்லா விழிப்புமில்லா நிலைக்கு வந்திருந்தாள் பவானி.

"லட்டு... ஐ லவ் யூ டா..." கன்னத்தில் அழுந்த முத்தமிட, அதில் உண்டான வலி அவளை முற்றிலுமாக விழிக்கச் செய்தது.

கணவனின் கையணைப்பில் வசமாக பொருந்தியிருந்தவளால் அவனை விட்டு விலக முடியவில்லை. முகமெங்கும் முத்தக் கோலம் போட்டவன்,

"ப்ளீஸ் லட்டு! எத்ரிமறையா எதுவும் சொல்லிடாத... நீ இல்லாமல் முடியாது. இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பத் தொடங்கிய பின் இது தவறில்லை. தள்ளிப் போடவேண்டிய அவசியமும் இல்லை." அவன் கரம் அவள் மேனியில் எல்லை

மீறி படர்ந்து கொண்டிருக்க, அவளும் கிளர்ந்தாள். அதை உணர்ந்தவன்,

"தேங்க்ஸ் லட்டு... என் பிறந்தநாளின் போது ஐ லவ் யூன்னு சொல்லி உன்னை எடுத்துக்கச் சொன்னியே... அந்த நேரம் சுயநினைவில் இல்லா உன்னிடம் அது தவறுன்னு தோன்றியதால வெகு சிரமப்பட்டு என்னை கட்டுப்படுத்திக்கிட்டேன்.... இனி முடியாது."

'ஐயோ! இது எப்போது நடந்தது? ஒன்றுமே நியாபகமில்லையே... அப்படியே இருந்தாலும் இப்பொழுது தானே விரும்பவே தொடங்கியிருக்கோம் அதற்குள்ள ஏன் இவ்வளவு அவசரப்படுறான்?

அர்ஜூனின் தேவை கம்பெனியை இழுத்து மூடுறதுன்னா இவன் தேவை என்னை சுகிப்பது தானா? அவனை போலவே இவனும் முடியாத நிலை வரும் போது விலகி போயிடுவானோ?' என்று மனம் தன்போக்கில் சிந்தித்துக் கொண்டிருக்க...

அவளது இரவு உடையின் முதல் இரண்டு பட்டன்கள் வாய்பிளந்து வஞ்சனையில்லாமல் அவன் முகம் புதைக்க வசதி செய்து கொடுத்தன. தன் செழுமைகளில் உஷ்னமூச்சும், ஈர உதடுகளும் நடத்தும் நாடகத்தில் திகைத்துப் போனவள்,

"பிரபா... நோ!" அவனை விலக்கி தள்ள, அதை சற்றும் எதிர் பார்க்காதவன்,

"என்னாச்சு லட்டு? மாமாவை பார்த்தா பாவமா இல்லையா?" என அவள் இடை பற்ற...

"ப்ளீஸ் பிரபா இப்போ வேண்டாமே..." அவன் கரத்தை அசையவிடாமல் இறுகப் பற்றிக் கெஞ்ச,

"அன்று கேட்டியே... கண்ணா லட்டு திங்க ஆசையான்னு? இன்னைக்கு செம ஆசைடி லட்டு! ப்ளீஸ் தடுக்காத..." முன்னேற முயன்று கொண்டிருந்தவனிடம் இருந்து விலகி எழுந்தவள் தன் ஆடையை சரிசெய்து கொள்ள, ஆள முடியா கோபத்தில் அவன் வெறிக்க...

"குடி போதையில் உளரியதை வச்சுக்கிட்டு இம்சை பண்ணாதீங்க பிரபா... எனக்கு கொஞ்சம் டைம் கொடுங்க..."

"இன்னும் எவ்வளவு டைம் தான் எடுத்துகுவ? என்னவோ நேத்து கல்யாணமாகி இன்னிக்கே உன்மேல பாஞ்சது மாதிரி பேசுற... இத்தனை நாளும் உன் மனசில் நான் இல்லன்னு தான் விலகி இருந்தேன்.

இப்போ தான் என்னை விரும்ப ஆரம்பிச்சுட்டியே இன்னும் ஏன் விலகிப் போற? காலையில் நீ நடந்துகிட்ட விதத்தை யோசிச்சுப்பார் உனக்கே புரியும்."

"உங்களை பிடிச்சிருக்கு... ஆனால் விரும்பறனான்னு தெரியல... அது தெரியாதவரை உங்களோடு இயல்பா ஒன்ற முடியாது. புருஞ்சுக்கோங்க பிரபா."

‘இது தான் உன் பிரச்சனையா? தெரிய வைக்கிறேன் நீ என்னை விரும்பறங்கிறத உனக்கு இந்த நிமிஷமே புரிய வைக்கிறேன்’ என்று நினைத்தவன்,

"நான் உனக்கு இம்சையாடி? குடி போதையில் ஆழ்மனசில் உள்ளதெல்லாம் வெளியே வரும்னு செல்வாங்க. அதனால் தான் நீயும் என்னை விரும்புறேன்னு நினைச்சேன். தவறுதான்.

இன்னும் உன் மனம் முழுக்க அந்த துரோகியை தான் சுமந்துக்கிட்டு இருக்க, அதனால் தான் நான் நல்லவன்னு தெரிஞ்சும் என்னை ஏற்க முடியல..." புரையோடிய புண்ணை கத்தி கொண்டு கீறி சரிசெய்வது போல் அவள் ரணத்தை வார்த்தைகளால் கீறி மருத்துவம் செய்ய முயன்றதால் வலிக்கப் பேசினான்.

'எத்தனை பெரிய குற்றச்சாட்டு?' அதிர்ந்து போனவள்,

"பிரபா.." என கை ஓங்க... அவள் கரம் பற்றியவன்,

"என்னை உன் வீட்டு வேலைக்காரன்னு நினைச்சியா? உன் புருஷன்டி. இது தான் கடைசி! இன்னொரு முறை கை ஓங்கின ஒடிச்சிடுவேன். உனக்கெல்லாம் எதுக்குடி கோபம் வருது? இன்னும் அவனை தூக்கி எரிய முடியாததால தான் அவனை அடிச்சா உனக்கு வலிக்குது. பதறிகிட்டுவர..."

"போதும் பிரபா! இவ்வளவு கீழ்த்தரமான மனுஷனா நீங்க? உங்களை யாரும் எதுவும் சொல்லிடக் கூடாதுன்னு தான் ஓடி

வந்தேன். அந்த பதட்டமும், பரிதவிப்பும் அவனுக்காக இல்ல. உங்களுக்காக...

உங்களை யாரும் தப்பா நினச்சுடக் கூடாதுன்னு தான் துடிச்சேன். உங்க வருத்தம் தாங்க முடியாமல் தான் தவிச்சேன்." விசும்பி அழ அவனுக்கு வேண்டியது இது தானே? கோபம் காணாமல் போக,

‘‘வனிம்மா... அடுத்தவங்க என்னை எப்படி நினச்சா உனக்கென்ன? ஏன் என் வருத்தம் உன்னை பாதிக்குது? எதுக்கு இந்த பரிதவிப்பு. இப்பக் கூட நான் உன்னை தவிறா நினைக்க கூடாதுன்னு மருகுறியே ஏன்? சொல் வனி... நீ என்னை விரும்புறியா?’’ அவளது அறண்ட விழிகளைக் கண்டவன்,

"இதற்கான விடை தெரியும் வரை நீ எனக்கு வேண்டாம். என் இம்சையை சகித்துக் கொள்ள வேண்டி இருக்காது. குட் நைட்." பால்கனியில் படுத்துவிட்டான்.

அவள் தான் ஏற்கவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் குழம்பிப் போனாள். ஏற்கனவே ஒருவனை சட்டென நம்பி ஏமாந்த வலி இன்னும் ஆறாமல் இருக்க இவனை ஏற்பது பற்றி தெளிவு பெற முடியாமல் தன்னுள்ளேயே நொந்து துவண்டாள்.

காலை வெகு நேரத்திற்கு பிறகே எழுந்தவள் கணவன் இல்லாததைக் கண்டு கொண்டாள். தன்னையறியாமல் மனம் அவன் முகம் காண ஏங்குவது புரியத் தான் செய்தது.

அலுவலகம் சென்ற பிரபாவுக்கு சவால் ஒன்று காத்துக் கொண்டிருந்ததது. நேற்றே முடுவுக்கு வந்துவிட்டது என எண்ணிய பிரச்சனை இன்று விஸ்வரூபம் எடுத்து நின்றது. காயம்பட்ட தொழிலாளியை நேரில் காணச் செல்ல அங்கே அவனது குடும்பத்தார் நஷ்டஈடு போதாதென்றனர்.

யூனியன் தலைவரோ நஷ்டஈடை கருத்தில் கொள்ளாமல் பாதுகாப்பு குறைபாடு என்பதையே காரணம் காட்டி பெரிய சட்டச்சிக்கல் உருவாக்க திட்டமிட, அவருக்கும் அர்ஜூனுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமோ? அவன் தான் பின்னணியில் இருந்து தூண்டிவிடுகிறனோ? என்ற சந்தேகம் வந்தது பிரபாவுக்கு.

முடிந்தவரை மாமனாரிடம் கொண்டு செல்லாமல் இந்த பிரச்சனையை முடிக்கவே விரும்பினான். அதற்காக வக்கீலை சந்திப்பது. பாதுகாப்பு துறை ஆணையர்களுடன் பேசுவது, யூனியன் லீடருடன் பேச்சு வார்த்தை என நேரமும் நாளும் றெக்கை கட்டிக் கொண்டு பறந்தது.

அதனால் கணவனை பார்ப்பதே அரிதாக்கிப் போனது. அவளோடு போனில் கூட பேசுவதில்லை, அவளருகே படுப்பதில்லை, சொல்லப் போனால் அவன் எப்பொழுது வருகிறான்? எங்கு படுக்கிறான்? என்று எதுவுமே அவளுக்கு தெரியவில்லை. அவனது விலகல் அவளை மெல்ல பாதித்தது.

வேண்டுமென்றே காலதாமதமாக வீட்டிற்கு வந்து பார்த்தாள். இவளது இருப்பு பற்றி எந்த கவலையும் இல்லாமல் பால்கனியில் ஒற்றை தலையணையை மட்டும் வைத்துக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தான்.

தன் வரவு பற்றியெல்லாம் இப்பொழுது கவலைப்படுவதில்லையோ என கணவனை ஆராயத் தொடங்கினாள். ஏற்கனவே அவனது வார்த்தைகளால் பாதிக்கப்பட்டிருந்தவளுக்கு அவனது பாராமுகம் ஏற்க முடியாததாய் இருந்தது.

ஒருவாரத்திற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியவில்லை. கொஞ்சம் குடித்தால் மனம் சமனாப்படும் என தோன்றியது. அப்பொழுது தான் அவள் குடித்து வெகு நாளாகிவிட்டது என்பதை உணர்ந்தாள்.

இதமான சூழலில் இருந்தால் குடியை நாடவில்லை. ஏதேனும் கவலையோ பிரச்சனையோ வந்துவிட்டால் மருந்தாக அதை தான் தேடுகிறோம் என்பது புரிந்தது. மேலும் இரண்டு நாட்கள் தள்ளிப் போட்டுப் பார்த்தவளால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

பைத்தியம் பிடித்திவிடும் போல் தோன்றவே, தனியாகவோ, தோழிகளுடனோ போனால் அதிகமாக குடித்துவிடுவோம் என

பயந்து பிரபாவுடன் போகலாம் என முடிவு செய்து, அவனை தொடர்புகொள்ள,

இவளை கட்டிய நாள் முதல் இவள் நினைவில் பிரத்தியேகமாக வைத்திருக்கும் ரிங்க்டோனை இன்று தான் கவனித்தாள். வெண்மேகம் பெண்ணாக உருவானதோ... அதை சரியாகக் கேட்கவிடாமல் பட்டென எடுத்து,

"சொல் பவானி!" என்றான் அழுத்தமாய். அவனது அந்நியத்தன்மை வெகுவாக பாதித்தாலும்

"பிரபா ப்ளீஸ்... என்னோட நிர்வாணா வரீங்களா?"

"வாட்?" கோபமாக வந்து விழுந்தது வார்த்தை. அதோடாவது நிறுத்தியிருக்க வேண்டும். வழியப் போய் வலையில் சிக்கினாள்.

"மனசே சரியில்ல... கொஞ்சமா குடிக்கணும் போல இருக்கு... (அதைவிட முக்கியமா எனக்கு உன்னை பார்க்கணும்...) இதைமட்டுமே சொல்லி தொலைத்திருக்கலாம். லைட்டாத் தான். ஒரே ஒரு ரவுண்ட். ப்ளீஸ் தனியா போனா கண்ட்ரோல் இல்லாம குடிச்சிடுவேன். ப்ளீஸ்... என்னோடு வாங்களேன்."

"செட் அப்! நீ குடித்து குட்டிசுவரா போறது பத்தாதா? நானும் வரணுமா? உன்னோடு அங்கு என்னை யாரேனும் பார்த்தா எவ்வளவு அசிங்ககமா நினைப்பாங்கன்னு தெரியுமா?"

"கல்யாணத்துக்கு முன்ன நான் கூப்பிடாமலே வந்திங்களே... அப்போ யாரும் தப்பா நினைக்க மாட்டாங்களா?"

"அப்போ நான் உங்கிட்ட கைநீட்டி சம்பளம் வாங்கின வேலைக்காரன். இப்போ உன் புருஷன் ரெண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு."

"நான் என்ன குடிக்கவா சொன்னேன்? கண்ட்ரோல் பண்ணி கூட்டி வருவீங்கன்னு தானே கூப்பிடறேன். குடிப்பதென்ன அவ்வளவு மோசமான விஷயமா? அசிங்கமா பாப்பாங்கன்னு சொல்றிங்க?"

"ஓ! இது ரொம்ப கௌரவமான விஷயம்னு நினைச்சுக்கிட்டுருக்கியா? உன்னால குடிக்காம இருக்க முடியாதுள்ள? எதாவது பிரச்சனைனா அதை சரி பண்ண முயற்சி பண்ணாம அதில் இருந்து தப்பிக்க வழிபார்க்கிற...

எனக்கும் தான் மனசு சரியில்லை. மனசு மட்டுமா பொண்டாட்டியும் தான் சரியில்லை. நான் என்ன உன்னைப் போல குடிக்கவா அலையறேன்? இதோ பார் நீ எவ்வளவுவேனா குடி.... யாரோட வேணா கூத்தடி... கிரெடிட் லிமிட் அதிகமாக்கணுமா? இல்ல உன் தோழிகளையெல்லாம் வரச் சொல்லனுமா?

எனக்கு பயந்து தானே அவங்க உன்னோடு குடிக்க வர்ரதில்ல? நானே பேசி வரச் சொல்றேன். உன் ஆட்டமெல்லாம்

முடிந்ததும் போன் பண்ணு. டிரைவரை வரச் சொல்றேன்." துண்டித்துவிட்டான். இருந்த மன அழுத்தத்தையெல்லாம் அவளிடம் கொட்டிவிட்டான்.

அவனது பேச்சில் மூச்சுவிட மறந்து போனாள் அந்தப் பேதை. (நான் குடிக்கக் கூடாதுன்னு அக்கறையா இருந்தவன் ஏன் இப்படி பேசுறான்? நான் அவனுக்கு முக்கியமில்லையா? என்னை பிடிக்கலையா? வேண்டான்னு நினைக்கிறானோ?) என குழம்பியவளுக்கு எப்பொழுது வண்டியை ஓட்ட தொடங்கினோம் என்பதே தெரியவில்லை.

அனிச்சையாக வண்டி நிர்வாணா நோக்கி போய்க் கொண்டிருந்தது. சட்டென பெரும் இரைச்சல். வண்டி பானட் மீது ஏதோ ஒன்று வந்து விழுந்தது. அதிர்ந்து போய் பிரேக் அடித்து வண்டியை நிறுத்தியவளின் உடல் நடுங்கியது.

கண்ணாடி, பானட் அனைத்தும் ரத்தத்தால் நிறைந்திருந்தது. ஆட்டின் கடைசி நொடி மரண ஓலத்தையும், துடிப்பையும் கண்டவள் அதிர்ச்சியில் இருந்து மீளவே இல்லை. அருகே இருந்து ஓடிவந்தவர்கள் போட்ட அதட்டலிலும், மிரட்டலிலும் தான் சுயம் திரும்பினாள்.

"பெரிய இடத்து பொண்ணுங்களே இப்படித்தான் கண்ணு மண்ணு தெரியாம வண்டி ஓட்டுதுக... இப்போ தான் மூணு மாசத்துக்கு முன்னால குட்டிபோட்டுச்சு. இப்படி அநியாயமா

கொன்னுட்டியே... அந்த குட்டியை இனி எப்படி காப்பாத்துவேன்?" என ஒரு பெண் பெருங்குரல் எடுத்து அழ...

பயமும், மிரட்சியும் தாக்க, தலை சுற்றி, கால்கள் தொய்ந்து விழுந்துவிடுவது போல் தோன்ற காரின் கதவை இருகப் பற்றி, பிரயத்தனப்பட்டு,

"நான் வேணும்னே பண்ணல... வேகமாகக் கூட வரல... தவறு நடந்திடுச்சு மன்னிச்சிடுங்க..." என எச்சில் விழுங்க,

"என்னம்மா மன்னிப்பு...! பெரிய மன்னிப்பு?" என ஆங்காரமாய் ஆட்டின் உரிமைக்காரி கத்த, அங்கிருந்த ஆண்கள்,

"சரி விடு சாந்தி! நடந்தது நடந்து போச்சு. மூவாயிரம் ரூபாய் கொடுங்கம்மா. இந்த ஆட்டோட இன்னய விலை. பாவம் சாந்தி ரொம்பவும் கஷ்டப்படுற குடும்பம்." என்றதும்,

தன் கைப்பையில் இருந்து ஐயாயிரம் எடுத்துக் கொடுக்க, மலைத்துப் போனவர்கள் சட்டென ஆட்டைத் தூக்கிக் கொண்டு வண்டியையும் கழுவி கொடுக்க, அங்கிருந்து கிளம்பியவளால் வீட்டிற்கு ஓட்டிவர முடியவில்லை. பாதியிலேயே காரை நிறுத்தி இறங்கியவள்,

கணவனைத் தொடர்பு கொள்ள... இவளிடம் கோபமாக பேசியவனால் அதற்கு மேல் அங்கிருக்க முடியவில்லை.

அவனும் நிர்வாணாவை நோக்கித் தான் வந்து கொண்டிருந்தான்.

ரோட்டோரத்தில் பதட்டத்துடன் நிற்கும் மனைவியைக் கண்டு கொண்டவன் கைபேசியை உயிர்ப்பிக்காமல் அவளருகே வந்து வண்டியை நிறுத்தி இறங்க, அந்த நொடி தன் பாரம் தாங்க பிறப்பெடுத்தவன் இவன் எனும் நினைவு எழ,

'பிரபா..." என கேவியபடி ஓடிச் சென்று கட்டிக் கொண்டவளுக்கு தாய் மடி கிடைத்த இதம் பரவ, தனது குற்றம் மனதை ரணமாக்க, வாய்விட்டு அழத் தொடங்கிவிட்டாள்.

நட்டநடு ரோட்டில் ஆட்களும் வாகனங்களும் போய்க் கொண்டிருக்க, இவளென்ன இப்படி கட்டிக் கொண்டு அழுகிறாள்? என பதறியவனாய்,

"வனிம்மா... அழாதடா... என்னாச்சு லட்டு? போதும்டா எல்லோரும் வேடிக்கை பார்க்கறாங்க பாரு. அழாதடா..." அவன் சொல்லச் சொல்லத் தான் இவளுக்கு அழுகை அதிகமாகியது. முதுகு வருடியவன்,

"என்ன நடந்தது வனிம்மா? நீ சொன்னால் தானே தெரியும்... அப்போ தானே நானும் உதவ முடியும். இப்படி அழுதுகிட்டே இருந்தா எப்படி? சரி எதுவும் சொல்ல வேண்டாம். வண்டியில் ஏறு... வீட்டில் போய் பேசிக்கலாம்"

"என்னால வண்டி ஓட்ட முடியாது."

"வேண்டாம். நான் ஓட்டறேன். அந்தக் காரை டிரைவர் வச்சு எடுத்துட்டு வந்துடலாம்... முதலில் வண்டியில் ஏறு." என்றவனது குரலின் அழுத்தம் மனதை தொட மறுப்பின்றி அமர்ந்தவள் குழந்தை என அவன் மடி சாய்ந்து மீண்டும் அழ... (

கடவுளே என்ன ஏதுன்னு தெரியாமல் இவளை எப்படி சரி செய்வது?) சற்று நேரம் அழவிட்டவன், தலை கோதி வயிற்றோடு அனைத்துக் கொண்டு, முதுகு வருடி இதம் கொடுக்க மெல்ல அழுகை ஓய்ந்தது.

குடிக்க தண்ணீர் கொடுத்தவன் கண்ணீரை துடைத்துவிட, அவன் மார்போடு ஒண்டிக் கொண்டாள். மெல்ல விசும்பலும் அடங்க,

"என்னாச்சு வனி?" என இதமாகி வினவ,

"'பிரபா நான் ஒரு ஆக்சிடெண்ட் பண்ணிட்டேன்." குரலே எழும்பாமல் சொல்ல,

"குடிச்சிருக்கியா?" அவனது முதல் கேள்வியே இவளை கூறு போட்டது. மறுப்பாக தலையசைக்கவும்,

"எப்போ? தெளிவா சொல். கேஸ் எதுவும் ஃபையில் பண்ணாங்களா? உயிருக்கு ஆபத்தில்லையே? இல்ல ஹிட் அண்ட் ரன்னா?' பதட்டத்துடன் கேட்டவனின் முகம் பார்க்க முடியாமல்,

"கொன்னுட்டேன் பிரபா..." மீண்டும் வெடித்து அழ,

"என்ன சொல்ற? தெளிவா சொல்லித் தொலை பவானி." மிரண்டு போனவனாய் உலுக்க, நடந்த அனைத்தையும் சொல்லி முடித்தாள்.

"ஆடு என்பதால் காசோடு போச்சு. இதுவே ஆளை தூக்கியிருந்தால் என்னவாகியிருக்கும்? குடி உன்னை எங்கு கொண்டுவந்து நிறுத்தியிருக்குன்னு புரியுதா?

இல்ல உன் அப்பாவோட காசை வச்சு எதுவினாலும் சரி பண்ணிடலாம்கிற எண்ணம் இன்னும் இருக்கா? எவ்வளவு பணம் கொடுத்தாலும் போன உயிர் மீளாது." அவனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் சாட்டையாய் சுழன்றன.

அவளுக்காக காத்திருக்கும் தந்தையின் முகம் கூட பார்க்காமல் தன்னறை நோக்கி விரைந்தவளை வெறித்தவன், மாமனாரிடம் நடந்தவற்றைச் சொல்லி மனைவியை தான் பார்த்துக் கொள்வதாக தேற்றிவிட்டு மேலே வர தூங்காமல் உலாவிக் கொண்டிருந்தவளைக் கண்டவன்,

"இன்று நீ உண்ணாவிரதம்இருந்தா அந்த ஆட்டுக்கு உயிர் வந்துவிடுமா? முடிந்தவற்றை மாற்ற முடியாது. இனியேனும் பொறுப்போடு நடக்கப் பழகு.

உனக்கு அம்மா இல்லனாலும் எந்த குறையும் இல்லாமல்... சொல்லப் போனால் கூடுதல் செல்லத்துடன் உன் அப்பா

வளர்த்திருக்கார்.. அந்த ஆட்டுக் குட்டியின் நிலையை நினைச்சுப்பார்...

ஒருவேளை உன் அம்மா இருந்திருந்தால் நீ இப்படி வளர்ந்திருக்க மாட்டாய். குடிக்கப் போகும் உன் காலை முறித்து வீட்டோடு போட்டிருப்பார்கள். ஒரு உயிரை எடுத்துவிட்டு வந்திருக்கியேன்னு கையை ஒடித்து காரை எடுக்கக் கூடாதுன்னு சொல்லியிருப்பாங்க.

உன் காட்டில் மழை தான். தனிக்காட்டு ராணியாய் கண்டிப்பாரற்று உலவுற..." எள்ளலும் ஏளனமும் வழிந்தது அவன் கண்களில்.

# அத்தியாயம் 32

"ஏன் பிரபா இப்படியெல்லாம் பேசுறீங்க? நடந்த தப்புக்காக நான் எவ்வளவு வருத்தப்படறேன் தெரியுமா?"

"நாலு சொட்டு கண்ணீரும், ஒரு நேர பட்டினியும் எல்லாத்தையும் சரி செஞ்சுடாது."

"இப்போ நான் என்ன தான் செய்யணும்?" ஆற்றாமையுடன் அவன் முகம் பார்க்க,

"என்கிட்ட ஏன் கேக்குற? என் சொல் தட்டாத பதிவிரதை மாதிரி பேசாத, சிரிப்பு சிரிப்பா வருது. நானே சப்ஸ்டியூட்... முதலாளியம்மா என்ன சொன்னாலும் ஆகட்டும்னு கும்பிடு போடும் வேலைக்காரன்!" அவனிடம் கோபம் இருந்தது.

சட்டென தன் கரம் கொண்டு அவன் வாய் மூடியவள்,

"போதும் பிரபா... ஏற்கனவே நொந்து போயிருக்கேன். நீங்களும் வதைக்காதீங்க..." என விலகிச் செல்ல,

'ரொம்பவும் வருத்திவிட்டோமோ? தவறை சரி செய்யணும்னு அதிகமா காயப்படுத்துறோமோ?' கவலையாகிப் போனது அவள் கணவனுக்கு.

கடவுளுக்காக செய்யப்படும் வேண்டுதலான உயிர் கொலையையே ஏற்க முடியாமல் சண்டை போட்டவள் இன்று

தானே அதைவிட மோசமாக நடந்து கொண்டதால் உண்டான கொலை பாதகம் வெகுவாக பாதிக்க அவளால் தூங்க முடியவில்லை.

வெறும் தரையில் தலையணையை மட்டும் வைத்துக் கொண்டு அயர்ந்து தூங்குபவனை பார்க்கும் போது ஏக்கமாக இருந்தது. இவனால் எப்படி நிம்மதியாக தூங்க முடிகிறது? என்ற யோசனையுடன் அவனருகே ஒண்டிக் கொள்ள,

"பவானி! உன்னால வெறும் தரையில் படுக்க முடியாது. உடம்பு வலிக்கும் உள்ள போய் படு..." என்றான் அமைதியாக.

"நீங்க இன்னும் தூங்கலையா பிரபா? எனக்கு தூக்கம் வரமாட்டேங்குது... இப்படியே படுத்துக்கட்டுமா?" கணவனின் தழுவலுக்காக அவளது செல்கள் ஒவ்வொன்றும் ஏங்கின. அதை உணர்த்தும் பொருட்டு அவனை நெருங்கி உடலோடு உடல் உரசப் படுக்க,

'இப்படி சீண்டி சீண்டி சூடேத்துறதே வேலையாப் போச்சு...' வெடுக்கென எழுந்தவன்,

"நல்லா படுத்துக்கோ. நான் அங்கே போறேன்..." விரைந்துவிட்டான்.

இவன் ஏன் இப்படி கூப்பிடறான்... பவானியாம் பவானி... அம்மா தான் கண்டிக்கணுமா? ஏன் இவன் செய்தால் என்ன? முன்னெல்லாம் செய்வானே? இப்போ ஏன் இப்படி விலகிப்

போறான்? வெகு நேரம் வரை திகைத்து அமர்ந்திருந்தவளுக்கு, அவனை பிடிக்கவேயில்லை.

தனது பழைய பிரபா வேண்டுமென மனம் ஏங்கியது. வெகுநேர யோசனைக்கு பின் அவனை மீட்கும் உபாயம் கிடைத்த மகிழ்வில் அங்கேயே தூங்கிப் போனாள். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவளை மெல்ல தூக்கி கட்டிலில் கிடத்தியவன்,

"ஐ லவ் யூ லட்டு!" கொஞ்சிய படி இதழ் ஒற்ற, அவளது சிறு உதட்டுச் சுழிப்பு அவனை கொள்ளாமல் கொன்றது.

அர்ஜூன் பிரபாவை பார்க்க வந்திருந்தான்.

"என்ன புரோ? எதாவது சிக்கலா? பொண்டாட்டி கூட சண்டையோ? முகமெல்லாம் களையிழந்து போய் இருக்கே... என்னை அடித்ததில் இருந்து இன்று வரைக்கும் நீயும் உன் ஆசை பொண்டாட்டியும் நிம்மதியா இல்லை தானே? திருப்பிக் கொடுத்தேனா?

நீ என்ன பெரிய கிருஷ்ண பரமாத்மாவா? இந்த கம்பெனியை காப்பாத்தி நிலைநிறுத்த துடிக்கிற...! உன்னால் எதுவும் பண்ண முடியாது. பாதுகாப்பில்லா வேலை சூழல்ன்னு காரணம் காட்டி சீல் வைக்க ஏற்பாடு பண்ணியிருக்கேன்.

உன்னால முடிஞ்சதை பார்த்துக்க... நீ தலைகீழா நின்னாலும் இதில் இருந்து வெளிய வர முடியாது. உன் யூனியன் லீடர் என்

பக்கம். வரட்டா... எனக்கு கிடைக்காத எதுவும் உனக்குன்னு இல்ல... எவனுக்கும் கிடைக்கக் கூடாது!" போய்விட்டான்.

தான் நினைத்தது சரிதான். இதை எப்படி முடிவுக்கு கொண்டு வருவது? ஆதியிடம் பேசிப் பார்க்கலாம்... என நண்பனுக்கு அழைத்தவன் அனைத்தையும் சொல்லி முடித்தான்.

"எனக்கு கொஞ்சம் டைம் கொடு மச்சான்... நானே திரும்ப கூப்பிடறேன்." இணைப்பை துண்டித்தவன் வெகு நேர யோசனைக்குப் பிறகு அன்று இரவு தொடர்பு கொண்டான்.

"மச்சான்! நாளைக்கே உன் வக்கீலையும், மேனேஜரையும் அடிபட்டவனை பார்க்க அனுப்பு. இன்சூரன்ஸ் கிளைம்க்காக காத்திருக்காதே. உடனடியா அமவுண்டை செட்டில் பண்ணு. அவனது வாரிசுக்கு வேலை தரதா இல்ல படிப்பு செலவை ஏத்துக்குவதா சொல்லச் சொல்.

பிரச்சனையை முடித்து பத்திரத்தில் கையெழுத்து வாங்கு. ஒத்துவரலன்னா வேற வழியே இல்ல... விபத்து உன் கவனக் குறைவால் தான் நடந்துச்சுன்னு பழியை தூக்கி அவன் தலையில் போட வேண்டியது தான்.

கேஸ் அந்த மாதிரி திசை திரும்ப வாய்ப்பிருப்பதாக வக்கீலை மறைமுகமாக மிரட்டச் சொல். யூனியன் லீடர் அவனுக்கு ஆதாயம் தேடிக் கொள்ளவே பார்க்கிறான்... கிடைக்கும் பணத்தையும் வாங்கவிடாம சட்டச்சிக்கல்

உருவாக்கப் பாக்குறான்னு அவனையும் கோர்த்துவிடு. தானே படிஞ்சு வந்துடுவாங்க."

"தப்பில்லையா மச்சான்?"

"தப்பு தான். நியாயத்துக்கு கட்டுப்படலன்னா வேற என்ன பண்ணறது? வீம்புக்கு பண்றவங்ககிட்ட தர்மம் நியாயமெல்லாம் பார்கக் கூடாது மச்சான். அப்புறம் தொழில்ல ஜெயிக்க முடியாது."

"பேசாமல் உன்னைப் போல கைகட்டி உத்தியோகம் பார்க்கலாம்னு தோணுது. அவளும் அனுசரணையா இருக்க மாட்டேங்கிறா... இதுலயும் ஏகப்பட்ட பிரச்சனை... முடியல மச்சான். அவசரப்பட்டு வாழ்க்கையை அடமானம் வச்சுட்டேன்..." கலங்கிய நண்பனை அணைத்துக் கொள்ள துடித்தவன்,

"பிரபா... உன் உறுதி எங்க போச்சு? சின்ன விஷயத்துக்கு இப்படி கலங்குற? உன் மனச தொட்டு சொல்லு, நீ முதன்முதலில் பார்த்த பவானிக்கும் இப்போ பார்க்கறவளுக்கும் மாற்றம் இருக்கு தானே? எல்லாமே கொஞ்சம் கொஞ்சமா சரியாயிடும் மச்சான்.

மனசை தளரவிடாத. நீவேனும்னா பாரேன் நாளைக்கே இந்த பிரச்சனை முடிவுக்கு வந்துடும். உன் மாமனார் இந்த

இடத்தில் இருந்தால் நிச்சயம் இதை தான் செய்வார். நீ தப்பு பண்ணல பிரபா... சும்மா மிரட்டத் தான் போற.

இதுக்கெல்லாம் கலங்காதடா... இந்த உலகத்தில் ரொம்ப நல்லவனாவெல்லாம் இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. உன் கோபம், வருத்தம் எதையும் பவானிக்கிட்ட காட்டாத... அவளும் பாவம் தான்."

"புரியுது... ஆனால் நேத்தே எல்லாத்தையும் அவகிட்ட கொட்டிட்டேன் மச்சான். இப்போ பாவமா தான் இருக்கு."

"போடா லூசு! உருகி உருகி காதலிக்கனும்னு சொன்ன... இது தான் நீ லவ் பண்ற அழகா? அந்த பிரபா எங்க போனான்? நீ என்னை மாதிரி மாறிட்ட. நான் உன்னைப் போல மாறிக்கிட்டு இருக்கேன்...

போடா... நல்ல பிள்ளையா பவானிக்கிட்ட சாரி சொல்லி... முடிஞ்சா சமாதானமாகி தூங்கு. காலையில் எல்லாம் சரியாயிடும். நான் இருக்கேன் மச்சான். எதுவானாலும் பார்த்துக்கலாம்... கால் பண்ணு."

நண்பனின் வார்த்தைகளும் திட்டமும் ஆறுதல் அளிக்க, அப்பொழுதே வக்கீலுக்கு தொடர்பு கொள்ள அதற்கான வேலைகள் சத்தமில்லாமல் நடத்தப்பட்டது.

"வெகு நாட்களுக்குப் பிறகு மனைவியின் அருகே படுத்தவன்,

"சாரி வனிம்மா... நேத்து ரொம்பவே கோபப்பட்டுட்டேன். மன்னிச்சுருடா..." கன்னத்தில் முத்தமிட்டு விலகி படுத்துவிட்டான். இது எதுவும் தெரியாமலேயே தூங்கிக் கொண்டிருந்தாள் அவன் மனையாள்.

நண்பனின் திட்டம் சிறப்பாகவே வெற்றி பெற்றது. பதினைந்து நாட்களாக இந்த பிரச்சனையில் உழன்றதால் பெற்றோரோடு வார இறுதியை கழிக்க முடியாமல் கொஞ்ச நேரம் மட்டும் இருந்துவிட்டு வந்தவன் இந்த வாரம் பழையபடி அவர்களோடு இருக்க முடிவு செய்து சந்தோசமாகவே கிளம்பிக் கொண்டிருந்தான்.

அதற்காகவே காத்துக் கொண்டிருந்தவள் போல், மெரூன் வண்ண சுடிதாரும் அதற்கு பொருத்தமாய் தோடும், வளையலும் அணிந்து என்னை வாரிக்கொள் என அவனருகே வர திடுக்கிட்டு விலகியவன் என்ன என்பது போல் பார்க்க,

"நானும் வரட்டுமா?' தயக்கத்துடன் கேட்டவளை அதிர்ச்சியாக நோக்கியவன்,

"நான் சாயங்காலம் தான் வருவேன். அவ்வளவு நேரம் அந்த சின்ன வீட்ல நீ இருப்பது கஷ்டம்." என்றான் அவளை கூட்டி போகவும் முடியாமல் விட்டு செல்லவும் மனமில்லாமல்.

'என்னை கழட்டி விடுறதுலயே குறியா இருக்கான்' என்று கடுப்பாகியவள்,

"அது என் பிரச்சனை! கூட்டி போக முடியுமா... முடியாதா?" அவள் மிரட்டிய விதம் சிரிப்பை உண்டாக்க மறுக்க மனமின்றி,

"வா!" இதழோர சிரிப்புடன் நடக்கத் தொடங்கிவிட்டான்.

திருமணத்தன்று கொஞ்ச நேரம் பிரபா வீட்டிற்கு சென்றது தான். அதன் பிறகு இன்று தான் மீண்டும் வருகிறாள் அவன் மனைவியாக. மகனோடு தன் முதலாளியம்மாவும் வருவதை சற்றும் எதிர்பார்க்காத முருகன், மகனை விடுத்து,

"பவானிம்மா! வாங்க வாங்க... வள்ளி சீக்கிரம் வா! யாரு வந்திருக்காங்கன்னு பாரு... என மனைவியையும் அழைத்தார்.

அவசரமாக ஓடிவந்த வள்ளி, அவர்களை அங்கேயே நிற்க வைத்துவிட்டு உள்ளே சென்று ஆலம் கரைத்து வந்து மகனையும் மருமகளையும் அருகருகே நிற்க வைத்து சுற்றி வீட்டிற்குள் அழைத்துச் சென்றவர்,

"பொட்டெங்கே பவானிம்மா?" என பதற (வைத்தால் தானே இருக்கும்?)

"ஸ்டிக்கர் பொட்டு வச்சிருந்தாம்மா கீழே விழுந்துடுச்சு போல..." என சமாதானம் சொன்னவன் அன்னை கொடுத்த குங்குமத்தை மனைவிக்கு வைத்துவிட்டான்.

நல்ல காலம் காலர் வச்ச சுடிதார் போட்டுருக்கா இல்ல எங்கம்மா மயக்கமே போட்டுருக்கும்... தாலி இல்லா அவளது கழுத்தின் நினைவில் சிரித்துக் கொண்டான்.

தன்னிடம் மிடுக்காகவும், மற்றவர்களிடம் கம்பீரமாகவும் இருப்பவன் தன் அன்னையிடம் குழந்தையாய் கொஞ்ச, இதுநாள் வரை இதையெல்லாம் பார்த்தே இராதவளுக்கு இனம் புரியாத உணர்வு வந்து ஆட்கொண்டது.

எவ்வளவு தான் வெளிக் காற்றும், ஃபேன் காற்றும் இருந்தாலும் மதிய வேளையில் அந்த சின்ன வீடு கூடுதல் கதகதப்புடன் தான் இருந்தது. அவன் சொன்னது போல் அவளுக்கு அங்கிருப்பது கஷ்டமானதாகத் தான் இருந்தது.

வியர்த்து வழிய அமர்ந்திருக்கும் மருமகளை கண்ட முருகன் அண்டை வீட்டில் இருந்து டேபிள் ஃபேன் வாங்கி வந்து வைத்தார். வள்ளியோ விசிறியை எடுத்து விசிறத் தொடங்கிவிட்டார். அவ்வளவு தான்...

'இதற்குத் தானே ஆசைப்பட்டாய்?' என்பது போல் பிரபா அவளை பார்த்து முறைக்க,

"நானே விசிறிக்கிறேன் ஆன்ட்டி!" என பறிக்காத குறையாய் வாங்கிக் கொண்டாள்.

'இவங்க அட்டகாசம் தாங்க முடியலையே... இந்த வீட்டு மருமகளா பார்க்காம இன்னும் முதலாளியம்மாவாவே பார்க்கறாங்களே...' என்று தன் பெற்றோரின் மேல் அலுப்பேற்பட்டாலும், ஒரு பக்கெட்டில் நீர் நிரப்பி மின்விசிறிக்கு

அருகே வைத்தவன், வீட்டில் இருந்த மூன்று துண்டுகளையும் தண்ணீரில் பிழிந்து ஜன்னலில் விரித்துவிட்டான்.

கொஞ்ச நேரத்திலேயே குளுமை குடி கொண்டது. நன்றியுடன் கணவனை பார்க்க, அவனோ அன்னை மடியில் படுத்தபடி குட்டி டிவியில் பழைய படத்தை ரசித்து பார்த்துக் கொண்டிருந்தான்.

மாமனாரும் மருமகளும் சோஃபாவில் அமர்ந்திருக்க மகனும் அம்மாவும் கீழே இருந்தனர். (இவன் அம்மா எவ்வளவு கேரிங்கா இருக்காங்க... என் அம்மா மட்டும் கையை ஒடிப்பாங்க... காலை முறிப்பாங்கன்னு சொல்றான்... போடா...)

முகம் திருப்பிக் கொண்டவளுக்கு தெரியவில்லை பிள்ளைகள் தவறு செய்யும் போது அன்னையர் கண்டிக்கத்தான் செய்வார்கள் என்பது. மதியம் மகனுக்கு பிடித்த மீன் குழம்பு, பொடிப்போட்ட கோழி ரசம் என அசத்தலாக சமைத்திருந்தார் வள்ளி.

அவளது வாழ்நாளில் இவ்வளவு காரமாகவும், ருசியாகவும் சாப்பிட்டதேயில்லை என்னும் படியாக தான் இருந்தது வள்ளியின் கைப்பக்குவம்.

காரத்தில் கண்கள் கலங்கிய போதும் ஒருவாய் சாதத்திற்கு அரை டம்ளர் தண்ணீரை காலி செய்தபடி சாப்பிடுபவளை பார்த்தவன் சமையல் கட்டிலிருந்து நல்லெண்ணையை

எடுத்துவந்து சாதத்தில் கலந்து இரண்டு வாய் ஊட்டி விட்டான். இப்போது காரம் கொஞ்சம் மட்டுப்பட்டிருந்தது. ஊட்டுவதை தொடர்வான் என அவள் காத்திருக்க,

"சாப்பிடு!" என இதமாகச் சொன்னவன், தனக்கு ஊட்டிக் கொண்டிருக்கும் அன்னையிடம் கெஞ்சத் தொடங்கிவிட்டான்.

"போதும்மா... நிறைய சாப்பிட்டேன்..."

"இவனுக்கு தான் ஆன்ட்டி ஊட்டிவிடறாங்களே சும்மா தானே இருக்கான்... எனக்கு ஊட்டிவிட்டா என்னவாம்?" மனம் சுணங்க சாப்பிடாமல் தட்டில் கோலம் போட்டுக் கொண்டிருக்க,

"பவானிம்மா! சாப்பிட முடியலையா... காரம் அதிகமா இருக்கா? பிரபா காரமா சாப்பிடுவான். நீங்க வர்றது தெரிஞ்சிருந்தா காரத்தை குறைத்து போட்டிருப்பேன். சாப்பிட முடியலைன்னா வச்சிருங்க தயிர் சாதம் போடறேன்!" என்றார் கரிசனமாய்.

'பாவம் இவ்வளவு காரமா சாப்பிடுறவனுக்கு நம் வீட்டு சாப்பாடு கஷ்டம் தான்' மனம் கணவனுக்காக இளக, அவன் முகம் பார்த்தாள். சாப்பாடு வேண்டாமென அவனை பார்ப்பது போல் தவறாக எடுத்துக் கொண்டவன்,

"சாப்பாட்டை வேஸ்ட் பண்ணாத!" என்றான் வெடுக்கென. கண்களில் நீர் திரள நிமிர்ந்தே பார்க்காமல் அனைத்தையும் முடித்துவிட்டு தட்டோடு எழ,

"நீங்க தட்டிலேயே கை கழுவிக்கோங்க பவானிம்மா..." என்றார் வள்ளி. முருகனும்,

"கழுவிக்கோங்க பவானிம்மா..." என தன்னருகே இருந்த தண்ணீரை நகர்த்தி வைக்க,

"அம்மா!" என்ற சிறு அதட்டலுடன்,

"போடி! தட்டை கழுவி வச்சுட்டு வா!" என்றான் முறைப்பாய்.

மறுப்பின்றி சென்றாலும் இவன் ஏன் இப்படி நடந்துக்கறான்? எப்போ பார்த்தாலும் சிடுசிடுன்னு... கொஞ்சம் மெதுவா சொன்னால் ஆகாதா? இல்ல நான் செய்ய மாட்டேன்னு நினைக்கிறானோ? இது இவன் குணம் இல்ல... வேற என்னவோ இருக்கு... என மூளைக்கு வேலை கொடுக்க,

"என்ன பிரபா இது? கொஞ்சம் தன்மையா சொல்லக் கூடாதா?" என வள்ளி கிசுகிசுக்க, முருகனோ பவானியம்மாவை இப்படி தான் மிரட்டுவியான்னு முறைக்க...

"என்ன தப்பு? அவ வீட்டில் மகாராணியா இருந்துட்டு போகட்டும். என் வீட்டில் எனக்கு மனைவியா என் அம்மாக்கு மருமகளா தான் இருக்கணும்" என்றான் எடுப்பாக.

'இந்த பொண்ணு ஏன் இவனோட வந்துச்சு?' என நொந்து கொண்டே சாப்பிட தொடங்கினர் முருகன்.

"ஒரு வாரத்து சாப்பாட்டையும் ஒரே நாள்ல கொடுக்கணும்னு முடிவு பண்ணிருக்கீங்ககளா?" என கொஞ்சிக் கொண்டிருந்தவனை பார்த்தவளுக்கு கோபம் வந்தது.

தான் என்ன தான் எதிர்பார்க்கிறோம்? இது கோபமா? பொறாமையா? இல்ல ஏக்கமா? இவன் ஊட்டிவிடனும்... உல்லாசமாய் மடியில் சாய்த்து தலை கோதனும், அன்பும், காதலுமாய் கொஞ்சனும் என ஏன் தோணுது? இது தான் காதலோ? என்ற எண்ணம் தோன்ற திடுக்கிட்டவள், லவ் சிம்டம்ஸ் என் கூகுளில் சேர்ச் பண்ணத் தொடங்கிவிட்டாள்.

அதில் முக்கால் வாசி இவளுக்கு பொருந்திவேறு தொலைத்தது. அவளது முகத்தில் தோன்றிய உணர்ச்சிகளை விழி இடுங்க கவனித்துக் கொண்டிருந்தவனை மேஜர் அங்கிள் அழைக்க தன்னை சமன் செய்து கொண்டவன் வெளியே சென்றுவிட்டான்.

பின்னோடு வள்ளியும் போக, இது எதுவும் தெரியாத் தேடலில் தன்னை தொலைத்துக் கொண்டிருந்தாள் பவானி.

"பிரபாவை கூப்பிடும் போதே நினைச்சேன். அவர் தான் சொல்றாருன்னா இவனும் கிளம்புறான்." என்ற அத்தையின் கோபத் குரலில் சூழ்நிலையை உணர்ந்தவளுக்கு ஆதியும் புரியவில்லை அந்தமும் புரியவில்லை. முருகனும் அதே நிலையில் தான் இருந்தார்.

"என்னாச்சு வள்ளி?" என இதமாக கேட்க,

"உச்சி வெயில் மண்டையை பிளக்குது. தண்ணி போடாமல் உடம்பு வெடவெடக்குதாம் ... பிரபாவைப் போய் வாங்கிவரச் சொல்றார். இவனும் எதையும் யோசிக்காம கிளம்புறான். கடையில் இவனை பாக்கறவங்க என்ன நினைப்பாங்க?

காசு பணம் வந்துட்டா கூடவே இந்த பழக்கமெல்லாம் வந்துடும் போலன்னு நினைக்கமாட்டாங்க? நம்ம தரத்தை குறைச்சுக்கிட்டு அப்படி ஒன்னும் அடுத்தவங்களுக்கு உதவி பண்ண வேண்டியதில்லை.

மிலிட்டிரில மேஜரா இருந்து என்ன பிரயோசனம்? பொண்டாட்டிக்கு நல்ல புருஷனாவோ... மகளுக்கு நல்ல தகப்பனாவோ இல்லியே. அப்பன் குடிகாரன்னு எவனும் பெண்ணெடுக்க மாட்டேங்கிறான். குடிகாரப் புருஷன் பொண்டாட்டிக்கு சாபம்!" என வெடிக்க

"அப்போ குடிகாரப் பொண்டாட்டி...?" என இடைமறித்தான் பிரபா. பவானி திகைத்து விழிக்க,

"பிரபா என்ன பேச்சு இது?" அன்னை அதட்ட,

"நிஜம் தான் வள்ளி. நேத்துக் கூட பேப்பர்ல படிச்சேன். கட்டிட வேலைக்கு போற பொண்ணு குடிச்சுட்டு ரோட்டில் படுத்துருக்கு... பக்கத்துல மூணு வயசு புள்ள உட்கார்ந்திருக்க நிறைய பேர் பிச்சை போட்டு போயிருக்காங்க..."

"சீ... என்ன பொண்ணு அவ? அவளுக்கெல்லாம் எதுக்கு புள்ளை? ஆம்பள குடிக்கிறது குடும்பத்தை பாதிக்கும்னா பொம்பள குடிச்சா அந்த குடும்பமே ஒன்னும் இல்லாம அழிஞ்சு போயிரும். குடிக்கிறவளால ஆரோக்கியமான புள்ளயை பெத்து வளர்க்க முடியுமா?

அவ புருஷன் எந்த கெட்டபழக்கமும் இல்லாதவனா இருந்தா அவளோட வாழ்ற வாழ்க்கை அவனுக்கு நரகம் இல்லையா? அப்படி ஒரு வாழ்க்கையே தேவையில்லைன்னு தான் சொல்லணும்." என படபடத்தார் தன் மருமகளைப் பற்றி தெரியாமல்.

பவானி அரண்டு போனாள். நம் விஷயம் தெறிந்தால் மாமியாரே பிரபாவை வாழவேண்டாம் என கூட்டி போய்டுவாங்க போலவே... நான் என்ன செய்வேன்?

இவனில்லாமல் முடியாதே... என மனம் அறற்ற... பிரபா குறித்த தெளிவான மனநிலையை அறிந்து கொண்ட அதிர்ச்சியில் அமர்ந்திருந்தவளை ஆராய்ந்தான் அவள் கணவன்.

குடிப்பவர்களின் மதிப்பையும் நிலையையும் இனியாவது புரிந்து கொள்வாளா? என ஏங்கியது அவன் மனது.

சமீபத்தில் நடந்த விபத்தின் வீரியமே இன்னும் குறையாத நிலையில் இந்த அதிர்ச்சியும் சேர்ந்து கொள்ள சுய அலசலில் ஈடுபட்டாள் பவானி. முன்னைப் போல குடிப்பதில்லை

என்றாலும் ஏதேனும் கவலையோ, பிரச்சனையோ ஏற்பட்டால் குடியை தான் நாடுகிறோம் என்பது புரிய...

முதல்ல இதை நிறுத்தியே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தவளாய், யோகா, தியானம் போன்ற வகுப்புகளுக்கு போவதன் மூலம் தன்னை நிலைப்படுத்த முயன்று கொண்டிருந்தாள். அதோடு பிரபாவிடமும் தன்னை வெளிப்படுத்த முயல, அவனோ பிடிகொடுக்காமல் நழுவிக் கொண்டிருந்தான்.

நள்ளிரவில் நந்தினிக்கு பிள்ளைப்பேறு வலி வந்துவிட்டதென அவளது தந்தை அழைத்துச் சொல்ல, அவசரமாக கிளம்பியவனுடன் தானும் வருவதாக கிளம்பியவளை வேண்டாம் என ஒற்றை வார்த்தையில் மறுத்துவிட்டு சென்றுவிட்டான்.

மருத்துவர், அன்னை, அத்தை என அனைவரிடமும் வலியைப் பற்றி கேட்டு தெரிந்து வைத்திருந்தாலும் அதை அனுபவிக்கும் போது தான் தெரிந்தது அன்னையின் அருமை. நந்தினி பயந்து போனாள்.

விஜயேந்திரனின் கரத்தை இறுகப் பற்றியிருக்க அதன் அழுத்தத்தில் அவளது வலியை உணரந்தவன் ஆதரவாய் தோள் சாய்த்துக் கொண்டு,

"கொஞ்சம் பொருத்துக்கடா சிட்டு...' என சொல்லத்தான் முடிந்தது. அவளது கஷ்டத்தை ஏற்கவோ, நிறுத்தவோ முடியாமல் அவனும் மருகினான். நேரம் கூடக்கூட வலி கூடியதே அன்றி குழந்தை பிறந்த பாடாய் இல்லை. எங்கே செத்துவிடுவோமோ என மிரண்டவள், ஈனசுவரத்தில்,

"அத்தான்!" என அழைக்க மனைவி பயந்து போயிருக்கிறாள் என்பது அவனுக்கும் புரிந்தது.

"சிட்டு... ஒன்னும் இல்லடா அவ்வளவு தான். பயப்படாத..." என்றவனுக்கும் உள்ளூர உதறல் எடுக்கத் தொடங்கியது. இதுக்குத் தானே இப்போ வேண்டாம்னு தள்ளிப் போட்டேன்...

ஆளாளுக்கு என்னை குழப்பி... இப்போ இவ்வளவு கஷ்டப்படுறாளே... எனத் தன் தவிப்பையும், பயத்தையும் வெளிக்காட்ட முடியாமல் தன்னால் முடிந்தவரை தலை கோதி, கன்னம் வருடி இதம் கொடுக்க,

இனி பிழைத்து வந்து இவனோடு வாழ்வோம் என்ற நம்பிக்கை அற்றுப் போக அவன் ஆசைப்பட்ட அழைப்பாயிற்றே என மீண்டும் மீண்டும் வலி உச்சம் பெறும் போதெல்லாம்,

"முடியல அத்தான்... பயமா இருக்கு அத்தான்!" என படுத்தியெடுத்தாள். நான்குமணி நேர போராட்டத்திற்குப் பிறகு ஆண் மகவைப் பெற்றெடுத்தாள் நந்தினி. அவளருகிலேயே

இருந்தவனுக்கு இதற்கு மேல் ஒரு குழந்தை என்னும் நினைப்பே அற்றுப் போனது. 'போதும்... என் தேவதை பட்ட கஷ்டமெல்லாம் போதும்' என வருந்தியவன்,

"மை லிட்டில் ஃபேரி!" அரை மயக்கத்தில் இருந்தவளை உச்சிமுகர்ந்துவிட்டு குழந்தையுடன் வெளியே வந்தான். சகுந்தலா தேவிக்கு ஆனந்தம் பிடிபடவில்லை. மீண்டும் கணவனே பேரனாக வந்து பிறந்திருப்பதால் அப்படி ஒரு மகிழ்ச்சி.

ராஜா மகேந்திர பூபதிக்கு போலவே இந்த வாண்டிற்கும் வலது கையில் ஆறு விரல் இருந்தது அனைவருக்கும் ஆச்சரியமே. மத்தபடி நந்தினின் வார்ப்பாக இருந்தது குழந்தை. மயக்கம் தெளிந்த பின் அனைவரும் சென்று நந்தினியை பார்த்தனர்.

"சாரி மா... உன்னை ரொம்ப ஹெர்ட் பண்ணிருக்கேன். ஐ லவ் யூ மா.." அன்னையை கட்டிக் கொண்டாள் நந்தினி. மகளை இதமாக அனைத்து முத்தமிட்டார் அன்னை. அனைவரும் இவர்களது அன்பை ரசித்துக் கொண்டிருக்க குட்டி பையன் பசித்து அழ...

"என் பேரன் அழுவதில் கூட என்ன ஒரு கம்பீரம்?" ராணியம்மாவை பிடிக்க முடியவில்லை. எல்லாம் ஓய்ந்த பின் கிடைத்த தனிமையில்,

"விஜய்... தேங்க்ஸ்! கூடவே இருந்தது ரொம்ப தைரியமா இருந்துச்சு." கணவனின் கரம் பற்றிக் கொள்ள,

"போடி... இது தான் உன் தைரியமா? என்னையும் சேர்த்து திகிலடைய வச்சுட்ட." அவளருகே அமர்ந்து இதமாக அணைத்துக் கொண்டான்.

"செத்து போய்டுவேன்னு பயம் வந்துடுச்சு விஜய்." என சிரிக்க

"புரிஞ்சுது... கொஞ்சம் கூடுதலா இறுக்கி அணைச்சாவே செத்துடுவேன்னு சொல்வியா... அதான் நானும் பயந்துட்டேன். என் பயம் தெரிஞ்சா இன்னும் மிரண்டு போயிடுவியேன்னு அதுவேற கஷ்டம்... முடியலடி சிட்டு.

என் வாழ் நாள்ல மறக்க நினைக்கிற ஆனால் மறக்க முடியாத ஒன்னுன்னா அது இந்த நாலுமணி நேர போராட்டமும், தவிப்பும் தான். தேங்க்ஸ் சிட்டு... ரொம்பவே கஷ்டப்பட்டுட்ட." தன்னோடு இறுக்கிக் கொண்டவனை ஆசையாக,

"அத்தான்!" என அழைக்க,

"வேண்டாம் சிட்டு... நீ அப்படி கூப்பிடும் போது உன் கண்ணில் தெரிந்த பயத்தை மறக்கவே முடியாது. இனி அத்தான்னு கூப்பிடாதே... என்னால் ரசிக்கவும் முடியாது, அனுபவிக்கவும் முடியாது. படுத்துக்கடா..." நெற்றியில் முத்தமிட்டு விலகிச் சென்றான் விஜய்.

மறுநாள் வீட்டிற்கு வந்த பிரபா மனைவியிடம் ஏதும் சொல்லாமல் அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருக்க பொறுமை இழந்தவள்,

"பிரபா... நந்தினிக்கு குழந்தை பிறந்திடுச்சா?" எனறாள் ஆர்வமாக.

"ம்..."

"என்ன குழந்தை?"

"பையன்"

"ஓ... எந்த ஹாஸ்பிட்டல்?"

"அவங்க சொந்த ஹாஸ்பிட்டல்."

"திரும்ப நீங்க எப்போ போவீங்க? நானும் பாப்பாவை பார்க்க வரேன்..."

"அவசியமில்லை!" என்ன ஒரு விட்டேற்றியான பதில் என வெகுண்டவள்,

"உங்களுக்கு என்ன தான் பிரச்சனை பிரபா? ஏன் இப்படி நடந்துக்கறீங்க? நான் உங்க மனைவிங்கிற நினைப்பு இருக்கா? விலகி விலகி போறீங்க பிரபா... ரொம்ப கஷ்டமாயிருக்கு." என்றவளுக்கு கண்களில் நீர் திரண்டுவிட்டது.

"மனைவியா? நீங்களா? குட் ஜோக்!" ஏளன சிரிப்பை உதிர்த்தபடி விலகிச் சென்றுவிட்டான். அதிகம்

வதைத்துவிட்டதுக்கு பிராயச்சித்தமாய் மாலை தானாகவே நந்தினியின் குழந்தையை பார்க்க அழைத்துச் சென்றான்.

பிரபா குழந்தையை தூக்கிக் கொஞ்ச, பவானியோ தனக்கு குழந்தையைத் தூக்க தெரியாது என கணவனின் மடியில் இருக்கும் குழந்தையின் கன்னம் வருடி ஆசையாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மனைவியின் ஸ்பரிசம் அவனை கிளரச் செய்தது. (இதற்கு தான் இவளை தவிர்ப்பது. கொஞ்சம் இடம் கொடுத்தால் போதும் உரசியே பாடாய்படுத்துவா) விலகி அமர அவளும் அவனோடு நகர்ந்து நெருக்கமாக அமர்ந்தாள். (கஷ்டம் டா)

"ரெண்டுபேரும் இவ்வளவு ஆசையை வச்சுக்கிட்டு ஏன் தள்ளி போடறீங்க பிரபா...? காலா காலாத்துல பெத்துக்க வேண்டியது தானே?" நந்தினியின் அன்னை தான் கேட்டார்.

"குழந்தை பெத்துக்க ஆசை மட்டும் பத்தாதே ஆண்ட்டி... சில தகுதியும் வேணுமே..." என்றான் சிறு சிரிப்புடன். (இவன் எங்கு சுத்தியும் இங்கு தான் வருவானா?) பவானி பரிதாபமாகப் பார்க்க, அனைவருமே ஒரு நொடி அதிர்ந்து தான் போயினர்.

"இவளுக்கு குழந்தையை தூக்கவே தெரியலையே அதைத் தான் சொன்னேன்." சட்டென சமாளித்து சூழலை சுமூகமாக்கினான்.

"ரொம்ப பண்ணாத பிரபா. இதுக்காக கிளாஸ் போக முடியுமா? தன் குழந்தைன்னு வரும் போது எல்லாம் தானாவே வந்துடும்." உதவிக்கு வந்தாள் நந்தினி.

"ஏன் பிரபா நாங்க பார்த்துக்க மாட்டோமா?" தாயில்லா பெண் என்று தயங்குகிறான் போல என பாசத்துடன் சொன்னார் நந்தினியின் அம்மா.

"பார்டா மாப்பிள்ளை... உன் அம்மா மாமாவை எப்படி மிரட்டுறாங்கன்னு பாரு..." என பேச்சை மாற்ற

"இன்னும் கொஞ்ச நாளில் கேர்ள் ஃபிரண்டுக்கு ஏற்பாடு பண்ணுங்க மாமான்னு அவனே சொல்லிடுவான்..." என்றபடியே வந்த விஜய் இருவரையும் வரவேற்றான்.

"சிட்டு! அம்மா அமரேந்திர பூபதிங்கிற பேர் நல்லா இருக்கான்னு கேட்டாங்க. என்னடா சொல்லட்டும்?"

"நல்லாயிருக்கு விஜய். உங்களுக்கு பிடிச்சிருக்கா? சூழல் மறந்து விஜயும் நந்துவும் குழந்தையின் பெயர் பற்றி பேசிக் கொண்டிருக்க மற்றவர்கள் மெல்ல விலகி வெளியே வந்தனர்.

அப்பொழுதும் கணவன் குழந்தையை தூக்கிய படி வர குட்டி பாப்பாவை எவ்வளவு லாவகமா தூக்குறான் வியந்தவள் கேட்டேவிட்டாள்.

"காலனியில நிறைய பசங்களத் தூக்கிப் பழக்கம்." முறைப்பின்றி பதில் சொன்னான்.

இரவு சாப்பாட்டையும் அரண்மனையிலேயே முடித்துக் கொண்டு வீட்டிற்கு கிளம்ப, இன்று கணவனிடம் மனம் திறந்து அனைத்தையும் பேசிவிட வேண்டுமென்று நினைத்ததால்,

"பிரபா வீட்டுக்கு வேணாமே... வேறெங்காவது போகலாமே?" ஏக்கமாய் முகம் பார்க்க அவனோ தாட்சண்யமின்றி,

"எங்கு நிர்வாணாவுக்கா?" என்றான் வெடுக்கென.

"நானே மறந்தாலும் நீங்க மறக்க மாட்டீங்க போல..." என்றவளிடம் கோபம் இருந்தது.

"கழுதை கெட்டா குட்டிச் சுவர்!" தோள்களை குலுக்கினான் அவள் கணவன்.

பவானிக்கு மனம் திறக்கும் வாய்ப்பு கிடைக்குமா?

# அத்தியாயம் 33

“நான் உங்களோடு பேசணும் பிரபா... போகலாமா?"

"வீட்டில் பேசுவதற்கென்ன?"

"அந்த பால்கனியில் என்ன தான் புதையல் இருக்குன்னு தெரியல... யாராவது எடுத்துக்கிட்டு ஓடிடுவாங்கன்னு அங்க தானே குடியிருக்கீங்க பிறகு எப்படி பேசுறதாம்?"

"சரி இன்று நீ பேசி முடிக்கும் வரை உன்னறையிலேயே இருக்கேன்."

"இன்னும் என் அறையா? இப்படியே வண்டியை நிறுத்துங்க. பேசிடலாம்!' என்றாள் எரிச்சல் மிகுதியில்.

"நான் இப்போ யோகா, மெடிடேஷன் எல்லாம் பண்றேன். கடைசியா எப்போ குடிச்சேன்னு எனக்கே நியாபகம் இல்லை."

"குடிச்சா தான் உனக்கு ஒன்னுமே நியாபகம் இருக்காதே..." என்றான் நக்கலாக.

"நான் குடிச்சு ரொம்ப நாளாச்சுங்கிறத தான் அப்படிச் சொன்னேன்." ஆயாசமாக இருந்தது அவளுக்கு. (நீ தெளிவா இருக்கியான்னு டெஸ்ட் பண்றான் போல!)

"ம்" என்றதோடு நிறுத்திக் கொண்டான். அடப்பாவி குடிக்கிறதில்லன்னு சொல்றேன் கொஞ்சமும் ரியாக்சன் காட்டாம இருக்கானே? என முறைக்க, அவனோ,

'உன்னை மாதிரி குடிகாரியை கட்டிக்கிட்டு சும்மாவா இருக்க முடியும்? என்ன பண்றன்னு கண்காணிச்சுக்கிட்டே தான் இருக்கேன். நீ சொன்னதெல்லாம் பழைய மேட்டர் புதுசா ஏதாவது இருந்தா சொல்!' என்பது போல் பார்த்து வைத்தான்.

(ஆமா, இவங்க ரெண்டு பேரும் சிவாஜியும், பத்மினியும்... கண்ணாலே பேசுறாங்க! வாயைத் திறந்து பேசுங்களேண்டா...) கழுத்தை சுற்றியிருந்த துப்பட்டாவை விலக்கி அதை கைகளால் முறுக்கியபடி இதற்கு மேல் எப்படி சொல்வதென யோசிக்க,

தாலியில்லா வெறும் கழுத்து அவனுக்கு வேதனை தர கண்களை மூடி இறுகி இருந்தவனை,

"பிரபா!' என்ற மெல்லிய அழைப்பு இயல்புக்கு கொண்டுவந்தது.

"நந்தினியோட பாப்பா அழகா இருக்கில்ல?"

"ம்"

"நந்தினியின் விருப்பம் போல் பையனா இருந்தாலும் விஜய் விரும்பியது போல் நந்தினியின் சாயல். அவங்க ரொம்ப லக்கியில்ல?"

"ம்..."

"உங்களுக்கு என்ன பேபி பிடிக்கும்?" தலைசாய்த்து கேட்பவளை வாரி அணைத்து உன்னை தான் பிடிக்கும் என இதழ் கடிக்க எழுந்த ஆசையை விலக்கியவன்,

"கணவன் மனைவியாய் வாழ்றவங்க தான் அதைப்பத்தியெல்லாம் யோசிக்கணும். நமக்கெதுக்கு இந்த வேண்டாத வேலை?" என புருவம் தூக்க

"இனியாவது வாழலாமே..." சொல்லிவிட துடித்தது பவானியின் மனது. நாக்கு தான் மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. (இவன் ஏன் இப்படி படுத்துறான்?) என உள்ளம் கதற,

"நான் உங்க மனைவி தான் பிரபா..." என்றாள் மென் குரலில்.

"அப்படியா?" என்றவனின் எள்ளலில் வெறுத்துப் போனவள் கண்களை மூடி சீட்டில் சாய்ந்து அமர்ந்து,

"போகலாம்!" என முடித்துக் கொண்டாள்.

"மன்னித்துவிடு லட்டு. உன்னை சீர் செய்யும் பெரும் பொறுப்பு என்னுடையது. காயப்படுவதென்னவோ நீ தான். ஆனால் வேதனை இருவருக்கும். எனக்கு உன் மனம் தெளிவாகத் தெரிய வேண்டும்...

எனது கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லவில்லையே லட்டு...? கணவனிடம் மனம் திறக்க வெட்கப்படவோ...

தயங்கவோ கூடாது. நீ இன்னும் அந்த நிலைக்கு வரவில்லையே. ஒருமுறை அவசரப்பட்டு நானாக கணித்து அவதியுற்றது போதும்.

எனக்கு நேரடியான பதில் வேண்டும் வனிம்மா... அதுவரை மாமா வெய்டிங்... பொறுமையாகவே வா... நீயாகத் தான் வந்தாக வேண்டும்... ", அவளை பருகியபடியே வீடுவந்து சேர்ந்தான்.

தனக்காகவே காத்திருந்த தந்தையைக் கண்டதும் அவ்வளவு நேரம் குமுறிய மனம் உடைப்பட்டது. கண்ணீர் பெறுக தந்தையின் தோள் சாய்ந்து கொண்டவளை வெறித்தவன்,

இந்த தோளும் உனக்காக தான் காத்திருக்கு என்பது போல் அவளருகே நெருக்கமாக அமர, (இவங்க கவுண்டர் கொடுப்பார்களாம்... ஆனா அவள் மட்டும் கட்டிக்கணுமாம்... நல்லா இருக்கே நியாயம்?) மாமனாரோ, மகளின் விழி நீர் துடைத்து,

"பேபிம்மா... அழாதடா. உன் அம்மா நம்ம விட்டு எங்கும் போகல... நம்மோட இஇங்கு தான் இருக்கா... நீ வருத்தத்தோடு வருவியேன்னு தான் காத்திருந்தேன். அழக் கூடாது!" என அனைத்துக் கொண்டார்.

"பாவம் அப்பா இன்னும் அதையே நினைச்சுகிட்டு இருக்காங்களே... நான் அந்த நினைவே இல்லாமல் இவனை

நினச்சுல்ல அழுதுகிட்டு இருக்கேன்" என வெட்கியவள் மேலும் விசும்ப,

இவர்களுக்குள் என்னவோ இருக்கு... அவர் எதிர்பார்த்த இவள் அழுகை... புரியலையே என எண்ணி,

"வனிம்மா... உன் அழுகை மாமாவையும் வருத்தப்படுத்தும்" எனவும்

"இவன் முன்னாள் அழக் கூடாதுன்னு இவ்வளவு நேரமும் அடக்கியவள் எப்படி இவன் இருப்பதை மறந்து அழுது தொலைத்தேன்?" என வேகமாக தன்னை சமன் செய்து கொண்டாள்.

மாப்பிள்ளையின் ஒற்றைச் சொல்லில் மகளின் அழுகை நின்ற மகிழ்வில்,

"நேரமாச்சு டா... ரெண்டு பேரும் போய் படுங்க..." என அனுப்பி வைத்தார். உடைமாற்ற சென்றவள் கரம் பிடித்து தடுத்தவன்,

"ஏன் அழுதாய்? என்ன பிரச்சனை?" என்றான் அக்கறையாக. (உன்னால் தான்) என சொல்லிவிட துடித்த நாவை அடக்கி,

"கையை விடுங்க பிரபா... தலைவலிக்குது... தூங்கணும்..." என்றாள் அவளும் அமைதியாக.

"சோ... ஏன் அழுதன்னு சொல்லமாட்ட? பொண்டாட்டி தான்னு சொன்னா பத்தாது... நடந்துக்கணும்." கையை விடாமல் அவளை வெறிக்க,

"இப்போ என்ன தெரியணும் உங்களுக்கு? எந்த சின்ன குழந்தையை பார்த்தாலும் எங்கம்மா நியாபகம் வந்துடும். குழந்தையா தானே தவிக்க விட்டு போனாங்கன்னு அழுகை வரும்.

என்னை கொஞ்ச, சீராட்ட, தூக்கிக் கொள்ள, சோறூட்ட அம்மா இல்லையே என ஏக்கமாக இருக்கும். பள்ளியில் படிக்கும் போது இதயெல்லாம் அப்பாகிட்ட சொல்லி அழுதிருக்கேன்.

நாம குழந்தையை பார்க்கப் போறோன்னதும் அந்த நினைப்பிலேயே தூங்காம காத்திருக்கார். என்னை வேதனைப்படுத்தும் அம்மாவின் நினைவுகள் தேவையில்லைன்னு இறுகி இருந்தவளை திரும்ப இளக வச்சது நீங்க தான் பிரபா.

நீங்க சொல்வது போல என் கையை, காலை ஒடிக்கவேணும் அம்மா வேண்டுமென இப்போ தோணுது." என முகத்தை மூடிக் கொண்டு அழுபவளை இழுத்து மார்போடு அணைக்க,

"விடுங்க பிரபா... உங்களுக்கு பாசம் பொங்கினா சீராட்டுவீங்க, கோபம் வந்துட்டா பட்டுன்னு விலக்கி வச்சுடுவீங்க இந்த விளையாட்டே வேண்டாம்." என விலக முயற்சிக்க,

"ஷ்... வனிம்மா! ஏன் இந்த வீம்பு? தலைவலிக்கு தைலம் தேய்க்கட்டுமா?" தோள்வளைவில் இறுக்கியபடி கட்டிலில் அமர,

"வேண்டாம் நானே தேச்சுக்குவேன்." விலகி படுத்தவளுக்கு மருந்து தேய்த்துவிட்டவன் இதமாக பிடித்தும் விட்டான். அந்த சுகத்தை விட மனமின்றி அப்படியே தூக்கிப் போனாள்.

கண் விழிக்கும் போது பால்கனியில் தூங்கும் கணவனைக் கண்டவள்,

"நான் அழுதா உனக்கு தாங்கமாட்டேங்குது... பின்ன ஏன் அழவைக்கிறாய்? என்னமோ போ... இதுவரை நான் கேட்டதெல்லாம் எளிதாக கிடைச்சிருச்சு உன்னையும் சேர்த்து.

ஆனால் உன் அன்பையும், காதலையும் எப்படி கேக்குறதுன்னு தான் புரியல.. டேய் மாமா நிஜமாவே உன்னை எப்படி கரெக்ட் பண்றதுன்னு தெரியலடா..." என வாய் விட்டே புலம்ப,

"போடி தத்தி! ஏற்கனவே கரெக்ட் பண்ணி தானே வச்சிருக்க இது கூட தெரியாம இருக்கியே லூசு" இதழோர சிரிப்புடன் திரும்பி படுத்துக் கொண்டான்.

வேறு வழியே இல்லாமல் நிவி சிவாவைப் பற்றி ஆதியிடம் பேச வேண்டிய சூழல் வந்தது.

"ஆதி அத்தான்... சிவாண்ணா நம்ம வீட்டுக்கு ரெண்டு தடவை வந்தாங்க, அத்தை மாமாகிட்ட நல்லா பேசினாங்க, அடுத்த வாரம் அவங்க வீட்டுக்கு வர சொன்னாங்க, போகட்டுமா?" என்று போனில் தன்மையாய் கேட்டவளிடம்,

"என்ன மண்ணாங்கட்டிக்கு கூப்பிடுறான்?" அடங்கா கோபம் தெறித்தது ஆதி மனதில். அவனிடம், ஒளிவு மறைவு இல்லாமல் அனைத்தையும் பகிர்பவளிடம் கோபத்தைக் காட்டவும் முடியவில்லை.

"அவங்க வீட்டில் கொலு வச்சுருக்காங்களாம். அத்தையும், நானும் போகலாம்னு இருக்கோம்... போகட்டுமா?"

"முடிவு பண்ணினத்துக்கு அப்புறம் எதுக்கு என்னிடம் கேட்கிறாய்?" பட்டென போனை வைத்துவிட்டான்.

ஆதிக்கு பிடிக்கவில்லை என்பது புரிய தான் போகாமல் மங்களத்தை மட்டும் அனுப்பி வைத்தாள். சிவா அன்று நிவியை தன் குடும்பத்தாருக்கு அறிமுகப்படுத்தி விடலாம் என்று எண்ணத்தில் தான் அழைத்திருந்தான்.

நிவி வராதது கண்டு பெரும் ஏமாற்றம் அடைந்த போதும், சிரித்த முகமாகவே வரவேற்று 'நிவியின் அத்தை' என தன்

பெற்றோரிடம் அறிமுகப்படுத்தினான். எல்லாம் முடிந்து கிளம்பும் தருவாயில்,

"நாங்கள் நிவியை பார்த்தது இல்லை. அடுத்த முறை அழைத்து வாங்களேன்! இன்னும் 6 மாசத்தில் படிப்பு முடிஞ்சிடும் இல்லையா? சீக்கிரம் கல்யாணம் செய்து விடுவீர்கள் தானே?" என்றார் சிவாவின் அன்னை.

"ம்" என்ற போதும், இவங்க ஏன் இதெல்லாம் விசாரிக்கிறாங்க? என்று குழம்பிப் போனார் மங்களம்.

"சுத்தி வளைச்சு பேச விரும்பலை... எங்க சிவாவுக்கு நிவியை பிடிச்சுருக்காம். அவளை கட்டித் தருவீங்களா?" என போட்டுடைத்தார்.

"கடவுளே! இது என்ன கொடுமை? ஆதிக்கு எடுத்துக்கலாம் என்றல்லவா எண்ணியிருந்தோம்... ஆனால் அது ரெண்டும் எதுவும் வெளிப்படையா சொல்லவில்லையே!" என தவித்தவர்,

"நான் என் கணவரிடம் பேசிட்டு சொல்றேன்." என விடைபெற்றார். அத்தையின் முகம் சரியில்லை என்பதை கண்டுகொண்டவள்,

"ஏதேனும் பிரச்சனையா அத்தை?" என விசாரிக்க,

'என் மகனை விட இவன் என்ன பெரிய இவனா?' எனும் கோபம் மூள,

"சிவாவுக்கு உன்னை பெண் கேட்கிறார்கள், என்ன சொல்லட்டும்?" என்றார் ஒட்டுதலின்றி.

"நான் ஆதி அத்தானிடம் கேட்கனும் அத்தை!" என்றதும்,

'நல்லவேளை... இவ அவனை விரும்பலை' எனும் நிம்மதி பரவ,

"பேசிட்டு சொல் நிவி, உன் மாமாவிடம் பேசி, அதன் பின் அவர்களிடம் சொல்லலாம்!" என்றதோடு நிறுத்திக்கொண்டார்.

"சிவா கட்டிக் கொள்ள ஆசைப் படுகிறானா? என்னிடம் எதுவும் சொல்லவில்லையே!" அந்த அதிர்ச்சியில் இருந்து வெளிவர வெகுநேரம் பிடித்தது அவளுக்கு. மெல்ல ஆதியை தொடர்பு கொள்ள,

"என்னடி...? இன்னும் தூங்காமல் என்ன செய்கிறாய்? மறுபடியும் ராக்கோழி வேலையை ஆரம்பித்துவிட்டாயா? சரி, கட்டிலில் படுத்து அந்த குரங்கை கட்டிக்க நான் பேசிக்கிட்டே இருக்கேன்... நீ தூங்கு!" அவள் தூக்கம் வராமல் தவிக்கும் ஒரு சில நாட்களில் இப்படி தான் தூங்க வைப்பான்.

"இல்ல ஆதி அத்தான்! உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்"

"என்னாச்சுடீ? அரியர் ஏதாவது இருக்கா? அம்மாகிட்ட சொல்லனுமா?"

"அதில்லை... சிவாண்ணா வீட்ல அவங்களுக்கு நான் வேண்டுமாம்!"

"என்னது?!" என்ற அதட்டலில் கைபேசியை நழுவவிட்டவள், மீண்டும் எடுத்து இறுக பிடித்து,

"ம்... இன்று கொலுவில் அவங்க அம்மா, அத்தைகிட்ட கேட்டாங்களாம்... படிப்பு முடிந்ததும் கட்டிக்க கொடுங்கன்னு..."

"எனக்கு பிடிக்கலைன்னு தெரிந்தும் நீ ஏன் அங்கே போன?"

"நான் போகல அத்தான்!" என பதற, கோபம் சற்று மட்டுப்பட்டது.

"அத்தைகிட்ட உங்களைக் கேட்டு சொல்றேன்னு சொல்லிட்டேன்... என்ன சொல்லட்டும்?"

"தத்தி... தத்தி புருஷன் கிட்டேயே வந்து என்ன பதில் சொல்லன்னு கேட்கிறா, இவளை..." என எரிச்சலுற்றவன்,

"மகாராணி, என்ன சொல்லணும்ன்னு முடிவு பண்ணிருக்கீங்க? " என்றான் எகத்தாளமாக.

"நான் எதுவும் முடிவு பண்ணலை... சிவா ரொம்ப டீசண்டா தான் பிஹேவ் பண்ணுவாங்க, ரொம்ப கேரிங்கா இருப்பாங்க, நல்ல சாய்ஸ் தான்... பட் நீங்க தான் சொல்லணும்... நான் என்ன செய்யட்டும் ஆதி அத்தான்?!" (என்னமா கோர்த்துவிடுது... இதுக்குப் பேர் தான் போட்டு... வாங்குறதா?)

சிவாண்ணா, சிவா ஆகிப் போனதும்…

“நான் யோசிச்சு சொல்றேன்" என வைத்துவிட்டான். அவள் நிம்மதியாக தூங்கிப் போனாள்.

நான் அருகில் இருப்பதால் தான் அருமை தெரியவில்லை என நினைத்து வெளிநாடு வந்தாலும் இவள் ஒட்டாமல் இருக்கிறாள். பேசாமல் நானே உன்னை கட்டிக்கிறேன்னு சொல்லிவிடலாமா? இந்த லூசுக்கு என் காதல் புரியுமா? அம்மா... ஆட்டுக்குட்டின்னு உளருமே... என தூக்கம் தொலைத்து அமர்ந்திருந்தான்.

அடுத்த நாள் கல்லூரியில் சிவா எப்போதும் போல் தான் இவளோடு பேசினான். ஒரு வாரம் ஆகியும், இவளிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை என்றதும், ஒரு வேளை இவளது அத்தையே இவளிடம் சொல்லாமல் மறைத்துவிட்டார்களோ…? என்று சந்தேகித்தான். அன்று கேன்டீனுக்கு அழைத்துச் சென்றவன்,

"கொலுவுக்கு நீ ஏன் வரல நிவி? அம்மா உன்னை பார்க்க எவ்வளவு ஆசையோடு இருந்தாங்க தெரியுமா?"

"ம்... வந்து நான் இன்னொரு நாளைக்கு வறேன்!"

"ஆதி அம்மா உன்னிடம் ஏதேனும் சொன்னார்களா?" அவனது பார்வை அவளையே ஊடுருவியது.

"ஏன் சிவா திடீரென்று? என்னிடம் கூட சொல்லலையே?"

"உன்னை சின்ன பொண்ணா பார்த்தபோதே நீ ரொம்ப கஷ்டப்படுற... நன்றாக பார்த்துக் கொள்ள வேண்டும் என அடிக்கடி நினைப்பேன். இந்த ஆதி உன்னை ரொம்பவும் படுத்துவானா... எப்படியாவது அங்கிருந்து உன்னை கூட்டி வந்துவிட வேண்டும் என்று தான்!"

"ஐயோ சிவா! ஆதி அத்தான் நீங்க நினைப்பது போலெல்லாம் மோசமானவர்கள் இல்லை. இப்பொழுது கூட இந்த விஷயத்தில் எனக்காக யோசித்து சொல்றேன்னு சொன்னாங்க தெரியுமா?" என விழி தட்டி விழிக்க,

"அவனிடம் ஏன் சொன்னாய்?" என்றான் எரிச்சலுடன்.

"சிவா! ஆதி அத்தான் தான் எனக்கு எல்லாமே... நான் போடும் உடையிலிருந்து, என்னைச் சார்ந்த விஷயம் அனைத்தும் அவங்க தான் முடிவு செய்வாங்க! இது கல்யாண விஷயம் வேற...? அவங்ககிட்ட சொல்லாம எப்படி?"

"உன் விஷயத்தில் அவன் ஏன் முடிவு செய்ய வேண்டும்? நீ என்ன கொத்தடிமையா? அவர்கள் வீட்டில் அவன் தயவில் வாழ்கிறாய் என்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாமா?"

"அப்படியெல்லாம் இல்லை... எல்லாம் என் நன்மைக்காகத் தான்!"

"எது உன் நன்மைக்காக? அவன் மட்டும் என்ஜினீயரிங் படிப்பானாம்...? நீ BBM என்ன நியாயம் இது?"

"அது அப்படி இல்ல சிவா, நான் கணக்கில் வீக், ஆதி அத்தான் எப்படி சொல்லிக் கொடுத்தும் திணறல் தான்."

"இதில் உன் முடிவு தான் என்ன? உன் ஆதி அத்தான் யோசிக்க இன்னும் எத்தனை நாள் எடுத்துக்கொள்வான்?"

"தெரியாது! நானா அவங்ககிட்ட கேட்க மாட்டேன். எனக்கு நல்லதென்றால் கேட்காமலேயே செய்வாங்க! நீங்க நல்லவர். உங்களோடான வாழ்வு நன்றாகவே இருக்கும். ஆனால் என் ஆதி அத்தான் சம்மத்தித்தால் தான். இல்லைன்னா நீங்க எனக்கு வேண்டாம் சிவா!" எனத் தெளிவாக பேசியவளையே வெறித்துக் கொண்டிருந்தான். அதன் பிறகு அவளோடு பேசுவதில்லை.

இரண்டு வாரங்களுக்கு பிறகு ஆதி ஊருக்கு வந்து சேர்ந்தான்.

"நாளை காலை சிவாவை வரச் சொல். காலையில் சாப்பிடுற மாதிரி வரச் சொல்!" என சொல்லிவிட்டு அன்று அவனே கல்லூரியில் கொண்டு போய்விட்டான். எதிரில் வந்த சிவாவை கண்டு கொள்ளாதவன் போல் சென்றும் விட்டான்.

அன்று தானாகவே, ஆதி சொன்னதாக அனைத்தையும் சிவாவிடம் சொன்னாள். எட்டு மணிக்கெல்லாம் வந்து விடுமாறு அறிவுறுத்தி சென்றாள்.

"ஏன் லேட்டாக வந்தா உன் அத்தான்... ஓகே சொல்லமாட்டானா?" என காற்றோடு தான் பேசிக் கொண்டிருந்தான்.

மகனுக்கே ஈடுபாடில்லாத போது, தான் என்ன சொல்வது? என மங்களமும் அமைதி காத்தார். அன்று எப்பொழுதும் போல் இரவு அவள் அறைக்கு வந்தான்.

"உன் சிவா என்னடி சொல்றார்?" என்றான் அவளருகே படுத்தபடி,

"வரேன்னு தான் சொன்னார்!"

"ம்... சீக்கிரமே கல்யாணம்!! கலக்கு இம்சை! அம்மா தான் பாவம்... நீ இல்லாமல் தவித்து போவார்கள். இனி நீயும் சிவாவின் அருகில் எந்த பயமுமின்றி, நிம்மதியாக தூங்கலாம். இரவெல்லாம் ஆதி அத்தானை தேட வேண்டியதில்லை.

அவங்க வீட்டில் உன்னை நல்லா பாத்துக்குவாங்க... நான் ஊருக்கு வரும் போது உன்னை வந்து பார்க்கலாம்... ஆனா இப்படியெல்லாம் பேச முடியாது. இனி இந்த வாடி போடியை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட வேண்டும். உன் சிவா வேறு கோபித்து கொள்ளப் போகிறார்!" (உலக மகா நடிப்புடா... பதறி பறந்து வந்துட்டு, பக்குவமா காயை நகத்துறியேடா கண்ணா...)

"இவன் என்ன சொல்கிறான்? ஐயோ! அத்தை பாவமே! எல்லா வேலையும் அவர்களே பார்க்க வேண்டுமே! ஏன்... கல்யாணம் ஆனா நான் இங்கு இருக்க முடியாதோ? ஆதி அத்தானோடு படுக்க முடியாதா? ஆதி அத்தான் கூப்பிடுவதற்கு அவன் ஏன் கோபப்படணும்?

கோபப்படுவான் தான், அவனுக்கு ஆதி அத்தானை பிடிக்காதே... இவனே என்னை கட்டிக்கலாம் தானே? வாயை திறக்கமாட்டேங்கிறானே...? நானும் இன்னும் கொஞ்சம் கலரா இருந்து தொலைச்சிருக்கலாம்... ரொம்ப இமேஜ் பார்ப்பானே...? அமுல் பேபி மாதிரி இருந்துகிட்டு என்னை கருவாச்சின்னு கூப்பிடுவதில் ஒன்னும் குறையில்லை.

முதல்ல இந்த சிவாவை பத்திவிடனும் கல்யாண பேச்சை உடனே நிப்பாட்டனும். இவன் கட்டிக்கலன்னா கூட பரவாயில்லை இங்கயே எல்லோரோடும் இருந்தால் போதும்..." என மனம் தவிக்க,

"ஏன் ஆதி அத்தான் இப்படியெல்லாம் பேசுறீங்க...? அவர் ஒன்னும் என் சிவா இல்லை... நான் லவ் பண்ணல..., அவங்க கேட்டாங்க. நீங்க ஓகே சொன்னீங்க அவ்வளவு தான்! எனக்கு இந்த கல்யாணம் வேண்டாம். சிவா வேண்டாம்... உங்களை விட்டு போக முடியாது... போகமாட்டேன். அவன் மார்பில் முகம்

புதைத்துக் கொள்ள, (இதற்குத் தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா...?!)

"ஏய்! இம்சை! ஏன் இப்படி உளர்ர? நாளை என்ன பேச?" (அய்யோடா... இவருக்கு ஒன்னுமே பேசத் தெரியாது?)

"வேண்டான்னு சொல்லிடுங்க! உங்களை, அத்தையையெல்லாம் கஷ்டப்படுத்திட்டு என்னால் அங்கு நிம்மதியா இருக்க முடியாது!"

"அம்மாவுக்கு வேலை ஆள் வைத்துவிடலாம். நானும் இங்கு வரும் போதெல்லாம் உன்னை வந்து பார்க்கறேன். அதெல்லாம் பிரச்சனை இல்லை!"

'சொல்லிவிடுவோமா....? இவன் கோவிச்சுக்கிட்டு சிவாவுக்கே கல்யாணம் பண்ணிக்கொடுத்துட்டா இன்னும் பிரச்சனையே...' மனம் பதற...

"வேண்டாம்...வேண்டாம்... இதைப் பற்றி பேசாதீங்க!"

"அப்போ நாளைக்கு சிவாகிட்ட நோ சொல்லிடட்டுமா?"

"சொல்லிடுங்க..." (நாரதா... வந்த வேலை முடிந்ததா? ஆட்டத்தை களைத்து விட்டாயா...? மகிழ்ச்சி.)

"வாடி என் பட்டுக்குட்டி... இதை உன்னிடம் இருந்து வரவைக்க தானே இவ்வளவு நாடகமும்... யாருக்கு கட்டிக் கொடுத்தாலும் ராத்திரிக்கு ஆதி அத்தான்கிட்ட ஓடிவந்துடுவ...

இந்த அழகில் சிவா நல்லவராம்... வல்லவராம்... கேரிங்காம்... யார்கிட்ட...?

நாளைக்கு வரட்டும், வச்சுக்கிறேன் கச்சேரியை... சிவா செத்தடா! என் பொண்டாட்டியை என்கிட்டயே பெண்கேட்டு வருவியா? (வா... வரலாம்... வா...) உல்லாசமாக சிரித்தபடி தன்னை கட்டிக் கொண்டு தூங்குபவளை இதமாக அனைத்துக் கொண்டான்.

ஆதி, நிவியின் முடிவு மங்களத்துக்கும், மனோகரனுக்கும் தெரியாததால் மகன் சொன்னபடி காலை விருந்து தயாரித்துக் கொண்டிருக்க... சிவா சொன்ன நேரத்திற்கு வந்துவிட்டான். கல்லூரிக்கு கிளம்பிக் கொண்டிருந்தவள்,

"ஆதி அத்தான்! எழுந்திரிங்க சிவா வந்துட்டாங்க..." என எழுப்ப

"நோ சொல்ல நான் வரணுமா? நீயே சொல்லிடு. எனக்கு தூக்கம் வருது."

"விளையாடாதீங்க ஆதி அத்தான். வாங்க ப்ளீஸ்..." அவளது தொல்லை தாங்க முடியாமல், எழுந்து வந்தவன்,

"வா சிவா... அம்மா காபி... என்னடி காலேஜுக்கு கிளம்பிட்டியா?" அவனை அமர வைத்துவிட்டு இவன் தன்போக்கில் மற்ற பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்க கடுப்பாகிய போதும் அமைதியாகவே,

"என்ன முடிவு செஞ்சிருக்க ஆதி?"

"எல்லாம் உனக்கு தெரிஞ்ச முடிவு தான். எனக்கும் உனக்கும் தான் ஒத்துவராதே எந்த தைரியத்தில் பெண் கேட்ட..."

"நான் கட்டிக்கப் போறது நிவியை தான். உன்னை இல்லை." (நீ என்ன தான் கரெக்ட்டா பேசினாலும், அத்தை மகளை கரெக்ட் பண்ணி வச்சிருக்கானே ஆதி!)

'ஓ! அப்போ நிவிகிட்டயே கேளு..." சாமர்த்தியமாக திருப்பிவிட்டு,

"நிவேதா..." என அழைக்க, இவன் சொல்லாம என்னை ஏன் வரச் சொல்றான்? முகம் சுளித்தபடி சென்றவளிடம்

"சொல் நிவி சிவாவை கல்யாணம் பண்ணிக்கிறீயா?"

"இல்ல..."

"போதுமா... நிவேதாவே சொல்லியாச்சு..." என்றான் ஏளன பார்வையுடன்.

"நீ தான் அவளை மிரட்டி வச்சிருக்க... நிவி இவன் சொல்றதைக் கேட்காத... உன்னை நிரந்தரமா இந்த வீட்டோட வேலைக்காரியா வைக்க திட்டம் போடுறான்.'' புரியவேண்டுமே என்ற தவிப்புடன் சொல்ல, மங்களத்துக்கு கோபம் வந்துவிட்டது.

சமையல் கட்டில் இருந்து விரைந்து வந்தவரை மனோ தடுத்து,

"மங்கா அவங்களுக்குள்ள என்னவோ இருக்கு. நாம தலையிடக் கூடாது. அவங்களே முடிவு பண்ணட்டும்." கட்டளையாகச் சொல்ல ஒன்றும் பேசாமலேயே திரும்பி சமையல் கட்டுக்குள் புகுந்து கொண்டார்.

"தப்பா பேசாதீங்க சிவா. ஆதி அத்தானைப் பத்தி எனக்கு தெரியும். அவங்க என்ன செஞ்சாலும் என் நல்லதுக்கு தான்."

"புரியாம பேசுற நிவேதா... நீ நினைக்கிற அளவுக்கெல்லாம் அவன் நல்லவனில்லை."

"போதும் சிவா!'' கை உயர்த்தி அவனை அடக்கியவள்,

‘‘எனக்கு நீங்க வேண்டாம். என் ஆதி அத்தான் தான் வேணும். ப்ளீஸ்..." வாசலை நோக்கி கை காட்ட,

"உனக்கெல்லாம் இரக்கப்பட்டு வாழ்கை கொடுக்க வந்தேன் பாரு..."

"கல்யாணம் ஆசைப்பட்டு செஞ்சுக்கணும் சிவா. இரக்கப்பட்டு பண்ணிக்க கூடாது. நீங்க போகலாம்."

"இப்படியே லூசு மாதிரி காலம் பூரா கன்னியாவே இருக்க வேண்டியது தான். இங்கு உனக்கு யாரும் மாப்பிள்ளை பார்த்து கல்யாணம் பண்ணி வைக்க மாட்டாங்க." கோபம் கனன்றது அவனிடம்.

"அவசியமில்லை... நான் ஆதி அத்தானையே கல்யாணம் பண்ணிக்குவேன். அது என் சொந்த விஷயம் நீங்க போகலாம்." நிவேதாவும் உக்கிரமாகியிருந்தாள்.

"எல்லாம் தெரிஞ்ச மாதிரி கிளம்பி வந்துட வேண்டியது..." கோபமாய் முணுமுணுக்க, எதிர்பாராத திருப்பத்தில் ஆதி அரண்டு விழிக்க,

"ஆதி… உன்னை… கட்டிக்கப் போறான்...? ஹாஹா… ஏமாந்து நிக்கப் போற..."

"ஆதி அத்தான் சொல்லுங்க... சிவாகிட்ட சொல்லுங்க, நீங்க என்னை கல்யாணம் பண்ணிக்கிவீங்க தானே? சொல்லுங்க ஆதி அத்தான்." அவன் அருகே வந்து மண்டியிட்டுக் கேட்க.

"கட்டிக்குவேன். உன்ன தான் கட்டிக்குவேன் தங்கம். போ… காலேஜுக்கு கிளம்பு" கன்னம் தட்டிச் சொல்ல... மங்கா, மனோ, சிவா அனைவருமே வாய் பிளக்காத குறையாய் பார்த்துக் கொண்டிருக்க,

"சாப்பிட்டு போயேன் சிவா. சீக்கிரமே கல்யாண பத்திரிக்கை அனுப்பி வைக்கிறேன் கட்டாயம் வந்துடனும்." இதழோர சிரிப்புடன் சொல்ல, (நக்கலு...?)

"நீ மாறவே இல்ல... அவளும் மாறலையேங்கிறது தான் வருத்தமா இருக்கு."

"நீயும் தான் மாறவேயில்லை. இன்னும் என்னை தப்பா தான் நினைக்கிற..." தோள்களை குலுக்கியவனை வெறித்த சிவா,

"தப்பானவனை நல்லவிதமா நினைக்க முடியாது. பெண் பாவம் பொல்லாதது. நிவேதாவை நல்லா வச்சுக்க..." போய்விட்டான்.

"என்ன ஆதி இது? இவ்வளவு நாளா பிடிகொடுக்காம பேசின இப்போ திடீர்ன்னு கல்யாணம் பண்ணிக்கிறேங்கிற? நிவி சொல்றது போல கல்யாணம் ஆசைப்பட்டு பண்ணிக்கணும். பாவப்பட்டோ இரக்கப்பட்டோவெல்லாம் பண்ணிக்கக் கூடாது."

மகனின் மனநிலையை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்ற வேகம் இருந்தது மனோகரனிடம். தங்கச்சி மகள் வாழ்க்கையிற்றே...?

"அடுத்த லீவ்ல கல்யாண தேதி குறிச்சிடுங்கப்பா..." (எட்டுவருச காதல்... இவ மேல எனக்கில்லாத ஆசையா?) நேரடியாக சம்மதத்தை சொல்லிவிட்டான்.

"உங்க ரெண்டு பேருகும் இடையில் வேறு ஒருத்தன் வந்துட்டான்னதும் தான் மனசு புரியுதா? மங்குனி மாதிரி இருந்துட்டு இப்போ நின்னது நிக்க கல்யாணம் பண்ணிவைங்கன்னா என்ன அர்த்தம்? அவளுக்கு இன்னும் படிப்பு முடியல...?" செல்ல கோபமிருந்தது மங்காவிடம்.

"எனக்கும் தான் இன்னும் காண்ட்ராக்ட் முடியல... அவ படிக்கிறபடி படிக்கட்டும். இதேபோல வந்து போய்க்கிறேன். கல்யாணத்துக்கும் காலேஜுக்கு என்ன சம்பந்தம்? பெரிய கலெக்டருக்கு படிக்கிற மாதிரி பில்டப் கொடுக்கறீங்க..." தந்தை வேலைக்கும், நிவி கல்லூரிக்கும் போய் விட்ட தைரியத்தில் தான் அன்னையிடம் மனம் திறந்து கொண்டிருந்தான்.

"இன்னும் 6 மாசம் தானே? காத்திருக்க முடியாதோ?" மகனின் தோளில் செல்லமாய் அடிக்க,

"எட்டுவருசமா காத்துக்குட்டுத் தான் இருக்கேன். போதும்... போதும்... இனி முடியாது. மகமாயி இப்போ தான் மனசு இறங்கியிருக்கா... வேற எவனாவது குறுக்க புகுந்து ஆட்டைய கலைக்குறதுக்குள்ள தாலி கட்டி சேஃபாயிக்கணும்."

"அடப்பாவி! இத்தனை வருஷாமாவா லவ் பண்ற? இப்போ தான் அவளே ஓகே சொல்லிட்டாளே இனி எவன் வர முடியும்? அவளும் படிச்சு முடிக்கட்டும். நீயும் வேலையை முடிச்சுக்கிட்டு வா... கல்யாணம் பண்றது ஆளுக்கொரு இடத்தில இருக்குறதுக்கா?"

"அப்படி தான் இவளை விட்டு பிடிக்கணும். உங்க மருமகளுக்கு என் மேல லவ்வெல்லாம் கிடையாது. சட்டுன்னு நம்பிடக் கூடாது. கல்யாணத்துக்கு அப்புறம் பிரிஞ்சிருந்தாவாச்சும் காதல் வருதான்னு பார்க்கிறேன். கொஞ்சம்

கருணை காட்டுங்க மங்காம்மா... அப்பாகிட்ட சொல்லி சீக்கிரம் ஏற்பாடு பண்ணுங்க."

"அதெல்லாம் உங்க அப்பா ரெடியாதான் இருக்கார். தேதி குறிங்கன்னு சொன்னவுடனே சரின்னு கிளம்பிட்டாரே... தங்கச்சி மகளாம் இந்தப்பக்கம் மகனாம்... பார்டா... அவருக்கு முன்னமே தெரிஞ்சிருக்கும் போல... நான் தான் கணிக்க முடியாம இருந்திருக்கேன்." அப்பாவியாய் சொல்ல.

"ஸ்வீட் டார்லிங் மா நீங்க..." அன்னையை கட்டிக் கொண்டு கொஞ்சினான் ஆதி.

"ஆளவிடுறா சாமி! உன் டார்லிங் சாயங்காலம் வந்துடுவா அவளையே கொஞ்சிகிட்டு இரு."

"ஆஹா... ஏன் உங்களுக்கு இப்படி ஒரு விபரீத எண்ணம்? அவ ஆதி அத்தான் அப்பா மாதிரி... அம்மா மாதிரின்னு பிட்டப் போடணுமா...?" மிரட்சியுடன் தான் சொன்னான். பாவம் அவனும் தான் என்ன செய்வான்? கொஞ்ச நினைக்கும் போதெல்லாம் அவளும் அதை தானே சொல்கிறாள்.

பிரபாவுக்கும் நந்துவுக்கும் அழைத்து திருமண விஷயம் பற்றிச் சொன்னன் ஆதி. நந்துவுக்கு குஷி தாங்கவில்லை.

"அப்பா! எங்களை மாதிரி நீயும் மாட்டினியா?" குதூகலமாய் கலாய்த்தாள். (இத விஜய் சொல்லணும்)

"ஒருவழியா சொல்லிட்டியா மச்சான்?" என கேட்டவனிடம்,

"ஆசை! உன் தங்கச்சி கட்டிக்கிறியான்னு கேட்டா சரின்னு சொன்னேன். அவ்வளவு தான். அந்த கெத்தோடையே இருந்துடனும் மச்சான்...." ( ஐ லவ் யூ கூட சொல்ல முடியாத அப்பாடக்கருக்கு கெத்து என்ன வேண்டிக்கிடக்கு?)

"ஓவரா தான் பண்ணற... மரியாதையா சொல்லிடு'' பிரபாவின் பேச்சை காதில் போட்டுக் கொள்ளவே இல்லை ஆதி.

"மச்சான் நாளைக்கு ஊருக்கு கிளம்பறேன்."

"இப்போ தானே வந்த? ஓ! கல்யாணத்தின் போது சேர்த்து லீவ் எடுத்துக்கலாம்னு நினைக்கிற.... கலக்கு." சந்தோஷமாய் பேசிக் கொண்டிருந்தனர் நண்பர்கள் இருவரும்.

கல்யாண வேலை நிறைய இருக்கு... நாங்க ரொம்ப பிஸி...

# அத்தியாயம் 34

ஆதியும் ஊருக்கு கிளம்பிவிட்டான். திருமண நாள் குறிக்கப்பட்டது. நிவிக்கு பெரிதாக எந்த பாதிப்பும் இல்லை. எப்போதும் போல் தான் இருந்தாள். திருமணத்திற்கு புடவை வாங்கப் போக வேண்டும் என முடிவெடுத்திருந்த மங்களம் பவானியை உதவிக்கு அழைத்தார்.

எப்பொழுதும் பிரபா அலுவலகம் செல்லும் வரை திருப்பள்ளி எழுச்சி கொள்ளாமல் சயனித்திருக்கும் பவானி இன்று பரபரப்பாக கிளம்பிக் கொண்டிருக்கவும், எங்கு போகிறாள் என அறிந்து கொள்ளும் ஆவல் உண்டானது அவள் கணவனுக்கு.

அவனுக்கு முன் குறுக்கும் நெடுக்குமாக போவதும் அவனை இடித்துக் கொண்டு கண்ணாடியில் ஒப்பனையை சரிசெய்வதுமாய் இருக்க,

"ஆபிஸ்க்கு கிளம்பிகிட்டு இருக்கேன்ல சும்மா சும்மா குறுக்க வந்தா என்ன அர்த்தம்?"

"நானும் வெளிய கிளம்புறேன்னு அர்த்தம்!" மிடுக்காக வந்தது பதில்.

"அது சரி... கட்டுனவன்கிட்ட எங்க போறோம் எதுக்கு போறோம்னு சொல்ற பழக்கமெல்லாம் எப்போ தான் வருமோ?"

"சொல்லிட்டாலும்... அப்படியே போக வேண்டிய இடத்துக்கு கூட்டிக் கொண்டு போய் விட்டுட்டுதான் மறுவேலை பார்ப்பீங்க?" (இன்னிக்கு என்ன ஒரு மார்க்கமாவே பேசுறா?)

"எங்க போகணும் சொல்லு. கூட்டிட்டு போறேன்."

"வேண்டாம் எனக்கு கார் வேணும். நானே போய்க்குவேன்."

"பார்டா! அப்புறம் எதுக்குடி என்னோட வம்பளக்குற?" என முறைக்க அதையெல்லாம் சட்டை செய்யாமல்,

"பணம் வேணும்!" இடுப்பில் கைவைத்து நின்று கொண்டு ஒரு கையை நீட்டி ஒய்யாரமாய் கேட்க... அவளது செயலில் கவரப்பட்டவனாய் இதழோர சிரிப்புடன்,

"உயர் திரு சிவானந்தன் ஐயாவின் மகள், பவானி இண்டஸ்ட்ரிஸின் CEO, உங்ககிட்ட கைகட்டி வேலை பார்க்கும் வேலைக்காரன்கிட்ட பணம் கேக்கறீங்களே நியாயமா?" கேலியாய் புருவம் உயர்த்த. சுள்ளென மூண்ட கோபத்தை அடக்கிக்,

"நான் உன் விட்டு வேலைக்காரனில்லை உன் புருஷன்டின்னு யாரோ மீசையை முறுக்கினதா நியாபகம். பாவம் செலக்டிவ் அம்னிஷியா போல... (அட்ராசக்கை! அட்ராசக்கை! கலக்குறியேம்மா...)

நிவிக்கு கல்யாண புடவையெல்லாம் வாங்கப் போறோம், அப்படியே எனக்கும், வள்ளி ஆன்டிக்கும் வாங்கணும் அப்புறம் நானும் நிவிக்கு ஒரு புடவை எடுத்துக் கொடுக்கணும்னு விரும்பறேன் காசை எடுங்க.'' அதிகாரம் தூள் பறந்தது.

"நிவி என் தங்கச்சி!" (ரொம்ப தான் உரிமை கொண்டாடுற) சிறு பொறாமையோடு சொன்னலும் அவன் மனம் குளிர்ந்துவிட்டது. அம்மாவுக்கும் தங்கைக்கும் வாங்க வேண்டும் என்று சொன்னதால் இருக்குமோ?

"எனக்கு நாத்தனார்!" (அம்மாடி முடியல...) சிரித்தவன், வாலட்டில் இருந்து தன் கார்டை எடுத்துக் கொடுக்க, வாங்கிக் கொண்டு நகர முற்பட்டவளின் கரம் பிடித்து நிறுத்தியவன்,

"எங்கடி ஓடுற? உரிமையா காசு வாங்கத் தெரியுது... பொண்டாட்டின்னு கொடிப் பிடிக்க தெரியுது... மிச்சதெல்லாம் தெரியதோ?" அவனது குரல் மாறுபாடு ஏதோ சங்கதி சொல்ல,

ஒரு கரம் கொண்டு இடையோடு வளைத்து பிடித்திருந்தவன் தனக்கு மிகவும் நெருக்கத்தில் நிறுத்தி, பார்வையால் விழுங்க, (இது என்ன? இவ்வளவு நெருக்கத்தில் நிறுத்தி என்ன கேட்க போகிறான்? முத்தமோ?)

உடல் சிலிர்த்தது, உதடுகள் வறண்டு போயின, எச்சில் கூட்டி நாவால் ஈரப்படுத்திக் கொள்ள, அவன் விழிகளும் அங்கு தான் நிலைத்திருந்தது. (முடியவில்லை... வெறும் பார்வையில்

துவள செய்ய முடியுமா? இந்த வித்தையெல்லாம் எங்கிருந்து கற்றிருப்பான்?)

கால்கள் நிற்க முடியாமல் நடுங்க அவன் தோளில் கரம் பதித்து இறுக பற்றிக் கொண்டாள். (முத்தம் கொடுக்கணும்னா கொடுக்க வேண்டியது தானே இது தாங்க முடியாத இம்சையால்ல இருக்கு.) மனம் நிலைகொள்ளாமல் தவித்தது.

"லட்டு..." மெல்லிய அழைப்புடன் ஒற்றை விரல் கொண்டு நெற்றியில் இருந்து கோடிழுக்க, அவள் உடலெங்கும் மின்சாரம் பாய்ந்தது. விழிகள் தானாகவே மூடிக் கொண்டன. இதழை பற்கள் கொண்டு அழுத்திக் கொள்ள வேண்டியதிருந்தது.

அவனோ பற்களால் அழுத்தப் பட்டிருந்த இதழை விரல் கொண்டு வருடி விடுவிக்க... அவள் அனுமதியின்றி கால்கள் தானாகவே அவன் முத்தம் ஏற்க எம்பிவிட்டன. அவன் விரலை விலக்கிக் கொள்ள, சுயம் திரும்பியவள் என்னாச்சு என்பது போல் பார்க்க...

"நான் சின்ன பையனா இருக்கும் போது பணக்காரப் பசங்க மட்டுமே வச்சு விளையாடும் ஒரு பொம்மை இருக்கும். பார்க்க பளீர்ன்னு, அழகா, தொடை தெறியிற மாதிரி மார்டனா குட்டி டிரஸ் போட்ருக்கும், ஆனால் நீல முடி... அதையும் அழகா பின்னியிருக்கும். அதை தொடணும்னு ரொம்ப ஆசையா இருக்கும்.

எங்க காம்பவுண்டில் நாகராணின்னு ஒரு பொண்ணுக்கு அவ மாமா லண்டன்ல இருந்து வாங்கிக் கொடுத்திருந்தார். ஐஞ்சு நிமிசம் அந்த பொம்மையை கையில் வச்சுக்க அவ சொல்றதையெல்லாம் கேக்கணும். அப்போ தான் தருவா... இன்னைக்கு அந்த பொம்மையே உயிர்வந்தது என் கையணைப்பில் நிக்கிறது மாதிரி ஃபீல் ஆகுது.

பார்பி... மை பார்பி டால்..." என தன் கரங்களை அவள் கன்னத்தில் பதித்து விழி பார்க்க, தொண்டை வறண்டு தாகம் ஏற்பட்டது. அவன் எச்சில் குடித்து தாகம் தீர்த்துக் கொள்ளும் நோக்கில் மீண்டும் தோள் அழுத்தி எம்ப விலகிவிட்டான்.

"பிரபா..." கிறக்கமாக அழைக்க,

"தேங்க்ஸ்... நாகராணி கொடுக்கும் ஐஞ்சு நிமிஷம் முடிஞ்சிருச்சு." கேலி போலும் சொல்ல (வேண்டுமென்றே தூண்டிவிட்டு சாகடிக்கிறான்...) கோபம் மூல,

'நான் ஒன்னும் உங்க நாகராணியோட பொம்மையில்ல." வெடுக்கென சொல்லிவிட்டாள். அவன் எதற்கும் அசருவதாக இல்லை போலும்...

"எனக்கு ஐஞ்சு நிமிஷம் தானே பழக்கம். நிறைஞ்சிடுச்சு..." தோள்களை குலுக்கினான். வெறித்து நோக்கியவள் நகர,

"நில்லுடி!" தன் வாட்ரோப் அருகே இருந்து அவளை நோக்கி வரவும், (இப்போ என்ன? பாவம்னு தோணிடுச்சோ...)

மானம் கெட்ட மனம் மீண்டும் தனக்கு சாதகமாகவே யோசித்தது.

"இனைக்கு கம்பெனியில் கிளைன்ட் மீட்டிங் இருக்கு. நீ இப்படி போய் நின்னு எங்கம்மா வயசான காலத்தில் மயக்கம் போட்டு விழுந்தா எல்லாத்தையும் கான்சல் பண்ணிட்டு நான் தான் ஓடி வரணும்... இதை போட்டுகிட்டுப் போ...

வீட்டுக்கு வந்ததும் கழட்டி வச்சிடு... இதற்காகவெல்லாம் கணவன்ங்கிற உரிமை இருக்குன்னு உன்னோட மல்லுக்கு நிற்க மாட்டேன் பயப்பட வேண்டியதில்லை.'' அவள் கழட்டிக் கொடுத்த தாலி சரடைத் தான் அவள் முன் காட்டி பேசிக் கொண்டிருந்தான்.

(போடா... நீ உரிமை எடுத்துக்க மாட்டேங்கிறியேன்னு தான் வருத்தமா இருக்கு) ஏக்கமாய் பார்க்க,

"போடுகிற ஐடியா இல்லியா?"

"போட்டுவிடற ஐடியா இல்லியா?" திருப்பிக் கேட்டவளை ஆழ்ந்து நோக்கியவன்,

"இல்ல... ஒருத்திக்கே எத்தனை முறை போடுறது...? அருகில் இருந்த மேசையில் வைக்க,

"நீங்க போட்டுவிடலைன்னா நான் இங்கிருந்து நகரப் போறதில்ல பிரபா..." அவளது அழுத்தம் கோபத்தைத் தூண்ட,

"நல்லது." போய்விட்டான். பத்து நிமிடங்களுக்குப் பிறகு அன்னையிடம் இருந்து அழைப்பு.

"பிரபா பவானிம்மா கிளம்பிட்டாங்களா? எல்லோரும் தயாரா இருக்கோம். இன்னும் வரலயேன்னு தான் கூப்பிட்டேன். போனையும் எடுக்கமாட்டேங்குறாங்க."

"கார் ஓட்டிக்கிட்டு இருக்கான்னு நினைக்கிறன் வந்துடுவாம்மா..." அவனது அழைப்பையும் அவள் எடுக்கவேயில்லை. அலுவலகத்தை நெருங்கியிருந்தவன் மீண்டும் இல்லம் நோக்கி வர... சிலையாய் அசையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள் அந்த வீம்புக்காரி.

"ஏண்டி இப்படி படுத்துற? திமிர் நினைச்சதை சாதிக்கணும்கிற திமிர்..." அப்பொழுதும் எந்த அசைவும் இல்லை அவளிடம்.

"தாலியை மதிக்கிறவன்னா முறுக்கிக்கிட்டு நிக்கிறதுல ஒரு அர்த்தம் இருக்கு. உனக்கு தான் அதுமேல எந்த மதிப்பும் இல்லையே எடுத்து போட்டுக்கிட்டு போக வேண்டியது தானே? கட்டின அன்னிக்கே கழட்டி கையில் கொடுத்தவ இப்போ என்ன புதுசா நான் தான் பண்ணனும்னு வதைக்கிற?"

"வாயை திறக்கமாட்டல்ல? உனக்காக எல்லோரும் காத்துக்கிட்டிருக்காங்க..."

"அவ்வளவு அக்கறை இருக்கவர் இந்நேரம் போட்டுவிட்டிருக்கணும். இனி கழட்டமாட்டேன் ப்ளீஸ் போட்டுவிடுங்க பிரபா..." மிடுக்காக ஆரம்பித்து கெஞ்சலாய் முடிக்க மறுக்க முடியாமல் ஆழ்ந்த மூச்சுடன் அவனே மீண்டும் அணிவித்தான்.

"தேங்க்ஸ்..." கன்னத்தில் முத்தமிட்டு பறந்து போய்விட்டாள். இப்பொழுது சிலையாய் நிற்பது அவன் முறை போலும்.

அவன் கார்டை உபயோகப்படுத்தும் போது தான் அவனது பொருளாதார நிலை தெரிந்தது. MDக்கான சம்பளம் மட்டுமே போடப்படுகிறது என்பதைக் கண்டுகொண்டாள். வீட்டிற்கு வந்ததும் வராததுமாக, தந்தையின் அறைக்கு சென்றவள்,

"அப்பா! பிரபா வந்தாச்சா?"

"இல்லடா... கிளம்பிட்டேன்னு சொன்னார் வந்துக்கிட்டிருப்பார். பர்சேசல்லாம் முடிஞ்சிருச்சா?"

"அப்பா.. அவர் அக்கவுண்டில் பெரிய தொகையா போடுங்கப்பா."

"ஏன்டா சம்பளம் போட்டுக்கிட்டு தானே இருக்கோம்?' புரியாமல் கேட்க,

"பிரபா இந்த வீட்டு மாப்பிள்ளை." மகளின் கோபம் புதிதாய் தோன்ற,

"அப்படி என்னடா செலவு? மாப்பிள்ளை என்கிட்ட எதுவும் சொல்லலையே..."

"எனக்கு எதாவது வாங்கிக் கொடுக்கனும்னாக் கூட உங்ககிட்ட வந்து நிக்கணுமா? போடுங்கன்னு சொன்னா போடுங்கப்பா எல்லாத்துக்கும் காரணம் கேக்காதீங்க."

"வனி... ஏன் மாமாகிட்ட குரல் உயர்த்தி பேசுற?" சிறு அதட்டலுடன் உள்ளே நுழைந்தான் அவள் கணவன். (கேட்டிருப்பானோ?) தலைகுனிந்து முகம் பார்க்க முடியாமல் நிற்க,

"ஒண்ணுமில்ல மாப்பிள்ளை... சும்மா தான் பேசிகிட்டு இருந்தோம். நான் தான் தப்பு பண்ணிட்டேன். அதான் பேபிமாக்கு கோபம் வந்துடுச்சு. நான் போடுறேன்டா. நீ மாப்பிளைக்கு சாப்பிட ஏதாவது கொண்டுவா..."

'பெத்தவங்க தப்பே செஞ்சிருந்தாலும் கோபப்படக் கூடாது வனிம்மா!" மன்னிப்பு கேள் என்பது போல் பார்த்தான்.

'சாரிப்பா..." தந்தையின் கரம் அழுத்த,

'இன்னொரு முறை நீ கேக்குற மாதிரி இருக்காது. எல்லா ஏற்பாட்டையும் பண்ணிடுறேன்டா.' ஆதரவாய் மகளின் தலை கோத,

'தேங்க்ஸ் பா..." என சிரிக்கும் மனைவியை விழியெடுக்க முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தான். பலகாரமும் காப்பியுமாய்

அவன் பின்னே வர, பால்கனியில் அமர்ந்து தன் மடிக்கணினியை குடைந்து கொண்டிருந்தான் பிரபா.

"தூங்கும் போது தான் நான் உங்களை கடிச்சு சாப்பிட்டு விடுவேனோன்னு பயந்து இங்கு வரீங்க... இப்போ கூட ரூம்ல இருக்கக் கூடாதா? ஓவரா பண்றீங்க பிரபா..." குறை படித்தவள் அவனருகே வந்தது உரசியபடி அமர்ந்தாள்.

தீக்குச்சி உரசல் தீமூட்டிவிடும் போலவே என நினைத்தாலும் விலகத் தோன்றாமல்,

"தேங்க்ஸ்..." காபியை பருகிக் கொண்டிருக்க,

"ஆதிக்கும் நிவிக்கும் என்ன பரிசு கொடுக்கப் போறீங்க?" உரிமையுடன் கேட்க நெகிழ்ந்து போனவன்,

"ஆதிக்கு நானும் நந்துவும் சேர்ந்து வைர மோதிரம் செய்ய கொடுத்திருகோம். நிவிக்கு நீ போடுற மாதிரி நகை செட் வாங்கிக் கொடுக்கணும். நீங்க பெரும் பணக்காரங்க வைரத்தில் போடுவிங்க. நம்ம வசதிக்கு கட்டுப்படியாகாதே... அதான் தங்கத்தில் வாங்குவோமா இல்ல முத்தில் வாங்குவோமான்னு யோசனையா இருக்கு."

"நீங்களும் பணக்காரங்க தான். ஆதிக்கு மட்டும் வைரம் உங்க தங்கைக்கு...?"

"வைரத்தில் வாங்கிக் கொடுக்க ஆசைமட்டும் பத்தாதே... பார்க்கலாம்... கார்ட் எங்கடி? புடவை வாங்கிட்டியா? கண்ணுலயே காட்டல..."

"இன்னும் என் பர்ச்சேஸ் முடியல..." கண் சிமிட்டி சிரிக்க, (இருக்கும் மூணு லட்சத்தையும் முடிச்சுட்டு தான் கொடுப்பாளோ? நிவிக்கு என்ன பண்றது?) திருதிருக்கும் கணவனை கண்டவளுக்கு மேலும் சீண்ட ஆசை வந்தது.

"பிரபா நாளைக்கு மஹன்லால் போலாமா?" (நகை கடையாச்சே ஆதி சொன்னது சரிதான். பொண்ணுங்க பர்ஸை காலி பண்ணாமல் விடமாட்டாங்க போல...) உள்ளூர சிறு பயம் தோன்றினாலும் ஒப்புதலாய் தலையசைத்து வைத்தான்.

"சோ ஸ்வீட்!" கன்னம் கிள்ளிச் சென்றாள். (இதுவேறையா? நடத்து நடத்து...) சிரித்துக் கொண்டான் அவள் கணவன்.

மறுநாள் நகைக்கடைக்கு சென்றவள் டெம்பில் கலெக்ஷனில் நெக்ல்ஸ், ஹாரம், காடா வளையல், பெரிய ஜிமிக்கி, மோதிரம் அனைத்தையும் எடுத்து ஒவ்வொன்றாக வைத்துக் காண்பித்து கணவனின் கருத்தறிந்து தெரிவு செய்ததில் மகிழ்ந்து தான் போனான்.

பில்லைப் பார்த்தும் கொஞ்சம் மிரண்டவன்,

"வனிம்மா... வளையலை மட்டும் நாளைக்கு வந்து வாங்கிக்கலாமா?" மென் குரலில் முயன்று வரவழைத்த குறுநகையுடன் வினவ,

"ம்ஹூம்... கல்யாண பொண்ணுக்கு முதன் முதலில் வாங்குறோம் எல்லாத்தையும் ஒன்னாத்தான் வாங்கணும்."

"இதெல்லாம் உனகில்லையா? நிவிக்கா வாங்குற? அப்போ மெதுவாவே வாங்கிக்கலாம் இன்னும் நிறைய டைம் இருக்கே அதுக்குள்ள தேறிடும். இப்போ உனக்கு மட்டும் எதாவது வாங்கிக்கோ லட்டு."

"இதையே வாங்கிக்கலாம் பிரபா... அண்ணன் தான் வாங்கிக் கொடுக்கனுமா? அண்ணி கொடுத்தா ஆகாதா?" புருவம் உயர்த்தி வினவியபடி தன் கார்டை கொடுத்து பில் செட்டில் பண்ண, தன் கஷ்டத்தில் பங்கெடுத்துக் கொள்கிறாளே என நெகிழ்ந்து போனான்.

"இது பெரிய தொகை லட்டு... நீ எதுக்கு இவ்வளவு செலவு பண்ணனும்? ரெண்டுபேரும் ஷேர் பண்ணிக்குவோமா?" தயங்கித் தான் கேட்டான்.

"வேண்டாம். எனக்கு செலவு பண்ண நீங்க இருக்கீங்க. சோ என் காசெல்லாம் சும்மா தான் தூங்கும்... அதை அப்பப்போ இப்படி செலவு பண்ணிடலாம் தப்பில்லை." என கன்னம் குழிய

சிரித்தவளை தோளோடு அணைத்து நெற்றியில் முத்தமிட்டான். இதை சற்றும் எதிர்பார்க்காதவள் பேந்த விழிக்க,

'போகலாம் லட்டு... எல்லோரும் ஒருமாதிரி பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க...' என கிசுகிசுத்தபடி அழைத்துச் சென்றான். (மனசு மாறிட்டானோ?) அவனைஆராய்ந்த படியே வீட்டிற்கு வர, இவர்கள் இருவருக்கும் பெரிய இடைவெளியை உருவாக்க காத்திருந்தார் அவளது தந்தை.

"வாங்க மாப்பிள்ளை உங்களுக்காக தான் வக்கீல் காத்திருக்கார். இந்த டாக்குமெண்டையெல்லாம் படிச்சுப் பார்த்துட்டு கையெழுத்துப் போடுங்க."

"என்ன மாமா இதெல்லாம்? இப்போ எதுக்கு? உங்க சொத்துக்கு ஆசைப்பட்டு நான் இந்த கல்யாணத்தை பண்ணிக்கல..." உணர்ச்சி துடைத்த குரல்.

"உங்களளைப் பத்தி நல்லா தெரியும் மாப்பிள்ளை. பேபிமாக்கு நான் உங்களை மாப்பிள்ளையா மதிக்கலன்னு ரொம்ப வருத்தம். உங்கள என் மகன் ஸ்தானத்தில் வச்சு தான் பார்க்கிறேன். அதான் இந்த ஏற்பாடு.

தொழில், சொத்து எல்லாத்துலயும் உங்களையும் ஒரு பங்குதாரரா சேர்த்திருக்கேன் இதில் தவறென்ன மாப்பிள்ளை? கையெழுத்துப் போடுங்க." மகனென்றதும் மறுக்க முடியாமல் கையெழுத்துப் போட்டான். வக்கீல் சென்றுவிட,

"என்னடா இப்போ சந்தோஷமா? இனி நீ கேட்பதை மாப்பிள்ளை தயங்கமால் வாங்கிக் கொடுக்கலாம்... கை குளிர உனக்காக செலவு பண்ணலாம்... அப்பா மேல கோபமில்லையே?"

"தேங்க்ஸ் பா" என கட்டிக் கொள்ள, விழிகளால் எரித்துவிடுவது போல் பார்த்தான் அவள் கணவன்.

(இப்போ எதுக்கு இவ்வளவு கோபம்?) புரியாமல் அவனைப் பின் தொடர, தங்கள் அறைக்கு வந்ததும் பிடித்துக் கொண்டான்.

"என் மானத்தை வாங்குறதுலயே குறியா இருப்பியா? நீ கேட்டதை வாங்கிக் கொடுக்கற அளவுக்கு என்கிட்ட காசில்லன்னு உன் அப்பாகிட்ட சொல்லியிருக்க... அதனால் தான் பறந்து பறந்து அவரும் இந்த ஏற்பாடெல்லாம் பண்ணிருக்கார்.

வசதி இல்லாதவன்னு தெரிஞ்சு தானே கல்யாணம் பண்ணிக்கிட்ட, அப்போ என் தகுதிக்கு ஏத்து போல தான் உன் செலவுகளும் இருக்கனும். இந்த திட்டம் தெரிஞ்சு தான் என் பணமெல்லாம் நீ செலவு பண்ண தான்னு சொன்னியா? ச்சே! ஒரு நிமிசத்துல எல்லாத்தையும் பழைய நிலைக்கே கொண்டு வந்துட்ட..."

"பிரபா ப்ளீஸ்... கொஞ்சம் பொறுமையா நான் சொல்றதைக் கேளுங்க...’’

"ஒன்னும் சொல்ல வேண்டாம். என்னை கேவலயப்படுத்தறதையே முழு நேர வேலையா பாக்குற... நீ கேட்டவுடனே கார்டை தூக்கிக் கொடுத்தேன்ல... பின்ன ஏண்டி அப்படிச் சொன்ன...? மூணு லட்ச ரூபாய் பத்தாதா உனக்கு? தேவைன்னா நீ என்கிட்ட தான் கேக்கணும்.

எப்படி உன் அப்பாகிட்ட காசு பத்தலன்னு சொன்ன...? பொண்டாட்டியா நடந்துக்கறியோ இல்லயோ ஊரெல்லாம் சிரிக்கடிக்கிற... மனசு நிறைஞ்சு போச்சுடி..." பால்கனிக்கே போய் விட்டான்.

'எப்படி புரியவைப்பேன்? எனக்கு மட்டும் எல்லாம் ஏன் இப்படி சொதப்பலாவே முடியுது?' திக்குத் தெரியாமல் சமைந்து போனாள் பேதையவள். மீண்டும் பனிப்போர் தொடங்கிவிட்டது இருவருக்குள்ளும்.

நந்தினியின் மகனுக்கு பெயர் சூட்டும் விழாவுக்கு இருவரும் சென்றிருந்தனர். சகுந்தலா தேவி அமரேந்திர பூபதி என பேரனுக்கு பெயர் சூட்டினார். பிரபாவுக்கும் பவானிக்கும் பிரச்சனை என்பதை அவர்களது ஓட்டாத் தன்மையே வெளிச்சம் போட்டுக் காட்ட நந்தினி கண்டு கொண்டாள்.

தனியே அழைத்துச் சென்று பவானியிடம் கேட்க, இருவரும் ஒத்த வயதுடையவர்கள் என்பதாலா? அன்றி

யாரிடமும் பகிரமுடியாமல் திணறிய விஷயத்தை கேட்டுவிட்டாள் என்பதாலோ தோழியாய் ஏற்று அனைத்தையும் சொல்லியவள்,

"பிரபாக்கு என்னை பிடிக்கலன்னு நினைக்கிறேன்... எவ்வளவு முயற்சி செய்தாலும் விலகி விலகி தான் போறார். என்ன பண்றதுன்னு தெரியல நந்தினி... அவருக்காக நிறைய மாறிட்டேன். அவருக்கு பிடிக்காத எந்த விஷயத்தையும் செய்றதேயில்லை. இருந்தாலும் பிரச்சனை முடிவுக்கு வரவே மாட்டேங்குது.

நன்றிக்கடனுக்காக தான் கட்டிகிட்டேன்னு சொல்லியிருக்கார். அதனால தான் ஒட்டமுடியலையோ? வீட்டோட மாப்பிள்ளையா இருப்பது கஷ்டம் தான். இவர் இணக்கமா இருந்தாத் தானே நான் அப்பாக்கிட்ட பேசி வேறு ஏற்பாடு பண்ண முடியும். முகம் கொடுத்தே பேசமாட்டேங்குறார் நந்தினி." கண்ணீர் கன்னம் தொட்டது.

ஆதாரவாக அணைத்துக் கொண்டவளுக்கு அவளது காதல் புரிந்தது. நண்பனால் மனைவியை வெறுக்க முடியாது என்று திடமாக நம்பியதால்,

"பவானி பிரபாவுக்கு உன்னை பிடிக்கும். அவன் உங்கிட்ட எதையோ எதிர்பார்க்கிறான். கொஞ்சம் யோசிச்சுப் பார்... எல்லா நேரமும் அவன் பாராமுகமாக இருப்பதில்லையே. சோ

அவனோட எதிர்பார்ப்பு பொய்யாகுற நேரத்தில் தான் விலகிப் போறான்.

வளைகாப்பு முடிந்து பேபிக்கு பேரும் வச்சாச்சு. இன்னும் நீங்க ரெண்டு பெரும் அதைப்பத்தி யோசிக்கலையே ஏன்? தள்ளிபோடறீங்களா இல்ல பிரச்சனையே அங்க தானா? மிகச் சரியாக நாடி பிடித்தாள் நந்தினி. பதில் சொல்லாமல் அமைதி காத்ததில் இருந்தே அவளுக்கு தெரிந்துவிட்டது இவர்கள் உறவின் ஆழம்.

"பிரபா இப்படி இருக்குறதுக்கு நீ தான் காரணம் பவானி. நீ அவனை சீண்டுற... உன் நினைவில் நெருப்பாய் எறிகிறான் அது அணைக்கப்படாமலேயே புகையுது. அதனால தான் உன்னிடம் கடுமை காட்டுறான். சின்ன சின்ன விஷயமெல்லாம் பூதாகரமா வெடிக்கிறதுக்கும், பெரிய பிரச்சனையெல்லாம் ஒண்ணுமே இல்லாம போறதுக்கும் செக்ஸ் முக்கியமான காரணம் பவானி."

"இப்போ சீண்டிவிட்டு வேடிக்கை பாக்குறது பிரபா தான் நந்தினி."

"நீ உன் காதலை வெளிப்படுதல. அதான் உன்னை தூண்டுறான். அவன் சரியா தான் செய்றான். நீ தான் புரிஞ்சுக்க மாட்டேங்கிற. ரெண்டு பேருமே காதல்வயப்பட்டுருக்கீங்க. உங்களுக்குள்ள பானக துரும்பா உறுத்துவதை எடுத்துடுங்க எல்லாம் சரியாயிடும்.

உனக்கு தெரிஞ்சோ தெரியாமலோ நீ அவனை காயப்படுத்தியிருக்க, அவன் வேதனைக்கு நீ தான் மருந்து. இதை சரிசெய்ய வேண்டிய முழு பொறுப்பும் உன்னோடது தான். பிரபா ரொம்ப நல்லவன். அவனால் ரொம்ப நாளைக்கெல்லாம் கோபமா இருக்க முடியாது. சமயம் பார்த்து சரண்டராய்டு." பேசிய படியே வந்தவர்களை எதிர்கொண்டவன்,

"என்ன ரகசிய மாநாடு முடிஞ்சிருச்சா?" என தோழியைப் பார்க்க,

"உனக்கு தெரியாத ரகசியமெல்லாம் ஒண்ணுமில்ல செல்லாக்குட்டி, ஆதி கல்யாணத்துக்கு என்ன கலர் புடவைங்கிற டிஸ்கஷன் தான்." கண் சிமிட்டிச் சிரிக்க

"செல்லாக்குட்டியா? அடிப்பாவி ஒருநாள் ஒருபொழுதில் இந்த மாதிரியெல்லாம் என்னைய செல்லமா கூப்பிட்டதேயில்லையே..." பெரும் குறை போலும் மனைவியை முறைத்தான் விஜய். (விஜய் கோபித்துக் கொண்டாரோ?) என கவலையாய் தோழியின் முகம் பார்த்தான் பிரபா.

'விஜய் இந்த பால் வடியுற முகத்தைப் பார்த்துத் தான் அப்படியெல்லாம் கொஞ்ச முடியும். கம்பீரமான ராஜா விஜயேந்திர பூபதியைப் போய் செல்லாக்குட்டின்னு சொல்ல முடியுமா? அவர் சிங்கம் இல்லையா?" குறும்பு கொப்பளிக்க கேட்ட மனைவியின் கன்னம் கிள்ளி,

"சிங்கமா? இல்லையா? அதையாவது ஒழுங்கா சொல் சிட்டு..' என கொஞ்ச நிம்மதியாய் மூச்சுவிட்டனர் பிரபாவும் பவானியும். கணவன் மனைவியிடையே இது போன்ற செல்ல உரசல்கள் சகஜம் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை பாவம்.

நந்தினி சொன்னது தெளிவாகப் புரியவே அதை சரிசெய்யும் பொறுப்பை கையில் எடுத்துக் கொண்டவள் அவன் எவ்வளவு தான் முறுக்கிக் கொண்டாலும் கோபமின்றி ரொம்பவும் இயல்பாக பேசி முதல் முயற்சியைத் தொடங்கினாள்.

சண்டை போடுபவர்களோடு தானே சண்டை போட முடியும். சமாதானம் பேசுபவர்களோடு? வேறுவழியின்றி அவனும் அமைதிகாக்கத் தொடங்கினான். கோபமோ கொஞ்சலோ இல்லாமலேயே நாட்கள் நகர்ந்தன.

ஆதியின் திருமணம் நெருங்கிவிட்டது. இரண்டு நாட்களுக்கு முன் தான் ஆதி ஊருக்கு வந்திருந்தான். சொந்த பந்தமெல்லாம் வந்தாகிவிட்டது. யார் என்ன கேலி செய்தாலும் நிவேதாவுக்கு வெட்கம் வரவே மாட்டேன் என ஒற்றைக்காலில் நின்றது.

சிறுவயதில் இருந்தே பார்த்து, பேசி, பழகி, ஒன்றாகவே வளர்ந்தவர்கள் என்பதால் வித்தியாசமான எந்த உணர்வும் ஏற்படவில்லை... அவளுக்கு மட்டும் தான் என்பது

குறிப்பிடத்தக்கது. ஆதிக்கு ஐம்புலன்களும் விழித்துக் கொண்டு பாடாய்படுத்தின.

வீடு முழுவதும் ஆட்கள் நிறைந்திருக்க பட்டுக்குட்டி என்று கொஞ்சக் கூட முடியவில்லை. அவனும் எவ்வளவு நேரம் தான் நல்லபிள்ளையாக நடிப்பது? சமயம் பார்த்து காத்திருந்தவனுக்கு அன்னையின் சொல் காதில் தேன் வார்த்தது.

வெய்யில் கொழுத்தும் மதிய நேரம். உணவை முடித்துக் கொண்டு எல்லோரும் ஆங்காங்கே முடங்கிருக்க,

"நிவி! இந்த துணியை மட்டும் மாடியில காயப் போட்டுட்டு வந்துடுடா..." பக்கெட்டை தூக்கிக் கொண்டு போனவள் பின்னோடு பூனை போல் சென்றான் ஆதி. அவள் கண்டுகொண்டாள். பின்னிருந்து அணைக்கும் திட்டம் கைநழுவிப் போனது.

"என்ன ஆதி அத்தான் தூங்கலையா? இந்த வெய்யில்ல எதுக்கு நீங்களும் வரீங்க?" (ராத்திரியில் கூட தூக்கம் வரமாட்டேங்குது இப்போ தூங்கவா? போடி லூசு)

"பட்டுக்குட்டி நாளைக்கு ஒருநாள் தான் இருக்கு. அப்புறம் நம்ம கல்யாணம் தான்." குதூகலம் வழிய சொல்லிக் கொண்டிருக்க,

"ம்...' சாதாரணமாய் ம் கொட்டிக் கொண்டிருந்தாள் நிவி.

"நிவி..." வெகு அருகில் வந்து கரம் பற்ற அவன் பார்வையும், குரலும் உணர்த்தும் சங்கதி புரியாமல்,

"சொல்லுங்க ஆதி அத்தான்!" என சொல்வதற்குள்ளாகவே வெடவெடத்துப் போனது. விடுவிக்க முயன்றும் முடியாமல் அவள் கரம் அவனிடம் சிக்கிக் கொண்டிருந்தது.

"நம்ம கல்யாணம் வரை தாங்குற மாதிரி ஒரு முத்தம் கொடு பார்க்கலாம்." குழைவாய் கேட்டவனின் மூச்சுக் காற்று அவள் கன்னத்தில் விரவ சட்டென அவனை பின்னுக்கு தள்ளியவள்,

"இதை ஏன் இப்படி பயப்படற அளவுக்கு கேக்கறீங்க?" (என்ன இவ்வளவு சாதாரணமா சொல்றா?) மிரண்டு விழித்துக் கொண்டிருந்தவனின் தாடை பற்றி கன்னத்தில் நச்சென முத்தம் வைத்தாள்.

ஒன்றுமே தோன்றவில்லை அவனுக்கு. (ஏதாவது ஃபீல் பண்றாளா? சின்ன புள்ளைக்கு கொடுக்கற மாதிரி... போடி போங்கு...)

"பட்டுக்குட்டி இப்படி இல்லடி. இது வேஸ்ட். நீயும் ஃ பீல் பண்ணல, எனக்கும் ஃபீல் ஆகல... இன்னும் கொஞ்சம் வித்தியாசமா?" சொல்ல முடியாமல் அவன் தடுமாற,

"முத்தம் கொடுக்கறதுல என்னத்த ஃபீல் பண்றது?" அப்பாவியாய் அவன் முகம் பார்க்க (நாசமாபோச்சு...)

"ஓகே நான் சொல்லித்தர மாதிரி செய் பட்டு. எங்க கண்ணை மூடு. குட்... இப்போ நல்லா மூச்சை உள்ள இழுத்து நிதானமா வெளியே விடு."

"இதுக்கு பேர் மூச்சு பயிற்சி ஆதி அத்தான்."

"வாயை மூடிக்கிட்டு சொல்றதை முழுசா கேளுடி..." கடுப்பாகியவன் கோபம் போலும் மிரட்ட. சிறு தலையசைப்புடன் அவன் சொல்வது போல் செய்ய... இதழோர சிரிப்புடன் அவளை தொடாமல் கைகளை பின்னே கட்டிக் கொண்டு சற்று குனிந்து இதழோடு இதழ் உரச மென் முத்தம் வைக்க... பட்டென விழி திறந்தவள் இப்போது அவன் கையணைப்பில் இருந்தாள்.

ஆ... ஆதி அத்தான் என அழைக்க நினைத்தவள் இதழ்கள் அவனிடம் சிக்கிக் கொண்டன. எதிர்பாரா தாக்குதலில் கண்கள் விரிய ஒரு நொடி திகைத்து அனிச்சையாய் கரங்கள் கொண்டு அவன் மார்பை தள்ளி, குத்தி, அடித்து தன்னால் முடிந்ததெல்லாம் செய்து ஓய்ந்தவள் மெல்ல முத்தத்தின் சுகமறியத் தொடங்க கண்கள் தானாகவே மூடிக் கொண்டது. கரங்கள் அவன் தோள் தழுவின.

உயிர் குடிக்கும் அவன் முத்தத்தில் தன்னை உணர்ந்தவள் தொய்ந்து சரிய வாகாக தாங்கி மார்போடு அணைத்துக்

கொண்டான். இருவரின் உணர்வுகளும் அங்கு இதமாய் உணரப்பட்டது.

"பட்டு..." அவளிடம் பதில் இல்லை.

"முத்தத்தோட ஃபீல் என்னன்னு இப்போ புரியுதா?" உதடுகள் காதுமடல் உரசி மீண்டும் ஓர் நாடகத்திற்கு தயாராக வேகமாக அவனை விலக்கி தள்ளியவள் பதில் சொல்லாமல் ஓடியே போனாள். அதன் பின் ஆதி இருக்கும் பக்கம் கூட திரும்பவேயில்லை நிவேதா.

இதுவரை இப்படி ஒரு கோணத்தில் ஆதியை அவள் பார்த்ததே இல்லை. இது பயமா, வெட்கமா பிரித்தறிய முடியா நிலையில் எல்லாவற்றிக்கும் தன்னை தயார்படுத்திக் கொண்டிருந்தாள்.

திருமணத்தின் முதல் நாள் பவானியும் பிரபாவும் வாங்கிக் கொடுத்த புடவையும், நகைகளும் உடுத்தி தங்க சிலையாய் தயாராகிவிட்டாள். இது தான் திருமணமா? படபடப்பு வந்து குடிகொண்டது.

அமைதியாய் மண்டபத்தின் மணப்பெண் அறையில் வேர்த்திருக்கும் உள்ளங்கையை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த்தாள் நிவேதா. உள்ளங்கையில் ஆதி அத்தான் தெரிகிறான் போலும்.

"மச்சான் வீட்டுக்கு போய் பவானியை கூட்டிட்டு வந்துடறேன்." நண்பனிடம் விடைபெற்று வீட்டிற்கு வர அங்கே இன்று என்ன ஆனாலும் சரிதான் மாமனை முந்தானையில் இறுக முடிந்து இடுப்பில் சொருகிக் கொள்வது என்ற முடிவுடன் தயாராகிக் கொண்டிருந்தாள் பவானி.

‘‘வனி ரெடியா? போகலாமா?" என்றபடி வந்தவன் அழகுச் சிலை உயிர்பெற்று உலவுவது கண்டு மூச்சு விட மறந்து போனான். தன் முழங்கை கொண்டு அவன் விலாவில் இடித்தவள்,

"மாமா கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்களேன்... ஏனோ இந்த பக்கம் பின் குத்தவறமாட்டேங்குது." குத்தியும் குத்தாமலும் மல்லிகைச் சரத்தை பிடித்துக் கொண்டு முதுகு காட்டி நிற்க, (மாமாவா...) அடுத்த அதிர்ச்சியில் சுவாசம் இயல்பானது. மறுக்க மனமின்றி வைத்துவிட்டவனிடம்,

"அப்படியே அந்த நாட்டையும் போட்டுவிடுங்க மாமா..." எதை சொல்கிறாள் என தெரியாமல் விழிக்க, முதுகில் விரிந்திருந்த கூந்தலை முன்னே எடுத்துக் கொள்ள அழகான ஹாங்கிங்கோடு இரண்டு கயிறுகள் தொங்கிக் கொண்டிருநந்தன. ஆடையில்லா முதுகு பளீரென்று தெரிய, அதில் இருந்த பொன்னிற மென் முடிகள் அழகாய் மின்னின. (ஏன் இப்படி படுத்துறா?)

எச்சில் கூட்டி விழுங்கியவன் அவள் மேனியில் விரல் படாமல் மெல்ல கட்டிவிட்டு விலக, அவன் கரம் பிடித்து நிறுத்தியவள்,

"என்ன இது? இவ்வளவு லூசா இருக்கக் கூடாது சரியா கட்டுங்க மாமா..." சிணுங்கலாய் சொன்னவள் பட்டென கட்டிய கயிறை அவிழ்த்துவிட,

"விளையாடுறியாடி? எனக்கு இப்படி தான் கட்டத் தெரியும்." முகத்தை தூக்கி வைத்துக் கொள்ள,

'பார்டா! கயறு கட்டத் தெரியல கோபமென்ன வேண்டியதிருக்கு? கட்டிவிடுங்க.." சட்டமாய் ஆணையிட (எல்லாம் என் நேரம்) முணுமுணுத்தவனின் கரம் பட்டதும் கூச்சத்தில் மென் முடிகள் சிலிர்த்துக் கொண்டு நின்றன.

ஒரு நொடி கிறக்கத்தில் திளைத்தவன் முதுகெங்கும் விரல்கள் கொண்டு வருட, உணர்ச்சிகள் தூண்டப்பட,

"மாமா... என்னும் கொஞ்சலுடன் கணவனைக் கட்டிக் கொண்டு மார்பில் முகம் புதைத்தாள். நோ நோ... என கூப்பாடு போடும் மனதை கண்டுகொள்ளாமல் இருகரம் கொண்டு தழுவிக் கொண்டான்.

அது நிமிடங்களா யுகங்களா என தெரியாமல் நீண்டு கொண்டிருக்க, மெல்ல சுயம் பெற்றவன் வேகமாக விலகிக் கொண்டான். (இன்னும் எவ்வளவு நேரம் தாக்குப்பிடிப்ப மாமா?)

அவள் விழி பார்த்திருந்தால் இந்தக் கேள்வியை கண்டுகொண்டிருப்பான். பவானிக்கு நல்ல நேரம் போலும்.

"போகலாம்..." என்றபடி கீழே சென்றுவிட்டான். தந்தையிடம் சொல்லிக் கொண்டவள், பூஜை அறைக்கு சென்று வெள்ளி குங்குமச்சிமிலும்... மாமா... என்ற அழைப்புமாய் பின் தொடர,

"இன்னும் என்ன மாமாவுக்கு?" காண்டாக கேட்டவனின் தோளோடு உரசியபடி,

"குங்குமம் வச்சுவிடுங்க... கண்ணாடியில்லையா அது தான்..." உதடு குவித்து சொன்னவளை முறைத்தவன்,

"இன்று ஒரு மார்க்கமா தான் இருக்க... உன் திட்டம் தான் என்னன்னு புரியல..." என முறுக்கிக் கொண்டாலும் நெற்றிவகிடில் அழகாக குங்குமத்தை வைத்துவிட்டான்.

# அத்தியாயம் 35

ஒருவழியாக கல்யாணமண்டபத்தை அடைந்ததும், அங்கு ஆதியும் நிவியும் அருகருகே நிற்க, மச்சான் என்ற அழைப்புடன் மேடையேறியவனை,

"கல்யாணம் எனக்குடா... உங்களைப் பார்த்தால் தான் பொண்ணு, மாப்பிள்ளை போல் இருக்கு" என ஆதி கலாய்க்க,...

"ஆமா! எல்லோரும் நல்லா பார்த்துக்கோங்க... மாப்பிள்ளை இவர் தான்!" என ஆதியைக் காட்டி பிரபாவை வாரினான் விஜய்.

"பவானி, செம அழகா இருக்க...! பிரபா இப்பவே மந்திரிச்சுவிட்ட கோழி மாதிரி மாறிட்டான்." என நந்துவும் தன் பங்குக்கு நண்பனை கேலி செய்ய, அமரேந்திரனை மடியில் இருத்தியபடி,

"எப்படி சிட்டு இப்படியெல்லாம் யோசிக்கிற? பிரபா கோழி இல்லடி சேவல்!" என சிரித்தான் விஜயேந்திர பூபதி.

"இன்று நான் தான் மாட்டினேனா? தங்கச்சி கல்யாணத்தில் அண்ணனும், அண்ணியும் இப்படி தான் இருக்கனும் போங்கடா..." என சிலுப்பிக் கொள்ள, பட்டுவேஷ்டி சட்டையில் புதுமாப்பிள்ளை போல் இருக்கும் கணவனை ரசித்த படி,

"கரெக்ட் மாமா!" மனைவியின் மாமா என்ற அழைப்பில் மயங்கிய மனதை கட்டுப்படுத்த முடியாமல் இவ எதார்த்தமா தான் சொல்றளா இல்ல திட்டம் போட்டுத் தான் வம்பிழுக்கிறாளா? என குழம்பிப் போனான். சந்தடி சாக்கில்,

"பட்டுக்குட்டி பயங்கர அழகா இருக்கடி! நாளைக்கு இன்னேரம் இந்த கருவாச்சி அத்தான் மடியில்..." என காது கடிக்க, குப்பென வியர்த்துப் போனது நிவிக்கு.

தன்னை சமன் செய்துகொள்ள முடியாமல் திணறுபவளை ரசித்தபடியே விடைபெற்று செல்பவர்களுக்கு கரம் குவித்துக் கொண்டிருந்தான் ஆதி. கூட்டம் முற்றிலுமாக குறைந்ததும் அனைவரும் ஒன்றாகவே உண்டனர்.

"சீக்கிரம் போய் தூங்கு மச்சான். நாங்களும் கிளம்புறோம்..." என அக்கறையாகச் சொன்ன பிரபாவைப் பார்த்து அனைவரும் ஓஹோ... என கூவ, ஆதியோ,

"என்ன மச்சான் அவ்வளவு அவசரமா? நாளைக்கு கல்யாணத்துக்கு வந்துடுவ தானே?" என கண் சிமிட்டி கேலி செய்தான்.

"டேய் அடங்குடா! என் தங்கச்சியை நினைச்சுகிட்டு நீயும் தூங்கமால் இருக்கக் கடவது! பிடி சாபம்!" என பிரபா திருப்பிக் கொடுக்க, விஜய் கண்களால் கெஞ்சிக் கொண்டிருப்பதை

கண்டுகொள்ளாமல் நண்பர்களுடன் சேர்ந்து சிரித்துக் கொண்டிருந்தாள் நந்தினி.

"மாமா இந்த பக்கம் தனியா ஒரு படம் ஓடிக்கிட்டு இருக்கு பாருங்க..." என விஜயையும் நந்தினியையும் சுட்ட,

"பவானி நீ பயங்கற ஷார்ப்! என் பொண்டாட்டியைப் பாரு மனுஷனோட தவிப்பு புரியாம இம்சை பண்றா.." என புலம்ப

"மானத்தை வாங்காதிங்க விஜய்!' என மன்றாடியபடி கிளம்பி சென்றாள் நந்தினி.

"நீயும் கிளம்பு மச்சான். நான் எதுவும் நினைக்கமாட்டேன்..." என ஆதி கண் சிமிட்ட,

"நாளைக்கு உனக்கும் இது தான்!" என நண்பனின் தோள் தட்டினான் பிரபா.

"அடப்போடா! உன் தங்கச்சியை பத்தி தெரிஞ்சும் உசுப்பேத்துறியே... இது நியாயமா?"

"ஆமாடா... எட்டு வருசமா காதலிக்கிறத சொல்லாம பத்திரமா பூட்டி வச்சிருக்கிறவனை வேறு எப்படி கவனிப்பாங்களாம்? நாளைக்காவது சொல்லிடுவியா?"

"சொல்லனுமா? ட்ரை பண்றேன் மச்சான்."

"அவளை அந்த மிரட்டு மிரட்டுற, உனக்கு காதல் சொல்ல பயமா? இனி நிவிக்கு வேறு சாய்ஸ் கிடையாது. தைரியமா

சொல்லு கண்டிப்பா ஏத்துக்குவா!" என சிறு அணைப்புடன் விடைபெற்றவன் காரை நோக்கி நடக்க,

"நடந்தே போகலாமே மாமா!" என அவன் கரம் பிடிக்க, அவளிடமிருந்து தன் கரத்தை விலக்கி...

"நடந்தெல்லாம் போக முடியாது, ரொம்ப தூரம்"

"இல்ல, நடக்கும் தூரம் தான்னு நந்தினி சொன்னாங்களே..."

"நந்து அவ அம்மா வீட்டைச் சொல்லியிருப்பா..."

"ம்... அங்க தானே நம்ம வீடும்?"

"நம்ம வீடா?" என கேள்வியாய் முகம் பார்க்க, இவன் எப்போதான் என்னை தன் குடும்பமா நினைப்பான்? வருத்தம் மேலிட,

"சாரி தெரியாமல் சொல்லிட்டேன். உங்க வீடு!" என்றாள் வெடுக்கென.

அவளது கோபமும், வேதனையும் ஆச்சரியமூட்ட,

"அதெல்லாம் சரியா வராது. இப்போ தானே அம்மா அப்பாவை பார்த்தோம் அப்புறம் எதுக்கு அங்கு போகணும்?"

கணவன் அங்கு தான் ரொம்பவும் இயல்பாய் இருப்பதாய் அவளுக்கு தோன்றியது. அதனால் அங்கு மனம் திறந்தால் தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ள அதிக வாய்ப்பு இருக்கும் என்ற எண்ணத்தில் அனைத்து முரண்பாடுகளையும் இன்றோடு முடிவுக்கு கொண்டுவர திட்டம் தீட்டியிருந்ததால்,

"இன்னைக்கு அங்கு தான் படுக்கப் போறோம்?" மிடுக்காக சொல்ல

"நாளைக்கு கல்யாணத்திற்கு போகணும். காலையில் எழுந்து இங்கிருந்த கிளம்பி... உன் வீட்டிற்கு போய்.... மறுபடியும் அங்கிருந்து கிளம்பி... நேர விரயம்..."

"ஏன் இங்கிருந்தே திருமணத்துக்கு கிளம்பினா ஆகாதோ? உங்க ஃபிரண்ட் வாங்கிக் கொடுத்த ட்ரெஸ்ஸல்லாம் இங்கு தான் இருக்கு. முருகன் அங்கிள் வீட்டுக்கே போகலாம்..."

"முருகன் அங்கிளுக்கு மட்டுமில்ல எனக்கும் அது தான் வீடு!"

"இதையே நாங்களும் சொல்லுவோம்..."

'எதை சொல்லுவாளாம்?' என அவன் யோசனையை பார்க்க, (போடா டியூப் லைட்...)

"எனக்கு நடந்து போகத் தெரியும். நானே போய்க்குவேன்! நீங்க எங்கவேனா போங்க..." நடக்கத் தொடங்கிவிட்டாள்.

"திமிரைப் பார்! வசதி பத்தாதுன்னு சொன்னா ரொம்பத்தான்..." என சினந்தவன் காரை எடுத்துவந்து அவளருகே நிறுத்தி,

"அம்மா தாயே... ஏறு! உன் விருப்பப்படியே போகலாம்!" என கடுப்படிக்க

"தேங்க்ஸ் மாமா!" என கொஞ்சியபடி அமர்ந்துவிட்டாள். அந்நேரத்தில் இவர்களை எதிர்பார்க்காத வள்ளியும், முருகனும் திகைத்தபடியே வரவேற்றனர்.

மண்டபத்தில் பார்த்தபோது கூட இங்குவரேன்னு சொல்லலியே... இந்நேரத்தில் ஏன் இங்கு கூட்டி வந்திருக்கான்? முருகன் யோசனையாய் மகனைப் பார்க்க. எனக்கொண்ணும் தெரியாது எல்லாம் உங்க மருமகள் போடும் ஆட்டம் தான் என்பதாய் பார்த்து வைத்தான்.

"உட்காருங்க பவானிம்மா..." என அவளை அமர்த்தி இருவரும் தர்மசங்கடத்துடன் நின்றுகொண்டிருக்க,

'இதற்குத் தான் வேண்டாம்ன்னு சொன்னேன்!' என்பது போல் உள்ளேயே வராமல் நிலைவாசலில் நின்று முறைத்துக் கொண்டிருந்தான் அவள் கணவன்.

"நீங்களும் உட்காருங்க அங்கிள்... ஆன்ட்டி கொஞ்சம் தண்ணி..."

என் அம்மாவை வேலை வாங்குவியோ போடி! அவனது ரௌத்திரம் தாங்க முடியாமல் வள்ளியை பின்தொடர,

"நீங்க போங்கம்மா... நான் கொண்டு வரேன்" என்றார் வள்ளி.

"இல்ல ஆன்ட்டி, மாமாக்கு தண்ணி வேணுமாம் நானே கொண்டுபோறேன்..." சமாளிப்பாய் வாங்கிச் செல்ல, தமிழ்நாட்டு

பார்பி தண்ணீர் டம்ளரோடு வருவது போல் தோன்றி தொலைத்தது அவனுக்கு. (ஹஹா... கோபப்படுற மாதிரியே கொஞ்சுறது உனக்கு என்ன புதுசா?)

"மாமா!" என குழைந்தவள் அவனிடம் தண்ணீரை கொடுக்க கோபம் கொஞ்சம் மட்டுப்பட்டது. (ஏன்மா உனக்கு இந்த கொலவெறி? நீ எத்தனை முறை மாமான்னு கூப்பிட்டாலும் பிரபா கூலாகிடுவான்... ஆனா நாங்க... பாவம் விட்டுடு)

"இன்று உங்க மருமக இங்கு தான் இருக்கப் போறாளாம்..." அவர்கள் முகத்தில் அப்பட்டமாக தெரிந்த அதிர்ச்சியில், பவானி கணவன் முகம் பார்க்க,

"என பெற்றோரை இப்படி தர்மசங்கடப்படுத்தும் திட்டத்தோடு தானே வந்த? நடந்து நடத்து..." என மென்குரலில் மொழிய, முதலில் சுதாரித்துக் கொண்ட முருகன்,

"பவானிம்மாக்கு இங்கு வசதி போதாது. கொஞ்ச நேரம் இருந்துட்டு வீட்டுக்கு போயிடுங்க..." என்றார் தயங்கியபடி.

"அவன் தான் அப்படி இருக்கான்னு பார்த்தா குடும்பத்தில் எல்லோருமே என்னை வேற்று ஆளாய்த் தான் பார்க்கிறாங்க... இந்த குடும்பத்தில் நானும் ஒருத்திங்கிறத எப்படி மறந்தாங்க...?"

வேதனையில் கண்களில் நீர் திரண்டு எதிரே இருப்பவரின் பிம்பம் மறைக்க, தன் உதடு கடித்து கரை தாண்ட துடித்த கடலுக்கு நோ சொன்னவள், 'யூ டூ புரூட்டஸ்..?' என்பது போல்,

"முருகன் அங்கிள் நீங்களுமா?" அவள் பேச்சைக் கேட்காமல் கரைகடந்தது கண்ணீர். இதை எதிர்பார்காதவர்கள் பதறிப்போயினர்.

"அம்மா! பவானிம்மா! அழாதீங்க! நான் ஏதும் தப்பா சொல்லி இருந்தா மன்னிச்சிருங்க!" என அவர் கலங்க, மருமகளை அணைத்துக் கொள்ள முடியாமல் வள்ளி தயங்கி தயங்கி நிற்க,

"ஏய்! இப்போ எதுக்கு சீன் கிரியேட் பண்ணற?" மகனின் சீரலில் பெற்றோர் ஸ்தம்பித்துப் போயினர். பவானிம்மாவிடம் பேசும் விதமா இது? பொங்கிக் கொண்டு வந்துவிட்டார் முருகன்.

"பிரபா! பவானிமாக்கிட்ட இப்படி தான் பேசுவியா?" அவர் குரல் உயர்த்த இது தான் சமயமென,

"இல்ல அங்கிள் இதைவிட மோசமா நடந்துக்குவாங்க..." என்றாள் விசும்பலுடன்.

'பொய்! வாயை திறந்தாலே பொய்... இவ திமிர ஊட்டி வளக்க இவங்க ரெண்டுபேர் போதும்'என்று எண்ணியவன் எரிச்சல் மேலிட

"ஏய்!" என மீண்டும் எகிற...

"பிரபா! நீ போய் படு. போ!" என்றார் ஆணை போலும் அன்னை.

"பவானிம்மா! நான் பிரபாகிட்ட பேசுறேன். அவன் பொறுமையானவன் தான், பெண்கள்கிட்ட மதிப்பும், மரியாதையும் உள்ளவன். ஏனோ தவறு செய்றான். இனி உங்ககிட்ட இப்படியெல்லாம் நடந்துக்க மாட்டான். நான் பேசுறேன் வருத்தப்படாதீங்க! கண்ண துடைச்சுக்கங்க பவானிம்மா!" என்றார் முருகன் சங்கடத்துடன்.

'நல்லா நீலிக் கண்ணீர் விடுறா...' முணுமுணுத்தபடி தன் ஆடைகளை கலைந்து கைலிக்கு மாறியிருந்தவன், கைகால் கழுவ அந்த சிறிய வீட்டின் அட்டாச்டு பாத்ரூமிற்குள் செல்ல,

"அவர் மட்டுமில்ல நீங்களும் தான் என்னை கஷ்டப்படுத்துறீங்க!" என்றவள் குரல் கேட்க...

'என்வீட்டில் வந்து சட்டமா உட்கார்ந்துகிட்டு என் பெற்றோரையே குறை சொல்லிக்கிட்டு இருக்கா.. கன்னம் கூவ அறைவிடாம கையை கட்டிக்கிட்டு இருக்க வேண்டியதிருக்கு... இந்த திட்டத்தோடு தான் இங்கு வந்திருக்கா...

தனியா மாட்டட்டும் அப்புறம் வச்சுக்கிறேன் கச்சேரியை' (அவளும் அதைத் தான் பிளான் பண்ணியிருக்கா பக்கி!) மனம் உலைக்களமாய் கொதிக்க அதற்கு மேல் அவர்கள் உரையாடல் அவன் காதுகளை எட்டவில்லை, அவளோ,

"அவர் தான் என் வீடு என் குடும்பம்னு சொல்லி என்னை அன்னியப்படுத்துறார்னா நீங்களும் அப்படியே சொல்றிங்களே...

நான் உங்க மருமக இல்லையா? இது என் வீடு இல்லையா? இந்த குடும்பத்தில் நானும் ஒருத்தி இல்லியா? ஏன் என்னை மட்டும் பிரிச்சு பார்க்கறீங்க?

அவர் அங்கு இயல்பா இல்ல... எனக்கு புரியுது! மனசுக்கு பிடித்திருந்தால் தவிர யாருக்காகவும், எதற்காகவும் திருமண பந்தத்தில் ஈடுபடக் கூடாது. நன்றிக்கடனுக்காக கட்டிக்கிட்டவரால வேறு எப்படி நடந்துக்க முடியும்? அவரை ஒன்னும் சொல்லாதீங்க அங்கிள்!" என்றாள் வருத்தத்துடன்.

"ஆஹா சாத்தான் வேதம் ஓதுதே... பழைய காதலனை பழிவாங்க தாலி கட்டிக்கிட்டவ பேசுற பேச்சா இது?"

முதலிரவு வேதனை, அடுத்தடுத்த புறக்கணிப்புகள், வெர்ஜினிட் டெஸ்ட், கடைசி கடைசியாய் உன்ன விரும்பல்லன்னு சொன்னது வரை அனைத்தும் மனத்தில் படமாய் ஓட தொடங்கிவிட்டது அவனுக்கு.

( உன் ஞாபக சக்தியிலேயே இடி விழ...)

"அப்படியெல்லாமில்ல பவானிம்மா! நீங்க எங்க மருமக தான்! இது உங்க வீடு தான்! வள்ளி கூட்டி போ! அவங்களுக்கு தேவையானதைச் செய்."

"அங்கிள் இந்த ங்க வெல்லாம் வேண்டாம். பவானின்னே சொல்லுங்க. நீங்களும் தான் ஆன்ட்டி" என்றாள் சிணுங்கலாய்.

"ஆகட்டும்மா! புடவை மாத்திக்கிறியா?"

"எனக்கு குளிக்கணும் ஆன்ட்டி."

"நான் வெந்நீர் போடுறேன். இப்போ தண்ணி ஜில்லுன்னு இருக்கும். நீ நகையெல்லாம் கழட்டிவைம்மா. அதுக்குள்ள ரெடியாயிடும்." என்றவர் அங்கிருந்த ஒற்றை அறையின் கதவை திறந்துவிட, பனியனும், கைலியுமாய் தலையணையை கட்டிக் கொண்டு குப்புற படுத்திருக்கும் கணவன் மிகவும் அழகாகத் தெரிந்தான்.

வள்ளி அலமாரியை திறந்து கொண்டிருந்தார். அதில் அவனது ஆடைகள் தான் அழகாக அடுக்கப் பட்டிருந்தது. அதில் இருந்து புத்தம் புதிய புடவையை எடுத்தவர்,

"இது மாத்திக் கட்டிக்கிறதுக்காக எடுத்தது. நீங்க முதல் நாளே அங்க போனதால கொடுக்க முடியல... இது நந்து அம்மா கொடுத்தாங்க. நான் எங்கே கண்ணாடி வளையல் போடுறேன். இதையெல்லாம் போட்டுக்கிட்டு படுக்க முடியாதுல்ல...'' வைர வளையல்களின் மீது பார்வையை பதித்து சொன்னவர்,

"சுமங்கலி பொண்ணுங்க வளையல் இல்லாம இருக்கக் கூடாது, இதை போட்டுக்கம்மா..." என்றார் வாஞ்சையுடன்.

'அட என் லூசு அம்மாவே! அவ தாலியே இல்லாம இருப்பா!' மனம் அதன் போக்கில் கவுண்டர் கொடுத்துக் கொண்டிருந்ததது. (ஏன்டா...ஏன்?! உன்னை யாராவது கேட்டாங்களா?)

பவானி குளிக்கச் சென்றதும் முருகன் மகனிடம் பேசத் தொடங்கிவிட்டார். பவானியம்மாவை எப்படி வச்சுக்கணும்னு ஆதியோடு அந்தமாய் சொல்லிக் கொண்டிருக்க,

'ஆடுறதெல்லாம் அவ... அட்வைஸ் எனக்கு! (அது தானே உலக வழக்கம்!) தந்தையிடம் மறுத்து எதுவும் சொல்ல முடியாமல் அமைதி காத்தான்.

"ஐயா! ஆதி அம்மா விடியல்லயே வரச் சொன்னாக, அதான் இப்பவே மண்டபத்துக்கு போகலாம்னு பாக்குறோம். நீயும் பாவானிம்மாவும் காலையில் மெதுவா கிளம்பி வாங்க. குளிக்க வெந்நீர் வச்சு கொடுய்யா... நம்ம தண்ணி ஒத்துக்குதோ என்னவோ?" என்ற அன்னையை முறைத்தான்.

"ஆமா மருமக அப்படியே என்னோட கொஞ்சி குலாவப் போறதா நினைப்பு தான்" (அது நடக்கலைன்னு தானே சின்ன புள்ளை மாதிரி சிணுங்கிட்டு இருக்க... இதைச் சொன்னா ஒத்துக்கவா போற?)

"தாய் இல்லா புள்ளையா... நீ தான் அனுசரணையா நடந்துக்கணும்." மகனின் தாடை பற்றி கொஞ்ச...

'எவ்வளவு தான் அனுசரணையா நடந்துகிறதுன்னு தெரியல...' ஆயாசமாக இருந்தாலும் அமைதி காத்தான்.

"சொல்லாமல் கொள்ளாமல் இப்படி திடீர்ன்னு வந்து நிக்கிறீங்களே... ரெண்டு பேரும் படுக்கிற மாதிரி மெத்தை கூட

இல்ல... அதை மட்டுமாவது வாங்கியிருக்கலாம்... கீழ தான் படுக்கை விரிச்சிருக்கேன். பார்த்துக்கையா... கிளம்புறோம்."

ஆமோதிப்பாய் தலையசைத்தவன் கதவை தாழிட்டுவிட்டு வர... அம்மையாரும் குளித்து விட்டு வந்திருந்தாள். வெகு நேரமாக கட்டத் தெரியாமல் போராடிக் கொண்டிருந்தவளை கதவு தட்டும் ஓசை சுயம்பெறச் செய்ய..

‘ஐயோ! இந்த டிரெஸ்ல ஆன்ட்டி பார்த்தா மானம் போயிடுமே...’ எனப் பதறியவளாய்,

"நான் டிரஸ் மாத்தறேன் ஆன்ட்டி."

"உன் ஆன்ட்டியெல்லாம் மண்டபத்துக்கு போய் ரொம்ப நேரமாச்சு..."

"அப்போ வாங்க மாமா..."

"வேண்டாம் நீ மாத்திட்டே சொல்லு..." அவன் போய்விட்டான். அவள் கதவை திறந்து கொண்டு வந்துவிட்டாள். திகைப்பும், சிரிப்புமாய்...,

"என்னடி இது?! "

"நைட்டுல புடவையெல்லாம் கட்டிக்கிட்டு எப்படி படுக்குறது அதான். எப்படி... நல்லா இருக்கா? பட் இது... இது கட்ட வரல! ரொம்ப நேரமா ட்ரை பண்றேன் ... அவிழ்ந்துகிட்டே இருக்கு. கொஞ்சம் ஹெல்ப் பண்றிங்களா?"

"நான் செஞ்சு காமிக்கிறேன் அதை போலவே செய்" அவன் செய்வதை கூர்ந்து நோக்கினாள்.

"இவ்வளவு தானா? லெப்ட்... ரைட்... டை... ட்விஸ்ட்... வாவ் தேங்க்ஸ் மாமா." அவனது நீல நிற அரைக் கை சட்டையும் கைலியுமாய் குதூகலிக்க...

"நீ கட்டில்ல படு. நான் கீழ படுத்துக்கறேன்..." படுத்துவிட்டான். அவனருகே வந்து உரசிக் கொண்டு படுக்க,

"வனி! சும்மா எனக்கு டெஸ்ட் வச்சுக்கிட்டு இருக்காத... மேல போய் படு!" கோபமில்லா ஆழ்ந்த குரல்.

"நான் இங்க தான் படுப்பேன்..."

"நல்லது! அப்போ நான் மேல போறேன்."

"நானும் வருவேன்." இவ்வளவு நேரம் இழுத்து பிடித்த பொறுமை காற்றில் பறக்க,

"இப்போ என்ன தாண்டி வேணும் உனக்கு? நானும் பார்த்துகிட்டே இருக்கேன் சாயங்காலத்தில் இருந்து டீஸ் பண்ணிகிட்டே இருக்க?"

"நீங்க தான் மாமா!" தலைசாய்த்து அமர்த்தலாய் சொல்ல...

"குடிச்சிருக்கியா?" கோப முறைப்புடன் பார்க்க,

"சத்தியமா இல்ல மாமா! நீங்க வேனா செக் பண்ணிக்கோங்க." உதடு குவித்து அவனை நெருங்க,

"வேண்டாம்! பட்டினியில் கிடந்தவனை பந்தியில் உட்காரவச்சு பாதி சாப்பாட்டில் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளற மாதிரி என்னை சீண்டிச்சீண்டி சாகடிச்சுட்டு... பட்டுன்னு விலகி நிற்பாய். இந்த விளையாட்டே வேணாம்."

"சாரி மாமா!"

"ஒரு நொடில சாரி சொல்லிட்ட. அந்த ராத்திரி எனக்கு நரகம். நீ என்ன பெரிய இவளான்னு வச்சு செஞ்சிடணும்னு ஒரு பக்கம் வெறி... இன்னொரு பக்கம் சாகடிக்கிறாளேன்னு வாய் விட்டு கதறனும் போல வேதனை... அன்னிக்கு நான் தூங்கவே இல்ல..."

இன்றும் புறக்கணிப்பின் வலியை அவன் கண்களில் கண்டவள், அவனை நெருங்கி அமர்ந்து தன் மென் கரங்கள் கொண்டு அவன் முகம் தாங்க, பஞ்சுபோல் மென்மையாய் இருந்த உள்ளங்கையின் குளுமையில் வேதனை மட்டுப்பட கண்களை மூடிக் கொண்டான்.

"சாரி மாமா... உங்க தேவை நான் தான்னு தப்பா நினைச்சு... முடியாத சூழ்நிலை வந்தா அந்த அர்ஜுன் மாதிரி நீங்களும் விலகிடுவீங்களோன்னு..." சொல்ல முடியாமல் தவிக்க விழி திறந்து உறுத்து விழித்தவன்,

"சீ... போ!" வெடுக்கென மொழிந்து, அவள் கரம் தட்டிவிட்டு தலையணையில் முகம் புதைத்துக் கொண்டான்.

இந்த வெறுப்பும், புறக்கணிப்பும் அவனது அன்றய வலியை தெள்ளத்தெளிவாக உணர்த்தின. நாம் அன்று அளவுக்கு அதிகமாகவே வதைத்துவிட்டோம் என்பது புரிய மன்னிப்பு மட்டுமே இதை சரிசெய்துவிடாது எனத் தோன்றிவிட,

அவன் முதுகில் முகம் அழுந்த படுத்தவளுக்கு வேதனையில் அழுகை வந்தது, அவளை தள்ளிவிட மனம் வராமல் அசையாது படுத்திருந்தான் அவள் கணவன். பனியனையும் தாண்டி கண்ணீர் முதுகைத் தீண்ட,

"இவளோட இது ஒரு இம்சை அழுக ஆரம்பிச்சா நிறுத்தவே மாட்டா...." பின்புறமாக கையை வளைத்து, அவள் கழுத்தை பற்றியவன் மெல்ல திரும்ப கீழே விழாமல் இப்போது அவன் மார்புக்கு இடம் பெயர்ந்திருந்தாள்.

"போதும் வனி! இப்போ என்ன? உன்னை மன்னிச்சுட்டேன்... உன் சாரியை ஏத்துக்கிட்டேன். போதுமா?" என விழி நீர் துடைக்க,

"ஏன்டா நீ இவ்வளவு நல்லவனா இருந்து தொலைக்கிற?" அவளுக்கு மீண்டும் அழுகை வர,

"வனி!" சிறு அதட்டலுடன் தன்னிடமிருந்து பிரித்து விலக்கியவன் எழுந்து அமர, அவளும் கண்ணீருடன் அவன் முகம் பார்க்க முடியாமல் முகம் தாழ்த்திக் கொள்ள,

"இப்படி அழுது தொலைக்காதடி. கஷ்டமாயிருக்கு!" அவள் முகத்தை கைகளில் ஏந்த,

"ஐ லவ் யூ மாமா!" அவனிடம் தஞ்சம் புகுந்தவளின் தலை கோதி,

"மீ டூ பார்பி!" தலையில் முத்தமிட்டு அணைத்துக் கொண்டான். அந்த நிமிடங்கள் இருவருக்கும் இதம் பரப்ப மெல்ல அணைப்பில் இருந்து விலகாமலே அவன் முகம் பார்த்து,

"பார்பி அந்த நாகராணியோட பொம்மை!" சிறுபிள்ளையாய் முகம் தூக்க,

"இது என் பொம்மை! உன்னை முதன் முதல்ல பார்த்தப்போ அப்படி தான் தோணுச்சு."

"பொய்! முதல் தடவை நீங்க வீட்டுக்கு வந்தப்ப என்னை நிமிர்ந்து கூட பார்க்கல... இவருக்கு பார்பின்னு தோணுச்சாம் இந்த கதையை நாங்க நம்பணுமாம்." அவனிடமிருந்து விலகி அமர்ந்து கொண்டாலும் விரலோடு விரல் கோர்த்துக் கொண்டாள்.

"போடி லூசு! யார் சொன்னா நான் பார்க்கலன்னு. பார்த்தேன். ஒரு நொடி நாக்கை கடிச்சு... கண்ணை சுருக்கி... நீ கையில் வைத்திருந்த ராக்கெட்டால் தலையில் தட்டிக் கொண்டாயே அந்த நொடி 'பார்பி' மீண்டும் என் மனம்

துள்ளாட்டம் போட்டது... உங்கள பார்க்கலைன்னு தான் என் மேல செம காண்டாக்கும்?"

அவன் சரியா கண்டுபிடித்துவிட்டானே என சிணுங்கியவள்,

"போப்பா! பின்ன, அழகான பொண்ணை கண்டுக்காமல் வான்கோழி மாதிரி ஐஸ் டம்ளருக்குள் தலையை புதைச்சுகிட்டா கோபம் வராதா?" அட்டகாசமாக சிரித்தவன், அவளது நெற்றியோடு நெற்றி முட்டி,

‘‘உன்னை முதல் தடவை பார்த்தது நம்ம ஊர் ஐஸ்கிரீம் பார்லர்ல... நான் ரசிச்சு பார்த்த ஒரே பொண்ணு இந்த பார்பி தான். எனக்கு உன் கிறுக்கு தெளிய மூணு நாள் ஆச்சு தெரியுமா?"

அதற்கு மேல் விலகி அமர முடியாமல் மீண்டும் வந்து அவனோடு ஒண்டிக் கொண்டவளுக்கு கணவன் மீது காதல் பெருகியது. அவன் கழுத்தை கட்டிக் கொண்டவள்,

"நிஜமாவா?" கண்கள் பார்த்து வினவ,

"ஒரு கையில் உன் கண்ணில் கட்டியிருந்த துணி, மறுகையின் விரலை வாயில் வைத்து விசிலடித்த படி போட்டாயே ஒரு ஆட்டம்... அந்த நிமிஷம், இந்த பார்பியை எனக்கு கொடுத்துடேன் கடவுளேன்னு கெஞ்சினது உண்மை.

மெல்ல... பார்பி எப்போதுமே நம் கனவு பொம்மை தான்... பார்த்து ரசிக்கலாம் சொந்தமாக்கிக்க முடியாதுன்னு நானே

என்னை சமாதானம் பண்ணிக்கிட்டேன்." அன்றய நினைவுகளில் லயித்தபடி சொல்லிக் கொண்டிருக்க, அவன் முகமெங்கும் தன் ஈர இதழ்கள் கொண்டு கோலமிட்டு, கன்னம் கடித்து,

"இப்போ இது உங்களுக்கு மட்டுமே சொந்தமான பொம்மை!" என மூக்கோடு மூக்கை உரசி சிரிக்க,

"அப்போ மாமாக்கு ஒரு லுங்கி டான்சை போடு பார்க்கலாம்!" என புருவம் உயர்த்த மறுப்பின்றி பாடிக் கொண்டே ஆட... முகமெங்கும் புன்னகை விரவ இரு கரம் விரித்து அவளை வா என அழைக்க ஆட்டத்தின் பாதியிலேயே அவன் கரங்களுக்குள் புகுந்து கொண்டாள்.

"சொன்னவுடனே ஆடிட்ட...?" ஆச்சரியமாய் வினவ,

"மாமாகிட்ட நிறைய 'நோ' சொல்லிட்டேன்ல இனி என்ன கேட்டாலும் எப்போதும் 'எஸ்' தான். ஐ லவ் யூ டா கருவாயா!"

"திமிர் தானே...? போடி வெள்ளெலி!"

"நான் எலியா? இரு உன்னை..." வேக வேகமாக அத்தை கொடுத்த புடவையை எடுத்து அவன் கண்ணைக் கட்ட...

"ஏய்! என்னடி பண்ற?"

"சொல்வதைக் கேட்டால்... சூப்பர் சர்ப்ரைஸ் கொடுப்பேன். ஓவரா பண்ணா தூங்கிடுவேன்." அமர்த்தலாக சொன்னவள் அவன் கையையும் கட்ட,

"நீ கட்டிக்க எங்கம்மா புடவை எடுத்துக் கொடுத்தா… அதைவச்சு என்னைக் கட்டிக்கிட்டு இருக்க? என்னத்தச் சொல்ல!'' (இதெல்லாம் பவானிக்கு சர்வ சாதாரணம்! )

நிமிடங்கள் கரைந்து கொண்டிருக்க அவள் சத்தமே இல்லாமல் தன் வேலையை செய்து கொண்டிருந்தாள்.

"வனிம்மா ..."

....

"வனி... ஏய்... இருக்கியா? இல்ல என்னை இந்த நிலையில் விட்டுட்டு உன் வீட்டுக்கு போகணும்கிறது தான் உன்னோட திட்டமா?"

....

"அடிப்பாவி! இவள நம்பவே கூடாது..." பின்புறம் கட்டப்பட்டிருந்த கையை அவிழ்க்க முயல..

"ஷ்! கொஞ்ச நேரம் சும்மா தான் இருங்களேன் மாமா!"

"அப்பா! இங்க தான் இருக்கியா? அப்புறம் ஏண்டி ஊமைக் கோட்டான் மாதிரி கூப்பிடக் கூப்பிட பதில் சொல்லாமல் இருந்த?" ஒற்றை விரல் வைத்து அவன் இதழ் அழுத்த, ஜில்லென்ற உணர்வு அலை அலையாய் உடல் முழுவதும் விகசிக்க அமைதியானான்.

மெல்ல அவன் கண் கட்டை விலக்கியவள் உடலை இறுக்கி பிடிக்கும் தொடை வரையிலான பிங்க் நிற ஃபிராக் அணிந்து...

இடைவரை நீண்டிருக்கும் கூந்தலை ஒற்றையாய் பின்னி முன்புறம் போட்டுக் கொண்டு இடையில் கை வைத்து ஒயிலாக நிற்க...

இமை தட்டாது பார்த்தான் அவள் கணவன். முன்னும் பின்னுமாய் அந்த குட்டி அறைக்குள் இவள் ராம்ப் வாக் போக... தன் கனவு தேவதை பார்பியே உலா வருவது போல் தான் தோன்றியது அவனுக்கு. (க்ளீன் போல்ட்!)

"லட்டு! கட்டை அவிழ்த்து விடுடி... ப்ளீஸ் முடியலடி..." அவன் தவிப்பு புரிந்தாலும்,

"ஆசை! அதுக்குத் தான் கட்டி வச்சிருக்கேன்..." என அழகு காட்டியவள் அவனருகே வந்து, தன் மென் விரல்கள் கொண்டு மேனி வருட, மோகம் தன்னை முழுவதுமாக விழுங்கிவிட... (நல்லா பண்றாங்கைய்யா டார்ச்சரு... எப்படித் தான் யோசிப்பாங்களோ? )

"பொம்மை ஒழுங்கா அவிழ்த்துவிடு! உன் விளையாட்டை இதோடு நிறுத்திக்க... அது தான் உனக்கு சேஃப்!" இறுக தழுவிக் கொள்ள மனமும் உடலும் பரபரக்க அதற்கு வழியில்லாது போக அவன் எடுத்த முயற்சிகள் அத்தனையும் வீணானது தான் மிச்சம். கட்டை அவிழ்க்கவே முடியவில்லை.

"எப்படி... எப்படி?! பார்பியோட அஞ்சு நிமிஷம் தான் பழக்கமா? அதுலயே நிறைஞ்சிடுமா? பார்க்கிறேன்..." கேலி செய்தவள், அவனை தீண்டி தீண்டி வெறியேற்றினாள்.

"தொடாத... மரியாதையா கையை எடு! வேண்டாம்... இப்படியே உன் வீட்டுக்கு ஓடிடு! ரெண்டு நாளைக்கு என் கண்ணிலேயே படாத. மாட்டின... செத்தடி!" பிதற்றத் தொடங்கிவிட்டான்.

"இப்போ சொல்லுங்க மாமா, நான் எலியா?" நக்கலாக புருவம் உயர்த்த,

‘ராட்சசி... இதுக்கு தான் இவ்வளவுமா? இருடி உன்னை...’ மனதிற்குள் கருவினாலும்,

"ம்ஹூம்... என் செல்ல பார்பி!" என கொஞ்சல் நாடகமாட,

"அது!" அமர்த்தலாக வந்து அவன் கட்டவிழ்க்க வசமாக அவனிடம் சிக்கிக் கொண்டாள். மடியோடு இறுக்கிக் கொண்டவன்,

"என்ன திமிர்?" மோக வெறியோடு முன்னேற... அவன் இடையில் கிள்ளி வலியில் துடித்த நிமிடங்களை தனக்கு சாதகமாக்கி அவனிடமிருந்து மீண்டு, அந்த குட்டி வீட்டுக்குள் அவனுக்கு ஆட்டம் காட்டி சுத்தி, சுத்தி வந்தவள் ஒரு கட்டத்தில் மூச்சுவாங்க...

"முடியல மாமா!" என மண்டியிட,

"ஓடி ஓடி களைச்சு போய்ட்டியா லட்டு? சமத்து! எனர்ஜி ட்ராப் ஆகிடுச்சா? இது தான் மாமாக்கு வசதி. மாட்டினடி... உன்னைப் பிடிக்கத் தெரியாமலா நின்னேன்னு நினைச்ச?" மந்தகாச சிரிப்புடன் அவளை அள்ளிக் கொண்டவன் தன் கட்டிலில் கிடத்த, தன்னை நோக்கி இழுத்தவள் வாகாக அவனோடு ஒன்றிக் கொண்டாள்.

இதமாக அணைத்தபடி கண்களை மூடி சயனித்திருக்க, பொறுமையாகச் சில நிமிடங்களை கடத்தியவள் மெல்ல,

"மாமா..."

....

"தூங்கிட்டான்னா? இல்ல மறுபடியும் முருங்கை மரம் ஏறிட்டானா?" சோதிக்க எண்ணி அவனது அணைப்பில் இருந்து விலக எத்தனிக்க,

"எங்கடி போற? பேசாமல் படு!" என சிரிக்க... அவள் முறைக்க...

"ஒய்! பார்பியை கையில் தூக்கிக்கலாம், மடியில் வச்சுக்கலாம், ஆஹா! எவ்வளவு அழகுன்னு சுத்தி சுத்தி பார்க்கலாம்... பக்கத்தில் படுக்க வச்சுக்கலாம், அதிகபட்சமா கட்டிபிடிச்சுக்கிட்டு படுக்கலாம்... பொம்மையோடு குடும்பம் நடத்த முடியாது. உன்னை நான் பார்பின்னு சொல்லணும்னு தானே ஆசைப்பட்ட?" புருவம் உயாத்தி கன்னம் குழிய சிரிக்க,

"சமத்து! இந்த வாய் தானே இவ்வளவு பேசுது?" முரட்டு இதழ்களை தன் செப்பு இதழ்கள் கொண்டு விழுங்க முயன்று... தோற்று... மீண்டும் முயன்று... அதற்கு மேல் அங்கு பேச்சுகளுக்கு இடமே இல்லாமல் போக... பவானி அவன் கைகளில் பொம்மையாகித் தான் போனாள்.

விடியும் வரை தொடர்ந்தது அவனது மோக தீண்டல் ஆனாலும் தாகம் தணிந்த பாடாய் இல்லை.

"ஏய் பார்பி! உன்னால் உண்டான போதை தெளியவே தெளியாதோ?" கன்னம் வருடி கொஞ்ச, (தெளிய வச்சு, தெளிய வச்சு அடிப்பா!)

"போதும் பிரபா... சீக்கிரம் கிளம்பனும்... எழுந்துக்கலாம்..." என வாய் தான் சொன்னது. உடலோ அவனது கதகதப்பை கிரகித்தபடி அவனோடு ஒண்டிக் கொண்டது.

"குடிக்கலைன்னாலும் போதையில் தான் இருப்பியாடி குடிகாரி? நைட்டெல்லாம் மாமான்னு கொஞ்சின. இப்போ பிரபாங்கிற... நைட் என்ன பண்ணேன் சொல்லு?" மேலும் இறுக்கிக் கொள்ள,

"குடிக்காரின்னு சொன்னிங்க... கொலைகாரி ஆயிடுவேன் ஜாக்கிரதை!" விழிகளை உருட்டி ஒற்றை விரல் நீட்டி எச்சரிக்க,

"அப்படி தான் சொல்லுவேன்! என்னடி செய்வ? குடிகாரி... குடிகாரி... குடிகாரி!" வெடுக்கென அவன் கீழ் உதடை கடித்து இழுக்க,

"போடி குட்டி நாய்!" அவளை தள்ளிவிட,

"சொல்றதை கேக்கலைன்னா கடிச்சு வச்சுடுவேன். நியாபகம் வச்சுக்கோங்க!" மிரட்டலாக சொல்லிச் சிரிக்க, கண் இமைக்கும் நேரத்தில் தன்னருகே இழுத்து இதழோடு இதழ் பதித்து அவள் மூச்சை தடைசெய்தான்.

அவளது கண்களில் பயத்தையும் வலியையும் கண்டவன், மெல்ல விடுவித்தான். சுவாசத்துக்கு தவித்தவள் வாய் திறந்து சுவாசிக்க, அதை ரசித்து சிரித்தவன்,

"என்னடி ஒரு முத்தத்திற்கே மிரண்டு விழிக்கிற? இப்போ கடிச்சு வைக்கிறது தானே?" கண் சிமிட்டி சிரித்தவனை தலையணை கொண்டு அடித்தவள் அவனது அடுத்த அடாவடி தனத்திற்கு இடம் கொடுக்காமல் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

"ஏய்! இருடி... வெந்நீர் போட்டு தரேன்... நாம ரெண்டு பேரும் சேர்ந்து குளிக்கலாம்."

"வேண்டாம்! உங்களோடு ஜலக்கிரீடையை ஆரம்பிச்சா இன்றைக்கு கல்யாணத்துக்கு போன மாதிரி தான்."

"லட்டு! தண்ணி வச்சுட்டேன்! இனி தொந்தரவு பண்ணமாட்டேன். ஆனால் நிச்சயமா ஒரு நாள் வேணும் சொல்லிட்டேன்..." அவனுமே நண்பனின் திருமணத்திற்கு நேரத்தோடு போக வேண்டும் என்ற பொறுப்போடு பேச... நம்பி கதவை திறக்க...

பட்டென உள்ளே நுழைந்தவன் அவளை தழுவிக் கொள்ள, வேறு வழியேயில்லாமல் கெஞ்சி, கொஞ்சி தான் அவனை வெளியே அனுப்ப வேண்டியதிருந்தது பவானிக்கு. (சீக்கிரமா கிளம்புங்கடா... ஆதியே கல்யாணம் முடிஞ்சு பர்ஸ்ட் நைட்டுக்கு ரெடி ஆகி போயிடுவான் போல...)

நீங்களும் சீக்கிரமாக் கிளம்புங்க மக்களே கல்யாணத்துக்கு நேரமாச்சு...

# அத்தியாயம் 36

**க**ல்யாண மேடை கலைகட்டியது. நண்பர்களை கண்டுவிட்டால் விஜயேந்திரனை கழட்டிவிடுவது நந்தினியின் வழக்கம் தான் என்றாலும் இந்த முறை மகன் அமரேந்திரனையும் கணவனின் தலையில் கட்டிவிட்டு கூத்தடித்துக் கொண்டிருந்தாள்.

ஏனோ விஜய்க்கு கோபம் வரவில்லை. முன்னெச்சரிக்கையாக நந்தினி தேவியார் கணவனை சிறப்பாக கவனிப்பதாக வாக்கு கொடுத்து கூட ஒரு காரணமாக இருக்கலாம்.

நல்ல காலம், வாணி பேரனை தன் பொறுப்பில் வைத்துக் கொண்டார். இல்லையேல் அந்த வாண்டை சமாளிக்க முடியாமல் திணறிப் போயிருப்பார் ராஜா விஜயேந்திர பூபதி.

விஜய்யை கதறடிப்பதில் நந்தினியை இடத்திலும், அமரேந்திரனை வலத்திலும் வைக்கலாம். பாவம் தான் அவன் நிலைமை... பெற்றதென்னவோ ஒன்று தான் ஆனால் இருபிள்ளைகளின் அட்டகாசத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

ஆதி தன் காதல் கருவாச்சியின் கழுத்தில் மாங்கல்யம் பூட்டினான்.

உன்னோடு வாழ்வது ஆனந்தமே...

ஒவ்வொரு பொழுதிலும் பேரின்பமே...

செய்யாத மாதவம் நீயே...

பொய்யாத பேரருள் நீயே...

எட்டுவருட காதல் கை கூடிய மகிழ்வு... நெஞ்சம் நிறைந்திருக்க தன் மனைவியின் கன்னங்கள் தாங்கி இதழ் விரிய... நெற்றி முட்டி தன் நெற்றி திலகத்தை அவளுக்கு இடம் மாற்றினான்.

பவானி விசிலடிக்க, நந்தினி,

"சூப்பர் ஆதி!" என கூச்சலிட,

"ஐ லவ் யூ மச்சான்! செம லவ் டா!" என பிரபா கட்டிக் கொள்ள, கூத்தும் கும்மாளமுமாக நிமிடங்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

நிவியை தவிர அத்தனை பேருக்கும் இவர்கள் காதல் தெரிந்திருந்தது. அத்தனை பேரின் கேலியையும், கிண்டல்களையும் ஒன் மேன் ஆர்மியாய் எதிர்கொண்டவன் நொடி பொழுது கூட மனைவியின் கரத்தை விடவேயில்லை.

பிஞ்சு விரல்களை தன் கைகளுக்குள் பொத்தி வைத்துக் கொண்டான். ஆதியின் இந்த பரிணாமம் கொஞ்சம் திகைப்பை உண்டாக்கினாலும் நிவிக்கும் பிடிக்கத் தான் செய்தது.

ஒருவழியாக அனைத்தும் முடிந்தது. மண்டபத்தில் இருந்து வீட்டிற்கு வர, நந்தினி தான் இருவருக்கும் பால் பழம் கொடுத்தாள். மாலை மங்கும் நேரம், மாணிக்கம் வீட்டிற்க்கு வந்தார். (இருவரது தந்தைக்கும் பொதுவான மருத்துவ நண்பர்) அவரைக் கண்டதும் தான் நிவிக்கு தன் பெற்றோரின் இழப்பே நியாபகம் வந்தது.

கண்ணீர் பெறுக விசும்பத் தொடங்கியவளை அணைத்து ஆறுதல் படுத்த முனைய, அழுகை கூடியதே அன்றி குறையவில்லை. அனைவருக்குமே அவளது வருத்தம் புரிந்தது.

"இதற்காக தானே காலையில் வராமல் தவிர்த்தேன்" என மாணிக்கமும் வருந்தினார். அவள் அறைக்கு அழைத்துச் சென்றவன் கொஞ்ச நேரம் அழவிட்டான். மார்பில் முகம் புதைத்து அழுபவளை பார்க்க பாவமாக இருக்கவே,

"தங்கம் போதும் டா! அத்தையும், மாமாவும் நம்மை விட்டு எங்கும் போகல. இங்க நம்மை சுத்தி தான் இருப்பாங்க. இன்று நீ இப்படி அழுதா அவங்களுக்கு கஷ்டமா இருக்காதா?" என கன்னம் வருட,

"அம்மாவும் அப்பாவும் என்னை சுத்திக்கிட்டே தானே இருப்பாங்க? நான் எப்படி அவங்களை மறந்தேன்? நான் ரொம்ப மோசம் இல்ல ஆதி அத்தான்? உங்க அன்பு கிடைச்சவுடனே எல்லாத்தையும் மறந்துட்டு ஒண்ணுமே நடக்காத மாதிரி இயல்பா இருக்கேனே... இது தப்பில்லையா ஆதி அத்தான்?" கேவி அழ,

"தப்பில்ல கண்ணம்மா! அவங்க விரும்புவதும் இதைத் தான். சின்ன பெண்ணா உன்னை இந்த உலகத்தில் விட்டுப் போனவங்க உன் எதிர்காலத்தை நினைச்சு எவ்வளவு வருந்தியிருப்பாங்க? இப்போ அவங்களுக்கு சந்தோசமா தான் இருக்கும் தங்கம்.

நீ அவங்கள மறக்கலடா... அவங்க நினைவுகளை ஒரு பக்கமா ஒதுக்கி வச்சிருந்த அவ்வளவு தான். இதில் எந்த தவறும் இல்லடா... ஆர்த்தி அத்தைக்கு நிவி அழுதா பிடிக்குமா? அழாதடா! என் தங்கம் அழுதா, ஆதி அத்தானுக்கு கஷ்டமா இருக்கு.

அத்தையும், மாமாவும் தான் உன் அழுகைக்கு காரணம்னு தெரிஞ்சா அவங்களுக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கும்? அழக்கூடாது." விழி நீர் துடைத்து ஈர விழிகளில் முத்தமிட, அவனுள் கரையத் தயாராகியவள் போல் அமைதியாக நிற்க, அவனால் நிறுத்த முடியவில்லை.

முகமெங்கும் இதழ்களால் வருடி மெல்ல அவள் இதழோடு இதழ் பொறுத்த... இயல்பாக அவன் இதழ்களை கவ்விக் கொண்டாள். அந்நேரம் அவளுக்கு அது மிகவும் தேவையாக இருந்தது. அதை உணர்ந்தவன் தன் உயரத்திற்கு வாகாக அவளை தூக்கிக் கொண்டான்.

நொடிகள் நிமிடங்களாக மாறிக் கொண்டிருக்க முதலில் சுயம் திரும்பியவள் விலக... அவன் மறுக்க...

"விடுங்க ஆதி அத்தான்! இப்படி தான் எதாவது செஞ்சு என்னை மறக்க வச்சுடறீங்க... நீங்க தான் காரணம் இறக்கி விடுங்க... நீங்க வேண்டாம்... போங்க... என்னை விடுங்க..." என போராடிக் கொண்டிருக்க, அவளது கோபமான அடிகளை கூட சுகமாக ஏற்றுக் கொண்டவன் கீழே இறக்கிவிடவேயில்லை.

அடித்து ஓய்ந்தவள் சிறு குழந்தை போல் அவன் தோளில் முகம் புதைத்து விசும்பியபடியே உறங்கிப் போனாள். கட்டிலில் கிடத்தியவன் நெற்றியில் முத்தமிட்டு கதவை சாத்திக் கொண்டு வெளியே வர,

"நிவி எங்க ஆதி?"

"அவ தூங்குறாம்மா. எழுப்பாதீங்க!" ஆணை போலும் சொன்னவன் இயல்புக்கு திரும்பி அனைவருடனும் கலகலக்கத் தொடங்கிவிட்டான்.

அயர்ந்து உறங்கியவள் பாதி ஜாமத்தில் கண் விழித்துப் பார்க்க, சற்று நேரம் ஒன்றுமே புரியவில்லை. மெல்ல, மெல்ல காலையில் இருந்து நடந்த அனைத்தும் நினைவு வர, தன்னவனின் அறை நோக்கி சென்றாள். அவளுக்காகவே விரியத் திறந்திருந்தது கதவு.

"ஆதி அத்தான்!" என்ற அழைப்புடன் முயல்குட்டியென கணவனிடம் ஒண்டியவள்,

"இனி அத்தை மாமாவெல்லாம் ஒன்னும் சொல்லமாட்டாங்க தானே... அப்புறம் ஏன் என்னை தனியா விட்டுட்டு வந்தீங்க ஆதி அத்தான்?" கொஞ்சலாய் அவன் கழுத்தைக் கட்டிக் கொள்ள,

"என் தங்கத்துக்கு கோபமெல்லாம் போயிடுச்சா?" இதமாக அணைத்து அவள் தலையில் கன்னம் அழுத்தியபடி வினவ,

"சாரி... ரொம்ப வலித்ததோ?" பரிதாபமாய் அவன் முகம் பார்க்க,

"ம்... என்னை அடித்து என் தங்கத்துக்கு கை வலிக்குமேன்னு வருத்தமா இருந்துச்சு."

"ரொம்ப கில்டியா இருந்துச்சு... அதான் லூசு மாதிரி நீங்க தான் காரணம்னு வேற சொல்லிட்டேன்... ஹெர்ட் ஆகிட்டீங்களா ஆதி அத்தான்?"

"இல்லடி தங்கம். எனக்கு உன் மனநிலை புரிஞ்சிது... எனக்காக ஒன்னு செய்வியா நிவிம்மா?"

"ஒன்னு என்ன? நீங்க எத்தனை சொன்னாலும்... என்ன சொன்னாலும் செய்வேன் ஆதி அத்தான்!" பளீர் புன்னகையுடன் சொல்ல,

"குட்! இனி எப்போதும் இப்படி சிரிச்சுகிட்டே இருக்கணும். அழவே கூடாது. இதையும் மீறி டாமை திறந்துவிட்டின்னா உன் ஆதி அத்தான் வேஸ்ட்... அவனால உன்னை சந்தோசமா வச்சுக்க முடியலன்னு அர்த்தம். புரியுதா?"

"புரியுது! இனி அழமாட்டேன் ஆதி அத்தான்." அவன் கழுத்தடியில் முகம் புதைத்தவள் அங்கு முத்தமிட, அவனோ அவள் முதுகு வருட, வெற்று முதுகில் அவன் விரல்கள் காட்டிய வித்தையால்,

"ஆதி அத்தான்! நைட்டி மாத்திக்கிட்டு வரட்டுமா?"

"ம்ஹும்... நான் இங்கு இருக்கும் வரை புடவையே கட்டு. காலேஜுக்கு சுடிதார் போட்டுக்கோ... நோ நைட்டி!" அவனை மறுத்து பேசமுடியாமல், முதுகு வருடிய கரத்தோடு தன் கரம் கோர்த்துக் கொண்டாள்.

"தங்கம்! நீ இன்னும் வாண்டாவே இருக்கியே... ஆள் வளர்ந்த அளவுக்கு அறிவு வளரலையே... சோ சேட் பட்டுக்குட்டி! எனக்கு இன்னொரு கை இருக்குடி என் செல்ல

பொண்டாட்டி!" அவள் நெற்றி முட்டி மீண்டும் இதழோர சிரிப்புடன் அவன் முன்னேற...

"ப்ளீஸ்.. ஆதி அத்தான்! கூச்சமா இருக்கு... உங்க கையை கொஞ்ச நேரம் சும்மா வச்சுகங்களேன்..." செல்ல சிணுங்கலுடன் கெஞ்ச...

"பிடிக்கலன்னு சொல்லு தொந்தரவு பண்ணமாட்டேன். கூச்சமெல்லாம் போகப் போகப் பழகிடும் அதுக்காகவெல்லாம் சும்மா இருக்க முடியாது." கறாராக சொன்னாலும் கையை எடுத்துக் கொண்டான்.

"சோ ஸ்வீட்! தேங்க்ஸ் ஆதி அத்தான்!" இறுக அணைத்துக் கொண்டவளை இதமாக தழுவிக் கொண்டான்.

"ஆதி அத்தான்..."

"ம்..."

"நான் எப்போ காலேஜுக்கு போகலாம்...?"

"எப்போ ஹனிமூனுக்கு போகலாம்னு கேட்டால் அதில் ஒரு நியாயம் இருக்கு... ஏண்டி இப்படி படுத்துற...? நானே இங்கிருக்கப் போறது ஒரு மாசம் தான்." அவன் அலுத்துக் கொள்ள

"ஐயோ! ஒரு மாசமெல்லாம் நான் லீவ் போட முடியாது." பதட்டத்துடன் அவன் முகம் பார்க்க...

"ஒரு வாரமாவது போடுவீங்க தானே?" கோப முறைப்பு அவனிடம். முறைக்கும் கண்களில் முத்தமிட்டு,

"கோபப்படாதீங்க ஆதி அத்தான். நீங்க எப்போ போகச் சொல்றிங்களோ அப்பவே போறேன். இப்போ தூங்கலாமா? எனக்கு தூக்கம் தூக்கமா வருது." அவன் பதிலுக்கெல்லாம் அவள் காத்திருக்கவில்லை. அத்தானைக் கட்டிக் கொண்டு கண் மூடிக் கொண்டாள்.

"போடி தூங்குமுஞ்சி!" சிடுசிடுத்தாலும் அவனும் மறுப்பின்றி ஏற்றுக் கொண்டான்.

காலையில் மகன் அறையில் இருந்தது மருமகள் வருவதைக் கண்ட மங்களத்திற்கு பெரும் மகிழ்வு.

"நிவிம்மா குளிச்சுட்டு கோவிலுக்கு போய்ட்டு வாங்க. ஆதியையும் எழுப்பு."

"நான் கிளம்பிட்டு எழுப்பட்டுமா அத்தை?"

"சரி டா! அந்த லோட்டஸ் பிங்க் புடவையை கட்டிக்கோ."

"ம்..." கொட்டியபடி சென்றுவிட்டாள். நிவேதா தயாராகி வர, பிரபா வந்திருந்தான். அவனை வரவேற்று அத்தானின் அறைக்கு சென்றவள்,

"ஆதி அத்தான்! எழுந்திரீங்க..." மென்மையாய் அவன் தோள் தொட்டு அசைக்க...

"கதவை சாத்திட்டு வந்து எழுப்பு!" முணுமுணுப்புடன் தலையணையை கட்டிக் கொண்டான் விழி திறக்காமல்.

"என்னது...?" புரியாமல் கேட்க,

"கதவை சாத்திட்டு வாடி! கருவாச்சி கேள்வியா கேட்பா..." சத்தமாகவே சொன்னாலும் எழவில்லை. அதான் எழுந்துட்டானே, வரதுக்கென்ன? கதவை சத்திட்டு வேற முதல்ல இருந்து ஆரம்பிக்கணுமாக்கும்... ரொம்பத் தான் பண்றான்... உதட்டுச் சுழிப்போடு அவனருகே வந்தவள்,

"ஆதி..." ஆரம்பிக்கும் போதே அவன் அணைப்பில் இருந்தாள்.

"விடுங்க, ஆதி அத்தான்... புடவையெல்லம் கசங்குது" செல்ல முறைப்புடன் சிணுங்க,

"புடவை கட்டுவதே அதுக்கு தாண்டி மக்கு." என கன்னம் சுவைத்தான்.

"கோவிலுக்கு போகணும் எச்ச பண்ணாதீங்க..." அவனிடமிருந்தது விலக முயன்று தோற்று.. வேறு வழியின்றி அவன் மடியில் அமர்ந்திருக்க,

"எல்லா சாமிக்கும் கல்யாணம் ஆயிடுச்சு தங்கம்... சோ, இதெல்லாம் தப்பில்லடி!"

"இப்படியெல்லாம் பேசாதீங்க ஆதி அத்தான்... டூ பேட்."

"ஏண்டி? சாமி கண்ணை குத்திடுமா?" பயந்தவன் போல் பாவனை பண்ண,

"போதும்... பிரபா அண்ணா வந்திருக்காங்க... விடுங்க ஆதி அத்தான்..." கொஞ்சல் கெஞ்சலாகிப் போனது.

"குட் மார்னிங் மச்சான்!" பிரபா சிரிப்புடன் சொல்ல,

"அடங்குடா! நீ இப்படி சிரிக்கிற அளவுக்கெல்லாம் இங்கு ஒன்னும் நடக்கல..."

"அப்போ நீ லவ் சொல்லலைன்னு சொல்லு! தப்பு உன் பக்கம் தான். என் தங்கையை குத்தம் சொல்லாத... கோவிலுக்கு போயிட்டு நம்ம வீட்டுக்கு வந்துடுங்க இன்னைக்கு அங்கு தான் உங்களுக்கு விருந்து."

"பாசக்கார நண்பா..." என நண்பனை தழுவிக் கொள்ள,

"சாரி மச்சான் இது தங்கச்சி கணவனுக்கு கொடுக்கும் மறுவீட்டு விருந்து." என கண் சிமிட்ட

"டேய் பாசமலரே... முடியலடா... உங்க பாசவெள்ளத்தில் மூழ்கி மூர்ச்சையாகிடுவேன் போல இருக்கே..." என கலாய்த்தாலும்,

"தேங்க்ஸ் மச்சான்..." என உளமார சொன்னான் ஆதி.

கோவிலுக்கு கிளம்பியவள் எப்போதும் போல் பைக்கில் அமர்ந்து அவன் தோள் பற்ற, அவள் கரத்தை எடுத்து வயிற்றோடு வைத்து பிடித்துக் கொண்டான்.

இன்னும் நெருக்கத்தில் தன் பெண்மை அவன் முதுகில் அழுந்த அமர வேண்டியதிருந்ததால் கையை விலக்கிக் கொள்ள நினைக்கும் போதே பிடியை இறுக்கினான்.

"நான் இப்படியே கையை வச்சுகிறேன்... எடுக்கமாட்டேன் நீங்க ரெண்டு கையையும் யூஸ் பண்ணி ஒழுங்கா வண்டியை ஓட்டுங்க ஆதி அத்தான். ப்ளீஸ்... எங்காவது மோத்திடுவோம்ன்னு பயமாயிருக்கு."

"சமத்து இனி எப்போதும் இப்படி தான் பிடிக்கணும்!" கண்ணாடி வழியாக அவளை பார்த்து சிரிக்க அவள் எங்கே அவனை பார்த்தாள்...

'சரியான இம்சை!' முகத்தை சுருக்கி முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

சாமி தரிசனம் முடிந்து அவளுக்கு திருநீர் வைத்துவிட்டு ஊதிவிட தன் அன்னை தினமும் பள்ளி செல்வதற்கு முன் இதை போல தானே செய்வார் என்னும் நினைவில் அந்த அன்பு ஆதியிடம் பெறுக அவன் கரம் பற்றி அவனோடு நெருக்கமாக பிரகாரத்தில் அமர்ந்தவள்,

"ஆதி அத்தான்! உங்களுக்கு என்னை பிடிச்சிருக்கு தானே?"

'இது என்ன லூசு தனமான கேள்வி?' என எரிச்சல் மேலிட பதில் சொல்ல நினையாமல் உக்கிரப் பார்வை பார்க்க,

"இல்ல உங்க இமேஜை டேமேஜ் பண்ணற மாதிரி இருக்கேனே அதான்... நான் கேட்டேன்னு சம்மதம் சொன்னிங்களா இல்ல பிடிச்சுதான்..."

"போதும் நிவேதா உன் உளறலை நிறுத்து கிளம்பலாம்..." (எட்டுவருச காதல் புரியல... தத்தி உன்னைப் போய் கட்டிகிட்டேன் பாரு என்னை சொல்லணும்.) வேகமாக நடக்க தொடங்கியவனுக்கு ஈடு கொடுக்க இவள் ஓடத்தான் வேண்டியதிருந்தது.

'இப்போ என்ன கேட்டேன்? ஏன் இவ்வளவு கோபம்? ஒருவேளை எனக்காக தான் கட்டிக்கிட்டாங்களோ?' என்னதான் சாத்தான் வேதம் ஓதினாலும் வாயை திறக்காமல் வீடு வந்து சேர்ந்தாள். நண்பனின் வீட்டு விருந்தால் இயல்புக்கு வந்துவிட்டான் ஆதி.

பவானியோ, பழம் வெட்டுகிறேன் என கையை வெட்டிக் கொள்ள துடித்துப் போனான் அவள் கணவன்.

"உன்னை யார் இதையெல்லாம் செய்யச் சொன்னது? கவனமா இருக்க மாட்டியா? சிடுசிடுத்த படியே மஞ்சள் பொடியை காயத்தில் வைத்து அழுத்திப் பிடிக்க, அவனது பதட்டம் கண்டு சிரித்தவள்,

"பிரபா... வெட்டியது கூட வலியில்லை... நீங்க அழுத்தி பிடிச்சிருக்கது தான் வலிக்குது" முணுமுணுக்க,

"திமிர் தான் உனக்கு? இனி மாமான்னு வா... அப்புறம் வச்சுக்கிறேன்." அவன் காண்டாக,

"இனி தான் வச்சுக்கணுமா? இரட்டை அர்த்தத்தில் சொல்லி வெறுப்பேற்ற...

"கருமம்! கருமம்! பொண்ணாடி நீ? மோசமா பேசுற..."

"அச்சோ!... எப்போ சந்தேகப்படறது?" அவள் கலாய்க்க...

"குடிக்கிற... கெட்டவார்த்தை பேசுற... என்னை கதறடிக்கிற..."

"நைட்ல தானே மாமா?" அவள் கண் சிமிட்டி வினவ

"கொஞ்சமாவது வெட்கப்படறியா? நீ பையானவும், நான் பொண்ணாவும் பிறந்திருக்கணும்..." முறைப்புடன் விலகிச் செல்ல,

"ஆதி!" என அழைத்தது தான் கேட்டது. அவனோடு என்ன தான் கிசு கிசுத்தாளோ முடிவில் இருவரும் ஹை பைவ் செய்து கொண்டதை அண்ணனும், தங்கையும் அதிசயமாய் பார்க்க...

"போதும் ரெண்டு பேரும் இப்படி திரு திருன்னு முழிக்காதீங்க... சீக்கிரம் கிளம்பு மச்சான் வெளியில் போறோம். ஆன்ட்டி நீங்க மெதுவா சமைங்க ஒன்னும் அவசரம் இல்லை. மதியம் மூணு மணிக்கு மேல் தான் வருவோம்." சொன்னதோடு நில்லாமல் நண்பனை தள்ளிக் கொண்டு போனான் ஆதி.

நிவி வள்ளி ஆன்டியிடம் காலை உணவை புகழ்ந்து கொண்டிருக்க, இழுத்து செல்லாத குறையாகத் தான் அவளையும் அழைத்து வர வேண்டியதிருந்தது.

தியேட்டருக்கு வரதுக்கு தான் கூட்டு சதி பண்ணிங்களாகும்?"

"ஆஹா என் அறிவு கொழுந்தே! இனி தான் விஷயமே இருக்கு வா... என அவள் கண்களை கட்டி அழைத்துச் சென்றான் ஆதி.

"வனி... ஆதி... இது ரொம்ப மோசம்..." சிடுசிடுத்தான் பிரபா.

"நீங்க தானே சொன்னிங்க மாமா... திருமணத்திற்கு பிறகு பார்க்கும் முதல் படம் வாழ் நாள் முழுக்க மறக்க கூடாதுன்னு... கல்யாணத்திற்கு பிறகு நமக்கும் இது தானே முதல் படம்? என்ஜாய்!" கை கொட்டி சிரித்தாள் பவானி.

"ஆதி! நிவி பயந்துடப் போறா... வேற படத்துக்குப் போகலாம்..."

"உங்களுக்கும் பயமா இருக்கா மாமா?"

"பிசாசே! இதெல்லாம் உனக்காகவே எடுக்கும் படம்... வெள்ளக்காரி தமிழ் படமெல்லாம் பார்க்கமாட்டா? பார்பி ஓவரா தான் பண்ற..."

"விடு மச்சான். நான் தான் பக்கத்தில் இருப்பேனே உன் தங்கையை பத்திரமா பாத்துக்கிறேன்."

"என் பயமே அது தானே?" பாவம் கண்கள் கட்டப்பட்டிருக்க என்ன படம் என்பது தெரியாமல் இவர்கள் பேசியதை வைத்தும் யூகிக்க முடியாமல் பலி ஆடு மிரட்சியுடனேயே சென்றது.

ரிங்ஸ் என்னும் ஆங்கில படத்திற்கு தான் அழைத்து வந்திருந்தனர். மெல்ல கட்டை அவிழ்த்துவிட சுவாரஸ்யமாகவே பார்க்க ஆரம்பித்துவிட்டாள் நிவேதா.

இவ பயப்படமாட்டாளா? போட்ட திட்டமெல்லாம் வீணாப் போச்சே... என்பது போல் அமர்ந்திருக்க திகிலூட்டும் காட்சி வரும் போது அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

மெல்ல விழி திறக்க முயற்சிக்க வேண்டுமென்றே கத்தி அவளுக்கு பயமேற்படுத்த அவ்வளவு தான் சுவற்றில் ஒட்டிய பல்லியாய் ஆதியோடு ஒண்டிக் கொண்டவள் படம் முடியும் வரை இம்மியும் விலகவில்லை.

திட்டம் வெற்றி பெற்ற மகிழ்வோடு வெளியே வர, பிரபா பயங்கர கோபத்தில் இருந்தான்.

"என்ன மச்சான் படம் எப்படி?"

"கோபத்தை கிளறாத ஆதி?"

"ஆதி! கையால் முகத்தை மூடி... விரல் இடுக்கில் படம் பார்த்தா இப்படி தான் கோபம் வருமோ?" ஆராய்ச்சியாய் பவானி வினவ,

"வீட்டுக்குவா... செத்தடி!" கருவியவனைப் பார்த்து ஆதியும் பவானியும் கைகொட்டி சிரித்தனர்.

மதிய விருந்து கூத்தும் கும்மாளமுமாய் முடிய... நண்பர்கள் இருவரும் ஹாலில் படுத்து கதை பேச... நிவியை வனி, ரூமிற்குள் இழுத்துச் செல்வதைக் கண்டவன்,

"வனிம்மா... நிவி நல்ல பொண்ணு தயவு செஞ்சு உன் அராத்து வேலையெல்லாம் அவளுக்கு கத்துக் கொடுத்துடாத ஆதி தாங்கமாட்டான்.

"மச்சான் நிவியை கூட்டிகிட்டு கிளம்பு..." என மனைவியை கலாய்க்க உக்கிரமாய் இடுப்பில் கைவைத்து முறைத்தபடி அவன் முன் வந்து நின்றாள் வனி.

"சொன்னேன்ல... பார்வையாலேயே பஸ்பமாக்கிடுவா..." என சிரிக்க

"மச்சான் இதெல்லாம் டூ மச்! பவானிகூட பர்சனலா உனக்கு வேலை இருக்குனு சொல்லு கிளம்பிடறேன். அதுக்கு ஏன் பவானியை கோர்த்துவிடற...?" கேலி கூத்தாட கேட்டவனை முறைத்தவன்,

"நண்பனாடா நீ? உனக்கு போய் நல்லது நினைச்சேன் பாரு... வனிம்மா நீ நல்லா டிரெய்னிங் கொடுத்து அனுப்புடா... நிவி உன்னை ஆதி எப்படி மிரட்டுவான்...? இனி விடாதடா! அவனை கதறடி..." என போட்டுத் தாக்க...

"அடங்குடா! உன் தங்கச்சிக்கு அவ்வளவு சீனெல்லாம் கிடையாது. பவானி... நீ சொல்லிக் கொடுத்தாலும் இந்த மக்குக்கு புரியாது. உனக்கு தான் எனர்ஜி வேஸ்ட்..." சொல்லி முடிப்பதற்குள்ளாகவே தலையணையை எடுத்து அடி பின்னிவிட்டான் பிரபா...

ஒருவழியாக நண்பன் வீட்டில் இருந்து வந்தவன், தங்கள் அறைக்குள் சென்று வெகு நேரமாகியும் தன்னவள் வராதது கண்டு காண்டாகி,

"நிவி!" அடுத்து அழைப்பதற்குள் காபியோடு அவன் முன் நின்றிருந்தாள் நிவேதா...

"இப்போ காபி ரொம்ப முக்கியமாடி? இனி நான் ரூமுக்கு வந்தா பின்னாடியே நீயும் வந்துடனும் புரியுதா?" என மிரட்டல் போலும் முறைக்க, வேகமாக தலையாட்டியது அவன் பட்டுக்குட்டி. சின்ன சிரிப்புடன் காபியை வாங்கிக் கொண்டவன்,

"பட்டு... இன்னிக்கு நைட் 9 மணிக்கு பஸ். நாம கிளம்புறோம். சீக்கிரம் டிரஸெல்லாம் பேக் பண்ணு..."

"எங்க போறோம் ஆதி அத்தான்?"

"சொல்றதை செய்டி, இப்பவே தெரிஞ்சுக்கிட்டா சுவாரஸ்யம் இருக்காது." அதற்குமேல் அவன் அங்கிருக்கவில்லை. இருந்தால் தானே தொணதொணப்பாள் ஓடியேவிட்டான்.

மனதிற்கு பிடித்தவர்களோடு இரவு நேர பேருந்து பிரயாணம் ஒரு அழகு தான். பஸ் கிளம்பி ஒருமணிநேரம் கடந்துவிட்டது. எங்கு போகிறோம் என்பது தெரியாமலேயே பயணிப்பது ரொம்பவுமே கஷ்டமானதாகவும், ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் இருந்தது நிவிக்கு.

அவளும் பலமுறை கெஞ்சி... கொஞ்சி... கோபமாக கூட கேட்டுவிட்டாள் வாயை திறப்பேனா என சத்தியாகிரகம் செய்து கொண்டிருக்கிறான் ஆதி.

"சரி எப்போ திரும்ப வருவோம்கிறதையாவது சொல்லுங்க ஆதி அத்தான்..." அழும் நிலைக்கு வந்துவிட்டவளை பார்க்க பாவமாக இருக்கவே,

"பட்டுக்குட்டி! கண்டிப்பா தெரிஞ்சுக்கணுமா?" கன்னம் வருடி வினவ,

"நீங்க மட்டும் இப்போ பதில் சொல்லல... உங்க கூட பேசவே மாட்டேன் ஆதி அத்தான்" முகம் திருப்பிக் கொண்டாள் தோளோடு அனைத்துக் கொண்டவன்,

"ஊட்டிக்கு போறோம் தங்கம். திரும்பிவர ஒரு வாரம் ஆகும்" ஆர்வமாய் அவளது முகம் பார்க்க,

"ஊட்டில யார் இருக்காங்க? ஒருவாரமெல்லாம் காலேஜுக்கு லீவ் போட முடியாது..." பரிதாபமாய் விழிக்க... கொட்டுவதற்கு ஓங்கிய கையை வெகு சிரமப்பட்டு கட்டுக்குள் கொண்டுவந்தவன்,

"தத்தி... குரங்கு... குட்டி பிசாசு உன்னையெல்லாம் ஹனிமூன் கூட்டி போறனே என்னைச் சொல்லணும்... நீ காலேஜுக்கு போகலேன்னா இழுத்து மூடிருவாங்களா? நானா சொல்லும் வரை காலேஜை பத்தி வாயை திறந்த கொன்னுடுவேன்... மூஞ்சியை பாரு... இம்சை!" முகம் திருப்பிக் கொள்வது அவன் முறையாகிப் போனது.

'ஐயோ! ஹனிமூன் போறோமா? லூசு மாதிரி உளறி தொலைச்சுட்டியே... கோபமா இருக்கான் போலவே...? இப்போ எப்படி மலையிறங்க வைப்பது?' வெகு நேர சிந்தனைக்குப் பிறகு,

"ஆதி அத்தான்... சாரி..."அவன் சட்டை காலரை நிமிண்டியபடி சினுங்க வெடுக்கென கையை தட்டிவிட்டான்.

"ரொம்ப பண்ணாதீங்க... நீங்க சொன்னா தானே தெரியும்...? சாரி ஆதி அத்தான். ப்ளீஸ்... ப்ளீஸ்... ப்ரிட்டி ப்ளீஸ்..." என தன் காதை இரு கரங்களாளும் பிடித்துக் கொண்டு கெஞ்ச... அதற்கு மேல் எங்கு கோபப்படுவது?

"போடி லூசு!" வாய் ஒன்று சொல்ல... கையோ அவளை இழுத்து தன்னோடு இறுக்கிக் கொண்டது.

# அத்தியாயம் 37

**வி**டிகாலை வேளையில் இயற்கை எழில் கொஞ்சும் உதகையை அடைந்தனர். ஏற்கனவே பதிவு செய்திருந்த ஹோட்டலின் அறைக்கு வந்ததும்,

"தங்கம்..." என்னும் வசியக் குரலோடு பின்னிருந்து அணைத்து கழுத்து வளைவில் முத்தமிட அந்த சுகத்தில் அமிழ்ந்தவளாய் கண்கள் சொருகி ஒருவித கிரக்கநிலையில் அவனிடம் கட்டுண்டிருந்தவளை காற்றுக் கூட புக முடியாத அளவிற்கு இறுகத் தழுவிக் கொண்டான்.

வசதியான அணைப்பிற்காக அவளை பூமியில் இருந்து சில அடிகள் தூக்க வேண்டயதிருந்தது. எத்தனை ஆண்டு கால காதல்... ஏக்கம்... கனவு... ஆசை... அத்தனையும் ஒட்டுமொத்தமாய் ஒற்றை அணைப்பில் காட்டிவிட துடிப்பவன் போல் அப்படி ஒரு இறுகிய அணைப்பு.

நொடிகள் நிமிடங்களாய் நகர்ந்து கொண்டிருக்க, அவன் தோள்வளைவில் முகம் புதைத்திருந்தவள்,

"ஆதி அத்தான்... மூச்சுவிட... முடியல..." சொல்லி முடிப்பதற்குள்ளாகவே இறுக்கத்தை தளர்த்தி… கட்டிலில் அமர வைத்து...

"இப்போ ஓகேவா பேபி...?" தலை கோதி, கண்கள் சிரிக்க கேட்டவனை முறைத்தவள்,

"புதுசு தானே? போகப் போக பழகிடுவேன். ரொம்ப தான் கேலி பண்றீங்க..." சிணுங்கியவளை இதமாக அணைத்தவன்,

"நாங்களும் புதுசு தான்... உன்ன மாதிரியா ஊரை கூட்டுறோம்?" என நெற்றி முட்டி சிரித்தான்.

"பசிக்குது ஆதி அத்தான்"

"காபி ஆர்டர் பண்றேன் தங்கம். குடிச்சுட்டு குளிச்சுட்டுவா அதற்குள்ள சாப்பாடும் ரெடியாய்டும் சாப்பிடப் போகலாம்..."

"காபி வேணாம்... அப்புறம் தூங்க முடியாது."

"ஆமாடி, பஸ்ல தூங்கி வழிந்தது பத்தாதுன்னு இங்கயும் கண்டினியு பண்ணு... இழுத்து போர்த்திக்கிட்டு தூங்குறதுக்கு தான் உன்னை இவ்வளவு தூரம் கூட்டி வந்திருக்கேனா? அத்தான் ஊருக்கு போன பிறகு எல்லாத்தையும் சேர்த்து தூங்கிக்க... அதுவரை தூக்கத்தையெல்லாம் மூட்டைகட்டி வை. புரியுதா?"

"போங்க ஆதி அத்தான்! நீங்க ரொம்ப மோசம்... எனக்கு தூக்கம் தூக்கமா வருது..." சொன்னவள் உடலை குறுக்கிக் கொண்டு கட்டிலில் முடங்கிவிட்டாள்.

"அடிப்பாவி! கொஞ்சமாவது என் பேச்சுக்கு மரியாதை கொடுக்கிறாளா?" இதழோர சிரிப்புடன் அவனும் அவளருகில் படுத்துவிட்டான்.

ஆழ்ந்த உறக்கத்திற்குப் பின் கண்விழிக்க நன்பகலைத் தாண்டிவிட்டது நேரம். உணவை ரூமிற்கே கொண்டுவரச் சொன்னவன் குளிக்க சென்றுவிட்டான். குளித்துமுடித்து வருவதற்கு உணவும் வந்துவிட்டது.

சூடாக இருப்பதற்காக எல்லா பதார்த்தங்களும் குட்டி குட்டி ஹாட் பேக்கில் இருந்தன. இடையில் துவாலையுடன் இருந்தவன்,

"நிவி... எழுந்துக்கோ..." என கன்னம் தட்ட...

"ம்... ஹூம்..." தூக்கம் தெளியாமல் மறுக்க, அவளருகே அமர்ந்தவன் தலை சிலுப்ப... நீர் திவலைகள் அவள் முகமெங்கும் தெறித்தன. கண்களை கசக்கியபடி எழுந்துந்தவளின் இமைகளில் முத்தமிட்டு,

"சாப்பிடலாம் தங்கம்... முகம் கழுவிட்டு வா" என்றவனது குரலில் அத்தனை குழைவு.

"உங்களுக்கு பசிச்சா சாப்பிடுங்க ஆதி அத்தான்... சீக்கிரம் குளிச்சுட்டு ஓடி வந்துடறேன்." வேகமாக குளியலறைக்குள் புகுந்து கொண்டவள், அடுத்த சில நிமிடங்களில்,

"ஆதி அத்தான்! இங்க வாங்களேன்..." அவனை அழைக்க, உடைமாற்றாமல் தொலைக்காட்சியின் முன் அமர்ந்திருந்தவன்,

"என்னடா?" என கதவருகே நிற்க தலைமட்டுமே தெரியும் அளவிற்கு திறந்து வைத்திருந்தவள் இப்போது கதவை விரியத் திறந்து,

"உள்ள வாங்க... இந்த ஷவர் எப்படி ஆன் பண்றதுன்னு தெரியல..." அவன் கரம் பிடித்து இழுக்க... அன்று போல் இன்றும் பூந்துவாலையுடன் நின்றாள்.

விரியவிடப்பட்டிருந்த கூந்தல்... லேசாக கலைந்த நெற்றி வகிடின் குங்குமம்... காதில் ஊஞ்சலாடும் சிறிய குடை ஜிமிக்கி, புத்தம் புதிய மஞ்சள்கயிறும் செயினும் பின்னி பிணைந்து கழுத்தடி மச்சத்தை மறைக்க, நெஞ்சுக் குழியோடு நின்று போன பார்வையை வெகு சிரமப்பட்டு கீழே நகர்த்த...

பளீரென்ற தொடையும் பளபளக்கும் கால்ளில் மெல்லிய தங்ககொலுசும் குட்டி விரலில் மணி கோர்த்த மெட்டுமாய் போதை ஏற்றும் அழகுடன் நின்று கொண்டிருந்தவள், விழிகளால் பருகிக் கொண்டிருந்தவனின் தோள் பற்றி உலுக்கினாள்.

"ஆதி அத்தான் இதை ஆன் பண்ணுங்க..." பைப்பிற்கு மேலிருந்த லீவரை இழுத்தவன் அரைகுறையாய் நிற்கும் அழகு தேவதையையும் பூந்தூரலாய் கொட்டும் ஷவருக்குள் இழுத்துக் கொண்டான்.

"ஆதி அத்தான்..." விலகியவளை சுவரோடு சேர்த்து சிறைசெய்தான். அவளது கைகள் இரண்டும் அவனது வலிய

கரத்தால் சுவற்றோடு அறையப்பட்டிருக்க, அவனது பார்வை அவளை அணுஅணுவாக துளைத்தது.

நெற்றியில் தொடங்கி கொஞ்சம் கொஞ்சமாக கீழிறங்கி தோள்களில் திரண்டிருக்கும் நீர் திவலைகளில் வந்து நிலைத்தது. ஆதி அத்தானிடம் இந்த பார்வை புதிது. உடலின் ஒவ்வொரு செல்லிலும் ஏதோஒன்று குறுகுறுப்பது போல் சொல்லமுடியாத அவஸ்தையை முதன் முதலில் உணர்ந்தவள்,

"ப்ளீஸ் ஆதி அத்தான் இப்படி பார்க்காதீங்க அன்னீசியா இருக்கு..." பற்களால் உதடு அழுத்தி தடுமாற...

"அன்னீசியா இருக்குன்னு சொல்லக் கூடாது டீ... வெட்கமா இருக்குன்னு சொல்லணும்... அன்றும் இப்படி தானே நின்னு என்னை கதறடிச்ச...? இப்போ அனுபவி."

இதழோர கள்ள சிரிப்புடன் கன்னத்தோடு கன்னம் உரச... தடுக்க வகையின்றி சிறைபட்டிருந்த கரங்களால் எந்த உதவியும் கிட்டாமல் போக... தூக்கத்திலிருந்து ஹார்மோன்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாக விழித்துக் கொண்டது நிவேதாவுக்கு.

திரண்ட புஜங்களும், விரிந்த மார்பும், ஒட்டிய வயிறுமாய் நிற்பவனை இதற்கு முன்னும் பலமுறை இப்படி பார்த்திருக்கிறாள் தான்... ஆனால் அதே தோற்றம் இன்று கிளரச் செய்தது.

மேனியெங்கும் நீர் வழிய நின்று கொண்டிருந்தவனின் காந்தக்குரல் அவன் வசம் கட்டி இழுக்க... இன்று ஆதி அத்தான் ரொம்பவும் புதியவனாகவும், போதை ஏற்றுபவனாகவும் தோன்றினான். (வாழ்க ஹார்மோன்கள்! எங்க வேலை குறைந்துவிட்டது...)

"தங்கம்..." மெல்லிய முனகலுடன் கழுத்து வளைவில் முகம் புதைத்தவன்… தோள்களிலும் அதைத் தாண்டியும் முகம் உரசி நீர் திவலைகளை துடைத்துக் கொண்டிருக்க, தன் பெண்மையை உணரத் தொடங்கியவள்,

‘‘ஆதி அத்தான்… ஐ… லவ்… யூ" உணர்ச்சிகளின் பிடிக்குள் சிக்கி இருந்தவள் மெல்ல மெல்ல தன் இதயம் திறந்துவிட்டாள். அடுத்த கணம் அந்த இதழ்கள் அவன் வசமாக்கிப் போயின...

தன் காதல் தேவதை தயக்கமின்றி மனம் திறந்த அந்த நொடி சிறகில்லாமல் பறப்பது போல் உணர்ந்தவன் தன்னிலை மறந்தான். விழி மூடி இதழோடு இதழ் பதித்து ஓர் இன்ப யுத்தம் நடத்த... அரிச்சுவடியின் அடுத்த நிலை எந்த அறிமுகமும் இன்றி அழகாக கற்றுக் கொடுக்கப்பட்டது.

இதில் மென்மை இல்லை... ஆயினும் சுகம் தான். அன்று போல் இன்று தயக்கமோ, பயமோ இன்றி கற்றுக்கொண்டவள், அதை உணர்த்தும் பொருட்டு தன் கரங்களை விடுவிக்க முயல... மெல்ல சுயம் திரும்பியவன் விலகி அவள் முகம் பார்க்க,

"கைய விடுங்க ஆதி அத்தான்..." சிவந்த அதரங்களின் மெல்லிய அசைவு கூட வெறியேற்றுமா? மிரண்டு போனான் ஆதி.

‘இவ்வளவு நேரமா பிடித்திருந்தோம்?’ பட்டென விட்டுவிட்டான். அழுத்தமான பிடியில் கரங்கள் கன்றிப்போயின.

"சாரி தங்கம்... வலிக்குதா?" குறுஞ்சிரிப்புடன் மறுப்பாக தலையசைத்தவள்,

"உங்கள கட்டிக்கனும் போல இருந்துச்சு... அதான் விடச் சொன்னேன்." கண் சிமிட்டி சிரிக்க,

"தங்கம்... ஐ லவ் யூ டா!" இத்தனை நாளும் செயல்களின் மூலம் வெளிப்படுத்தியவன் இன்று வாய் திறந்து சொல்லியேவிட்டான். திகைப்பும், விழிப்புமாய் அவனை தழுவிக் கொள்ள... அணைத்துக் கொண்டான். நொடிகளை நிமிடங்களாக்க எண்ணியவள் விலக நினைக்காமல் ஒண்டிக்கொள்ள,

"போதும் தங்கம்! ரொம்ப நேரமா ஈரத்தோட இருக்க... சீக்கிரம் குளிச்சிட்டு வா. சாப்பிடலாம்... உன்னோட நிறைய பேசணும்..." நெற்றியில் முத்தமிட்டு விலக அவன் கரம் பற்றியவள்,

"எனக்கும் தான். நான் தான் முதல்ல பேசுவேன்..."

"ஏண்டி இங்க என்ன பேச்சு போட்டியா நடக்குது?" கண்களை விரித்தாலும் ஆமோதிப்பாய் தலையாட்டிவிட்டு சென்றான்.

குளித்து முடித்து வந்தவள் வெளிர் பிங்க் நிறத்தில் நைட்டி அணிந்து வர,

"உன்னை நைட்டி போடாதன்னு சொன்னேன்ல...?" கோப முறைப்புடன் பார்க்க,

"ப்ளீஸ்... ஆதி அத்தான்... இது தான் கம்பேர்ட்டா இருக்கு..." குழைவாக சொல்ல

"எனக்கு இல்லையே... சாப்பிட்டு முடித்ததும் மாத்திடு."

'சரியான பட்டிக்காட்டான்...' என்ற முணுமுணுப்புடன் சாப்பிடத் தொடங்கிவிட்டாள். தான் உண்டு முடித்து, அவள் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்தவன்,

"தங்கம்! சாப்பிடும் போது கடைசி கவளத்தை கணவனுக்கு ஊட்டிவிடணுமாம்... தெரியுமா?" வாயருகே சென்ற உணவு அப்படியே நின்று போனது. ஏனெனில் அது தான் கடைசி...

'புருஷனுக்கு ஆயுள் கூடுமோ...? இல்ல எப்போதும் அன்பா நடந்துக்குவானோ?' இப்படி ஏதேதோ யோசனையுடன் தறிகெட்டு ஓடிய மனதை நிலைக்கு கொண்டுவந்தவள், அறிந்து கொள்ளும் ஆவலில்,

"ஏன் ஆதி அத்தான்?" சிறுபிள்ளையாய் முகம் பார்க்க,

"முதல்ல ஊட்டி விடு அப்புறம் சொல்றேன்..." வேகமாக ஊட்டியவளின் கரம் பிடித்து ஒவ்வொரு விரலையும் தன் வாய் கொண்டு சுத்தம் செய்ய...

'இவன் தொட்டாவே கிறுகிறுத்துப் போகுதே... என்ன செய்ய?' அறியா குழந்தையாய்

"விடுங்க ஆதி அத்தான்... ஏன் ஊட்டணும்னு சொல்லுங்க..." விரல்களை உருவியபடி தடுமாற்றத்துடன் கேட்க,

"இப்படி கிளீன் பண்ணத்தான்." என கண் சிமிட்டி சிரித்தான் அவள் கணவன். வெகுண்டவள் நச்சென அவன் தலையில் கொட்ட,

"அடிப்பாவி! என்கிட்ட படிச்ச பாடத்தை எனக்கே செயல்படுத்துவியா..? உன் வேலையை தானே குறைச்சேன்... உனக்கெல்லாம் நல்லதே பண்ணக் கூடாதுடி!" சிரித்தபடியே எழுந்து கொண்டான்.

வராண்டாவில் நின்று இயற்கை எழிலை ரசித்துக் கொண்டிருந்தவனை பின்னிருந்து அணைத்தவள்,

"ஆதி அத்தான்..." குயிலாய் கொஞ்ச, அவளை தன் கைகளில் ஏந்திக் கொண்டவன்,

"குளிருதுடா... உள்ள போயிடலாம்..." கட்டிலில் அமரவைத்து,

"தங்கம் இப்படி வசதியா சாஞ்சு உட்கார்." அக்கறையாக சொன்னவன் அவள் மடியில் படுக்க,

"ஆதி அத்தான்...!" மிரண்டு விழித்தவளின் இதழ்களில் ஒற்றை விரல் வைத்து அழுத்தி...

"ஷ்! நீ எத்தனை முறை இப்படி படுத்து என்னை பாடாய் படுத்தினாய்? இப்போ என் முறை... ஏதோ பேசணும்னு சொன்னியே பேசு..." நல்ல பிள்ளையாய் தன் முகம் பார்த்தவனின் கன்னம் கிள்ளி,

"இதெல்லாம் கணக்கு வச்சிருப்பீங்களா...? ரொம்ப இம்சை பண்ணிட்டேனா? எல்லாத்தையும் கொஞ்சம் கொஞ்சமா திருப்பிக் கொடுங்க... வாங்கிக்க நான் ரெடி. ஐ லவ் யூ ஆதி அத்தான்." முகமெங்கும் முத்தமிட்டு கொஞ்சியவளை ஆசையாக பார்த்தவன்,

"இது என்ன புதுசா காதல் கவிதை படிக்கிற... கல்யாணத்துக்கு பிறகுதான் காதல் பொங்குதோ...?"

"இது பழசு... முன்னமே பொங்குச்சு, ஆதி அத்தான் பாவமேன்னு தான் சொல்லலை." கேசம் களைத்து சிரித்தவளை அதிர்வுடன் நோக்கி,

"என்னடி சொல்ற...?"

"ம்... முதல் முதல்ல என் பேர் கூட தெரியாமல், ஏய் இங்க பாரு உனக்கு நான் இருக்கேன்னு சொன்னிங்களே... அப்போதே

உங்களை எனக்கு ரொம்ப பிடிச்சிருச்சு... இனி நமக்கு எல்லாமா இந்த அண்ணா இருப்பாங்கன்னு தான் நினைச்சேன்." அவனது முறைப்பின் அர்த்தம் விளங்க,

"அப்போவெல்லாம் அண்ணா தான். அத்தான்னு தெரியாது சும்மா முறைக்காதீங்க." என்றதும் இதழோரம் சிறு சிரிப்பு வந்து ஒட்டிக் கொண்டது அவள் கணவனுக்கு.

"நான் பெரிய பெண்ணானதும் தங்கம்னு கூப்பிட்டிங்களே அப்போ தான் முதல் முறையை ஐ லவ் யூ சொல்லணும்னு தோணுச்சு... அதான் நீங்க கையை விரிச்சதும் வேகமா கட்டிக்கிட்டேன்."

"அடி கழுதை!... எட்டாவது படிக்கும் போதே லவ்...? அப்புறம் அப்பா மாதிரின்னு ஏண்டி பிட்டைப்போட்ட...?'' அவன் காதை திருக...

"வலிக்குது ஆதி அத்தான்...'' செல்ல சிணுங்கலுடன்,

" ம்... அப்பா தான் என்னை தங்கம்ன்னு கூப்பிடுவாங்க அதை தான் சொன்னேன்... என்ன இப்படியெல்லாம் யோசிக்கிறோம்ன்னு நானே கொஞ்சம் பயந்து போய்ட்டேன்...

எனக்காக நீங்க இன்ஜினியரிங் எடுத்தப்போ தோணுச்சு... நிவி இட்ஸ் டூ பேட்... இதெல்லாம் உனக்கே கொஞ்சம் ஓவரா இல்லன்னு நானே கொட்டிக்கிட்டேன்.

அப்புறம் என்னை முதுகில் தூக்கிகிட்டு நான் சொன்னதுக்காக ஓடினீங்களே... அப்போ சொல்லணும்னு தோணுச்சு... அப்போதுகூட உனக்கெல்லாம் ஆதி அத்தான் கேட்குதான்னு கண்ட்ரோல் பண்ணிக்கிட்டேன்.

துபாய்க்கு போறேன்னு சொன்னிங்களே அப்போ சொல்லிடணும்னு ரொம்பவே ட்ரை பண்ணேன் பட் முடியல...

பிரபா அண்ணா கல்யாணத்தின் போது தெரிஞ்சிடுச்சு இது லவ் தான்... அதோட ஆதி அத்தானுக்கும் இந்த உணர்வு இருக்குமான்னு சின்ன சந்தேகம் கூட வந்துச்சு...

அடுத்தடுத்த உங்களோட இயல்பான நடவடிக்கையில் எனக்கு தான் ஓவராயிடுச்சு அதான் லூசு தனமா என்னென்னவோ தோணுதுன்னு புரிஞ்சுது.

சிவாவை பத்தி சொன்னதும் உடனே நோ சொல்லுவீங்கன்னு நினைச்சேன்... நீங்க யோசிக்கிறேன்னு சொன்னிங்களே அப்போ சொல்லிடணும்னு தோணுச்சு...

கடைசியா நானே சிவாவை கட்டிக்க முடியாதுன்னு சொன்னேனே அப்போ கூட நீங்களே என்னை கட்டிக்கிங்களேன்னு சொல்லணும்னு தோணுச்சு..." சட்டென எழுந்து அமர்ந்தவன் தன் கரங்களால் அவள் முகம் தாங்கி,

"ஏண்டி சொல்லலை?" பரிதவிப்புடன் பார்க்க,

"நீங்க ரொம்ப இமேஜ் பார்ப்பீங்களே... நானும் கொஞ்சம் கலரா இருந்திருக்கலாம்... என்னால தானே நீங்க ஆசைப்பட்ட படிப்பைக் கூட படிக்கல... நான் தானே கெடுத்தேன்...

எனக்காக என்னவேனா செய்விங்கன்னு தெரியும்... நான் கேட்டா மறுக்கமா கட்டிக்குவிங்கன்னும் தெரியும்... கல்யாணமாவது உங்க மனசுக்கு பிடிச்ச பொண்ணோட நடக்கட்டும்னு நினைச்சேன்."

"முட்டாளே! என் மனசுக்கு பிடிச்ச பொண்ணு நீதாண்டி! உன்னை தான் பார்த்த நால்ல இருந்து விரும்புறேன்... லூசு லூசு... ஐ லவ் யூ தான் சொல்லலை... மத்த எல்லாம் செஞ்சேனே... அப்பக் கூடவா என் காதல் புரியல...?

லூசு பொண்டாட்டி! உன் ஆதி அத்தானுக்கு இந்த கருவாச்சியத் தான் பிடிக்கும்...'' தன்னோடு இறுக அனைத்து காது கடித்து, கன்னம் கிள்ளி, தாடை கவ்வி வன்முறையாய் காதல் செய்ய... வலி என்று வாயை திறக்கவேயில்லை அந்தக் கள்ளி. அதையெல்லாம் உணர்வதற்கு அவள் இந்த உலகத்தில் இருந்தால் தானே?

'ஆதி அத்தானும் என்னை விரும்பியிருக்காங்க' அதற்கு மேல் மனதில் ஒன்றும் பதியவில்லை மகிழ்வில் வேற்றுகிரகமே சென்றுவிட்டாள். அவனுக்கு வசதியாக போய்விட்டது.

பல வருடங்களாக தன்னை பாடாய்படுத்திய நடு முதுகு மச்சத்திற்கு முத்தம் வைக்க முயன்று கொண்டிருந்தான். நைட்டியின் ஜிப் திறந்து வாகாய் பின்னால் இழுத்து நச்சென முத்தமும் வைத்தாகிவிட்டது... அவள் தான் கனவுலகத்தில் இருந்து மீள மனமில்லாமல் சஞ்சரித்துக் கொண்டே இருக்க...

ஒன்று என தொடங்கியவன் நிறுத்தத் தோன்றாமல் பின்னங்கழுத்து, முதுகு என இதழ் கொண்டு வருட வெப்பமும் குளிரும் ஒன்றாய் தாக்குவது போல் உஷ்ண மூச்சும் உதட்டு ஈரமும் இயல்புக்கு கொண்டுவர...

"ஆதி அத்தான்..." கூவலுடன் விலகி ஆடையை சரிசெய்து கொண்டு முறைக்க...

"இவ்வளவு நேரம் எந்த உலகத்தில் இருந்தடி கருவாச்சி...? உனக்காக வருஷக்கணக்கில் காத்திருந்தாச்சு... இனி ராத்திரிவரையெல்லாம் முடியாது... இப்பவே..." அவன் முன்னேற,

"கொன்னுடுவேன்... நீங்க ஏன் லவ் பண்ணதை சொல்லல...? சிவாவை ஏன் வீட்டுக்கு வரச்சொன்னிங்க...? உங்க மேல செம கோவத்தில் இருக்கேன், பேசாம போயிடுங்க..."

"பார் டா! இது தான் மஞ்சக்கயிறு மேஜிக்கா...? இத்தனை நாலும் ஆதி அத்தான், ஆதி அத்தான்னு பயந்து பம்மிக்கிட்டு இருந்தவ இந்த மிரட்டு மரட்டுறா?" புருவம் உயர்த்தி

வினவியபடியே அவளை இழுத்து தன் மீது போட்டுக் கொண்டான்.

"விடுங்க... கொஞ்சிக் கொஞ்சி சமாளிக்கிற வேலையெல்லாம் வேண்டாம்... பதில் சொல்லுங்க..." திமிறியவளை மேலும் இறுக்கிக் கொண்டவன்,

"ம்... அவனை வச்சு செய்யணும்னு தான். என் பொண்டாட்டியை பார்த்துக்க எனக்கு தெரியாதா? என் அம்மா அப்பாவின் தலையிடையே உன் விஷயத்தில் அனுமதிக்க மாட்டேன். இவன் என்ன பெரிய கொம்பனா?

பூதம் பொதையலை காத்தது மாதிரி ஒருத்தன் காத்திருப்பானாம்... இவரு அழுங்காம புதையலை தூக்கிட்டு ஓடிருவாராம்... யார்கிட்ட?" என்றான் முறைப்புடன்.

ஆதி அத்தானுக்கு என் மீது இவ்வளவு லவ்வா? கோபமெல்லாம் கண் காணா தூரம் ஓடிவிட....

"நீங்ககளாவது சொல்லியிருக்கலாம் தானே?" குறைபோலும் புருவம் சுருங்க வினவியவளின் புருவங்களை நீவியபடி,

"சொல்லியிருக்கலாம் தான்... நீ தான் ஆதி அத்தான் அம்மா மாதிரி... அப்பா மாதிரின்னு பீதியை கிளப்புவியே... அதோடு இந்த கருவாச்சிக்கு நான் மேன்லியா இல்லன்னு வேறு பெரிய குறை இருந்துச்சே...?

அதான் உன் படிப்பு முடிஞ்சதும் நேர கல்யாணம் பண்ணிடலாம்னு நினச்சேன். அதுக்குள்ள இந்த சிவா குட்டையை குழப்பிட்டான்... நீங்களா வழிய வந்து வலையில் சிக்கினீங்க... அதுக்கு மேல நான் எப்படி சும்மா இருக்க முடியும் தங்கம்...?" கன்னம் தாங்கிக் கொஞ்ச...

"அந்த பப்ளி லுக்கெல்லம் முன்ன தான். இப்போ செம ஹேண்ட்ஸம்மா இருக்கீங்க... ஐ லவ் யூ!" கன்னம் கடித்து,

‘‘நீங்க சரியான லூசு... ஆதி அத்தான்! அம்மா மாதிரின்னு தானே சொன்னேனேன்? அம்மான்னா சொன்னேன்...?’’

"அடிங்க! நானாடி லூசு? அந்த சிவாவுக்கே கட்டி வச்சிருக்கணும்...? அப்போ தெரியும் யாரு லூசுன்னு..."

"ஆசை! மணமேடையில் எந்திரிச்சு நின்னு, நீங்க தாலியை கட்டுங்க ஆதி அத்தான்னு சொல்லியிருப்பேன்..."

"அடிப்பாவி அவ்வளவு பெரிய தில்லாலங்கடியா நீ? ஒன்னும் தெரியாத பச்சப்புள்ளன்னு நினச்சுல்ல ஏமாந்து போய்ட்டேன்... உன்னை இத்தனை நாள் விட்டுவச்சதே தப்பு..." என அதிரடியாய் தன் அட்டகாசத்தைத் தொடங்க...

‘‘நோ நோ...’’ என வாய் கூப்பாடு போட்டாலும் உடலும், மனமும் அவன் தேடலுக்கு ஏற்ப நெகிழத்தான் செய்தன. காதலின் முரண்பாடு! வேண்டாமென்றால் வேண்டும் என்பதாய் அங்கே அழகாய் அரங்கேறியது.

புரிதலுடன் கூடிய கூடல் கூடுதல் சுகம் என்பதை இருவருமே உணர... முடிவில்லா தொடர்கதையாய் தனது இத்தனை வருட காதலையும் காமமாய் மாற்றிக் கொண்டிருந்தான் ஆதி.

உலகம் மறந்து உல்லாசமாய் ஊர் சுற்றியவர்கள் ஊர் திரும்ப... போகும் போது இருந்த குதூகலம் வரும் போது இருவரிடமும் இல்லை. அவன் கரம் பற்றியபடி தோள் சாய்ந்திருந்தவளின் தலை வருடி ஆறுதலாய் அணைத்துக் கொண்டான் அவள் கணவன்.

"ஆதி அத்தான் நீங்க கண்டிப்பா துபாய் போகணுமா?" சோகத்தின் காரணம் இது தான்.

"கண்டிப்பா போகணும் பட்டுக்குட்டி... காண்டிராக்ட் முடிய இன்னும் ஆறு மாசம் இருக்கே...? அதோட அடுத்த லீ வை எடுக்காமல் வேலை பார்த்தால் ஒரு மாசம் சேவ் பண்ணலாம். பிராஜெக்ட் பீக்ல இருக்கு. சோ வேலையை சீக்கிரம் முடிச்சிட்டா ஐஞ்சு மாசத்திலேயே வந்திடலாம்.

நெஸ்ட் போஸ்டிங் சென்னையில் போடுறேன்னு சொல்லியிருக்காங்க. அங்கு பெர்மனண்ட் பண்ணீடுவாங்க. பட் நான் சொந்தமா பிஸ்னஸ் பண்ணலாம்னு நினைக்கிறன்... பார்க்கலாம்... இன்னும் ஆறுமாசம் இருக்கே அதுக்குள்ள என்னவேனா நடக்கலாம்..."

நிச்சயம் துபாய் போகப் போகிறான் என தெரிந்ததும் சொல்லமுடியா துக்கம் மனதை அழுத்த, அவன் தோள் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள். அதே வேதைனையை உணர்ந்தவனாய் அவனும் அமைதி காத்தான்.

மெல்ல தன்னை சமன் செய்து கொண்டவன்,

"தங்கம்... ஐஞ்சு மாசம் சட்டுன்னு ஓடிடும்... அப்புறம் உன் ஆதி அத்தான் உன்னோடவே தான் இருப்பேன்... இந்த பிரிவு அவசியம் பட்டுக்குட்டி... நான் பக்கத்தில் இருந்தா ரெண்டுபேருக்கும் கஷ்டம். உன் படிப்பு முடியட்டும்... தொழிலையும் தொடங்கிடுவோம் அப்புறம் உன்னை விட்டு பிரியவே மாட்டேன்." தோள்வளைவில் இறுக்கி கொண்டபடியே சொல்ல,

"புரியுது ஆதி அத்தான்... மாமா லாக்கர் சாவியை என்கிட்ட கொடுத்துட்டாங்க இச்சூரன்ஸ் பணம், பிக்ஸேட் டெபாசிட், இத்தனை வருஷ வாடகை எல்லாம் இருக்கு சென்னையில் இருக்க வீட்டையும் வித்துட்டுக் கூட பணம் புரட்டிக்கலாம் ஆதி அத்தான். இனி எல்லாமே உங்க இஷ்டப்படி தான் நடக்கணும் கவலைப்படாம பிஸ்னஸை ஆரம்பிங்க..."

"தேங்க்ஸ் டா தங்கம். பேங்க்ல லோன் வாங்கிக்கலாம்... அதுபோக தேவைப்படறதுக்கு உதவி பண்ணுங்க முதலாளியம்மா... உங்களுக்கு புண்ணியமாப் போகும்..."

"ஆதி அத்தான்! நீங்க தான் முதலாளி." செல்லமாய் முறைக்க...

"ஆமாடி... இந்த பிராபர்டிக்கு நான் முதலாளி. என இடைபற்றி அழுத்தி கன்னம் சுவைத்தவன்,

‘‘ஆனால் நம்ம கம்பெனிக்கு நீ தான் முதலாளி. நான் ஒர்கிங் பார்ட்னர் தான்." என மனைவியை இதமாக அணைத்துக் கொண்டான். காத்திருந்த காதல் அல்லவா? அதனால் வந்த புரிதலும், நிறைவும் இருவரிடமும் தெளிவாக வெளிப்பட்டது.

ஆதி மீண்டும் துபாய் செல்வதற்கு முன் நந்தினி தங்கள் அரண்மனையில் நண்பர்கள் இருவருக்கும் விருந்துக்கு அழைப்பு விடுத்திருந்தாள்.

நந்தவனத்தின் நடுவே இருந்த தடாகத்தின் மிதக்கும் மேடையில் விருந்து ஏற்பாடு செய்திருந்தனர் விஜயும் நந்தினியும். அனைவரும் குதூகலமாய் விருந்தில் கலந்துகொள்ள மகிழ்வுடன் களைகட்டியது விருந்து.

இப்போது ஒருவருக்கொருவர் சளைக்காமல் கேலியும் கிண்டலுமாய் கலாய்த்துக் கொள்ள, விருந்தின் முடிவில் விஜய் நந்தினியிடம் இரண்டு பெட்டிகளை கொடுத்து...

"ஆதி... பிரபா... நீங்க ரெண்டு பேரும் என் மனைவியின் நண்பர்களாய் இருப்பதில் எனக்கு பெரும் சந்தோஷமும், நிறைவும் எப்பொழுதுமே உண்டு. அதை கொண்டாடும் விதமாக சிறு பரிசு... இருவருக்கும் போட்டுவிடு சிட்டு" என்றான் குறுஞ்சிரிப்புடன்.

இது நந்தினியே அறியாத ஏற்பாடு. அப்படி என்ன இருக்கிறது? என ஆவலாக பெட்டிகளை திறந்துபார்க்க, ஒன்று போல் பிளாட்டினத்தில் இரண்டு பிரண்ட்ஷிப் பாண்ட் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது. நண்பர்களுக்கு ஆசையுடன் அணிவித்தவள்,

"தேங்க்ஸ் விஜய்!" என கணவனை கட்டிக் கொள்ள,

"ம்ஹூம்... சந்தோஷத்தில் கூட உன் கண்கள் கலங்குவதை நான் அனுமதிக்க மாட்டேன் தேன்சிட்டே... உங்களின் உயரிய நட்பிற்கு சிறு பரிசு... அவ்வளவு தான்." என இதமாக அனைத்துக் கொண்டான்.

ஆயுள் முழுமைக்கும் நட்பு தொடர அதன் உறுதி மட்டும் போதாது... உடனிருப்பவர்களின் ஒத்துழைப்பும், புரிதலும் அவசியம் என்பதை அனைவரும் உணர்ந்தனர்... உணர்த்தினர். பல்லாண்டு காலம் வாழட்டும் இந்த நட்பூக்கள்....

# முற்றும்